ISSUED 23—7—1973]

54

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

MONDAY, 26th MARCH 1973

Volume CVIII—No. 1

©

GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

Price 85 Paise

Index to Tamil Nadu Legislative Council Debates

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

26TH TO 30TH MARCH 1973.

VOLUME CVIII (Nos. 1 to 5.)

TABLE OF CONTENTS.

Monday, 26th March 1973.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ..	i—v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix—xi
I. Questions and Answers	1—33
II. Calling attention to postponement of collection of loans due from ryots to Co-operative Credit Societies in Uthamapalayam taluk	34
III. Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1972-73	34—38
IV. Government Motion—	
Discussion on the Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959	38—128
V. Papers laid on the table of the House ..	128—129

63092

PAGES

Tuesday, 27th March 1973.

I. Questions and Answers .. .. .. 167—188

II. Announcement *re* allotment of time for discussion 188—189

III. Government Motions—

(1) Nomination of five Members to serve on the Committee on Public Accounts of the Assembly 189—190

(2) Nomination of five Members to serve on the Committee on Estimates of the Assembly .. 190

(3) Nomination of five Members to serve on the Committee on Subordinate Legislation of the Assembly 191

IV. Discussion on the Final Supplementary Statement of Expenditure for the year 1972-73 .. .. 191—242

V. Government Motion—
Discussion on the Policy Note on Food .. 242—298

VI. Papers laid on the table of the House .. 298

Wednesday, 28th March 1973.

I. Questions and Answers .. .. .. 320—329

II. Announcements—

(1) Laying of answers to Starred Questions as Unstarred Questions on the table 330

(2) Nomination of Members to the House Committee 330

III. Calling attention to matters of urgent public importance—

(1) Scare due to kidnapping of school-going children in Mylapore and Rani Meyyammai School, Gandhinagar 331

(2) Consternation caused to parents due to Government Order prohibiting admission of girls in Boys' Schools in areas where there are separate schools for girls .. .. 332—333

IV. Government Motion—
Discussion on the Policy Note on Agriculture .. 333—370

V. Papers laid on the table of the House .. 372

PAGES

Thursday, 29th March 1973.

I. Questions and Answers .. .. .. 523—538

II. Announcement *re*—

(1) Message from the Governor 538

(2) Message from the Assembly 538

(3) Decision of the Business Advisory Committee 538—539

III. Calling attention to agitation of non-receipt of salary by workers of Wig India Limited .. 539—540

IV. Government Motion—
Constitution of the Committee on Public Undertakings .. .. 540—557

V. Government Bill—
The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973) .. .. .. 558—599

VI. Papers laid on the table of the House .. 599

Friday, 30th March 1973.

I. Questions and Answers .. .. 605—630

II. Announcement *re* message from the Assembly .. 630—631

III. Calling attention to discontinuance of production of drugs by Pharmaceutical factories due to power cut .. .. 632—633

IV. Government Bills—

(1) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973)—*cont.* .. 634—658

(2) The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973 (L.A. Bill No. 10 of 1973) .. .. 658—660

(3) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973) .. .. 660—663

(4) The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 7 of 1973) .. .. 663—667

V. Papers laid on the table of the House .. 667

Index .. .. 675—703

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning. General Administration. Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations; Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors, Commercial Taxes and Prohibition.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports, and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMI, Minister in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு சட்ட மன்றம்

செவ்வாய்க் கிழமை, 1973 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

1. வினாக்கள்—விடைகள்

Transfer of Teachers

*274 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) how many Graduate Teachers and Headmasters working in Government High Schools had applied for transfers prior to 1st April 1971, and how many of those applications were pending consideration on that date ;

(b) among them, how many were complied with during the year 1st April 1971 to 31st March 1972 ;

(c) how many more are still pending ; and

(d) whether any uniform and impartial rule is being followed in these transfers ?

ஆசிரியர்கள் மாற்றம்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1-4-1971 ஆம் நாளுக்கு முன்னர், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் எத்தனை பேர் இடம் மாற்றங்கோரி விண்ணப்பம் செய்தனர் ? அந்த நாளில் முடிவுறு நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) 1-4-1971 ஆம் நாளிலிருந்து 31-3-1972 ஆம் நாள் வரை எத்தனை பேருடைய விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன ?

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)—கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, நகராட்சிகள், நகராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி [illegible]ந்திரவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவர்,

இராவலர்கள் விடுதி, அனுதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் தணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், மூகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிபபார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், சொமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, மூன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

தமிழ்நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. வி. பி. சிற்றரசு.

சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

சட்ட மன்றச் செயலாளர்.

திரு. வி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. சோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அப்துல் வகாப், கே. எஸ். ..	மாநிலச் சட்டப் பேரவை.
2 அய்யணன் அம்பலம்	மதுரை உள்ளாட்சி மன்றம்.
3 அறிவழகன், கே., எம்.எ. ..	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி.
4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. ..	வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி.
5 அனிபா, நாகூர், ஈ.எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
6 ஆதித்தன், எஸ்.டி., பி.எ.,பி.எல்.	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
7 ஆறுமுகசாமி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
8 இராசகோபால், சி. வி.	மாநிலச் சட்டப் பேரவை.
9 இராசமாணிக்கம், எஸ்.எ. ..	மாநிலச் சட்டப் பேரவை.
10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்).	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
11 இராணி அண்ணாதுரை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ்.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
13 இராமசுப்பையா, காரைக்குடி ..	நியமன உறுப்பினர்.
14 இராமநாதன், எம்.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
15 இராஜா அய்யர், எம்., எம்.எ., எல்.டி.	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
16 இராஜு, ஜி. என்.	மாநிலச் சட்டப் பேரவை.
17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.எ. (விஸ்வபாரதி), எம்.எ. (ஆக்ஸன்).	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள்.
18 கணபதி, கே. எஸ்.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள்.
19 கணேசன், சா.	மாநிலச் சட்டப் பேரவை.
20 காட்டோ கோபாஸ்	மாநிலச் சட்டப் பேரவை.
21 காளியண்ணன், டி.எம்., எம்.எ., பி.காம்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடர்புள்ளவரும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
22 திருஞ்ணசாமி நாயுடு, ரா. ..	மாநிலச் சட்டப் பேரவை.
23 குன்றக்குடி அடிகளார், தவத்திரு.	நியமனம்.
24 கோலப்பா, சி. ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
25 சக்தி மோகன், ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
26 சங்கரலிங்கம், எம்.	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள்.
27 சந்தோஷம், டி., எம்.எ., பி.எல்...	தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள்.
28 சாம்பசிவம், இரா.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
29 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்).	நியமனம்.
30 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்).	மாநிலச் சட்டப் பேரவை.
31 சுந்தரேச தேவர், என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
32 சுவாமிநாதன், ஜி., பி. பார்மலி ..	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள்.
33 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
34 நங்கப் பாண்டியன், வி., பி.எ.,பி.டி.	மாநிலச் சட்டப் பேரவை.
35 தாமோதரன், எ. ஆர்., பி.எஸ்வி. (ஆனர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள்.
36 திருஞானசம்பந்தம், பி. ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
37 தென்னரசு, எஸ்.எஸ்.	நியமனம்.
38 தேவராஜ், வி. எம்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
39 நடராசன், என் வி. (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
40 நடராஜன், எம். கே. டி.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
41 நாராயணசாமி, பி. (வேளாண்மை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
42 நாராயணசாமி, டி. வி.	நியமனம்.

தொடர்புள்ளவரும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
43 நாராயணசாமி, எஸ்.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
44 நீல நாராயணன்	நியமனம்.
45 பக்கர், எம். எம்.	நியமனம்.
46 பகவதி, டி.கே.	நியமனம்.
47 பராங்குசம், ஜி. (அரசாங்க கொரடா).	மாநிலச் சட்டப் பேரவை.
48 பலராமன், எல்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
49 பொன்னுவேலு, டி. கே. ..	மாநிலச் சட்டப் பேரவை.
50 மணி, கே. எஸ்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 மாசிலாமணி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
52 முத்து, பி. டி.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 முத்து, எஸ்.	மாநிலச் சட்டப் பேரவை.
54 முத்துகிருஷ்ணன், டி.வி. ..	மாநிலச் சட்டப் பேரவை.
55 முத்துசாமி, எஸ்.	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
56 வசந்த பாய், ஜி.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
57 வில்சன் அப்பலோஸ், என். ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெங்கா, வி.	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெள்ளப்பாண்டியன், எஸ். ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 ஜனார்த்தனம், எ.பி.	நியமனம்.
62 ஜார்ஜ் கோமகன்	மாநிலச் சட்டப் பேரவை.
63 ஜெயராம் ரெட்டியார், எஸ். ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்றத்தின்
நாற்பத்தி நான்காவது கூட்டத்தொடர்

திங்கட்கிழமை, 1973 மார்ச் 26.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. ஸி. பி. சித்தாசை) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. விளக்கள்-விடைகள்

உடுக்குறியிடப்பட்ட விளக்கள்.

Commemoration Stamp in honour of Poet Bharathidasan.

* 259 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu have requested the Government of India to issue a commemoration stamp in honour of Poet Bharathidasan; and

(*b*) if so, whether the proposal has been accepted?

**கவிஞர் பாரதிதாசன் அவர்களைக் கௌரவிக்கும்
நினைவு அஞ்சல் வில்லைகள்**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கவிஞர் பாரதிதாசன் அவர்களைக் கௌரவிக்கும் வண்ணம், நினைவு அஞ்சல் வில்லைகள் வெளியிட, தமிழ்நாடு அரசு, இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது உண்மையா?

(இ) ஆமெனில், இச்செயற்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இங்கு எழுந்த ஒரு செய்தி குறித்து தமிழ்நாடு அரசு இந்திய அரசைக் கேட்டு, இந்திய அரசு அதற்கு ஒப்பவில்லை என்பதாகப் பத்திரிகைகளிலே பார்த்து அதற்கு மேல்தான் அந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்குக்கூட அவ்வளவாக நினைவில்லை. புதுவை அரசு கேட்டதாகவும், அதற்கான இசைவு இல்லை என்றும் நானும் கூட பத்திரிகைகளிலே படித்ததாக நினைக்கிறேன்.

திரு. டி. சந்தோஷம்: பாரதிதாசனைக் கௌரவிக்கும் வண்ணம் நம்முடைய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய அரசின் சார்பில் பல்வேறு தலைவர்களுடைய அஞ்சல் தலைகள் வெளியிடப்பட வேண்டுமென்று—மத்திய அரசின் சார்பில் அமைக்கப்பட்ட ஒரு குழு இருக்கின்றது, எத்தெத்தத் தலைவருடைய படங்களை வெளியிடுவது என்பதைப்பற்றி ஆலோசிக்க—அந்தக் குழுவுக்கு இதுவரை பல பேருடைய பெயர்களை நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். அவைகளைக்கூட நிறைவு செய்யாத நிலையில் தொடர்ந்து எழுதத் தேவையில்லை என்பதற்காக விடப்பட்டிருக்கிறது. புதுவை மாநில அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது, என்ன பதில் கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து தமிழக அரசின் சார்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து எத்தெத்தத் தலைவருடைய படங்கள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டது? குறிப்பாக முத்துராமலிங்கத் தேவருடைய படத்தை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, முத்துராமலிங்கத் தேவருடைய அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று 14—10—1971 தேதியிலே மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியது. அதை இன்னும் ஆலோசனைக் குழு ஏற்றுக்கொண்டு எத்தனிதமான பதிலும் எழுதவில்லை. தளவாய் அரியநாத முதலியாரின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று 27—1—1971-லேயும், ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று 20—9—1971-லும், அழகப்ப செட்டியாரின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று 1—3—1972-லும், வள்ளலார் இராமலிங்க சுவாமிக்கு அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்றும், திரு.வி.க. அவர்களுக்கு அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். வ.உ.சி. அவர்களுக்கு வெளியிட வேண்டுமென்றும் கேட்டிருந்தோம். அது மாத்திரம் 1972-ல் வெளியிடப்பட்டது உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதுபோன்ற அஞ்சல் தலைகளை வெளியிடுகிறபோது, தலைவர்கள் இந்திந்தத் தருதியுடையவர்களாக இருக்க

வேண்டுமென்று மத்திய அரசு குறிக்கோள் வகுத்திருக்கிறதா அல்லது மாநில அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று செய்தி வந்தபோது மக்கள் அதைப் பார்த்து, அவர்களுக்கு 'ஆமாம் வெளியிட வேண்டும்' என்ற எண்ணம் வந்தாலே, அதுதான் தகுதி.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, கடற்கரையிலே தமிழ்ப் புலவர்கள் பலருடைய சிலைகள் இருக்கின்றன. அந்த வரிசையிலே திரு. பாரதிதாசன் அவர்களுடைய சிலையையும் வைக்க அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கடற்கரையிலே உள்ள சிலைகளை உறுப்பினர் அவர்கள் பார்க்கவில்லை போல் இருக்கிறது. பாரதிதாசன் சிலை அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு இன்னும் இரண்டு சிலைகள்தான் அமைக்கப்படாமலிருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் பார்க்கலாம். இப்போது சொல்லுவது உசிதம் என்பதற்காகச் சொல்லுகிறேன். ஜி. யு. போப், கால்டுவெல் ஆகியவர்களுடைய சிலைகளை வைப்பதற்கு இரண்டு நிறுவனங்கள் பொறுப்பேற்றுக்கொண்டன. பீடங்கள்தான் இருக்கின்றன. இன்னும் சிலை வைக்கப்படவில்லை. அந்தச் சிலைகளைச் செய்ய சிற்பியிடம் ஆர்டர் கொடுத்து இன்னும் செய்யப்படவில்லை. உலகத் தமிழ் மாநாடு முடிந்து 5 வருஷம் ஆகிவிட்டது. இன்னும் அவர் அந்தச் சிலையைத் தயார் செய்யவில்லை என்று கேள்வி.

MR. CHAIRMAN: Question No. 260. Thiru V. Isvarmurti.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, on a point of order. Can a question—as question No. 260—be asked, the answer to which will amount to a disclosure of the budgetary proposals? Persons like Dr. R. K. Shanmukham Chetty and Mr. Dalton have received the censure of the House for the leakage of the Budget proposals. Can a question like this be asked?

MR. CHAIRMAN: The Government have got the answer for the question.

THIRU G. VASANTHA PAI: Can the Government disclose the answer to the question about the future levies? The question reads "Will the Hon. the Chief Minister be pleased to state the details of the new levies suggested during June 1972 by the

Central Government to the State Government?" It refers to levies to be made in the future. As such, I think such a disclosure cannot be made.

(Interruption)

The levy has not come before the House. It is in respect of a future levy the Government may propose to make. The disclosure of the financial proposals to be given effect to in future may not be proper.

ஒரு மாண்புமிகு உறுப்பினர்:—விதித்த வரிகள்.

THIRU G. VASANTHA PAI: The question refers to 'the details of the new levies suggested'.

New Levies by the Central Government

• 260 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the details of the new levies suggested during June 1972 by the Central Government to the State Government?

மத்திய அரசின் புதிய வரி விதிப்புகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மத்திய அரசு மாநில அரசுக்கு 1972 ஜூனில் தெரிவித்த புதிய வரி விதிப்புகள் பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தக் கேள்வியே மத்திய அரசு மாநில அரசுக்கு 1972 ஜூனில் தெரிவித்த புதிய வரி விதிப்புகள் பற்றிய விவரங்கள் என்றுதான் இருக்கின்றது. நிலவரிச் சலுகைகளை நீக்கி விடுதல், நிலவரிக்கு மேல் வரி விதித்தல், பாசனம் பெறும் நிலத்திற்கு மேல்வரி விதித்தல், மின்சாரம் பயன்படுத்துவோர் செலுத்தும் மின் கட்டணங்களுக்கு மேல்வரி விதித்தல், நகராட்சிச் சொத்துவரி மீது மேல்வரி விதித்தல், இவைகள் அவர்களுடைய சிபாரிசுகள்.

MR. CHAIRMAN: I hope the hon. Member, Thiru G. Vasantha Pai, understands the answer.

THIRU G. VASANTHA PAI: Sir, I have understood it. I thought it was not proper to give an answer in this matter.

Advertisements relating to Alcoholic Beverages

• 271 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that big advertisements relating to alcoholic beverages, attracting the attention of one and all, are appearing in the Press in our State; and

(b) if so, the action proposed to be taken by the Government in this matter?

மதுபானங்கள் பற்றிய விளம்பரங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கக்கூடிய வகையில் மதுபானங்கள்பற்றிய பெரிய விளம்பரங்கள் நமது மாநிலத்தில் பத்திரிகைகளில் வெளியாகின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதுபற்றி அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) செய்தித் தாள்களில் மது குறித்து விளம்பரங்கள் வெளியிடப்படுவதைத் தடுப்பதென நிட்டமிடப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்திலேயே நம்முடைய மக்கள் மது அருந்துவதைத் தடை செய்வதற்கான காரியங்கள்பற்றி டிரக்டிவ் பிரின்சிபிலிலே போட்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது பெரிய அளவிலே பத்திரிகைகளிலே அரைப் பக்கம், முழுப் பக்கம் விளம்பரம் வெளி வருகின்றது. பல முக்கிய இடத்திலே போடுகின்றார்கள். இப்படி வருகின்ற காரணத்தாலே, அதைப் பார்த்தே மது அருந்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இதை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூட கண்டித்து பத்திரிகைகளிலே எழுதினார். அந்த அளவிலே அரசு கவனித்து ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? வெளிநாடுகளிலே கூட இதைப் பார்த்து இப்படிச் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்தை நான் அப்படியே ஒப்புக்கொள்கின்றேன். இதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும். அதுவரை

மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தைப் பத்திரிகைக்காரர்கள் கூடுமான வரையிலே தங்கள் பத்திரிகையிலே போடாமலிருந்தால் உதவிகரமாக இருக்கும். வெளிவரும் விளம்பாங்கள் ஆபாசமாக இருக்குமானால், அவைகளை அகற்றிவிடுவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. கே. ராஜாராம்: மதுவிலக்குச் சட்டத்திலேயே இது ஒரு பகுதியாக ஏற்று அமல்படுத்தப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் ரத்தானதால் இதுவும் ரத்தாயிற்று. இதற்குத் தனிச் சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இருந்து ஒருவேளை ரத்து செய்யப் பட்டு விட்டதா, இல்லாவிட்டால் அதற்கு என்னென்ன செய்யலாம் என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, பெரிய சாலைகளிலும் முக்கியமான தெருக்களிலும் 'இதோ சாராயக் கடை', 'இதோ கள்ளுக் கடை' என்று மனதை ஈர்க்கின்ற வகையில் பெரிய எழுத்துக்களில் போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அகற்ற சர்க்கார் ஏதேனும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படி கடைக்கு போர்டு போடுவதால், மனது ஈர்க்கப்பட்டது என்பதற்கு அர்த்தம் கிடையாது. திரு. ரா. கி. போன்றவர்கள் ஈர்க்கப்பட மாட்டார்கள். அப்படிப்பட்ட மன வலிமை வாய்ந்தவர்களை இந்த போர்டு ஈர்த்து விடாது. ஆனாலும் அரசு ஆலோசித்து தேவையான முடிவை மேற்கொள்ளும்.

Private School at Mandagappadi

* 261 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Manager of the private school at Mandagappadi of Vridhachalam Educational District has appealed to the Government, after the Government had ordered the cancellation of the recognition of the school due to its mal-administration and its subsequent confirmation by the High Court of Madras; and

(*b*) the action taken thereon by the Government?

மண்டகப்பாடி தனியார் ஆரம்பப் பள்ளி

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விருக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருத்தாசலம் கல்வி மாவட்டத்தில் தவறான நிர்வாகக் காரணத்தை முன்னிட்டு, மண்டகப்பாடி தனியார் துறை தொடக்கப் பாடசாலைக்கு அளிக்கப் பட்டிருந்த அங்கீகாரத்தை அரசு ரத்து செய்து உயர்நீதி மன்றம் அவ்வுத் தரவை உறுதி செய்தபின் அந்த நிர்வாகி அரசிடம் மேல் முறையீடு ஏதும் செய்தாரா?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசு அம் மேல்முறையீட்டினைப் பரிசீலனை செய்து, ஒரு சில நிபந்தனைக்குட்பட்டு, மண்டகப்பாடி தனியார் ஆரம்பப் பள்ளிக்கு மீண்டும் ஏற்பையும் மானியத்தையும் அளிக்கலாம் என ஆணையிட்டது. பின்னர், பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்த மாறுபட்ட சூழ்நிலையில், வேறு சில காரணங்களுக்காக அப்பள்ளியின் ஏற்பும் மானியமும் ரத்துச் செய்யப்பட்டு 1—8—1972 அன்று ஆணையிடப்பட்டது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தப் பள்ளியில் இதற்கு முன்னால் பணியாற்றிய ஆசிரியர்கள் இப்போது மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார்களா, மாணவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த மண்டகப்பாடி என்ற ஊரில் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக ஒரு பள்ளி ஏற்படுத்தப்பட்டு அதில் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, ஆசிரியர்கள் அனைவரும் சேர்க்கப் படாமல் இன்னும் சில பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படிச் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மானியம் கொடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சமூக நல மன்றத்தினால் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டதும், தனியார் பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களும், மருதநாயகம் உள்ளிட்ட எல்லா ஆசிரியர்களும், எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி யாராவது

சேர்த்துக்கொள்ளப்படாமலிருந்தால், கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Hindi Pandits

* 262 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received from the erstwhile Hindi Pandits Association of Tamil Nadu in August, 1972 praying that fully qualified Hindi Pandits may be given facilities for Secondary Grade training; and

(*b*) if so, the action taken thereon?

இந்தி ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தி ஆசிரியராக முழுத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு இடைநிலைத் தர ஆசிரியப் பயிற்சி பெற வசதிகள் செய்து தருமாறு 1972 ஆகஸ்டு திங்களில் தமிழ்நாடு முன்னுள் இந்தி ஆசிரியர் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசால் பெறப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, நம் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய இந்தி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் 1968-க்குப் பின்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, அவர்களையும் இந்த மாதிரி செகண்டரி கிரேட் குறுகிய காலப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார்கள். அதனுடைய பிரதிகள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டன. கல்வி இலாகாவிற்கும் இதுபற்றி அனுப்பப்பட்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருப்பார்களானால், இத்தகைய வாய்ப்பைப் பெற இருக்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாமல், இந்தி மொழியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்தி ஆசிரியர் கிரேடு ஒன்று, இரண்டு என்று இருக்கக் கூடும். அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்களானால், இந்த வாய்ப்பு வசதி செய்து தரப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, சுமார் 110 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றும் கூட அவர்களை அலுவலர்களாக, ஆபீஸ் இளைஞர்களாக நியமித்திருக்கிறோம். அவர்கள் மொழிப் பயிற்சி பெற்றவர்கள். மொழி போதனையில் பயிற்சி பெற்றவர்கள். இப்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்களை ஆசிரியர்கள் நிலைக்கு உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் அவர்களுக்கு விதித்த விதியின்படி

> "Such Pandits are required to appear for the S.S.L.C. Examination within five years with a view to get themselves qualified for the posts in which they have been absorbed. There is no provision in the G.O. for the in-service training of such Pandits as have been absorbed in the non-teaching posts and subsequently passed S.S.L.C. In the case of these Pandits, the question of qualifying themselves to become Secondary Grade teachers does not arise."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குப் பிறகு அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறுத காரணத்தால், அலுவலர்கள் போன்ற வேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தங்களைத் தேர்வு பெற்றவர்களாக ஆக்கிக் கொண்டிருப்பார்களானால், இந்தி மொழி பயின்று, எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்கிறவர்களை செகண்டரி கிரேடில் எடுத்துக்கொள்வதைப்பற்றி வழி வகைகளை ஆராயலாம்.

திரு. ஜி. கோவிந்தன்: தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் பதில் முரண்பட்டுச் சொல்கிறமாதிரி தெரிகிறது. முதலில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாக இருந்தால், வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றார்கள். இதில் நான்து படிக்கிறபோது, முன்பு ஆசிரியர்களாக இருந்தவர்கள் தற்போது எழுத்தர்கள், அட்டெண்டர்களாக இருக்கிற காரணத்தினால், இந்தப் பயிற்சி கொடுக்கப்பட இயலாது என்பதுபோல ஜி.ஓ. இருக்கிறது. இதை ஒட்டி 1968-ல் 13 பேர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். இன்னும் 110 பேருக்கு, முன்பே எஸ்.எஸ்.எல்.சி. படித்த பண்டிதர்களுக்கு, அந்தப் பயிற்சி கிரேடு அளிக்கப்படவில்லை. அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ஆக்குவதைப்பற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த உத்தரவு போட்ட நேரத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருந்தால், அவர்களை எடுத்துக்கொண்டு, செகண்டரி கிரேடு இன் சர்வீஸ் டிரெயினிங்குக்கு அனுப்பி ஆசிரியர்கள் ஆக்கினோம். குறைந்த படிப்பு உடையவர்களாக இருந்தால், அப்படிப்பட்டவர்களை அலுவலர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம். அதற்குப் பிறகு, அப்படிப்பட்டவர்கள் தாங்கள் மறுபடியும் ஆசிரியர் தொழிலுக்கு வரவேண்டுமென்று விரும்பினால், அப்படிப்பட்டவர்களுக்கு செகண்டரி கிரேடு டிரெயினிங் கொடுப்பதைப்பற்றி ஆராயலாம் என்று குறிப்பிட்டேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த இந்தி படித்தவர்கள் மூன்றாவதாகவே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள். சர்டிபிகேட்டுப் போகாமல் இந்தி பண்டிதர்களாக இருந்தவர்கள் இப்போது செகண்டரி கிரேடுக்குப் போகக் கூடும். அமைச்சரவர்கள் கூறியபடி, அம்மாதிரி உள்ளவர்களுக்கு வசதியை அரசு விரைவிலே கொடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திருப்பார்களானால், அவர்களை வேலையில் அமர்த்திக்கொண்டே, அவர்களுக்கு இன் சர்வீஸ் டிரெயினிங் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தேர்ச்சி பெறுதவர்களைத்தான் நாம் அலுவலர்களாக ஏற்றுக்கொண்டிருந்தோம். அலுவலர்களாகச் சேர்ந்ததற்குப் பிறகு தேர்ச்சிக்குரியவர்களாக, வெற்றி பெற்றிருப்பார்களானால், அப்படிப்பட்டவர்களை ஈர்த்துக்கொள்ள வழி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, அதற்கான முறைகளில் பரிசீலனை செய்து தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வந்து செகண்டரி கிரேடு இன் சர்வீஸ் டிரெயினிங் பெறவேண்டுமென்று விரும்பினால் அதற்கு வழி செய்யலாம்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் யார் பாஸ் செய்திருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் இன் சர்வீஸ் டிரெயினிங் கொடுத்தாகிவிட்டது. அதற்குப் பின்னால் பாஸ் செய்திருந்தாலும், அந்த சலுகை ரத்து செய்து விட்டோம் என்றார்கள். ஆக, 110 பேர்கள் ஆசிரியர்களாக ஆக வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதால் அவர்களுக்கு 'இன் சர்வீஸ் டிரெயினிங்' கொடுத்து, அவர்களுக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்து, ஆசிரியர் அல்லாத சிப்பந்திகளாக இருக்கும் அவர்களை ஆசிரியர் சிப்பந்திகளாக ஆக்குவதற்கு மறு பரிசீலனை செய்ய உத்தரவிடுவாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் குறிப்பிட்டேன்.

Trasning for Mathematics Teachers

* 263 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any massive programme to train Mathematics Teachers is to be undertaken during 1972; and

(*b*) if so, the details thereof?

கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சி

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க பெரிய திட்டம் எதும் 1972 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) கணக்கு மற்றும் அறிவியலில் மொழித்திறனை புதிய பாடத் திட்டங்களை துவக்கப் பள்ளிகளில் கல்வியாண்டு 1973-74 முதல் நடைமுறைக்குக் கொண்டுவர, 32,100 துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் 58,500 துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு நவம்பர் மாத முதல் 1973-ம் வருடம் மே மாதத்திற்குள் 8 நாட்கள் கணக்குக்கு அல்லது அறிவியலுக்கு மட்டும் 1,500 பயிற்சி வகுப்புகளுக்கு மேற்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட 80 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் நேரிடை பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: தலைவரவர்களே, இதற்கான செலவு எவ்வளவு, எத்தனைப் பாடங்களுக்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் புதிய பாடத் திட்ட அடிப்படையில் கணக்கும் அறிவியலும் சொல்லிக் கொடுக்க, அதற்காக 39 லட்ச ரூபாய் செலவாகியிருக்கிறது.

திரு. எஸ். பலராமன்: தலைவரவர்களே, மேலும் எவ்வளவு ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது? இந்தப் பயிற்சியின் நோக்கமென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, புதிய பாடத் திட்ட அடிப்படையில் கணக்கும் அறிவியலும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க அவர்களுக்குப் பயிற்சி வேண்டுமென்பதற்காக 350 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப் பட்டு வருகிறது. ஆகவே 80 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் நேரிப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த 350 பட்டதாரி ஆசிரியர்களை வைத்து இந்த 58,500 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை இங்கே வரவழைத்து, 8 நாட்கள் இருக்கச் செய்து, அவர்கள் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் கணக்கும் அறிவியலும் எப்படிச் சொல்லிக் கொடுக்கலாம் என்பதற்காக நேரிப் பயிற்சி அளிக்க இந்த ஏற்பாடு; இதற்காக 39 லட்ச ரூபாய் செலவு. மே திங்களில் இந்தப் பயிற்சி முடிவடையும். அடுத்த கல்வியாண்டுத் தொடக்கத் திலிருந்து 1-வது முதல் 5-வது வகுப்பு வரை இந்த ஆசிரியர்கள் புதிய திட்டத் தின்படி கணக்கும் அறிவியலும் சொல்லிக் கொடுக்கிற வாய்ப்பைப் பெறுவர்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பயிற்சிக்குச் செல்லக்கூடிய ஆசிரியர்களுக்கு, தொடக்கப் பள்ளியிலிருந்து செல்லக் கூடிய வர்களுக்கு, அந்தப் பயிற்சி நிலையத்திலிருந்து 5 மைலுக்கு உட்பட்டிருக்கிற வர்களுக்கு டி.ஏ. வழங்கப்படவில்லையென்ற புகார் வந்திருக்கிறதா? இந்த டிரெயினிங் நடைமுறைக்கு வந்து இருப்பினும், இந்தப் பயிற்சிக்கு மட்டும் ஏன் வழங்கப்படவில்லை? அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

4·20 பி. ப.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றிய புள்ளி விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, ஒன்றாவதிலிருந்து 5-வது வரைதான் இந்தக் கல்வி புகுத்தப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். அதுவும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆரம்பப் பள்ளியில் இதற்காக உத்தியோகம் கொடுப்பதற்கு அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு, இந்தத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரப்படும். அந்தத் தொடக்கப் பள்ளிக்குப் போய் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். அதற்காகத்தான் பட்டதாரி ஆசிரியர்கள் 350 பேர் அறிவியல், கணக்கியல் போன்றவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Metropolitan Transport Team of the Planning Commission

* 264 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any rapid transit system between Tiruvanmiyur and Ennore has been under examination by the Metropolitan Transport Team of the Planning Commission; and

(*b*) if so, the details thereof?

திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துத் திருத்தணி

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவான்மியூருக்கும் எண்ணூருக்கும் இடையில் விரைவுப் போக்கு வரத்து ஏற்பாடு ஏதேனும் திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துத் துணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகர்ப் போக்குவரத்துக் குழு, "சென்னை பெருநகர் பகுதி போக்குவரத்து வழிகள்—1991" என்னும் தனது அறிக்கையில் பெரு மளவு போக்குவரத்து ஏற்பாட்டுக்கான வடக்கு, தென்கிழக்கு இடை வழி குறித்து தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் ரயில்வே அமைச்சகம் திருவொற்றியூரையும், திருவான்மியூரையும் இணைக்கும் வடக்கு-தென் கிழக்கு இடைவழி நெடுக சென்னை மாநகரில் விரைவுப் போக்குவரத்து தொழில் நுட்ப-பொருளாதார ஏற்புடைமை ஆய்வை மேற்கொண்டுள்ளது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, மகாபலிபுரம் வரை இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலிலே திருவொற்றி யூரையும், திருவான்மியூரையும் இணைக்கிற அளவிற்குப் பாதாள ரயில் பாதையை அமைப்பதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு, அதிலே முயற்சி செய் வோமானால், பிறகு வேண்டுமானால் மகாபலிபுரம் வரை நாம் நீட்டிக்கலாம். முதலிலே சென்னையைப் பொறுத்திருக்கிற நெருக்கடியைத் தீர்ப்பதற்கான இந்த வழிகளை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களா என்பதைப்பற்றித்தான் இப்போது நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

Teachers with Post-Graduate Qualifications

* 265 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether "B" Wing Teachers with Post-Graduate qualifications are absorbed into Collegiate service under Rule 10 (a) (i) while "A" Wing teachers under similar circumstances are absorbed under Rule 39 (a) (i);

(b) the reasons for this disparity; and

(c) the steps taken to remove such disparity?

பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள்

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியுடைய 'பி' பிரிவு ஆசிரியர்கள் (10) (a) (1) விதிப்படி கல்லூரிப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகையில் அதே நிலையிலுள்ள 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 39 (a) (i) விதிப்படி பணியில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா?

(இ) இந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் யாவை?

(உ) இத்தகைய வேறுபாட்டைக் களைவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள், தற்போது தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணியாளர் தொகுதிக்குரிய தனிவிதிகளின் கீழ் வருவதில்லை. ஆகையால் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை போதனாசிரியர்கள், விளக்குநர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்வதுபோல் இவர்களையும் நியமிக்க இயலாது. தனிவிதிகளைத் திருத்துவது அரசின் தீவிரமான பரிசீலனையில் இருந்து வருகின்றது. அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் தகுதி பெற்ற ஆசிரியர்களை தற்காலிகமாக போதனாசிரியர்கள், விளக்குநர்கள், மற்றும் உதவிப் பேராசிரியர்களாக நியமிப்பதற்கும், அவர்கள் தங்களது மீள் உரிமையை அரசினர் கழக உயர்நிலைப்பள்ளிகளில் வைத்துக் கொள்வதற்கும் அனுமதி அளிப்பது குறித்தும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU D. SANTOSHAM: Sir, after the Board Schools were taken over by the Government, the teachers in those schools are suffering from all the disabilities that are attached to the Government servants. While so, is it not reasonable and just that they should also get the benefits of Government service? May I request the Hon. Minister to see that the examination is concluded very expeditiously and order passed placing them on the same level as 'A' wing teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்களை அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்றுக்கொண்ட நேரத்திலிருந்து அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். அந்த நோக்கத்தை எடுத்த எடுப்பிலேயே உடனடியாகச் செய்வதற்கு முடியாத பல சங்கடங்களை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பொறுத்த அளவிலே முடிவு காணச் செயல்படுகிறோம். இதைப் பரிசீலனை செய்து விரைவிலே எல்லா வசதிகளும் இவர்களுக்கும் கிடைக்கத்தக்க அளவிற்கு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, பட்ட மேற்படிப்புப் பட்டங்களைக் கொண்ட சில தலைமை ஆசிரியர்கள் உதவிப் பேராசிரியர்களின் சம்பள ஊதியத்தைவிட அதிகமாகச் சம்பளம் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இம்மாதிரி "கலீஜியேட் டிபார்ட்மெண்ட்டில்" எடுக்கும்போது, அவர்கள் இப்போது வாங்கக் கூடிய சம்பளம் குறையாதபடி அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றித் தனியாக ஆராயப்படும். அந்த அளவிற்கு எடுத்துக்கொள்வதை விட இங்கே இருப்பது நல்லது என்று கருதுகிற சூழ்நிலை ஏற்படலாம். அது தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றித் தனியாக ஆராயலாம்.

Postal Tuition by the Unregistered Allopathic Medical Practitioners

* 266 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware that private medical colleges in Allopathic Medicine which also give postal tuition are being conducted by unregistered Allopathic Medical Practitioners in the State; and

(b) if so, the action proposed to be taken by the Government to avert such practices?

பதிவுபெறுத ஆங்கில முறை மருத்துவர்களால் அஞ்சல் மூலம் பயிற்சி.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அஞ்சல் மூலமாகவும் பயிற்சியளிக்கும் தனியார் ஆங்கில முறை மருத்துவக் கல்லூரிகள் இம்மாநிலத்திலுள்ள பதிவு பெறுத ஆங்கில முறை மருத்துவர்களால் நடத்தப்படுகின்றன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அத்தகைய பழக்கத்தைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) ஒரு விவர அறிக்கை @ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

THIRU D. SANTOSHAM: Sir, under the Private Educational Institutions Regulation Act, 1966, the word 'College' should not be used by any private institution like Tutorial College. Will there be a prohibition against the use of the word 'College' by some private institutions which purport to teach allopathy?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, it is not merely a question whether they have to name it as a College or a School or a training institute. But, any training for allopathic medical practice is more or less prohibited outside the Government agency, and the Government have not permitted such a training by any private organisation.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இது போன்ற ஒரு மருத்துவக் கல்லூரி சென்னை நகரிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த விவரம் எனக்குத் தெரியும். அந்த விளாசத்தை அமைச்சரவர்களுக்குக் கொடுக்க நான் விரும்புகிறேன். அதிலே அவர்கள் "மெகசைன்" என்ற அளவிலே ஒரு மாதாந்திரப் பத்திரிகையை நடத்துகிறார்கள். இந்த மாதாந்திரப் பத்திரிகைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய சார்பாக விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது போன்ற கல்லூரியை நடத்துகிற ஒருவர் நடத்துகிற பத்திரிகைக்கு எப்படி மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

@ 130-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் அதற்காகத் தனிக் கேள்வி போட்டிருக்கிறார்கள். அதற்காகத் தனியான விடையும் இருக்கிறது. ஆனால் இந்தக் கேள்வியிலே அது எழுவில்லையானாலும், தொடர்பு காரணமாக நான் விளக்க விரும்புகிறேன். அந்தப் பத்திரிகையைப் படிப்புவர்கள் தனிப்பட்ட மருத்துவர்கள். குடும்ப நலத் திட்டத்தை ஆதரித்தும் சில கட்டுரைகளை அவர்கள் அதிலே எழுதுகிறார்கள். எனவே அந்த முறையில் பத்திரிகை என்ற முறையில் அதற்கு என்று அவர்களுக்குச் சில விளம்பரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு கல்வி நிலையத்தை நடத்துவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவும் இல்லை, அனுமதி பெறவும் இல்லை. ஆனால் அகில இந்தியாவிலே ஒவ்வொரு மாநிலத்திலும் இப்படி அலோபதி மருத்துவத்திற்குப் பயிற்சி தருகிற நிலைமையும், பயிற்சி பெறுகின்றவர்கள் சமூகத்திலிருந்து பணியாற்றுகிற நிலைமைகளும் இருக்கின்றன. தமிழகத்திலே தான் அந்த முறை மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படி ஒன்றிரண்டு தமிழகத்திலே வருகிறபோது, அந்தச் செய்திகள் அரசாங்கத்திற்குத் தெரியுமானால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

"The matter has, therefore, been referred to the Inspector-General of Police and he has been requested to take immediate action in the matter and report the result to Government very expeditiously."

என்ற வகையிலே இருக்கிறது. ஆகவே இவற்றை நாம் ஆதரிக்கவில்லை என்பது தெளிவாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இது மாதிரி தனியார் நடத்துகிற கல்லூரிகளில் படித்து விட்டு தமிழகத்தில் ஆயிரக்கணக்கான பேர்கள் ஒவ்வொரு ஊரிலும் 5, 10 என்ற அளவிலே இருந்து கொண்டு இந்த ஆங்கில மருத்துவ முறையைக் கையாளுகிறார்கள். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது பற்றி விளக்க இந்தக் கருத்தை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The Registrar, Tamil Nadu Medical Council has stated that a person who undergoes training in the Centre (Allopathy Medical Training Centre, Madras) cannot practise modern medicine without the necessary qualification and if he does so, he will be liable for prosecution under section 15 of the Indian Medical Council Act, 1956."

அந்த விவரம் இருக்கிறது, அந்த அடிப்படையில் இந்தியன் மெடிகல் கௌன்சில் நடவடிக்கை எடுக்குமானால் உள்ளபடியே அவர்கள் குற்றம் செய்ததாக அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டிக்கவும் கூட வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன்.

"The Director of Medical Education has stated that no permission was granted to the Allopathy Medical Training Centre, Madras-21, to give practical training to the candidates and that it is not desirable to permit such institutions to function. The Director has further stated that as the paper notification is false and as no permission was given by the Government a case under Section 420 I.P.C. (cheating) may be registered, the matter investigated and charge sheet laid against the person concerned"

என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த இந்தியன் மெடிகல் கௌன்சில் ஆக்டின் கீழ், செக்ஷன் 15, 16-ன் கீழே நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இது வரையில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் உண்மையாகப் படித்தவர்கள் ஆங்கில மருத்துவத்தைக் கையாள்கிறார்கள். படிக்காதவர்களும் கையாள்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும் என்பதற்காக அரசு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் பல ஆண்டுகளாக இது நடைபெற்று வருகிறது. அதற்கு ஆக்ஷன் எடுக்கக்கூடிய அளவிலே சட்டம் இருக்கிறது. ஆக இனிமேலாவது அரசு முயற்சி செய்து ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டங்கள் எப்போதும் தானாகவே செயல் படாது. அந்தக் குற்றச்சாட்டை யாராவது தெரிவிப்பார்களானால் Cognisance of an offence என்றும் சட்ட முறைப்படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே புகார்கள் ஏதாவது இருக்குமானால், இந்தியன் மெடிகல் கௌன்சில் அல்லது அது சார்புடையவர்கள் தெரிவித்தால், ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம் என்று கருதுகிறேன். சட்டங்கள்பற்றி அல்லவா சரியாகச் சொல்லக் கூடிய அளவிற்கு எனக்குப் பயிற்சியில்லை. வேண்டுமானால் விவரங்களைச் சேகரித்துப் பதில் அளிக்க முடியும்.

திரு. சி. வி. ராஜகோபால்: நண்பர்களே, இந்த அலோபதி மெடிகல் காலேஜில் ஆயிரக்கணக்கானவர்கள் படித்துவிட்டு வருகிறார்கள். ஆனால் வைத்தியம் தெரியாத காரணத்தினால், தவறுகள் செய்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படித்து விட்டு

முறையாக இன்ஜெக்ஷன் செய்ய வேண்டுமென்று சட்டமிருந்தாலும், இப்படி அலோபதி "கோர்ஸில்" படித்தவர்களுக்கு மேற்கொண்டு இந்த நவீன வைத்திய முறையை கற்றுக்கொடுத்து, நிலைமையைச் சீர் செய்ய முடியுமா, அவர்கள் வைத்தியர்கள் ஆக்கப்படுவார்களா, அவர்களுக்கு இந்த ஆலோசனை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நண்பர்களே, சில பேர் சிறு வயதில் படித்தால் தான் தேர்ச்சி பெறுவார்கள். முதிய வயதில் சில பேருக்கு எதையும் கற்றுக் கொடுக்க முடியாது. அவர்களுக்கு வேண்டிய அறிவை உணர்த்துவது கூட மிகவும் கடினமாக இருக்கும் என்பதை அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சில பழக்கங்கள் ஏற்பட்டுச் சில விதமான பயிற்சியை அவர்கள் பெற்றுக்கொண்டு, கிராமங்களிலே சென்று பணியாற்றுகிறார்கள். ஆனால் அவர்களை நெருக்கி யாராவது கேட்பார்களானால், அலோபதி என்று சொல்வது கிடையாது. நாங்கள் நாட்டு மருத்துவம் செய்கிறோம் என்றுகூடச் சொல்கிறார்கள். ஆக மக்கள் சமுதாயத்தினுடைய அறிவும், தெளிவும் வளர்ச்சியுறுமானால், இவைகள் காலப் போக்கில் திருத்தப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

Spurious Drugs

267 Q.—THIRUVALARGAL L. BALARAMAN AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state— 4-30 பி.ப.

(a) whether spurious drugs were detected in the hospitals in Madras during June, 1972; and

(b) if so, the steps taken thereon by the Government?

போலி மருந்துகள்

திரு. எல். பலராமன் & திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜூன் திங்களில் சென்னை மருத்துவமனைகளில் போலி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1972 மே திங்களில் கண்டுபிடிக்கப் பட்டன.

(இ) மாநில மருந்துச் சரக்குகள் கட்டுப்பாடு அலுவலர் மருந்துகள் புழங்கிய நிறுவனத்தின் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்.

திரு. எஸ். பலசாமன் : தலைவர்களே, எந்த முறையில் இந்தத் தவறுகள் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். வாங்கப்பட்டவர்களால் ஏற்பட்டதா அல்லது விநியோகித்தவர்களால் ஏற்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்களே, இந்தக் கேள்வியில் சென்னை மருத்துவ மனையில் போலி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டனவா என்றுதான் இருக்கிறது. மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகளை வழங்கியவர்கள், அவர்களுடைய மருந்தின் தரம் அறியாமலேயே வழங்கியிருக்கக்கூடும். தரம் குறைத்தும் வழங்கியிருக்கக்கூடும். அந்த மருந்துகள் பயன்படுத்துகிற நிலையிலே தரக்குறைவானவை என்று கண்டுபிடிக்கப்பட்டன. அத்தத் தரக் குறைவான 71,000 டேப்லட்கள் Chlorpromazine—50 mg -ம், 1,20,000 டேப்லட்கள் Chlorpromazin -100 mg-ம் கண்டுபிடிக்கப்பட்டன. எத்தனை இந்த இரண்டு மருந்துகளும் 8 அல்லது 9 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளவை. அதற்குப் பிறகு 9,458 எண்ணிக்கையுள்ள Chlorpromazine—100mg. என்ற மருந்து தரக் குறைவானவையென்று கண்டுபிடிக்கப்பட்டன. அப்படிப்பட்ட தரக்குறைவான மருந்துகளை வழங்கியவர்கள், அவர்கள் அதை வழங்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். A case has been filed in the Court of the Chief Presidency Magistrate Egmore, Madras-8 and the case is under trial

என்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர்களே, இம்மாதிரி தவறான மருந்துகள் விற்பதென்பது பயங்கரமான அளவுக்குப் பெருகிவிட்டதாகத் தெரிகிறது. இன்று காலைப் பத்திரிகையில்கூட, நேற்று ஒரு பென்சிலின் இன்ஜெக்ஷன் போட்டதனால், தஞ்சாவூரிலே ஒரு மருத்துவக் கல்லூரி மாணவி இறந்துவிட்டதாகத் தகவல் இருக்கிறது. ஆகையினால் இந்த மருந்துகளை நன்முகப் பரிசிலனை செய்து, மார்க்கெட்டுக்கு அனுப்புவதற்கு அரசு பரிசிலனை செய்யுமா ; அதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றனவா ; எப்படி இத்தத் தவறுகளைத் தடுப்பதற்கு அரசு நினைத்துக்கொண்டிருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்களே, இதுவரையில் மருந்துகள் செய்கிற இடத்தில் அதைச் சரி பார்த்துச் செய்வதென்ற பொதுப்படி மருந்து உற்பத்தியாளர்களிடத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. சில நோய்களில் மூலப் பொருள்களைக் கொண்டுவருவதில் அவர்கள் தவறுகள் செய்து விடுகிறார்கள். இன்னொரு இடத்திலிருந்து வாங்கி, அதை மருந்தாகத் தயாரித்து, சீசாக்களில் அடைக்கிறபோது, அவர்கள் தவறு செய்துவிடுகிறார்கள். சில நோய்களில் அவர்கள் தயாரிக்கிற மருந்துகளில் கலப்புப் பொருள்கள் அதிகமாகி, அதை நுண்ணிய தரம் குறைத்து விடுகிறது. இப்படிப்பட்ட காரணங்களினாலே தவறுகள் ஏற்படலாம். அவைகள் அவ்வப்போது விற்கப்படுகிற இடங்களிலும், வாங்கப்படுகிற இடங்களிலும், அவை மீது குற்றம் குறைகள் சொல்லப்படுமேயானால், உடனே அது பரிசிலிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட குறைகளைக் கேள்விப்பட்டு, பரிசிலிக்கிற கட்டத்தில்தான் நம்முடைய அரசு அலுவலர்கள் இயங்க முடிகிறதே தவிர, உற்பத்தியாகும் தொடக்க நிலையில், எல்லாக் கட்டத்திலேயும் பரிசிலிக்கும் நிலையில்லை. " Indian Standard Institution —I.S.I." என்று வைத்திருக்கிறார்கள். அப்படியிருக்கிற அந்த அமைப்பு முறை மூலமாக, இன்னும் ஏதாவது நிட்டவட்டமாகச் செய்யக்கூடுமானால், வரையற்ற செய்யக்கூடுமானால், அதை இந்த அரசாங்கம் வரவேற்கும். ஆனால் இப்போது இருப்பது, குற்றங்கள் நடைபெறுவதாக ஐயம் ஏற்படும்போது, கண்டுபிடித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதுதான். வேண்டுமானால் எதிர்பாராத வகையில் check-up நடத்தலாம். ஆனால் எல்லா மருந்துகளையும் தொடர்ந்து விடாமல், அதை உற்பத்திக் கட்டத்திலேயே கண்காணித்து, குற்றங்கள் இல்லாமல் கவனிக்கக்கூடிய அளவுக்கு அலுவலர்களை நியமிக்கிற கட்டத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : தலைவர்களே, தரக் குறைவான அல்லது போலியான மருந்துகளை சப்ளை செய்த கம்பெனிக்காரர்கள் யார்? அவர்களுடைய பெயர் என்ன? அவர்கள், இனி சப்ளை செய்வதிலிருந்து, இந்த விவகாரம் பற்றித் தீர்ப்புக் கிடைக்கிறவரையிலாவது, தற்காலிகமாக விலக்கி வைக்கப் பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்களே, இதிலே தரப்பட்டிருக்கிற பெயர் ' Messrs. Jain Pharmaceuticals, Madras ' அவர்களிடமிருந்து மருந்துகள் மருத்துவ நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. அந்தக் குறிப்பிட்ட மருந்து அடியோடு தடை செய்யப்பட்டது. அந்த மருந்து தயாராவதற்குக் காரணமாக இருந்த கம்பெனி மீதும் பரிசோதனை நடைபெற்றது.

" It has also been reported by the Director of Medical Education that 50 x 100 tablets of Di-Ethyl Carbomazine Citrate I.P. 50 mg. manufactured by Messrs. Bombay Pharma Products, Indore were supplied by Messrs. Jain Pharmaceuticals to the Government Royapettah Hospital." On this information, the departmental people have proceeded to Indore to investigate into the matter.

THIRU G. VASANTHA PAI: Sir, in relation to the incident reported in to-day's papers, have the Government ordered any inquiry into the cause, especially when the particular patient had no allergy to that medicine and despite that fact, she has collapsed after the administration of that medicine?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The Government should get all the information before instituting any inquiry into such things. It has already happened on some other occasions after injection of penicillin or some other medicine and in those cases, also the patients have collapsed. As such, we cannot say anything now, without getting necessary information, particularly as to what the Government will do in such matters.

THIRU G. VASANTHA PAI: May I take it that the Government have called for necessary information in relation to the case which was reported in the press today?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, I have also seen the same news in the papers and come to know that the person is not only a Medical College student but also a daughter of a District Medical Officer. It seems that the doctors there have made genuine efforts to save the girl from the after-effects of the medicine.

The whole case may be inquired into with the help of the medical knowledge available.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister mentioned that unless complaints were received about spurious drugs, it is difficult for the Government to conduct any test. May I suggest, Sir, that we have a number of drug testing laboratories established in Tamil Nadu, and random samples be sent for testing, because a large amount of medicine is being purchased by the Government Hospitals? May I know, Sir, whether the Government have any such proposal in this regard?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, I welcome such a suggestion. But, even after establishing such Drug Testing Laboratories in many parts of Tamil Nadu, I do not think it will be possible to test every batch of medicine that is being sent out everyday or every alternate day. Every batch of the medicine is produced or prepared under a particular condition which will differ from the other. Therefore, such calamities can be prevented

only by the precautionary steps taken by those who are producing such medicines and they have to be warned so that they may take all precautions.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, ஐ.எஸ்.ஐ.யுடன் கலந்துபேசி அவர்கள் மூலமாக இம்மாதிரியான போலி மருந்துகளை உற்பத்தி செய்பவர்களைக் கண்டுபிடிக்கலாம், அவைகளைப் பரிசீலனை செய்வோம், ஏற்பாடு செய்வோமென்ற யோசனையை அமைச்சரவர்கள் வெளியிட்டார்கள். அதைத் தொடர்ந்து ஐ.எஸ்.ஐ. போடு பேச்சு நடத்தி, அவர்கள் மேற்கொண்டு ஒவ்வொரு (batch) பேட்சையும் பரிசீலனை செய்தபின், மார்க்கெட்டுக்கு வரும்படி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு உற்பத்தியாளர்களே இதற்கான முயற்சி எடுத்து ஒவ்வொரு பேட்சையும் டெஸ்ட் பண்ணி, அதில் ஆபத்து இல்லையென்று தெரிந்த பின்னர் மார்க்கெட்டுக்கு அனுப்ப வேண்டும்; அப்படியொரு சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்று அவர்களை வற்புறுத்தி, அம்மாதிரி வெளியிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது தமிழ் நாட்டு அரசாங்கம் மட்டும் செய்யக்கூடிய காரியமல்ல. தமிழ் நாட்டிலே உற்பத்தியாகிற மருந்து, தமிழ் நாட்டிலேயுள்ள தேவைக்கு ஏறத்தாழ, நூற்றுக்கு 20 அல்லது 25 பங்குதான். இந்தியாவினுடைய மொத்தத் தேவைக்காக பம்பாய், குஜராத் மாநிலங்களில் நூற்றுக்கு 80, 90 பங்கு மருந்துகள் உற்பத்தியாகின்றன. அங்கேயிருந்து மருந்துகளை வரவழைத்துத் தருகிறவர்கள் இருக்கிறார்கள். மேலும் மூலப் பொருளாகக் கலக்கப்பட வேண்டிய பொருள்களையும் அங்கேயிருந்து அனுப்புகிறார்கள். ஆகவே அகில இந்திய அடிப்படையில் மத்திய அரசு, இப்படித் தரமற்ற ஏற்பட்டுவிடக்கூடிய கலப்பட வினைவைத் தடுப்பதற்காக ஏதேனும் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களேயானால், அவர்களை நாம் வலியுறுத்திக் கேட்கலாம். மாநில அரசு தன்னுடைய ஆலோசனைகளையும் சொல்லலாம்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மாநில அரசு மத்திய அரசுக்குத் தகுந்த தாக்கீது கொடுத்து, தகுந்த ஏற்பாட்டினைப் பண்ணும்படி வற்புறுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாநில அரசு ஆலோசனைகளைச் சொல்லலாம். ஏனென்றால் மற்ற மாநிலங்களிலிருந்து வந்து, இப்போது நம்முடைய மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில மருந்துகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்காக, தென் மாநிலங்களுக்கு [illegible]

ஒருமுறை 2 அல்லது 3 அதிகாரிகளை மாற்றி மாற்றி அனுப்ப வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அத்தந்த மாநிலத்தில் இந்தக் கட்டுப்பாட்டை நீக்கி பெறச் செய்ய வேண்டுமென்றால், மத்திய அரசு ஒருமித்த, ஒருமனதான ஒரு திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மாநில அரசு நிச்சயமாக அவர்களைக் கேட்டுக்கொள்ளும்.

திரு. எஸ். பலராமன் : தலைவரவர்களே, சென்னையிலே இது போன்ற தவறு தலான ஒரு நிலையில் மருந்துகளை உற்பத்தி செய்வதனால், அந்த மருந்து கொடுத்து பல குழந்தைகள் இறந்தன என்று பத்திரிகைகளிலே செய்தியைப் பார்த்தேன். இது போன்ற நிலைமையில் மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இது போன்ற மருந்துகள் உற்பத்தி செய்கின்றவர்களைக் கண்காணிக்க தக்க நடவடிக்கைகளை, அறிவுரைகளை இதற்கு மேலாவது வழங்க
4-40 இருக்கின்றதா என்பதையும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு
பி.ப. இருக்கின்றதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான்கு ஐந்து நிமிடத்துக்கு முன்னாலே மத்திய அமைச்சரோடு நடைபெற்ற சுகாதார அமைச்சர் களுடைய குழுக் கூட்டத்திலே நான் இதைப்பற்றி விளக்கி அவர்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். ஆனால் அதில் இந்தியாவிலேயே இத்தகைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கித்தான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கின்றது. அவர்கள் அதில் இந்திய பிளானிங் கமிஷனுடைய அடிப்படையான ஆதாரத்தோடு இப்படிப்பட்ட 'டிரக் டெஸ்டிங் லபாரட்டரி' நாடு முழுவதும் பரவலாக ஏற்படுத்துவதற்கும் மத்திய அரசின் சார்பில் சென்ட்ரல் ரீஜினல் லெபாரட்டரிஸ் ஏற்படுத்துவதற்கும், மாநில அரசுகள் அப்படிப்பட்ட லெபாரட்டரிகளை ஏற்படுத்துவதற்குமான ஒத்துழைப்பை நல்குவதற்கும் சில ஆலோசனைகளை மேற்கொண்டிருக்கின் றார்கள். எந்த அளவுக்கு அந்தத் திட்டம் நிறைவேறும் என்பதை அறிய தனிக் கேள்வி கேட்டால், அதற்கான விளக்கங்களை நான் தர முடியும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, கோளாறு உள்ள மருந்துகள் பெருவாரியாக வெளி மாகாணங்களில் கலக்கப்படும் மருந்துகளாகத் தான் இருக்கின்றன என்று சொல்லுகின்றார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி நான் சொல்லி விட்டாலும், அது பிறருக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தும். அதிகமான அளவு மருந்துகள் வெளி மாநிலங்களில் உற்பத்தியாகின்றன, அப்படிச் சோதனை ஏற்படுகின்ற மருந்துகளில் ஒரு 'சப்போர்ஷனேட் மருந்துகள்' வெளி மாநிலங்களில் தயாரானதாக இருக்கக்கூடும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது நமது மாநிலத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள் முறையாக தவறுதல்கள் இல்லாமல் தயாரிக்கப்படுவதற்காக, என்றைக்கு குறிப்பிட்ட லெபாரட்டரியிலே ஒரு 'பேட்ச்' மருந்து கலக்குகின்றார்கள் என்று நமக்குத் தகவல் தெரிவித்தால், நம் அதிகாரிகளை அங்கு அனுப்பலாம். அவர்களுடைய சூப்பர்விஷனிலேயே மருந்து கலக்கப்பட வேண்டும். இதற்காக அந்த அதிகாரிகள் செய்கின்ற வேலைக்கு ஆகின்ற செலவுகளை அந்தந்த மருந்து உற்பத்தியாளர்களே கொடுக்கக் கூடிய நிலைமையை உருவாக்கி, அதை அரசாங்கம் கண்காணித்து வேறு மாநிலங் களுக்கும் வழிகாட்டியாக அமைய முன் வருமா என்று அறிய விரும்பு கின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இவைகளில் எல்லாம் நுழைந்து பார்த்தால்தான் உண்மை தெரியும். ஒரு மருந்தை டாக்டர்தான் கொடுக்கின்றார். ஆனால் நோயாளி சில நேரத்தில் பிழைப்பதில்லை. அது போல இதிலே கவனம் செலுத்துவதற்கென்று சில அலுவலர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கவனம் செலுத்துகின்றபோது, சில தவறுகள் ஏற்படலாம். அது மனித இயற்கையினால் ஏற்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட தவறு என்றைக் காவது ஒரு நாள் ஏற்பட்டுவிடுகின்றது. அவைகளையெல்லாம் மறு பரிசீலனை செய்யும் அளவுக்கு நம்நாட்டு மருத்துவத் துறையோ, மருந்து உற்பத்தித் தொழிலோ வளரவில்லை. அந்த அளவிற்கு 'சைன்டிபிக்' முறைகளில் செம்மைப் படவில்லை. அத்த முறைகள் எல்லாம் செம்மைப்படுகின்ற ஒரு சூழ்நிலையை நாம் எதிர்காலத்திலே உருவாக்க வேண்டும். அந்த மருந்துகளைப் பரிசோதிக் கின்ற ஒரு முறையை, இதுவரையில் பரிசோதித்ததைவிட இன்னும் அதிகமான அளவு இடையிடையே விட்டுவிட்டு நடைபெறுகின்ற பரிசோதனைகளை மேலும் கொஞ்சம் அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மருந்துகளில் போடப்படு கின்ற மூலப்பொருள்கள் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன, ஒவ்வொரு முறையும். மருந்து போடப்பட்டபிறகும் ஒவ்வொரு முறையும் அவர்கள் ஆராய்ச்சி செய்த பின்னரே வெளியே அனுப்பப்படுகின்றது. சென்னையிலே நடைபெற்ற குழந்தை களுடைய விபத்துக்குக் காரணம் போடப்பட்ட மருந்தை ஆராய்ச்சி செய்யக் கூடிய ஒரு நிலையம் சென்னையிலே இல்லை, பம்பாயிலே இல்லை. அவர்கள் கிண்டியிலேதான் 'போமோகிராபிக் டெஸ்ட்' என்று ஒன்று வைத்திருக்கின் றார்கள். சாதாரணமாக ஆராய்ச்சி செய்வதும் இல்லை. அது மருந்து அல்லாத ஒரு உப பொருள். விஷக்கிருமி என்பதாகும். இது ஒரு எதிர்பாராத சந்தர்ப் பத்திலே ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தவிர, தமிழ்நாட்டிலே இருக்கக்

கூடிய மருந்துசாலைகள் நல்ல முறையிலே இயங்குகின்றன என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கவலையை நான் நீண்டகாலமாக உணர்ந்தவன். அங்கத்தினர் அவர்களைப் போன்றவர்கள் சட்ட மன்றத்திலே இடம் பெறுவார்களானால், பொறுப்புணர்ந்து தங்களுடைய மருந்துத் தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் என்று நானும்கூட நம்புவேன். சில தவறுகள் ஏற்பட்ட பின்னர்தான், அந்தத் தவறு ஏற்பட்டிருக்கின்றது என்பதை நம்மாலும் உணர முடிகிறது. குறிப்பிட்ட ஒரு பொருள் என்று சொல்லி, அதிலே ஒட்டப்பட்ட லேபலுக்குச் சம்பந்தமில்லாத ஒரு பொருள் அதன் உள்ளே இருந்தது. அது விஷத்தன்மையுள்ளது. குழந்தைகளுக்கான பொருளில் மற்றொரு பொருள் கலக்கப்பட்டுவிட்டது. வர்ண வேற்றுமை இல்லாத காரணத்தால், அது உணரப்படவும் இல்லை. அதன் பின்விளைவுகள் மூலமாகத்தான் அது உணரப்பட்டது.

Environmental Pollution in Madras City

* 268 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the steps taken by the Government to check environmental pollution in Madras City?

சென்னை மாநகரின் சுற்றுப்புற சுகாதாரம் கெடுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் சுற்றுப்புற சுகாதாரம் கெடுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை @ சட்ட மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, in respect of the detailed answer given by the Government, I want to know whether the Committee has recommended the growing of trees and the prevention of cutting down of trees as one of the things necessary for preventing air pollution. This is with regard to item No. 1.

With regard to item No. 2, will not the Hon. Minister consider that the sum of Rs. 12,542 collected as fine from 4,584 owners of vehicles which have been polluting the air is too small an amount?

@ 130-131-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Regarding item No. 3, have the Government done anything to see that the sewage which is flowing into the backwaters near the Oceanic and into the Cooum and the Buckingham Canal is diverted into the sea?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I cannot answer all the questions. One of the main questions is regarding the amount that is collected as fine. It is only a beginning that has been made and I think in the long run the amount may increase. In the beginning, the fine is imposed to make them realise their responsibility and understand the implications. In the later stages only, the fine or the other forms of punishment may become severe.

About the trees, etc., the matter has to be looked into by other departments like the Local Bodies or the R.D.L.A. and the Forest Department. In the City, the Forest Department has no responsibility and, therefore, the Corporation may have to look into that question.

Regarding the third question, I think the Public Works Department will consider it.

THIRU A. R. DAMODARAN : Sir, pertaining to paragraph 2, where they have stated that 4584 vehicle owners have been fined, may I know, Sir, whether any scientific instrument is used by the police in determining the extent of noxious gases that are emitted by the motor vehicles or whether these fines are merely collected, just as most Police people do, merely for the sake of furnishing statistics for such answers as the Ministers may provide?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I cannot say definitely whether any instrument is being used or not. But, our own eyes and nose are the best indicators. We are able to see and feel that noxsous gases are emitted by vehicles in large quanties. The Police have got the minimum necessary instruments of eyes and nose and, therefore, whatever might have been the initial steps that are being taken, they have to be encouraged and not discouraged.

THIRU A. R. DAMODARAN : Sir, while I agree that pollution should be prevented, may I point out, with due deference to the Hon. Minister, because I am in touch with a good deal of motor

vehicles, that allowing the delicate nostrils of the policemen to find out whether gases are noxious or not, is not strictly a legal method of conducting prosecution? In Japan they have an instrument for the purpose. I have no objection if the motor vehicles are taken to the Police Commissioner's Office and an instrument is used to check up the degree of noxious gases emitted. May I point out that undue harassment is being caused by needless prosecution for the so-called pollution of the atmosphere by the vehicles?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, as far as these cases are concerned, there was no representation that the prosecutions were unjustifiable. There has been no representation till now to the Minister or to the concerned Officer. But, anyhow, I shall try to advise the department to use such instruments in order to facilitate prosecution.

THIRU A. R. DAMODARAN: To prove my charge, may I just inform the Hon. Minister that two of my vehicles which had gone to the T.V.S. for repairs only one month before were stopped on the Highways in Madras and that they were fined Rs. 10 each? The object of the fine was that there was no pollution but the policemen said that some charge would have to be put. Will the Hon. Minister, therefore, bear in mind that all the nostrils are not indicative of the exact amount of noxious gases that vehicles may produce?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, even the hon. Member wants to tell such things because he has raised the issue in this forum. If he had any real objection, I think he would have brought it to my notice earlier.

(Thiru K. S. Abdul Wahab rose.)

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I want to supplement the answer given. In the I.I.T., Madras, they have already evolved a smoke meter through which the smoke number could be straightway found. They have evolved it only very recently in the Indian Institute of Technology, Madras.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இப்படி சார்ஜ் செய்யப்பட்ட வண்டிகளிலே தம்முடைய அரசாங்க பில்கள், அல்லது அரசாங்க லாரிகள் ஏதாவது

உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் நாம் அனுபவத்தில் பார்க்கின்றோம். அதை நான் பெரிய குறையாகச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்கின்றேன். ஏராளமான பஸ்கள் ஏராளமான புகையைக் கக்கிக்கொண்டு போவதை நாம் தினப்படி அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இந்தமாதிரி நிலைமையில் உள்ள சில அரசாங்க ஊர்திகளைப் பிடித்து ஏதாவது தண்டனைக்கு உட்படுத்தியிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய ஒரு பகுதி இன்னொரு பகுதிமீது வழக்குப்போட்டால், கணக்குத்தான் பார்க்கமே தவிர, பொது மக்களும் அந்தப் பொறுப்புணர்ச்சியைப் பெறுகிற முறையிலே அது நடைபெறுவதில்லை. அதற்கு மாறுகப் போக்குவரத்துத் துறையினுடைய இயக்குநர் அல்லது துணை இயக்குநர் ஒருவரும்கூட இந்தக் குழுவிலே ஆலோசனையிலே கலந்துகொண்டிருக்கின்றார்கள். போக்குவரத்துத் துறை பஸ்களில் ஏற்படுகின்ற புகையைக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்கள். அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, அந்தப் போக்குவரத்துத் துறை அதிகாரி மீதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் நடவடிக்கை செம்மையாக எடுத்து கவனிக்கவில்லை என்று கேட்டிருக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர்களைத் தண்டிக்க உரிமையுள்ள இந்த அரசாங்கம், தாம் நடத்துகின்ற இலாக்காவும் செம்மையாக நடத்தப்படுகின்றது என்பதை உலகத்துக்கு உணர்த்த முடியும். இதை ஆலோசிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, போக்குவரத்து அதிகாரி கக்குகின்ற புகைக்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்த பஸ், லாரிகளில் புகை போக்கி 'எக்ஸ்ஹாஸ்ட் பைப்' கீழே இருக்கிறபடியால் நேராக நடமாடும் கால் நடைப் பிரயாணிகளுக்கு அதிகமாக பாதகம் ஏற்படுவதால், மேல் நோக்கி பைப் வைக்க அரசாங்கம் ஆணையிடுமா அல்லது மேலும் இதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக புகை மேலே போய்விட்டால் நல்லது. பக்கத்தில் போவதால் தான் இடைஞ்சல் வருகிறது. அதைப் போக்க படிப்படியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(Thiru G. Vasantha Pai rose.)

MR. CHAIRMAN: The time is up. Yes, Thiru Vasantha Pai.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, is it not a fact that the Government have put the exhaust pipes upwards only after realising that there is a danger of pollution through these buses ? I just wanted to ask this question.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, it is always better to put the pipe in such a way that the smoke emitted through it does not harm the people on the road.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, the emission of noxious gases usually happens due to the defects in the machine of the vehicles. But, nowadays, it is said that it is also caused by the mixing of kerosene with petrol or diesel oil. May I know the number of vehicles that emitted noxious gases because of defect in the machine and the number that emitted such gases because of the mixing of kerosene, out of the 4,584 vehicles that were charged?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I do not have the figures now. It is all due to the concerned persons adopting an irresponsible attitude towards the whole thing.

MR. CHAIRMAN : The time is up. The hon. Members are putting too many supplementaries.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இது மட்டுமல்லாமல், சென்னை நகரத்தில் வரக்கூடிய ரெயில் பாதை ஓரங்களிலும், பஸ் பாதை ஓரங்களிலும் மனிதர்களே ஆபாசப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ரயிலில் வரும்போது கூட நம் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ? அதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

50 மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது கேள்வியுடன்). ப. தொடர்புடையதல்ல. அவைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : * * *

Anti-T. B. Drug

* 269 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have ordered the seizure of Anti-T. B. drug in September 1972 ; and

(*b*) if so, the reasons therefor ?

* Expunged as ordered by the chair.

எலும்புருக்கி நோய்த் தடுப்பு மருந்து

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எலும்புருக்கி நோய்த் தடுப்பு மருந்தைக் கைப்பற்றுமாறு 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அவற்றில் போளவு நச்சுத்தன்மையுள்ள டை எதிலின் க்ளைகால் என்ற பொருள் அடங்கி இருந்தது.

Death due to Tuberculosis in Nilgiris District

* 270 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of cases of death due to Tuberculosis in Nilgiris District during the calendar years 1970, 1971 and 1972 : and

(*b*) the steps taken to reduce the incidence ?

நீலகிரி மாவட்டத்தில் காச நோயால் இறந்தவர்கள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டத்தில் 1970, 1971, 1972 ஆம் காலண்டர் ஆண்டுகளில் காச நோயால் எத்தனை பேர் மாண்டனர் ?

(இ) இதைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ)—

ஆண்டு	எண்ணிக்கை
1970	25
1971	24
1972	16

(இ) 1963-ம் ஆண்டிலிருந்து நீலகிரி மாவட்ட காசநோய் கட்டுப்பாடு திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து காச நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டு வருகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மாநில முழுவதும் காச நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக புள்ளி விவரம் கூறுகிறது. ஆகவே அதை நீக்குவதற்கு அரசு தீவிரமான ஒரு திட்டத்தை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அண்மைக் காலத்தில் தான் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்குக் காச நோய் இருக்கிறதா என்ற புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு புள்ளி விவரம் தயாரிக்கப்படுகிறது. பத்து ஆண்டு களுக்கு முன்பு அவ்வளவு மக்கள் பரிசோதிக்கப்படவில்லை. இப்போது பரிசோ திக்கப்படுகிறவர்கள் எண்ணிக்கை அதிகப்படுவதால், நோயாளிகளின் எண் ணிக்கை அதிகமாகப் புள்ளிவிவரத்தில் காணப்படுகிறது. ஆனால் நோய் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, there is a feeling that if B.C.G. Campaign is intensified, these cases can be reduced. May I know whether the Government will think on those lines also ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, for instance, in the Nilgiris district, the Tuberculosis campaign is in force from 1963 and the B.C.G. campaign also has been intensified on two occasions; and it is proposed to intensify the B.C.G. campaign for the third time in the near future.

THIRU G. VASANTHA PAI : Sir, does the hon. Member Thiru G. Swaminathan know that his leader Thiru Rajagopalachari was against the B.C.G. vaccination ?

Express Bus Service

* 272 Q.—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Express Bus Service of the Tamil Nadu State Transport Department between Tiruchirappalli and Erode via Karur has been suspended at present ; and

(*b*) if so, the reasons therefor ?

போக்குவரத்து விரைவு வண்டி.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. ஒய். வெங்கடேஸ்வர திக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளிக்கும் ஈரோட்டிற்குமிடையே சென்று வந்த தமிழக அரசு போக்குவரத்து விரைவு வண்டி (வழி—கரூர்) தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) வசூல் மிகக் குறைவாக இருந்தது ; பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 40 சதவீதமே இருந்தது.

Tourist Taxis

* 273 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether all the Southern States have agreed to bring Tourist Taxis under single-point tax ; and

(*b*) if so, the details thereof ?

சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகளை ஒருமுனை வரியின் கீழ்க் கொண்டு வர, தெற்கு மாநிலங்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய தென் மாநிலங்களில் மாநிலம் ஒவ்வொன்றும், மேலொப்பமின்றி ஒருமுனை வரியில் சுற்றுலா டாக்சிகள் ஓட விடலாம் என 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று கோயம்புத்தூரில் நடந்த தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : விருக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. வரை சர்ப்பு.

உத்தமபாளையம் தாலுகாவில் கோவாபரேடிவ் கிரிடிட் சொஸைடிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலைத் தள்ளிப் போடுவது குறித்து

திரு. ஆர். சக்திமோகன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மதுரை மாவட்டம் உத்தமபாளையம் தாலுகாவில் பருவமழை பொய்த்துப் போனதால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால், கோவாபரேடிவ் கிரிடிட் சொஸைடிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் தொகைகளின் வசூலை ஆறு மாதங்களுக்குத் தள்ளிப்போட அரசு உத்தரவிட வேண்டுமென்பது குறித்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்களின் எண்ணிக்கை 39. அவற்றில் கடனைத் தள்ளி வைக்க வேண்டுமென்று, அதாவது பயிர்க் கடனை 3 வருட காலக் கடனாக மாற்றுவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 15. கேட்கப்பட்ட தொகை ரூ. 9,09,289. 3 வருட காலக் கடனாக மாற்றப்பட்ட தொகை ரூ. 9,09,289.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, ஆனால் கிஸ்தி வசூல் ஆறு அணாவுக்குக் குறைவு என்ற அனுவாரி சான்றிதழ் வழங்கப்படாத பகுதிகளிலும் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அண்மையில் நேர்ந்த புயல், வெள்ளம், காரணமாக கெடுபிடி நடவடிக்கைகள் 30—6—73 அதாவது கூட்டுறவு வருட முடிவு வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

3. 1972–73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து இறுதித் தணை விவர அறிக்கையை வெளியிடுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான இறுதித் தணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 64.38 கோடி ரூபாயாகும். இதில் 57.29 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில் 64.05 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் மீதும், 33 இலட்சம் ரூபாய்

சட்டிய இனங்களின் மீதும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காகவும் (Centrally sponsored schemes) மத்திய அரசுத் திட்டங்களுக்காகவும் (Central sector schemes) 8.82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திருப்பிக் கிடைத்துவிடும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.

2. வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படாத முக்கிய செலவினங்களில் ஒன்று, இயற்கையின் கொடுமைகளால் ஏற்பட்ட துயர் தணிப்புப் பணிகளுக்கென நாம் மேற்கொண்ட செலவாகும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென 1.25 கோடி ரூபாய் செலவிடுவதற்கு இந்த மன்றத்தின் ஒப்புதலை இரண்டாவது தணை மதிப்பீட்டில் அரசு பெற்றதென்பது மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவருக்கும் தெரியும். புயல், வெள்ளத் துயர்தணிப்புப் பணிகளுக்காக இறுதித் தணை மதிப்பீட்டில் 6.09 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. போவையில் முன்னரே அறிவித்துள்ளபடி, நடப்பாண்டிலும் அடுத்துவரும் ஆண்டுகளிலும், துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 14.25 கோடி ரூபாய்வரை செலவிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. மானியக் கோரிக்கை எண் "16. வேளாண்மை" என்னும் தலைப்பின்கீழ் 2.33 கோடி ரூபாய் கோரப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுவதற்கான செலவினங்கள், தரிசுக் நிலமுத் திட்டமும் (16 இலட்சம் ரூபாய்), பயிர் பாதுகாப்புத் திட்டமும் (2 கோடி ரூபாய்) ஆகும். பூச்சிகொல்லி மருந்துகள், தரவு கருவிகள் கூடுதலாகத் தேவைப்படுவதாலேயே பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்படுகிறது.

4. 33 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் "நகர் வளர்ச்சி நிதி" என்னும் சிறப்பு நிதி ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1.50 கோடி ரூபாய் கோரப்படுகிறது. நகர் நிலவரி, விற்பனை வரி மீதான மேல் வரி ஆகியவை மூலம், சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களிலிருந்தும், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலிருந்தும் கிடைக்கிற தொகைகளிலிருந்து இந்த நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது. இந்த நகரங்களிலும் அவற்றின் சுற்றுப் புறங்களிலும் நகர் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.

அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலிக்கிற உள்ளூர்த் தீர்வை மேல் வரிக்கு இணையாகக் கொடுக்கப்படும் இணை மானிய உயர்வு, இக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள மற்றோர் இனமாகும். ஊராட்சி ஒன்றியங்கள் வகைப்பாடு அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அரசு கூடுதலாக இணை மானியம் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது. இதற்கென இந்தத் துணை மதிப்பீடுகளில் 1.99 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

5. ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த மாதத்தின் முதல் தேதியன்றே ஆசிரியர்களின் ஊதியங்களை கொடுப்பதற்கு வசதியாக, இந்த அரசு முன்னதாக மானியத் தொகையை வழங்கியுள்ளது. இதுவே, இந்தத் துணை மதிப்பீடுகளில், மானியக் கோரிக்கை எண் "13. கல்வி" என்பதன்கீழ் முக்கிய செலவினமாகும். இவ் வகையில், துணை மதிப்பீட்டில் 3.60 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. "குடும்ப நலத் திட்டம்" குறித்து செலவு பெருகி வருவதன் காரணமாக, "மக்கள் நல்வாழ்வு" மானியத்தின்கீழ் மொத்தம் 5.27 கோடி ரூபாய் கோரப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கு ஆகும் செலவில் ஒரு சில இனங்களைத் தவிர மீதி செலவினத்தையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. குடும்ப நலத் திட்ட தீவிர இயக்கமும், அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களுக்குக் கூடுதல் ஊக்கத் தொகை அளிப்பதும், இத் தலைப்பின்கீழ்க் கூடுதல் செலவு ஏற்பட்டதற்கு முக்கியக் காரணங்களாகும்.

7. காவல்துறையின் செலவுக்காக 12-ஆம் மானியக் கோரிக்கையின் கீழ் 1.38 கோடி ரூபாய் கூடுதல் தொகை கேட்கப்படுகிறது. காவற் படையைச் சீரமைப்பது குறித்து இரண்டாம் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்ட தொகைக்கு மேற்பட்டு இருக்கும் 19 இலட்சம் ரூபாய்க்கு சட்ட மன்றத்தின் இசைவு கேட்கப்படுகிறது. கோயம்புத்தூர் காவல் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததனால் ஏற்படும் செலவும் இதில் அடங்கும்.

8. குடிசைப் பகுதி மாற்றி அமைக்கும் திட்டங்களுடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 2.50 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடிசை மாற்று வாரியத்துக்கு இதற்கென முதல் கட்டமாக 21 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. எஞ்சிய தொகையான 2.29 கோடி ரூபாய்க்கு மானியக் கோரிக்கை 29-ன்கீழ் வகை செய்துள்ளோம்.

9. 42 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் 2.05 கோடி ரூபாய்க்கு கூடுதல் செலவுக்கு இசைவு கோரப்படுகிறது. பொதுப் பணிகள் மீதான மூலதனச் செலவினை இத் தலைப்பு குறிப்பிடுவதாகும். புதிய பணிகளைத் தொடங்கியதனாலும், பழைய இயந்திரங்களை மாற்றிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய இயந்திரங்களை வாங்கியதனாலும் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது; திட்ட நடவடிக்கைகள் வேகம் மும்முரமாயிருப்பதை இது குறிப்பிடுகிறது.

10. மானியக் கோரிக்கை "24. தொழிலாளரும் வேலை வாய்ப்பும்" என்பதன்கீழ் 21 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்கப்படுகிறது. தொழில் நுட்பத் தகுதி பெற்றிருப்போரிடையே நிலவி வரும் வேலையின்மையைப் போக்க வகை செய்கின்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 16 லட்சம் ரூபாய் இதில் அடங்கும்.

11. மானியக் கோரிக்கை "47. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்" என்பதன் கீழ், இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் சில பின்வருமாறு :—

(1) பெரிய நடுத்தரத் தொழில்களுக்கு விற்பனை வரிக்கடன்களை கொடுப்பதற்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்துக்கு (SIPCOT) 23 இலட்சம் ரூபாய்.

(2) படித்து வேலையற்றுள்ளவர்களுக்கு உதவுவதற்காக சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு (SIDCO) 35 இலட்சம் ரூபாய்.

(3) அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு 5 இலட்சம் ரூபாய்.

12. மானியக் கோரிக்கை "26. பாசனம்" என்பதன்கீழ், 2.64 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்கப்படுகிறது. காவிரி கழிமுகப் பகுதியில் செயல்படுத்தப்பட்டுவரும் "விரைவான பழுது பார்க்கும் திட்டம்" (1.05 கோடி ரூபாய்). "பல்வேறு பாசனத் திட்டங்களை விரிவுபடுத்தல்-மேம்படுத்துதல்", "பேணி வருதல் பழுது பார்த்தல்" குறித்த கூடுதல் செலவு (1.06 கோடி ரூபாய்), சிறு பாசன வாய்க்கால்களைப் பேணி வருவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதல் மானியம் (18 இலட்சம் ரூபாய்) வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்க செலவினங்களாகும்.

13. 20 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் 28 இலட்சம் ரூபாய் கோரப்படுகிறது. இம் மாநிலத்தில் பின்தங்கியவையெனத் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நிறுவப்படவிருக்கும் மூன்று தொழிற்சாலைகளுக்கு உதவித் தொகை

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 26

அளிப்பதற்காகத் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்திற்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குவதும் இதில் அடங்கும்.

14. மின்சார வாரியத்துக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறைக்கு, வேளாண்மை விசையேற்றங்களுக்குக் குறைந்த கட்டண வீதத்தில் மின் சக்தி வழங்கப் படுவதே முக்கியக் காரணமாகும் என்பதை வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டுள்ளேன். 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்வதற்காக வழங்கப்படும் உதவித் தொகையாக, இரண்டாம் துணை மதிப்பீட்டில் 17.83 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மாநில அரசிடமிருந்து மின்சார வாரியம் வாங்கிய கடனுக்குக் கொடுக்க வேண்டிய வட்டி பாக்கியைப் பெரு மளவுக்குக் கொடுப்பதற்கு இந்த உதவித் தொகை பயன்படும்.

15. இரண்டாம் துணை மதிப்பீடுகள், நமது திட்ட அளவு பெருகியிருப்பதையும் ஒரு நபர்க்குழு பரிவுரைகளை நிறைவேற்றியது காரணமாக அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவையும் புலப்படுத்துவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காணலாம்.

16. துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான பல வேறு செலவினங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இச் செலவினங்களுக்கும் பிற செலவினங்களுக்கும் உரிய விளக்கத்தைக் காணலாம் என்று கூறி, 1972-73-ம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

4. அரசினர் தீர்மானம்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம் பற்றிய அறிக்கை மீது விவாதம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம் பற்றிய அறிக்கையை மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் வெளியிடுவார்கள்.

* **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, "சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம் பற்றிய அறிக்கை @ விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 131-166-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 26] [திரு. மு. கண்ணப்பன்]

தலைவரவர்களே, சட்டமன்ற மேலவையில் முதன் முறையாக அறநிலையத் துறையினுடைய விவாதத்தை இன்று எடுத்துக் கொண்டிருக்கிறோம். கொள்கை விளக்கக் குறிப்பில் அறநிலையத் துறையில் ஆற்றி வந்திருக்கின்ற பணிகளையும் எதிர்காலத்திலே ஆற்றவிருக்கின்ற பணிகளையும் விளக்கமான முறையில் பரிசீலித்து ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குறிப்பிலே முக்கியமாக இடம் பெறவேண்டிய தமிழ்நாடு தெய்வீகப் பேரவைபற்றிக் குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளது. தெய்வீகப் பேரவைக்கு கோயிலுடைய நிதியிலிருந்து ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 4 லட்சம் வரை அதனுடைய செலவினங்களுக்கு நாம் தருகின்றோம். நம்முடைய மதிப்பிற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுடைய தலைமையில் தெய்வீகப் பேரவை சிறந்த முறையில் தமிழ் நாட்டிலே இந்து சமயத்தைப் பேணி வளர்க்கும். நல்ல தமிழை வளர்க்கவும் அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதோடு நம்முடைய திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் பல ஆயிரக்கணக்கானவர்கள். அவர்கள் மிகக் குறைந்த ஊதியம் பெற்று வருகின்றனர். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கத்திற்கு விடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சட்ட மன்றத்திலே தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பலமுறை அந்தக் கோரிக்கையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மற்ற துறைகளிலே இருக்கின்றவர்களைப் போல ஏதோ போராட்டம் நடத்த வேண்டும், வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற நிலைமைகளையெல்லாம் கோயில் ஊழியர்கள் கைக்கொள்ளாமல் அமைதியான முறையிலே அணுகியுள்ளனர். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து, அது அவையிலே அறிவிக்கப்படுமென்று 15 நாளைக்கு முன்னால் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறினார்கள். அதன்படி இன்றையதினம் காலையிலே சட்டப் பேரவையிலே இந்த முடிவுகளைத் தெரிவித்திருக்கிறோம்.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை) சட்டமன்ற மேலவையிலே அறிவிக்க வேண்டுமென்ற வகையிலே, கோயில்களிலே பணி பாற்றி வரும் சுமார் 50,000-க்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வளவு காலம் ஊதிய உயர்வு இல்லாததால் இன்றையதினம் ஊதிய உயர்வுகளை அறிவித்திருக்கின்றோம். கோயில்களிலே வருகின்ற வருமானம் பல்வேறு வகைப்பட்ட வருமானமாக இருக்கிற காரணத்தினால், எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் தரும்மால் கொடுக்க இயலாது என்ற காரணத்தினால்தான், கோயில்களில்

வருகிற வருமான அடிப்படையில் 12 வகையில் அதை நாம் பிரித்திருக்கிறோம். முதலாவது, ரூ. 15 லட்சத்திற்கு மேல் வருமானம் வருகிற கோயில்கள் நிதியிலிருந்து கொடுக்கிற சம்பளம் கிட்டத்தட்ட அரசாங்கத்தில் கொடுக்கப் பட்ட ஊதியம்போல, அதில் பணியாற்றி வருகிற அத்தனை ஊழியர்களுக்கும் தருகிறோம். அதற்கு அடுத்தபடியாக ரூ. 5 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சம் வரை வருமானம் வரக்கூடிய கோயில்கள் நிதியிலிருந்து கொடுக்கிற சம்பளம், அதுவும் அரசாங்கத்தினுடைய பணியாளர்களுக்குக் கொடுக்கிற சம்பள விகிதங்களுக்கு ஒத்து, அவர்களுக்கு இனிமேல் தாப்படுமென்பதையும் இந்த மன்றத்தில் அறிவித்துக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடி, இரண்டு லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய் வரையிலும், 1 லட்சம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரையிலும், அதேமாதிரி 50 ஆயிரம் ரூபாய் முதல் 1 லட்சம் ரூபாய் வரையிலும் ரூபாய் 50 ஆயிரத்திற்குக் கீழே இருக்கிற கோயில்கள் 6 நிலைகளாகப் பிரிக்கப்பட்டு, 200 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரையிலும், 5 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரையிலும், 10 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையிலும், 20 ஆயிரம் ரூபாய் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும், 30 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரையிலும் 40 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் என்று 6 நிலைகளாகப் பிரிக்கப்பட்டு 6 நிலைகளில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு வேலைக்குத் தகுந்தாற்போல், கோயிலின் வருமானத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்கெனவே உள்ள சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி 30 சதவீதத்திற்கு மேற்படாத வகையில், இப்படிப்பட்ட செலவுகள் 30 சதவீதத்திற்கு மேலே போகக்கூடாது என்ற சட்டத்தின் அடிப்படையைக் கொண்டு ஊதியங்களை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இப்படிப்பட்ட ஊதியத்தை உயர்த்துவதனால், சாதாரண சிறிய கோயில்களில் 1,000 ரூபாய், 1,500 ரூபாய் வருமானம் வருகிற கோயில்களில் பணியாற்றுகிற அர்ச்சகராக இருந்தாலும், மேளக்காரராக இருந்தாலும், வேறு வேலைகளில் பணியாற்று கிறவர்களாக இருந்தாலும், மாதந்தோறும் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை சம்பளம் பெற்றுக்கொண்டு வந்தார்கள். வருகிற மாதத்திலிருந்து 5 ரூபாயி லிருந்து 10 ரூபாய் வரை இந்தக் கோயில் வருமானத்தைப் பொறுத்து அவர் களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்படும். அதேபோல ஆண்டுதோறும் அவர்களுக்கு ஊதிய உயர்வு, இன்க்ரிமெண்டு கொடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு இந்த அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய கோயில் என்று எடுத்துக்கொண்டால், சுமார் 5 லட்சம் ரூபாய் முதல் 15 லட்சம் ரூபாய் வரை வருமானம் வருகிறது என்று சொன்னால், அங்கே நாயனம் வாசிக்கிற ஒரு செட் இருக்கிறது என்று உதாரணத்திற்கு அங்கே நாயனம் வாசிக்கிற ஒரு செட் இருக்கிறது என்று உதாரணத்திற்கு

எடுத்துக்கொண்டால், நாயனம் வாசிக்கிற ஒருவரும், அவரோடு இசைக் கருவிகளை வைத்திருக்கிற 4 பேரும் ஒட்டு மொத்தமாக 5 பேர் இருக்கிற குழுவிற்கு 150 ரூபாய் முதல் 190 ரூபாய் வரை சம்பளம் பெற்று வந்திருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு வருகிற மாதத்திலிருந்து 250 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் 10 ரூபாய் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படும் என்ற நிலைமையில்தான் சம்பளங்களை நிர்ணயம் செய்திருக்கிறோம். இப்போது புதிய சம்பளத்தின் அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 60 லட்ச ரூபாய் கூடுதலான செலவை நம் துறையில் ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது. சாதாரணமான நிலைமையில் பணியாற்றுகிற ஊழியர்கள். எந்தப் போராட்டமும் நடத்தாமல், கோரிக்கை நாளும் கொண்டாடாமல், பரவலாக அரசாங்கமே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதை வைத்துக்கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி சட்ட மன்றத்தில் அறிவிக்கின்ற வகையில் நாம் சொல்லியிருக்கிறோம். அதேபோல கோயில்களில் பணியாற்றுகிற நிர்வாக அதிகாரிகள் பல மாதாடுகள் நடத்தி பல கோரிக்கைகளை நீண்ட காலமாக வைத்துக்கொண்டு வந்தார்கள். 16 கோரிக்கைகளை கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் நடைபெற்ற மாநாட்டில் வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும் கலந்து கொள்வதாக இருந்தார்கள். எதிர்பாராத விதமாக கலந்துகொள்ளவில்லை. அந்த மாநாட்டில் அறிவிக்க வேண்டிய முடிவுகளை இந்த அரசாங்கத்தில் பரிசீலித்து இப்போது முடிவு செய்திருக்கிறோம். 10, 12 ஆண்டுகள் பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள், தங்களுக்கு எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு நிலைமைகள் உயர்த்தப்பட வேண்டும், பதவி உயர்வு கொடுக்கப்படவேண்டுமென்ற நிலையில், தங்களுடைய எதிர்காலம் சூனியமாக இருந்த காரணத்தினால், சில கோரிக்கைகளை வைத்தார் கள். தற்போது 5-வது நிலை நிர்வாக அதிகாரிகள் என்று சில பேர் பணி யாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய நிலைகளில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைத் தந்தார்கள். அந்தக் கோரிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்வதைவிட அதிகமாக ஏற்றுக்கொண் டிருக்கிறோம். 5-வது நிலை நிர்வாக அதிகாரிகள் அத்தனை பேரையும் 5-வது நிலை என்ற பதவியை ஒழித்து 4-வது நிலை அதிகாரிகளாக மாற்ற வேண்டுமென்றார் கள். 4-வது நிலை அதிகாரிகளாக 5-வது நிலை அதிகாரிகள் அத்தனை பேரும் உடனடியாகப் பதவி உயர்த்தப்படுகிறார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக 30 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிற கோயில்கள்தான் 4-வது நிலை கோயில்களாக இருந்தன. அதை மாற்றி 25

[திரு. மு. கண்ணப்பன்] [1973 மார்ச் 26

ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் உள்ள கோயில்களை 4-வது நிலைக் கோயில்களாக மாற்றி, இதிலே பணியாற்றுகிற பணியாளர்கள், நிர்வாக அதிகாரிகள் இவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் உள்ள கோயில்களை 3-வது நிலை என்றும், 1 லட்சம் ரூபாய் வருமானம் வருகிற கோயில்களை 2-வது நிலை என்றும், 3 லட்சம் ரூபாய் வருகிற கோயில்களை 1-வது நிலை என்றும், 5 லட்சம் வருமானம் வருகிற கோயில்களை 1-வது நிலையிலே செலக்ஷன் கிரேடு என்றும், 15 லட்சம் வருகிற கோயில்களில் அசிஸ்டெண்டு கமிஷனர் என்றும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது, இவ்வளவுதான் கேட்டிருந்தார்கள். ஆனால் அரசாங்கத்தில் செய்திருக்கிற முடிவின்படி இதற்கு மேலே சில பேருக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 15 லட்சத்திற்கு மேல் வருமானம் வருகிற கோயில்களில் தற்போதுள்ள உதவி ஆணையாளர்கள் என்னும் நிலை செலக்ஷன் கிரேடு உதவி ஆணையர்கள் என்னும் வகையில் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் மிகப் பெரிய வருமானம் வருகிற ஒரே கோயில் பழனி முருகன் கோயில். அங்கே மட்டும் துணை ஆணையாளர் பொறுப்பில் நிர்வாக அதிகாரி பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு அடுத்தபடி 16 கோரிக்கைகளில் 12 கோரிக்கைகளை அரசாங்கச் சார்பில் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் 13 ஆயிரம் நிறுவனங்கள் என்று கணக்குச் சொல்லியிருக்கிறோம். இந்த 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை தலையாய கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை அரசாங்கத்தின் சார்பில் ஏற்று, வெகு சீக்கிரத்தில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கிறோம். அதேபோல பட்டதாரி அல்லாத நிர்வாக அதிகாரிகளை உதவி ஆணையர்களாக நியமனம் செய்ய வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உதவி ஆணையாளர் என்ற பதவி உயர்விற்கான வழிவகை செய்திருக்கிறோம். இதுபோன்ற மற்ற கோரிக்கைகள், 13 கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு உத்தரவிட்டிருக்கிறோம். இப்போது யார் நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் மேலும் ஆர்வத்தோடு பணியாற்றினால்தான் இருக்கின்ற சீர்கேடுகளைப் போக்கவும் இன்னும் சிறந்த முறையாக இதை மாற்றவும் வழி வகை இருக்கவேண்டுமென்று இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இதை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையில் அத்தனை பேரும் நல்ல கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

1973 மார்ச் 26]

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட நிர்மானம்:

"சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம் பற்றிய அறிக்கை' விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. எம். ராஜா அய்யர்: துணைத் தலைவரவர்களே, நான் பேச ஆரம்பித்த போது அச்சிட்ட புத்தகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி அரசைப் பாராட்ட வேண்டுமென்றிருந்தேன். இதில் காணுத பல விஷயங்களை அமைச்சரவர்கள் கூறினதற்காக நான் மேலும் அவரைப் பாராட்டுகிறேன். சிப்பத்திகள் கேட்டார்கள், இவ்வளவுதான் கேட்டார்கள் என்று அவர்கள் அத்துடன் திருப்தி படையாதபடி அவர்கள் கேட்காததையும கொடுத்திருக்கிறேன் என்று, அவர்கள் கேட்காத பல கோரிக்கைகளை அவர்கள் வழங்கி சிப்பந்திகளுக்கு இவ்வளவு நியாயம் வழங்கினதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். இது ரொம்பவும் அழகான கொள்கை விளக்கப் புத்தகமாக இருக்கிறது. நல்ல தமிழில், பலமுறை படிக்கலாம் போல அமைந்திருக்கிறது. இதைப் படித்தாலே தெய்வ மணம் கமழ்கிறது. எல்லோருக்கும் சமய அறிவு தோன்றும், சமய உணர்வு தோன்றும் போலத் தோன்றுகிறது. சாதாரணமாக மதுரையில் இருக்கிற மீனாட்சியம்மன் கோயில் என்று சொல்லாமல் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் என்று கோயில்களையெல்லாம் அருள்மிகு கோயில் என்று இதில் கூறப்பட்டிருக்கும் பாணியும் முதன் முதலாக இதைப்பற்றிப் பேசுவதற்கு அங்கத்தினர்களுக்கு வாய்ப்பு அளித்ததையும் நான் பெரும் பேறாகக் கருதி, அரசைப் பெரிதும் பாராட்டுகிறேன். இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள், திருக்கோயில்களிலுள்ள நிலங்களெல்லாம் கோயிலுக்குச் சேர வேண்டும், கோயில்களின் பெயரில் இருந்தாலும், தனியார் அதனுடைய வருவாயை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள், இதையெல்லாம் இன்று நாங்கள் கோயிலுக்குச் சொந்தமாக ஆக்கிவிட்டோம் என்று புள்ளி விவரம் கூறுகிறார்கள். இதற்காக அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். நல்ல நிலத் திட்டங்கள் பலவற்றினால் கோவில்களின் நில வருவாயை முழுதும் பெற முடியாமல் முடியாமல் இருக்கிறது. அப்படி இருக்குமானால், அரசே அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்து, வருவாய்த் துறை அதிகாரிகளை அரசினரே நியமித்து, கோவில்களுக்குச் சேரவேண்டிய நிலத்தின் மூலமாக வர வேண்டிய மகசூல் முழுதுமாகக் கிடைக்குமாறு அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் விரும்பு

5·20 பி.ப.

கிறேன். குறிப்பாக ராமேஸ்வரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த திருத்துறைப் பூண்டி கிராமத்தில் இருக்கக்கூடிய வீரன் வயல் என்ற கிராமத்திலிருந்து மாத்திரம் இன்று வரையில் அந்த தேவஸ்தானத்திற்கு வர வேண்டிய பாக்கி 4¼ லட்சம் ரூபாயாகும். ஒரு கிராமத்திலிருந்து ஒரு தேவஸ்தானத்திற்கு, இன்று வசூலாகாமல் உள்ள பாக்கி 4¼ லட்சம் ரூபாய் என்று புள்ளி விவரம் கூறுகிறது. இதை அவர்கள் வசூல் செய்ய இயலாது. வருவாய்த் துறை அதிகாரிகளே அரசினர் நியமித்து அதை முழுமையாக அவர்கள் சேகரித்து இக்கோவிலுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளோ, ஏழிவகைகளோச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர இராமநாதபுரம், சிவகங்கை எஸ்டேட்டுகள் சம்பந்தமாக, 1949-ல் நாம் எஸ்டேட்டுகளையெல்லாம் ஒழித்து அப்போது இருந்த நெல்லின் விலைப் படி அந்த தேவஸ்தானங்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று செய்தோம். தஸ்திக் அலவன்ஸ் என்று அவர்கள் கொடுத்து வருகிறார்கள். அந்தப் பணமானது அன்று உள்ள நெல்லின் விலையின்மீது கணக்கிடப்பட்ட பணமாகும். இந்தப் பணம் இன்றைக்குப் போதாது என்பதைக் கருத்திற் கொண்டு அந்தக் கோவில்களுக்கு அதிகமாக தஸ்திக் அலவன்சைக் கூட்டி உயர்ந்த நெல் விலையைக் கணக்கிலெடுத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையங்களுக்கு அவர்கள் தங்களுடைய பங்கினைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர இதர திருக்கோவில்களின் திருப்பணிக்கு அது நடக்கும்போது இப்படிப்பட்ட தேவஸ்தானத்திலிருந்து பணம் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தப் பணம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று ஒரு சதவிகிதத்தை நிர்ணயித்து, இதற்கு மேல் இருக்கக்கூடாது என்ற வகையில் அதற்கு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படி இல்லாததினால், அங்குள்ள அநேக சொத்துக்கள் இன்று நமக்கு முக்கியம் என்று தோன்றுகிற ஒரு நோக்கத்திற்காக நாம் கொடுக்க இருக்கிறோம் என்று நான் நம்புகிறேன். அந்த நோக்கத்திற்காக இப்படி நாம் டைவர்ஷன் செய்வோமானால், இந்தப் பணம் முழுமையாக இவ்வளவு சதவிகிதத்திற்கு மேல் போகக்கூடாது என்று திட்டவட்டமாக ஒரு முறை மூலம் நிர்ணயிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஏழை சிப்பந்திகளுடைய ஊதியத்தைப்பற்றித் தான் கூற வேண்டுமென்று கருதினேன். ஆனால் அமைச்சரவர்கள் தந்த அறிக்கையைப் பார்த்தால், அதைப்பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லாமல் ஆகிவிட்டது. இராமநாதபுரம் சமஸ்தானத்தில் ஒரு நிதி இருக்கிறது.

ஒரு அறக்கட்டளை இருக்கிறது. பல லட்ச ரூபாயை அதற்கு ஒதுக்கி அதிலிருந்து வரக்கூடிய வட்டித் தொகையை ஏழைச் சிப்பந்திகளுக்கு ஆண்டு தோறும் பகிர்ந்து கொடுக்கும் திட்டம் ஒன்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி ஒரு திட்டத்தை பெரும் தேவஸ்தானங்கள் கையாளலாம் என்று நான் கருதுகிறேன். மொத்தமாக இருக்கக்கூடிய பணத்திலிருந்து அறக்கட்டளைக்கு அனுமதித்துவிட்டு, அதிலிருந்து வரக்கூடிய வட்டியிலிருந்து ஏழைச் சிப்பந்திகளுக்கு நாம் நியாயம் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அவர்களுக்கு ஆண்டு தோறும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த சிப்பந்திகளுக்கு வயது வரம்பு வைத்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். 25 வயதிற்குக் குறைந்த யாரும் இம்மாதிரியான அறநிலைய வேலைகளுக்கு வரக்கூடாது என்று சொல்லி கீழ்வயது வரம்பு இருக்கிறது. அரசு வேலைக்கு வரவேண்டுமென்றால், 25 வயதிற்குள் இருக்கவேண்டுமென்ற விதியை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் தேவஸ்தானத்தில் 25 வயதிற்குக் கீழே ஒருவரையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று இருக்கிறது. அதை இன்னும் உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். வயது முதிர்ச்சி அடைய, அடையத்தான் அவர்களுக்கு ஒரு விவேகமும், முதிர்ந்த அனுபவமும், தன் அர்ப்பணமும் ஏற்படும். இத்தனை வயதிற்கு மேல் வேலை பார்க்கக்கூடாது என்று வைக்கக் கூடாது. வயது ஆக, ஆகத்தான் மனம் பக்குவப்படும், பண்படும். எனவே 30 வயதிற்கு மேற்பட்டவர்களாக, வயது முதிர்ந்தவர்களாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன். வினோபா பாவே அவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு, அதுவும் தேசியக் கல்விக்கு அதைப் போதிப்பதற்கு நல்ல ஆசிரியர்கள் கிடைக்க வேண்டுமானால், 40 வயதிற்குக் குறைந்தவர்களாக யாரும் இருக்கக் கூடாது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். 40 வயதிற்கு மேல் தான் ஒருவர் ஆசிரியர் தொழிலுக்கு வரவேண்டும். அப்படி ஆசிரியர் தொழிலுக்கே 40 வயதிற்கு மேல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே இந்தத் தொழிலுக்கு அதிக வயது வரம்பைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொழிலுக்கும் அது முற்றிலும் பொருந்தும் என்று நான் சொல்கிறேன். மூப்பது வயத்திற்கு மேல் 65 வரை வயது முதிர்ந்தவர்களாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தேவஸ்தானங்களால் நடத்தப்படும் 6 கல்லூரிகளைப்பற்றிக் குறிப்புக் கூறுகிறது. இந்த 6 கல்லூரிகளில் ராமேஸ்வரம் தேவஸ்தானத்தால்

அங்கு ஒரு கல்லூரியானது நடத்தப்படுகிறது. அது வட மொழிக் கல்லூரியாகும். வடமொழியிலே படிப்பதற்கு மாணவர்கள் இன்று வருவதில்லை என்பதற்காக அதை மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து ஆங்கிலமும், தமிழும் அத்துடன் வடமொழியும் போதிக்கப்படுகிறது. இம்மாதிரிக் கல்லூரி, சிறப்பு வாய்ந்த கல்லூரி வேறு இல்லை. மதுரைப் பல்கலைக்கழகத்தினுடைய பிராந்தியத்தில் இல்லையென்று கூறலாம். இப்படி சிறப்பு வாய்ந்த, பல சிறப்புள்ள ஒரு உபயோகமான கல்லூரிக்கு அரசு அதற்கு உரிய கிராண்டைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கருதுகிறேன். 1972–73-க்கு பி.யூ.சி. வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அங்கு ஆங்கிலமும், தமிழும் போதிக்கப்படுகிறது. இந்தக் கல்லூரி சிறப்பு வாய்ந்தது. இந்தக் கல்லூரிக்கு கல்வி இலாகா ஒப்புதல் அளித்து, பிற கல்லூரிகளுக்குக் கொடுக்கும் மானியத்தைப் போல், இக் கல்லூரிக்கு கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். அத்துடன் கர்நாடக இசைக் கல்லூரி ஒன்று அங்கு நடத்த முடியுமா என்று ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கல்லூரிகள் நாதஸ்வரம், தவில் மட்டும் போதிப்பதற்கு நடத்தப்படுவதாகக் காண்கிறேன். அத்துடன் கர்நாடக இசையைப் போதிக்க கல்லூரி ஒன்றும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

திருமண மண்டபங்கள் கட்டுவது மிகவும் தேவையான ஒரு நல்ல காரியம். 169 திட்டங்களில் 49 தான் இன்றைக்கு முடிவடைந்திருக்கின்றன என்று நான் காண்கிறேன். அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து அமைத்துக் கொடுக்க வேண்டும். பல திருமண மண்டபங்கள் இருந்தால்தான், பொது மக்களுக்கு அது பெரிதும் பயன்படும். அத்துடன் ஏழை எளியவர்களுக்கு இலவசமாக கோவிலில் திருமணம் நடத்துவதற்கு 150 ரூபாய் கொடுக்கின்றோம். இது சிறு தொகை என்று எண்ணுகிறேன். வேஷ்டி, சேலை, அது தவிர அவர்களுக்கு தங்கத் தாலி எல்லாம் சேர்ந்து 150 ரூபாய்க்குள் வாங்க முடியாது. இந்தத் தொகையில் ஒரு சேலையே வாங்க முடியாது. தங்கத் தாலி செய்ய முடியாது. எனவே இந்தத் தொகை உயர்த்தப்பட வேண்டும். ஒவ்வொரு கோவிலிலும் ஒரு திருமண உண்டியல் என்ற ஒன்றை வைத்து அதில் வருகிற நன்கொடையை இந்தக் காரியத்திற்குச் செலவு செய்யலாம். அப்படிச் செய்தால், இந்தத் திருமணத் திட்டம் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்தத் துறையின் சார்பாக திங்கள் வெளியீடாக "திருக்கோவில்" என்ற பத்திரிகை வருகிறது. அது 4,900 சொச்சம் பிரதிகள்தான் போகிறது. அவ்வளவுதான் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 13 ஆயிரம் அறநிலையங்களுள்ள தமிழ் நாட்டிலே இதில் மூன்றில் ஒரு பங்குதான் இந்தத் "திருக்கோவில்" என்ற பத்திரிகையை வாங்குகிறார்கள் என்று தெரிகிறது. ஒவ்வொரு கோவிலும் கட்டாயமாக வாங்க வேண்டுமென்று வைத்தால், அதிகமாகச் சந்தாதாரர்கள் சேருவார்கள். 13 ஆயிரம் சந்தாதாரர்களுக்குக் குறைந்திருந்தால், இந்தப் பத்திரிகை நல்ல முறையில் வெளியிட முடியாது. இதைப்பற்றி ஆராயவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை)

கடைசியாக, இப்படித் தமிழில் இருக்கக்கூடிய கொள்கை விளக்கப் புத்தகத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்போது, ஒரு தவறு ஏற்பட்டு விட்டது என்று கருதுகிறேன். மத்திய அரசின் தொல்பொருள் துறையினரின் கீழ் இருக்கக்கூடிய கோவில்கள் அவர்களால் நன்முறைக் கவனிக்கப்படவில்லை. நமது திருக்கோவில்களெல்லாம் நன்முறைப் பராமரிக்கப்படுகின்றன. அழகாகப் பராமரிக்கப்படுகின்றன. மத்திய அரசின் தொல்பொருள் துறையினரால் நடத்தப்படும் கோவில்கள் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்று பொருள்பட இருக்கிறது. அதையும் நமது அரசே ஏற்று நடத்தினால், அது மிக நன்முறை நடத்தப்பட முடியும் என்று சொல்வது சரி. ஆனால் அந்தக் கோவில்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்வதன் எண்ணம் புரியவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் தொல்பொருள் துறையின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கின்றன என்று இந்த அறிக்கை கூறுகின்றது. தமிழ்தான் மூலம் என்று கருதுகிறேன். அதை மொழி பெயர்க்கும்போது Hundreds of such institutions என்று கூறுகிறது. அதைப் பார்த்தால் நூற்றுக்கணக்கான திருக்கோவில்கள் மத்திய அரசின் ஆதிக்கத்தில் இருக்கின்றனவோ என்ற எண்ணம் ஏற்படும். 700, 800 அளவிற்கு இருக்குமோ என்று எண்ணும்படி Hundreds of temples என்று மொழி பெயர்த்திருப்பது வருந்தத்தக்கது என்று கூறிக்கொண்டு அவைகளுடைய எண்ணிக்கையைச் சரியாக எத்தனை என்று தெரிந்துகொள்ளக்கூடிய முறையில் கொடுத்திருக்கலாம். நம்முடைய அரசு இந்தத் துறையில் எடுத்துக்கொண்டுள்ள பெருமுயற்சியை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1973 மார்ச் 26

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அறிவித்த ஊதிய உயர்வு, அதோடு ஏற்கெனவே நமக்கு வழங்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கம், அதிலே கூறப்பட்டிருக்கின்ற செய்திகள்—இவையெல்லாம் நமக்கு மிகுந்த ஆறுதலையும், திருப்தியையும், மகிழ்ச்சியையும் தந்துள்ளனவென்பதை முதலில் நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறநிலைய அமைப்பு குறித்து ஏற்பட்ட சட்டம், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப் பெற்றதும், சிறிது சிறிதாக வளர்ந்து வந்து, இப்போது அது நல்ல பலனை, செம்மையான முறையிலே ஈட்டித் தருகின்ற நிலையிலே வளர்ந்து வந்திருக்கின்றது. ஆங்காங்கே ஆலயங்களினுடைய எண்ணிக்கையும், அதனுடைய வருமானமும் வளர்ந்துள்ளதையும் நாம் இன்று காண்கிறோம். இந்த நிலையிலே நம்முடைய பொறுப்பும், கடமையும் பெரிது என்பதை மனதிலே கொண்டு, புலைகளைச் செயல்படுத்திய முறைகளிலே என் உள்ளத்தில் தோன்றிய சிலவற்றை உங்கள் மூலமாக அரசுக்கு நான் சமர்ப்பித்துக்கொள்ள முன் வருகிறேன்.

5·30 பி. ப.

கோவில் நிலங்களையெல்லாம், அவைகளுக்கு உடையதாக்கி, அந்த நிலங்கள் வருவனவாக்கப்பட்டிருக்கின்றனவென்ற செய்தி எல்லையில்லாத மகிழ்ச்சியை நமக்குத் தருவதாகும். ஏற்கெனவே 10 ஆண்டுகளுக்கு முன்பு, கல்வெட்டுகளிலே அந்தக் கோவிலுக்கு எந்தெந்த நிலங்கள் உரியவனென்று பொறிக்கப்பட்டதோ, அந்த நிலங்களெல்லாம் கண்டவர்கள் கையிலெல்லாம் கிடக்கும் உண்மையைக் கண்டு, அதைக் கைப்பற்றி, கோவிலுக்கு உரிய, அறங்களுக்கு உரிய நிலங்களாகச் சேர்க்க முயல்வதாக அன்று இருந்த ஆணையாளர் அவர்கள் கூறினார்கள். இன்னும் அந்தத் துறையிலே நாம் கவனம் செலுத்தவில்லை. இந்தமாதிரியான அறநிலையங்களுக்கு காலாவதி தோஷம் என்பது வில்லை. தனிப்பட்டவர்களுக்கு சொத்து கூடினாலும், குறைந்தாலும், எங்களைப் போன்றவர்களுக்கு அக்கறையில்லை. கோவில்களின் சொத்துக்கள் பறிபோகாமல் இருந்தால்தான், நாட்டின் பண்பாடு, கலை, ஒழுக்கம், எல்லாம் வாழும், விளங்கும், நிலைக்கும் என்ற எண்ணப்பாட்டிலே, நம்பிக்கையிலே இதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவில்கள் என்று சொன்னால் இந்துக் கோவில்கள்—சைவக் கோவில்கள், வைஷ்ணவக் கோவில்கள் என்று பொருளல்ல. இஸ்லாமியப் பள்ளிகளும், கிருஸ்துவ மாதா கோவில்கள் எல்லாவற்றையும் அடக்கித்தான் பேசுகிறேன். கோவில்களுக்கு எந்தவிதமான அளவிலேயும் உச்சவரம்பு பாதிக்காமல் இருக்கின்ற நிலையைச் செய்யவேண்டும். இந்த அரசினுடைய நோக்கமும் அது

1973 மார்ச் 26] [திரு. சா. கணேசன்]

தான் என்பதை, ஆங்காங்கு கேட்டும், கண்டும், பேசியும் வருகின்ற நிலையிலே உணர்ந்தாலும், அதைப் பகிரங்கமாக, தெளிவாக செயல்படுத்த வேண்டுமென்று நான் அரசை உங்கள் மூலமாக வேண்டிக் கொள்கிறேன். அடுத்து, ஆலயங்களிலிருந்து வருகின்ற உபரி வருமானத்திலிருந்து, ஐந்து சதவிகிதம் அல்லது 'மேக்சிமம்' 10 சதவிகிதம் வேண்டுமானால் பிற துறைகளுக்குக் கொடுக்கப்படலாம். மீதமுள்ள தொகை நிரம்ப இருக்குமானால், பற்றுக் குறைக் கோவில்களினுடைய அமைப்பை, அதனுடைய திருப்பணியை, அதனுடைய நிர்வாகத்தையொட்டி செலவு செய்வதற்கு ஈடு செய்ய வேண்டும். எப்படி ஏராளமாகச் சம்பாதிப்பவர்களிடமிருந்து, நிறைய வரியை வாங்கி அதை இல்லாதவர்களுக்கு ஈடுபடுத்துகின்றோமோ, அவ்வாறு ஆங்காங்கே பெரும் கோவில்களிலிருந்து, நிரம்ப வருமானம் வருகின்ற கோவில்களிலிருந்து கிடைக்கின்ற உபரி வருமானத்தையெல்லாம், இல்லாத, இயலாத, பழைய, சிறந்த, புனிதமான கோவில்களுக்கு, 'டைவர்ஷன்' என்று சொல்வார்களே, அதைப் போல வாய்க்கால் வழி செலுத்த நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மேலும் கோவில்களின் மூலமாக, அவற்றின் நிதியின், வருமானத்தின் மூலமாக இன்னின்ன செலவைத்தான் செய்ய வேண்டுமென்ற நியதியை, வரையறையை மேற்கொள்ளுவதுதான் நியாயமாகும், தர்மமாகும் என்பதை வற்புறுத்திச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்தக் கோவில்களின் மூலமாக தேவாரப் பாடசாலைகள், திவ்யப் பிரபந்தப் பாடசாலைகள், வேத ஆகம சாஸ்திரப் பாடசாலைகள்—இவை போன்ற ஏராளமான பாடசாலைகளை, திருக் கோவில்களிலே கல்வித் துறையை வளர்ப்பதற்காகச் செயல் படுத்துவதன் மூலம் நல்ல காரியங்களை வளர்க்க வேண்டும். முன்னே இருந்த நிலை வேறு, அன்று இருந்த துறை வேறு. அன்று இந்தப் பாடசாலைகளை நடத்தியவர்கள் பல காரணங்களினாலே விட்டுவிட்டார்கள். இவைகளெல்லாம் முறைப்படி கோவில்களினாலே நிர்வகிக்கப்படவேண்டும். தேவாரம் சாஸ்திர-தோத்திர நூல்கள் வெளிவர ஆலய நிதிகள் பயன்பட வேண்டும். அதற்கு மேலே, சாதாரணத் திருவிழா உட்பட பலவற்றிற்குப் பொருளே தெரியாமல் இருக்கிறார்கள். பலர் 'குருட்டு நம்பிக்கை' என்று சொல்லுவார்கள். அது தவறான சொல் என்று கருதுகிறேன். நம்பிக்கை என்பது காரணம் காண முடியாதது தான். காரணம் கண்டு விட்டால் நம்பிக்கை அடிப்படையில் பார்ப்பதல்ல. எனவே அந்தச் சொற்கள் மொழி முறைப்படியே பொருத்தமானதல்லவென்ற கருத்துடையவன் நான். பொருள் தெரியாமல் பல சடங்குகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திருவிழாக்கள், நாம் செய்யும் ஏராள

மான கடங்குகளெல்லாம் நிரம்ப நிரம்ப விஞ்ஞான ரீதியாக, அறிவு ரீதியாக, பொருளை அடிப்படையாகக் கொண்டு, அருமையாக அமைத்தவை என்பதைக் காண்கிறோம். மேல் நாட்டுக்காரர்கள் எழுதிய நூல்கள் மூலமாகக் கூட சில அற்புத தத்துவங்களையெல்லாம் நம்முடைய நோன்புகளுக்கும் நாம் புரித்து கொள்ளத் தொடங்கியிருக்கிறோம். இவற்றையெல்லாம் நாட்டிலே உள்ள வர்களுக்குப் புலப்படுத்துவதற்கு இந்தக் கோவில்களில் உபரி வருமானங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். தனிப்பட்ட வர்கள், வெளியிலே இருப்பவர்கள் கோவிலுக்கு இது வேண்டுமென்று செய் யட்டும். அதை மறுக்கவில்லை. அவர்கள் அன்புக்கு ஏற்ப எப்படி வேண்டு மானாலும் செய்யட்டும். ஆனால் கோவில் பணத்திலிருந்து வெள்ளி வாகனங் களையும், தங்க வாகனங்களையும், தங்க ரதங்களையும் செய்வது நியாயமா வென்று யோசிக்க வேண்டும். அது தேவையற்றது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அதோடு அலங்காரத்து ஆண்டவனை வழிபடுவ தைக்கூட நான் விரும்பவில்லை. ஏனென்றால் பிரிந்துமாலட்சனப்படி, படிமக் கலையின்படி ஒரு மூர்த்திக்கு முழுக்க முழுக்க ஆடை, அணி, ஆபரணங்கள் அனைத்தும் செதுக்கியே, செய்தே, வார்த்தே இருக்கும். அது அடித்த விக்கிரக மாக இருந்தாலும் சரி அல்லது வடித்த விக்கிரகமாக இருந்தாலும் சரி. கல்லிலே அடிப்பது, உலோகத்திலே வடிப்பது. வடித்த மூர்த்திகள் ஆனாலும் சரி, அடித்த மூர்த்திகள் ஆனாலும் சரி, அனைத்து ஆபரணத்தோடும், அனைத்து அணியோடும், ஆடையோடும் முழுக்க முழுக்க இருப்பவை அவை. அதை யெல்லாம் மறந்துவிட்டு, பேன்டேஜ் போடுவதுபோல, நடராசரைச் சுற்றிக் கட்டி, கால் கை முடங்கியவனுக்கு சப்பைக் கட்டு மாதிரி--கட்டுவதெல்லாம் எனக்குப் புரிவதில்லை. ஸ்ரீரங்கத்தில் போய்ப் பார்த்தால் தெரியும். 'பச்சை மா மலைபோல் மேனி' என்று பாடினார் என்றால், அது அற்புதமான, வண்ணக் கனிஞ்சியமாக விளங்கிற்று. இன்று நன்றாகப் புங்க எண்ணையைப் போட்டு, காத்தையெல்லாம் கறுப்பாக மூர்த்தியை ஆக்கிவிட்டார்கள். அது எரிந்த பிறகு, புதிதாகச் செய்தபோது நானும் கூட இருந்து கண்டேன். அழகான பல நிறங்களோடு, வண்ணங்களோடு அமைந்திருந்தது. பழைய காலத்தில் லெல்லாம் சர்கோ பொண்ட் என்று எங்கள் துறையில் சொல்வார்கள். எப்படி கல்லிலே அடித்தாலும், அதற்கு மேலே பஞ்சும், சிதையும் சேர்த்து ஒட்டி, அதற்கு மேலே வண்ணம் பூசி விடுவது. மாமல்லபுரத்திலே அவற்றைக் காணலாம். பூசையில் உள்ள கோவிலில் இன்றும்கூட அவற்றை மாமல்ல புரத்தில் காணலாம். இந்த அழகையெல்லாம் மறைக்கும்படியாக, சுவாமியை நாம் பார்க்க முடியாமல் மறைத்து விடுகிறார்கள். ஏதோ கையைக் காண் கைத்திறனையோ, சூருக்களின் கை விசேஷத்தையோ, புஷ்ப மாலை

யையோ அல்லது சந்தனத்தையோதான் நாம் காண்கிறோம். முகத்தை விட்டுவிட்டு, சில மூர்த்திகளுக்கு முகத்தையும் மூடிவிட்டு, எல்லாவற்றையும் உள்ளே வைத்துவிட்டு, வெளியே இருக்கிற அலங்காரத்தைத் தான் காண்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுடைய பக்தியை நான் குறை சொல்ல வில்லை. எனக்கு அது பிடிக்கவில்லை. முறையற்றதென்றுகூட நான் கருது கிறேன். அந்த அளவுக்கு மேலே சொல்லி யாருடைய மனத்தையும் புண்படுத்த நான் விரும்பாதவன். இந்த நிலையிலே இது தேவையற்றது என்பதாகும். இந்த மாதிரி ஏராளமான தங்கங்கள் மற்றவர்கள் தனிப்பட்ட முறையிலே ஏராளமாக லட்சம், பத்து லட்சம் என்று செலவு செய்து வைக்கட்டும். அதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. கோயில் உபநிதிகளையெல்லாம் இப் படியே செலவு செய்த பின்னரும் அதைக் கட்டிக் காப்பதற்காக வேறு செலவு செய்யவேண்டியிருக்கின்றது. இதிலே முதலீடு, இன்வெஸ்ட்மெண்ட் செய்த தொகையைவிட, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொகையைவிட, இந்தச் சொத்துக்களைக் கட்டிக் காப்பதற்காக என்று மாதாமாதம் காவல், தர்வான் இப்படி பல செலவுகள் எல்லாம் செய்து காக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுவதை மனதிலே கொண்டு செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: நேரமாகிறது.

திரு. சா. கணேசன்: ஆகவே இத்தோடு முடித்துக்கொள்கின்றேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த இந்து மத அறநிலைய நிர்வாகக் குறிப்புக் குறித்து சில வார்த்தைகள் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். பொதுவாக இந்து மதமானது தொன்றுதொட்ட ஒரு பழைய மதமாகும். இதனுடைய சீரும் சிறப்பும் காரணமாக, இன்றைய நிலையிலே நம்முடைய தேசத்திலேயே மிகச் சிறப்பு வாய்ந்த இடமாக தமிழகம் இருக்கின்றது. தமிழகத்திலே இருக்கக்கூடிய கோயில்களுக்கும் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. கோயில்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக் கின்றது. அதனுடைய வருவாயும் பல கோடிக்கணக்கில் கோயிலுக்கு வரக் கூடிய நிலையில் இருக்கின்றது. பழைய காலம் தொட்டு சமுதாயத்திலே ஒரு சிறப்புமிக்க நிலையை அடைய நம்முடைய இந்து மதம் ஆற்றிய பணி சிறப் பானது என்று கூறினால், அது மிகையாகாது. அப்படி ஒரு சிறப்புமிக்க அமைப்பை மாற்ற ஒரு சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று அரசாங் கத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக பிற மதங்களில் அரசாங்கம்

அதிகமாகத் தலையிடுவது கிடையாது. கிருஸ்தவ மதத்திலே அரசாங்கத்தினுடைய தலையீடே கிடையாது என்று கூறலாம். நம்முடைய மகமதிய மதத்திலே, அந்த மதத்தினுடைய கட்டுப்பாடு கோட்பாடுகளுக்கு இணங்க 'வக்ப் போர்டு' என்று ஒன்று ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால் இந்து மதத்தில் மட்டும் அரசாங்கத்தினுடைய நிர்வாக அமைப்பிலேயே இதை ஏற்படுத்திக் கொண்டது அவ்வளவு விரும்பத்தக்கதாக, ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை, ஒரு நல்ல அமைப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக மதத்தினுடைய நிர்வாக விஷயத்தைப் பொறுத்த வரையிலும், அரசாங்கத்திலுள்ள நியமிக்கப்படுபவர்கள் மத நம்பிக்கை உடையவர்களாக, கடவுள் பக்தியுடையவர்களாக இருப்பது மிகவும் அவசியம். அந்தத் தன்மையே மாறக்கூடிய அளவுக்கு அதிகாரிகளையும், டிரஸ்டிகளையும் நாம் இன்றைய தினத்திலே காண்கின்றோம். பொதுவாக மதம் நல்ல செழிப்பாக வாழ வேண்டுமேயானால், அதனால் சமுதாயம் பயன் அடைய வேண்டுமானால், அதனுடைய கோட்பாடுகளுக்கு விரோதமாகச் செயலாற்றக் கூடியவர்களை அந்தத் துறையில் நியமிக்கக் கூடாது. இன்றைய தினம் என்ன நடக்கின்றது? அரசாங்கத்திலுள்ள நியமிக்கக்கூடிய கோயில் எக்சிகியூடிவ் ஆபீசர் போன்றவர்கள் எல்லாம் மதச் சார்பற்றவர்களாக, மத நம்பிக்கை அற்றவர்களாக, கோயில் வழிபாடு அற்றவர்களாக அமையக்கூடிய காரணத்தினால், கோயில்களில் வரக்கூடிய வருமானங்களையெல்லாம் எப்படி எப்படியெல்லாம் ஆடிட்டிலே அப்ஜக்ஷன் இல்லாத முறையில் கணக்கு எழுதலாம் என்று அந்த வேலை செய்வதில் இருக்கின்றார்களே தவிர, இந்தக் கோயில்கள் நல்ல முறையில் சீரும் சிறப்புமாக இருப்பதற்கு, நல்ல வளர்ச்சி கொண்டதாக இருப்பதற்கு, சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய ஏற்றும் ஒரு வாய்ப்பாகக் கொள்ளவில்லை என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இந்த நிலைமைகள் இன்று மாற வேண்டும். கோயில்களைக் கவனிக்கும் நிலை குறைந்து வருகின்றது. பல கோயில்களிலே கோயிலுக்குள்ளேயே போகாதவர்கள் எல்லாம் இன்றையதினம் எக்சிகியூடிவ் ஆபீசர்களாக இருக்கின்றார்கள். தங்களுடைய ஆபீசிலேயே இருந்து நிர்வாகம் செய்கின்றவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். இதை அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அரசாங்கம் அறநிலைக் காவலர்களாக நியமிக்கக் கூடியவர்கள் கோயில் பற்றற்றவர்களாக, தெய்வ நம்பிக்கையற்றவர்களாக எல்லாம் இருப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படியெல்லாம் நியமிக்கும் நிலையை மாற்ற அரசாங்கம் யோசிக்க வேண்டும். குறிப்பாக அரசாங்கம் தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களைக் கோயிலிலே

நியமிக்கக்கூடிய ஒரு தன்மையை சற்று கவனிக்க வேண்டும். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையே டிரஸ்டிகளாக நியமனம் செய்யப்படுவதை நான் குறை கூறுகிறேன் என்று எண்ணக்கூடாது. பொதுவாக கோயில் அறநிலையங்கள் என்று பார்க்கின்றபோது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தெய்வ நம்பிக்கை உடையவர்களாக, நல்ல மத நம்பிக்கை உடையவர்களாக இருந்தால், அவர்கள் டிரஸ்டிகளாக வருவதை யாரும் ஆட்சேபிக்க செய்ய முடியாது. ஆனால் மத நம்பிக்கை தெய்வ நம்பிக்கை பற்றவர்கள் கோயில்களிலே டிரஸ்டிகளாக இருப்பது விரும்பத்தக்க ஒரு காரியம் அல்ல. எனென்றால் குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் செய்வதற்கு அதற்கென்று ஏற்ற ஒரு நிலையைத்தான் நாம் அங்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமே தவிர, அதற்குப் புறம்பான எண்ணம் உடையவர்கள், புறம்பான நம்பிக்கை உள்ளவர்களையெல்லாம் நியமனம் செய்யக்கூடிய காரணத்தால், மதம் கூறிக்கும்படியான நிலை ஏற்படுகின்றது. இதனால் மத முன்னேற்றம் பின் தங்குவதற்கான நிலை இருப்பதை அரசாங்கம் மாற்ற வேண்டும். ஏதோ தங்களுடைய கட்சிக்காரர்கள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றால், அவர்கள் தெய்வ நம்பிக்கையற்றவர்கள் என்று பொருளா?

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நான் முன்பே கூறிவிட்டேன். முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் இல்லாததனால், அப்படிக் கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களில் தெய்வ நம்பிக்கையுடையவர்களை டிரஸ்டிகளாக நியமிப்பதிலே எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது என்று ஆரம்பத்திலேயே கூறி விட்டேன். அதில் தெய்வ நம்பிக்கையற்றவர்கள் என்றும் சிலர் பதிலாகக் கூறுகிறார்கள். விபூதி பூசுவதையே மறுக்கின்றார்கள். இப்படிப்பட்ட டிரஸ்டிகளை நியமிக்கும் நிலை இருக்குமானால், அது அந்தக் கட்சிக்கே நல்லதல்ல.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வைஷ்ணவ கோயிலிலே சிவ மதம் திருநீறு பூசியவர்கள் டிரஸ்டிகளாக இருக்கின்றார்கள். அந்த மதத்தை அவர்கள் ஒத்துக்கொள்கின்றார்களா? அவர்கள் எல்லாம் டிரஸ்டிகளாக இருக்கக் கூடாதா? திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெம் என்றும் ஹரி என்றும் சித்தாந்தம் பேசி வளர்க்கின்ற இந்தப் போதில்

நாம் கலந்துகொள்ள வேண்டாம் என்ற முறையிலே, ஒன்றும் பூசிக் மொழுகாமல் இருப்பதிலே என்ன தவறு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அறங்காவலர் நியமனத்திற்கு விண்ணப்பம் கொடுக்கப்படுகின்ற நேரத்திலே, விண்ணப்பத்திலே நீங்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள், மத நம்பிக்கையுடையவர்களா என்றெல்லாம் கேள்விகளைக் கேட்கின்றார்கள். அதிலே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று எழுதி மனப்பூர்வமாகக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கின்றார்கள். எப்போது இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒப்புக்கொள்கின்றார்களோ அப்போதே அவர்கள் கடவுள் நம்பிக்கை அல்லது இந்து மதத்திலே நம்பிக்கை கொண்டவர்கள் என்று கொண்டு நாம் பரிசீலனை செய்து நியமிக்கின்றோமே தவிர, இதிலே கட்சிக் கண்ணோட்டமே தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், எக்ஸிகியூடிவ் ஆபீசராக நியமிக்கப்படுபவர்கள் கோயிலைப் பாதுகாப்பதற்காகவும், கோயிலுக்காகவும் நியமிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கோயிலுக்குள்ளே போகும் போது, மதச் சின்னங்களை அணியத் தயாராக இருக்கின்றார்களா? அப்படி அணியத் தயாராக இல்லை என்று இருந்தால், அவர்களை கடவுள் நம்பிக்கை உடையவர்களாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதனைத்தான் அவர்கள் கேட்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மதச் சின்னங்களை அணிந்து கொள்கின்ற காரணத்தாலேயே, அவர்கள் உண்மையான பக்தர்கள் என்று யாரும் எடுத்துக்கொள்ள முடியாது. அணிந்துகொண்டு தவறு செய்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்களில் நாஸ்திகர்களாகவும் இருப்பவர்கள் இருக்கின்றார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மதச் சின்னங்களைக்கூட அணிந்து கொள்ள மாட்டோம் என்று சொல்பவர்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? அதுதான் அவருடைய கேள்வி.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நண்பர் திரு. சுவாமிநாதன் எந்த மதத்தைச் சார்ந்தவர்? அவர் எப்போது மதச் சின்னத்தை அணிந்து வந்திருக்கின்றார் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சட்டசபைக்கு வருகிறபோது தேவையில்லை. கோயிலுக்குப் போகிறபோது, நான் சைவ மதத்தைச் சார்ந்தவன் ஆதலால், திருநீறு அணிந்து, கோயிலுக்குச் செல்லுகின்றேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: நான் இதை ஒரு கட்சிக் கண்ணோட்டத்தோடு கூறவில்லை. கட்சிக்காரர்கள் மனம் நோகும்படியாகவும் நான் கூறவில்லை. இந்த நிலைமைகள் ஏற்படுமேயானால், கோயில்களினுடைய தன்மை குறையுமானால், அவர்கள் கட்டுப்பாடுகளை மீறுவார்களேயானால், அதற்கேற்ற ஒரு பலன் கிடைக்காது. அந்தக் கோயில் நிர்வாகம் நன்கு நடத்தப்படாமல் பொதுமக்களுடைய அதிருப்தியை இந்த அரசு பெறவேண்டாமானால். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தவறு நடைபெறுமானால், மோசமான நிலைமையில் நடைபெறுமேயானால், என்று 'ஆனால்', 'ஆனால்' என்று சொல்ல வேண்டாம். எங்கே அப்படி நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டுவார்களானால், அவைகளைக் களைவதற்கு அரசு முக்கியமான முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: என்னுடைய ஊரிலேயுள்ள தம்பிக்கோட்டையில் சுந்தரேஸ்வரர் கோயிலில் ஒரு எக்ஸ்கியூடிவ் ஆபீசர் வந்தார். அவர் கோயிலுக்கே போகிறது கிடையாது. அவர் அந்தக் கோவிலிலே நைவேத்தியம் நடக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும் கவலைப்படுவது கிடையாது. பலநாள் அந்த நைவேத்தியம் செய்யாமலேயே அந்தக் கோயில் மூடப்பட்டிருந்தது. அதனால் அந்த ஊரிலே மக்கள் பெரிய கிளர்ச்சி செய்தார்கள். அதுபற்றிக்கூட அவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவர் எவ்வளவு பெரிய நாஸ்திகர் என்று பார்க்கும்போது, நாங்கள் எல்லாம் வேதனைப் படவேண்டியதாக இருக்கின்றது. இப்படிப்பட்டவர்களால் பல கோயில்களிலே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் இதை ஒவ்வொன்றாகக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அங்கத்தினர் அவர்கள், அவர்கள் ஊரிலேயிருந்த கோயிலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மற்றும் சில கோயில்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அந்தக் கோயில்களையும் குறிப்பிட்டால் நல்லது. அவர்கள் ஊரைச் சேர்ந்த கோயில்பற்றி உடனடியாக விசாரித்து அங்கு தவறு நடந்திருக்குமானால், தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அவர்கள் லிஸ்டாக எழுதிக் கொடுப்பதாக வரும் போது சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, இந்த விஷயத்தைப் பெரிதாக நினைக்க வேண்டாம். அரசாங்கம் இதை ஒரு வேண்டுகோளாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த மாதிரியான நியமனம் எந்தக் காரியத்திற்காகச் செய்கின்றோமோ, எதனுடைய முன்னேற்றத்திற்காகச் செய்கின்றோமோ, அது சிறப்பாக நடக்கவேண்டுமென்ற காரணத்திற்காக, டிரஸ்டிகள், எக்சிகியுடிவ் ஆபிசர்கள் நல்லவர்களாக, கோயிலைக் காக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்கின்றேனே தவிர, உங்கள் கட்சிக்காரர்களைப் போடுகிறீர்கள் என்பதற்காக நான் ஆட்சேபணை செய்யவில்லை. காங்கிரஸ்காரர்களையே போட வேண்டுமென்று
5-50 நான் கூறவில்லை. உங்கள் காலத்தில் காங்கிரஸ்காரர்களை நியமனம் செய்ய
பி.ப. வில்லையா என்று எல்லாம் கேட்கலாம். இருந்தது. ஏதோ 10 சதவிகிதம், 15 சதவிகிதம் இருந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு கோவிலில் 99 சதவிகிதம் அந்தக் கட்சிக்காரர்களைப் போடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கோவிலூர் டிரஸ்டிகளில் ஒருவர் காங்கிரஸ்காரர். இரண்டாவது காங்கிரஸ் (அமைப்பு)ஐச் சேர்ந்தவர். மூன்றாவது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. கே. சுப்பையா. ஒரே ஒரு டிரஸ்டிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அது பெரிய கோவில். பல கோவில்களுக்குப் பணம் கொடுக்கிற தகுதியுடைய கோவில். தண்டாயுதபாணி ஒவ்வொரு எலெக்ஷனிலும் போட்டி போடுகிறார். ஐந்து டிரஸ்டிகளில் 4 பேர் வேறு கட்சிக்காரர்கள். ஒரே ஒருவர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். திரு. தர்மலிங்கம் என்பவர் இரண்டு இண்டிகேட், ஒன்று சிண்டிகேட், ஒரு கம்யூனிஸ்டு இப்படி இருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் கம்யூனிஸ்டுகள். அவர்கள் கோவில்களுக்கு அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் கடவுள் நம்பிக்கையுண்டு என்று எழுதிக் கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்த ஆட்களைப் போட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்களுடைய அமைச்சர் அவர்கள் சில நேரங்களில் கட்சிக்கு அப்பாலும் பணி செய்வதைப்

போல், கட்சிக்கும் அப்பால் எங்களைப் போன்றவர்களுக்கு இடம் அளித்த காரணத்தினால், எங்களால் அவைகள் நல்ல பெயரும் புகழும் பெற்று விளங்கப் போகிறது என்பதை அறிவார்கள். அந்த நிலைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது போதாது. அமைச்சர் அவர்களைப் பெரிதும் நான் பாராட்டுகிறேன். மற்ற இடங்களிலும் இந்த நிலையைக் கடைப்பிடித்தால் நல்லது, எந்தக் கட்சிக்காரர் என்பதுபற்றிக் கேள்வியில்லை. அதோடு முக்கியமாக கோவில்கள் விஷயத்தில் அரசாங்கம் தலையிடாத நிலையை ஏற்படுத்தினால் நல்லது. அரசாங்கம் தலையிடாதபடி அந்த மதத்தைச் சேர்ந்தவர்களே கோவில் நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஒரு போர்டை நியமித்தால், மிகவும் நன்றாக இருக்கும். முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், முழுவதும் மத நம்பிக்கையுடையவர்கள், தெய்வ நம்பிக்கை உடையவர்களை கூடியவரை . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததை விட இந்த ஆட்சியில் கோவில் காரியங்கள் அனைத்தும் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்று நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: நன்றி. இந்த அரசாங்க நடவடிக்கைகளில் குறிப்பாகக் காணக்கூடியது என்ன? கோவிலைப் பொறுத்த வரையில் நம்பிக்கை இருந்ததோ இல்லையோ அதைப்பற்றித் தலையிடு இல்லை. ஆனால் அந்த இயக்கத்தை மக்கள் நம்புகிற காரணத்தால், அதற்குப் பழுது ஏற்படாத வண்ணம் பாதுகாக்கக்கூடிய முறையை, கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை அழிக்கக் கூடிய நிலை இருந்தால், இன்னும் மோசமாக இருக்கும். உதாரணமாக கம்யூனிச அரசாங்கம் ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம். ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்பதை கேரளாவில் பார்க்கிறோம். அங்கே இருக்கிற சாமிகள் படாத அல்லல் படுவதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே அரசாங்கம் இதுமாதிரியான விஷயத்தில் அரசாங்கத் தலையீடு இல்லாத வகையில் மதச்சார்புடைய ஒரு ஆலோசனை போர்டை அமைத்து, அதன் மூலம் நிர்வாகத்தை நடத்தும் முறையை ஏற்படுத்தினால், அது பாராட்டக்கூடியதாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: அரசாங்கத் தலையீடு இல்லாமல்தான் இருந்தது. பகல் ராஜா அவர்கள் பிரிவி கவுன்சில் வரை சென்று அது வந்தது.

[1973 மார்ச் 26

திரு. என். சுந்தரேசத் தேவர் : திருப்பணியைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் வந்த பிறகு நிறையத் திருப்பணிகள் செய்யப்படுகின்றன. எங்கு பார்த்தாலும், சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. ரூபாய் மூன்று கோடியே எண்பத்தாறு லட்சம் போன ஆண்டு திருப்பணிச் செலவு ஆகியிருக்கிறது. இந்தத் திருப்பணிச் செலவில் அரசாங்கம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். பல கோவில்களில் திருப்பணியின் பெயரால் செலவுகள் மிக மோசமாக நடந்து கொண்டிருக்கின்றன என்ற நிலையைப் பார்க்க வேண்டும். திருப்பணி அவசியம்தான். ஆனால் அதன் பேரில் ஒரு பெரிய எஸ்டிமேட் போட்டு, பல ஊழல்கள் நடக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அவைகளைக் கட்டிக்காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசாங்க நிர்வாகத்திலுள்ள கோவில்களில் பெரியது தஞ்சை பெரிய கோவில். அது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்கிறது. இதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டும் அதற்கு முன்பும் பெருமுயற்சி எடுத்ததாகக் கூறினர்கள். ராஜராஜசோழன் சிலையை அங்கு வைக்க முடியவில்லை. இதுமாதிரி நிலையில் நூற்றுக்கணக்கான கோவில்கள் இருக்கின்றன. அவைகள் மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் இருக்க என்ன அவசியமிருக்கிறது? ஒரு மதக் கோவிலே அதாவது ஒரு பள்ளி வாசலைக்கூட மத்திய சர்க்கார் எடுக்கவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : சட்டமன்றத்தில் மதச் சின்னத்தை அணியலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : காஷாயம் கட்டுவதும் மதச் சின்னம்தான். விபூதிப் பட்டை அணிவதற்கு என் அனுமதி வேண்டும்?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : திருக்கோவில்கள் பற்றிய விவாதத்தின் போது இந்த நேரத்தை வெறும் பொழுதுபோக்காக எடுத்துக் கொள்வது போன்ற ஒரு உணர்வை இங்கு தலைவராவர்கள் நிலவும்படியாகச் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : அரசாங்கம் இந்துமதக் கோவில்களை மட்டும் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்னவிருக்கிறது? புராதன ஆராய்ச்சிக்கு இந்து மதம் மிகப் பழமையானது, தொன்மையானது. சிலைகளின் மூலம் அது, பல வரலாற்றைப் படைக்கக்கூடிய சிறப்புமிக்க நிலையில் இருந்தாலும்கூட, அதெல்லாம் நமது

1973 மார்ச் 26] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

சொத்தாக இருக்கும்போது, அது அம் மதத்தின் நிர்வாகத்தில் இருந்திருந்தால், நம் தமிழகத்தில் இன்றையதினம் மத்திய சர்க்கார் தலையீடு இருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குள்ள விஷயம். பெருமதிப்புக்குரிய கோவில்கள், கலைச் செல்வங்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடம் இருப்பதால், அதைப் பழுது பார்க்க முடியாத நிலையில் இருக்கிறோம். தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பு என்ன? அதில் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படிக் கோவில்கள் எல்லாம் சீர்திருத்தம் செய்ய முடியாமல் சீரழிந்து வருவதைப் பார்த்தால் சில கோவில்களைக் கட்டி கோடிக் கணக்கில் செலவு செய்து கும்பாபிஷேகம் செய்வது என்பதைப் பெருமைக்குரிய விஷயமாக எண்ணிவிட முடியாது. உயர்ந்த சீரிய கோவில்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடம் இருக்கும்போது, அவைகளை அவ்வாறு விட்டு வைத்திருப்பது வருந்தக்கூடிய விஷயம், அதில் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கோவில்களின் சொத்துக்களைப் பொறுத்த வரையிலும், அதைப் பராதீனம் செய்கிற வகையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ள நூற்றுக்கணக்கான கோவில்கள் அவர்கள் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிற நிலை இருக்கிறது. இருந்த போதிலும்கூட, இன்றைய நிலையில் கோவில்களின் சொத்துக்கள் என்றால், யார் வேண்டுமானாலும் சொத்து இல்லாதவர்கள், எப்படியோ எண்ணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது சர்வசாதாரணமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ராமேஸ்வரம் கோவிலுக்கு எங்கள் ஊரில் 12½ வேலி நிலம் இருக்கிறது. ஒரே நாளில் ஆக்கிரமிப்பு. தென்னந் தோப்பை எல்லாம் 10 சென்ட், 12 சென்ட் என்று ஆக்கிரமிப்புச் செய்தார்கள். ஆவுடையார் கோவிலுக்கு 22 வேலி நிலம் இருக்கிறது. அதுவும் ஒரேநாளில் ஆக்கிரமிப்பு. கம்பிக்கோட்டையில் ராமசாமி என்பவர் டிரஸ்டியாக இருந்து இறந்துவிட்டார். ஒரே நாளில் கோவில் நிர்வாகம் வேண்டாம் என்றவுடன், அடுத்த நாளே ஆக்கிரமிப்பு செய்துகொண்டார்கள். அவரவர்கள் வேலி அடைத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கோவில் நிர்வாகத்திலிருந்து குத்தகை எழுதிக் கேட்டு வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. இது மாதிரி கோவில் நிலங்களைப் பராதீனம் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். திருக்கோவில் நிலங்கள் ஏலமாக வெளி வருகிறது. அது சட்டரீதியை உபயோகிப்பவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். திருவிழாக்கள், சமய சொற்பொழிவுகள் பட்டிமன்றங்கள் இவைகளை மூன்றேற்றம் அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமுதாயப் பணியில் ஆன்மீகத்திலிருக்கள்.

[திரு. எஸ். சுந்தரேசத் தேவர்] [1973 மார்ச் 26

ஹைஸ்கூல்கள் வைப்பதை நிறையச் செய்யுங்கள். ஐந்து கல்லூரிகளும் 10, 12 ஹைஸ்கூல்களும் இருப்பதாகச் சொன்னார்கள். இது போதாது. எங்கு எங்கு வசதி இருக்கிறதோ, அங்கே அந்தக் கோவில்களின் தன்மை மாறாத வகையில் அந்தத் திட்டங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன்.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம் முடைய தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் அவர்களின் இந்துமத அறநிலைய ஆட்சித்துறை கொள்கை விளக்க அறிக்கையை மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம். அதன் தொடர்பாகச் சில செய்திகளை இந்த அவைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் சில முக்கியமான செய்திகள் விடுபட்டிருக்கின்றன. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் கல்விக்கூடங்கள், கல்லூரிகள் நடத்துகிற மடங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிய குறிப்புகள் இந்த அறிக்கையில் தரப்படவில்லை. தமிழகத்திலுள்ள பெரும்பாலான மடங்கள் கல்லூரிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்துகின்றன. அவைகளையும் இந்த அறிக்கையில் சேர்த்திருக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

அடுத்து, முக்கியமாக விவாதத்தின்போது, நம்முடைய அரசும் அரசை நடத்துகிற நிர்வாகத்தில் இருப்பவர்களும் ஆஸ்திகர்களா நாத்திகர்களா என்று விவாதத்தில் ஈடுபட்டார்கள். அப்படிப்பட்ட விவாதத்தில் ஈடுபடுகிற காலம் கடந்துவிட்டது. தலைவர் பெரியார் அவர்கள் இயக்கத்திலிருந்து மெல்ல விலகி ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று சொன்னதால்தான், நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்ந்து தமிழக வரலாற்றை எழுதுகிற வாய்ப்புக் கிடைத்தது. அதில் அவர்களுக்கு அனைக்க முடியாத நம்பிக்கையிருந்தது. நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதில் அறிஞர் அண்ணா கடவுளை நம்பாதவர்கள், தங்களுடைய அறிவை மையமாக வைத்து எப்படி கடவுள் இல்லையென்று சொல்லுகிறார்களோ, அதேபோல் தங்களுடைய அறிவை மையமாக வைத்து கடவுளை நம்புகிறவர்களுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று சொன்னதாக எழுதியுள்ளார்கள். அது மட்டுமின்றி அப்படிப் பேசுவது நல்லதல்லவென்று மேடையில் கண்டித்ததாகவும் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார்கள். முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அதனுடைய தெளிவான கடவுள் நம்பிக்கையை

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

1973 மார்ச் 26]

வரையறுத்துக் காட்டிய பின்னுலும் அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையென்று சொல்வது சரியல்ல என்பது நமது கருத்து. இந்த அடிப்படையில் அறங்காவலர் நியமனத்திலே கூட எனக்கு இரண்டொரு அனுபவம் உண்டு. திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லையப்பர் கோயிலில் ஒரு மாவட்ட முதன்மையான தி.மு.க. தோழர் ஒருவர் அறங்காவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு கோயிலுக்குள்ளே சட்டை போட்டுக்கொண்டு போகலாமென்று இருந்தது. ஆனால் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, கோயிலுக்குள்ளே சட்டை போட்டுக்கொண்டு போகக்கூடாது என்ற விதியை ஏற்படுத்தி அவர் கோயிலுக்கு வந்தால்கூட சட்டையைக் கழற்றிவிட்டு, நன்றாக பழைய கால வைதீக முறையில் அந்தக் கோயிலுக்குள்ளே போகிறார். அங்கேயிருக்கிற சேவகர்கள் கூட இப்போது ஷர்ட் போடுவதில்லை. அப்படிப் பழைய கால முறையைக் கையாளுகிறார்கள். இங்கேயிருக்கிற நம்முடைய திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலிலே மணிவண்ணன் என்ற நண்பர் ஒருவர் அறங்காவலராக இருக்கிறார். அவரைப் பார்த்தால், ஒரு பெரிய பூசாரியோ என்ற சந்தேகம் நமக்கு இருக்கும். ஆதலால் தி.மு.க. நண்பர்கள் கூட நல்ல கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய சமூகத்தின் கால வித்தியாசத்தின் காரணமாக, இடைவெளி ஏற்பட்டதன் காரணமாக, கூடுதல் குறைவாக சில இடத்தில் இருக்கலாம். அவைகளையெல்லாம் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம். இந்த திருக்கோயில் ஆட்சியைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு பல்வேறு அமைப்புகளை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது. சோழர் காலத்துத் திருக்கோயில்களைப் பார்த்தால், கல்வெட்டுகளைப் பார்த்தால், மருத்துவ நிலையங்கள், நல்ல இலக்கிய விரிவுரை மண்டபங்கள், ஊராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து மன்றங்கள் ஆகியவற்றைக்கூட கோயில்கள் நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றன. அந்தக் கால நிலைமைகள் மாறி சமுதாயத்திலிருந்து நெடும் தொலைவுக்குக் கோயில்கள் விலகிப் போனதால், இந்த இந்து சமுதாயமும் இன்றைக்குக் கோயிலிலிருந்து பிரிந்து, அதனுடைய ஆட்சி உரிமைகள் நெறி உரிமைகளை இழந்து நிற்கிற நிலைமையைப் பார்க்கிறோம். மீண்டும் நம்முடைய அரசு அந்தத் துறையில் கோயில்களையும் இந்து சமூகத்தையும் இணைக்கின்ற ஒரு மையகேந்திரமாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம், வேண்டுகோள். பழங் காலத்துப் பழமொழி "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது. கோயில் கடவுளைத்

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

[1973 மார்ச் 26

தொழுவதற்கு மட்டுமல்ல, கோயில்கள் சமுதாயத்தினுடைய மைய கேந்திரமாக, அதனுடைய நலன்களுக்கு உத்தரவாதம் கொடுக்கும் ஒரு அமைப்பாக சமுதாயத்தினுடைய அனேத்து நலன்களையும் பேணுகின்ற ஒரு நிறுவனமாக இருந்தது ஒரு காலத்தில். அந்த நிலை காலப்போக்கில் மாறியதால்தான், நம்முடைய நிலைமை இப்போது சீர்கெட்டிருக்கின்றது. ஒரு மனிதனுக்கு அவனுடைய குடும்பம் முதலில் உத்தரவாதம் வழங்குகிறது. அடுத்து அவனுடைய சமூகம் வழங்குகிறது. அடுத்து அவனுடைய சமயம் வழங்குகிறது. அடுத்து அரசு வழங்குகிறது. இந்தப்படி பார்த்தால், இன்றைக்கு இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த சமயம் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய முறையில் சமூக அமைப்பும் திருக்கோயில் ஆட்சிமுறையும் இல்லாமல் இருக்கின்றன. அதை நம்முடைய அரசு நினைவில் கொண்டு, இந்து சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் அனுதையாக எந்தவிதமான ஆபத்துக்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நிலைமையை இந்த அறநிலைய ஆட்சித்துறை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய வேணவா. கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்து கடற்கரை ஓரத்துப் பகுதிகளிலும் நம்முடைய இந்து சகோதரர்கள் பல்வேறு அல்லல்களுக்கு ஆளாகிறார்கள். அடிக்கடி மத மாற்றங்களுக்கு ஆளாகிறார்கள். மதம் மாறி வந்தால் தாய் மதத்திற்கு வந்தால், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ் நிலையில் அவர்களுக்கென்று சமயச் சார்பற்ற அரசு பாதுகாக்க தனி நடவடிக்கை எடுக்க முடியாது. நியாயப்படி இந்த அறநிலைய ஆட்சித்துறைதான் பாதுகாப்பும் உத்தரவாதமும் கொடுக்க வேண்டும். பொதுவாக மனிதனிடம் விகார உணர்ச்சிகள் அதிகமாக வளர்ந்து இன்றைக்கு சமூகத்தில் ஒரு அமைதியின்மையைப் பார்க்கிறோம். அமைதியின்மையைப் போக்க வேண்டுமென்றால் சொன்னால் நல்ல கலை, நல்ல இலக்கியம், நல்ல சுவை மிருந்த கருத்து உணர்வுகளை மக்களுக்குத் தரவேண்டும். பழங்காலத்தில் கோயில்கள் அப்படித் தந்தன. இடைக்காலத்தில் தவறியதனாலே, இன்று நிரைப்படங்களுக்குச் செல்வதைத் தவிர, அவனுக்கு வேறு பொழுதுபோக்கு இல்லை. அங்கே அவனுடைய விகார உணர்ச்சிகளைத் தூண்டி வளர்க்கிற சூழல் தான் அதிகமாக இருக்கிறதே தவிர, அதை அமைதிப்படுத்துகிற சூழல் குறைவாக இருக்கிறது. இந்தச் சூழல்களை மாற்றி, கோயில் சூழல்களிலே நல்ல இலக்கியக் கருத்து, நல்ல சித்தனைக் கருத்துச் சூழல், நல்ல இசைச் சூழல்; இவற்றை ஏற்படுத்த வேண்டும். காலையிலே சட்டமன்றத்திலேகூட ஒரு உறுப்பினர் நல்ல நாதஸ்வர இசை கோயில்களிலே வாசிக்கப்பெற வேண்டும் என்று சொன்னார்கள். இரவு 9 மணிக்குப் பிறகு அர்த்த ஜாம பூஜைக்குப் பிறகு, ஒரு மணி நேரம் நல்ல

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

1973 மார்ச் 26]

மெல்லிசை, நல்ல நாதஸ்வர இசையை வழங்கினால், பொதுமக்கள் காது அதைக் கேட்டு மகிழ்ந்து தங்களுடைய மனதை, உணர்வை மேம்படுத்திக்கொள்ள முடியும். மனிதனுக்கு இயல்பாக உணவு தேவை போல அவனுக்கு ஒரு மகிழ்ச்சியும் களிப்பும் இன்றியமையாத தேவையாக இருக்கிறது. இந்தக் களிப்பு அல்லது மகிழ்ச்சி இல்லாது போனால், அந்த மனிதனிடத்தில் மிருக சுபாவம் வளர்கிறது. மனிதனுக்கு களிப்பை, மகிழ்ச்சியை வழங்கி, அவனை மேம்படுத்துகிற, அவனுடைய உள்ளத்தைப் பக்குவப்படுத்துகிற நிறுவனங்களாகத்தான் நம்முடைய கோயில்கள் இருந்தன. அந்தச் சூழ்நிலை மீண்டும் உருவாக வேண்டும். நமது பழைய கல்வெட்டைப் பார்த்தால், தஞ்சை மாவட்டம் திருமருகலில் நல்ல அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவ நிலையம் இருந்திருக்கிறது. திருமருகலிலேயே நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள் முதலமைச்சரின் ஆணையை ஏற்றுக்கொண்டு தமிழக திருக்கோயில்களில் திருமணம் செய்து வைக்கும் நிலையத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். இது ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் திருமருகலில் நிகழ்த்திய தொண்டின் தொடர்ச்சி. நம்முடைய பழைய சமூக மாபைப் பார்த்தால், உயிர் உணர்வும், மனிதாபிமானமும் மிக அதிகமாக இருந்திருக்கிறது. தெளிவாக பல்வேறு உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். காதல் வயப்பட்ட ஒருவனும் ஒருத்தியும் பெற்றோர் உடன்பாடின்மையாலே ஒரு கோயிலிலே திருமணம் செய்துகொள்வதாக உடன்பாடு செய்து கொண்டு வீட்டை விட்டு வந்து விட்டனர். அன்று இரவு அவன் இறந்து போகிறான். மறுநாள் அந்தப் பெண்கள் அழுது புலம்புகிறார்கள். திருஞான சம்பந்தர் அந்த ஊருக்கு வந்தவர் கோயிலுக்குச் சென்று வழிபாட்டைச் செய்யாமல், முதலில் அழுகின்ற இடம் சென்று அவனை எழுப்பி அவனுக்கும் அவளுக்கும் திருமணம் செய்து வைத்துப் பின்னாலே கோயிலுக்குச் சென்றார் என்ற வரலாற்றைப் பார்க்கிறோம். நம்முடைய கோவை மாவட்டத்தில் அவினாசியில் முதலை உண்ட பாலனை அமைத்துத் தந்தார். உயிர் படுகிற துன்பத்தைப் பார்த்து இரக்கப்படுவதுதான் சமயம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சில பேர் கோயிலுடைய நிதிகளை கோயிற் காரியத்தைத் தவிர வேறு எதற்கும் செலவிடக் கூடாது என்பதைப் போல வற்புறுத்தினார்கள். நான் கோடிட்டுச் சொல்லுகிறேன், திருக்கோயில் எங்கும் நிறைய பணிகள் நிறைவேற்றப்படுவது தவிர்க்க முடியாதது, அவசியமானதும் கூட. ஆனால், நடமாடும் கோயிலைப் பாழாக்கி விட்டு, விரட்டி விட்டு நாம் வளர்த்த கோயில்களைப் பேணிப் பாதுகாத்தால், அங்கே மனிதன் இல்லாமல் என்ன செய்வது அல்லது மனிதன் அறியாமை வயப்பட்டு இருப்பானேயானால், அந்தக் கோயில்களி

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

[1973 மார்ச் 26

னுலே அவன் அடைகின்ற பயன் மிகவும் குறைவாகப் போய்விடுகிறது. எனவே தான் நம்முடைய திருமூலரே கூட நடமாடும் கோயில் மனிதனுக்குள்ளாக கடவுளே பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய அரசு மக்கள் பணித்துறையிலே செலவழிக்கின்ற பணம் ஏராளம். அதே நேரத்தில் பழுதுற்று இருக்கும் திருக்கோயில்களையெல்லாம் புதுப்பிப்பதற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இவைகளைப் பாழாக்குவது என்பது நம்முடைய தலைமுறைக்கு ஒரு பெரிய இழப்பு என்பதிலே கருத்து வேறுபாடு இடையாது. தமிழனுடைய வரலாற்றைப் பொருத்தவரையில், அவனுக்கு மிச்சசொச்சமாக பெருமையாகக் காட்டிக்கொள்ளக் கூடிய உடைமை என்று ஒன்று இருக்குமானால், இந்தத் திருக்கோயில்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நம்முடைய சமயத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆக தமிழ் இலக்கியம், சமயம், திருக் கோயில்கள், இந்த மூன்று தான் நம்முடைய தலைமுறைக்குக் கொடுத்திருக்கிற சொத்துக்கள் என்பதை நாம் எண்ணிப்பார்த்து, அந்த வகையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெளிவாக நான் ஒன்றை நினைவூட்ட ஆசைப்படுகிறேன். இப்போது சமயச் சின்னத்தைப்பற்றிச் சொன்னார்கள். சின்னம் என்பதும் சடங்கு என்பதும் தவிர்க்க முடியாதவை. யாராக இருந்தாலும் சின்னங்களை விட்டுத் தவிர்த்திருப்பதாக நான் நம்பவில்லை. திருநீறு பூசிக்கொள்வது ஒருக்கால் சின்னம் என்று பரிகாசம் செய்தால், எதோ ஒரு அடையாளத்தின் வழி என்று பார்த்து மனிதனுடைய உணர்வு ஈர்க்கப்படுகிறது என்பதே உண்மை. அடையாளங்கள் மாறுபடலாம், சின்னங்கள் மாறுபடலாம். சின்னம், சடங்கு என்பது தவிர்க்க முடியாத மனித உலகத்து இயற்கை. அவைகளிலிருந்து விடுபடுவது என்பது மார்க்ஸிஸ்டால் கூட முடியாது. காரணம், அவர்களும் கதிர் அரிவாள் நகஷத்திர குறி போட்ட கொடி பால்தான் உணர்வை வளர்க்கிறார்கள். நாம் திருநீற்றைப் பார்த்து எழுச்சி பெறுகிறோம். இவைகள் தானே தவிர இதிலே பெரிய கருத்து வேறுபாடு இருப்பதாக யாரும் நினைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்று கூறிக்கொள்கிறேன். இந்த அரசினுடைய அறநிலைய ஆட்சித்துறையில் பல் வேறு கல்லூரிகளை, பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை நடத்துகிறார்கள். குறிப் பாக கண் ஒளி வழங்குகிற திட்டத்தை கண்ணப்ப நாயனார் வாழ்ந்த காலத் திலே செய்ததை நினைவுபடுத்திச் செய்கின்றார்கள். என்னுடைய ஆசை அந்த நாயன்மார்கள் அறுபத்திமூவர் செய்த தொண்டை மீண்டும் நடை முறைப்படுத்தினால் கூட நம்முடைய சமூகமும் நம்முடைய கலைகளும் நன்றாக வளரும். திருக்கோயில்கள் தீர்த்தத்தைப் பற்றிச் சொன் னார்கள். தண்டியடிகள் என்று ஒரு நாயனார் இருந்தார். அவர்

1973 மார்ச் 26] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

வேறு கோயில்களுக்கெல்லாம் போவதில்லை. திருக்குளங்கள் எந்த இருக் கிறதோ அவற்றைத் தூர் எடுப்பது, தூய்மை செய்வது என்பதே அவருடைய தொண்டு. ஆகவே, அந்த நாயனார் செய்ததையொட்டி, தமிழ் நாட்டில் அது போன்ற திருக்கோயில்களிலெல்லாம் தீர்த்தம் செய்யலாம். திருக்குளங்கள் பற்றி எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. நம்முடைய [illegible] அமைச்சர் மன்னை அவர்கள் அருமைக்குரியவர்கள், ஒரு நடை [illegible] கோயிலிலே சொன்னார்கள், 'ஆண்டு தோறும் இறைவனுக்கு திருக்கல்யாணம் பண்ணுகிறோமே, நம்முடைய வீட்டிலே அண்ணன் தம்பிகளுக்கு நினைவு களுக்கு செய்து வைக்கவேண்டாமா?' என்று கேட்டார். அதுதான் இன்றைக்கு இலவசத் திருமணமாக வடிவம் பெற்றிருக்கிறது. அரசுக்கு அந்தத் துறையில் நம்முடைய நன்றியை, பாராட்டைக் கூறிக்கொள்கிறேன். பூம்புகார் பரவைக் கல்லூரியை ஒரு தமிழ் பண்பாட்டுப் பல்கலைக் கழகம் போல் வளர்க்க வேண்டும். "பல்கலைக் கழகம் போல்" என்று சொல்லுகிறேன், பல்கலைக் கழகம் அல்ல. காரணம், அதற்கு நிறைய பொருள் தேவை என்றெல்லாம் பய முறுத்துகிறார்கள். இருந்தாலும்கூட சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, இவைகளையெல்லாம் வளர்க்கக்கூடிய தமிழ்க் கலைகளுக்கெல்லாம் கேந்திரமாக இருக்க வேண்டும். ஏனென்றால், அடிக்கடி உணர்வை வளர்ப்பதற்கு இசை தேவை. இவைகளையெல்லாம் முறையாகக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகள் குறைந்துவிட்டன. தமிழ்க் கலைகளை வளர்ப்பதற்கு ஒரு பெரிய பண்பாட்டுக் கலைக்கேந்திரமாக பூம்புகார் கல்லூரியை வளர்க்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதை பணியாளர்களை நியமிக்கின்றபோது, அன்பு கூர்ந்து அவர்கள் நல்ல சமய நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம். நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு முறை பேரவையிலே, "நாங்கள் கடவுளை நம்புகிறோமா என்பது அல்ல பிரச்சினை, கடவுள் எங்களை ஏற்றுக்கொள்ளுகிற மாதிரி நடக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்" என்று சொன்னார்கள். அதே போல பொதுமக்களுடைய திருக்கோயில்களுக்கு வருகிற இறை பணியாளர்கள், அவர்களுக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாமல் போனாலும் சமயச் சின்னங்கள் போன்றவற்றை அணிவது என்பது தவிர்க்க முடியாத கடமை என்பதை நாம் உணர்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம், போலீஸ் யூனிஃபார்மில் பார்த்தால் கூட அவர் களுக்கு காக்கி உடை போடுவதாலே புழுக்கமாக இருக்கும். அந்த வேலைக்கு வருகிறபோது எப்படி அது தவிர்க்க முடியாது என்று கருதப்படுகிறதோ அதே போல திருக்கோயில்களின் திருப்பணிக்கு வருகிறவர்கள் அந்தச்

6·10 P.M. சின்னங்களை, சமய அமைப்புகளை ஏற்றுக்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் ஏற்றுக் கொண்ட கொள்கை. இதை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. எங்கே யாவது தவறுகள் இருக்குமானால், அரசுக்கு சுட்டிக்காட்டப்பெறுமானால், நிச்சயமாகத் திருத்தப்படும் என்று நினைவூட்டிக்கொள்கிறேன். பழனி பண்பாட்டுக் கல்லூரி, பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரியில் தத்துவத் துறையிலே, சமயத் துறையிலே இந்த ஆண்டு முதுநிலைப் பட்டத்தைத் தொடங்க இருக்கிறோம் என்று அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதில் பயின்று பட்டம் பெறுகிறவர்களை இறை பணியாளர்களாக நியமிப்பதற்கு இந்தத் துறையிலே அரசு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். திருக்கோயில் இறை பணியாளர்களுடைய கோரிக்கைகளை யெல்லாம், அமைச்சரவர்கள் சொன்னது போல, அரசு போராட்டமில்லாமலே ஒப்புக்கொண்டிருக்கிறது. அதுவும் சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நான் குறிப்பிட்டேன். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே கை மேலே னிந்து வந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பணியாளர்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயிரக்கணக்கானவர்கள் என்றாலும், நூற்றுக் கணக்கானவர்கள் என்கிறபோது, அதில் சேர்ந்து விடும். இருந்தாலும் ஆயிரக்கணக்கானவர்கள் என்று திருத்திக்கொள்கிறேன். மீண்டும் சொல்லி றேன். அதே நேரத்தில் வெளியே இருக்கிற மற்றத் துறைகளுக்குக் கூடச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அரசினிடத்தில் போராடாமல் நியாயமாக ஏற்றுக்கொள்கிற வகையில் இந்த அரசு எந்தக் கோரிக்கையை வைத்தாலும் ஏற்றுக்கொள்ளும் என்ற பெரிய அடையாளமாக அற நிலையத் துறையில் செய் திருக்கிறார்கள் என்பதே அந்தச் செய்தி. அதற்குப் பாராட்டைத் தெரிவித் துக் கொண்டு, நான் சொன்ன இந்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறி, சில முக்கியமான செய்திகளை நினைவுறுத்த ஆசைப்படுகிறேன். அறங் காவலர்களாக நியமிக்கிறபோது, அவர்களுக்கு தெய்வ நம்பிக்கை உண்டா இல்லையா என்ற அடிப்படையில் ஆய்வு செய்து உள்ளூரில் கடவுள் நம்பிக்கை, வர வழி பாடு, பக்தி போன்ற இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர் களில் ஒருவரைப் பிரதிநிதியாக நியமிக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக இந்த அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் னைகள் தமிழ் நாடு முழுவதும் இருக்கின்றன. அந்தப் பேரவையின் தலைவர் னையாவது பேரவையின் பரிந்துரையின் மூடிவிற்கு ஏற்ப நியமித்தால், பொது மக்களுக்கு தங்களுடைய பக்தி, பஜனை போன்றவைகளுக்குத் தினையாக அரசு

இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படும். 3, 4 பேர்களை நியமிப் பதில் தமிழ் நாடு தெய்வீகப் பேரவையின் பரிந்துரையின் பேரில் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கொள்கிறேன். இப்படி எனக்கு பல மாநாடுகளிலிருந்து நிர்மாணங்கள் வந்தன. இந்த மாநாட்டுத் நிர்மாணங்களை நான் நினைவூட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அற நிலையம் பல்வேறு துறைகளில் சிறந்த காரியங்களைச் செய் தாலும் கூட, நிதி நிலைமை வர வர புதிய சட்டங்களால் பாதிக்கப்பட்டிருக் கிறது. பல கோயில்கள் பற்றாக்குறையில் ஓடுகின்றன. பிரசார்த்தனை ஸ்தலங் களாக இருப்பனவற்றைத் தவிர, பல கோயில்கள் பற்றாக்குறையில் இருக் கின்றன. இதற்கு புதிய சட்டங்கள் ஒரு காரணம். இன்னும் பல்வேறு காரணங்கள். இவைகளையெல்லாம் அரசு கவனத்தில் வைத்துக்கொண்டு கோயில்களின் வருவாயை எப்படிப் பெருக்குவது என்பதற்கு தனியே ஒரு துறையை அமைத்து, மாவட்ட அளவில் உதவி ஆணையாளர் போன்றவர்களை நியமித்து, திட்டங்கள் தீட்டி, வருவாயைப் பெருக்குவதற்குரிய வழி வகை களைச் செய்ய வேண்டும் என்பதையும் நினைவூட்ட ஆசைப்படுகிறேன். ஆயிரக் கணக்காக அல்ல, கோடிக்கணக்கான இந்துக்கள் இன்றைக்கு அறுதைகளாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஒரு முயற்சி செய்ய லாம். இல்லாவிட்டால் கோயில், மதம் போன்றவைகள் மீது அவர்களுக்கிருக் கிற நம்பிக்கை தளர்ந்தாலும் தளரலாம். மத மாற்றத்திற்கு ஆளாகலாம். எனவே, இந்தப் பொது அமைப்பில் வருவாயைப் பெருக்குவதற்கு நிரம்ப ஏற் பாடுகளைச் செய்யவேண்டும். இடையில் வந்த சில சட்டங்களில் குத்தகை குறை வாக இருந்தால், கூட்ட முடியாதபடி இருக்கிறது. நியாயக் குறைவான குத்த கையாக இருக்குமானால், கூட்டுவதற்கு உரிமை இருக்கவேண்டும். கூட்டுவதுத் துறையில் இருப்பது போல அற நிலையங்களுக்குக் கிடைக்கக்கூடிய வரு வாயைக் கொடுக்கத் தவறினால், நேரடியாகவே ஜப்தி போன்றவைகள் செய் வதற்கு அதிகாரம் பெற்ற உதவி ஆணையாளர்களை நியமிக்கலாம் என்ற பிரச் னையைப் பரிசீலனை செய்தது. இந்த வகையிலும் பரிசீலனை செய்ய வேண்டு மென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அற நிலையத்தினுடைய துறையில் பொறுப்பேற்றிருக்கிற பாராட்டுதலுக்குரிய நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள் பல்வேறு துறைகளிலே புதுமைகளைப் புகுத்தி நன்றாகச் செய்திருக்கிறார்கள், சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். கோயில் களிலேயெல்லாம் செடி, கொடிகள் முளைப்பதை அவர்கள் கண்காணித்து என் னவைகள் முளைத்திருக்கின்றன என்று கேட்கிறார்கள். அந்த அளவிற்கு

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1978 மார்ச் 28

பொறுப்புள்ள ஒரு அமைச்சர், இதனை இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல் என்ற நியதியில் செய்த நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்தத் துறையில் நிகழ்பவைகள் எல்லாம் ஒழுங்காக நிகழவேண்டும். மதிப்பிற்குரிய திரு. சா. கணேசன் கூறியது போல, தங்கம், வெள்ளி போன்ற நிறைய பணம் முதலீடு செய்து பின்னாலே திருடுபோகிறது என்று கவலைப்படுவதை விட, கோயில்களைப் பாதுகாப்பதிலும், குடிமக்களைப் பாதுகாப்பதிலும் அதிகப் பணத்தைச் செலவழிப்பது நல்லது. ஒரு கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ளவர்கள், இந்துக்களாக இருப்பவர்கள், அனுதைகள் என்று இல்லாமல், அவர்களை இத்தக் கோயிலே சேர்ந்து இணைந்து வாழ்விக்கின்ற பொறுப்பை கோயில்கள் ஏற்றுக்கொள்கிற காலம் இந்த சமூகத்திற்கு ஒரு நல்ல பாராட்டக் கூடிய புகழ் மிக்க காலம். இதை இந்தத் தலைமுறையில் இந்த அரசு செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு, பிற வகையிலும் சிறப்புடையதாக இருக்கிற இந்த உரையை வரவேற்று மகிழ்ந்து முடிக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஆலய அறத் துறை நிதிகளிலிருந்து சமூதாய நலப் பணிகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருப்பதையும், மக்களுடைய நன்மைக்கான காரியங்கள் ஆற்றுவதையும் வரவேற்றார்கள். மக்களுக்கு வேண்டிய வசதிகளை அரசு ஆற்ற வேண்டியது மிக முக்கியமான காரியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இந்தக் காரியங்களை எந்தப் பணத்தின் அடிப்படையில் செய்வது என்பதில் சில கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கை. மக்களுக்குக் கல்லூரிகள் கட்ட வேண்டியது, பள்ளிக் கூடங்களை அமைக்க வேண்டியது, கண்ணொளி வழங்குகிற நிட்டம், குருடர், செவிடர்களுக்குப் பள்ளிகள், அனுதைச் சிறுவர்களுக்கு பள்ளிகள் அமைப்பது —எல்லாம் செய்யவேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்பது யாரும் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம். ஆனால் அதே சமயத்தில் கோயில் அற நிலையத் நிதியிலிருந்து, வருமானத்திலிருந்து செலவு செய்வதில், அரசுக்கு எவ்வளவு தூரம் உதவ வேண்டுமென்பதற்கு உடன்பாடு இருக்க வேண்டும். எவ்வளவு சதவீதம் இருக்க வேண்டியது என்பது மிக முக்கியமான காரியம். நம்முடைய சோவியட் முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு சமுதாய நலப் பணிகளுக்கு கோயில்கள், அற நிலையங்களுடைய பணம் மிக அதிகமான அளவிலே ஒதுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அதிக அளவிலே ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிற நேரத்தில், நாள்பெல்லாம் டிரஸ்டிகளுடைய அனுமதி பெற்று

1978 மார்ச் 28] [திரு. ஜி. சுவாமிநாதன்]

வாங்கக்கூடிய பணங்களுக்குக்கூட இந்த சமயத்திலே சமிஷனரே ஒரு சதவீதம் கொடுக்கக் கூடிய நிலைமையும், இனிமேல் இந்த மாதிரி 50 சதவீதம் கூட அளிக்கலாம் என்று ஆலோசனை இருக்கிறது என்றும் நினைக்கிறேன். இப்படிப் பணம் ஒதுக்கவேண்டும் என்று சொல்கிறபோது, இந்தப் பணத்தை கோயில் களுடைய செலவுக்கே செலுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை. இதைத் தான் அடிகளார் அவர்களும் திரு. சா. கணேசன் அவர்களும் இந்தச் சமயத்தில் எடுத்துக் காட்டினார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான கோயில்களில் மிக முக்கியமானவை பாரம்பரியமும், அழகும் மிக்க சிறந்த பல கோயில்கள் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன என்பதையும், அப்படிப் பழுதுபட்ட கோயில்களை இன்னும் சில ஆண்டுகள் நாம் கவனிக்காது விட்டோமானால், அவை பழுதுபட்ட நிலைமையிலே அல்ல, இடிந்து விடும் என்ற நிலைமை நாம் அறிந்த ஒன்றாகும். ஆகவே, இந்தத் துறையில் வரக்கூடிய பணத்தை, உபரிப் பணத்தைச் சமுதாயப் பணிகளுக்குச் செலவு செய்கிறோம் என்று அடிக்கடி சொல்கிறபோது, அந்த உபரிப் பணத்தைப் பொறுத்து என்ன கணக்கு அரசாங்கம் வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். 15 ஆயிரம், லட்சம் என்று வருமானம் வரக்கூடிய கோயில்களில் சிலவற்றை எடுத்து, அந்தக் கோயில்களின் உபரிப் பணத்தைச் சமுதாயப் பணிகளுக்குச் செலவிடுகிறோம் என்று சொல்வதைவிட தமிழ் நாட்டில் இருக்கிற கோயில்களில் 70,80 சத வீதக் கோயில்கள் ஆயிரம் ரூபாய்களுக்குள்ளாக வருமானம் வரக்கூடியவை என்று பார்க்கிறபோது, அவசியமாக எல்லாக் கோயில்களுக்கும் செலவு செய்யக்கூடிய வகையில் எவ்வளவு ரூபாய் தேவைப்படும் என்று கணக்குப் பார்த்து, அதற்கு மேலாக வருகிற உபரியை சமுதாய நலப் பணிகளுக்குச் செலவு செய்கிறோம் என்று சொன்னால், அது சிறந்த கருத்தாக இருக்குமேயொழிய, பழைய கோயில்களையும், திருச்செந்தூர், திருத்தணி போன்ற வருமானம் வரக்கூடிய 4, 5 கோயில்களை எடுத்துக்கொண்டு இப்படி 50 சதவீதம் செலவு செய்கிறேன் என்று சொல் வதை நான் சரியான கருத்தாகக் கருதவில்லை. அதிலும் முக்கியமாகச் சொல் வேன். ராமசாமி அய்யர் அவர்கள் கமிஷன் வந்து 12 ஆண்டுகளிலே 90 கோயில்களை குறிப்பிட்டு இந்தக் கோவில்களுக்கு உடனடியாகத் திருப் பணிகளை நடத்த வேண்டுமென்று அரசுக்கு அறிவித்தார்கள். அந்த 90 பணிகளை நடத்த வேண்டுமென்று அரசுக்கு அறிவித்தார்கள். அந்த 90 கோவில்களில், எனக்கு தெரிந்த வரையில், ஒரு கோவிலுக்குக்கூட இதுவரையில் செய்யவில்லை என்பதாக என்னுடைய நண்பர்கள் பலர் தெரிவித் திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பாடல் பெற்ற கோவில்கள் என்று தமிழ் நாட்டில் 200 கோவில்கள் இருக்கின்றன. இதிலே 30, 40 கோவில்கள்

6·20 பி.ப.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 26

மிக இடிந்து, அழிந்து, பூசை நடக்க முடியாத நிலைமையில் இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கின்றன. திருநாவலூர் என்ற ஊர், சுந்தரர் பிறந்த ஊராகும். அந்த ஊரில் இருக்கக்கூடிய கோவில் உடனடியாகத் திருப்பணி செய்யப்படவும், பூஜை செய்யப்படவும், முடியாத நிலைமையில் இருக்கக்கூடிய ஒன்றாகும். அதேபோல திருப்பாச்சூர் என்ற திருவள் ளூருக்குப் பக்கத்தில் இருக்கிற கோவில் பாடல்பெற்ற கோவில். இன்றையதினம் அதுவும் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையில் இருக் கிறது. திருப்பணி செய்ய வேண்டுமென்று 10 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே மூயற்சி எடுத்தும், போதுமான பணம் இல்லாத காரணத்தினால், செய்ய முடி யாத துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. பாடல் பெற்ற ஸ்தலங்களிலேயும் முதன் முதலில் . . .

திரு. டி. கே. பொன்னுவேலு: திருப்பாச்சூர் கோவிலுக்குத் திருப்பணி நல்ல முறையிலே நடைபெற்று திருவிழாவும் நடத்தகொண்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு எப்படி இப்படிப்பட்ட தகவல் கிடைத்தது என்பது தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: திருப்பாச்சூர் கோவிலுக்குத் திருப்பணி செய் வதற்காக ஆரம்பித்த பணி 10 ஆண்டு காலமாகியும் முடியவில்லை என்று அறி கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: திருப்பாச்சூர்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அந்தத் திருப்பணி 10 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட பணி, அது இன்னும் முடிவு பெறாத நன்மையில் இருக்கிறது. 10 ஆண்டுக் காலமாகியும் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. இந்தக் கோவிலைத் திருத்தணிக் கோவிலோடு இணைத்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கோவிலுக்குத் திருப்பணி இன்னும் ஆரம்பிக்கப்படாது உள்ளது.

திரு. டி. கே. பொன்னுவேலு: திருவள்ளூர் திருப்பாச்சூரில் திருப்பணி நடை பெற்றிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் தவறாகக் கூறியிருக்கிறார்கள். திரு விழாவும் நடைபெறுகிறது. அது மட்டுமல்ல, முறையாக நடைபெறுகிறது. சித்திரை மாதத்திலும், தை மாதத்திலும் திருவிழா நடைபெறுகிறது. இன்றைக்கு முறைப்படி ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது. என்னுடைய சொந்தக் கிராமம், நான் நேரிலே அறிந்தவன் என்ற முறையிலே நான் இந்த அவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973 மார்ச் 26]

திரு. சி. வி. ராஜகோபால்: நண்பர் திரு. சுவாமிநாதன் சொல்கிற திருப் பாச்சூர் வேறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் பொன்னு வேலு அவர்கள் திருவிழாவிற்கும், திருப்பணிகளுக்கும் வேறுபாடு தெரியாமல் சொல்கிறார்கள். திருவிழாவை ரிப்பேர் என்று சொல்கிறாரா என்றேன். அது இல்லை யென்று சொல்லிவிட்டார்.

திரு. டி. கே. பொன்னுவேலு: கோவில் ரிப்பேர் செய்ய வேண்டிய அளவில் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்தக் கோவிலுக்கு 10 ஆண்டுகளுக்கு முன் னாலேயே திருப்பணி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்கு மேல் அந்தத் திருப்பணி நடைபெறாமல் இருக்கக்கூடியதைத் தான் நான் குறிப்பிட்டேன். அதைப் போன்று தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் 30, 40 கோவில்கள், பூஜை இல்லாத நிலைமையில் இருக் கின்றன. வடலூரில் உள்ள ராமலிங்க அடிகள் கோவில் இன்றையதினம் உள்ளே என்க்ரோச்மென்ட் செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளது. திரு. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு திருப்பணி செய்யக்கூடிய நிலைமை அந்த இடத்திலே இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

ஆகவே, இந்த அறத்துறையின் சார்பாக 6 லட்ச ரூபாய் திருப்பணிகளுக் காகக் கொடுக்கிறோம் என்கிறார்கள். முதலில் 3 லட்ச ரூபாய் கொடுத்தார்கள். நாங்கள் தான் 6 லட்ச ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது மிகவும் குறைவான தொகை. தமிழ் நாட்டில் உள்ள கோவில்களிலுள்ள உபரிப் பணத்தை வைத்துக்கொண்டு இந்தக் கோவில்களின் திருப்பணி வேலைகளைச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லுவேன். அடிகளார் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி திருப்பணிக்காக பணம் வேண்டுமானால், அதற்காகத் தனியாக ஒரு பரிசுச் சீட்டுக்கூடப் போடலாம், திருப்பணிப் பரிசுச் சீட்டு என்பதாக அதற்குப் பெயர் வைத்து, ஒவ்வொரு சீட்டும் ஒரு ரூபாய் சீட்டு என்று பரிசுச் சீட்டு போட்டு விடுவோமானால், பரிசு விழுந்தா லும், விழாவிட்டாலும் தமிழ் நாட்டிலுள்ள பக்தர்கள் பலர் திருப்பணிக்கு என்னுடைய உபயமாகக் கொடுத்தேன் என்ற நிலைமையிலே பல லட்சக்

[திரு. ஜி. சுவாமிநாதன்]

இருக்கிறது. அரசாங்கத் துறையிலிருந்து அல்லது அறத் துறையிலிருந்து அது போன்ற கோவில்களுக்கு இரவில் காவலர்கள்கூட இல்லாத நிலைமை இருக்கிறது. அதற்கு வேண்டிய காவலர்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல கவனிப்பாரற்று இருக்கக் கூடிய சிலைகளை, முக்கிய மான சிலைகளை எடுத்து பெரிய கோவில்களில் வைப்பதற்கும் உரிய ஏற்பாடு களைச் செய்யவேண்டும். கோயில்களில் இன்றைக்கும் ஆல்பம் என்ற அளவிலே சிலைகளைப்படம் பிடித்து அதனுடைய விலையை அதன் மேலே எழுத வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் பல கோவில்களில் ஆல்பம் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது. அது மட்டு மல்ல. சிலையினுடைய விலையை எழுதுகிறபோது, வெங்கலத்தால் ஆன ஒரு சிலையின் விலை 40 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், அந்தச் சிலை 4 லட்ச ரூபாய் மதிப்புள்ள சோழர் காலத்துச் சிலை யாகக் கூட இருக்கும். கோவில்களிலே இருப்பவர்களுக்கு அந்தச் சிலையின் விலை தெரியாத காரணத்தினால், எவ்வளவு ரூபாய் போடுவது என்பதைப் பற்றிக் கவலைப்படாத நிலைமை இருக்கிறது. அதை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும். அண்மையில் இது சம்பந்தமாக நான் கேள்வி கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்குத் தனியாகப் போலீஸ் படை போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தனிப் போலீஸ் படை என்று சொன்னால், ஒரு சூப்பிரின்டெண்ட், அதற்கு அதிகாரிகள் எல்லோரும் போட்டு ஒரு 10 பேரைக் கொண்ட படையாக அமைத்திருக்கிறார்கள். அதற்குக் கான்ஸ்டபிள்கள் என்ற போலீஸ்காரர்கள் போடப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறபோது, பத்து பேரைக் கொண்ட இந்தப் படை இன்றைக்குத் திருட் டுகளை நிறுத்தக் கூடிய நிலைமையில் இருக்காது. அது ஒரு பெரிய படையாக தமிழகத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதை இந்தச் சமயத்திலே தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆலய சிப்பந்திகளுடைய, ஊழியர்களுடைய ஊதியத்தைப்பற்றிப் பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் உடனடியாக அமைச் சரவர்கள் நல்ல முறையிலே அந்தப் பிரச்சினையைத் தீர்த்து, நாங்கள் அதைப் பற்றிப் பேசுவதற்கு இடம் கொடுக்காமல் செய்து விட்டார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சிப்பந்திகளுடைய நடைமுறையைப்பற்றி ஒன்று சொல்வேன். இந்த ஆலய சிப்பந்திகள் யாருக்கும் கட்டுப்படாத ஒரு நிலைமையில் இருக்கிறார்கள். இதை நான் அமைச்சரவர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். ஈ.ஓ.-க்கள்

[திரு. ஜி. சுவாமிநாதன்]

வருகிறார்கள். போகிறார்கள். இந்த சிப்பந்திகள் இக்கோயே இருப்பதனாலே யாரைப்பற்றியும் அவர்கள் கவலைப்படாத நிலைமை இருக்கிறது. அந்தச் சிப்பந்திகளை இனிமேல் 'புரோவின்ஷியலைஸ்' செய்து, அப்படிச் செய்ய முடியாவிட்டாலும் மாவட்ட அளவிலேயாவது செய்து, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகிற நிலைமைகள் ஏற்படச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோவில்களுடைய ஊழியர்களைப்பற்றிச் சொன்னார்கள். அந்தந்தக் கோவில்களின் அறங் காவலர்களே தான் இவர்களை நியமிக்கிறார்கள். அப்படி அந்தக் கோவில் ஊழியர்களை நியமிக்கிற காரணத்தினால், வேறு கோவில்களுக்கு மாற்றுவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. முதலிலே இந்தச் சம்பள உயர்வு கொடுக்கிற நேரத்திலே, அதைப்பற்றிக் கூட யோசனை செய்யப்பட்டது. ஆனால் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் அதற்காக நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். சரியாக நடக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் சொல்லுகின்றபோது, ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பதென்றால், அது சாதாரண காரியமல்லவென்பதைப் பார்க்கிறோம். பாரோ ஒருவர் சொன்னார், It is easier to diverce a wife than send away an. employee இந்தக் காலத்தில் மனைவியை விவாக ரத்து செய்வது மிகவும் சுலபம். ஆனால் வேலை செய்பவர்களை விலக்குவதென்பது மிகவும் கஷ்டமான காரியம். அந்த நிலைமையில்தான் பல கோவில்கள் இருக்கின்றன. அதற்கு ஒரு வழி முறையைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 6-30 பி. ப.

தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் பொறுத்த வரையில், ஒரு குறை பாட்டைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில், சோழர் காலத்து 'பெயின்டிங்ஸ்' என்று சொல்லக்கூடிய சித்திரங்கள் இருக் கின்றன. சித்திரங்களைத் தனியாகச் சென்று பார்க்கக்கூடிய வழி முறைகளை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் 'ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்டின்' கீழ் அது இயங்கிக்கொண்டிருக்கிறது. யாராவது சென்று சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அங்குள்ள நம்முடைய மாநில அதிகாரி களிடம் அனுமதி பெற வேண்டும். வெளி நாட்டிலிருந்து வருபவர்கள், கோவிலுக்குச் சென்று சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்று கூறினால்,

[1973 மார்ச் 26

[திரு. ஜி. சுவாமிநாதன்]

அதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். தனியாக வெளியிலிருந்து செல்லக் கூடிய வழி இருந்தாலும், சித்திரங்களைக் காண்பதற்கு அனுமதியில்லாத நிலை இருக்கிறது. அந்தச் சித்திரத்தைக் கண்டுபிடித்தவரே வந்து பார்க்க வேண்டு மென்று சொல்கிற நேரத்தில், அவரையே அனுமதிக்காத நிலை இருக்கிறது. மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் முன்பு ஏதோ தகராறு இருந்தி, அது தற்போது தீர்ந்து விட்டதென்று கருதுகிறேன். எனவே மாநில அரசு அதற்குரிய வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக ஒரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'திருக்கோயில்' என்ற இதழ் பற்றிச் சொன்னார்கள். அந்த இதழ் 5,000 சந்தாதாரர்களுக்குப் போகிறதென்று சொன்னார்கள். சந்தாதாரர்களை அதிகப் படுத்த விரைவான காரியங்களைச் செய்வதுமட்டுமல்லாமல், அதை ஆங்கிலத்திலும் போட்டு பிரதிகளை அச்சடித்து வெளி நாடுகளுக்கு அனுப்ப வழி முறைகளைச் செய்ய வேண்டும். இப்போதும் போய்க்கொண்டிருக்கிறது. தமிழில் அனுப்புவதை விட, ஆங்கிலத்தில் அனுப்பினால், அது நல்ல முறையில் பயன்படுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர் களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, திருக் கோவில்களில் கேண்டின்கள் வைத்திருக்கிறார்கள். பழனியில் ஒரு கேண்டின் இருக்கிறது, திருச்செந்தூரில் ஒரு கேண்டின் இருக்கிறது. அந்த கேண்டின்களை தனிப்பட்டவர்களுக்கு 'பிரைவேட்' கொடுத்திருக்கிறார்கள். அவை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அதை மாற்ற வேண்டு மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கோவில்களுக்கெல்லாம் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். திருத் தணி, திருச்செந்தூர், மதுரை ஆகிய ஊர்களில் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். தனியாக 'அம்பாசிடர்' கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. கோவில்களில் உள்ள அதிகாரிகளுக்கு கார் எனென்று தெரியவில்லை. அந்தக் கார்கள் காரணமாகப் பல புகார்கள் வருகின்றன. கோவில்களில் ஜீப்புகள் வைத்துக்கொள்ளலாம் அல்லது வேன்கள் வைத்துக்கொள்ளலாம். அவர்களுக்குக் கார் தேவை யில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்செந்தூர் கோவிலைப் பொறுத்த வரையில், 3½ லட்சம் ரூபாயை கடல் அரிப்பைத் தடுக்கும் நட வடிக்கைக்காகக் கொடுத்துள்ளார்கள். முன்னர் 12 லட்சம், 13 லட்சத்திற்குத் திட்டம் போட்டு, இப்போது 3½ லட்சம் ரூபாயளவுக்கு வந்திருக்கிறது. திருச்செந்தூருக்கு நான் அண்மையில் சென்றிருந்தபோது, ஒரு பெரிய

1973 மார்ச் 26]

[திரு. ஜி. சுவாமிநாதன்]

விஷயத்தைக் கவனித்தேன். அங்கே ஒரிரண்டு யானைகளை வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக யானைகள் தங்குவதற்கு மணல் தரை வேண்டும். ஆனால் அங்கே இருக்கிற சிமெண்ட் தரையில் படுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த யானையின் தோல் உரிந்து, புண்ணுகப் பல ஆண்டுகளாக இருக்கிறதென்று சொன்னார்கள். அதற்குச் சரியான இடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மடாதி பதிகளைப் பொறுத்த மட்டில், திரு. சி. பி. ராமசாமி ஐயர் கமிஷனில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மடாதிபதிகள், அவர்களுடைய ஜூனியர் மடாதி பதிகளை, தங்களுக்கு அடுத்தபடியாக வரக்கூடிய வாரிசுகள் யார் என்பதை முன்னாலேயே நிர்ணயித்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். பல திரு மடங்களில் அதுமாதிரி நியமித்தும் வருகிறார்கள். ஆனால் அப்படிச் செய்ய சில மடங்களில் தயங்குகிறார்கள். வாரிசுகளை நியமித்தால், மேலே இருக்கும் பெரியவருக்கு ஆபத்து ஏற்படுமென்று நினைக்கிறார்கள். இப்போதெல்லாம் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லையென்பதை உணர்ந்து, வாரிசுகளை நியமிப் பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாராவது இறந்து போனால், அவருக்குப் பின்னால் யார் வருவதென்ற சர்ச்சை ஏற்பட்டு, மாண்பு மிகு உறுப்பினர்கள் போய் அதைத் தீர்க்க வேண்டிய நிலை உள்ளது. எனவே இதற்கு உடனடியாகத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக திருமடங்களுக்கு மடாதிபதிகளாக வருகின்றவர்களுக்கு 'குவாலிபிகேஷன்' ஏதாவது அடிப்படைத் தகுதி நிர்ணயிக்கப்பட வேண்டு மென்று திரு. சி. பி. ராமசாமி ஐயர் கமிஷனில் சொன்னார்கள். ஏதாவது ஒரு அடிப்படைத் தகுதியை நிர்ணயித்து, அவர்கள்தான் வரவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால், வரக்கூடிய மடாதிபதிகள் தகுதியுள்ளவர்களாக இருப் பார்களென்று தெரிவித்துக்கொள்கிறேன். இவர்தான் வருவார் என்று தெரியாத காரணத்தினாலே, அவரையே விரட்டும் நிலை இருக்கிறது. அவர் வந்த பிறகு, அவர் தன்னை விரட்டியவர்களைக் கண்டிக்கும் நிலை இருக்கிறது. இவைகளெல்லாம் நீக்கப்பட வேண்டுமென்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. அப்பணன் அம்பலம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த அறநிலையத் துறையின் கொள்கை விளக்க அறிக்கையினை, மாண்புமிகு

[1973 மார்ச் 26

[திரு. அப்பணன் அம்பலம்]

அமைச்சரவர்கள் இத்தனை ஆண்டுகளாக இல்லாமல், புதுமையான முறையில், முதன் முறையாக இந்த மேலவையில் விவாதிப்பதற்காக சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நாங்கள் எல்லாம் இந்தத் துறைபற்றிப் பேச வேண்டும், அறநிலையச் சிப்பந்திகள் சம்பந்தமாக மாநாடுகள் நடத்த வேண்டும், இங்கே வந்து நாங்கள் பேசி அந்தக் கோரிக்கையை அமைச்சர்களிடத்தில் சொல்லி, வாங்கிக் கொடுத்தோம் என்ற பெயர் இல்லாமல், அந்தப் பெயரை அமைச்சரவர்களே எடுத்துச் சென்று விட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில், 3 கோடி ரூபாயாக இருந்த வருமானத்தை 7 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பின்னர் எந்த அளவுக்கு இந்த அறநிலையத் துறை, பதுங்கியிருந்த பணத்தை வெளியே கொண்டுவந்து, அதைப் பொதுக் காரியத்திற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று அக்கறையோடு இருக்கிறது என்பதற்காகப் பாராட்டுகிறேன். அதிலேயும் இந்த அரசு வந்ததற்குப் பின்னுலேதான், சிறிய கோவில்கள் அனைத்திலும் திருப்பணி வேலைகள் நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பல கோவில்களில் உபரியாக உள்ள நிதிகளையெல்லாம் மற்றக் கோவில்களுக்கு பரிவர்த்தனை செய்து, திருப்பணிகளை முடிப்பதில் அரசாங்கமும், நமது அமைச்சரவர்களும் வெகு அக்கறையாக இருக்கிறார்கள். எனவே இதைப் பார்த்து என்னைப் போன்றவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் ஒரு கோவிலில் நடக்கும் திருப்பணிக் குழுவின் தலைவன் என்ற முறையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் கோவிலுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருந்தது. மேலும் பூசைகூட சரியாக நடக்காமல் இருந்தது. அப்படி இருக்கும்போது, நமது அமைச்சரவர்களிடம் சென்று, அந்தக் கோவிலில் நல்ல முறையில் திருப்பணி நடக்க வேண்டும், திருவிழாக்கள், பூசைகள் நடக்க வேண்டுமென்று சொன்னவுடன், பக்கத்திலுள்ள கோவிலுடன் இணைத்து, நின்றுபோன பணியைச் சிறப்பாக நடத்த உதவினார்கள். குறிப்பாக மதுரை மாவட்டத்தில், மற்றும் தென் மாவட்டங்களில், ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பேசுகிற அளவுக்கு ஒரு பெரிய, சிறப்பு மிக்க திருவிழா கள்ளழகர் கோவிலில் நடக்கிறது. அந்தத் திருவிழாவைப் பொறுத்த வரையில், அதில் சிறப்பான நல்ல அம்சங்கள் இருந்தாலும்,

1973 மார்ச் 26]

[திரு. அப்பணன் அம்பலம்]

இதற்கு முன்னுலுள்ள 'நூபுரகங்கை' என்ற தீர்த்தம் ஒரு சுனையிலிருந்து வருகிறது. எல்லா விவசாய மக்களும், மற்றவர்களும் எந்தக் காரியம் செய்தாலும், அந்தத் தீர்த்தத்தில் நல்ல காரியங்களைச் செய்யும் பழக்கம் இருக்கிறது. இந்தப் பழக்கம் அந்தத் தென் மாவட்டங்கள் முன்றிலும் இருக்கிறது. அங்கு செல்ல வேண்டுமென்றால், காட்டில் போக வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பாதையில் கொள்ளைகள் கூட நடந்துகொண்டிருந்தன; இப்போது அமைச்சரவர்கள் 5 லட்சம் ரூபாய் செலவில் அந்தப் பாதையைச் செப்பனிடவும், மற்ற சௌகரியங்களைச் செய்யவும் ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அந்தக் கோவிலின் சார்பில் ஆரம்பப் பள்ளி ஒன்று நெற்பாக நடந்து வருகிறது. பக்கத்தில் 10 மைல் சுற்றளவுக்கு உயர்நிலைப் பள்ளி எதுவும் இல்லாத காரணத்தினால், அழகர் கோவில் நிதியிலிருந்து ஒரு உயர்நிலைப் பள்ளியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எல்லாவிதமான வாய்ப்பும், வசதியும் இருக்கிற காரணத்தால், ஒரு உயர்நிலைப் பள்ளியை அங்கே நடத்த வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது தவத்திரு அடிகளார் அவர்கள் கூட சொன்னார்கள். திருநெல்வேலியில், நெல்லையப்பர் கோவிலுக்கு ஒரு அறங்காவலர் வந்ததற்குப் பின்னால், அங்கே பழைய சம்பிரதாயங்கள் எல்லாம் மாற்றப்பட்டு புதுமையாக கொண்டுவரப்படுகிறது. அங்கே இப்போது சட்டை போடாமல்தான் செல்ல வேண்டுமென்ற வழக்கத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். மதுரையில் 16 லட்சம் ரூபாய் செலவு செய்து வைரக் கிரீடமும், தங்கக் கலசமும் திருப்பணிக் கமிட்டியார், இந்த அரசு வந்தவுடன் செய்திருக்கிறார்கள். என்னுடைய நண்பர் ஒருவர், வெளி ஊரிலிருந்து வந்து அந்த வைரக் கிரீடத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆலயத்திற்குச் சென்றார். அங்கு செல்லும்போது சட்டையைக் கழற்றிவிட்டுத்தான் உள்ளே போகவேண்டும் என்று சொன்னவுடன், அவர் எவ்வளவு ஆர்வமாக வந்தாரோ அந்த ஆர்வம் குறைந்து விட்டது. ஏன் இதை நான் சொல்லுகின்றேன்? உண்மையாகவே அவர் பக்திமான்தான். இந்து மதத்தைச் சேர்ந்தவர்தான். எந்தவிதமான குறையும் இல்லாவிட்டாலும்கூட, சட்டையைக் கழற்றுவதில் அவர்களுக்கு ஏதோ அருவருப்பு வந்து விட்டது. ஆகவே அவர் இன்னொரு முறை வருகின்றபோது பார்த்துக்கொள்கின்றேன் என்று சொல்லிச் சென்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட முறையை அழகர் கோயில், மற்ற கோயில்களில் எல்லாம் கூடப் புகுத்தி விட்டார்கள். நான் நாஸ்திகன் அல்லன். நான் உண்மையான ஆஸ்திகன் என்ற முறையில் கூட சொல்லுகின்றேன். இது தமிழ் நாட்டிலே இல்லாத புதிய சம்பிரதாயம்.

6·40 பி.ப.

[1973 மார்ச் 26

[திரு. அப்பணன் அம்பலம்]

இந்த சம்பிரதாயத்தைப் புகுத்துவதால் ஏதாவது பற்றி வந்துவிடுமென்ற என்ற்ல், அதுதான் இல்லை. அவசியமானவர்கள் சட்டையைக் கழற்றிவிட்டு ஆலயத்திற்குள்ளே செல்ல வேண்டுமென்று சொல்லலாமே தவிர, எல்லோரையும் கண்டிப்பாக அப்படிச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. இதை நான் நடைமுறைப்படுத்துவதைப் பார்த்த காரணத்தால் நான், நான் அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, நமது ஆணையாளர் அவர்களே நான் இங்கே பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தத் திருப்பணியிலே நாங்கள் கேட்கும்போதெல்லாம், அதற்கு வேண்டியவைகளை, நல்ல வழிவகைகளைச் செய்து தந்திருக்கிறார்கள். அதுவும் புரட்சிகரமான தன்மையிலே வேலைகளைச் செய்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவர்களைப் பொறுத்த வரையில், எந்த ஆலயத்திற்குச் சென்றாலும், இதற்கு முன்னால் இருந்த ஆணையாளர்கள் அந்தப் பக்கத்தில் இருக்கின்ற ஏதாவது ஒரு கோயிலுக்கு வருகின்றார் என்ற்ல், அங்கே ஆடம்பரமான பெரிய வரவேற்பு அவர்களுக்கு இருக்கும், ஆலயப்பணச் செலவுகள் அதிகமாக ஆகிவிடும். ஆனால் இப்போது இருக்கும் இந்த ஆணையாளர் எந்தக் கோயிலுக்கு வந்தாலும் அவர் வருவதோ போவதோ தெரியாத அளவுக்கும், எந்த ஆடம்பரச் செலவும் இல்லாமல், பரிவட்டங்கள், எந்தக் கோயில் மரியாதையையும் எதிர்பார்க்காமல் எளிய முறையில் அங்கே வந்து போகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன். அவர் அந்த நிலைமைக்கு மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, அழகர் கோயில் பக்கத்தில் பழமுதிர்சோலை என்று ஆறு படை வீடுகளில் ஒன்றாக இந்து சான்றாப்படி ஒரு சிறப்பான கோயில் அங்கே இருக்கின்றது. அங்கே கோயிலில் திருவிழாக்கள் நடக்கின்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அங்கே நமது தமிழ் அய்யா வி. கே. ஆர். அவர்கள் புதிதாக ஒரு கோயில் கட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அங்கேயுள்ள சில மதச் சம்பிரதாயங்கள் காரணமாக அந்த விவகாரம் ஐகோர்ட்டு வரை வந்து, அந்தக் கோயில் நடத்தக்கூடாது என்ற உத்தரவிருக்கிறது. இது அங்கே உண்டான வைஷ்ணவ-சைவச் சண்டை காரணமாக ஏற்பட்ட ஐகோர்ட் தடை உத்தரவு. அந்தப் பழமுதிர் சோலை என்னும் கோயில் அடிச் சுவடே இல்லாமல் இருப்பதால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் மறுபரிசீலனை செய்து அந்தக் கோயிலைக் கட்டித் தர வேண்டும். அங்கு காட்டு நிலம், வனம் இருக்கின்றது. அதற்காக தமிழ் அய்யா

1973 மார்ச் 26] [திரு. அப்பணன் அம்பலம்]

அய்யா அவர்கள் உடனே ஒரு கமிட்டியையும் அமைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கான ஆலோசனைகளையும் உதவியையும் அரசாங்கம் வழங்கி பழமுதிர் சோலை என்ற கோயிலை நிர்வகித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய கோயிலான அழகர் கோயிலில் எல்லா விதமான நெற்பான விசேஷங்களும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக மாணிக்கவாசகர் பிறந்த இடத்தில் ஒரு கோயில் இருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு மாணிக்கவாசகரைப்பற்றித் தெரிந்த வெளிநாட்டினர் கூட வருகின்றார்கள். அந்த மாணிக்க வாசகர் பிறந்த ஊர்க் கோயில் சிறப்பில்லாமல் இருக்கின்றது. கோயிலுக்கு இவ்வளவு பெரிய சரித்திரம் இருக்கின்றது. அந்த மாணிக்க வாசகர் பிறந்த ஊர்க் கோயில் சிறப்பில்லாமல் இருக்கிறது என்பதை வெளி நாட்டவர்களும், நம் நாட்டிலுள்ளவர்களும் புரிந்துகொள்வார்கள். இது இப்போது மீனாட்சி தேவஸ்தானத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோயிலை இன்னும் நல்ல முறையில் நடைபெறச் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நிறைய நிலங்களின் பட்டா கோயில் பேரிலே இருந்தாலும்கூட, அவை தேவஸ்தானங்கள், ஆலயங்களுக்காகக் கைப்பற்றப்பட்டு அவைகளுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படாமல் இருக்கின்றன. பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன, அதற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்கென்று விசேஷமான அதிகாரிகளை நியமித்து அந்தச் சொத்துக்களையெல்லாம் அரசாங்கம் கைப்பற்றிக்கொள்ள வேண்டும். குறிப்பாக திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதிரி முஸ்லீம் மதத்தினரும், கிறிஸ்துவ மதத்தினரும் வைத்திருக்கும் மடங்களுக்கும் நிறைய சொத்துக்கள் இருக்கின்றன. அவைகளையும், எப்படி இந்து அற நிலைய போர்டு செயல்படுகின்றதோ, அந்த முறையில் கண்காணிக்க வேண்டும். இந்து சமுதாயத்தினருக்கு மட்டும்தான் இந்தச் சிக்கல்கள், இந்து ஆலயங்களுக்குத்தான் இந்த அரசாங்க சட்ட திட்டங்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு இருக்கின்றது. மற்ற மதங்களில் அரசு தலையிடவில்லை என்று அரசாங்கத்தைப்பற்றி பொதுமக்களிடையே பரவலான ஒரு எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. இதையும் நிவர்த்தித்து அந்த மத ஸ்தாபனங்களிலுள்ள சொத்துக்களையும் இந்த மாதிரி சட்ட மன்றங்களிலும் தேர்தலிலும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு அந்த இலாகா பயன்படவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

[1979 மார்ச் 16

*திரு. ஆர். சக்திமோகன் : தலைவரவர்களே, இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம் பற்றிய அறிக்கையை என்னுடைய கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன். பாராட்டுகின்றேன். இவ்வறிக்கையில் சூழ்ப் பிட்டுள்ள கொள்கைகளையும் செயல் முறை விளக்கங்களையும் பார்க்கின்றபோது, யாரோ ஒரு பழுத்த தெய்வ பக்தர், ஆஸ்திகப் பற்றுடைய ஒரு பெரியவர், கடவுள் பக்தியிலே எல்லோரையும் மிஞ்சக்கூடிய அளவுக்கு ஈடுபாடு கொண்ட ஒரு தமிழ் மகன், எல்லா மக்களிடையேயும் தெய்வ பக்தியைப் பரப்பி நாட்டையே ஒரு ஒழுக்கக்கோட்டையாக மாற்றும் ஒரு அழுத்தமான, விளம் பரமே இல்லாத ஒரு ஆன்மீக அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களாக மாறி கொண்டுவந்த கொள்கை விளக்கமாகவே நான் இதைக் கருதுகிறேன்.

அந்த அளவுக்கு 'தெய்வத்திற்காக, தெய்வீகத்திற்காக' தாமேதான் குத்த கைதாரர் என்று விளம்பரம் செய்து பிரபலப்படுத்திக்கொள்பவர்கூட செய்ய முடியாத பல நல்ல செயல்களுக்கெல்லாம் இதில் பட்டியல் தந்திருக்கின்றார்கள் அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள். இவ்வளவு அக்கறையோடு இறை பணியில் நாட்டம் கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் ரகசியமாக அல்லது மானசிகமாக இறைவனை மனதிலே கொண்டு வழிபாட்டு அவருடைய அருளையும் ஆசியையும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்களோ என்றுகூட எண்ணமிட வைக்கிறது. கடவுளை நம்பாது போனாலும் கடவுளை நம்புகின்ற மக்களை மதிப் பதால் நம்புவதால், ஆண்டவனுடைய அருளையும் ஆசியையும் இந்த அரசு பெற்றுக்கொண்டிருக்கின்றது என்று நம்புகின்றேன். இந்த அறிக்கையினை மனதாரப் பாராட்டும்போது ஒரு சில கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள எண்ணுகின்றேன். திருவதிகை திருக்கோயில் திருப் பணியை விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்து இலகவதியார், அப்பர், திருஞானசம்பந்தர் வாழ்ந்த இடங்களை அரசு எடுத்துப் புனித நினைவாலயங்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திருக்கோயில் நிர்வாகம், இந்து சமய சீர்திருத்தம் ஆகியவைபற்றி ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு குழு நியமிக்க வேண்டுமென்று விரும்பு கின்றேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றவில்லை. அது காலம் கடந்தாலும் தமிழை வளர்க்க, தமிழ்க் கலைகளை வளர்க்க தமிழிசை, நடனம், நாடகப் பயிற்சி, சித்த வைத்தியப் பயிற்சி ஆகியவைகளைப் பயிற்றுவிக்க பட்டம் பயிற்றுவிக்கக்கூடிய நிலையிலும் ஆய்வு செய்யும் நிலையிலும் பூம்புகார்ப் போலவைக் கல்லூரியைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும், வளர்க்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

[திரு. ஆர். சக்தி மோகன்]

1979 மார்ச் 16]

மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததின் நினைவாக தமிழ் ஆராய்ச்சி அலை கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். மதுரை தலஸ்தானத்திற்கு என்று ஒரு புலவர் குழு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கோயில்களுக்கு உரிமையான தேர்களை விற்கக்கூடாது என்று அறிவித்த முடிவை வரவேற்று நன்றி சொல்லிக் கொள்கின்றேன். எஞ்சியுள்ள எல்லாத் தேர்களையும் பழுது பார்த்து, தேர் கட்டத்தைத் தவறாமல் நடத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களின் இலவசத் திருமண ஏற்பாடு குறித்து நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். மதுரை மீனாட்சி திருக்கல்யாணத்தின்போது ஏழை எளியவர்களுக்கும் இலவசமாகத் திருமணம் செய்துவைக்கும் நிகழ்ச்சி யையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வசதி படையவர்கள், ஒப்புக் காலத்தில் அமைதியான அருளார்ந்த சூழ்நிலையில் தங்கி வரம், தவம் செய்ய ஒரு அமைதி நிலையம் நல்ல சூழ்நிலையில் பழமுதிர் சோலை யில் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்தபடியாக, அருட் பாவை புதுமைப்படுத்தி சிறுசிறு சுவடிகளாக வெளியிட்டால், இந்த நாட்டிலே கம்பூனில்களுக்கே இடமும் வேலையுமில்லாமல் போய்விடும் என்று கருதுகின் றேன். எனென்றால் திருவருட்பா முழுவதுமே உலகெலாம் வாழ்க என்ற பொதுவுடமைத் தத்துவத்தின் மூலபீடமாகும். 'உலகெல்லாம் வாழ்க' என் பதை அடிப்படையாகக் கொண்டு அந்த நூலினை ஆக்கியிருக்கின்றார் மகாத்மா ராமலிங்க சுவாமிகள். அருட்பாவின் ஒவ்வொரு வரியிலும் 'உலகை வாழவைக்க வேண்டும்' என்ற பொதுவுடமைத் தத்துவம் படர்ந்திருக்கிறது. நாம் அதைப் பாவலான முறையிலே பயன்படுத்தாமல் எதோ ஒரு வருடத்திற்கு ஒரு முறை அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை என்று பாடிவிட்டு, மடங்களிலே மூடி வைத்துவிடுவதால் பலனில்லை. பொதுவுடமைத் தத்துவத்திற்கு நாம் மிகமிகப் புதியவர்கள் என்ற ஒரு நிலை ஏற்பட்டதற்குக் காரணம் நாம் அருட் பாவை நாட்டில் பாவலாக உலவவிடாததேயாகும். திருவருட்பாவை நாடெங் கும் உலவவிடுவதே நாடு நாட்டில் தெளிவான பொதுவுடமைத் தத்துவத்தைப் பரப்ப சரியான வழியாகும். அதோடு நாட்டில் முரட்டுத்தனமான பலவந்தமான கம்யூனிசம் பரவுவதையும் தடுக்கும். மேலும் திருவருட்பாவை நம் நாட்டில் பரப்புவதன் மூலம் தெய்வீகமும் வளரும் என்று கருதுகின்றேன்.

அடுத்து, 'திருக்கோவில்' இதழ் இப்போது நல்ல முறையில் திங்கள் இதழாக வெளிவருகிறது. தெய்வீக ஒழுக்கநெறியைப் பரவுவதற்கு ஏதுவாக

[திரு. ஆர். சக்தி மோகன்]

[1973 மார்ச் 26]

6-50 பி.ப அது வாரப் பத்திரிக்கையாக வெளியிடப்படவேண்டும், அல்லது இப்போதைக்கு குறைந்த பட்சம் மாதம் இரு முறையாவது வெளியிட்டு அதன் மூலம் தெய்வீகமும் தெய்வப் பற்றும் நாட்டு மக்களிடையே பரப்ப வேண்டுமென்ற இத்தக் கோரிக்கையைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகக் கொள்கை விளக்கம்பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் மிகுந்த சுறுசுறுப்போடு பணியாற்றி மற்ற நிர்வாகத்தைப்போல் இதிலும் சில மறுமலர்ச்சித் திட்டங்களை உருவாக்கி யிருப்பது வரவேற்கத் தக்க காரியம் என்று அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்து அறநிலைய ஆணையாளர் அவர்கள் சிறந்த பக்திமான். 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு எங்களுடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்தவர். அவர் ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் பொதுவாக ஏதாவது ஒரு கையெழுத்து வாங்கவேண்டுமென்று போனால், பேனாவைக் கழட்டினால் பல்லி சத்தம் போட்டால் பேனாவை மூடிவிடுவார்கள். அந்த அளவுக்கு சிறந்த பக்திமானை இந்தத் துறைக்கு ஆணையாளராகப் போட்டிருக்கிறோம். இதை யெல்லாம் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் இதுதான். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கடவுள் பக்தியில்லாதவர்களை யெல்லாம் டிரஸ்டிகளாகப் போடுகிறார்கள் என்றும் அதில் குறை இருப்பதாகவும் சொன்னார்கள். அதற்கெல்லாம் மேலாக, ஆணையாளராக ஒரு சிறந்த பக்திமானைப் போட்டு, எந்தக் குறைவு இருந்தாலும் அதை நிறைவு செய்வதற்கு ஒரு சிறந்த பக்திமான் தலைமைப் பொறுப்பில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் காலத்தின் அருமை கருதி நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மதுரை நகரைப்பற்றிய விசேஷமான சிறப்புக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக அமைச்சர்கள் மதுரைக்கு வரும்போது, நான் என்று ஒரு அறிவிப்பு செய்து விடுகிறார்கள். நமது சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற வாரம் வந்திருந்தபோது, புது மண்டபம் காலி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். மதுரையில் புது மண்டபம் புராதனமான சிறப்பான இடம். அதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், சென்னையில் மூர் மார்க்கட் சிறப்பாக அழைக்கப்படுவதுபோல் மதுரையில் புது மண்டபம் சிறப்பான இடம். சின்னப் பிள்ளைகளுக்கு வாங்கும் சாமான்கள் முதல் வயது முதிர்ந்தவர்களுக்கு வேண்டிய சாமான்கள் வரை பெரும்

[திரு. எஸ். எஸ். தென்னரசு]

[1973 மார்ச் 26]

கூடிய வாய்ப்பை இந்தியாவிலேயே மதுரை புது மண்டபத்தில்தான் பெற்றிருக்கிறோம். பொதுவாக பாண்டிய நாட்டிலே மணமக்கள் மதுரைக்கு வந்தால், புது மண்டபத்துக்குப் போய் வருவோமா என்று சொல்லுவார்கள். புது மண்டபத்தில் இடைக்காத சாமானே இடையாது என்ற சிறப்புப்பெற்ற அந்த இடத்தைக் காலி செய்யக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருந்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மதுரையின் சிறப்பு பாழ்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போல் மதுரையின் இன்னொரு பகுதியில் உள்ள வண்டியூர் தெப்பக் குளம் மதுரை மாநகராட்சியின் சின்னமாக இருக்கிறது. அந்த வண்டியூர் தெப்பக்குளத்தில் எப்போதும் தண்ணீர் இருந்ததே கிடையாது. எற்கெனவே இதுபற்றிப் பலமுறை கேள்வி போட்டிருக்கிறேன். அங்கே பதில் அனுப்பக் கூடிய அதிகாரிகள் தெப்பம் விடுகிறபோது தண்ணீர் விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லா இலாக்காக்களுக்கும் 'பிளையிங் ஸ்குவாட்' போட்டிருக்கிறார்கள். அது மாதிரிப் போட்டு இது உண்மைதானு தண்ணீர் விடப்படுகிறதா என்று பார்க்க முயற்சி எடுக்க வேண்டும். மதுரையின் கேந்திரமாக இருக்கிற வண்டியூர் தெப்பக்குளத்திற்குப் பராமரிப்பு போதாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிழக்கு பகுதியி லிருந்து மதுரைக்குப் போகும்போது, தியாகராஜா காலேஜுக்கு எதிர்ப்புற மாக ஒரு குளம் இருக்கிறது. அதைப் பார்த்தால் ஜனதாயக காலம் என்று தெரியாது. மன்னர் காலத்தில் இருக்கிறோமா என்று நினைக்கும் அளவுக்கு அற்புதமாகக் கட்டப்பட்ட ஊரணி பாதுகாக்கப்பட வில்லையென்று அமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குளங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரோடு அந்த தேவஸ்தான கமிட்டி இணைக்கப்பட்டு தேவஸ்தான குளத்தின் பரா மரிப்புச் செலவையெல்லாம் பஞ்சாயத்துகள் எடுத்துக்கொள்ளுகின்றன. அந்த அளவுக்கு தேவஸ்தானம் கட்டிய பெரிய குளங்களை டிடபின்யூடி. இலாகா விடம் ஒப்படைத்து, அதற்கான செலவை தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். கோவிலுடன் சம்பந்தப்பட்ட அந்தத் தெப்பக்குளம் சுத்தமாக அமையவில்லை. போதிய பராமரிப்பு இல்லை. டிடபின்யூடி. அல்லது பஞ்சாயத்திடம் ஒப்படைத்து, அதற்கு ஆண்டுதோறும் செலவுகளை அறநிலையத் துறை கட்டக்கூடிய முறையைப் பின்பற்ற வேண்டும். சில ஊர்களில் அப்படிப்பட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது, அதை

[திரு. எஸ். எஸ். தென்னரசு]

[1973 மார்ச் 26

நாடு பூராவும் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னொரு குறை ஏற்கெனவே இருந்த அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தையும் திருப்பரங்குன்றத்து தேவஸ்தானத்தையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று பிரிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இதுவரை உத்தரவு போடப்படவில்லை. நல்ல மனமலர்ச்சித் திட்டங்களை உருவாக்கும் அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள், நல்ல பண்பாளர் என்ற ஆற்றல் பெற்ற அவர்கள், மதுரை, திருப்பரங்குன்றம் இரண்டையும் தனித்தனி தேவஸ்தானங்களாகப் பிரிக்க விரைவில் ஆணை பிறப்பிக்கவேண்டுமென்ற முக்கியமான வேண்டுகோளை மறந்துவிடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் பக்கத்தில் இருக்கின்ற அழகர் கோவிலைப்பற்றிச் சொன்னார்கள். அழகர் கோவிலின் சிறப்பு போய்ப் பார்த்தவர்களுக்குத் தெரியும். திருப்பதியின் சிறப்பைவிட பன்மடங்கு அமைப்பிலே சிறப்பாக இருக்கக்கூடிய இடம். பார்த்தவர்கள் திருப்பதி அழகர் கோவிலுக்கு எந்த மூலைக்குச் சமம் என்று கேட்கக்கூடும். அந்த அழகர் கோவிலுக்குப் போகிய விளம்பரம் கொடுக்கப்பட வில்லை. அது நடந்த கதை போல் இருக்கிற சரித்திரம், ஒரு பெரிய தமிழ்ப் புலவர் அழகர் கோவில் சரித்திரத்தை எழுதியுள்ளார். இப்படிப்பட்ட ஊர் இருக்கிறது, இதை எப்படிப் பயன்படுத்தவேண்டுமென்று இனிமேலாவது முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை அழகர் கோவிலுக்குச் சென்றார்கள். அந்தப் பகுதிக்கு முதலமைச்சர் வரும்பொழுது நான் கூடச் சென்றது உண்டு. சிற்பத்தின் சிறப்பு என்ன என்று கேட்டார்கள். பல வக்கீல்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கூட வந்திருந்தார்கள். நாங்கள் பார்த்தபோது அழகாக இருக்கிறது என்று சொன்னோம். உடனே அவர் சொன்னார். ஒரு பெண்ணை ஒருவன் முதுகில் தூக்கிக்கொண்டிருக்கிறான். அப்போது கால்விரல் எப்படியிருக்கிறது என்பதை அனுபவித்து சிலை வடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். கால் பெருவிரல் தரையில் ஊன்றியிருக்கிறது என்பது அனுபவபூர்வமாகச் செதுக்கப்பட்டு ஆயிரக் கணக்கான சிலைகள் அழகர் கோவிலில் இருக்கின்றன. அவைகள் பூராவும் பாதுகாக்கப்பட வேண்டும். சிறப்புத் தரப்படவில்லை என்பது மனக் குறை. பாண்டிய நாட்டில் இருப்பவர்கள் சித்திரை மாதத்தில் அழகர் கோவில் திருவிழா என்றால், அதை 'நேஷனல் பண்டிகை' என்று கருதுவார்கள். சித்திரைத் திருவிழாவுக்குக் கோடி கட்டுகிறார்களென்றால், மதுரையில்

1973 மார்ச் 26]

[திரு. எஸ். எஸ். தென்னரசு]

இருந்தால், அழகர் கோவிலுக்குப் போவோம் என்று சொல்லுவார்கள். தேசிய திருவிழா நடக்கும் அழகர் கோவில் இன்னும் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். சிறப்புகள் தரப்பட வேண்டும். கோவிலுக்கு வெளியில் கல்லூரி கட்டினால், அங்கு சுகாதாரச் செழிப்புக்கும் நல்ல மூலிகைகள் கிடைக்கும்படி யான ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். திருச்சி மாவட்ட மக்கள் குறையை மேலவை உறுப்பினர்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள். ஸ்ரீரங்கமும் சமயபுரமும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருக்கிறதென்று சொன்னார்கள். அது வரவேற்கக் கூடியதா என்பதை அறநிலையத் துறை ஆராய்ந்து பார்க்க வேண்டும். செவின்யூ துறையில் மாறுதல் உண்டாக்கியிருக்கிறோம். தொழில் துறையில் சிறப்பான நிலைகளை உண்டாக்கியிருக்கிறோம். அறநிலையத் துறையில் வருமானமுள்ள சமயபுரம் மாரியம்மன் கோவிலையும் வருமானம் இல்லாத ஸ்ரீரங்கம் கோவிலையும் ஒரே நிர்வாகத்தில் வைத்து மாரியம்மன் பணத்தை ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் செலவழிப்பது எந்த வகையில் நியாயம் என்று அறநிலையத்துறை சிந்தித்துப் பார்த்து, மாரியம்மன் கோவில் வருமானத்தை அந்தப் பகுதி மக்களுக்குச் செலவழிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

கடைசியாக, திருப்பணி என்பதுபற்றிப் பலவிதமான கருத்துக்கள் பேசப் பட்டன. பொதுவாக மதுரையில் திருப்பணிக் கமிட்டி 10 ஆண்டுக்காலமாக இருக்கிறது. அதற்காக ஒரு பிளிமத் கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருப் பணி முடிந்துவிட்டதா என்று தெரிய வேண்டும். திருப்பணி முடிந்த பிறகும் அந்தக் கமிட்டி இயங்குகிறது. தரப்பட்ட கார் தேர்தலுக்குப் பயன்படுத்தப் பட்டது என்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இப்போது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வேலையில்லாது, வேலை முடிந்த பிறகு, திருப்பணிக் கமிட்டி இருக்க வேண்டுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். திருப்பணி செய்ய வேண்டியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட் டார்கள். பழமை போய்விடுகிறது என்று ஒரு பக்கம் குற்றச்சாட்டு வருகிறது. திருப்பணி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இன்னொரு பக்கம் இருக்கிறது. ஆக திருப்பணி கமிட்டியாருக்கு யாரைத் தலைவராகப் போடலாம் என்ற சர்ச்சை வரும் அளவுக்கு வந்திருக்கிறது. திருப்பணி செய்யும் முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். சில கோயில்களிலே திருப்பணி செய்த பிறகு பார்த் தால் முன்பு இந்தக் கோயிலாக இருந்தது, திருப்பணி செய்த பிறகு திருஷ்டி விலாசமாக மாறிவிட்டது போலத் தோன்றுகிறது. திருப்பணி செய்கிறபோது இன்னொன்றை மறந்து விடக் கூடாது. மோகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற

[1973 மார்ச் 26

[திரு. எஸ். எஸ். தென்னரசு]

இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளைப் போன்று தென்னிந்தியாவில் இருக்க வேண்டுமென்று கண்டுபிடித்து, சமீபத்தில் திருச்சி மாவட்டத்தில் அரியலூர் பகுதியில் ஒரு கோயிலுக்கு அஸ்திவார வரைக்கும் 2 அடிக்கு மேலே ஒரு கல் வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி திருப்பணி செய்கிறவர்கள் அந்த அஸ்தி வாரத்திற்கு மேலே கல் வெட்டுகள் இருக்கின்றனவா என்று பார்த்துத்தான் திருப்பணி செய்ய வேண்டுமே தவிர, அந்தக் கல்வெட்டுகளை முடிவிட்டுக் காரியங்களைத் தவிர்ப்பதற்கு திருப்பணிக் கமிட்டி முயற்சி எடுக்க வேண்டும்.

பிற்பகல் 7·00

மொத்தத்திலே இந்த அறநிலையத் துறை அமைச்சர் மிக சுறுசுறுப்பான அமைச்சர். இந்த இலாகாவுக்கு இன்றைக்கு ஒரு பழைய பெயர் இருக்கிறது. இந்து மத இலாகா என்று சொன்னால், கடிதம் போட்டால் பதில் வராது. தெப்பக்குளம் இடிந்து விட்டது, கோயில் இடிந்து விட்டது என்று சொன்னால், குறை இருக்கத்தான் செய்யுமென்று தத்துவம் பேசிக்கொண்டு வந்த இலாகா. இன்றைக்கு இந்த இலாகா செவின்யூ இலாகாவைப் போல மிக சுறுசுறுப்பாக வும், போலீஸ் இலாகாவைப் போல மிகப் பரபரப்பாகவும் பணியாற்றுவதைப் பார்க்கிறோம். அதற்கு இந்த அமைச்சரும் ஆணையாளரும் பொறுப்பு என் பதைத் தெரிவித்து, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவை முன் நடக்கின்ற அறநிலைய மானியத்தைப்பற்றிய விவாதத்திலே கலந்து கொண்டு, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இந்த மானியத்தை நம்முடைய மன்ற உறுப்பினர்களை—அந்தணருக்கு தூதல் ஓதுவித்தல் ஆகிய தொழில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன்படி தூதல் ஓதுவித்தல் ஆகிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை—திரு. ராஜா அய்யர் அவர்கள் முதன் முதலாக வரவேற்றுப் பேசினார்கள். ஒரு குறைபாடும் குற்றமும் எடுத்துக்காட்டாமல் மனநிறைவோடு அறத்துறையின் நடைமுறையை அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். அறத்துறை அமைச்சருக்கு அது ஒரு நல்ல சிறந்த சான்றிதழாகும். 'வசிஷ்டர் வாயாலே பிரம்ம ரிஷி' என்று சொல்லுவது போல, அந்தணரான ராஜா அய்யர் அவர்களே தி.மு.க. அரசின் அறத்துறை நன்முக நடைபெறுகிறது என்று சொல்லுகின்ற அளவுக்கு அறத்துறை நடப்பது எனக்கும் மகிழ்ச்சி தருகின்றது.

1973 மார்ச் 26]

[திரு. ம. பொ. வெங்ஙானம்]

இந்த மன்றத்திற்குத் தரப் பட்டுள்ள அறிக்கை எனக்கு முன்னர் பேசிய திரு. ராஜா அய்யர் அவர்களும், திரு. சக்திமோகன் அவர்களும், மற்றும் சிலரும் எடுத்துக் காட்டியதைப் போன்று, தமிழ் மணமும், தெய்வ மணமும் கமழக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இங்கே வருகிற தமிழ் அறிக்கைகள் எல்லாமே ஏறக்குறைய நன்முகவே எழுதப்பட்டிருக்கின்றன வென்றாலும், இந்த அறத் துறைக்குரிய அறிக்கை நல்ல தமிழிலே சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆளுகிற கட்சியினரின் தெய்வ நம்பிக்கைபற்றி இந்த இடத்திலே சில வார்த்தைகள் விவாதத்திற்கு வந்தன. என்னைப் பொறுத்தவரையில், ஆளுகிற அமைச்சர்களோ அல்லது ஆளுகிற கட்சியின் உறுப்பினர்களோ தெய்வ நம்பிக்கை விஷயத்தில் எப்படி இருக்கிறார்கள் என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்கள் ஆட்சியிலே மதத்தையும் தெய்வ பக்தர்களையும் எப்படி நடத்துகிறார்கள் என்பதுதான் எனக்கு முக்கியம். அதுபற்றி இந்த அறிக்கை யிலே சொல்லப்பட்டிருக்கிறது. வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர் தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாத்து, இனி வரும் சந்ததியின ருக்கு அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு நிறைவேற்றிடும் வழியில் இத்துறை செயல்பட்டு வருகின்றது என்பதை நாடறியும்.

"பழந்தமிழர் வாழ்க்கை முறைக்கும், அவர் தம் பண்பாட்டின் கலாச்சாரத் தில் உறைவிடங்களாக, வெளி உலகுக்கு இன்றளவும் அவைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கலைமிகு எழில் கூடங்களாக அமைந்துள்ள இந்தத் திருக் கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இவ்வாசு நன்முக உணர்த் திருக்கிறது.

'செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்து செயல்'

என்ற தமிழ்த் திருமுறைக்கொப்ப மக்கள் விரும்பி கைக்கொண்டு வாழும் முறையில் தலையீடு ஏதுமின்றி அவர்கள் விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் அரசாக இது செயல்பட்டு வருகிறது".

இந்த உறுதிமொழியை, கொள்கைப் பிரகடனத்தை இந்த அறிக்கையின் முதல் பக்கங்களிலேயே அரசும், அறத்துறை அமைச்சும் தந்திருப்பதை மிக அன்போடு நான் வரவேற்கிறேன்.

[1979 மார்ச் 28

[திரு. ம. பொ. வெகுநாளம்]

இன்று திரு. கந்தசேசத் தேவர் அவர்கள் பேசியபோது, "ஆலயங்களிலே தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் அங்குமிங்குமாக அதிகாரவர்க்கத்திற்கு நியமிக்கப்படுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். நான் அந்த வகையில் ஆராய்ச்சி செய்யப் புகாததால் அதிலே எனக்கு அனுபவம் எதுவுமில்லை. ஆனால், ஒன்றை நான் எடுத்துச் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல சில சின்னங்களை அணிந்தவர்கள் சிந்தையிலேயும் கூட குறைபாடுகள், குற்றங்கள் இருக்கின்றன. காந்தியடிகள் நெற்றியிலே சின்னங்களே அணிந்தது கிடையாது. அதைத்தான் நானும் பின்பற்றுபவன். இன்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் எடுத்துக்கொடுத்ததால், கொடுங்கள் என்று வாங்கி நிருநீறு அணிந்து கொண்டேன். ஆனால், அவர் காவி காஷாயமும் கட்டிக்கொண்டு அவரைப் பின்பற்றுவேன் என்று எண்ணிவிட வேண்டாம். விபூதி இடுகிற அளவுக்கு இன்று நான் அளவோடு நின்றுமுழைத்திருக்கின்றேன்.

காங்கிரஸ் அன்பர்களுக்கும் அவர்களுடைய பழைய தோழன் என்ற முறையில் ஒன்று சொல்லுவேன். எந்த ஒரு அரசியல் கட்சியும், தெய்வ நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்று கேட்டுப் பார்த்து தங்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதில்லை. அப்படிச் சேர்க்கிற அவசியமும் அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டதில்லை. ஆகவே, தெரிந்தோ தெரியாமலோ, அரசியல் கட்சியிலே தெய்வ நம்பிக்கையற்றவர்களும் இடம் பெற்று விடுவது இயற்கை. தெய்வ நம்பிக்கையிலே ஆட்டம் கொண்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் கட்சியாக இருந்தாலும் அதிலேகூட தெய்வ நம்பிக்கை உடையவர்கள் சேருவது உண்டு. அது எனக்குத் தெரியும். காந்தியடிகள் நாம் உயிர் விடுகிறபோது 'ஹே ராம்' என்று கூறி, கை கூப்பி கடவுளைக் கும்பிட்டு உயிர் விட்டார். அந்த உத்தமர் வளர்த்த காங்கிரசிலே, 'நாத்திகம்' என்ற பெயரிலே பத்திரிகை நடத்துகிற அளவுக்கு நாட்டின் நடைமுறை மாறி வருவதையும், அதை எதிர்த்து காங்கிரசிலே ஒரு குரல் கூட கிளம்பாததையும் நான் பார்த்து வருகிறேன். ஆகவே ஆளுங் கட்சியினரின் தெய்வ நம்பிக்கை பற்றிய பிரச்சினையிலே நாம் அதிகம் கருத்துச் செலுத்துவதை விட்டு, இந்த ஆட்சியிலே ஆலயங்கள் எப்படி நடத்தப்படுகின்றன, தெய்வ பக்தர்கள் எந்த அளவுக்கு நடத்தப்படுகிறார்கள், சமய மரபுகள் எந்த அளவுக்குக் காக்கப்படுகின்றன என்பதை மட்டும் பார்ப்போம். அவை எங்கேனும் குறைபடுத்தப்படுகிறது. குற்றப்படுத்தப்படுகிறது என்று தகவல் கிடைத்தால், நானே கூட அதைக் கண்டிக்கவும் நீக்கவும் போக்கவும் முயலுவேன். அதில் பின்தங்கமாட்டேன் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

1979 மார்ச் 28] [திரு. ம. பொ. வெகுநாளம்]

சமயத்திலே அரசு தலையிட வேண்டாமென்று ஒரு கருத்து சொல்லப் பட்டது. இன்று மட்டுமல்ல, இந்தக் கருத்து நீண்டகாலமாக தொடர்ந்து சொல்லப்பட்டு இல்லாம், இருஸ்துவ சமயங்களை விட்டு விட்டு இந்து சமயத்தி லேதான் அரசு தலையிடுகிறது என்றும் சொல்லப்படுகிறது. ராஜாஜி முதலமைச்சராக இருந்து ஆலயப் பிரவேசச் சட்டம் கொண்டுவந்தபோது கூட, இந்தக் கும்மாளம் குறைபாடும் எடுத்துக் காட்டப்பட்டது. சமயத்தில் நம்பிக்கையுடையவன்—சிறிதளவு அந்தத் துறையில் ஆழ்ந்த ஆராய்ச்சி நடத்தியவன் என்ற முறையில், ஒரு கருத்தை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

இஸ்லாம் மதத்திலே தன்னுடைய தரும ஸ்தாபனங்களை, மதப் பாரம்பரி யங்களை, பழக்க வழக்கங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, கட்டி வளர்த்துக் காப்பதற்கு உறுதியான கட்டுப்பாடு இருக்கிறது. அதிலேயிருந்து விலகி ஓடி, பார்சி தவறு எதுவும் செய்ய முடியாது.

கிருஸ்துவ மதத்திற்கு உலகத் தலைமை இருக்கிறது. ஸ்தாபன ரீதியான கட்டுக்கோப்பு இருக்கிறது. வாடிகன் போப் ஆணையிட்டால், உலகமெல்லாம் வாழும் கத்தோலிகர்களிடையே அது செல்லும். வாடிகன் கவுன்சில் ஒரு முடிவெடுத்தால், உலகமெல்லாம் அது செல்லும். கிருஸ்துவ சமயத்திலே அல் வப்போது சீர்திருத்தத்தைப் புகுத்த வாடிகன் கவுன்சில் பொறுப்பு ஏற்கிறது. துரதிருஷ்டவசமாக இந்து சமயத்தின் காவல் ஆணைகள் தகர்ந்து போய் விட்டன, மதக் காவலர் திசை மாறிப் போய்விட்டார்கள். அதனுடைய விளைவு இந்த மதத்திலே 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' என்று ஆகி விட்டது. இங்கே ஒரு ஸ்தாபன ரீதியான, கட்டுக்கோப்புடன் மக்களுடைய பழக்க வழக்கங்களில் மாறுதலை ஏற்படுத்த முடியவில்லை. தவத்திரு அடிகளார் இருக்கிறார். அவர்களேனும் சைவ மடங்களையேனும் ஒரு கருத்துக்குக் கொண்டுவர முடிகிறதா, முடிந்ததா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமது மதிப்பிற்குரியவராக நடமாடும் தெய்வமாகத் திகழ்ந்து 30 வயதிலே ஒப்பற்ற இலக்கியங்களைச் செய்து, சாலஸ்திரத இலக்கியங்களுக்குப் புதிய வியாக்கியானங்கள் கூறி, இந்த வியாக்கியானத்தையொட்டி வழிவழி ஆசாரியார்கள் தோன்றக்கூடிய அளவுக்கு தலைமையும் புலமையும் பெற்றவர் ஆதிசங்கரர். அவர் பெயரால் அமைந்த மடங்களையேனும் ஒருமைப் படித்த முடிந்ததா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதை நான் ஒரு இந்து என்ற முறையில் மிக்க வருத்தத்தோடு சொல்லுகிறேன். ஆகவே நம் மூடைய குறைபாடுகளை மூடி மறைக்காமல் ஒப்புக்கொண்டு தக்கால நாகரீகத்தி

[1973 மார்ச் 26

[திரு. ம. பொ. வெகுநாளம்]

லிருந்து இந்து சமயத்தை, இந்து சமயக் கோட்பாடுகளை, மடங்களை, கோயில்களை மீட்க வேண்டுமானால், ஓளவேனும் அரசு தலையிட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. இல்லையானால் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று போக்குக்கு ஆதரவு கொடுத்ததாக ஆகிவிடும். ஆகவே அரசு இல்லாத்தில் தலையிட்டால்தான் கிருஸ்துவத்தில் தலையிட்டால்தான், இந்து சமயத்திலும் தலையிட வேண்டுமென்று சொல்லுவது தவறுகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது போலாகும். அதை இந்த மன்றத்திற்கு வெளியிலே இளைப்பினால், அதற்கான காரண காரியங்கள் வேறாக இருக்கும். இந்த மன்றத்தில் அதைக் இளைப்ப வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படியே அறத் துறை அமைச்சர், அறத்துறையிலும் ஜாதி ஒழிப்பைப் புகுத்தினர். ஆலயங்களிலே அர்ச்சகத் தொழிலுக்கு சாதி வேறுபாடின்றி இந்துக்கள் அனைவரும் பொறுப் பேற்பதற்கு சட்ட திட்டங்கள் கொண்டு வந்தார்கள். அதேபோல அறம் காவல் குழுவுக்கு ஹரிஜனங்களை நியமிக்க சட்டங்கள் கொண்டுவந்தார்கள். நான் இன்னும் ஒரு படி மேலே போய்க் கேட்டுக்கொள்கிறேன். மடங்களிலே
7·10 பிற்பகல கூட தருதியுடையவர் தலைவராக வருவதற்கு சாதிதான் தடையாக இருக்கிறது. குன்றக்குடி அடிகளாரும் அந்த அடிப்படையில், மடாதிபதியாக வந்தவராகத்தான் இருக்கமுடியுமென்று நான் நம்புகிறேன். ஆக, மடங்களின் நிர்வாகத்தில் இருப்பதும் பொதுச் சொத்துக்கள்தான். மடங்களிலே இருப்பதும் பொதுமக்களுடைய கண்காணிப்பிற்குரிய உரிமை பெற்ற சொத்துக்கள்தான். அந்தச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு குறிப்பிட்ட ஒரு ஜாதியிலிருந்து மடாதிபதிகள் வழிவழியாக வரவேண்டுமென்ற வரம்பு இருப்பது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. இன்னசாதியார்தான் மடாதிபதியாக இருக்கவேண்டுமென்ற நியதியை வைத்தவர்கள் யார் என்ற ஆராய்ச்சிக்கு நான் போகவில்லை. அந்த நியதி இன்னமும் இருக்க வேண்டுமா என்பதைத் தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் நான் ஒன்றை வேண்டிக்கொள்வேன்; அதன் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும், அமைச்சர்கள் ஒவ்வொருவரையும், என் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களையும் வேண்டிக்கொள்வேன், நீங்கள், சீர்திருத்த வாதிகளாக இருப்பது குற்றமல்ல. சீர்திருத்த வாதி என்று சொல்வது மறைத்துக்கொள்ள வேண்டிய விஷயம் அல்ல. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்று விட்டதாலேயே, அதனுடைய சீர்திருத்தக் கொள்கைகளை மறைத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அந்தச் சீர்திருத்தக் கொள்கைகளில் சாத்தியமானவற்றை அமுல் நடத்த முயன்றாலும் பாவமில்லை.

1973 மார்ச் 26]

[திரு. ம. பொ. வெகுநாளம்]

ஆகவே உங்களில் யாருக்கேனும் உருவ வழிபாடு—அதாவது தாத்திகத்தை நான் சொல்லவில்லை—பிடித்தமில்லையென்றால், அதை வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். இந்து மதம் உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்றவர்களையும் தாங்கக்கூடியது. பிரம்ம சமாஜ்களுக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை இடையாது. ஆரிய சமாஜ்கள் இன்னும் ஒரு படி மேலே போய் புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், இவைகளை நம்புவது இடையாது. அப்படிப்பட்ட பிரம்மசமாஜ்களும், ஆரிய சமாஜ்களும் இந்துக்களாக இருக்க, இந்து மதத்தின் காவலர்களாக இருக்க, இந்து சமுதாயம் அனுமதித்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு சகிப்புத் தன்மையும், சமரசத் தன்மையும், சீர்திருத்த நீக்குப் போக்குகளும் வகுந்து கொடுக்கிற தன்மையும் இந்து மதத்திற்கு உண்டு. இந்த மாதிரிச் சில கருத்து மாறுதல்கள், உருவ வழிபாட்டிலோ அல்லது பிற வழிபாட்டு முறையிலோ என்னைப் போன்றவர்களிடமோ அல்லது குன்றக்குடி அடிகளார் போன்றவர்களிடமோ உங்களுக்கு மாறுபாடு இருக்குமானால், அதை மறைக்கத் தேவையில்லை. வெளிப்படையாகச் சொல்லியே நீங்கள் ஆட்சி நடத்தலாம். ஆனால் நீங்கள் ஆட்சியில் இருக்கிறபோது, தினிப்பது வேறு, இந்த எண்ணத்தை உங்கள் அளவில் நீங்கள் வைத்திருப்பது வேறு. கம்யூனிஸ்டு நாட்டில் மாஸ்கோவில் நான் பார்த்தேன் சர்ச்சுகள், மசூதிகள், மற்றும் கோயில்கள் அரசாங்கத்தின் உதவியோடு அங்கு நடப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே, சீர்திருத்தத் துறையில் சில பல செயல்களை தி.மு.க. அரசு செய்யக் கூடாது என்று சொல்பவன் அல்ல. செய்ய வேண்டுமென்று விரும்புபவன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். சில கோயில்களின் சொத்துக்களை எல்லாம் யார் யாரோ எடுத்துக் கொண்டு விட்டார்கள். கோயில் சொத்தைத் திருடுவது தான் சுலபம் என்று ஆகிவிட்டது நீண்ட நெடுங்காலமாக. அதையெல்லாம் மீட்பதற்கு அறத்துறை அமைச்சரவர்களும், அவருடைய அதிகாரிகளும், அந்தத் துறையும் எடுத்த நடவடிக்கைகள் புனிதமான செயல், புண்ணியமான செயல், அதர்மத்தை அழிக்கிற அறமான செயல் என்று எண்ணுகிறேன். அதில் அவர்கள் இன்னும் முன்னேற வேண்டும். வெற்றி காண வேண்டும். அப்படிப்பட்ட குற்றவாளிகள் முழு விலாசத்தை மக்களுக்குக் காட்டினால் கூட நன்றாக இருக்கும். மேலும் தவறுகள் நடக்காமலிருப்பதற்கு, அவர்கள் பெயர்களெல்லாம் இந்த அறிக்கையில் விவரமாக வர வேண்டும். கோயில் சொத்துக்கள் யார் யாரிடமிருந்து மீட்கப்பட்டது, என்ன காரணத்தால் அது கைவாடப்பட்டது என்ற விவரங்களை அறிக்கையில் காட்டுவது நிச்சயமாக தெய்வ சன்னிதானத்தில் சரியாக இருக்கும்.

[1973 மார்ச் 26

[திரு. ம. பொ. சிவஞானம்]

இந்த அறிக்கையிலே கோயில்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, அசையா சொத்துக்கள், அசையும் சொத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் தரப்பட்டிருக்கவேண்டும். பல கோயில்களிலே தங்கப்பாளங்கள் வைத்திருக்கிற மாபு இருக்கிறது. அது குற்றமாக அல்ல. நம்முடைய பாரத நாடு, சீனவுடன் போர் நடந்திய காலத்திலே கோயில்களிலிருந்த தங்கக் கட்டிகள் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டன. யுத்த நிதிக்காக வழங்கப்பட்டன. இப்படி கோயில்களிலே தங்கப்பாளங்கள் இருக்கின்றன. அவை எவ்வளவு இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து அறிக்கையில் சேர்த்து இந்த மன்றத்தின் முன்னே வைக்கவேண்டியது அவசியமாகிறது, நியாயமாகிறது. என்னுடைய மதிப்பிற்குரிய திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள். வேறு சிலரும் எடுத்துக் காட்டினார்கள். "கோயில் வழிபாடு முக்கியமானதும் கூட, அந்த வழிபாட்டிலே நாம் கால மாறுதலுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும்." என்று பொன்னை அடிப்படையாக வைத்து ஒரு நாட்டின் பொருளாதாரத்தை அமைப்பது என்பது அந்தக் காலத்தில் வழக்கத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். அதனால், அந்தக் காலத்தில் பொன்னை அழகுக்குத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். தங்களை அழகுபடுத்திக்கொள்வதற்கு தங்க அணிகள் அணிந்து கொண்டார்கள். ஆண்டவனுக்கும் தங்க அணிகள் பூட்டினார்கள். கோபுரக்கலசங்கள், தங்க ஸ்தூபிகள் வைத்தார்கள். ஆனால், இன்று பொன்னை அடிப்படையாக வைத்துப் பொருளாதாரத்தை வளர்க்கிற ஒரு சமுதாயத்தில், தலை முறையில், நூற்றாண்டில் வாழ்கிற நாம் தங்கக் கவசங்களையும் கலசங்களையும்—கலசங்கள் வேறு, ஆண்டவனுக்குக் கவசங்கள் வேறு, வெள்ளி ரதங்களையெல்லாம் பார்த்தால், உலகத்தார் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? திரு. சா. கணேசன் அவர்கள் இதை எடுத்துச் சொன்னதால், துணிவோடு நானும் அவரைப் பின்பற்றுகிறேன். வைதீகர்கள் என்னிடம் அவரைக் கூடுதலாக நம்புவார்கள். நான் நி.மு.க. நண்பனாகிவிட்டேன் அல்லவா? அது வேறு விஷயம். பொருளாதாரத்துறையில் நாம் கஷ்டப்படுகிறோம். பொருளாதார நெருக்கடி காரணமாக உலகமெல்லாம் கடன் வாங்குகிறோம். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய விக்கிரகங்களுக்கும் தேர்களுக்கும் தங்கத்தைப் பயன்படுத்தி வீணாடுகிறோம் என்று சொன்னால், நம்முடைய பொருளாதார ஞானத்தை உலகம் எப்படி மதிக்கும்? ஆகவே, இந்த சமயம் என்பது உலகத்தின் மூன்றாம் தம்மை அளிக்கப்படுத்திக் காட்டுவது அல்ல. இந்நிலையில் நம்மிடையே கொண்டவர்கள் என்று நாம் நம்புகிற, நம்புவதற்கு நான் தயாராக இருக்கிற

மார்ச் 26]

[திரு. ம. பொ. சிவஞானம்]

இந்த அரசினிடம் வேண்டுகிறேன், அறங்களில் இந்த மாதிரி ஆணையிட்டு அல்ல, அறிவுரைகள் கூறி கட்டுப்படுத்துவதற்கு காண்ணவேண்டும்.

மத்திய அரசிடம் உள்ள இந்து மதத்துக் கோயில்களின் சொத்துக்கள் எவ்வளவு என்று நமக்குத் தரப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடவில்லை.

நமக்கு ஆங்கிலத்திலுள்ள அறிக்கைக்கும் தமிழிலுள்ள அறிக்கைக்கும் உள்ள வேற்றுமைபற்றி, அது மாதிரி எத்தனையோ குறைபாடுகளை அறிக்கையில் நானும் பார்த்திருக்கிறேன். நான் ஆங்கிலத்தில் புலமை உள்ளவன் அல்ல வேலையைத் தெரிவர் அவர்களைப் போன்று. அதனால் நான் சில குறிப்புகளை எடுத்துச் சொன்னால், "இவருக்கு எப்படித் தெரிந்தது?" என்று ஐயப் படுவீர்கள். அதனால், நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை.

இன்னும் ஒன்றை மட்டும் முக்கியமாக நான் வற்புறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். கோயில் வழிபாட்டில் இடைக்காலத்தில் சில பிழைபாடுகள் ஏற்பட் டிருக்கின்றன. இன்று நாடு முழுவதிலும் இருக்கிற மாரியம்மன் கோயில் களெல்லாம் சிலப்பதிகார நாயகி கண்ணகியின் கோயில்களே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கண்ணகி மதுரையை எரித்து, மறைந்து முடிந்தவுடன், பாண்டியன் வெற்றிவேற் செழியன் கொற்கையில் இருந்தவன் ஆயிரம் பொற் கொல்லர்களைப் பலிகொடுத்து கண்ணகியின் சீற்றம் தனிய அவளுக்கு விழா எடுத்தான் என்று சொல்கிறார்கள். பொற்கொல்லரைப் பலி கொடுத்ததாகச் சொல்லப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை, அது நடந்ததாக நான் நம்பவும் இல்லை. ஆனால் கண்ணகிக்கு செங்குட்டுவன் கோயில் கட்டியது உண்மை. உரைபெரு கட்டுரையிலே "அன்று தொட்டு பாண்டியன் நாடு மனபுலங்கூர்ந்து வறுமையெய்திவெப்பும் நோயுங் குருவும் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்தி செய்ய, மழை தொழிலென்றும் பரவுவதாயிற்று" என்று சொல்லப்பட்டுள்ளது. வெப்பு என்பது உஷ்ணை பேதி, குருபு என்பது கொப்புளம்; அம்மை, கோலசா, அம்மை போன்ற கொடு நோய்கள் தோன்றின. கண்ணகிக்கு இழைத்த தீமைக்காக 12 ஆண்டுகள் வற்கடன் தோன்றி பாண்டி நாடு முழுவதும் பஞ்சம் தோன்றி விட்டது. இது கண்ணகி தெய்வத்தினுடைய சீற்றத்தின் விளைவு என்று நம்பிய பாண்டி வேந்தன் கண்ணகிக்கு சாந்தி செய்ய விழா எடுத்தான். இந்த விழா எடுத்த காலம், 'ஆடித் திங்கள் அகலவையின்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 26

ஆங்கோர் பாடு விழாக்கோல் பன்முறை எடுப்ப' என்பதால் தெரிகிறது. இப்போதும் ஆடி மாதத்தில்தான் மாரியம்மன் கோயில்களில் விழா நடக்கும். ஆடித் திங்களில்தான் கண்ணகி விழா தொடங்கி வைக்கப்பட்டது. கண்ணகிக்கு மழை வரம் வேண்டி விழா எடுத்தான் வெற்றிவேற் செழியன். அதனால், கண்ணகிக்கு மழையின் ஆகு பெயராக 'மாரியம்மன்' என்ற பெயர் வந்தது. ஆனால், இடையின 'ரி' வல்லின 'றி'யாக மாறி பிற்காலத்தில் சேணுகா தேவி விழா என்று மாற்றப்பட்டு விட்டது. 'மாரியம்மன்' என்றால் இடையின 'ரி' விழுமெயொழிய வல்லின 'றி' வராது. ஆகவே இளங்கோ அடிகள், "கொங்கைச் செல்வி குடமலையாட்டி தென் தமிழ்ப்பாவை செய்த தவக் கொழுந்து ஒரு மாமணியாய் உலகுக்கோங்கிய திருமாமணி" என்றார் உலகமெல்லாம் அந்தக் கண்ணகி தெய்வத்தைக் கொண்டாட வேண்டும். அந்தக் கற்புத் தெய்வத்தைக் கொண்டாட வேண்டும் என்று விரும்பினார். நம்முடைய நாட்டில் சனீஸ்வரனுக்குக் கூட கோயில் உண்டு. ஹனுமானுக்கும் கோயில் உண்டு. ஆனால், பத்தினித் தெய்வமான கண்ணகியின் கோயில்கள் எல்லாம் மறைக்கப்பட்டுப் போய் விட்டன. பழைய தவறுகளிலிருந்து நாம் விடுபட வேண்டும். இன்றையதினம் மாரியம்மன் கோயில்களில் பார்த்தால் அங்கே ஒற்றைச் சிலம்பு இருக்கும். மாரியம்மன் கோயில் பூசாரிகள் விசேயாடுகிறபோது, ஒற்றைச் சிலம்பைக் கையில் வைத்துத்தான் உருட்டுவார்கள். கண்ணகி தேவியின் நிலைவாகத்தான் ஒற்றைச் சிலம்பு அங்கே இருக்க நாம் காண்கிறோம். இரட்டைச் சிலம்பு இருக்கா. 'அண்ணன்மார்' என்ற பேரில் 7 கற்கள் ஒரு புறம் இருக்கும். மற்றொரு புறம் கன்னிமார் என்ற பெயரில் கற்கள் இருக்கும். கண்ணகி தன் பத்தினித்தனத்திற்கு சான்று காட்ட பூம்புகாரில் பிறந்த 7 பத்தினியருடைய சரித்திரத்தை பாண்டிமா தேவிக்குச் சொல்லிருள். அவள் போற்றிய, பத்தினி போற்றிய, பத்தினியர் எழுவருக்குச் சிலை என்றால், அவர்கள் பத்தாமார்களும் சிலைகளாக இருக்கிறார்கள். ஒரு தமிழ் நங்கை இன்னொரு சிநேகிதியின் கணவனை அண்ணன் என்று சொல்வது வழக்கம். அந்த முறைப்படித்தான் அவள் போற்றிய பெண்கள் 'கன்னிமார்' என்றும், அவளின் கணவன்மார்களை 'அண்ணன்மார்' என்றும் சொல்லி, மாரியம்மன் கோயிலுக்கு வெளியே ஏழேழு சிலைகள் இப்புறமும் அப்புறமும் வைத்தார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து அறத்துறையமைச்சர் அவர்கள் கண்ணகியின் வழிபாட்டைப் புதுப்பிக்க வேண்டும். தமிழரிடையே ஒழுக்கம் பாவ, உயர் நெறி தழைக்க இந்த நிலையை ஏற்படுத்த அவர்கள் சிந்திக்க வேண்டும். இதற்கு என் தலை வேண்டுமானால், கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். என்னை விடவும் புலமை பெற்ற பலர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களின் தலை

1973 மார்ச் 26] [திரு. ம. பொ. சிவஞானம்]

யெல்லாம் அவர் பெற வேண்டும். நல்ல பெயர் வாங்க வேண்டும். 'கண்ணப்பர்' என்ற பெயர் தாங்கியவர் அறத் துறை அமைச்சராக இருக்கிறார். அப்படிப்பட்ட வரைத் தேர்ந்தெடுத்த கட்சியை, ஆட்சியை, முதல்வர் அவர்களை நாம் பாராட்டலாம். அவரோடு சேர்ந்து பல நிகழ்ச்சிகளுக்கு நான் போயிருக்கிறேன். இந்த அறத்துறையை நிர்வகிப்பதற்கு வேண்டிய அமைதியும், அன்புணர்ச்சியும், பிறரோடு நன்கு பழகுகிற பண்புணர்ச்சியும் உடைய ஒருவர் அமைச்சராக இருக்கிறார். உங்கள் காலத்தில் ஆலய நெறி தழைத்தோங்குக என்று வாழ்த்துகிறேன். தமிழோடு தெய்வ நெறியும் பிணைந்து ஓங்குக என்று வாழ்த்துகிறேன். வணக்கம்.

7-20 பி.ப.

* திரு. எம். சங்காலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது அறத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள் இன்று அளித்துள்ள அறநெறித் துறையிலுடைய விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அவர்கள் ஆலயங்களிலே ஆண்டவனுடைய நெருங்கிப் பழகித் தொண்டு புரிந்து கொண்டு வறுமையிலே வாடிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு ஒரு விடி வெள்ளி மாதிரி அவர்களுக்கு ஊதிய உயர்வை அளித்து, சம்பள விகிதங்களை ஏற்படுத்தி உண்மையில் ஆலயப் பணிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த சீர்திருத்தத்தைச் செய்திருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அவர்களைப் பாராட்டி, இதுவரை ஆண்டவனை வழிபட்டது போல, இனி இவர்கள் பெயரைச் சொல்லி வழிபடுகிற நிலையில் இன்று இந்த ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளித்ததற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் அறநிலையத் துறை சார்பில் பல மருத்துவ முகாம்கள் நடைபெறுவது, பல இலவசத் திருமணங்கள் நடைபெறுவது எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் பல ஆலயங்களில் அதையொட்டி வாழ்கிற ஏழை இந்துக்களின் குழந்தைகளுக்கு கல்விக்கு உரிய உதவி செய்யப்படுகிற குறிப்பு காணப்படவில்லை என்பதை நான் அறிகிறேன். இந்து ஆலயங்களை நம்பியே வாழ்கிற ஊழியர்களுடைய குழந்தைகள், அல்லது குறைந்த வருவாயுள்ள இந்துக் குழந்தைகள், உயர் கல்வி பெறுவதற்கு இந்து தர்மப் படியே வாழ்ந்து ஆலயங்களில் சென்று வழிபாடு செய்து தேவாரம் பாடி வருகின்ற இந்துக் குழந்தைகளுக்கு நிதி உதவி செய்யக் கூடிய முறையை ஒவ்வொரு ஆலயத்திலும் ஏற்படுத்துவதற்கு நமது அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்ட ஆலயங்கள் தனியாக ஒரு தேவஸ்வ வாரியத்தின் கீழ் அமைந்திருக்கின்றன. சுமார் 447 பெரும் ஆலயங்கள் தனியாக தேவஸ்வ வாரியத்தில், அதுவும் சென்ட்ரல் பார்லிமெண்ட் இயற்றிய சட்டத்தின்கீழ் உள்ள ஒரு வாரியமாக அமைந்திருக்கின்றன. அங்கு இருக்கிற ஆலயங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆண்டு ஒன்றுக்கு 13½ லட்ச ரூபாய் நமது அரசு கொடுக்கிறது. ஆலயங்களுக்குள்ள சொத்துக்களையெல்லாம் கூட பலர் கையகப்படுத்தித் தங்களுக்குச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். அதை யெல்லாம் எடுப்பதற்கு முயற்சி செய்து, ஆலயங்களின் சொத்துக்களை மீட்டுக் கொண்டிருக்கின்ற தன்மையை இங்கே பார்க்கிறோம். ஆனால் கன்னியாகுமரியில் அரசு மேற்பார்வையில் இருக்கிற ஆலயங்களினுடைய சொத்துக்களை, இதற்கு முன்னாலே திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருக்கிறபோதே, பலர் கையகப் படுத்தி வைத்துக்கொண்டு இருக்கிற நிலைமை ஏற்பட்ட பிறகு, திருவாங்கூர் மன்னர், அதுவும் ஆந்திரப் பகுதியிலிருந்து வந்த சர். டி. மாதவ ராவ் அவர்கள் அமைச்சராக இருக்கிற காலத்தில், இந்த நிலங்களை யார் யார் பயிர் செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கே கொடுத்து விட்டார்கள். இப்போது திருவனந்தபுரத்தில் செக்ரடேரியட்டுக்கு எதிரில் சர். டி. மாதவ ராவ் அவர் களுடைய சிலை இருக்கிறது. அவர்கள் அங்கு நிலைகை இருக்கிறபோது, ஆலயங்களுடைய நிலங்கள் யார் யார் கையிலே இருக்கின்றனவோ, அவர் களுக்கே அந்த நிலங்களைச் சொந்தமாக்க வேண்டும் என்றும், ஆலயங்களுடைய நிர்வாகப் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்கிறது என்றும் அவர்கள் பிரகடனப் படுத்தி விட்டார்கள். அது "ஜென்மி குடியான் பிராகிளமேஷன்" என்று கூட திருவாங்கூர் வரலாற்றிலே சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் திருவாங்கூர் மன்னரே ஆட்சித் தலைவராக இருந்தார். திருவாங்கூர் சமஸ்தானம் இங்கிலாந்து நிர்வகம் மாதிரி. இங்கிலாந்து மன்னரே ஆட்சித் தலைவராக இருந்தார். அதே சமயத்தில் சமயத் தலைவராகவும் இருந்தார். திருவாங்கூர் சமஸ்தானம் இங்கிலாந்து நிர்வாகம் மாதிரி. இங்கி லாந்தில் ஆட்சித் தலைவராகவும், அதே சமயத்தில் சமயத் தலைவராகவும் மன்னர் இருப்பது போல, திருவாங்கூர் மன்னர், ஆட்சித் தலைவராகவும், சமயத் தலைவ ராகவும் இருப்பதினால், அப்போது ஆட்சிப் பொறுப்பே, ஆலயங்களையெல்லாம் நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 1956-ல் திருவாங்கூர் சமஸ் தானத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் பிரிந்து வந்த பிறகு, அங்குள்ள ஆலயங்களை நிர்வகிப்பதற்காக 13½ லட்ச ரூபாய் கொடுக்கப்படுகிறது. சுமார் 500 ஆலயங்கள் இருக்கின்றன. பெரிய ஆலயங்கள் சுசீந்திரம், பத்மநாபபுரம், திருவட்டாறு போன்றவையாகும். 1956-ல் நிர்ணயம் செய்தது. இன்று பெருமளவு விலைவாசி ஏறி இருப்பதனால், அந்தத் தொகையைக் கொண்டு

ஆலயங்களை நிர்வகிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை அங்குள்ள வாரியம் அரசுக்குத் தெரிவித்திருக்கிறது என்று நினைக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து அந்த ஆலயங்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படுவதற்கு வேண்டிய நிதியை நமது அமைச்சரவர்கள் மற்ற ஆலயங்களிலிருந்து பெறுகின்ற உபரி நிதியிலிருந்து ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற அந்த வாரியத்தின்கீழ் இல்லாமல், மற்ற மாவட்டங்களில் இருப்பது போன்ற ஒரு கண்காணிப்பு முறையை அங்கு விஸ்தரித்து, அந்த ஆலயங்களை அரசே நேரடியாக நிர்வகிக்க வேண்டும். இதை மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். மத்திய அரசு இன்னும் ஒரு வருஷமாகியும் கூட அதற்குப் பதில் அளிக்காமல் இருக்கிற சூழ்நிலையையும் இந்த அறிக்கையிலே குறிப்பிட் டிருக்கிறார்கள். அதை விரைவு படுத்தி, இதற்கு ஒரு கால கெடு குறித்து தெரிவிக்க வேண்டும். அதற்கு அப்பாலும் பதில் வாவில்லை என்றால் நாங்களே சட்டமியற்றுகிறோம், இங்குள்ள சட்டங்களை விஸ்தரிக்கிறோம் என்ற நிலையை அவர்களுக்கு ஒரு அறுதியிட்டுக் குறிப்பிட்டு விட்டு இங்குள்ள சட்டங்களை அங்கு அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவிகுமரி கல்லூரி குழித்துறைப் பகுதியில் நடைபெறுகிறது. சுமார் 7, 8 ஆண்டுகளாகியும் இன்னும் அது அப்படியே இருந்த இடத்திலேயே இருக்கிறது. மாணவிகளுக்குத் தங்குவதற்கு வசதியோ, புதிய கட்டடமோ இல்லாமல் முன்னால் அரண்மனைக் கட்டிடத்தில் இருந்த இந்தக் கல்லூரி இப்போதும் நடைபெறுகிறதே தவிர, அந்தக் கல்லூரிக்கு இன்னும் புதிய கட்டிடம் கட்டப்படவில்லை. கல்லூரியும் விஸ்தரிக்கப்படவில்லை. அதற்கு அற வாரியத்தில் 27 லட்சம் ரூபாய் 'பிக்ஸட் டிபாசிட்' இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதில் ஒரு பெரும் பகுதியை எடுத்து ஒதுக்குவதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பழைய சட்டத்தின் வடிவில் மட்டும் நின்று விடாமல், இருக்கிற நிதியை சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற நல்ல திட்டத்தை வைத்திருப்பதனாலே, அதை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கல்லூரியை வளர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதி சாரம் என்ற ஊர் 108 திருப்பதி களைச் சேர்ந்த ஒன்று. இக்கோவிலிலிருந்து 1½ லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள், அந்த விக்கிரகத்திலிருந்து திருடப்பட்டதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். நம்பூதிரி ஒருவர், அர்ச்சகராக இருக்கக் கூடியவர், திருச்சூரைச் சேர்ந்தவர், கேரளாவைச் சேர்ந்தவர், திருடியுள்ளார், நம்பூதிரி களவு செய்து

விட்டு போய்விட்டார். நமது காவலர்கள் மிகத் திறமையாக 3-வது நாளே அத்தனையையும் மீட்டுக்கொண்டு வந்து அவரையும் சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த நம்பூதிரியை எங்களுடைய கல்லூரிக்கு அடுத்த காம்பவுண்டிலே இருக்கிற ஸ்டேஷனுக்கு, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தார்கள். அவர் கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டவுடனே, நானும் கல்லூரியில் உள்ள எல்லா ஆசிரியர்களுமாகச் சென்று அவரைப் பார்ப்போம், எப்படி இருக்கிறார் களவு செய்த நம்பூதிரி என்று போன போது, அவர் ஒரு எக்ஸ்-சர்வீஸ் மென், முன்னாள் இராணுவத்தினர். 'மிலிட்டரிக்காரனுக்கே களவு செய்தார், நம்பூதிரி மாதிரி செயல்பட்டு அகப்பட்டுக்கொண்டார்' என்று அங்கு நின்ற வர்கள் சொன்னார்கள். அவர் மிலிட்டரிக்காரர் மாதிரிச் செயல்பட்டிருந்தால், அகப்பட்டுக்கொண்டிருக்க மாட்டார்; ஆனால் களவு செய்ததற்குப் பிறகு நம்பூதிரியாக மாறிவிட்டார் என்று வேடிக்கையாகச் சொல்லப்பட்டது. அவரிடத்திலே நாங்கள் ஏன் இந்த மாதிரி என்று கேட்டபோது, "எனக்கு 50 ரூபாய் சம்பளம், அர்ச்சகர். பெரிய குடும்பம் இருக்கிறது. என்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. இந்தத் தொழிலைச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை" என்று சொன்னார். அந்த நிலை வராதபடி இப்போது எல்லா ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள். நமது மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பல ஆலயங்களில் தங்கப் பாளங்கள் இருக்கின்றன, பல வைரக் கிரீடங்கள் எல்லாம் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்வதனாலே ஆஸ்திகர்கள் உள்ளம் புண்படக் கூடாது. என்னுடைய கருத்து தவறுகளாக இருந்தால், மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள், அறநிலைய சீர்திருத்தக் குழுத் தலைவராக பல நல்ல கருத்துக்களை சிபாரிசாக வழங்கியிருக்கிறார்கள். திருவாங்கூரில் அவர் மன்னருடைய திவானாக இருக்கிறபோது, எல்லா ஆலயங்களுக்கும் அவரே நேரில் சென்று ஆலயங்களில் இருக்கக்கூடிய தங்க நகைகள், வெள்ளி ஆபரணங்களையெல்லாம் அவர்களே நின்று ஒரு இன்வென்டரி "லிஸ்ட்" எடுத்தார்கள். ஆலயங்களுக்குத் தேவையான இன்றியமையாத நகைகளை மட்டும் கொடுத்துவிட்டு, மற்றவைகளையெல்லாம் எடுத்து அரசாங்க நிதிகளோடு சேர்த்துக்கொண்டார்கள். இப்பொழுதும் கன்னியாகுமரி மாவட்டத்தில், வட்டபுளி மடம் என்ற ஒரு பெரிய நம்பூதிரியிடம் கொடுத்து, நகையை பத்திரமாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்து கோவில்களில் திருவிழா என்றால், அவர்களே கொண்டுவந்து விக்கிரகங்களுக்குப் போட்டு, திருவிழா முடிந்ததும், அவர்களே அவற்றைக் கழட்டிக் கொண்டு போய் வைத்துக்கொள்வார்கள். அந்த தங்க நகைகள், பித்தளை

V211, 32 N73 63092 N73.105

நகைகளாக அல்லது வெள்ளி நகைகளாக, மாற்றப்பட்டு விட்டனவா அல்லது மூலாம் பூசப்பட்டு இருக்கின்றனவா என்பது யாருக்கும் தெரியாது. இதைப் போல பல இடங்களிலே என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது. இந்த நம்பூதிரி எடுத்துப் போன நகைகள் கூட அந்த விக்கிரகங்களிலே, அந்த உருவங்களோடு பொறுத்தி வைக்கப்பட்டிருந்தன. [illegible] கொண்டு சென்றிருக்கிறார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கோவில்களுடைய நகைகள் தங்கமாக இருக்கின்றனவா, அல்லது வெள்ளியாக இருக்கின்றனவா, மாற்றப்படாமல் இருக்கின்றனவா என்று உறுப்பினர் அவர்கள் சந்தேகமாகச் சொன்னார்கள். கோவில்களுடைய நகைகள் தங்கமாக அப்படியே இருக்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக அதிகாரிகளை நாம் நியமித்திருக்கிறோம். அவர்கள் அடிக்கடி கோவில் நகைகளைப் பரிசீலனை செய்து சுத்தமாக வைத்திருக்கிறார்களா அல்லது கலப்புச் செய்திருக்கிறார்களா என்று கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலே இவைகளைக் கண்காணித்து வருகிறார்கள். இவைகள் பாதுகாப்பாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அந்த நல்ல முறையை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கு ஒரு தனி வாரியத்தின் கீழே இருக்கிறது. வாரிய முறையை மாற்றி இந்த முறையை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் தலைமை)

இறுதியாக, விவேகானந்தா பாறைக்கு எல்லோரும் வந்திருக்கிறீர்கள். விவேகானந்தா பாறை இந்த நாட்டிலே இருக்கிறவர்களை மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களையும் ஈர்த்துக்கொள்கிற அளவிற்கு ஒரு சிறந்த அமைப்பாக இருக்கிறது. அதில் ஒரு அபாயம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முழுக்க முழுக்க வட நாட்டிலேயிருந்து வந்தவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் அது இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய பெரும் பணம் தான் அதனை உருவாக்கினதாக இருந்தாலும் கூட, அதன் மேல் கண்காணிப்பு இந்து அறநிலையத் துறைக்கு இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. காரணம் என்னவென்றால், ஒரு படகு போட்டு எல்லோரையும் அழைத்துச் செல்கிறார்கள்.

அமைச்சர்கள் வந்தால், இலவசமாக அழைத்துச் செல்கிறார்கள். மற்றவர்களுக்கு மூன்று ரூபாய் வாங்குகிறார்கள். மற்றவர்களுக்கு மூன்.று ரூபாய் வைத்து வசூல் செய்யப்படுகிறது. பெருந்தொகை தினசரி வசூலாகிறது. இன்றைக்கு அவர்கள் வட நாட்டிலேயிருந்து ஆட்களைக் கொண்டுவந்து, சமஸ்கிருத பாடங்களோடு, ஆர். எஸ். எஸ். என்ற ஸ்தாபனத்தையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 300 ஏக்கரா நிலத்தை வாங்கி அதிலே என்னவோ செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நல்ல முறையில் காக்கி நிக்கரும் கொடுத்து, பனியனும் கொடுத்து, லத்திக் கம்பும் கொடுத்து, பயிற்சி கொடுத்து ஆர்.எஸ்.எஸ். முகாமாக, இந்து வெறியை ஊட்டுகிற நிலையாக, மற்ற மதத்தவர்களோடு ஒரு காழ்ப்பு உணர்வை ஊட்டுகின்ற இடமாக அது ஆகிவிடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை, கடந்த தேர்தல் காலத்திலே நாங்கள் அனுபவித்தோம். இதுமாதிரிப் பல இடங்களில் அவர்கள் உருவாகி வந்துவிடக் கூடாது. தமிழகத்தில் இருக்கக்கூடிய அமைதி, எல்லா சமயங்களுக்குமிடையே இருக்கக்கூடிய ஒற்றுமை, எல்லா ஜாதிகளுக்குமிடையே இருக்கக்கூடிய ஒற்றுமை, எல்லா மொழி பேசுபவர்களுக்குமிடையே இருக்கக்கூடிய ஒற்றுமைக்கு, தென் கோடி குமரி முனையில், விவேகானந்தர் பெயரால் அமைக்கப்பட்ட இடத்தில், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் இடைஞ்சல் வந்துவிடக் கூடாதென்பதற்காக, அவர்களுடைய நடவடிக்கைகளை, இந்து அறநிலையத் துறையின் அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் கண்காணித்து, ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

7-30 பி.ப. * திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்க விவாதத்திலே பல அன்பர்கள் நல்ல நல்ல கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள். இன்றைய விவாதம் கூடுமான வரையில் மன நிறைவு அளிக்கிற வகையில் நடைபெறுவதுபற்றி என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையின் கொள்கை விளக்க விவாதம், முன்னாலே வருவாய்த் துறையோடு சேர்ந்ததாக இருந்தது. அப்போது இந்து அறநிலையத் துறை நிர்வாகத்தைப்பற்றித் தனியாக விவாதம் வைத்துக் கொள்வதில்லை. இந்த ஆண்டு இந்தப் புதிய முறையை செயல்படுத்தியதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: இது நான் சட்டப் போலையில் இருந்தபோது வேண்டிக்கொண்டதுதான், அப்போதே தனியாகப் போட்டு விட்டார்கள்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இந்தக் கொள்கை விளக்கம் நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டிருப்பதற்கு அமைச்சரவர்களையும், இந்தத் துறையைச் சேர்ந்த அனைவரையும் நான் மிக மிகப் பாராட்டுகிறேன். இதன்மூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆட்சியில் உள்ள கட்சியினர் எப்படி இந்தத் துறையை அணுகுகிறார்கள், ஆலயத் திருப்பணிகளைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பது பற்றியெல்லாம் விளக்கும் முறையிலே, முதல் பக்கத்திலும், இரண்டாம் பக்கத்திலும் வாக்குறுதி கொடுப்பதுபோல, நம்பிக்கை அளிக்கத்தக்க சில வாசகங்களைக் கண்டுபிடித்து வைத்திருந்தேன். அதை தம்முடைய சபையின் துணைத் தலைவர் அவர்களே குறிப்பிட்டார்கள். அவர்கள் கருத்துக்களை நம்பிக்கை அளிக்கத்தக்க வகையில் குறிப்பிட்டிருப்பது பற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அறநிலையங்களின் வருவாய் எவ்வளவு என்பவைகளையெல்லாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். இன்னும் எவ்வளவு இந்த மாநிலத்தில் ஆலயச் சொத்துக்கள் மறைந்து கிடைக்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பதற்காக சில ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்துள்ள முயற்சி பாராட்டத் தக்கது. அதுபற்றி இப்போதுள்ள அறநிலையத் துறை கமிஷனர் அவர்களிடமும், அவரோடு சேர்ந்து இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த உதவியாளர்களிடமும், புதிதாக நியமிக்கப்பட்டவர்களிடமும் பல சந்தர்ப்பங்களில், அங்கு சென்றிருந்த போது, அந்தப் பணியைப் பாராட்டி, மேலும் தொடர்ந்து நடக்க வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்தேன். இந்தப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். பல ஆண்டுகள் நடத்திக்கொண்டு போகக்கூடாது. தமிழ் நாட்டிலுள்ள கோவில்களின் சொத்துக்கள் மொத்தம் எவ்வளவு மறைந்து கிடக்கின்றனவென்பதைக் கண்டுபிடிப்பதற்கு, குறைந்த காலத்தில் கண்டுபிடிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இது சம்பந்தமாகப் போதுமான அதிகாரிகளையும், அலுவலர்களையும் நியமித்து, ஒரு காலவரையறைக்குள் கண்டுபிடித்து விட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. நான் சில சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். ஆலயங்களுக்கு வர வேண்டிய குத்தகை பாக்கியை வசூல் செய்வதற்கு, கூட்டுறவுத் துறையிலே எப்படி ரெஜிஸ்டிராரர்கள், டெபுடி ரெஜிஸ்டிராரர்கள் இருக்கிறார்களோ, அதேபோல் இத்துறையிலுள்ள அதிகாரிகளைப் போட வேண்டும். எனவே சட்டத்திலே ஏதாவது திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தாலோ அல்லது விதிகளைத் திருத்த வேண்டிய நிலையிருந்தாலோ, அவைகளைத் திருத்த வேண்டும். கோர்ட்டுக்குச் செல்லும்படியான நிலையில்லாமல், கூட்டுறவுத் துறையில் இருப்பது போல, அவர்களே தீர்ப்புக்களை வழங்க ஏற்பாடு செய்வது மிக மிகப் பொருத்தமாக இருக்கும். அதை அமைச்சரவர்கள் கருத்திலேகொண்டு, சீக்கிரமாக அதை நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 26

நமது மாநிலத்திலே பல்லாயிரக் கணக்கான கோவில்கள் இருக்கின்றன வென்பதை அறிகிறோம். அதிலே 200 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டு வருவாய் உள்ள ஆலயங்கள் 7,558 ஆகும். திரு. சி. பி. ராமசாமி ஐயர் கமிஷனர் சிபாரிசுகளில், சிறிய வருவாய் தரத்தக்க கோவில்களை நிர்வாகத்திலிருந்து எடுத்துவிடலாம் என்று இருப்பதாக எனக்கு ஞாபகம். 200 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை வருமானமுள்ள கோவில்கள் 7,558. நான் இந்தக் கோவில்களை நிர்வகிக்கும் பணியை விட்டுவிடலாமென்று கருதுகிறேன். இந்தக் கோவில்களுக்கு விளக்குச் செலவு எவ்வளவு ஆகிறதென்பதைப் பார்க்க வேண்டும். எல்லா சிறிய கோவில்களையும் சீர்திருத்தம் செய்வதாக நினைத்துக் கொண்டு, அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அத்தச் சிறிய கோவில் களுக்கு வேண்டியவற்றை அங்கங்கே உள்ள கிராம மக்களே செய்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அநேக கோவில்களுக்கு சென்று கவனிக்கிற்தால் நிலம் இருக்கிறது. அப்படிப்பட்ட கோவில்களை எடுத்துக்கொண்டு நிர்வாகம் செய்வது நடக்கக்கூடிய காரியமாவென்று பார்க்க வேண்டும். இவ்வளவு கோவில்களை எடுத்து நிர்வகிக்கிறோமென்று பெருமைக்குச் சொல்லலாமே தவிர, வேறு ஒன்று மில்லை. ஒரு கோவிலில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வந்தாலும், விளக்கு மற்றைய செலவுகளுக்கு அது போதாது. 80 ரூபாய் ஒரு மாதத்திற்கு வருமானம் வருகிறதென்றாலும்கூட, பூசாரி ஒருவர் அந்தக் கோவி லுக்கு இருப்பார். தினமும் விளக்குப் போடவும், வெள்ளிக் கிழமைகளில் நைவேத்யம், பூசை போன்றவைகளைச் செய்யவும் பூசாரி இருக்க வேண்டும். அவருக்கு மாதாந்திரச் சம்பளம் கொடுக்க வேண்டும். இவ்வளவுக்கும் இந்த 80 ரூபாய் போதுமானதாவென்று யோசித்துப் பார்க்க வேண்டும். இதை அரசும், அமைச்சரவையும், அந்த இலாகாவும் பரிசீலனை பார்க்க வேண்டும். எனவே இந்தக் கோவில்களை நிர்வாகத்திலிருந்து விட்டுவிடலாமென்பது என்னுடைய கருத்து.

அடுத்து, ஆலயங்களிலே பணி புரிகின்ற பணியாளர்களுடைய சம்பளம் பற்றிய குறைகளை பல்லாண்டுக் காலமாகச் சொல்லி வருகிறோம். எதிர்பாராத விதமாக மாண்புமிகு அமைச்சரவைக்கு மன நிறைவு அளிக்கத்தக்க வகையில் அவர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு அளிக்க ஏற்பாடு செய்ததை நான் பாராட்டு கிறேன். இந்த விளக்கக் குறிப்பிலே பல விவரங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அடிகளார் அவர்கள் சுட்டிப்பிட்டதுபோல, சில மடாலயங்கள் பல பெரிய பணிகளை கல்வித் துறையின் முன்னேற்றத்திற்காக செய்து வருகின்றன. அவைகள் கல்லூரிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. இவைகளையெல்லாம் சேகரிக்கும்போது, இந்த விஷயங்கள் விடுபட்டிருக்கலாம்.

1973 மார்ச் 26] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

வேண்டுமென்று இந்த விஷயங்கள் விடப்படவில்லை. தருமபுர ஆதீனம் போன்ற வைகள் பல சிறிய பள்ளிகளையும், பெரிய பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. தவத்திரு அடிகளார் அவர்களுடைய சில பள்ளிகளை நடத்திக்கொண்டு வரு கிறார்கள். அப்படிப்பட்ட எத்தனையோ பள்ளிகள் இருக்கின்றன. இந்தத் துறையிலிருந்து, எந்தெந்தத் துறைகளுக்குச் செலவிடப்பட வேண்டுமென்பதில் பாரும் அதிகமாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. 1952-லே இதற் கான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டபோது, தேவாலயத்தினுடைய சொத் துக்கள், நிதிகள் எந்த வகையிலே செலவிடப்படலாமென்பது அதிலே கட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. இப்போது செலவிடப்படக்கூடிய இனங்களுடன் அந்த விதிகளின்கீழ் வருமென்று நினைக்கிறேன். அவற்றை நன்றாக ஆராய வேண்டும். சட்டத்தைப் பூரணமாகத் திருத்த வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அந்த வகையிலே அவைகள் எல்லாம் நடைபெற்றுகொண்டு வருகின்றன. ஆகையால் அதையெல்லாம் நான் வரவேற்கின்றேன். அவைகள் நல்ல காரியங் கள்தான். திருக்கோயில் வருமானங்களை இன்னும் பெருக்குவதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். இந்தச் சொத்துக்களைக் கண்டுபிடிக்கும் துறையினர் ஒவ்வொரு கோயிலுக்கும் எவ்வளவு தரிசு நிலங்கள் ஏற்கெனவே இருக்கின்றன, எவ்வளவு தரிசு நிலங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று கணக்கிட்டு, அந்த நிலங்களையெல்லாம் என்ன செய்யலாம் என்றும் மதிப்பீடு செய்ய வேண்டும். அறங்காவலர்கள் ஓர் ஐந்து ஆண்டு காலத்திற்கு கோயில் களைப் பராமரிப்பதற்காக நியமிக்கப்படுகின்றார்கள். இவர்களை நியமிக்கின்ற முறைகளுக்கு காரணங்கள் வேறு இருக்கலாம். சில சமயங்களில் குஷ்டரோகி களும், குடித்துவிட்டு, புரளுபவர்களும்கூட நியமிக்கப்பட்டுவிடுகின்றார்கள் 4-30 அறங்காவலர்களாக. இது அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் அதிகாரிகளுக்கும் பி.ப. தெரிய முடியாது. இங்கு நான் சபைக்குள்ளே இருப்பதனாலே சொல்லுகின் றேன். இப்படிப்பட்ட குறைகள் சொம்ப இருக்கின்றன. இவைகளையெல்லாம் பற்றி ஊரில் உள்ளவர்கள் இந்த அரசைப் பற்றி, என் இந்த அரசு இவர்களை யெல்லாம் நியமித்தது என்றுதானே கருதுவார்கள்? ஆகவே, இதை அரசு சிந்தித்துப் பார்த்து ஆவன செய்ய வேண்டும். அறங்காவலர்களைப் பார்த்து நியமிக்க வேண்டும். அவர்கள் ஆபிசுக்கு அல்லது கோயிலுக்கு வருகின்றார் களோ என்னவோ அது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்கள் அந்தச் சொத்துக் களைப் பராமரிப்பதற்கு வேண்டிய அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சொத்துக்களை விருத்தி செய்து கொள்வதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அதிலெல்லாம் அக்கறை யில்லாமல் இருக்கின்றார்கள். ஒருவருக்கும் அந்தக் கோயில்களைப்பற்றிச் சிந்திப் பதற்கு நேரமேயில்லை. அப்படிப்பட்ட வகையிலே அவர்களுடைய நடவடிக்

கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏதாவது முக்கியமான உற்சவங்கள் இருந்தால், அமைச்சர் அவர்கள் யாராவது வந்தால், முன்னாலே வந்து போட்டோ எடுக்கும் வரையில் வந்து நிற்பார்கள். அன்றைக்குத்தான் பார்க்க லாம். மறுநாள் பார்க்க முடியாது. அக்கறையில்லாத அறங்காவலர்களை நியமிப்பது பொருத்தமாக இருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்கின் றேன். இவைகளை அரசும் அமைச்சர்களும் கவனத்திலே கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருக்கோவில் வரு வாயைப் பற்றி நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறங்காவலர்கள் அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று நினைக்கின்றேன். எங்கள் ஊரிலே ஒரு புதிய அறங்காவலர் போட்ட பிறகு, தேர் திருவிழாக்கள் எல்லாம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. மகா சிவராத்திரி மிக நல்ல முறையில் நடைபெற்றது. அந்த அறங்காவலர் அந்த கோயிலுக்குண்டான சொத்துக்களை கிட்டத்தட்ட ரூ. 2 லட்சத்திற்குக் கைப் பற்றியிருக்கின்றார்கள். எனவே, இதிலே அறங்காவலர்களால் நல்லது நடக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, இப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு நியமிக்கப்பட்டவர்கள் எல்லாருமே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எல்லாவிதமான கருத்துக்களையும் கொள்கைகளையும் ஒப்புக்கொள்பவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்று நானே சொல்லவில்லை. அறங்காவலர்களாக இருக்க அவர்களுக்கு விருப்பம் இருந்தது. இவர்களோடு ஒத்துழைத்தார்கள். அவர்களை அறங்காவலர்களாக நியமித்தார்கள். அறங்காவலர்கள் என்ற கண்ணோட்டத்தோடு அவர்கள் பணி யாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அதை நான் சொல்லவில்லை. அறங்காவலர் களாக நியமிக்கப்பட்டதற்குப் பிறகு சின்னம் உடைய வேஷ்டிகட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களோ என்று பார்க்கும்படியாக அவர்கள் உடை அணிந்திருந்தார்கள். அது தவறு இல்லை. அவர்கள் நன்றாக நிர்வாகம் செய்யட்டும். அவர்கள் நடைமுறையில் அறப்பணி செய்யக்கூடியவர்களாக வருகிறார்களா என்பதைப்பற்றி போகிக்க வேண்டும். நியமிப்பதுபற்றி நன்கு ஆலோசனை செய்ய வேண்டும். கொஞ்சம் போட்டி பொறாமை இருக்கும். நம் கட்சிக்குள்ளேயும் இருக்கின்றன. எல்லாக் கட்சிகளிலும் இருப்பதுதான் அது. நீண்டகாலம் தர்மகர்த்தாக்கள் நியமனமாகவில்லையென்று நான் கேட்டபோது

முன்னாள் அமைச்சர் அவர்கள், மாவட்டச் செயலர் ஒன்று சொல்கிறார், குறிப் பிட்ட ஜில்லா மந்திரி ஒன்று சொல்லுகின்றார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அறங்காவலர்களை நியமிக்க நாளாகும் என்று சொன்னார்கள். நாளாவது தவிர்க்க முடியாத காரியம்தான்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நான் இந்தமாதிரி அவர்களிடத்திலே தெரிவிக்கவில்லை. தெரிவித்திருந்தாலும், அதை இங்கே சொல்ல வேண்டிய தில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : முன்னாள் அமைச்சர் என்றுதான் சொன் னேன். கட்டிட பராமரிப்புக்களுக்காக செய்யக்கூடிய செலவுகள் பற்றிய விஷயம் பற்றிப் பேசுகின்றேன். இந்தத் துறையினுடைய கமிஷனர் அவர்கள் எங்கே சென்றாலும் எங்காவது கோவில் சுவர்களில் பச்சையாக ஒரு செடி சுவற்றிலே வளர்ந்திருந்தால் பார்த்தார்களானால், அது அவர் கண்ணை உறுத்திக் கொண்டேயிருக்கும். அதையெல்லாம் பார்க்கின்றபோது, அவ்வப்போது நீக்கவேண்டும் என்று அதற்காக ஒரு சின்ன கருவிகூட செய்து கையில் கொண்டு வந்தார்கள். கையிலே ஒரு சின்ன தடியை வைத்துக்கொண்டே அதையெல்லாம் வெட்டிவிட முடியும் என்று அவர் சொல்வார். முன்னாலே இருந்தவர்களும் அதை வற்புறுத்தினார்கள். அப்படிச் சொல்லியிருந்தும் தினந்தோறும் பணி பார்த்துகின்றவர்களுக்குத் தைரியம் ஏற்பட்டுவிட்டதோ என்னவோ, அல்லது அவர்களுக்குச் சலிப்பு வருகின்றதோ, அல்லது என்ன எண்ணங்கள் வருகின்ற தோ, உணர்வு மங்கி விடுகின்றதோ, எதனால் அவர்கள் அதைக் கவனிக்காமல் இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. அதையும் பார்த்து ஆவன செய்ய வேண்டும்.

இன்னும் அரசாங்கத் தேர் விஷயங்களைப் பற்றி நம்முடைய திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அடிகளாரும் குறிப்பிட்டார்கள். நானும் அதிலே அவர்களுடைய கருத்துக்கு உடன்படுபவன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த வகையிலே செலவு செய்வது இந்தக் காலத்திற்குப் பொருத்தமானது அல்ல. அந்தப் பணத்தையெல்லாம் இந்த நாட்டிற்கு நல்ல வழியிலே நல்ல பலன் அளிக்கக்கூடிய பல்வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். லட்சக்கணக் கிலே மதிப்புள்ள நகைகளைச் செய்து வைத்திருப்பதைக்கூட நாம் பாதுகாத்துக் கொள்வதற்காக இடம் பார்த்து வைக்க வேண்டும். அவைகள் சரிகப் பராம ரிக்கப்படுகின்றனவா என்று கணக்கு சரி பார்க்க டெபுடி கமிஷனர் அல்லது அஸிஸ்டென்ட் கமிஷனர் ரேடில் ஒருவர் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 26

அவரும் மனிதர் தான். அவர்கள் ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று அங்குள்ள நகைகள் எவ்வளவு சரியாக இருக்கின்றன என்று உரை கல்லே வைத்துக் கொண்டு, ஒவ்வொரு சின்னச் சின்ன நகையையும் உரைத்து, எத்தனே நாட் களுக்குப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? அது சொம்பக் கஷ்டமான வேலே யாகும். இருக்கக்கூடிய நகைகள் பற்றியும் இப்போது அரசு ஒரு நல்ல கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். அதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். தேவையான அளவுக்கு அலங்காரம் செய்து சாமியை எழுந் தருளச் செய்து பவனி வரலாம். எந்த அளவுக்கு நகைகள் இதற்கு வேண்டு மோ அதற்குமேல் நகைகள் இருக்கக்கூடாது என்று இருக்க வேண்டும். புதிதாக நகைகள் செய்யக்கூடாது என்று விதிப்பது நல்லது. அதிகமாக நகைகளேப் போட்டு பவனி வருகிறதைப் பார்த்தால்கூட கண்ணுக்கு நமக்கே கூட அழகாகப் படவில்லே. இயற்கையான அந்த முகம், விழி இவைகளுடன் உருவம் சரியாகத் தெரியமுடியாதபடி நகைகள் செய்து விடுகின்றன. சில இடங்களில் சாமியின் பாத தரிசனத்தைக் கூட சரியாகப் பார்க்க முடியாது. பாதம் தெரிய வேண்டியது முக்கியமானதாகும். ஆனால், சாமி பாதமே நமக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அலங்காரம் செய்துவிடுகின்றார்கள். அந்த மாதிரி அளவுக்கு அதிகமான பணத்தைச் செலவு செய்யக்கூடாது.

இப்போது ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஒரு தேர் இருக்கின்றது. அது முழுத் தேர். திருவாரூரில் உள்ள தேர் முழுத்தேர் அல்ல. செங்கோட்டைப் பகுதிகளில் தேர் செய்பவர்கள் இருக்கின்றார்கள். சிற்ப வேலேகள் செய்பவர்கள் இருக்கின் றார்கள். அவர்களேக் கேட்டால் சொல்வார்கள். சாமி பிடம் வைக்கக்கூடிய இடம் இருக்கின்றதே, அது 42½ அடி உயரத்தில் பூமியிலிருந்து உயர்ந்திருக்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் தேர்தான் முழுத்தேர். அந்தத் தேரைப் பிரித்து நன்றாக ஓடும்படியாகச் செய்வோமானுல்கூட அது முழுத்தேர் என்று சொல்லிக் கொள்ள முடியாது. திருவண்ணுமலையிலே உள்ள கோபுரம், ஸ்ரீவில்லிபுத்தூரிலே உள்ள கோபுரம் இரண்டும்தான் தமிழ் நாட்டிலேயே பெரிய கோபுரங்கள். கிட்டத்தட்ட ஒரு அடி அல்லது இரண்டு அடி உயரம்தான் அவைகளுக்கு இடையே வித்தியாசம் இருக்கலாம். அதை என்ஜினியர்கள்தான் பார்த்துச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நீங்களே பார்த்துச் சொல் லுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அதை என்னுலே சொல்ல முடியாது. உயர மாக திருவண்ணுமலைக் கோயில் கோபுரம் 1 அடி, 2 அடிகள் வித்தியாசமாக

1973 மார்ச் 26] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

இருக்கலாம். அதுபற்றிச் சர்ச்சை வேண்டாம். பெரிய கோபுரங்கள் இரண் டாக இருக்கின்றன என்பதற்காகச் சொன்னேன், அவ்வளவுதான். அதுபோல தேர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் திருவாரூரிலும் இரண்டு இருக்கின்றன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: திருவாரூர் தேர் அழகு என்று சொல்லியிருக்கின்றார்கள். திருவாரூர் தேர்தான் உயர்வு. இவர்கள் ஊருக்கு அந்த அழகைக் கொண்டுபோக நான் விரும்பவில்லே.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் அமைப்பில் அழகு, எங்கள் ஊர் என்பதற்காக அதைச் சொல்லுகின்றேன் என்று சொல்லக் கூடாது. அந்த கோபுரத்தினுடைய அமைப்பு, பக்க வாட்டு வடிவமைப்பு போல வேறு எங்கேயும் நீங்கள் பார்க்க முடியாது. சித்திரங்களும் கதை வேலேகளும் அதிக வேலேப்பாடுள்ளதாக இருக்கக் காணலாம். நிறைய சித்திரங்கள் இருக்கும், வேலேப்பாடுகள் இருக்கும், உருவங்கள் இருக்கும். அந்த கோபுரத்தின் பக்க வாட்டிலே கீழிருந்து மேல்வரைக்கும் சென்றிருக்கின்ற வடிப்பத்தை போல வேறு எங்கும் அமைத்திருக்க முடியாது. அப்படியிருக்கின்ற கோபுரத்தின் திருப்பணி வேலேகள் அதிக நாளேக்கு நீடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்னும் எத்தனே வருடங்களுக்கு நீடிக்குமோ தெரிய வில்லே. அந்த வேலேயைக் கொஞ்சம் வேகமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நூலகங்கள் சில கோவில்களில் பேருக்கு இருக்கின்றன. வைத்திருப்பதே தெரியாது. கேட்டால் கொடுக்கலாம் என்று பேசாமல் வைத்திருக்கின்றார்கள் அநேக இடங்களில். இதைக் கவனிக்க வேண்டும். வழிபாட்டு பயணிகள் விடுதி கட்டுவதற்கு இந்தத் திருப்பணிக் கமிட்டியிலிருந்து கூட ஒரு டிரஸ்ட் உதவியால் சில ரூம்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் சுற்றுலா பணித்துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அரசு அங்கே ஒரு கட்டிடம் கட்டுவது மிகவும் அவசியம் என்று தெரிவித்திருக்கிறேன். 7–50 பி.ப.

அறங்காவலர்கள் நியமனம்பற்றிச் சொல்லுகிறபோது ஒன்று கூட யோசிக்க வேண்டும். அறங்காவலர்களே நியமித்தால், அந்தக் கோவில்களுக்கு இருக்கக் கூடிய விவசாய நிலங்கள், நகர்ப்புற நிலங்கள், நிரந்தர, கட்டிடங்களாக இல்லாமல் நல்ல விலே பெறுமானதாக இருந்தும் அவைகளே ஏதும் அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளாமல், என்ன அபிவிருத்தி செய்தீர்கள் என்று கேள்வி கேட்காமல் விட்டு வைத்திருப்பது எதற்காக? அவர்கள் எதற்

[திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 26

காக வருகிறார்கள்? இந்தப் பொறுப்பு வகிப்பவர்கள் இந்தச் சொத்துக்களை நல்லபடி நிர்வகிப்பதற்கு, அதனுடைய மதிப்பை உயர்த்துவதற்கு, என்ன என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் பேருக்கு அறங்காவலர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுமே செய்யாமலிருந்தால் அவர்களைப் பற்றிக் கேட்பதற்கு தகுந்த ஒரு ஏற்பாடு இந்தத் துறையில் இருந்தால் நல்லது. அரசாங்கம் அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பதவிக்கு வருகிறேன் என்று சொல்லுகிறவர் அவசரப்பட்டுக்கொண்டு வரமாட்டார், மனுப் போடமாட்டார். பொறுப்புள்ளவர்கள் தவறு செய்யமாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நியதியை ஏற்பாடு செய்வது மிகவும் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மண மக்களுக்கு வேஷ்டி, புடவை, தாலி முதலியவைகளை அளித்து, திருமணம் திருக்கோயிலில் நடத்தி வைக்கப்படுகிறது என்று கண்டிருக்கிறது. கல்யாணம் பண்ணுவதற்கு மணவியைத் தேடி, மணவி புருஷனைத் தேடி எந்த ஏழையாக இருந்தாலும் சிறிது பணம் 'தேடிக்கொள்ள வேண்டும்'. அவர்களுக்குக் கட்டணம் ரூ. 5 அல்லது ரூ. 10 வேண்டாம். கோயிலில் வேண்டிய காரியங்களையெல்லாம் பண்ணிக் கொடுக்கலாம். கலியாணச் செலவு இன்றி திருமணம் நிறைவேற்றப்பட்டு, எந்தவிதப் பொறுப்பு இல்லாமலும், அங்கே வந்து கல்யாணம் பண்ணிக் கொண்டு போகிற மாதிரி, அவ்வளவு இலகுவாக அந்தப் பொறுப்பை அவர்கள் உணராத வகையில் மனவாக நடத்தி வைக்கிற மாதிரி, இந்த ஏற்பாடு இருக்கிறது. அடிகளாரும் யோசித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களும் யோசித்துப் பார்க்க வேண்டும். அங்கே திருமணம் செய்துகொள்ள வருபவர்கள் ரூ. 100 செலவு செய்வதற்குக் கூட தனியாக ஒரு தொகையைச் சேர்த்துக்கொண்டு வராமல், திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற அவசரத்துடன் எந்த விதமான உத்தரவோ முயற்சியோ எதுமின்றி கையை வீசிக் கொண்டு வருவது, வேஷ்டியைக் கொடு, அதைக் கொடு, தேங்காயைக் கொடு, கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளுகிறோம் என்று அவ்வளவு சுலபமாக இருக்கிறது. அவர்கள் எத்தனையோ வருஷங்கள் கூடி வாழ வேண்டிய பொறுப்பு இது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கையை வீசிக் கொண்டு வந்து தேங்காயைக் கொடு, பழத்தைக் கொடு என்று அதட்டிக் கேட்கக்கூடிய நிலையில் இருப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருப்பவர்கள், பிற்பட்ட சமுதாயத்தில் இருக்கும் ஏழை மக்கள் தங்கத் தாலியோ, வேஷ்டியோ, சேலையோ வாங்கக்கூட காசு இல்லாதவர்களைப்பற்றிக் கவலைப்பட்டுத் தான் இந்த நிட்டத்தைச் சொல்லியிருக்கிறேன்.

1973 மார்ச் 26]

* **துணைத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில், குறிப்பாக தமிழ் நாட்டில் சராசரி ஒரு ஏழை கடைநிலை ஊழியர் வருமானம் எவ்வளவு என்பது நம்முடைய எதிர்க் கட்சி உறுப்பினருக்கும் தெரியும். குறைந்த ஊதியத்தில் வேலை பார்க்கிற, சம்பாதிக்கின்ற ஆனால் திருமணத்திற்காகச் சேமித்துக் கொள்ள முடியாது இருப்பவர்களுக்குத் தானே தவிர, பொறுப்பற்ற மாதிரிச் செய்வதல்ல. இருப்பவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதில் இன்னொரு கொள்கையும் இருக்கிறது. அந்தக் கோவில் ஊழியம் செய்கிற ஊழியர்களுக்கு முன் இடம் கொடுத்து திருமணம் செய்வதாக இருப்பதால், பொறுப்பற்ற தன்மையை வளர்க்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு: அவர்கள் பொறுப்பற்றவர்களாக இருப்பார்கள் என்று நான் சொல்லவில்லை. கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறவர்கள், அவர்களுக்கு எந்தப் பொறுப்புமே இல்லாமல் வந்து திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் வருவது நல்லதா என்பது பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: மதுரையில் தர்மி என்பவர், பூஜை செய்து கொண்டிருந்தவர் கல்யாணம் ஆகாமல் இருந்ததாகப் புராணத்தில் வருகிறது. அதுமாதிரி தர்மிகள் வரக்கூடாது.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அமைச்சர் பதிலளித்த பிறகு அவையின் நிகழ்ச்சிகள் முடிவுறும்.

திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு: இந்த இலாகாவில் வெளியிடக் கூடிய பத்திரிகையை அங்கத்தினர்களுக்கு இலவசமாக அனுப்ப வேண்டுமென்று யாரோ ஒருவர் சொன்னார்கள், திருக்கோயில் பலம் தானே என்று. டி.வி. பணத்தில் பிடித்துக்கொண்டு அனுப்பிவிடலாம். மொத்தத்தில் இந்தத் துறையிலிருந்து கொண்டுவரப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பை நானும் மற்றவர்களோடு மனமாரப் பாராட்டி ஏற்றுக்கொள்வதோடு, நான் சொன்ன யோசனையும் சற்று மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் கொள்கைக் குறிப்பின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய சிறந்த கருத்துக்களை இவ்வளவு நேரம் இந்த மன்றத்தில்

[திரு. மு. கண்ணப்பன்] [1973 மார்ச் 26

தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, கொஞ்சம் கூடாக விளைநிலங்கள் நடை பெறுகின்ற நிலைமைகள் மாறி, இன்றையதினம் அத்தனை பேரும் இருக்கின்ற குறைபாடுகளைக்கூட நேர்ந்த நாகரிகமான முறையில் சுட்டிக்காட்டி, அவை களெல்லாம் எதிர்காலத்தில் களையப்பட வேண்டுமென்று அறிவுரை சொல்லுவது போல், இங்கே உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த நல்ல அறிவுரைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் இருக்கிற சிறிய குறைபாடுகளைக்கூட களைந்து, சிறந்த முறையில் நிர்வாகத்தைச் சீர்படுத்த முயற்சிகளையெல்லாம் இந்தத் துறையில் மேற்கொள்வோம் என்பதை ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே குறிப்பாக பேசுகிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டவனிடத்தில் நம்பிக்கை உள்ள வர்களா அல்லது இல்லையா என்ற சர்ச்சையை எல்லாம் கிளப்பி, அதற்கு நம்மூடைய மாண்புமிகு சிலம்புச் செல்வரும் நம்மூடைய மாண்புமிகு அடிக ளாரும் சிறந்த பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, நான் மீண்டும் அதற் குள்ளே செல்ல விரும்பவில்லை. எங்களுடைய மறைந்துவிட்ட தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற நாங்கள் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை ஏற்றுப் பணியாற்றுகிறோம். எத்த மத சம்பிரதாயங்கள் இருந்தாலும், அவைகளில் தலையிடாமல் ஒதுங்கி இருந்து அந்த மதத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதும், அவர்களுக்குத் தேவை யான வசதிகளைச் செய்து கொடுப்பதும் ஒரு அரசாங்கத்தின் கடமையாகும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் பணியாற்றுகிறோம் என்பதை அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அதேபோல் இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்ற கலைஞர் அவர்களும் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கருத்தைச் சொன்னார்கள். கோவில் கூடாது என்பது எங்கள் கொள்கை அல்ல. ஆனால் கோவில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பது தான் நம்மூடைய நோக்கம் என்று நமது கலைஞர் அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஆட்சிக்கு வருவோம் என்று நினைப்பதற்கு முன்னாலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கையைப் பின்பற்றித் தான் இன்றைய தினம் இந்தத் துறையின் நிர்வாகம், பார் பாரிடத்திலோ கோவில் சொத்துக்கள் சிக்கியிருந்தாலும் அவைகளை எல்லாம் மீட்டிக்கொண்டு வந்து ஆண்டவனுக்குச் சேர்த்து அதன் மூலம் சமுதாயத்திற்குப் பயனடையத் தக்க சிறந்த காரியங் களை இன்றையதினம் நாங்கள் செய்துகொண்டு வருகிறோம். இங்கே சிறந்த யோசனைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக் கிறார்கள். கோவில் வருவாய் அதிகமாகக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், வயது முதிர்ந்தவர்களை எல்லாம் வேலைக்கு வைத்துக்கொள்ள

1973 மார்ச் 26] [திரு. மு. கண்ணப்பன்]

வேண்டுமென்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கோவில் வருவாயைப் பெருக்கு வதில் சிரிய கவனத்தை இந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகள் கடந்த காலத்திலே செலுத்திய காரணத்தினால் தான், கோடிக் கணக்கான ரூபாய் வருமானம் நாம் அதிகம் பெற்றிருக்கிறோம். ஆனால் குறிப்பிட்ட நிலத்திலே 8.00 வருகின்ற வருமானத்தைப் பொறுத்த வரையில், இன்னும் தீவிரமான கவனம் பி.ப. செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட் டார்கள். அது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இடையிலே வந்திருக்கின்ற சில சட்டங்கள் காரணமாக, கோயில் நிலத்திலேயே நாம் அந்தச் சலுகைகளை யெல்லாம் கொடுக்கின்றோம். கோயில் நிலத்தின் மூலம் வருகின்ற வருவாய் ஓளவு குறைந்துவிட்டாலும் கூட, அதனாலே பயன் பெற்றிருக்கின்ற ஏழை எளிய உழவர்கள் இதை மனமாரப் பாராட்டியுள்ளனர். அதே மாதிரி இந்து சமயத்தினுடைய கோட்பாடுகளை மனதிலே நிலைக்க வைத்துக்கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட கோவில் நிலத்திலே வருகின்ற வருமானத்தை வசூல் செய்யவும், அந்த குத்தகையாக இருந்தாலும் அல்லது வேறு வகையிலே வருவதாக இருந்தாலும் அதையெல்லாம் அதிகப்படுத்தி வசூல் செய்வதற்கு எதிர்காலத்திலே நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். இங்கே வேறுசில கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். குறிப்பாக கோயில்களிலே இருக்கின்ற வேறு எத்தனையோ காரியங்களைச் செய்தாலும், தங்க ரதங்களோ, வெள்ளி ரதங்களோ, வேறு ரதங்களோ தேவையில்லையென்ற கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்தக் கருத்தையே நாங்களை சொன்னால், அதற்கு வருகின்ற விமர்சனமே வேறாக இருக்கும். ஆகவே விமர்சனம் செய்கின்ற உறுப்பினர்களாக இருக்கும் சில உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் நம்மூடைய சிலம்புச் செல்வரும் அடிகளார் அவர்களும் இந்தக் கருத்தை பலமுறை எங்களிடத்திலே வற்புறுத்திக் கூறிவருகிறார்கள். அவர்கள் வற்புறுத்திச் சொன்னாலும் கூட நம்மூடைய மதிப்பிற்குரிய சுதந்திரா கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் தங்க ரதமோ, வெள்ளி ரதமோ தேவையில்லையென்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய மேலான கருத்தையே மதிப்பிற்குரிய பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த இரண்டு பேர்களுடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கின்ற வகையில் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு எதிர்காலத்திலே இப்படி தங்க ரதமோ, வெள்ளி ரதமோ கோவில்களிலே செய்ய வேண்டியதில்லை யென்று அறநிலையத் துறை கோயில்களுக்கெல்லாம் அறிவுரை வழங்குமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 26

அடுத்து, இந்து மதத்திலே மட்டும் நிர்வாகத்திலே இந்த அரசாங்கம் தலையிடுகிறது என்று குற்றம் சாட்டினார்கள். எப்படித் தலையிடுகிறோம் என்று சொல்லுகிறார்கள் . . .

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவரவர்களே, கோயில் நிதியிலிருந்து செய்யக்கூடாது என்பதுதானே தவிர, இப்போது பல கோயில்களிலே பொதுமக்களிடமிருந்து வசூல் செய்கின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து வருகின்ற முயற்சியைத் தடை செய்ய வேண்டாம். பொதுமக்களிடத்திலே இருக்கும் ஆர்வத்தைத் தடை செய்யவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான் இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். கோயில் நிதியைத்தான் நான் சொல்லுகிறேன். தனியார் நன்கொடை தந்தால், தாராளமாகச் செய்யலாம். அதைப் பயன்படுத்துவதற்கு நம்முடைய துறை தயாராக இருக்கிறது என்ற விளக்கத்தை நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்து மதத்தினுடைய நிர்வாகத் துறையிலே மட்டும்தான் அரசாங்கம் தலையிடுகிறது என்று குற்றம் சாட்டினார்கள். தலையிடு என்று எதை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. மத சம்பிரதாயங்களிலே நாங்கள் தலையிடுவதில்லை. மேலவையிலே கூட ஒரு கேள்வியை சுதந்திரா கட்சியினுடைய தலைவர் அவர்கள் ஒரு நேரத்திலே கேட்டார்கள். சுதந்திரா கட்சியின் தலைவர் கேட்கவில்லை. ஒரு உறுப்பினர் கேட்ட நேரத்திலே நான் சொன்ன பதிலை அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். சில கோயில்களிலே சட்டையைக் கழட்டி வைத்து விட்டுத்தான் கோயிலுக்குள்ளே செல்லவேண்டுமென்ற முறை இருக்கிறதே, அந்த முறை மாற்றப்படுமா என்று இந்த அவையிலே கேட்கிற நேரத்திலே கூட, சம்பிரதாயங்களிலே எல்லாம் இந்த அரசாங்கம் தலையிடாது என்று சொன்னேன். அவர்கள் பாராட்டைத் தெரிவித்தார்கள். அதே முறையைத்தான், கொள்கையைத்தான் பின்பற்றிக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம்: எனக்குத் தெரிந்த வரையில், மதுரைக் கோயிலில் சட்டை போடாமல் தான் போக வேண்டுமென்ற பழக்கம் ஒரு 5, 6 வருஷங்களுக்குள் தான் வந்தது. அதற்கு முன்னால் கிடையாது. மூலஸ்தானத்திற்குள் சட்டை போட்டுக்கொண்டு வரக்கூடாதென்று சொல்லியதால், பலபேர் கோயிலுக்குப் போகாமலே வெளியேயிருந்து சுவாமி தரிசனம்

1973 மார்ச் 26] [திரு. மு. கண்ணப்பன்]

பண்ணுகிறார்கள். அதனால்தான் அய்யனார் அம்பலம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே சொன்னதற்குப் பின்னால் அந்த முறை மாற்றியமைக்கப்படுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற சில கோயில்களிலே இருக்கின்ற முறையிலே, பெரியவர்கள் சொல்லும் போது அதில் தலையிடுகின்றோம். நாங்களாகவே அதைச் செய்தால் ஏதாவது குறைபாடுகளைச் சொல்லினிடுவார்களோ என்ற பயத்தினால்தான் தயங்கிக் கொண்டிருக்கிறோமே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. அங்கே இருக்கின்ற சிறந்தவர்கள், கோயில் நலத்தில் அக்கறை இருக்கின்ற பெரியவர்கள் எல்லாம் சொன்னதற்குப் பின்னால், கோயிலிலே அந்த முறையை மாற்றியமைக்கும் வழி வகைகளிலே இந்த அரசு ஈடுபடுமென்று எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன். மதத் துறையிலே, சம்பிரதாயங்களிலே, பழக்கவழக்கங்களிலே தலையிடாமல் நாங்கள் இருக்கிறோம். அதே நேரத்திலே கோயில் சொத்துக்களைப் பராமரிக்கவும் கோயிலிலே வருகின்ற வருமானத்தைப் பாதுகாக்கவும் தலையிடத்தான் வேண்டிய நிலையிலிருக்கிறோம் என்பதையும் அந்தக் காரியங்களிலே தலையிடுவது தவறு என்று உறுப்பினர்கள் யாரும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கமாட்டார்கள் என்றும் நம்புகிறேன். ஆகவே கோயில் நிலங்களை, கோயிலுக்குச் சொந்தமாக மாற்றுவதாக இருந்தாலும் அல்லது கோயிலுக்குச் சொந்தமான வேறு சொத்துக்களை கோயிலுடைய உடைமையாகக் கொண்டு வருவதிலும் தலையிட்டுத்தான் நாங்கள் அந்தக் காரியங்களைச் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். அப்படிப்பட்ட சொத்துக்களைக் கொடுப்பதற்கு நாம் எல்லா வகையான நடவடிக்கைகளையும் இந்த நேரத்திலே எடுத்திருக்கிறோம். திருப்பணியிலே கூட ஊழல் என்று சொல்லி திரு. சுந்தரேசத் தேவர் அவர்களை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கிவிடுவதாக இருந்தாலும், சட்டப்படி விட்டு வைத்திருந்தார்கள். இன்றையதினம் அதையும் கூட பட்டியலில் சேர்த்து விட்டார்கள். எங்கேயாவது சில இடங்களிலே தவறு நடந்திருந்தால், அதை என்னுடைய கவனத்திற்காவது அல்லது ஆணையாளருடைய கவனத்திற்காவது கொண்டுவந்திருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்கள் அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கிவிடுவதாக இருந்தாலும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, கோயில் காரியங்களிலே இப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்க எந்த நேரத்திலேயும் நாங்கள் தயங்கியதில்லை. எதிர்காலத்திலும் நாங்கள் தயங்கமாட்டோம் என்பதைத் தெளிவாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடித்து, மத்திய அரசுக் கோயில்களையெல்லாம் நம்முடைய திர்வாகத்திலே கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். இங்கே கொள்கைக் குறிப்பிலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். தமிழகத்திலே இருக்கிற நூறுக்கு மேற்பட்ட கோயில்களை, குறிப்பாக பழம் பெருமை வாய்ந்த அந்த ஆலயங்களை யெல்லாம் மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சித்திரைத் திங்கள் 1-ஆம் தேதி அன்று நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தஞ்சை பெரிய கோயிலின் சார்பில் அங்கே ராஜ ராஜ சோழனுடைய சிலையைத் திறந்து வைத்தார்கள். நம்முடைய மெம்புச் செல்வர் அவர்களும் அடிகளார் அவர்களும் அதிலே கலந்துகொண்டு சிரிய உரைகளையெல்லாம் நிகழ்த்தினர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஒரு விளக்கம் கேட்க ஆசைப்படுகிறேன். ராஜ ராஜ சோழனுடைய சிலையை கோயிலுக்கு வெளியே வைத்தோம். அதிலே ஏதாவது மண்டபம் கட்டுவது என்று இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன். எனென்றால் ஏதோ ஒரு சீற்றுக் கொட்டகை போட்டிருக்கிறார்கள். அதுவும் கூட மழை வந்தால் பிய்த்துக் கொண்டு போய்விடுகிறது. ஆகையால் அதற்கு மண்டபம் மாதிரி ஏதாவது ஒன்றைக் கட்ட அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ராஜ ராஜ சோழ னுடைய சிலையை அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட குழுவின் சார்பிலே திறவி பிருக்கிறோம். அந்தக் குழுவின் ஒப்புதலைக் கேட்டு, அந்தச் சிலைக்கு மேலே மண்டபம் எழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முயற்சிகளிலே சடுபடுவோம் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அப்படி மத்திய தொல் பொருள் ஆராய்ச்சிக்கு சம்பந்தப்பட்ட கோயில்கள் நூற்றுக்கு மேற்பட்டவை இருப்பதை நாம் காண்கிறோம். தஞ்சையிலே இருக்கிற பெரிய கோயிலாக இருந்தாலும், இன்னும் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு கோயிலாக இருந்தாலும், அவைகள் மாநில அரசிடம் இருக்கிறதா அல்லது மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிலே இருக்கிறதா என்பதைப் பார்த்தவுடன் தெரிந்துகொள்ளலாம். அந்த அளவுக்கு அவர்கள் அவைகளைப் பராமரிக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் அந்தக் கோயில்களை நம்மிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்கின்றபோது, அவர்கள் சொல்லும் காரணம், "அதிலே இருக்கின்ற கலையையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். இந்த அரசாங்கத்திடம் ஒப்படைத்தால், அதைப் பாதுகாக்கத் தவறிவிடு வீர்கள்" என்று சொல்லுகிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே

இருக்கின்ற கோயில்களை, தமிழ் மண்ணிலே எடுக்கப்பட்ட கோயில்களை, தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், அத்தனையும் தெரிந்தவர்கள் ஆட்சி நடத்து கின்ற நேரத்தில் அந்தக் கோயிலை ஒப்படைத்தால், எப்படி மாறிவிடுமென்று வடக்கே இருப்பவர்கள் தமிழ் நாட்டுக் கலைபற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எப்படிச் சொல்லுகிறார்கள் என்பது நமக்கு வியப்பாக இருக் கிறது. அந்தக் கோயில்களை நம்மிடத்திலே ஒப்படைப்பது மத்திய அரசாங் கத்தினுடைய கடமை என்று இங்கே உறுப்பினர்கள் எல்லாம் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். எல்லாக் கட்சியினருடைய வற்புறுத்தலைக் கேட்ட பிறகாவது மத்திய அரசாங்கம் அவைகளை நம்மிடத்திலே ஒப்படைப்பார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

இன்னும் சில கருத்துக்களை நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மடங்கள், கல்வி நிலையங்கள்பற்றி யெல்லாம் நம்முடைய கொள்கைக் குறிப்பிலே காணவில்லையென்று சொன் னார்கள். நம்முடைய பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். தெய்வீகப் பேரவையே கூட அதிலே குறிப்பிடு வதற்கு விடப்பட்டு போய்விட்டது. நேற்றையதினம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் நினைவூட்டிய பின்னால்தான் அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் அறிந்தோம். ஏதோ வேண்டுமென்று விடப்படவில்லை. அப்படிச் சில குறைபாடுகள் இருந்தாலும் கூட, அந்தக் குறைபாடுகளை நீக்கி விட்டு, தெளிவான ஒரு குறிப்பை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு எதிர் காலத்திலே முயற்சி எடுத்துக்கொள்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்திற்கு கோயில் நிதிகளைப் பயன்படுத்துவதை வரவேற்றுச் சொன் னார்கள். இந்தத் துறையிலேயே அவர்கள் நல்ல பொறுப்பேற்று, தெய்வீகப் பி. பேரவையினுடைய பொறுப்பையேற்று ஒரு மடத்திற்கு ஆதீன கர்த்தராக இருந்து, சிறந்த முறையில் தமிழ் நாடு பூராவும் இந்த சமயத் தத்துவங் களையும், தமிழ் நாட்டுப் பெருமையையும், தமிழ் மொழியின் பெருமையையும் எடுத்துச் சொல்லி வருகிற அவர்களை வரவேற்கிற நேரத்தில் அதில் கருத்து வேற்றுமைக்கு இடமிருக்காது என்று நம்புகிறேன். இன்னும் கூடச் சொன் னார்கள். கிருஸ்துவர்கள் தங்கள் மதத்தை வளர்க்கப் பயன்படுத்துகிற முறை களை, மற்ற மதங்களைப்பற்றிச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையிலே, நான் எந்த மதத்திலேயும் பற்றுக்கொண்டவன் அல்ல என்றாலும் கூட, இந்து மதத்தினுடைய துறையின் பொறுப்பையேற்றிருக்கிற காரணத்தினால் ஒரு சிறிய

கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கிற மக்கள், தமிழகத்தில் இருக்கிற மக்கள் மதம் மாறுகிற நிலைமையைப் பார்க்கிறோம். திருஸ்துவ சமயத்திற்கு மாறுகிற நிலைமையை தமிழ் நாட்டில் பார்க்கிறோம். தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள், வசதியில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், இவர்களிடத்தில் இந்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குத் தேவையான வசதிகளையெல்லாம் செய்து தந்து, பள்ளிக்கூடம் இல்லையென்று சொன்னால், கட்டித் தந்து, மருத்துவ வசதி இல்லையென்றால் மருத்துவ மனை கட்டி வசதி செய்து கொடுத்து, இத்தனையும் செய்து இதற்குப் பின்னாலே எசுபிரான் கருத்துக்களை அவர்கள் மனதில் புகுத்தி, அவர்களைத் தங்கள் மதத்தில் ஈர்க்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். நாம் இந்து மதத்தில் இருக்கிறவர்கள் தொடர்ந்து இந்த மதத்தில் இருக்க வேண்டுமென்று தான் இரவு பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், அனுதை, சௌிடர், ஊமையர் போன்றவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் அமைக்கிறோம். இதைத் தவறு என்று சொல்வது எந்த வகையில் பொருத்தமாகும் என்று புரியவில்லை. இப்படிச் சொல்கிறதையெல்லாம் செய்யுங்கள், கோயில் நிதி முழுவதையும் செய்ய வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள். கோயிலுக்குச் செய்வது போக மீதியிருக்கிற நிதியில் செய்கிறோம். ஒவ்வொரு கோயிலுக்கும் திருப்பணி செய்ய வேண்டும். எல்லாக் காரியங்களும் நடைபெற்று மீதியிருந்தால் செய்யுங்கள் என்று சொன்னால், அந்தக் கணக்கைப் பார்த்தால், கோயில்களில் வருகிற வருமானத்தை இந்த 13 ஆயிரம் கோயில்களுக்குச் செலவு செய்யத்தான் சரியாக இருக்கும். இருந்தாலும் ஆங்காங்கே வருகிற நிதி வருமானங்களை வைத்துக்கொண்டு, நன்கொடைகளை வைத்துக் கொண்டு, செய்யவேண்டிய திருப்பணிக் காரியங்களை எல்லாக் கோயில்களிலும் செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த தமிழ் நாட்டிலே நடைபெற்று வந்த கோயில்களுடைய திருப்பணிகள் ஒரு ஆண்டிற்கு சுமார் 200 கோயில்கள் என்ற அளவிலே தான் செய்தார்கள். இந்த ஆண்டிலே 700 கோயில்களை எடுத்திருக்கிறோம். அடுத்த ஆண்டு 1,500 கோயில்களை திருப்பணி வேலைக்கு எடுக்க இருக்கிறோம். திருப்பணிக்குக் கூட எந்த வகையிலேயெல்லாம் நிதிகளைத் திரட்டலாம் என்று யோசித்துக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் எற்படுமானால், இந்தக் குறை கூட எதிர்காலத்தில் இருக்காது என்று, என்னைப் பொறுத்த அளவிலே, கருதுகிறேன்.

அடுத்தபடியாக, உயர்திரு சுவாமிநாதன் அவர்கள் பேசுகிற நேரத்தில் திருப்பாச்சூர் திருப்பணியைப்பற்றியும், வடலூர் ராமலிங்க அடிகள் கோயில்

பற்றியும் குறிப்பிட்டார்கள். அந்தத் திருப்பாச்சூர் திருப்பணி வேலையும் துவங்கப்படாமல் இருந்தால் வெகு சீக்கிரத்தில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். நீண்ட காலமாகத் தேங்கியிருக்கிற வேலை, நடக்காமல் இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். அந்த வேலை கூடத் தேங்கியிருப்பது, அங்கே திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு அவர்கள் சரியான முறையில் செயல்படாத காரணத்தினால், என்று சொல்லி தரையிலிருந்து குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். என்ன குறை என்று கண்டறிந்து அந்த வேலைகளைச் சீக்கிரத்தில் துவங்க நடவடிக்கைகளை எடுக்கிறோம். அதே மாதிரி வடலூர் ராமலிங்க அடிகள் கோயிலைப்பற்றிச் சொன்னார்கள். உயர்திரு மகாலிங்கம் அவர்கள் தலைமையிலே ஏற்படுத்தப் பட்டிருக்கிற திருப்பணிக் குழு நல்ல முறையிலே எதிர்காலத்திலே செயல்படுவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதற்கு இந்தத் துறையிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக்கொள்கிறேன். பழமுதிர்சோலையைப்பற்றி திரு. அய்யாணன் அம்பலம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே காலையில் கூட சட்ட மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். பழமுதிர்சோலைபற்றி வழக்கு நடப்பதாகவும், ஹைகோர்ட்டில் தீர்ப்பு இருப்பதாகவும் சொன்னார்கள். அதைப்பற்றிக் கூட நேற்றையதினம் அரசாங்கத்தில் இருக்கிற வழக்குரைஞர்களையெல்லாம் அழைத்து, அதிகாரிகள் மற்றவர்களை அழைத்து, ஆலோசனை செய்து, ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். நாம் தீர்ப்புக்குள்ளே போகவும் இல்லை. அந்தக் கோயிலுக்குள்ளே போகவும் இல்லை. அதற்குப் பக்கத்தில் 'ஃபாரெஸ்ட் லேண்ட்' இருக்கிறது. முருகனுடைய 6 வது படை வீடு பழமுதிர்சோலையில் 25 லட்ச ரூபாய் செலவில் அங்கே புதிதாக ஒரு கோயிலை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த 25 லட்ச ரூபாயை தனியார்களிடம் நன்கொடையாகப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அந்தப் பணத்தை வைத்து எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அது போல திலகவதி அம்மையார், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்கள் பிறந்த ஊர்க் கோயில்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று திரு. சக்திமோகன் பேசினார்கள். அந்த நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்கிறோம். தமிழ் ஆராய்ச்சிப் புலவர் குழு ஏற்படுத்தி ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது அருமையான யோசனை தான். காலையிலே பேசுகிற நேரத்தில், நான் ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறேன். மதுரையிலே தமிழ்ச் சங்கம் பழைய காலத்தில் நடத்தி பெரிய புலவர்களை அங்கே கொண்டுவந்து வைத்துப் பாடியதாக வரலாற்றுச் சான்றுகளைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட வரலாறுகள் எல்லாம் நம் கவனத்தில் என்றைக்கும் இருக்க, தமிழ் நாட்டு மக்களுடைய உள்ளத்தில் இடம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆண்டு தோறும் அங்கே

கலைதைப் போட்டி நடத்தி வெற்றி பெறுபவருக்கு பொற்கிழி வழங்க வேண்டு மென்று இன்றையதினம் காலையில் அறிவித்திருக்கிறேன். அதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். அமைதி நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று உயர்திரு. சக்திமோகன் சொன் னார்கள். முருகன் கோயில் அமைகிற நேரத்தில், இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் மிகச் சிறந்த யோசனைகளைச் சொல்லி யிருக்கிறார்கள். குறிப்பாக புது மண்டபத்தில் உள்ள கடைகளைக் காலி செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அந்தக் கடைகளைக் காலி செய்ய வில்லையென்று சொன்னால், நாம் புது மண்டபத்தை இழந்து விடவேண்டிய வர்கள் தான் என்பதை மனதில் கொள்ள வேண்டும். காலி செய்து தான் புது மண்டபத்தைக் காப்பாற்ற வேணடும். அதிலுள்ள வில் மதிப்பற்ற சில் பங்கள், யாருமே செய்ய முடியாத பழமை வாய்ந்த சிற்பங்கள், அவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பது நோக்கமாகும். ஏற்கெனவே சென்ற ஆண்டு திட்டமிட்டோம். புது மண்டபத்தில் இருக்கிற கடைகளையெல்லாம் எடுத்து மதுரைக் கோயிலைச் சுற்றியிருக்கிற இடத்தில் கடைகளைக் கட்டச் செய்யலாம் என்று யோசனை தெரிவித்த நேரத்தில், அறிவித்த உடனேயே எதிர்ப்பு எழும் பியது. நந்தவனத்திற்குக் கொடுத்திருக்கிறோம், செய்யக்கூடாது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினையில் சுடுபடாமல் மாற்று யோசனை செய் திருக்கிறேன். வெகு சிக்கிரத்தில் நேரில் பார்த்து முடிவு செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். மதுரைக் கோயிலுக்குப் போனவர்களுக்குத் தெரியும். மொட்டைக்கோபுரம், கட்டி முடிக்கப்படாத கோபுரம் இருக்கிறது. ராயர் கோபுரம் என்று பெயர். அந்த கோபுரத்தினுடைய மேலே இந்தக் கடைகளையெல்லாம் அமைப்பதற்கு பெரிய இடவசதி இருக்கிறது. கோபுரம் என்பதால் கோபுரம் என்று நினைத்து விடவேண்டியதில்லை. அதற்கு எதிர்ப்பு கூட உருவாக வேண்டியதில்லை. மொட்டையாக, சில கற்களை வைத்து அப்படியே இருக்கிறது. அந்த இடத்தில் சிறந்த முறையில் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி, மேலே கடைகளை அமைத்து விடுவோமேயானால், செல்கிற மக்க ளுக்கு அந்தக் கடைகள் மேலே இருக்கிற நேரத்தில் நல்ல விதமாக அமைந் திருக்கிற கண்காட்சியைப் போல அமைக்க முடியும். புது மண்டபத்தையும் காப்பாற்ற முடியும்.

வண்டியூர் தெப்பக்குளம் பராமரிப்பு போதாது என்று சொல்லப்பட்டது. அது வறண்டு கிடக்கிறது என்று சொன்னார்கள். அதையும் பரிசீலனை செய்து, இதற்குத் தண்ணீர் வருகிற வாய்க்கால்களெல்லாம் அடைபட்டுப் போயிருக்கிறதா

என்று பார்த்து, இதுபற்றிச் சரியாகத் தெரியவில்லையென்றால், இந்தக் குறை களைக் கவனித்து நீக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்.

அடுத்து, மீனாட்சியம்மன் கோயிலையும், திருப்பரங்குன்றம் கோயிலையும் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பிரிப்பதில்லை என்ற கருத்தை சென்ற ஆண்டில் தெரிவித்திருக்கிறோம். திருப்பரங்குன்றம் கோயிலும், மீனாட்சி யம்மன் கோயிலும் இணைந்திருந்தால் தான் நல்லது, இந்த இரண்டு கோயில் களோடு இணைந்திருக்கிற கோயில்கள் 17 கோயில்கள் என்ற அளவில் இருக் கின்றன. இவைகளோடு இணைக்கப்பட்ட தனிக்கோயில்கள் 17 கோயில்கள், இந்த 17 கோயில்களுக்கு எந்த விதமான வருமானமும் இல்லை. அந்த நிலை யிலிருந்துதான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இந்த இரண்டு கோயில்கள் இணைப்பைப்பற்றி திருப்பரங்குன்றத்தில் வாழ்கிறவர்கள் பிரச்சினையைக் கிளப்பிய நேரத்தில் அவர்கள் மன நிறைவு எய்துகிற வகையில் இரண்டு அறங்காவலர்களை அந்தப் பகுதிக்காக நியமிக்கிறோம் என்று புதிதாக நியமிக்கப்படுகிற இரண்டு பேர்களை திருப்பரங்குன்றம் பகுதிக்கு ஒதுக்கியிருக் கிறோம். சில அபிவிருத்தி வேலைகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அங்கே ஒரு பள்ளிக்கு 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று சொன்னார்கள். கோயிலிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்களுக்கு ஒரு நிர்வாக அதிகாரி போட்டு அங்கே வேண்டிய வசதிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன் னார்கள். நிர்வாக அதிகாரியை அங்கே நியமித்திருக்கிறோம். மலையைச் சுற்றி ரோடு போட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த வேலை நடந்துகொண் டிருக்கிறது. ஆகவே கேட்டிருக்கிற கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற காரணத்தினால், இரண்டையும் பிரித்து இரண்டும் சரியாக நடைபெறுத நிலைமையை உருவாக்காமல் இரண்டையும் இணைத்துச் செய்யலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 8-20 பி.ப.

அடுத்து, ஸ்ரீரங்கம், சமயபுரம் மாரியம்மன் கோவில்களைப் பிரிக்க வேண்டு மென்று சொன்னார்கள். இந்தக் கோவில்களுக்குச் சொன்ன காரணங்கள் தான் இதற்கும் பொருந்துவனவாக இருக்கின்ற காரணத்தினால், அதையும் பிரிக்க வேண்டிய அவசியமில்லை.

சில திருப்பணிக் குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டு வேலைகள் முடிந்தும் கூட, இன்னும் அக் குழுக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவைகளை யெல்லாம் வேலை முடிந்திருந்தால், வெகு சிக்கிரத்தில் கலைப்பதற்கும், அதன் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கும் ஏற்கெனவே ஆணையர் உத்திரவிட்டு,

அதையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

திருப்பணிகள் செய்யும்போது பழமை மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பாக நான் சில கோயில்களுக்குச் சென்று திருப்பணி வேலைகளைச் செய்து முடித்திருப்பதைப் பார்க்கின்ற நேரத்தில், அங்கே இருக்கின்ற கல்வெட்டுகளையெல்லாம் சில இடங்களில் மாற்றி வைத்து விடுகிறார்கள். அந்த நேரத்திலே அப்படி இருக்கிற அந்தக் கற்களையெல்லாம் எடுத்து விட்டு மீண்டும் பொருத்துகிற நேரத்தில் வரிசையாக இல்லாமல் சில இடங்களிலே மாற்றி வைத்து விடுகிறார்கள். அதனாலே அந்தச் சான்றுகளையெல்லாம் மறந்து, எதிர் காலத்திலே படிக்கிறவர்களுக்குப் புரியாத நிலைமைகள் ஏற்படும் என்ற காரணத்தினால், இப்படிச் சில இடங்களில் செய்திருப்பதைக் கூட இன்னும் கொஞ்சம் செலவானாலும் மீண்டும் எடுத்துச் சரியாக வையுங்கள் என்று சொல்லி அந்தக் காரியங்களைக் கூட சில இடங்களிலே நாங்கள் செய்திருக்கிறோம்.

இரண்டாவதாக, அதற்குச் சிமெண்ட் போடுகிற நேரத்தில் எழுத்துக்களைக் கூட மறைத்துச் சிமெண்ட் போட்டு விடுகிறார்கள். தாய்மையான வகையில் அந்த எழுத்துக்களை மறைக்காதபடி அதைப் பார்த்துச் செய்ய வேண்டுமென்று அந்தத் துறையின் மூலம் சில அறிவுரைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு நாங்கள் வழங்கியிருக்கிறோம். பல நேரத்திலே அது தீவிரமான முறையிலே கவனிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அடுத்து, நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் சொல்லுகிற நேரத்திலே மடங்களுடைய தலைவராகக் கூட தாழ்த்தப்பட்டவர்கள் வர வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே வரவேற்கத் தக்க காரியமாகும். நம்முடைய அடிகளார் கூட நிச்சயமாக அதை ஒப்புக்கொள்வார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: ஜாதி வேற்றுமை போக வேண்டுமென்ற அளவிலே தான் சொன்னேன். தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில் இதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஜாதி வேற்றுமை இல்லாமல் வர வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே அது வரவேற்கத் தகுந்த காரியமாகும். இன்று காலையில் சட்டப் பேரவையிலே, அர்ச்சகர்களாக தாழ்த்தப்

பட்டவர்களை அனுமதித்து விடுவதாலே சமூக நீதி வந்து விடுமா, சமதர்மம் வந்து விடுமா, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று கூடச் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பிலே தெரிவித்துக் கொள்வதெல்லாம் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே இருந்து வந்தவன் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக மட்டுமல்ல, ஒரு கவர்னராக மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாகக் கூட வர முடியும். ஆனால் கோவிலுக்குள் போய் இங்கே இருக்கிற ஆண்டவனைத் தொட்டு அர்ச்சனை செய்வது என்பது நிச்சயமாக இன்றையதினம் இருக்கிற அரசியல் சட்டப்படி முடியாது. அந்த உரிமையை வாங்கிக் கொடுக்க அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்கிறோமே தவிர, அதிலே என்ன தவறு என்று தெரியவில்லை. ஆகவேதான் இரண்டாண்டுகளுக்கு முன்னாலே இந்த அரசாங்கத்தினுடைய சார்பிலே சட்டம் போட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் அர்ச்சகர்களாக வர வேண்டும். அப்படி வந்தால் தான் இந்த நாட்டிலே இருக்கிற ஜாதி ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்படும் என்பதைத் தெளிவாகச் சொல்லி நாங்கள் சட்டம் போட்டோம். உயர்நீதி மன்றத்திலே சில கட்டுப்பாடுகளை அதற்கு ஏற்படுத்தி நீதி வழங்கியிருந்தாலும், அந்த நீதியை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் இந்தக் கருத்தை மனதிலே வைத்து ஜாதி ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற கோரிக்கையை நாம் மத்திய அரசாங்கத்திற்கு 2 முறை கடிதங்கள் மூலம் தெரிவித்திருக்கிறோம். நமது முதலமைச்சர்களும் பல நிகழ்ச்சிகளிலே பேசக் கூடிய நேரத்தில் இதைக் குறிப்பிட்டு மத்திய அரசாங்கத்திற்கு நினைவு படுத்தியிருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து அந்த அரசியல் சட்டம் திருத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளெல்லாம் நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கண்ணகி வழிபாட்டைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே இந்த வழிபாடுகளைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளவும் நமது மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்களிடத்திலே உரிய யோசனைகளைக் கேட்டு—மாரியம்மன் கோவில்களையெல்லாம் கண்ணகி கோவில்கள் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்—அத்தகைய கோவில்களிலேயெல்லாம் எப்படி கண்ணகி வழிபாட்டைச் செய்யலாம் என்று அவருடைய அரிய யோசனைகளைப் பெற்று செயல்படுவதற்கு நாங்கள் தயாராக

இருக்கிறோம். கோவில்களுடைய நிதி, சொத்துக்களையெல்லாம் கணக்கு எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே ஒவ்வொரு கோவிலுக்கும், அறநிலையத்திற்கும் இருக்கிற சொத்துக்களைக் கணக்கெடுக்கிற தெளிவான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தக் கோவிலுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக் கூடிய கோவில்களின் வரலாறு என்ன, இவைகளையெல்லாம் தொகுக்க வேண்டுமென்ற கொள்கையைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற கோவில்களின் வரலாற்றைத் தொகுக்க வேண்டும். அந்தக் கோவில்களுடைய வரலாற்றைத் தொகுக்கிற நேரத்திலே அவைகளுடைய சொத்துக்கள், அதற்கு இருக்கிற நகைகள், ஆபரணங்கள் இவற்றைத் தொகுக்க வேண்டும். எல்லா மாவட்டத்திலுடைய கோவில்களுடைய வரலாற்றைத் தொகுக்கிற நேரத்தில், நிச்சயமாகத் தமிழ் நாட்டினுடைய வரலாறு அதனுடைய பின்னணியாக வரும் என்பதில் சந்தேகமில்லை. இப்படிக் கோவில்களின் வரலாறு தொகுக்கப்படுகிற நேரத்தில் தமிழகத்தின் வரலாறு முறையாகத் தொகுக்கப்படுகிற வாய்ப்பு இருக்கிறது. அப்படி அந்த வரலாற்றைத் தொகுப்பதற்காகச் சிறந்த தமிழ் ஆய்ந்த நிபுணர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து, வெகு சீக்கிரத்தில் மாவட்டங்கள் தோறும் இருக்கின்ற கோவில்களின் வரலாற்றைத் தொகுப்பதற்கான முயற்சிகளை எல்லாம் நாங்கள் மேற்கொள்ளுவதாக இருக்கிறோம்.

தம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தேவஸ்வம் வாரியம்பற்றிச் சொன்னார்கள். தேவஸ்வம் வாரியத்தைப்பற்றி அந்த அமைப்புப்பற்றி, அது எப்படி அமைந்தது என்பதைப் பற்றி அவர்களே சொல்லிவிட்டார்கள். அந்த அமைப்பு, அந்த நிர்வாகம் செம்மையாகச் செயல் படவில்லை என்று இந்த அரசு கருதிய காரணத்தினால், அந்த அமைப்பை மாற்று வதற்கு சட்டத்திலே சில மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று சில யோசனை களைச் செய்த நேரத்தில், மத்திய அரசாங்கத்தின் அனுமதி கேட்டுத் தான் அப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தேவஸ்வம் வாரியத்தைக் களைத்து விட்டு தமிழகத்தில் இருக்கிற அறநிலையச் சட்டத்தைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவாக்க வேண்டும், இதே போன்ற நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமையில் ஆராய்ந்து அதன் மீது முடிவு எடுத்த பின்னால் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்ட நேரத்திலே, மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட காரணத் தினால், தாமதப்பட்டு வருகிறது. பலமுறை அதற்காகப் பல முயற்சி எடுத்துக் கொண்ட போது, அங்கேயிருந்து வந்த பதில்களெல்லாம், எங்களிடத்திலிருந்து

பதில் வரும் வரைக்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாமென்பது தான். இந்த பதில் தான் வந்திருக்கிறதே தவிர, ஒப்புதல் தந்து விட்டோம் என்ற பதில் வரவில்லை. அதனாலே தான் இன்னும் அதிலே நடவடிக்கை எடுக்க முடியாமல் காலம் தாழ்த்தப்பட்டுக்கொண்டு வருகிறது. இருந்தாலும் வெகு விரைவிலே மத்திய சர்க்கார் இதற்கு ஒப்புதல் அளிப்பர் என்ற நம்பிக்கையோடு வெகு சீக்கிரத்தில் அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு நாங்கள் முயற்சி எடுக்கிறோம்.

தேவி குமரி கல்லூரியிலே நெடுநாட்களாக எத்தனைக் கட்டிட வசதியும் இல்லாமல் இருக்கிறது, அதையெல்லாம் உருவாக்கித் தர வேண்டுமென்று சொன் னார்கள். அவைகளையெல்லாம் சரிக்குவதற்குத் தேவையான கட்டிட வசதி களைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குத்தகை நிலுவை வசூலுக்கு விரைவாக நடவடிக்கை தேவை, கூட்டுறவுத் துறை போல இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத் துறைபற்றி அவர்கள் சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே தான் இதைச் சொல்லி யிருக்கிறார்கள். இருந்தாலும் கூட அவருடைய சிறந்த யோசனையை நான் வரவேற்கிறேன். அப்படி அந்த வசூலுக்கு கூட்டுறவுத் துறையிலே இருப்பது போல அமைத்தால் சிறந்ததாக இருக்குமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறோம்.

அடுத்து, 200 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரையில் வருமானம் உள்ள கோவில்களை நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் அதை எடுத்துக் கொள்வதன் நோக்கம், எதோ அதிலே வருகிற வருமா னத்தை வேறு கோவில்களுக்குப் பயன்படுத்துவது என்பது இல்லை. 200 ரூபாய் வருமானம் இருந்தாலும் அறநிலையத் துறையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே சட்டத்தைத் திருத்துகிற நேரத்திலே நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதன்படிதான் இன்றையதினம் 200 ரூபாயும் அதற்கு மேற்பட்ட வருமானம் வருகின்ற எல்லாக் கோவில்களையும் நாம் எடுத்துக் கொள்கிறோம். 200 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரையில் வருமானம் வரக்கூடிய கோவில்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அந்தக் கோவில்களிலே சரியாக வைத்திருக்கிறார்களா, அதிலே வருகின்ற சொத்து வகையிலேயிருந்து கிடைக்கின்ற வருமானத்தைச் சரியாக வைத்திருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க நிர்வாக அதிகாரி

போட வேண்டும் என்பதைக் கூட நாங்கள் யோசனை செய்து கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டிலே இருக்கிற 13 ஆயிரம் அறநிலையங்களில் எந்த அறநிலையமும் அதிகாரியின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருக்கக் கூடாது, எல்லா அறநிலையங்களும் அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது நம்முடைய எண்ணமாகும். அதற்குக் காரணம் அதிலே இருக்கிற சொத்துக்கள். சாதாரணமாகக் கிராமங்களில் மாரியம்மன் கோவிலுக்கு சில சொத்து இருக்கும். 40 ஏக்கரா வரையில் கூட இருக்கும். ஆனால் அவர்கள் காண்பித்துக் கொண்டிருக்கிற கணக்கு ஒரு வருஷத்திற்கு 500 ரூபாய் தான் வருகிறது என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் கிராமத்தில் வாழ்கிறார்கள். இதனை உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதிகாரிகளைப் போடுகிற நேரத்தில் அவர்கள் நேரடியாக அதைப் பரிசீலனை செய்து வருமானத்தை அதிகப்படுத்துவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் 500 ரூபாய் வருமானம் வருகிற கோவில்களுக்கு இப்படி நிர்வாக அதிகாரியை எப்படிப் போடலாம் என்ற சந்தேகம் வரலாம். குறைந்த பட்சம் 10,000 ரூபாய் வருமானம் வருகின்ற கோவில்களை "ஒருங்கிணைத்து" ஒரு கூட்டு அமைப்பாக ஏற்படுத்தி, அந்த 10 கோவில்களுக்கு ஒரு நிர்வாக அதிகாரியைப் போடுகிறோம். நிர்வாக அதிகாரி என்று சொல்லுகிற நேரத்தில் அவர்களை 500, 600 ரூபாய் சம்பளத்திலே போடுவதில்லை. மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கிற அளவிலே நிர்வாக அதிகாரியை நியமித்து அவர்கள் செவ்வனே மேற்பார்வையிடவும், அதேபோல கோவில்களில் நடைபெறுகிற பூஜைகளானாலும், மற்றவைகளானாலும் அவை சரியான முறையிலே நடைபெறுகின்றனவா என்று பார்வையிடவும், நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குச் சிறந்ததாக இருக்கும் என்பதைக் கருதி தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களுக்கும் நிர்வாக அதிகாரி போடுவதாக நாம் முடிவு செய்திருக்கிறோம். அதே போல இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு சிறந்த கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இந்தத் துறையிலே கருத்துக்களைச் சொல்வதோடு நல்ல பாராட்டுதல்களை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இத்தகைய பாராட்டுதல்களுக்கெல்லாம் இந்த நேரத்திலே மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாகச் சில அறிவிப்புகளைச் சொல்ல வேண்டுமென்று விழைகிறேன். ஏற்கெனவே நம்முடைய சட்டப் பேரவையிலே இன்று காலையிலே சில அறிவிப்புகளை நான் சொல்லியிருக்கிறேன்.

8:30 பி.ப.

திருக்கோவில்களுடைய உபரி நிதியிலிருந்து ஏழை எளிய குழந்தைகளுக்குப் பயன்படுகிற வகையிலே சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் காரியத்தை விரிவாக்குகின்ற வகையிலே இப்போது எந்தெந்தக் கோவில்களில்

உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோவில்களிலிருந்து சத்து உணவாக உள்ள பால் வழங்கும் திட்டத்தை பல கோவில்கள் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தில் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம்.

எந்தெந்தக் கோவில்களிலே உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோவில்களுடைய நிதியிலிருந்து அந்தப் பகுதியில், அந்த ஊரில் வாழ்கிற ஏழைக் குழந்தைகளுக்கு வினியோகிக்கும் வகையிலே முதலிலே பால் வழங்கும் ஒரு திட்டத்தை வருகின்ற ஆண்டிலே செயல்படுத்துவதாக இருக்கிறோம். அதைக் குறிப்பிட்ட அதிக வருமானம் வருகின்ற கோவில்களில் முதன் முதலில் நாம் செயல்படுத்த இருக்கிறோம்.

அதே மாதிரி தென்னற்காடு மாவட்டத்தில் இருக்கிற திருவாமத்தூர் கோவில், பழைய காலத்தில் ஏற்பட்ட கோவில். அதில் ஒரு கல்வெட்டுச் சான்றில் இன்றைய தினமும் காண்கிறோம். அந்தக் கோவிலில் கண் பார்வையற்றோருக்கு அந்தக் காலத்திலேயே அவர்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளி நடத்தப் பட்டதாகவும், அந்தக் கண் பார்வையற்ற குருடர்கள் அங்கே தங்கிப் படிப்பதற்கு வசதிகளைப் பெற்றதாகவும், தங்குவதற்கு இடமும், உண்பதற்கு சோறும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகவும் கல்வெட்டு கூறுகிறது. அப்படிப்பட்ட கோவில்கள் இன்றையதினம் நிதி வசதி இல்லாமல் இருந்தாலும்கூட, பக்கத்தில் நிதி வசதியுள்ள கோவில்களிலிருந்து, அந்தப் பழைய வரலாற்றை நினைவு படுத்துகிற அளவில் அங்கே ஒரு குருடர் பள்ளியை, கண்பார்வையற்றோர் பள்ளியை ஆரம்பிப்பதற்குத் திட்டம் போட்டிருக்கிறோம். வருகின்ற ஆண்டிலே அந்தப் பள்ளி அங்கே துவங்கப்படும்.

அதேமாதிரி தஞ்சை மாவட்டத்தில், சோழன்மாதேவியில், இராஜ ராஜ சோழனின் தமக்கை, குந்தவை தேவி, அங்கேயுள்ள திருக்கோவிலிலே, அந்தக் காலத்திலேயே மருத்துவ நிலையம் ஒன்றைத் துவங்கி, அது அங்கேயுள்ள மக்களுக்குப் பயன்பட்டதாக கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து காண்கிறோம். அந்தப் பழைய காலச் சரித்திரம் மீண்டும் தமிழகத்தில் திரும்புகிறதென்பதை நினைவு படுத்துகிற வகையில், சித்த வைத்திய மருத்துவ மனை ஒன்று வெகு சீக்கிரத்திலேயே ஆரம்பிக்கப்படுமென்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்கு, உங்களுடைய அருமையான யோசனைகளையெல்லாம் நல்ல முறையில்

கருத்திற்கொண்டு, பயன்படுத்துவோமென்ற உறுதியைக் கூறி, சிறந்த யோசனை களைக் கூறிய அத்தனை பேருக்கும் நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

8.35 p.m.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

5. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

78. Notification issued with G.O. Ms. No. 2806, Agriculture, dated the 9th November, 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [(Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

79. Notification issued with G.O. Ms. No. 2190, Home, dated the 21st August, 1972 in regard to an amendment to Rule 70 of the Tamil Nadu Children Rules, 1940. [(Laid on the table of the House under section 44(4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920)].

80. Notification issued with G.O. Ms. No. 2332, Rural Development and Local Administration, dated the 3rd November, 1972, in regard to dissolution of the Talanyar Panchayat Union Council with effect on and from the 6th November, 1972 and reconstitution of the Panchayat/Council/Union with effect on and from the 6th March 1973. [(Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)]

B. Reports, Notifications and Other Papers

* 106. Policy Note on the Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. (English and Tamil).

107. Commercial Budget for 1973–74, relating to Cinchona.

108. Policy Note on Cinchona Department, 1973. (English and Tamil).

109. Policy Note on Forests 1973–74. (English and Tamil).

Circulated to all M.L.C's on 23rd March, 1973.

இணைப்பு I

[ஆம் பக்கத்தில் 266 ஆம் எண்ணுள்ள உடக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

1. No information is available as to whether there is any private medical college in Allopathic Medicine actually giving postal tuition in this State.

2. However, in this connection it may be stated that one Thiru G. T. Raja, Medical Practitioner, No 8, Kaziar Thope, 7th Lane, South Veli Street, Madurai has drawn attention of the Government to an advertisement in the daily "Thina Thanthi" dated 13th April 1972 that the Allopathy Medical Training Centre, No.30, Nallappa Vathiar Street, Madras, is giving Allopatic Practical Training with the aid of Government from 15th May 1972 to 24th May 1972. He has enquired whether the certicate issued by the above institution can be recognised by the Government. The matter was enquired into and the paper notification is found to be false as no permission was given by the Government. The matter, has, therefore, been referred to the Inspector-General of Police and he has been requested to take immediate action in the matter and report the result to Government very expeditiously.

இணைப்பு II

[26-ஆம் பக்கத்தில் 268 ஆம் எண்ணுள்ள உடக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

காற்றின் தூய்மை எவ்வாறு கெடுகிறது என்பது குறித்தும், அவ்வாறு கெடுவதற்கு பலதரப்பட்ட செயற்கருவிகள் யாவை என்பது குறித்தும் முழுமையாக ஆய்ந்து முதற்கட்டமாக சென்னை மாநகரில் காற்றின் தூய்மை கெடுவதை தடுப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சீரான நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறும் பொருட்டு ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. அக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று அது அரசின் பரிசிலனையில் உள்ளது.

2. சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய புகையை வெளித்தள்ளுகிற பேருந்து வண்டிகளின் உரிமையாளர்கள் தமிழ் நாடு பேருந்து வண்டிகள் சட்டம், 1940 சட்டம் 323-ன் கீழ் தண்டிக்கப்படுகிறார்கள். பேருந்து வண்டிகள் சட்டம் 112-ம்

பிரிவைக் காண்க. சனவரி 1972-முதல் ஆகஸ்டு 72 வரை அவ்வகையான 4,584 வாகனங்களின் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு இதுவரை ரூபாய் 5 முதல் 50 வரை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரால் ரூபாய் 12,342 அபராதத் தொகையாகத் திரட்டப்பட்டிருக்கின்றது. சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய புகையை வெளித்தள்ளுகிற அரசினர் போக்குவரத்தைப் பொருத்தவரையில் காவல்துறை ஆணையாளர் மாநில போக்குவரத்துத் துறை இயக்குநரின் நடவடிக்கைக்காக ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். மேலும் தொழிற்கூடம் மற்றும் வேறு கழிவுப் பொருள்களால் தண்ணீர் கெடுகின்ற பிரச்சினையினைச் சமாளிக்க தண்ணீர் மற்றும் கழிவுநீர் தூய்மை படுத்தும் குழு ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு சமீபகாலத்தில் திருத்தி அமைக்கப் பெற்றுள்ளது. இக்குழு சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய அனைத்துக் கூறுகளையும் கண்காணித்துக்கொள்ளவும் இம் மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகள் துவங்க உரிமைகள் வழங்கும் காலத்தில் அரசினரால் கலந்தாலோசிக்கப்படுகின்ற செயற் கருவியாக செயல்படவும் உரிய அதிகாரங்கள் படைத்த ஒரு நிரந்தரமான குழுவாகவும் செயல்படும்.

இணைப்பு III

[38 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்.

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கிணங்க அறவினையை பண்டைநெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கி வைத்து, இன்றளவும் இடையறாது நடைபெற்றிடும் வழியில் அறநிலையங்களையும், அறக் கட்டளைகளையும் முறைமையின் காத்து, அவைகளின் மூலம் சமுதாயத்திலே சமதர்ம மணங்கமழச் செய்து வரும் பாரதநிர்ணயத்தின் நெறியின்று செயல்படும் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை பற்றிய குறிப்பு.

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கலின்மிகு திருக்கோயில்களும் நாளும் நற்நிதி வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்தது தமிழ்நாடு. முடியுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு இடைத்திட தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள்தான். வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர்தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப்

பேணிப் பாதுகாத்து இனிவரும் சந்ததியினருக்கு அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில் இத்துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்.

பழந்தமிழர் வாழ்க்கை முறைக்கும், அவர்தம் பண்பாட்டின், கலாச்சாரத்தின் உறைவிடங்களாக, வெளி உலகத்திற்கு இன்றளவும், அவைகளைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் கலிமிகு எழிற்கூடங்களாக அமைந்துள்ள இத்திருக் கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இவ்வரசு நன்குணர்ந்துள்ளது.

"செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

என்ற தமிழ்த் திருமறைக்கு ஒப்ப மக்கள் விரும்பி கைக்கொண்டு வாழும் முறையில் தலையிடு ஏதுமின்றி அவர்கள் விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் அரசாக இது செயல்பட்டு வருகிறது. திருக்கோயில்கள் தமிழ்நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத்திருக்கோயில்களும் அற நிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டு நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய "நிவந்தங்களையும்" அவைகளை இன்றளவும் பறைசாற்றிக்கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில் இவ்வரசு இத்துறையில் பெரும் கவனம் செலுத்தி, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது. அவைகளின் தொடர்ச்சியாக இவ்வாண்டுவரை நிறைவேற்றிய பணிகளைப் பற்றியும், இனிவரும் ஆண்டில் நிறைவேற்றிட இருக்கிற பணிகளைப் பற்றியும் இவண் எடுத்தியம்பிட விழைகிறேன்.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம்வரை இத்துறை 157 மடங்களும், 12,038 திருக்கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் ஆக 13,027 அற நிலையங்களைத் தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுள்ளது. இவ்வனைத்து அற நிலையங்களின் மொத்த வருவாய் ரூ. 6,75,00,000 என்ற மதிப்பிடப்படுகிறது. இதில் திருக்கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும். இத்துறையை நிருவகிப்பதற்காக வருவாய், இந்து சமய அறக்கட்டளைகள் பற்றிய 1959-வது ஆண்டுச் சட்டத்தின் 92-வது பிரிவின் திருக்கோயில்கள், அற நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 200-க்கும் குறைவுபடாத வருவாயினைப் பெற்ற ஒவ்வோர் அறநிறுவனமும் குறிப்பிட்ட சகாயத் தொகையினை இத்துறைக்குச் செலுத்தவேண்டும் என்று விதிமுறை உள்ளது. இதன் அடிப்படையில் கீழ்க்காணும் வருவாயுள்ள பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் ஆண்டுதோறும் சராசரியாக ரூ. 51 இலட்சம் கிடைத்து வருகிறது.

(1) ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	7,558
(2) ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	4,830
(3) ரூ.10,000-க்கு மேற்பட்டு ரூ. 1,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	566
(4) ரூ. 1,00,000 முதல் ரூ. 5,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	60
(5) ரூ. 5,00,000-க்கு மேற்பட்டு, ரூ. 10,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	
(6) ரூ. 10,00,000-க்கு மேற்பட்டு ரூ. 15,00,000-க்கு குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	3
(7) ரூ. 15,00,000-க்கும் மேற்பட்ட வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	5

இவ்வாண்டு இத்துறையின்கீழ் கொண்டு வரப்பட்ட 2,162 புதிய திருக்கோயில்களின் மூலமாக இத்துறையின் வருவாய் ரூ. 52,560 அளவுக்கு கூடுதலாகி உள்ளது.

1973 ஆம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கும் மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் 7,50,00,000-க்கு உயருமென்றும், அதனால் இத்துறையின் வருமானம் அதிகமாக வாய்ப்பு உண்டென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பெருகி வரும் இத்துறையின்கீழ் செயல்படும் திருக்கோயில்கள் அனைத்தின் வருவாய் குறித்தும், அறநிலையத் துறையின் பராமரிப்புக்கான

செலவுகள் குறித்தும் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் விளக்கமளிப்பவையாக அமையும் என்று எண்ணுகிறேன்.

திருக்கோயில்களின் வருவாய்.

விளைச்சல் ஆண்டு.	ரூ.
1372	4,87,51,314
1380	5,51,65,419
1381	5,55,78,000
1382	6,75,00,000

ஆண்டு.	துறையின் நிருவாகச் செலவு.	தணிக்கைச் செலவு.
(1)	(2)	(3)
1969—70	32,47,643	9,64,631
1970—71	39,40,636	11,32,260
1971—72	49,74,300	13,76,500
1972—73	58,11,500	12,43,200

புதிதாக ஏற்படுத்தப்பட்ட சில பதவிகள் காரணமாகவும், வருவிய விலைதங்களில் ஏற்பட்ட உயர்வு காரணமாகவும், புதிய போக்குவரத்துச் சாதனங்கள் காரணமாகவும், 1972-73-ம் ஆண்டிற்கான நிருவாகச் செலவு தொடர்ந்து உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறை வளர்ச்சிப் பணிகளுக்கான செலவுகளும், தணிக்கைச் செலவுகளும் ஆய்வுத்தில் அரசு நிதியிலிருந்து செலவிடப்பட்டு, இறுதியில் இந்து சமய அறநிலைய நிருவாக நிதியிலிருந்து திருப்பம் பெறப்படுகின்றன.

திருப்பணிகள்.—வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக உபரி நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நிதியிலிருந்து வானுற எழுந்து நிற்கும் இத் திருக் கோயில்களில் காலத்தாற் பழுதுபட்டும், கலைமாட்சியுறாதார் கைபட்டும் சிதைவுற்றதுமான பலவற்றை திருத்தியமைத்து அவற்றின் அழகு கெடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்து சிற்பிகளின் கைவண்ணத்தையெல்லாம் தம் மெய்வண்ணத்தாலே பறைசாற்றி வரும் அரிய சிற்பங்கள் காலத்தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவதோடு, திருமதில்கள் ஓங்களிலும், கருவறையிலும், சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல்வெட்டுக்களையும், பல்வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்வெட்டுக்

களையும், செப்புப் பட்டையங்களையும், பிற சான்றுகளையும், முறைமையாகப் பாதுகாக்கத்தக்க வகையிலும், காட்சிபோன்றி சிறு கோயில்களில் இடக்கும் அழகுச் சிற்பங்களையும் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு தமிழ் மண்ணுக்குரிய சிற்பங்களும், ஓவியங்களும் அயலார் கரத்தே சென்றடையாவண்ணம் காக்கப்பட்டுள்ளன.

பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செம்பு, ஐம்பொன் சிலைகளும், கற்சிலைகளும் காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க்காணும் இரு இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன :—

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

2. அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்கா (திருச்சி மாவட்டம்).

தஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் அம்மாவட்டத்தில் அண்மையில் இடைக்கப்பெற்ற பல்வேறு சிலைகளை அழகுற அமைத்து திருக்கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டின் மற்ற திருக்கோயில்களில் காணப்படும் கலிங்கிகு சிலைகளையும் சிற்பங்களையும் பாதுகாத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றாமலும், காண்போருக்குக் கடையில்லாத வகையிலும் இரும்புக் கம்பிகளால் காப்பு செய்யப்பட்டுள்ளன. விலை மதிப்பற்ற தமிழ் நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்பு செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்திவருகிறது.

திருக்கோயில் சிலைகள், சிற்பங்கள் ஆகியவைகளன்றி திருக்கோயில்களைப் பாதுகாப்பதிலும், அவைகளைப் புதுப்பித்து திருப்பணிகள் செய்வதிலும் 1967 ஆம் ஆண்டு தொடங்கி செலவிடப்பட்டு வரும் தொகை குறித்த புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	திருக்கோயில்களின் எண்ணிக்கை.	செலவிடப் பட்ட தொகை.
		ரூ.
1967	200	1,19,00,000
1968	90	35,00,000
1969	130	57,00,000

ஆண்டு	திருக்கோயில்களின் எண்ணிக்கை.	செலவிடப்பட்ட தொகை. ரூ.
1970	250	1,17,00,000
1971	450	2,20,00,000
1972	700	3,86,00,000

1973 ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியானத் திருக்கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக் கொள்ள நிட்டமிடப்பட்டிருக்கின்றது. முக்கியமாக கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதே போல 1967-68 ஆம் ஆண்டு தொடங்கி திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசின் உதவித் தொகை ரூ. 3 இலட்சம் என்று இருந்த நிலையை மாற்றி 1968-69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972-73-ல் ரூ. 5 இலட்சமாகவும் உயர்த்தி, தற்போது ரூ. 6 இலட்சமாக உயர்த்தி இருப்பதும் எண்ணிப் பார்க்கத்தக்கது. சென்ற ஆண்டில் துவங்கப்பட்ட சில முக்கியமான திருப்பணிகளைக் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

(1) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ. 1,94,950 மதிப்புள்ள 7 கிலோ தங்கத்தால் ஒரு தங்கத்தேர் செய்வது தொடங்கப்பட்டது.

(2) திருக்கோயில் சுற்றுப் பிரகாரத் திருப்பணி ரூ. 5 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) ரூ. 1,59,250 மதிப்புள்ள 250 கிலோ வெள்ளியால் தேர் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

(4) ரூ. 3.5 இலட்சம் மதிப்பீட்டில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம் தீட்டப்பட்டு, முக்கிய பாகமாகிய மேற்பாகத்தில் 590 அடி நீளத்திற்கு வேலை முடிவுற்றது. வடக்குப் பாகத்தில் வேலை தொடர்ந்து நடந்து வருகின்றது.

(5) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ. 3,36,725 மதிப்புள்ள 31½ கிலோ தங்கத்தில் தங்கக் கவசம் செய்யும் பணியும், 5 கிலோ தங்கத்தில் தங்கத் தேர் செய்யும் பணியும் தொடங்கப்பட்டது.

(6) முகவை மாவட்டம், பாகனேரியில் அருள்மிகு புலவநாயகி அம்மன் திருக்கோயில் சார்பில் ரூ. 2 இலட்சத்தில் தேர் ஒன்று செய்து ஓட்டப்பட்டது.

(7) சென்னை மாவட்டம், மதராந்தகம் அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயிலுக்கு ரூ. 2,46,500 செலவில் புதிய திருத்தேர் செய்யும் பணி மேற் கொள்ளப்பட்டது.

(8) மதுரை மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வைர முடி ஒன்றும், தங்கக் கவசம் ஒன்றும் ரூபாய் பதினைது இலட்சம் செலவில் செய்யப்பட்டன.

இவ்வாறு பெருகி வரும் தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும் பாலான திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவது மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும்.

திருமண மண்டபங்கள்.—1967 ஆம் ஆண்டு வரையிலும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால் 1967-க்குப் பிறகு 1972 டிசம்பர் திங்கள் வரை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றி இடருற்றோர் பலரின் துயரம் இதன் மூலம் பெருமளவில் களையப்பட்டுவருகிறது.

திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமுதாயப் பணிகள்.—தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால் அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும், சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டியம் போன்றவைகளை வளர்க்கும் அற நிலையங்களாகவும், காப்பகங்களாகவும் அமைந்தன என்பது தெளிவாகும். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே பின்வரும் சமுதாயப் பணிகளை இத்திருக்கோயில்களின் மூலம் இத்துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.

கேடில் விழிச்செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ்நாட்டின் பெரு வருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றன :—

1. அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி.
2. அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

3. அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

4. அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை (கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்வம் வாரியத்தினரால் நடத்தப்படுவது).

5. அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

6. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் கல்லூரி, இராமேஸ்வரம்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள்மிகு காந்திமதியம்பாள் திருக்கோயில் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ஓர் மகளிர் கல்லூரியும் துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு துவக்கப்பட்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடையாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவைகளேயன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணிசுவாமி திருக்கோயில் சார்பில் திரு. பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியும், தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார் பேரவைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத்துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப்படிப்பிற்கும் மேலான படிப்பிற்கு கல்லூரி ஒன்றினை 1972-ம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப் பட்டது என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கதது.

உயர் நிலை ஆரம்பப்பள்ளிகள்.—தற்போது தமிழ் நாட்டின் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர்நிலைப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 3 பள்ளிகள் 1972–73-ம் ஆண்டில் தொடங்கப் பட்டனவாகும். 1973—74-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் நிருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், முகவை மாவட்டம் பள்ளத்தூரில் அறக்கட்டளையொன்றின் சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும் துவங்கப்பட இருக்கின்றன.

நாதசுவரப் பள்ளிகள்.—மங்கல ஒலிகூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுவரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க்காணும் இரு இடங்களில் நாதசுவரப்பள்ளிகள் உருவாக்கப்பட்டுத் தக்க விற்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப் படுகின்றனர் :—

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நாதசுவரப் பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இருதயகமலநாதசுவாமி திருக்கோயில் நாதசுவரப் பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுவர இசையிலும் 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்.—இயற்கையின் படைப்பில் ஊமைகளாய், செவிடர்களாய்ப் பிறந்துவிட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப்பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் (சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்) மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

அன்பு இல்லங்கள்.—பேணுவோர் இன்மையால் பெருந்தொல்லைக்கரட்பட்டு இரத்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படும் அனைதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன :—

1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீசுவரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

4. அருள்மிகு சீனுவாசபெருமாள் திருக்கோயில், நாச்சியார்கோயில், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அப்பன் திருக்கோயில், அப்பன் பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

சிறுர் காப்பகங்கள்.—பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்து வாடும் சிறார்களுக்கும், காலையிலேயே தொழிலுக்குச் செல்லும் தாய்தந்தையர் கவனிக்க முடியாத சிறார்களுக்கும் கீழ்க்காணும் 5 இடங்களில் சிறார் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறார்களுக்கு இந்துசமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது :—

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயண புரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமாரவயலூர், திருச் சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், காசமடை, அழிஞ்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி.

முதியோர் இல்லம்.—சென்ற ஆண்டில் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முதியோருக்கான இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் 30 முதியோர்களை சேர்த்துக்கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டு இவ்வில்லம் 15—8—1973-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 நபர்களைப் பேணிக் காக்கும் இரண்டு இல்லங்கள் 15—8—1973 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மருத்துவ மனைகள்.—வழிபாட்டுக்காக வரும் பயணிகள் மட்டுமன்றி பொது மக்களின் நலனுக்காக மருத்துவ மனைகளையும் மருந்தகங்களையும் தொடங்க வேண்டியதன் அவசியம் கருதி 23 சித்தவைத்திய மருத்துவ மனைகளையும் ஆங்கிலமுறை மருத்துவமனை ஒன்றினையும் திருக்கோயில்களின் சார்பில் நடத்தி

வருகின்றோம். சித்த வைத்திய மருத்துவ மனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக்கோயில் அறங்காவலர்களுக்கும் திருவாக அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகங்கள்.—பொது அறிவினை வளர்ப்பதோடன்றி இந்து சமய நெறியினை நன்குணர்ந்து பயன்பெறும் வகையில் 204 திருக்கோயில்களில் நூலகங்கள் நெறிய முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத்தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வழிபடுவோருக்கான வசதிகள்.—அருட்தலங்கள் என்று போற்றப்பட்டு நாடோறும் பெருகி வரும் வழிபாட்டுப் பயணிகள் கூடுகின்ற திருக்கோயில்களின் சார்பில் வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுவோர்களின் நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதிகளையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு திருக்கோயில்களின் சார்பில் வேலைகள் மேற்கொள்வதற்கான வகையில் மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டுப் பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல்.

ஆண்டு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு
	ரூபாய்.
	ரூபாய்.
1969	1,10,700
1970	3,65,800
1971	11,14,000
1972	7,48,600

ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்.

ஆண்டு.	வழங்கப்பட்ட மதிப்பீடு. ரூபாய்.
1969	6,24,000
1970	10,60,000
1971	6,24,400
1972	5,07,000

இவ்வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன.

1973 ஆம் ஆண்டில் இவைபோன்ற வசதிகள் இன்னும் பெருமளவில் செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

திருக்கோயில் நிலங்கள்.—திருக்கோயில்களின் சார்பில் பயன்மிக்க காரியங்கள் பலவற்றை மேற்கொள்ளும் அதே நேரத்தில் திருக்கோயில்களின் வருவாயைப் பெருக்கிடும் வகையிலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் அரசியா சொத்துக்களை தனியார் கைகளிலிருந்த எடுக்கப் பட்டு திருக்கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டு அவைகளின் மூலம் வருவாய்க்கான நிதிவாயில்கள் பெருக்கப்பட்டுள்ளன. மேற்கொண்ட விவரம் இத்துறையில் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தெற்றென விளக்கும்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து அந்நிலங்கள் அனைத்தும் திருக்கோயில்களுக்கே உரிய னவாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென்று சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி நிலையில் ஒரு தனி அதிகாரியும் மற்றும் 4 தனித்துணை ஆட்சியர்களையும் அவர்களுக்கு உரிய பணியாளர் தொகு தியினையும் பணியில் அமர்த்திச் செயல்பட அரசு அனுமதி அளித்தது. 1971-ம் ஆண்டில் திருக்கோயில் நிலங்களைப் பொறுத்த ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்கு இசைவாக கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளித் துள்ளது. சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான எல்லா அரசியா சொத்துக் களும் உண்மையிலேயே அவைகளின் உடமைகள் பட்டியலில் இடம்பெறவும், அவைகளின் பெயரில் பதிவு பெறவும், சொத்து விவரப் பட்டியலில் முறையாக கணக்கிடப்படவும், திருக்கோயில்களின் உடமைப் பட்டியலிலும் ஆளுகையிலும் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் கணக்கில் கொண்டு வரப்பட்டு அத்தச் சொத்துக்களின் வருவாய் முறையாகக் கணக்கிடப்படவும், ஏதுவாக இத்துறை எற்படுத்தப்பட்டது. திருக்கோயில் நிலங்கள் முறையான வகையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும், ஆக்கிரமிப்பு, அனுமதியில்லாத இருப்பு அல்லது உடமை முதலியன இருக்கின்றனவா என்பதனை சரிபார்க்கவும்,

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள், மனைகள் முதலிய வற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

முதல் நிலை ஆய்வின் காரணமாக இப்பிரிவினால் மேற்காணும் விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

	சமய நிறு வனங்களின் எண்ணிக்கை.	அவைகளுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பு (நஞ்சையும். புஞ்சையும்)- ஏக்கர். சென்ட்.
1 ஆய்வின் காரணமாகத் தமிழ் நாடெங்கும் கண்டுபிடிக்கப்பட்ட, அற நிலையத் துறையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத நிறு வனங்கள்.	40,947	1,98,920·53
2 இவற்றில் ஆய்வாளர்களின் முதல் அறிக்கை பெறப்பட்ட சமய நிறுவனங்கள். அவற்றுள் 2162 நிறுவனங்கள் துறையின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டுள்ளது.	6,000	41,664·08
3 திருக்கோயில் நிலங்கள் உண்மை யிலேயே திருக்கோயில் உடமை யிலும் அனுபவத்திலும் இல் லாமல் தனியாரிடம் இருப்பன வாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிறு வனங்கள்.	15,944	26,065·88 (விவசாய நிலம்). 656·62 (நகர் புற நிலம்).
4 திருக்கோயில் நிலங்களை அவற் றின் உண்மையான உடமை யாக்க நிருவாகிகள் நடவடிக்கை மேற்கொண்ட நேர்வுகள்.	880	2,250·41
5 உண்மையிலேயே திருக்கோயில் உடமைகளாக ஆக்கப்பட்ட நேர்வு கள்.	186	717·43

மேலும் திருக்கோயில்களுக்கு உரிய குத்தகை குறைவாக உள்ள 33,703.86 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 772.89 ஏக்கர் நகர்ப்புற நிலங்கள், மற்றும் 2,318 கட்டடங்களைப் பொறுத்தும் சிறப்புப் பணியாளர்கள் அறிக்கை சமர்ப்

பித்து உள்ளனர். மேலும் திருக்கோயில்களுக்குச் சேர்ந்தமான தரிசாக உள்ள 6,694.87 ஏக்கர் நிலங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்துவதற்கும் வழிவகைகளைத் தெரிவித்திருக்கின்றனர். இது குறித்து இத்துறை அலுவலர்களால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு [மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்ட]—இணைக்கப்படாத தேவஸ்வம் சட்டம் (1959 ஆம் ஆண்டு 30-வது தமிழ்நாடு சட்டம்)].—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு 30-வது சட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்திலும் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள் என்று அழைக்கப்படும் சமய நிறுவனங்களை தேவஸ்வம் வாரியம் நிருவகித்து, கட்டுப்படுத்தி, மேற்பார்வை செய்து வருகிறது. இப்பகுதிகளில் உள்ள இதர நிறுவனங்கள் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் வரும். இவைகள் அனைத்தும் கன்னியாகுமரி இந்து சமய உதவி ஆணையாளரின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருக்கின்றன. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் மூன்று நியமன உறுப்பினர்களைக் கொண்டது. இதில் ஒருவர் திருவிதாங்கூர் மாநில முன்னாள் மன்னரால் நியமனம் செய்யப்பட்டும் இதர உறுப்பினர்கள் (தலைவர் உட்பட) தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்டும் வருகின்றனர். இந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—3—1972 முதல் முடிவடைந்துவிட்டது. ஆயினும் இந்த வாரியம் தற்போது செயல்பட்டு வருகிறது.

தேவஸ்வம் வாரியம் அரசு மானியமாக ஆண்டு தோறும் ரூ. 13,68,000 பெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை வட்டத்தில் செயல்பட்டு வரும் தேவஸ்வம் வாரியம் என்னும் அமைப்பை நீக்கி இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத அனைத்து திருக்கோயில்களையும் கண்காணித்து நிருவகித்திட தமிழ்நாட்டில் மற்ற எல்லாப் பகுதியிலும் செயல்பட்டு வரும் இந்து சமய அறநிலைய 1959-வது ஆண்டு சட்டத்தினை முழுமையாக இப்பகுதிகளுக்கும் விரிவாக்கிடும் வகையில் சட்டத்திருத்தத்திற்கு அனுமதி கோரி இவ்வரசு மத்திய அரசை வேண்டியுள்ளது. இது பற்றி விரைந்து செயல்பட வேண்டிய அவசியம் குறித்து பன்முறை மத்திய அரசுக்கு தெரிவித்தும், மத்திய அரசின் அனுமதி இதுவரையில் தரப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இத்திருத்தம் திருக்கோயில்களின் முறையான நிருவாகத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலும் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த செங்கோட்டைப் பகுதியிலும் உறுதுணையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை திருக்கோயில்கள் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் பெற்று வருகின்றன. இதுவன்றி தன்னுடைய வழிபாட்டு இல்லத்தை பராமரித்து வருவதற்காக புதுக்கோட்டையின் முன்னாள் மன்னருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6,000 அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழில் வழிபாடு

தமிழ்ப்பெருங்குடி மக்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை ஏற்கும் வகையில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழ் வழிபாட்டுமுறை விரிவு படுத்தப்பட்டது. துவக்கத்தில் எழுந்த எதிர்ப்புக் குரல் இருப்பினும் தமிழ் பெருங்குடி மக்களின் நல்லாதரவு காரணமாக தற்போது அனைத்துத் திருக்கோயில்களிலும் தமிழ் வழிபாட்டு முறை நடைமுறையில் உள்ளது. ஆயினும் வழிபடுவோரின் உரிமையில் இவ்வாசை தலையிட விரும்பவில்லை என்பதன் காரணமாக வடமொழியில் வழிபாடு செய்ய வேண்டுவோருக்கு உரிய வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் தமிழ் வழிபாட்டு முறையை விரும்புவோர் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருவது மன நிறைவை அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

யுனெஸ்கோ உதவி

இம்மாநிலத்திலுள்ள வரலாற்று பெருமை வாய்ந்த தொன்மையான திருக்கோயில்கள் சிலவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் புதுப்பிப்பதிலும் "ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம்" தொடர்ந்து அக்கறை காட்டி வந்துள்ளது. திருவாலங்காடு திருக்கோயிலுள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு இந்நிறுவனம் 12,000 டாலர்களை பெண் சிற்பக்கலை (ஒருவகை தெளிக்கும் எண்ணை) உட்பட இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அத்திருக்கோயிலின் பண்டைக்கால பண்பாடு கெடாத வகையில் கலை வேலைகளைப் பாதுகாக்கப் பயன்படும் பொருள்கள் மூலம் வழங்கியுள்ளது. 1972-73-ம் ஆண்டில் நான்முகம் கோபுரம் மற்றும் "ஆரியபாதாள் கோபுரம்" ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவி பெறும் இரண்டாவது திருக்கோயிலாக இராமேசுவரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலும், காஞ்சிபுரத்திலுள்ள அருள்மிகு வரதராஜசுவாமி திருக்கோயில் மூன்றாவதாகவும், தஞ்சாவூரில் உள்ள அருள்மிகு நடராஜர் திருக்கோயில் நான்காவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை நன்றியுணர்வோடு மீண்டும் குறிப்பிட்டுக் கொள்வதோடு இவைகள் குறித்த கடிதப் போக்குவரத்து இருந்து வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தொல்பொருட் களஞ்சியம்

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவைகளைக் காட்டும் தொல் பொருட் களஞ்சியங்களை மேற்கானும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன :

1. அருள்மிகு அரங்கநாதசுவாமி ஆலயம், திருவரங்கம்.

2. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை.

3. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் ஆலயம், திருவானைக்கா, திருச்சிராப் பள்ளி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள் சிறந்த கலைக்கூடங்களைப் பராமரிக்க முடியும். தற்போது அவ்வகையான கலைக்கூடங்களை மேலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோயில் திங்கள் ஏடு

1958-ல் தொடங்கப்பட்டு திங்கள் தோறும் வெளிவரும் "திருக்கோயில்" இதழ் தமிழ் நாட்டில் மட்டுமின்றி அண்டை அயல் நாடுகளிலும் 4,925 சந்தா தாரர்களைக் கொண்டிருக்கிறது. இந்து சமய வேதாந்த கலாச்சார மற்றும் இலக்கியப் பொருள்கள் குறித்தும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தொன் மையையும் வரலாற்றையும் சிறந்த முறையில் வெளியிடும் வகையில் இது அமைந்து, சமய இலக்கிய அறிஞர் பெருமக்கள் நல்ல தாமுற்ற கட்டுரைகளை அளிக்கும் ஒன்றாக மிளிர்கிறது.

சென்ற ஆண்டில் எடுத்த சில குறிப்பிடத்தக்க முடிவுகளில் சிலவற்றை இங்கே எடுத்துரைப்பது பயன்தரத்தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப் பட்டது. அவற்றில் ஒன்று பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காக, திருக் கோயில்கள் நிருவாகிகள் தாங்களே முன் வந்து ரூ. 3,49,616.00 அளித்து தம் பங்கினையாற்றியுள்ளனர். அடுத்து விழியற்றோருக்கு "கண் ஒளி வழங்கும் திட்டத்தின்" கீழ் பல்வேறு இடங்களில் திருக்கோயில்களின் சார்பில் ரூ. 2,27,552.00 கொடுக்கப்பட்டதுடன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்திலேயே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது என்பதையும் பெருமை யோடு இங்கே நினைவுகூற விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் திருக்கோயில்களுக்குள் சென்று இறைவனை வழிபடுவது இயலாது இருந்த நிலை மாறி இன்றைய தினம் தாழ்த்தப் பட்டோர் ஒருவர் கண்டிப்பாக திருக்கோயில் அறங்காவலர் குழுவில் இடம்

பெற வேண்டும் என்ற அளவுக்கு விதிமுறைகளில் திருத்தம் செய்து சென்ற ஆண்டு முதல் எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அறங்காவலராக நியமனம் பெறும் சமுதாய மாற்றம் எந்தச் சந்தடியும் இல்லா லாமல் நிறைவேற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு திருக்கோயில்களில் அறங்காவலர்கள் பதவி அளிப்பதோடுமட்டும் நின்றுவிடாமல், பாம்பரை அர்ச்சகர் முறை ஒழிப் பினையொட்டி தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் அர்ச்சகராக்கத்தக்க வகையில் தற்போதைய இந்திய அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்திய அரசுக்கு இம்மாநில அரசு 20—11—1972 அன்று கடிதம் எழுதி இதன் தொடர்பாக 11—12—1972, 22—1—1973 ஆகிய இரு நாட்களும் அவர்கள் நினைவுபடுத்தப்பட்டுள்ளார்கள். என்றைய தினம் தாழ்த் தப்பட்ட குடிமகன் ஒருவன் திருக்கோயில் அர்ச்சகராக வர முடிகிறதோ அன்று தான் உண்மையான சமதர்ம சமவாழ்வை இந்த நாடு பெற்றதாகக் கருத முடியும் என்பதால் இந்திய அரசு இதற்கு ஆவன செய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு நிருவாக அதிகாரியை நியமித்து சீர்மை செய்வது கொள்கையளவில் நலம் பயக்கத்தக்கதாய்த் தோன்றிடினும் திருக்கோயில்களின் நிதி வாயில்கள் இதற்கு இடம் தராத காரணத்தால் ஒரு பகுதிக்குள்ளடங்கும் பல்வேறு சிறிய திருக்கோயில்களை ஒருங்கிணைத்து நிருவாக வசதிக்கு ஏற்ப ஒரு நிருவாக அதிகாரியினுடைய நேரடி ஆளுகைக்குள் அவைகளை கொண்டு வருவதற்கான முடிவு எடுக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்க் கடவுளாம் முருகக் கடவுள் உறையும் பெருமைக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்ச்சோலை திருக்கோயிலைச் சென்றடைய ஏதுவாக மலையடிவாரத்திலிருந்து நல்ல பாதை வசதிசெய்து கொடுக்கக் கருதி ரூ. 5 லட்சம் செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தற்போது வேலை தொடங்கப் பட்டு உள்ளது.

உலகப் பொதுமறையாம் திருக்குறளினை அருளிச்செய்த திருவள்ளுவப் பெருந்தகையின் நினைவாய் சென்னை நகரில் மயிலைப் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலை திருப்பணி செய்வித்தும் திருக்கோயிலை ஒட்டியுள்ள இடத்தில் தற்போது முழுமையடையாத மண்டபத்தை திருத்தியமைத்து, சிறந்த கலைக் கோயிலாக உருவாக்கிடும் முயற்சியை மேற்கொள்ள திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் புரவலராக தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், தலைவராக தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும்

மற்றும் உறுப்பினர்களாக பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர் பெரு மக்களும் பங்குகொண்டு செயலாற்றி வருகின்றனர். "வள்ளுவன் தன்னை உல குனுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டினர்" தம் நன்றிப் பெருக் கின் சின்னமாய் இது அமையும் என்பதால் அனைவரும் இதனை வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

தண்பொழில் சூழ் காவிரிக்கரைபோரம் அமைந்து நாடோறும் பல்லாயிரக் கணக்கான மக்களை தம்பால் ஈர்க்கும் அருள்மிகு தாயுமானஸ்-உச்சிப்பிள்ளையார் திருக்கோயில்களுக்கு தற்போது வழிபடுவோர் படியேறிச் சென்றிடும் நிலைமை மாற்றி பழனியம்பதியில் அமைத்துள்ளது போன்று மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிவரை செல்ல மின் இழுவை ரயில் (லிஞ்ச்) அமைக்க முடிவெடுக்கப் பட்டு அது குறித்த மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பழமைச் சிறப்பைப் பெற்று செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள "திருக் கழுக்குன்றம்" அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயில் புதுப்பிக்கவும், செப்ப னிடவும், இவ்வாண்டு அரசு ரூ. 1,00,000 நிதி உதவியளித்து உள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் உபரிநிதி மிகுந்த திருக்கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து தரப்படும் திட்டம் சென்ற ஆண்டுமுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், திருக்கோயில்களின் வருவாய்க்குத் தக்கவகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய் விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ. 150-க்கு மிகாமல் செலவழிக்கப்படவும் திட்டமிடப்பட்டது. மணமக்களுக்கு இத்தொகையிலிருந்து, வேட்டி, புடவை, தாலி முதலியவைகளை இலவசமாக அளிப்பதுடன் திருமணமும் திருக்கோயில் வளாகத்திலேயே நடத்தி வைக்கப் படுகிறது.

ஏழை எளியோருக்கு உதவும் இத்திட்டம் பொது மக்களிடையே நல்ல வர வேற்பினைப் பெற்றுவருகிறது. இவ்வாறு செய்யப்படும் திருமணங்களின் எண்ணிக்கை கூடிவருவது மனநிறைவுக்குரியதாகும்.

அடுத்து தமிழகத்து அனைத்துத் திருக்கோயில்களைப் பற்றியும் அவைகளின் வரலாற்றுச் சிறப்பையும் சமயப் பெருமையையும் விளக்கும் வகையில் ஒவ் வொரு மாவட்டத்திலும் இருக்கும் அனைத்துத் திருக்கோயில்களையும் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடுவது சிறப்புடையது என்ற

அடிப்படையில் ஏற்கெனவே வெளிவந்த தெல்லை, சென்னை ஆகிய இரு மாவட் டங்களைத் தவிர்த்த மற்ற மாவட்டங்களுக்கான இப்பணியைத் தொடங்க ஆணை யிடப்பட்டுள்ளது.

முடிவு :—

இறுதியாக தமிழ்நாடெங்கணும் மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்டு தொல் பொருள் துறையின் கீழ் இருந்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட திருக் கோயில்கள் சரிவர பாதுகாக்கப்படாமல் பழுதுற்று வருவதை வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இத்திருக்கோயில்கள் அனைத்தும் மத்திய அரசின் திருவாகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது எந்த நிபாயத்தின் பாற் பட்டதும் அல்ல என்பது தெளிவு. இத்திருக்கோயில்களின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும், கலையழகு சிறப்பையும் உரிய முறையில் அமைந்த இம்மாநில அரசின் பாதுகாப்பில் இவையனைத்தும் அமையும் நாளே நன்னாள் என்பதில் ஐயமில்லை.

இவ்வரசு அமைந்த நாள்தொட்டு இன்றுவரை சமய நெறி முறைகளில் அரசு தலையிடாமல் நடைபெற்று வந்துள்ளது. தொடர்ந்து இதே கொள்கையின் அடிப்படையில் செயல்பட இருக்கும் இத்துறையினருக்குத் தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவு வேண்டுமென்று கோரி ஒருசில பகுதிகளி லிருந்து எதிர்ப்புகள் நியாயமற்ற முறையில் எழும்பினாலும்,

"அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என்ற பொன்மொழிக்கொப்ப இவ்வரசு செயல்படும் என்று உறுதி கூறுகிறேன்.

ADMINISTRATION OF THE TAMIL NADU HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959.

The great Thiruvalluvar has given us the following maxim :—

"With all thy strength and utmost might may righteous deeds be done quite ceaselessly in every way and all the ways open."

This kural means that as much as possible, we must incessantly practice virtue everywhere, Deeds of Dharma had commenced from time immemorial and continued without interruption till date and in that line, religious institutions and religious endowments have been safeguarded properly and through them, the

Tamil culture. This has been evident by the growth and prosperity of the socialistic pattern of life in the community. The Hindu Religious and Charitable Endowments (Administration) Department has all along been functioning according to this maxim.

Tamil Nadu is replete with temples which have historical, sculptural and architectural beauties. Their religious aspects have been cherished by worshippers. There are also innumerable Mutts which encourage the growth of Tamil Language. It is through these temples we have been able to trace the history of the Tamils from the time of the Chera, Chola and Pandya Kings up to the present day. These temples which are the centres of all activity, culture and sculpture in Tamil Nadu, considered by the worshippers as places of divinity have been maintained and safeguarded over the years for the benefit of the posterity and the public at large are aware how this Department has been discharging their great responsibility.

The Government of Tamil Nadu are aware of the great responsibilities and the necessity involved in maintaining these great religious institutions in a good condition, as these have been evidence of the way of life of the ancient Tamils and have been the cradles of culture radiating their magnificence to the outside world by their continuity as beautiful places of Art and Sculptures.

The sacred Thiruvalluvar says:

" Although thro ' codes and books the way of doing things you know, Do see that all your acts conform to the worldly ways also. "

Which means that besides being well versed in the methods of action, one should also understand the current ways of the world and act suitably. So this Government have been pursuing action without interfering with the way of life adopted by the people. The Tamil Nadu Government have been implementing several schemes since the last few years for the proper up-keep of these temples which reflect the age long practices and the mind of the ancient Kings, who built them and the preservation of the several religious endowments created by them, which have served to benefit the community for over several thousands of years as evidenced by the stone inscriptions. I wish to place before this

House the achievements of this Department till the end of this financial year and the programmes to be carried out during the next year.

The Department has been administering under its control 157 Mutts, 12,038 Temples and 832 Specific Endowments, totalling 13,027 religious institutions with an estimated income of Rs. 6.75 crores. As a result of the investigation and detection by the Special staff for temple lands, during the year, 2,162 institutions brought under the control of the Department are included in the above total number of institutions. The revenue for maintaining the Department is derived by contributions and audit fees payable under section 92 of the Act according to which every religious institution, whose annual income is not less than Rs. 200 should pay a contribution to this Department. On this basis, an annual income of about Rs. 51,00,000 is being derived from the following several categories of institutions:—

1. Number of religious snstitutions having an annual income of less than Rs. 1,000 ...	7,558
2. Number of religious institutions having an annual income of Rs. 1,000 to Rs. 10,000.	4,830
3. Number of religious institutions having an annual income of more than Rs. 10,000 but below Rs. 1 lakh	566
4. Number of religious institutions having an annual income of Rs. 1 lakh up to Rs. 5 lakhs	60
5. Number of religious institutions having an annual income of more than Rs. 5 lakhs but below Rs. 10 lakhs	5
6. Number of religious institutions having an annual income of more than Rs. 10 lakhs but below Rs. 15 lakhs	3
7. Number of religious institutions having an annual income of more than Rs. 15 lakhs.	5

During this year, the income of this Department has increased by Rs. 52,500 due to the addition of 2,162 new institutions under its control.

26th March 1973]

During the year 1973, it is expected that the number of temples under the Department will be more than 15,000 and the total income likely to be derived from them will be about Rs. 7,50,00,000. Thus, there is a scope for increase of the revenue of the Department.

I consider that the following statistics will explain the steady increase in the income of religious institutions under this developing Department and also the expenditure on the maintenance of the Department :—

Fasli.	*Income of the temples*
	Rs
1379	4,87,51,314
1380	5,51,65,419
1381	5,55,78,000
1382	6,75,00,000

Year. (1)	*Expenditure on the administration of the Department.* (2) Rs.	*Expenditure on Audit.* (3) Rs.
1969–70	32,47,643	9,64,631
1970–71	39,40,636	11,32,260
1971–72	49,74,300	13,76,500
1972–73	58,11,500	12,43,200

The expenditure under administration for the year 1972–73 has increased due to the creation of certain new posts, revision of the scales of pay and provision of additional conveyances. The expenditure incurred towards the pay and allowances of the staff of the Department and the cost of audit are initially met from the State Funds and finally reimbursed from the Hindu Religious and Charitable Endowments Adminstration Fund.

Renovations.

The surplus funds of the religious institutions were diverted to renovate the temples with lofty towers which became dilapidated due to age and the sculptures, and art treasures mutilated and

damaged due to vandalism preserving their original beauty and architecture. The Art treasures in Tamil Nadu are not only preserved but also the innumerable stone inscriptions in the outer walls and the inscriptions excavated from several places, the copper plates and other evidences of history and culture and the religious background of the institutions are protected and preserved. Action has also been taken to preserve and to protect the art sculptures which are lying in the small villages without protection. Besides these, sculptures and icons which are unique in Tamil Nadu are preserved and protected and all precautions taken that they do not fall into the hands of smugglers and find their way to foreign countries.

The copper and panchaloga icons and stone idols which are several centuries old are preserved and protected in the art galleries of the following temples to the delight of the art lovers :—

1. Arulmigu Meenakshisundareswarar Temple, Madurai.

2. Arulmigu Jambukeswarar Temple, Thiruvanaikal "Tiruchirappalli District).

In Arulmigu Thiagarajaswamy temple, Thiruvarur, Thanjavur district, several idols which were acquired recently by excavation are beautifully arranged inside the temple and kept for the view of the worshippers and protected. The art treasures like the idols, sculptures and paintings are protected properly by the provision of iron gratings wherever necessary and at the same time well kept to the view of the worshipping public and art lovers. In short the Department is bestowing its utmost attention in protecting the priceless stone sculptures and idols of Tamil Nadu.

The statement below will show the expenditure incurred since 1967 towards protecting, repairing and renovating the temples apart from the idols and sculptures :—

Year.	*Number of temples.*	*Expenditure incurred.* Rs.
1967	200	1,19,00,000
1968	90	35,00,000
1969	130	57,00,000
1970	250	1,17,00,000
1971	450	2,20,00,000
1972	700	3,86,00,000

It is proposed to take up more number of temples for renovation in the year 1973, in particular action is being taken to renovate about 1,500 temples in the villages. While the Government grant for the renovation of temples for the year 1967–68 was Rs. 3 lakhs, it was stepped up to Rs. 4 lakhs from the year 1968–69 onwards and to Rs. 5 lakhs for the year 1972–73 and at the present it has been enhanced to Rs. 6 lakhs.

Details of certain important tiruppani works commenced during the past year are given below :—

1. Commencement of the work making a gold car with 7 kilos of gold worth Rs. 1,94,950 in Arulmigu Subramaniaswamy Temple, Tiruchendur.

2. Renovation of the prakarams around the temple at a cost of Rs. 5 lakhs.

3. A silver car with 250 kilos of silver worth Rs. 1,50,250 has been made.

4. On an estimated cost of Rs. 3.5 lakhs a scheme to prevent sea-erosion has been chalked out and the work of construction a wall to a length of 590 feet in the eastern side has been completed. The work in the northern side is in progress.

5. Commencement of the work of making a gold kavacham with 3½ kilos of gold and a gold car with 5 kilos of gold in Arulmigu Subramanyaswamy Temple, Tiruthani (Rs. 2,36,725 worth).

6. A car at a cost of Rs. 2 lakhs has been made in Arulmigu Pulavanayagiamman temple, Pahaneri, Ramanathapuram district.

7. Undertaking the work of making a car at a cost of Rs. 2,46,500 in Arulmigu Kothandaramaswamy Temple, Madurantagam, Chingleput district.

8. At a cost of Rs. 16 lakhs, Vairamudi and a gold kavasam have been made in Arulmigu Meenakshisundareswarar Temple, Madurai.

It will be pleasing to note that with the increasing income of temples, thiruppani works are undertaken in several temples in Tamil Nadu.

Kalyana Mandapams.

The total number of Kalyana Mandapams constructed by the religious institutions in Tamil Nadu up to the end of the year 1967 was only 14. But after 1967 and till the end of December 1972, the number of Kalyana Mandapams started was 169. Out of these 41 Kalyana Mandapams have been completed fully. Expeditious steps have been taken to complete the remaining Kalyana Mandapams. The grievances of the public who have suffered in the past for want of place for performing marriages have been to a large extent, redressed by this scheme.

Social Welfare Activities Undertaken from the Surplus Fund of the Temples.

If we understand the origin of the temples in Tamil Nadu it will be clear that they were not only places of public worship but were functioning as organisations to fulfil social work and were also Charitable Institutions to protect and to promote sculpture, art, education, medicine, painting, dancing and the like. Hence based on this, this department is implementing the following social welfare schemes through the temples. In order to provide education, the following six colleges are being maintained by the more affluent temples in Tamil Nadu :—

1. Arulmigu Palani Andavar Arts College, Palani.

2. Arulmigu Palani Andavar Senthamil Kalloori for Women, Palani.

3. Arulmigu Palani Andavar College of Arts for Women, Palani.

4. Arulmigu Devi Kumari College for Women at Kuzhithurai, Kanyakumari district run by Kanyakumari Devaswom Board.

5. Arulmigu Parasakthi College for Women, Courtallam.

6. Arulmigu Ramanathaswami Devasthanam College, Rameswaram.

The proposal for starting two Women's Colleges one under the auspices of Arulmigu Kandhimathi Ambal temple in Tirunelveli and the other under the auspices of Arulmigu Subramaniaswami

temple, Tiruchendur are under the consideration of the Government. Arulmigu Subramanyaswami temple, Tiruttani has undertaken to donate Rs. 5 lakhs to Arulmigu Subramaniaswamy Arts College at Tiruttani, Chingleput district.

Apart from these, Arulmigu Palani Andavar College of Indian Culture under the auspices of Arulmigu Dhandayuthapaniswamy Devasthanam, Palani, Madurai district and Poompuhar Peravai College at Melaiyur near Thiruvengadu, Thanjavur district are also functioning.

In this connection it is worth recollecting that a post-graduate course in Indian Philosophy and Indian Religion and Culture has been introduced at Poompuhar College in 1972.

High Schools and Elementary Schools.

Thirteen High Schools for boys and girls are maintained under the auspices of the temples. Out of these, three schools were started during the year 1972–73. It is proposed to start in 1973–74 a High School under the auspices of Pichai Kattalai Estate, Thirukadaiyur, Thanjavur district and another High School in Pallathur, Ramanathapuram district under the auspices of a Specific Endowment.

Nathaswaram Schools.

With a view to promote the art of Nathaswaram, two Nathaswaram Schools have been started at the following places from the funds of the following religious institutions and the students are trained properly by suitable experts in the art :—

1. Arulmigu Dhandayuthapaniswami Thirukoil Nathaswaram School, Palani.

2. Nathaswaram School at Valivalam, Thanjavur district maintained by Arulmigu Iruthayakamalanathaswami Temple.

Twenty students are undergoing training in Nathaswaram and 10 students in Thavil in the school at Palani and 15 students are undergoing training in the school at Valivalam, Thanjavur district.

Schools for the Deaf and the Dumb.

In order to impart training to persons born deaf and dumb to speak and write, two training schools are being maintained efficiently under the auspices of Arulmigu Ranganathaswamy Temple, Srirangam (Arulmigu Mariamman Temple, Samayapuram) and Arulmigu Dhandayuthapaniswamy Temple, Palani.

Orphanages.

Orphanages are being maintained under the auspices of the following ten temples with a view to maintain persons who have none to take care of them and have been forced to live begging for a morsel of food undergoing untold sufferings :—

1. Arulmigu Subramaniaswamy Temple, Tiruttani town and taluk, Chingleput district.

2. Arulmigu Navaneetheswarar temple, Sikkil, Nagappattinam taluk, Thanjavur district.

3. Arulmigu Vaidhyanathaswamy temple, Vaitheeswarankoil, Sirkali taluk, Thanjavur district.

4. Arulmigu Srinivasaperumal temple, Nachiarkoil, Kumbakonam taluk.

5. Arulmigu Meenakshisundareswarar temple, Madurai.

6. Arulmigu Dhandayuthapaniswamy Devasthanam, Palani.

7. Arulmigu Nelliappar Devasthanam, Tirunelveli.

8. Arulmigu Subramaniaswamy Devasthanam, Tiruchendur.

9. Arulmigu Vazhaithottathuayyan temple, Ayyanpalayam, Palladam taluk, Coimbatore district.

10. Arulmigu Thirumalaikumaraswami temple, Panphozhil, Tenkasi taluk, Tirunelveli district.

Creches.

For pre-school children who have lost their parents and for those who cannot be cared for by their parents who leave them in the early morning itself to earn their bread, creches are being maintained at the following 5 places. In all these places, the children are brought up in the Hindu way of life :—

1. Arulmigu Vedanarayanaperumal Temple, Thirunarayanapuram, Musiri taluk, Tiruchirappalli district.

2. Arulmigu Subramaniaswamy temple, Kumaravayalur, Tiruchirappalli district.

3. Arulmigu Ranganathaswamy Devasthanam, Karamadai, Avanashi taluk, Coimbatore district.

4. Arulmigu Mariamman temple, Elampillai, Salem district.

5. Arulmigu Dhandayuthapaniswami Devasthanam, Palani, Madurai district.

Home for the Old.

Last year a scheme was formulated for starting homes for the old from out of the surplus funds of the temples. Based on this scheme, a home with provision to admit 30 persons in it, has been started under the auspices of Arulmigu Dhandayuthapaniswami Devasthanam, Palani and is functioning from 15th February 1973 onwards. Further, under the auspices of Arulmigu Meenakshi Sundareswarar temple, Madurai and Arulmigu Subramaniaswami Temple, Tiruchendur two homes for maintainsng 20 persons started functioning from 15th March 1973.

Hospitals.

Realising the necessity to establish hospitals and dispensaries for the benefit of the public including the worshipping public and the pilgrims, 23 Siddha Vaidyasalas and one Allopathic Dispensary are being maintained under the auspices of the temples. Instructions have been issued to the Trustees and the Executive Officers of the temples to start more Siddha Vaidyasalas in view of their importance.

Libraries.

Libraries are functioning effectively in 204 temples with a view to promote general knowledge besides impressing upon the readers the tenets of Hindu religion. Further suitable instructions have been issued to the affluent temples to start libraries.

Amenities to Pilgrims.

There is a scheme to construct Rest Houses and Pilgrim Quarters for the convenience of the pilgrims and worshippers in places known as 'Arul Thalams' (divine centres) wherein every

day worshippers congregate in increasing number. Under this scheme, estimates have been sanctioned to undertake the works by the various temples.

Construction of Pilgrim Quarters.

Year.	*Estimate sanctioned.*
	Rs.
1969	1,10,700
1970	2,65,800
1971	11,14,000
1972	7,43,500

Construction of Rest Houses.

Year.	*Estimate sanctioned.*
	Rs.
1969	6,34,000
1970	10,50,000
1971	5,24,400
1972	5,24,400

The works are under expeditious progress.

Action is being taken to provide such facilities on a large scale during the year 1973.

Temple Lands.

Besides several useful activities undertaken under the auspices of the temple, action has also been taken at the same time to increase the revenue of the temples by taking possession of their lands and other immovable properties under unauthorised occupation and bringing them into accounts of the temples. The following details will clearly indicate the steps taken by the Department in this regard.

The Government have sanctioned the employment of special staff consisting of a Special Officer in the cadre of District Revenue Officer and four Special Deputy Collectors with the necessary ministerial staff to attend to the work of gathering particulars regarding the lands owned by the temples in Tamil Nadu and

to take suitable action to vest the entire lands in the temples themselves. Additional staff was sanctioned in 1971 to expedite the inspection work to see that all immovable properties belonging to the religious institutions are in their actual possession and are registered in their names and properly entered in the Property Register and that those properties which are not in the possession of the temples are also brought into account and the income from the property is properly accounted for. Details of the lands, buildings, sites, etc., owned by each temple are being gathered to see whether they are under proper lease, whether there are encroachments, unauthorised occupation or possession, etc.

As a result of preliminary investigation the special staff have detected the following :—

	Number of institutions.	*Extent of lands belonging to the institution (wet and dry).* ACRES.
1 Number of institutions found not under the control of the Department as a result of investigation.	40,247	1,98,920·53
2 Number of cases out of item (1) above for which preliminary reports were received from Inspector (out of this 2,162 institution have been brought under the control of the Hindu Religious and Charitable Endowments Department.	6,000	41,664·08
3 Number of institutions in which temples lands were not in actual possession and enjoyment of the temple but found to be under the enjoyment of private persons.	15,944	26,065·88 cultivable lands+ 656·62 urban land.
4 Number of cases in which action has been taken to recover possession of lands (S. No. 3).	880	2,250·41
5 Number of institutions where possession has since been recovered.	186	717·43

The special staff have submitted reports relating to 33,703.86 acres of agricultural lands; 772.89 acres of urban land and 2,218 buildings belonging to religious institutions which are in receipt of a low rental income.

They have also reported on the profitable utilisation of 6,694.87 acres of temple lands which are lying waste. Action is being taken in this regard by the Departmental Officers.

THE TAMIL NADU (TRANSFERRED TERRITORY INCORPORATED AND UN-INCORPORATED) DEVASWOMS ACT, 1959 (TAMIL NADU ACT 30 OF 1959).

Religious institutions which are known as incorporated and un-incorporated Devaswoms in Kanyakumari District and in the Shencottah Taluk of Tirunelveli District are being managed, controlled and supervised by the Kanyakumari Devaswom Board under the provision of the Tamil Nadu Act 30 of 1959. The remaining institutions in the said areas which come under the purview of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 are under the jurisdiction of the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments, Kanyakumari. The Kanyakumari Devaswom Board consists of three members, of whom, one is nominated by the Ex-Ruler of Travancore State and the other member and the President are nominated by the Government of Tamil Nadu. Though the period of members has already expired on 31st March 1972, yet the Board is functioning under the Act.

Kanyakumari Devaswom Board is getting Rs. 13,68,000 per annum by way of Government grant. In order to abolish the Kanyakumari Devaswom Board functioning in the Kanyakumari District and Shencottah Taluk and to control and manage all the institutions both incorporated, and un-incorporated, the Government have addressed the Government of India for permission to amend the Act enabling the extension of the provisions of the Hindu Religious and Charitable Endowments Act, 1959 which is applicable to all Hindu religious institutions in Tamil Nadu. It is necessary to point out that despite the urgency in the matter the clearance of the Central Government, has not been given so

far. It is hoped that this amendment will help the proper management of all temples in Kanyakumari District and Shencottah Taluk in Tirunelveli distrsct.

For the maintenance of temples in Pudukkottai, the Government have sanctioned an annual grant of Rs. 4 lakhs. Apart from this, a sum of Rs. 6,000 is also paid to the ex-ruler of Pudukkottai State for the maintenance of his Pooja-veedu.

Archanai in Tamil.

In order to accept the unified demand of all sections of Tamil Nadu, the Tamil Archanai System has been extended in all the temples in Tamil Nadu.

Although there was some objection in the beginning from certain quarters, the Tamil Archanai is being performed in all the temples due to the spontaneous support given by the people. Yet because this Government do not want to interfere with the rights of the worshippers, sufficient facilities have also been made to those who want to perform archanai in Sanskrit also. However, the daily increase in the number of persons desiring the Tamil Archanai is a satisfactory trend.

Aid from UNESCO.

(a) The United Nations Educational, Scientific and Cultural Organisation has continued to take interest in the preservation, renovation and restoration of some of the historic and ancient temples in the State. They have given 12,000 dollars in the form of materials not produced in India, including pencapsula (a kind of spray oil) which is useful for preserving the Sudhai works in their prestine form to Arulmigu Ranganathaswamy Temple at Srirangam. During 1972-73 the Nanmuga Gopuram and Ariyapadal Gopuram were completed.

With due gratitude, I may add for the information of the Hon'ble Members that Arulmigu Ramanathaswamy Temple, Rameswaram, Arulmigu Varadarajaswamy Temple, Kanchipuram and Arulmigu Natarajar Temple, Chidambaram have been selected as the second, third and fourth temples eligible for assistance from the UNESCO and point out that the matter is under correspondence.

Museum.

Museums depicting the art and architecture of temples are maintained in the following institutions :—

1. Arulmigu Ranganathaswamy Temple, Srirangam.
2. Arulmigu Meenakshisundareswarar Temple, Madurai.
3. Arulmigu Jambukeswarar Temple, Tiruvanaika, Tiruchirappalli.

The policy is that all temples having thousand pillared mantapams can maintain art galleries and action is being taken to start more such art galleries.

Monthly Journal. 'Thirukoil'.

A monthly journal by name 'Thirukoil' is being published by the Department since 1958 and it is having 4,925 subscribers not only in Tamil Nadu but also in foreign countries. The journal contains articles on religious, philosophical, cultural and literary matters and gives a fund of information on the antiquity and history of the temples in Tamil Nadu. Informative and instructive articles written by eminent scholars are published in the journal.

I consider that it is worth mentioning on this occasion certain important decisions taken during last year.

During last year a sizable amount was spent from the surpuls funds of the religious institutions of Tamil Nadu for two noble social services. One of them is for "Beggars Rehabilitation Fund" for which the managements of the religious institutions have voluntarily come forward and donated a sum of Rs. 3,49,616. I feel proud to recollect that the other one is for the "Eye Camp Scheme" for which they have not only donated a sum of Rs. 2,27,552 but also helped the scheme to be implemented in the places where the religious institutions are located.

There was a time when no member of the Scheduled Castes could even enter the temples to worship the deity. It has been changed and provisions have been made, in the Act making necessary amendments for the compulsory appointment of a person belonging to the Scheduled Castes as one of the Trustees

in the Trust Board of religious institutions and since last year this revolutionary social reform has been introduced without any hullabaloo.

Not content with the mere offering of the office of trusteeship to the members of the Scheduled Castes in the religious institutions, this Government have addressed the Central Government on 20th November 1972 that following the abolition of the hereditary Archakarship, suitable amendment should be made in the Constitution of India making provision for the appointment of members of the Scheduled Castes as Archakas. The Central Government have been reminded twice on 11th December 1972 and 22nd January 1973 in the matter. It is expected that the Central Government would come forward to do the needful in this regard, as the Nation could be proud of its achievement of a socialistic pattern of society only on the day when a member of the Scheduled Castes became an "Archakar" in a religious institution.

In principle it may appear beneficial to appoint Executive Officers for every religious institution to improve its administration. But the financial resources of such institutions do not afford to have such Executive Officers. It has therefore been decided that certain number of small temples within a specified area may be grouped together and brought under the direct control of an Executive Officer for administrative convenience and action in this regard is in process.

Estimates for a sum of Rupees five lakhs have been prepared for the formation of a Ghat Road from the foot of the Hill to "Pazhamuthircholai Temple", one of the Six Padaiveedus dedicated to Lord Muruga and the work has been commenced.

In memory of Saint Thiruvalluvar who gave us the Immortal Thirukkural, steps are being taken for the renovation of the Tiruvalluvar temple at Mylapore, Madras, for remodelling the present incomplete mantapam adjacent to the temple and for converting it as an Art Gallery. A Thiruppani Committee with the Tamil Nadu Chief Minister, Hon'ble Dr. Kalaignar as its patron. His Holiness Kundrakudi Adigalar as its President, and scholars from different walks of life as its members has been constituted for the purpose. The Committee has set on its task.

No doubt this scheme will be welcomed by all as it will remain a symbol of gratitude of the Tamilians who have glorified themselves by giving Valluvar to the world.

I am glad to mention that in order to provide facilities for the devotees to reach the Hill Temple Thayumanavar-Uchipillayar situated on the flourishing banks of the River "Kaveri", as in Palani without recourse to a climb of steep steps, it has been decided to provide a winch to the top of the Hill Temple. The estimates for the above work have been prepared and are under scrutiny.

The Government have sanctioned financial aid of Rs. 1,00,000 (One lakh) for the repair and renovation of the ancient and famous temple dedicated to Arulmigu Vedagireeswarar, Thirukazhikundram in Chingleput district.

The scheme to perform free marriages on behalf of temples for the poor and the downtrodden from out of the surplus funds of big religious institutions is enforced since last year.

On this basis, it is proposed to perform a prescribed number of free marriages at a cost not exceeding Rs. 150 per marriage according to the financial status of the religious institutions. Out of this amount, the marriage couple are supplied with dhoties, sarees, 'thali', etc., and the marriage is conducted in the temple premises itself.

This scheme which seeks to help the poor is receiving the appreciation of the public. It is a matter of satisfaction that such free marriages are on the increase.

Next, with a view to give details about the temples in Tamil Nadu, their ancient historical greatness and religious significance, it was decided to publish Guide books containing full details of all temples in the districts and on this basis, the publication of Guide books for the districts, other than Tirunelveli and Madras—for which Guide books have already been published—has been ordered.

Conclusion.

In conclusion, it pains me to mention here that there are hundreds of temples in Tamil Nadu under the control of the Archaeological Survey of the Government of India, which have not been properly protected and thereby they fall into disrepairs.

It is perfectly clear that the taking over of control of such temples under the administrative control of the Central Government is not justifiable on any ground. It will be a happy day indeed when, under the safeguards provided by this Government the antiquity, the historical greatness as well as the artistic beauty of all these religious institutions will be properly preserved, with their vesting under the control of this Government.

Ever since this Government was formed it has not interfered with the religious and ritual matters obtaining in temples. I may mention here that inspite of the unjust and unreasonable opposition from certain quarters this Department would bear in mind the great teachings of Saint Thiruvalluvar.

" That life alone is virtue which doth eschew these as ill

The Passions four like envy, greed, wrath and words evil ".

and continue its work ceaselessly. I appeal to the people of Tamil Nadu to give their unified support in our endeavour.

(உ) இன்னும் முடிவுரு நிலையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(எ) இந்த இட மாற்றங்களில் ஒரே மாதிரியான, பாரபட்சமல்லாத விதி பின்பற்றப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) (i) ஏறத்தாழ 285 பேர். (ii) 169 பேர்.

(இ) 140 பேர்.

(உ) 29 பேர்.

(எ) ஆம்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இம்மாதிரியாக ஆசிரியர்களையும், தலைமையாசிரியர்களையும் மாற்றுவதற்கு இந்தத் தேதிக்குள்ளாகத்தான் மனுச் செய்து கொள்ள வேண்டுமென்று விதி இருக்கின்றதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் கணவன் மனைவியர்கள் ஒரே ஊரில் இருப்பார்களானால், அவர்களை அதே ஊரில் கட்டாயமாக வைக்க வழி செய்ய வேண்டும், மாற்றக்கூடாது என்று அரசு ஏதேனும் வழிவகைகளுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பேர்ப்பட்ட மாற்றங்களையெல்லாம் பெரும்பாலும் கோடை விடுமுறைகளில், பள்ளிகள் துவக்குவதற்கு முன்னால்தான் செய்ய வேண்டும் என்று பொதுவாக விதி முறைகள் இருக்கின்றன. ஆகவே கூடுமானவரையில் கணவன் மனைவிமார்கள் அதே இடத்திலேயே வசிப்பதற்கு வசதி செய்து தர வேண்டுமென்பதுதான் விதியாக இருக்கின்றது. நிர்வாகக் காரணங்களுக்காகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காகவோ, பதவி உயர்வு காரணமாகவோ அல்லது அதே இடத்திலே இருக்கக்கூடாது என்று ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கின்ற காலத்திலோ இந்த நிலைமை ஏற்படக்கூடும். ஆனால் கூடுமானவரையில் இருவரையும் பிரிக்காமல் ஒரே இடத்தில் பணியாற்றக்கூடிய வகையில் வசதி செய்ய வேண்டுமென்பதுதான் விதியில் கூறப்பட்டுள்ளது.

Private High School taken over by the Government

* 275 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Correspondent of any of the Private High School in Tirunelveli district has addressed the Government for the take-over of that high school; and

(b) if so, the action taken thereon ?

தனியார் உயர்நிலைப் பள்ளியை அரசு ஏற்றுக்கொள்ளுதல்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எதேனும் ஒரு தனியார் உயர்நிலைப்பள்ளியை அரசே எடுத்துக்கொள்ளும்படி அப்பள்ளி நிர்வாகி விண்ணப்பித்துள்ளாரா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) திருநெல்வேலி மாவட்டம், காளாம்பட்டி இந்து உயர்நிலைப் பள்ளியின் தாளாளர் அப்பள்ளியை அரசு ஏற்று நடத்தும்படி கோரினர். அக்கோரிக்கையை ஆராய்ந்து 1972-73 ஆம் கல்வி ஆண்டு முதல் அப்பள்ளியை அரசினர் உயர்நிலைப்பள்ளியாக நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

Midday Meals Scheme

* 276 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government will arrange to increase the number of poor pupils benefitted by the Midday Meals Scheme in the Elementary Schools belonging to Madras Corporation ; and

(b) if so, when it will be increased ?

[1973 மார்ச் 27

மதிய உணவுத் திட்டம்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியில் தொடக்கப்பள்ளிகளில், படிக்கும் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதை எண்ணிக்கையில் அதிகரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

(இ) ஆமெனில், எப்போது செய்யவுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இப் பொருள் சென்னை மாநகராட்சியினரால் பரிசீலிக்கப்பட வேண்டியது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 277 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of food poisoning cases that came to the knowledge of the Government in connection with the Midday Meals Scheme during the last five years ; and

(b) (1) the names of the institutions involved in such cases; and (2) the number of students affected?

Midday Meals Scheme

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்தாண்டுகளில் நண்பகல் உணவு தொடர்பாக அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட உணவில் நச்சுப் பொருள் கலந்த நேர்வுகள் எத்தனை ?

(இ) அத்தகைய நேர்வுகளில் தொடர்புடைய (1) கல்வி நிலையங்களின் பெயர்கள். (2) பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் யாவை ?

1973 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 3.

(இ) (1) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வடபாதி மங்கலம், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கொடமுருட்டி (திருப்புறம் கல்வி மாவட்டம்), அரசினர் நடுநிலைப் பள்ளி, திண்டுக்கல்.

(2) 122.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அண்மையிலே தோரூர் மாவட்டத்திலேகூட ஓர் இடத்திலே உணவிலே இது போல நச்சுப் பொருள் கலந்திருந்ததனாலே மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அது போல தொடர்புடைய நிகழ்ச்சி இதிலே இல்லை. அதைப் பார்க்கின்றபோது, ஒரு வேளை இது குறைவாக இருக்குமோ என்று நினைக்கின்றேன். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உணவில் நச்சுப் பொருள்கள் கலந்த வகையில் அந்த மூன்று பள்ளிகளிலும் இந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் அந்த மூன்று பள்ளிகளிலும் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மருத்துவம் செய்த பிறகு அதிலே யாரும் இறந்து போகவில்லை. அதுதவிர வேறு 5 இடங்களிலே நச்சுப் பொருள்களாலும் காலரா போன்ற வேறு பல காரணங்களினாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. அந்த வகையிலேதான் தஞ்சை மாவட்டத்திலே அம்மாப்பேட்டை தாலுகா, அம்மாப்பேட்டை ஆர்.சி. துவக்கப்பள்ளியில் 180 பேர்கள் மதிய உணவால் பாதிக்கப்பட்டு, அதிலே 17 பேர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். அதிலே 9 வயது, 5 வயது சிறுமியர்கள் 2 பேர்கள் இறந்தார்கள். அதற்குப் பிறகு அதைப் பரிசோதனைக்கு அனுப்பிய வகையில் அதிலே இரண்டு வகைகள் இருந்தன. ஒன்று காலரா உகாவா என்கின்ற தன்மையில் இருக்கின்றது. மற்றொன்று நெகடிவ் என்று ஊராயப்பட்டு வந்திருக்கின்றது. அது நச்சுப் பொருள்கள் கலந்ததன் காரணமாக அல்ல. தஞ்சை மாவட்டம் சீர்காழி மணிக்கிராமத்தில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி வந்து 9 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். அதிலே 2 பேர்கள் இறந்து

விட்டார்கள். இதிலும் இரண்டில் ஒன்று காலரா உகாவா என்றும் மற்றொன்று காலரா நெகடிவ் என்றும் புலன் ஆயிற்று. பிறகு கழுகு மலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் 130 பிள்ளைகளில் மதிய உணவு உண்டதால் 57 பேர்கள் பாதிக்கப்பட்டனர். சிகிச்சைக்குப் பிறகு அனைவரும் உடல் நலமுற்றார்கள். தர்மபுரி மாவட்டம் சூளகிரி சரகத்தில் உள்ள வத்தலபள்ளியில் 50 பிள்ளைகள் 31-7-72ல் மதிய உணவு உண்டதால் 12 பிள்ளைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மதிய உணவில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள், பாத்திரங்கள் முதலியவை ரசாயன ஆய்வுக்கு சோதனைக்கு அனுப்பப்பட்டதில் விஷம் கலந்துவிட்டதற்கு அறிகுறி ஒன்றும் தென்படவில்லை என்று அறிக்கை வந்திருக்கின்றது. இந்த 5 பள்ளிகளிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எற்பட்டிருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மதிய உணவு மையங்களுக்காக அமெரிக்காவிலிருந்து வழங்கப் படும் கோர் நிறுவனம் சார்பாக வாக்கூடிய உணவுப்பொருள்கள் செல்லரித்தும் பூச்சிகள் உள்ளதாகவும் சில நிறுவனங்களில் வழங்கப்படக்கூடிய சூழ்நிலையிருக்கின்றது. அந்தப் பொருள் பாது காப்பாக வைக்கப்பட வேண்டும். அம்மாதிரிப் பொருள்கள் வழங்கப்படாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் கொடுக்கின்ற உணவில் கிட்டத்தட்ட ரூ. 6 கோடி விலை மதிப்புள்ள பொருள்களை 16 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர் மாணவியர்களுக்கு நாம் அளிக்கின்றோம். அதிலே கோளாறு எற்படுவதில்லை. நமது உணவகத்திலேயிருந்து வருவதிலே கோளாறு இல்லை என்று சொல்வதற்கில்லை. இங்கே கொண்டு வந்து வைக்கும்போது, சரியாக பாதுகாப்பாக வைக்கமுடியாத இடங்களிலே வைத்திருந்ததனால், கோளாறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆகவேதான் அதைத் தவிர்ப்பதற்கு பல அறிவுரைகள், குறிப்பாணைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆய்வு அலுவலர்கள் அவ்வப்போது கவனமாக மதிய உணவு மையங்களைப் பார்வையிட வேண்டுமென்றும் பணிக்கப்பட்டிருக்கின்றார்கள். பல இடங்களில் இப்படி எதிர்பாராத நிலைமைகள் ஏற்பட்டதனால், பாத்திரங்கள் போன்றவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, குழந்தைகளுக்கு இலவச உணவு அளிப்பதில் 'நச்சு கலந்துவிட்டது, நச்சு கலந்து விட்டது' நச்சுப் பொருள்களை, விஷப்பொருள்களை அதிலே கலக் கிறார்கள் என்று தொலைபேசியில் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நச்சுப்பொருள்கள் அகற்றப்பட வேண்டியவைகள்தான். ஆகவே நச்சுப்பொருள்கள் இல்லாமல் குழந்தைகளுக்கு அளிப்பதற்காக, மதிய உணவை குழந்தை களுக்கு அளிப்பதற்கு முன்னால் அதை ஆசிரியர்கள் ஒருவர் இருவர் சாப்பிட்டுப்பார்த்து 'டெஸ்ட்' செய்து, அதற்குப் பிறகு குழந்தைகளுக்கு அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனால் ஏற்படுகின்ற குறைபாடுகள் அல்ல. நூறு பேர், இருநூறு பேர் உணவு உண்ணுமிடத்தில் 10, 15, 20 பேர்கள்தான் பாதிக்கப் படுகின்ற நிலைமை இருக்கின்றது. மிகவும் பாதிக்கப்படுபவர்கள் ஒருவர் இருவர்தான். ஆகவே அந்த முறையில் எல்லோருமே சாப்பிடுகின்ற நிலைமை ஏற்படாது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : திரு. சி. வி. ராஜ கோபாலுக்கு ஆசிரியர்கள் மேலே கோபம். என் கூடப் படித்துக் கொண்டு வந்தவர்கள். கோர்ட் பாரத்திலேயே 'பெயில்' ஆகி விட்டார்கள். அதனால் அவருக்கு சொல்லக் கோபம்.

திரு. செ. முத்துசாமி : அந்தக் காலத்தில் ஆசர்களுக்கு உண்டு காட்டிகள் என்று உண்டு காட்டுவதற்காக ஒருவர் இருந்து காகச் சொல்வார்கள். இப்போது உண்டு காட்டிகளாகப் பணிக்க வேண்டுமென்று உறுப்பினர் கருதுகிறாரா ?

திரு. சி. வி. ராஜகோபால் : குழந்தைகள் அனுபவிக்கின்ற அந்தக் கஷ்டத்தை ஆசிரியர்களும் அனுபவிக்கட்டும்.

Government Polytechnic Teachers Association

*278 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government Polytechnic Teachers Association has demanded greater promotional avenues for teachers in October 1972 ; and

(b) the details of their other demands made to the Government ?

அரசினர் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் சங்கம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களுக்கு, அதிக அளவு பதவி உயர்வு வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், அரசினர் பாலிடெக்னிக் ஆசிரியர்கள் சங்கம் கோரியுள்ளதா ?

(இ) அச்சங்கம், அரசுக்குக் கொடுத்த ஏனைய கோரிக்கைகளின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மற்ற கோரிக்கைகள் ஆவன :—

(1) அரசு பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் பணிபுரியும் தற்காலிக ஆசிரியர்களின் ஊழியப் பாதுகாப்பு.

(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் மூலம் முறையாக நியமனம் செய்யப்பட்டையில் தகுதியில் உள்ளவர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு தருதல்.

(3) வேறு துறையிலிருந்து வரையறுக்கப்பட்ட முறை பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் நியமிப்பதைக் கைவிடுதல்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த மாதிரியான பாலிடெக்னிக்குகளிலே 'டெக்னிக்கல் ஸ்டாப்' 'நான் டெக்னிக்கல் ஸ்டாப்' என்று இருக்கக்கூடியவர்களுக்கு வெவ்வேறுவிதமான சம்பள விகிதங்கள் இருக்கின்றதா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன். எல்லோரும் ஒரேவிதமான சம்பள விகிதங்கள் பெறுகின்றார்களா என்பதையும் அறிய விரும்புகின்றேன். ஆங்கிலம், விஞ்ஞானம் போதிக்கக்கூடிய விரிவுரையாளர்களுக்கு ஒரு ஸ்கேலும், மற்ற டெக்னிக்கல் ஸ்டாப், அசோசியேட்டட் லெக்சரர்ஸ், லெக்சரர்ஸ்க்கு வேறு விதமான சம்பள விகிதமும் இருக்கின்றதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றி விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் அறிந்து சொல்லலாம். பெரும்பாலும் கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் போன்றவைகளுக்கெல்லாம் கலைக் கல்லூரிகளிலிருந்து தான் நாம் அவர்களைப் பெறுகின்றோம். டெக்னிக்கல் ஸ்டாப் போன்றவர்களை எலெக்ட்ரிசிடி, பிட்டின்டி. ஆகிய துறைகளிலிருந்து பெறுகிறோம். அதிலே வேறுபாடு இருக்கின்றதா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் அறிந்து சொல்லலாம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகளின் மீது அரசும், இயக்குநர் அவர்களும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? அதை நீண்ட நாட்களுக்கு நீடிக்காமல் விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி அவர்கள் கோரிக்கைகளைத் தந்திருக்கின்றார்கள். வேறு எந்தத் துறையிலிருந்தும் எடுக்கப்படாமலிருப்பதற்கு இதே துறையில் புரமோஷன் கிடைத்து அந்தப் பதவியிலே இருக்கக் கூடிய வாய்ப்பு என்பட்டால், அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இந்தத் துறையிலே பொருத்தமானவர்கள் இல்லாத நிலையில், வேறு துறை டெக்னிக்கல் பெர்சனை நாம் பெற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அந்தக் கட்டத்தைத் தவிர, இதிலே ஒருவர் இருந்து அவரை எடுக்காமல் வேறு ஒருவரை எடுத்தால், பாதகமாக முடியும். ஆகவே இந்தத் துறையிலே இருப்பவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, அதிலே புரோமோஷன் தரவேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுக்கின்ற வரையில் பதவி உயர்த்திக்கொண்டே போவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுக்கின்ற வரையில் பதவி உயர்வு தாற்காலிகமாக வரும். இப்போது பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை எற்று நடத்தக்கூடியவர்கள் அவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பற்றி நடவடிக்கைகள் எல்லாம் இந்தத் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

[1973 மார்ச் 27

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, 10, 12 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகும் தேர்வு ஆணைக் குழுவுக்குமுன் வரும் பொழுது அவர்கள் அந்தத் துறைக்குத் தகுதியற்றவர்கள் என்று தள்ளப்படுகிற முறையிலிருந்து அவர்களையே தேர்ந்தெடுப்பதற்கு அரசு ஒரு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியாக விண்ணப்பம் தந்தால், தனியாக ஆராயலாம்.

Supply of Medicines to the Hospitals.

* 279 Q.—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the medicines supplied to hospitals in the State do not reach them in time; and

(b) if so, the action taken by the Government thereon ?

மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் மருத்துவமனைகளுக்கு வினியோகம் செய்யப்படும் மருந்துகள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

THIRU G. SWAMINATHAN : Sir, when the indents are made by many of the hospitals to the Central Medical Stores, it takes a long time for the medicines to reach the hospitals. May I know how the Hon. Minister is able to give the answer that he has given ?

1973 மார்ச் 27]

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, usually the District Medical Officer or the head of the medical institution should send his indents in the particular form that is prescribed to the Stores Depot of the Central Government organisation. Whenever such indents are received, naturally they despatch the medicine that is required by the Hospital. If they do not have the necessary quantity of such medicines, then only they reply in the negative.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ ஸ்டோர்சுக்கு ஆர்டர் கொடுப்பதற்கு முன்னால் ஒரு 'பார்ம்' fill up பண்ணி அனுப்புகிறார்கள். அதைப் பெற்று ஒரு ஆண்டு கழித்த பிறகு அதற்கு உண்டான மருந்துகள் இருக்கின்றனவா இல்லையென்ற பதில் வருகிறது. இப்படிப்பட்ட நிலை யூனியன் ஆஸ்பத்திரிகளிலும் அரசாங்க மருத்துவ மனையிலும் இருக்கிறது. ஆறு மாதங்கள் தயக்கம் ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு, 'பார்ம்' வந்த பிறகு, ஒரு வாரம் அல்லது 15 நாட்களுக்குள் மருந்துகள் இருக்கின்றன அல்லது இல்லையென்ற விவரம் அறிக்கை கொடுத்துவிட்டு, பிறகு மருந்துகள் அனுப்பினால் செளகரியமாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரையில் ஆங்காங்கே உள்ள மருத்துவ நிலையங்கள் சார்பாக, மாவட்ட மருத்துவத் துறை அதிகாரிகள் நேரடியாக மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ள மத்திய மெடிக்கல் ஸ்டோர்ஸ்க்குத் தான் விண்ணப்பிக்க வேண்டும். அங்கிருந்து மருந்து கிடைக்கா விட்டால், டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீசஸ்க்குத் தெரிவிக்கலாம். அப்படி நெருக்கடியான காலத்தில் மருந்து கிடைக்க வில்லையென்றால், வெளியில் விலைக்கு ரூ. 1,000 அல்லது ரூ. 1,500-க்கு வாங்குவதற்கு அனுமதியிருக்கிறது. இடைக்காலத்தில் வாங்கிக் கொண்டு தேவையை நிறைவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பம் அனுப்பினால், காலாகாலத்தில் மருந்து கிடைக்கிறது என்று விளக்கம் கிடைத்திருக்கிறது. அப்படிப் பல இடங்களில் கிடைக்கவில்லையென்று அரசாங்கத்திற்கு மாவட்ட மருத்துவத் துறை அதிகாரிகளிடமிருந்து புகார் வரவில்லை. வருமானால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

[1973 மார்ச் 27

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கொல்லிமலை போன்ற பிற்பட்ட இடங்களில் இருக்கக்கூடிய பிரைமரி ஹெல்த் சென்டர்களில் வேண்டிய மருந்துகள் சப்ளை செய்வது குறைந்திருப்பதால், கொல்லிமலை வாசிகள் மருந்து இல்லாமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் சொன்னார்கள். அங்கு போக்குவரத்து வசதியில்லை. கொல்லிமலைப் பகுதி மக்கள் அந்தப் பக்கத்திலுள்ள நகரங்களுக்குச் சென்று டிரீட்மெண்டு எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கூடுதலான அளவில் மருந்து சப்ளை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி பொருத்தமற்ற கேள்வி. போக்குவரத்து வசதி இல்லை என்றால் நோயாளிகள் அதிகம் பேர் இருக்க முடியாது. அங்கே டாக்டர் ஒழுங்காகத் தங்கியிருக்க மாட்டார்கள். அங்கு மருந்து அதிகமாகப் போனால், பயனற்றதாகப் போய்விடும். இப்போது ரூ. 10 ஆயிரம் மதிப்புள்ள மருந்துகள் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய அரசு ரூ. 6 ஆயிரம் மதிப்புள்ள மருந்து தருவதற்குத்தான் ஆலோசனை வழங்கியுள்ளது. நமது அரசு அதை உயர்த்தி வழங்கியிருக்கிறது. இந்த ரூ. 10 ஆயிரம் பெறுமானமுள்ள மருந்தை முறைப்படி பயன்படுத்தினால் எதற்தாழ 50 அல்லது 60 ஆயிரம் பேர்களுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்க முடியும். அந்த இடம் பொருத்தமற்றதாக வசதிக் குறைவாக போக்குவரத்து வாரியற்றதாக இருப்பதால், மக்கள் பயன்படுத்திக்கொள்ள இயலாத நிலைமை இருக்கின்றது. அதில் மாற்றம் வரும்போது ஆவன செய்யப்படும்.

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழு வானது மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்கிற நேரத்தில், மத்திய மருந்துக் கிடங்கு தங்களுடைய தேவைகளுக்குப் போதுமான மருந்துகள் வினியோகிக்கக்கூடிய நிலையில் இல்லையென்று எனக்கு மருத்துவமனைகளிலும் சொன்னார்கள். அதைக் கருத்திற் கொண்டு அந்த முறையை மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கிடங்கு அவசர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே ஏற்பட்ட ஒரு உடன்பாட்டின்படி அவர்களிடமிருந்து மருந்து வாங்குவதை நிறுத்துவது என்று சொன்னால், இரண்டு ஆண்டு 'நோட்டீசு', முன் அறிவிப்புத்தர வேண்டும். ஒரு ஆண்டுக்கு முன்னர் அவர்களிடமிருந்து வாங்குவது என்ற முறையைக் கைவிட முன் அறிவிப்புத் தரப்பட்டிருக்கிறது. இனி தனியாகவே டெண்டர் கோரி, அரசாங்கத்தின் சார்பாக மருந்துகள் வாங்கி வழங்க ஆலோசனை இருக்கிறது. அப்படி வழங்கினாலும், எந்த இடத்திலிருந்து வழங்குவது என்று இனிதான் தீர்மானம் செய்யப்பட வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அவர்களிடமிருந்து வாங்காமல் மாநிலத்திற்குத் தனியாக ஒரு ஸ்டோர்ஸ் மாநில அளவில் அல்லது ஜில்லா தலைநகரங்களில் அமைக்க உத்தேசம் உண்டா? அரசிடம் தான் வாங்க வேண்டுமென்ற ஆலோசனை இருக்கிறதா? எந்த முறையில் அரசு தீர்மானம் செய்யப் போகிறது என்று தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சிலவற்றை ஒழுங்கு படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் பரவலாக எல்லா இடங்களிலும் எவரிடம் வேண்டுமானாலும் வாங்கலாம் என்ற ஏற்பாடு சரியாக வராது. எனவே திட்டத்திற்கு ஏற்றவாறு முறையை ஏற்படுத்துகிறபோது, ஒன்றிரண்டு இடங்களைத் தீர்மானம் செய்யலாம். அதற்கிடையில் Hospital pharmacy ஏற்படுத்த எண்ணி சென்னையில் ஒரு நிலையமும் திருச்சியில் ஒரு நிலையமும் மருத்துவ சாலைகளுக்கும் தேவையான அன்றாட மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு ஏறத்தாழ ரூ. 13 லட்சம் செலவில் இப்போது ஒரு திட்டம் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இது உருவாவதற்கும் மத்திய அரசின் சார்பில் உள்ள மருந்து நிலையத்திலிருந்துதான் மருந்து வாங்க வேண்டுமென்ற விதியிலிருந்து விலக்கு பெறுவதற்கும் ஓராண்டு ஆகுமாதலால் ஏறத்தாழ காலம் ஓத்துழைக்கும் என்று நம்புகிறேன். அந்தக் கால கட்டத்தை ஓட்டி, தேவைக்கேற்ப 'சீஜனல்' அமைப்பு தான் அரசாங்கத்திற்கு இயலக்கூடியதாக இருக்குமென்று நான் இப்போது எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆனால் சரியான பரிசீலனை நடந்தால்தான் முடிவெடுக்கப்படும்.

[1973 மார்ச் 27

திரு. செ. முத்துசாமி : கொல்லிமலையைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கொல்லிமலையைச் சுற்றியிருக்கும் கிராமங்களிலுள்ள சிகிச்சை பெறக்கூடிய நோயாளிகள் ஆஸ்பத்திரி வரையில் வந்துவிடுகிறார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தால் டாக்டர் மருந்து கொடுக்க மருந்து ஸ்டாக் இல்லை. மெடிக்கல் ஷாப்புகளுக்கு நகரங்களை நோக்கிச் செல்லவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மருந்து இல்லாததால், கஷ்டப்படு கிறோம் என்று மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பகுதி வேடிக்கையானதல்ல. அங்கு மக்கள் கஷ்டப்படுகிற நிலைமையைச் சொல்லுகிறேன். உடனடியாக மருந்து வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி தவருனது என்று சொன்னதற்குக் காரணம், இங்கே கேட்கப்பட்ட கேள்வியை ஓட்டி எண்ணிப் பார்த்தால், "மருத்துவமனைகளுக்கு மருந்து வழங்குவதில் இடர்ப்பாடு உண்டாயிற்று? இடர்ப்பாடு இருந்தால் காலத்தில் கேட்கப்பட்டதா? இல்லாத நிலைமையில் டாக்டர் எழுதினாரா, மருந்து கிடைக்கவில்லையென்றால் என்ன பதில் கிடைத்தது? அப்படிக் கிடைக்கவில்லையென்றால், இங்கு இருக்கிற இயக்குநருக்கு, டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீசஸ்க்கு இப்படி மருந்து கிடைக்கவில்லையென்று அறைப்பற்றிக் குறிப்பு அனுப்பினாரா" என்று இவ்வளவு கேள்விகள் இருக்கின்றன. ஒரே கேள்வி மூலம் கேட்பதைவிட, தனிக் கேள்வி போட்டால் தெரிந்து பதில் சொல்லலாம். இப்படிப் பொதுவாக நிர்வாக முறைபற்றிக் கேட்க வேண்டிய கேள்வியில் தனியான ஒரு இடத்தில் எற்பட்ட விவரங்களை வைத்துத் துணைக் கேள்வி கேட்பது பொருத்தமல்ல. இரண்டாவது எப்போதோ பேசியதைச் சொல்லுகிறார்கள். ஒரு 20 காசு செலவு செய்து கடிதம் எழுதியிருந்தால், அதைப்பற்றி விசாரித்திருக்கலாம். யாரோ கேள்வி போட்டார்கள், இடையில் கேட்கலாம் என்று 3 மாத காலம் பொறுத்திருந்து, கேட்பதை விட்டு, ஓரளவுக்கு எனக்கு முன்னால் தெரிவித்திருந்தால், நலமாக இருந்திருக்கும்.

1973 மார்ச் 27]

Effluent of the Methylated Spirit Industry in Senthanneerpuram

* 280 Q.—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the effluent of the Methylated Spirit Industry in Senthanneerpuram near Tiruchirappalli town is let into the Uyyakkondan Irrigation Channel ;

(*b*) if so, whether it affects the health of the people living in about fifteen villages in the area of Uyyakkondan Channel Tail end;

(*c*) whether it has been brought to the notice of the Government that about 3,000 acres of agricultural land has been affected due to the effluent let into the Irrigation Channel ; and

(*d*) if so, the steps taken thereon by the Government ?

செந்தண்ணீர்புரம் எரிசாராய தொழிற்சாலையினுடைய கழிவு நீர்

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி டவுன் அருகிலுள்ள செந்தண்ணீர்புரம் எரி சாராய தொழிற்சாலையினுடைய கழிவு நீர், உய்யக்கொண்டான் பாசன வாய்க்காலில் விடப்படுகிறதா ?

(இ) ஆமெனில், உய்யக்கொண்டான் வாய்க்கால் கடைமடை (Tail end) பகுதியில் உள்ள, சுமார் பதினைந்து கிராமங் களிலுள்ள மக்களின் சுகாதாரத்திற்கு அதனால் ஏதும் தீங்கு ஏற்படுகிறதா ?

(உ) மேற்படி பாசன வாய்க்காலில் கழிவு நீர் விடப்படு வதால், நல்ல சாருபடியில் பயன்பட்டு வரும் சுமார் 3,000 எக்கருக்கு மேலான நிலங்களில் விவசாயம் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(எ) ஆமெனில் அரசு அதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

[1973 மார்ச் 27

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) & (எ) பயிர்கள் பாதிக்கா வண்ணம் தேவையான தடுவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

*281 Q.—THIRU G. VASANTHA PAI : Sir, on a point of order. With due deference to those who were responsible for the deletion of the word ' Kumbakonam ' from the dictionary, the heading of this question should have been worded " Circle Inspector of Police died in Government Hospital, Kumbakonam " and the question should have been worded : " Whether it is a fact that a person by name E. S. Rajagopalan (Circle Inspector of Police) died while injection was being administered in the Government Hospital, Kumbakonam on 5th January 1973. "

AN HON. MEMBER : The question has not yet been answered by the Hon. Minister.

THIRU G. VASANTHA PAI : Sir, I am raising this as a point of order.

Circle Inspector of Police died in Kumbakonam Government Hospital

* 281 Q.—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that a person by name E. S. Rajagopalan (Circle Inspector of Police) died while injection was being administered in Kumbakonam Government Hospital on 5th January 1973 ; and

(*b*) if so, the reason therefor?

கும்பகோணம் அரசினர் மருத்துவமனையில் வட்ட காவல் ஆய்வாளர் மரணம்

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை

1973 மார்ச் 27]

அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 5—1—1973 ஆம் நாள் கும்பகோணம் அரசினர் மருத்துவ மனையில் E.S. ராஜகோபாலன் (Circle Inspector of Police) என்பவருக்கு ஊசி மருந்து செலுத்தப்படும்பொழுது உடனடியாக இறந்தது உண்மையா ?

(இ) ஆமெனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இதுபற்றி விளக்கக் குறிப்பு@ அவையின் தகவலுக்கு வைக்கப் பெற்றுள்ளது.

THIRU G. VASANTHA PAI : The word " Kumbakonam " should not have been used as an ' adjective .

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, whatever it may be, ' Kumbakonam ' need not always be ridiculed. It may also be respected.

THIRU G. VASANTHA PAI : Sir, with due deference to those who were responsible for the deletion of the word ' Kumbakonam ' from the dictionary, the question should be re-worded.

THE HON. THIRU K. ANBAZHAGAN : That does not arise at all here. It may be an advocate's point of view. It cannot be the Minister's point of view.

THIRU M. RAJAH IYER : Hon. Chairman Sir, I am putting a supplementary question. I am happy to note that in the statement placed on the table of the House it has been correctly stated as the ' Government Hospital, Kumbakonam '. Sir, I would like to know whether this fatal accident took place because of any defect in the medicine or because the injection was given when there was no need for that. The Circle Inspector seems to have taken the particular

@ 299 ஆம் பக்கத்தில் இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

medicine with him and insisted upon the injection being given. Was there any follow-up, was any enquiry made and who was held responsible for this fatal accident?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, from the information that is available with the Government, it is found that the particular Circle Inspector had gone to one Dr. R. Thirunavukkarasu who was on duty in the O.P. section and he had also brought the medicine which he used to take. That medicine is called Tri-Redisol-H injection. After giving that vial of injection to the doctor, he asked him to inject the same. According to his desire, it was injected. Within a few minutes after the injection, when the doctor was looking after the other patients, he collapsed. Sample of the drug was drawn and sent for analysis. The used vial also was sent for toxicity and sterility tests. The balance of stocks of Tri-Redisol-H available with Messrs. Dasarathy Agencies, a sister concern of Kumbakonam Drug Stores, were frozen. The report of the Government Analyst is awaited.

THIRU M. RAJAH IYER : May I know from the Hon. Minister whether the Government would instruct the doctors to satisfy themselves if there is any need for any injection before it is actually administered, particularly because insulin should not be injected unless urine is tested and trace of sugar is found? If somebody brings a medicine and wants it to be injected, the doctor must not administer it, unless there is need for the injection. I would like to know whether the Government will issue strict orders that doctors should satisfy themselves that there is need for the injection before they comply with the wishes of the patient in this matter ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Thiru Rajagopal was known to be allergic to Penicillin and was twice admitted on 8th April 1971 and 18th March 1972 and treated in the hospital for penicillin allergy. The Chief Medical Officer is of the opinion that the Inspector died of anaphlactic shock due to Vitamin B1, an ingredient of Tri-Redisol-H. Even though the doctor was aware that penicillin was allergic to him, the medicine administered to the patient was a different one. Vitamin B-1 was an ingredient of that medicine and that has reacted in such a way.

Professors in Radio-Therapy and Radio-Diagnosis in the Madras Medical College

* 282. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that there are separate Professors in Radio-Therapy and Radio-Diagnosis in the Madras Medical College;

(b) if so, the reason therefor; and

(c) whether there is any proposal to have such an arrangement in the other Medical Colleges in Madras City?

சென்னை மருத்துவக் கல்லூரியில், கதிர் வீச்சு சிகிச்சையியல்—கதிர் வீச்சு நோய்க்குறியியல் ஆகியவற்றுக்காக பேராசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மருத்துவக் கல்லூரியில், கதிர் வீச்சு சிகிச்சையில், கதிர் வீச்சு நோய்க் குறியியல் ஆகியவற்றுக்காகத் தனிப் பேராசிரியர்கள் இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

(உ) சென்னை மாநகரிலுள்ள எனைய மருத்துவக் கல்லூரிகளிலும் அதுபோன்ற ஏற்பாட்டைச் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கதிர்வீச்சு மருத்துவத்தில் கதிரியக்க மருத்துவ முறையில் (Radio-therapy) பயிற்சி பெற்றவர் புற்று நோய் போன்ற வியாதிகளைச் சிகிச்சை செய்வார். கதிரியக்க நோய்க் கூறில் (Radio-Diagnosis) பயிற்சி பெற்றவர் நோயாளிகளின் நோய்களை ஆய்ந்து அறிவிப்பதில் ஈடுபடுவார்.

(உ) அரசின் நிதிநிலை வளமாயில்லாததாலும், இருக்கும் நிலையில் பல்வேறு திட்டங்கள் எராளமான அளவில் மேற் கொள்ளப்பட்டிருப்பதாலும் நகரத்தில் மற்ற மருத்துவக் கல்லூரிகளில் இதுபோன்று ஏற்பாடுகளைச் செய்யவியலாது.

[1973 மார்ச் 27

THIRU G. SWAMINATHAN: Sir, there is only one unit in the Barnard Institute in the General Hospital for Radio Therapy and Radio Diagnosis and that is not found to be sufficient for the people of the State. May I now whether the Government will consider having at least a shift system in the Barnard Institute so that the rays emanating from the Cobalt do not get wasted, because they are shedding rays all the 24 hours?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, I shall try to get the suggestion given by the hon. Member properly examined.

THIRU G. SWAMINATHAN: Sir, Radio Therapy and Radio Diagnosis are quite different from each other, and Radio Therapy is being used for the treatment of cancer in 99 per cent of the cases. In some of the hospitals we have got only Radio Diagnosis and no Radio Therapy. Will the Hon. Minister consider, because I was told that there was a proposal to start another unit in the Stanley College, the starting of the same early? That is what I want to konw.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, even in Radio Therapy, there are different instruments and one such instrument is being suggested now and that will also be useful for about 15 to 20 per cent of the cancer patients. An instrument of some other type in Radio Therapy will also be installed later and that will be at Thanjavur.

THIRU G. SWAMINATHAN: Sir, I did not ask about Thanjavur. I want to know whether there is any proposal to have this unit of Radio Therapy and Radio Diagnosis separated in the Stanley Medical College. I was told that there was a proposal to that effect. Unless they are separated, there may not be proper treatment even at the Stanley Hospital with the existing instruments available there.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, there is no proposal just now. But these things may be required later

Loss in Production by the Simpson Group Companies due to Labour Strikes

* 283 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state the loss in production by the Simpson Group Companies during the year 1971 due to labour strikes?

1973 மார்ச் 27]

தொழிலாளர் வேலை நிறுத்தங்களினால் "சிம்சன் குரூப்" கம்பெனிகளின் உற்பத்தியில் இழப்பு.

திரு. ஜீ. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் காரணமாக 1971 ஆம் ஆண்டில் 'ஸிம்ப்ஸன் குரூப்' கம்பெனிகளின் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: 1971 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தங்கள், தொழிலாளர்களுக்குள் நடந்த மோதல்கள் காரணமாக ஏற்பட்ட ஏனைய பணிநிறுத்தங்கள் ஆகியவற்றினால் ஏற்பட்ட உற்பத்தி இழப்பின் மதிப்பு ஏறக்குறைய ரூ. 5 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

Labour Trouble at Saravanabhava Cotton Waste Factory at Tirupur

* 284 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was any labour trouble at Saravanabhava Cotton Waste Factory at Tirupur in Coimbatore District about November 1972; and

(b) if so, the details thereof?

திருப்பூரிலுள்ள சரவணபவா கழிவுப் பருத்தித் தொழிற்சாலையில் தொழில் தகராறு

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அளவில், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரிலுள்ள சரவணபவா கழிவுப் பருத்தித் தொழிற்சாலையில் தொழில் தகராறு ஏதும் நடைபெற்றதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

[1973 மார்ச் 27

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் உள்ள சரவண பவா (தனியார்) ஆலைத் தொழிலாளர்கள் 27 பேரில் 25 பேர் 1971–72-ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை வழங்குவது குறித்து 13-11-1972 அன்று 1½ மணி நேரமும் மீண்டும் 17-11-1972-லிருந்து 20-11-1972 வரையிலும் வேலைநிறுத்தம் செய்தனர். கோயம்புத்தூர், தொழிலாளர் நல உதவி ஆணையாளர் தலையிட்டதன் பேரில், தொழிலாளர்கள் 21-11-1972 அன்று மீண்டும் வேலைக்குச் சென்றனர். 8-1/3 சதவீத ஊதியக் கொடை வழங்கவேண்டுமென்ற கோரிக்கையின் மேல் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 25-11-1972 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: 1973-74-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி தணிக்கை விவர அறிக்கை, உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பு ஆகிய இரண்டின் மீதான் விவாதம் நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சட்ட மன்ற மேலவை விதிகளின் 89-ஆவது விதியின் கீழ், 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் தணிக்கை விவர அறிக்கை மீதான விவாதம் நடத்த ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத நேரத்தையும், எஞ்சியுள்ள நேரத்தை உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பின்மீது விவாதம் நடத்தவும் நான் வரையறுத்திருக்கிறேன். எனவே காலவரையறைக்குள் சுருக்கமாக விவாதத்தினை முடித்துக்கொள்ள ஒத்துழைக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 27] [சட்டமன்றத் தலைவர்]

இரண்டிற்கும் இரண்டு மணிநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 10 நிமிடத்திற்குமேல் தயவுசெய்து யாரும் பேச வேண்டாம்.

THIRU G. SWAMINATHAN: Sir, now the time is 4-30. If only two hours' time is allowed for the discussion today, I want to know whether we are going to close at 6-30 p.m.

MR. CHAIRMAN: If there is more time available, the hon. Members who want to speak during the discussion on the Policy Note on Food may take some more time. The excess time of thirty minutes could be divided amongst the various Members.

3. அரசினர் தீர்மானங்கள்

(1) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. கே. ராஜாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. க. அறிவழகன்.
4. திரு. வி. தங்கபாண்டியன்.
5. திரு. வ. ஈஸ்வரமூர்த்தி."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. கே. ராஜாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. க. அறிவழகன்.

1973 மார்ச் 27] [சட்டமன்றத் தலைவர்]

4. திரு. வி. தங்கபாண்டியன்.

5. திரு. வ. ஈஸ்வரமூர்த்தி."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்—

1. புலவர் ஓ. அறிவுடைநம்பி.

2. திரு. நாகூர் இ. எம். ஹனீபா.

3. திரு. பி. திருஞானசம்பந்தம்.

4. திரு. எஸ். வெள்ளபாண்டியன்.

5. திரு. கே. எஸ். அப்துல் வகாப்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப் பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப் பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. புலவர் ஓ. அறிவுடைநம்பி.

2. திரு. நாகூர் இ. எம். ஹனீபா.

3. திரு. பி. திருஞானசம்பந்தம்.

4. திரு. எஸ். வெள்ளபாண்டியன்.

5. திரு. கே. எஸ். அப்துல் வகாப்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

1973 மார்ச் 27]

(3) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக்குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது—

1. திரு. எம். ராஜா அய்யர்.

2. திரு. ஜி. பராங்குசம்.

3. திரு. எம். சங்காலிங்கம்.

4. திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி.

5. திரு. எல். பலராமன்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப் பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது:—

1. திரு. எம். ராஜா அய்யர்.

2. திரு. ஜி. பராங்குசம்.

3. திரு. எம். சங்காலிங்கம்.

4. திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி.

5. திரு. எல். பலராமன்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கை மீது விவாதம்

***திரு. அய்யணன் அம்பலம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் வர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் சமர்ப்பித்த 1972-73 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின் மேல் இன்று என்னுடைய 4-30 பி.ப.

[திரு. அய்யணன் அம்பலம்] [1973 மார்ச் 27

கருத்துக்களைக் கூற அனுமதித்த தலைவரவர்களுக்கு நன்றியைக் கூற விரும்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு முன்னர், இந்தச் சட்ட மன்ற மேலவையில் ஊராட்சி ஒன்றியங்களின் பிரதிநிதிகள் முன்னில் ஒரு பங்குக்கு அதிகமாக இருந்தும், ஊராட்சித் துறையின் வரவு-செலவு அறிக்கை—இந்த மன்றத்தில் வரவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி சம்பந்தமான பிரச்சினைகளை இந்த மன்றம் விவாதிக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த மன்றத்தில் அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில், விவசாயிகள் பூச்சி மருந்துகள் வாங்குவதற்காக, ரூ. 2 கோடிக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கின்றேன். அடுத்து, ஊராட்சி வளர்ச்சியில், குளங்களைச் செப்பனிடுவதற்காகவும், மற்ற ஊராட்சிகளுக்கு வீட்டு மானியமாகக் கொடுப்பதற்கும், ரூ. 2 கோடிக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஊராட்சியைப் பொறுத்தவரையில் மதுரை மாவட்டத்தில், ரூ. 20 ஆயிரத்திற்கு மேல் வருவாய் வந்தால், அந்த ஊராட்சிகள், பேரூராட்சிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, போடி பகுதியில் மீனாட்சிபுரம், மேலூர், வெள்ளாளப்பட்டி, எரியோடு ஆகிய ஊர்கள், நகரப் பஞ்சாயத்துக்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகளில் வருமானமெல்லாம் நிர்வாக வேலைக்கே செலவு செய்யப்படுகின்றதே தவிர, நகர வளர்ச்சிக்காக எந்தவிதமான வேலைகளும் எடுத்துச் செய்யப்படுவதில்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து ரூ. 50 ஆயிரத்திற்கும் அதிகமாக வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களைத்தான் நகர பஞ்சாயத்துக்களாக ஆக்க வேண்டும். அதற்கும் குறைவான வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களை கிராமப் பஞ்சாயத்துக்களாக —சிறிய, சிறிய பஞ்சாயத்துக்களாகப் பிரித்து, அவைகளுக்கு வீட்டு வரியில் கிடைக்கக்கூடிய ஈட்டு மானியமும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது.

1973 மார்ச் 27] [திரு. அய்யணன் அம்பலம்]

முதல்வர் அவர்களுக்கும், ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன்—1962-ம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டன, அப்போது அந்த ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்களுக்கு பயணப்படியாக மாதம் ரூ. 100 அனுமதிக்கப்பட்டது. பிறகு கடந்த 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக இதே தொகைதான் இருக்கிறது, அதிகரிக்கப்படவில்லை. ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவன், ரூ. 100-ஐ வைத்துக்கொண்டு, நாணயமாகச் செலவு செய்ய முடியாது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படியானால், கரன்சியாகச் செலவு செய்யலாமே!

திரு. அய்யணன் அம்பலம்: நேர்மையாகச் செலவு செய்ய முடியாது. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். 1966 இலிருந்து இன்றுவரை பொருளாதார வளர்ச்சிகளையெல்லாம் பார்க்கும் போது, மாதம் ரூ. 100 பயணப்படி என்பது போதாது. மதுரை போன்ற நகரங்களில் அதிகமாகச் செலவாகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அலுவல்களில் கலந்துகொள்ளும் போதாவது குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ரூ. 10 வீதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை போன்ற நகரங்களிலுள்ள மாநகராட்சி அங்கத்தினர்களுக்கு அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அதே அடிப்படையில், ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்களுக்கும் ரூ. 2 வீதம், பிரயாணப்படி கொடுக்கப்பட வேண்டும். இதையும் மறுபரிசீலனை செய்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தங்கள் கடமையை நல்ல முறையில் செய்ய இந்தப் படியை ஊராட்சி ஒன்றிய அங்கத்தினர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வளர்ச்சித் துறையைப்பற்றி ஒரு கோரிக்கையை இங்கே மாண்புமிகு அமைச்சர் முன்பும், முதலமைச்சர் முன்பும் வைக்க விரும்புகிறேன். இந்தக் கோரிக்கையைப்பற்றி இந்த மன்றத்திலே சென்ற ஆண்டு பல அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். அது வருவாய்த் துறையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் தனியாகச் செயல்படவேண்டுமென்ற கோரிக்கையாகும்.

[திரு. அய்யணன் அம்பலம்] [1973 மார்ச் 27

அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்களும், ஊராட்சித் துறை அமைச்சரவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் விவசாய இலாக்காவிற்காகவும், ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதற்காகவும், சென்ற நிதியாண்டில் ரூ. 2½ சர்சார்ஜ் விதிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த ரூ. 2½ சர்சார்ஜ் வாங்குவதை எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் இதுவரை அமுல் நடத்தவில்லை என்று அறிகிறேன்.

4-50 பி.ப. இந்த கமிட்டிக் கூட்டங்களில்கூட—கொடைக்கானலில் நடந்த கூட்டம், சென்னையில் நடந்த கூட்டம்—வருமானம் கிராமங்களில் இழக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாசி, மீன்பிடி குத்தகை பட்டாதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஊராட்சி மன்றத் தேர்தல்களினுல், எந்தக் கிராமத்திலும் அந்தப் பாசி குத்தகையின் மூலம் வரும் வருமானத்தை, அந்தப் பாசிக்காரர்கள் ஒழுங்காகப் பிரித்துக்கொள்வதில்லை. ஆகவே, அது விரயமாகிக்கொண்டிருக்கிறது. எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் அந்தப் பகுதியில் உள்ள மீன்பிடிக்கும் உரிமையைக் கொடுத்தால், ஒரு ஆண்டிற்கு மாதில அளவிலே பல கோடிக்கணக்கான ரூபாயையும், மாவட்ட அளவிலே பல லட்சக் கணக்கான ரூபாயையும் வருமானமாகப் பெற முடியும். அதில் சில சட்டச் சிக்கல்கள் இருந்தாலும் கூட, பஞ்சாயத்திலே 'பாசி' என்று ஆரம்பத்திற்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியை அந்தப் பஞ்சாயத்துக்களே செலுத்தி விடலாம். அல்லது அந்த ஊராட்சி ஒன்றியங்களே செலுத்தி விடலாம். அப்படிச் செலுத்தினுல் அதிகமான வருமானம் பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்குமென்று தெரிவித்துக் கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, 1972-73 ஆம் ஆண்டு இறுதி நிணைமானியக் கோரிக்கையின் மீது இரண்டொரு விஷயங்களைப் பற்றி என்

1973 மார்ச் 27] [திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில் விவசாயத்தைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொருத்து, பயிர் பாதுகாப்பு பற்றி மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பூச்சி மருந்துகள், அல்லது பூச்சி மருந்துகளுக்காக வாங்கக்கூடிய கருவிகள் என்று கருதுகிறேன்—அந்தப் பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வாங்கிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவை வாங்கப்பட்டு நீண்ட நாட்களாகி விடுகின்றன. அதனுல் அவைகள் சரியான முறையிலே வேலை செய்வதில்லை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் பூச்சி மருந்து தருகிறோம். அவர்களுக்கு சப்சிடி, கிராண்ட் முதலியன கொடுக்கப்படுகின்றன. பூச்சி மருந்துகள் தெளிக்கும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு பயிர் செய்கின்ற காலத்திலே காலாகாலத்தில் இந்தப் பூச்சி மருந்துகளும், கருவிகளும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு சிற்றூரிலும் 2, 3 பேருக்கு பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள் தரப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை முதல் அமைச்சரவர்கள் நன்கு உணர்வார்கள் என்று நம்புகிறேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இரசாயன உர வினியோகம்பற்றிச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இரசாயன உர வினியோகம் என்பது பஞ்சாயத்து யூனியன்களாலும், கூட்டுறவு சங்கங்களாலும் செய்யப்படுகிறது. ஆனுல், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் மொத்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரால் கொடுக்கப்படுகிறது. ஆனுல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கோ கொடுக்கும்போது, அவர்களுக்கு மொத்தமாகக் கொடுத்து விடுகிறார்கள். எந்தப் பகுதிக்கு எவ்வளவு என்று பிரித்துக் கொடுப்பதில்லை. அதைப் பிரித்துக் கொடுப்பது கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியிடம் இருக்கிறது. அது சரிவர வினியோகப்படுத்தப்படுகிறதா என்றும், இல்லை என்று

[திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [1973 மார்ச் 27

தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் ஒன்றைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே பெருந்துறையில் இன்றைக்கு இருக்கக் கூடிய கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். இது பற்றி உணவு அமைச்சரவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதியுள்ளேன். எங்கள் பகுதியில் கீழ் பவானி பாசனப் பகுதியில் கிட்டத்தட்ட நெற்பயிர் அதிகமாக இருக்கிறது. அதை களுக்குச் சரியான முறையில் உரம் பங்கிடு செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்த மார்க்கெட்டிங் சொசைடிக்குக் கொடுக்கப் பட்ட உரம் சரியாக வினியோகிக்கப்படுவதில்லை. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்தேன். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. தொட்டப் பயிர் சாகுபடி செய்பவர்களுக்கு உரம் அதிகமாகத் தரப்படுவதில்லை. சாகுபடி செய்யாதவர்களுக்கு அதிகமாகத் தரப்படுகிறது. எனவே இதற்குச் சரியான ஏற்பாடு வேண்டும். விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டுப் பயிர் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பயிரைப் பாதுகாப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க முன்வர வேண்டும். இந்த வினியோகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது மற்றவர்கள் சரியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்திலே காவல் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததினால் ஏற்பாட்டு அதிகார் வெலென்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஈரோட்டிலே வெவ்வேறு போலீஸ் அலுவலகங்கள் தவிர பாக்கி எல்லா ஒில்லா அலுவலகங்களும் இருந்துகொண்டிருக்கின்றன. அங்குள்ள மருத்துவமனை கூட மாவட்ட மருத்துவ மனையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இப்போது பிரிக்கப்பட்டு, ஜில்லா போலீஸ் தலைமை அதிகாரிகள் இருவரும் கோயம்புத்தூரிலேயே இருக்கிறார்கள். ஈரோட்டைத் தலைநகர மாக்கி அதிலே ஒருவரை அங்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஈரோடு நகரசபை பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஈரோடு நகராட்சியிலே

1973 மார்ச் 27] [திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

புதிதாக ஒரு ரோடு போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த ரோடு வருகிற இடங்களிலே உள்ளவர்களுக்கு அந்த நகராட்சி பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. நகராட்சி அதற்கு 8—12—1972-லே அந்த இடத்திற்குப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தது. இருந்தாலும் அந்த ரோடு அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமலிருக் கின்றன. ஏனென்றால், நான் நினைக்கிறேன், அதில் அரசியல் தலையீடு இருக்கின்றது என்று. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வந்தபோது அவரிடத்திலேயும் தெரிவிக்கப் பட்டது. இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது கெஜெட்டில் கூட பிரசுரமாகியிருக்கிறது. அதற்குச் செலுத்த வேண்டிய தொகை முனிசிபாலிடியால் கொடுக்கப்பட்டு விட்டது. ஆனால், ஒன்றிரண்டு நபர்களுடைய காரியத்திற்காக இது நிறை வேறவில்லை. அது முக்கியமான பிரச்சினை. எனவே உடனடி யாகத் தலையிட்டு இந்த ரோட்டை அமைப்பதற்கு இருக்கிற தடைகளை நீக்க வேண்டுமென்றும், இதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புபற்றி இரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் பழையகோட்டை கால்நடைப் பிராந்தியம். ஆகவே பொதுவாக, தமிழ் நாட்டிலே அது மிகவும் சிறந்தது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார் கள். அதிலும் குறிப்பாக பழையகோட்டைப் பகுதியிலே அவர்கள் கால்நடையைச் சிறப்பான முறையிலே வளர்த்து வந்தார்கள். அந்த மேய்ச்சல் நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது. அந்த மேய்ச்சல் நிலங்களை எடுத்ததோடு அந்தக் கால்நடைகளையும் எடுத்துக் கொண்டு அந்தப் பண்ணையை அரசாங்கம் நல்ல முறையிலே பாதுகாத்து வர ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஏனென்றால், கால்நடை தேசிய முக்கியத் துவம் வாய்ந்தது. கால்நடை இல்லையேல், விவசாயம் சீராக இருக்க முடியாது. ஆகவே, ஏற்கெனவே ஒரு அமைப்பிலே இருக்கக் கூடிய பண்ணையை அரசு எடுத்துக்கொண்டிருந்தால், அது மிகவும் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [1973 மார்ச் 27

விவசாயிகளுக்கு உள்ள இரண்டொரு சிரமங்களைப்பற்றி எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். தற்போது மின்சாரப் பற்றாக் குறையினால், ஏறத்தாழ எல்லா விவசாயிகளும் ஆயில் இன்ஜின் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆயில் இன்ஜின் இயக்குவதற்கு அவர்களுக்கு டீசல் கிடைப்பதில்லை. அதிலே நான் கூட மிகவும் சிரமப்பட்டேன். சிமெண்ணையைப் போட்டாலும் ஒரு வாரத்திற்கு மேல் அந்த இன்ஜின் சரியாக ஓடுவதில்லை. எனவே டீசல் விவசாயிகளுக்கு எந்த முறையிலாவது கிடைக்கச் செய்ய வேண்டும். டீசல் இன்ஜின் வைத்திருப்பவர்களுக்கு வாரம் இவ்வளவு என்று ஒரு அதிகாரி கொடுக்கும் பெர்மிட் மூலமாக அதை விநியோகிக்கின்ற ஏற்பாட்டை அரசு உடனடியாகச் செய்தால் விவசாயிகளுடைய சிரமம் கொஞ்சம் குறும். இதை அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் சொன்ன மாதிரி, கிராமப்புறத்திலே கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பங்கை ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கொடுக்க வேண்டும். இன்றைக்கு கிராமப் பஞ்சாயத்துக்களையெல்லாம் நகரப் பஞ்சாயத்துக்களாகச் செய்து வருகின்றார்கள். இப்படி நகரப் பஞ்சாயத்துக்களாகச் செய்கின்ற காலத்தில், ஏற்கெனவே கிராமங்களில் நடந்துவந்த வேலைகள் சரியாக நடப்பதில்லை. அவர்கள் வீட்டு வரியையும், மின்சாரக் கட்டணத்தையும் வசூலிப்பதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நடந்த வேலைகள் சரியாக நடக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும், இது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய காரியம் என்பதைக் கூறி, என் நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் துணை மானியத்தின்மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கு இங்கு இடமளித்தமைக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் தெரிவித்திருக்கும் கருத்துக்களை நான் முழுமனதோடு வரவேற்றுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 27] [திரு. காட்டூர் கோபால்]

இந்த வரவு செலவுத் திட்டத்திற்குப் பின்னால், ஒவ்வொரு துறையின் மீதும் தனித்தனியே விவாதம் நடத்து கொண்டிருக்கிற இந்த நாட்களில் ஒரு பெரிய காரியத்தை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சத்தமில்லாமல் செய்து தந்திருக்கிறார்கள். கடந்த 25 ஆண்டுக் காலமாக தமிழ் நாடு முழுவதும் இருக்கிற சாலைப் பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற 12 ஆயிரம் தொழிலாளிகள் என்றைக்கு தங்களுடைய வாழ்வில் ஒளி பிறக்குமென்று ஏங்கி இருந்து வந்தவர்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று இந்த ஆட்சியிலே செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசிடத்திலே தொடர்ந்து இதை வலியுறுத்தி வந்தார்கள். பலன் ஏற்படவில்லை. ஆனால் அவர்கள் வாழ்க்கை மலரத்தக்க வகையில், 20 ஆண்டுகளாகக் கேட்டாலும், இப்போதுதான் கிடைக்கும், இப்போதுதான் கிடைத்தது என்கிற மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவிக்கிற வகையில், 11,160 சாலைப் பராமரிப்பு—'கேங் மஸ்தூர்' தொழிலாளர்களில், 6,800 பேர்களை நிரந்தரப்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையிலே எல்லாம் ஒளி வீசத்தக்க நல்ல ஏற்பாட்டினைச் செய்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பாட்டாளிகளின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். 4 50 பிற் பகல்

அதேபோல, நேற்றைய தினம் அறநிலையத் துறை அமைச்சரவர்கள் 50,000 பாட்டாளிகளுக்கு, 10 ரூபாய் அளவிலான ஊதிய உயர்வை, எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், இளைச்சியும் இல்லாமல் அளித்திருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரவை அதைப்பற்றி யோசனை செய்து திடீரென்று அமைச்சரவர்களே நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். 50,000 பேர்கள் இந்தப் பத்து ரூபாய் அளவுக்கு இவ்வளவு எளிதில் ஊதியம் பெறுகிறார்களென்ற இந்தச் செய்தியைப் பார்க்கிற போதே, இன்னொன்றையும் பார்க்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. 3½ ஆண்டுகளாக மத்திய அரசில் உள்ள பாட்டாளிகள் ஒரு ஊதியக் குழு அறிக்கை வரும், அதிலே நம்முடைய சிரமம் போகுமென்று நீண்ட நாட்களாக எதிர்பார்த்து, அந்தப் பரிந்துரைகள் 31-ம் தேதி எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் கடந்த சில தினங்களாக வந்திருக்கிற செய்தி,

[திரு. காட்டேர் கோபால்] [1973 மார்ச் 27

அந்தத் தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச வருமானம் பற்றிய பத்திரிகைச் செய்தியைப் பார்த்த உடனேயே, அவர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றமும் அதிருப்தியும் நிலவிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டவனாகிறேன். ஆலைத் தொழிலாளர்கள் 50,000 பேருக்கும், சாலைப் பராமரிப்புத் தொழிலாளர்கள் 6,800 பேருக்கும் நல்ல பரிகாரத்தைச் செய்த இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் தமிழக முதல்வராவர்கள் சில நல்ல காரியங்களைச் செய்ததாக வேண்டிய அவசியமும், அவசரமும் இருக்கிற காரணத்தால் அவைகளைக் குறிப்பிடுவது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன். தற்போது நிலவி வருகிற 75 சதவிகிதம் மின்வெட்டு காரணமாக, பாட்டாளிகள் தொழிற்சாலைகளில் மாத முழுமையும் வேலை செய்ய முடியாமல், குறைந்த சம்பள விகிதத்தைப் பெறுகின்ற நிலையிருக்கிறது. இப்போது அவர்களுக்கு 50 சதவிகிதம் இழப்பீட்டுத் தொகை தரப்படுகிறது. அந்தப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு ஜூன் மாதம் வரையிலும், நிலைமைகள் நல்ல பரிகாரத்திற்கு வராதோவென்று எண்ணுகிற நிலைமையிலும் இருக்கிறார்கள். எனவே தமிழ் நாட்டிலே இருக்கிற தொழிற்சாலை அதிபர்கள், நிருவாகத்தினர் அந்த இழப்பீட்டுத் தொகையை 75 சதவிகிதமாகக் கூடுதலாக்கிக் கொடுக்க வேண்டுமென்றும், மீதமுள்ள 25 சதவிகிதத்தை மத்திய அரசிடத்திலிருந்து மாநில அரசு பெற்றோ அல்லது இருவரும் பகிர்ந்தோ அவர்களுக்கு அளிப்பதற்குண்டான முடிவைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல, இந்த மின்வெட்டுக் காரணத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மின்சாரம் இல்லை, எனவே வேலை கொடுக்க வழியில்லையென்று அந்தத் தொழிற்சாலைகளில் ஒரு நபர்கூட ஆட்குறைப்பு செய்ய முடியாத அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்காலிகத் தொழிலாளர்கள், தினக் கூலிகள் என்ற பெயரில் பல மாதங்கள், வருஷங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்களுக்கு மின் வெட்டு காரணமாக வேலை கொடுக்க முடியவில்லை. பல மாதங்களுக்கு அவர்களுக்கு வேலை தரப்படுவதில்லை. நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அப்படியெல்லாம் செய்யும்போது, அவர்களுடைய 'சர்வீஸ்' தண்டிப்பு ஏற்பட்டுவிடுகிற நிலைமைகள் இல்லாத அளவுக்கு, அவர்களையும் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய அவசரமும், அவசியமும் ஏற்பட்டிருக்கிற

1973 மார்ச் 27] [திரு. காட்டேர் கோபால்]

தென்பதைக் குறிப்பிட்டுக்கொள்கிறேன். தொழிற் தகராறுகள் சட்டம், 1947-ம் ஆண்டிலிருந்து இந்தியா முழுவதும் அமுலாக்கிக் கொண்டிருக்கிற சட்டமாகும். இந்தச் சட்டப்படி ஒரு தொழிற் சாலையிலே பணியாற்றுகிற தொழிலாளி 240 நாளைக்கு மேலே தொடர்ந்து சர்வீசிலே இருப்பானேயானால், வேலைக்குப் போகின்ற நேரத்தில் 'லே-ஆப்' விடப்படுகிறபோது, அவருக்குப் பாதிச் சம்பளம் தருவதற்கு அந்தச் சட்டம் வழி செய்கிறது. ஆனால் அதே நேரத்தில், பதிலி—'சப்ஸ்டிடியூட்'—என்று இருக்கிறவர்களுக்கு அந்தத் தொகை கிடைக்காத அளவுக்கு சட்டத்தில் சிக்கல் இருக்கிறது. ஆனால் நாட்டிலே பல்வேறு பஞ்சாலைகளிலும், வேறு பல தொழிற்சாலைகளிலும், 'பதிலிகள்' என்ற பெயரிலே பல ஆண்டுகள் பணியாற்றிவருகிற தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தருகின்ற முறையிலே இதற்கு ஒரு நிவாரணம் அளித்து, அவர்களுக்கும் இந்த இழப்பீட்டுத் தொகை கிடைக்க வேண்டுமென்பதற்காக உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுக்கொள்கிறேன். 50 பேர்களுக்குக் குறைவாகவுள்ள தொழிற்சாலைகளிலே 'லே-ஆப்' நாளுக்கு இழப்பீட்டுத் தொகை தர வேண்டுமென்று சட்டத்தில் இல்லை. இந்தியாவிலுள்ள அந்தச் சட்டத்தில் இல்லையென்றாலும், இந்த மாநிலத்திலுள்ள அரசு, இந்தச் சிறிய தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல், அந்த இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் ஒரு முக்கியமான நிலைமை நாடு முழுவதும் இருக்கிறது. பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு எந்தெந்த உபரிச் சலுகைகள் வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த சேமிப்பு நிதியிலிருந்து உடனடியாக முன் பணம் வேண்டும், திருப்பித் தராத கடன் வேண்டுமென்று இரண்டு மாதங்களாகக் கேட்கிறார்கள். நானும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையைச் சேர்ந்த நிர்வாகிகளும் பிராவிடன்ட் பண்ட் கமிஷனரிடம் முறையீடு செய்து கொண்டோம். மத்தியில் உள்ள சென்ட்ரல் பிராவிடன்ட் பண்ட் கமிஷனரிடமும் தந்தி கொடுத்து முறையிட்டுக் கொண்டேன். டெல்லியில் உள்ள மத்திய தொழிலாளர் அமைச்சரவர்களிடமும் முறையிட்டுக்கொண்டோம். பல

[திரு. காட்டூர் கோபால்] [1973 மார்ச் 27

தந்திகளைக் கொடுத்துவிட்டோம். "அவர்களுடைய சொந்தச் சேமிப்புப் பணத்திலிருந்து, இந்த நெருக்கடி நிலையில் பணம் கொடுக்க வழியில்லை, மத்திய அரசாங்கம் அனுமதித்தால்தான், அவர்களுக்குக் கொடுக்க முடியும். மத்திய அனுமதி இல்லாததால், அவரவர்கள் சொந்தப் பணத்திலிருந்து கடன் கொடுக்க மாட்டேன்" என்று பிராவிடன்ட் பண்ட் கமிஷனர் அவர்கள் இறுதியாகத் தெரிவித்துவிட்டார்கள். தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் மிகவும் பதட்டத்தோடு, மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருக்கிறார்கள். மாநில அரசு உடனடியாக இதற்குப் பரிகாரம் செய்வதாக 10 நிலைங்களுக்கு முன்னாலே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள்கூட குறிப்பிட்டார்கள். என்றாலும் அவர்கள் ஒரு நாளைக்கூட கழிக்க முடியவில்லை. மிகவும் வேதனையில் இருக்கிறார்கள். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் நாட்டின் முதல்வரவர்கள் இதில் தலையிட்டு மத்திய அரசினுடைய தாமதத்தை எப்படியாவது நிவர்த்தி செய்து, உடனடியாகத் தொழிலாளர்களுக்குக் கடன் கிடைத்திடக்கூடிய ஏற்பாட்டுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடு முழுவதும் நகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சுகாதாரப் பணியாளர்கள் ஆயிரக் கணக்கில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சுகாதாரப் பணியாளர்களுடைய நல்ல பணிகளாலேதான் நாட்டின் சுகாதாரம் பேணிக் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், இந்த ஒன்பது பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொண்டாலும், நான்கரை மாதம் பெருகி வருகிற மக்கள் பெருக்க நிலையும், அதற்காக ஆரோக்கியத்தை ஏற்படுத்தித் தர வேண்டிய அவசியமும் உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அந்தச் சுகாதாரப் பணியாளர்களுக்கு மேலும் இந்த அரசு செய்ய வேண்டிய நல்ல காரியங்களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சுகாதாரப் பணியாளர்கள் முனிசிபாலிடிகளில் தற்போது 10 ரூபாய், 12½ ரூபாய், 15 ரூபாய் என்கின்ற அடிப்படைச் சம்பளத்தில் இருக்கிறார்கள்

1973 மார்ச் 27] [திரு. காட்டூர் கோபால்]

அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், சீரான ஊதிய நிர்ணய நிலைமையையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, அருமை நண்பர் பேசுகின்றபோது, இந்த அரசு தொழிலாளர்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளையெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால் நல்வாழ்வுத் துறையில் செய்ய வேண்டிய காரியங்களைச் சொன்னார்கள். ஆனால் நான் மிகப் பணிவோடு ஒன்றைக் கேட்டுக் கொள்வேன். தொழிலாளர்கள் சார்பாக இயங்கும் இந்த சர்க்காரின் சார்பிலே கேட்டுக்கொள்வேன். தொழிலாளர்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள். எனவே குழந்தைகளை அதிகம் பெற்றுக்கொள்ள வேண்டாமென்று அவர்களிடம் நண்பர் கூறினால் மிகவும் நல்லது. (சிரிப்பு)

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துப்படி, நானும் நாங்கள் சார்ந்திருக்கிற தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கப் பேரவையும் இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை ஆதரிக்கிறோம். இதனை ஏற்றுக்கொண்டு, ஒத்துழைக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல பரிசுகளை எங்கள் சார்பிலே அளித்து வருகிறோம் என்பதையும், அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள சுகாதாரப் பணியாளர்களுடைய ஊதியத்தை ஒரே சீராக்குவதற்கு நம்முடைய அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சுகாதாரப் பணியாளர்களுடைய குழந்தைகளைப் பற்றியும், அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களது அவலமான நிலைமையைப் பற்றியும் நாம் நன்கு அறிவோம். இந்தச் சுகாதாரப் பணியில் இருக்கிற, தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள பணியாளர்களுடைய குழந்தைகளுக்கு விருப்பப்படியாக இலவசப் படிப்பு படிக்கிற வரையில் அரசே பொறுப்பேற்று, அவர்களுக்கு ஆவன செய்யவும், நிலைமைகளை ஆலோசித்து தக்க பரிகாரம் செய்யவும் முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. காட்டேர் கோபால்] [1973 மார்ச் 27

சில பஞ்சாயத்துக்களிலே ஏற்கெனவே இருக்கின்ற சட்ட விதிகளைச் சொல்லி குறிப்பிட்ட அளவுக்கு வருமானம் இருந்தால் தான் இந்த அளவுக்கு ஊதியத்தை நாம் தரமுடியும். இப்போது இருக்கின்ற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அதிகம் இருக்கின்ற காரணத்தால், பழைய வரம்பை மீறியிருக்கின்ற காரணத்தால், ஆட்குறைப்பு செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று கூட இரண்டொரு பஞ்சாயத்துகளில் தீர்மானம் போட்டிருக்கின்றார்கள் என்றும், அவைகளை அமுல்படுத்திவிடாமல், மாவட்ட ஆட்சியாளர்கள் மூலம். . .

பிற பகல் 5-00

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : நேரம் ஆகிறது.

திரு. காட்டேர் கோபால் : தலைவரவர்களே, ஒரே ஒரு நிமிடம். மாவட்ட ஆட்சியாளர் அவர்களை ஆட்குறைப்பு செய்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளோம். எங்கும் ஆட்குறைப்பு ஏற்படாமல் பாதுகாத்திடவும் வேண்டுகிறேன். தமிழக முழுவதும் இருக்கின்ற மாநில நில வளவங்கிகளினுடைய ஊழியர்களுடைய ஊதியத்தை ஒரே சீராக்குவதற்கும் அரசால்தான் முடியும். இந்த அரசுக்குத்தான் அப்படிச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைவில் ஆவன செய்ய வேண்டுமென்று தலைவர் மூலமாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இறுதி நேர மானியக் கோரிக்கையின் மீது இந்த விவாதத்திலே கலந்துகொண்டு ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகின்றேன். முதலில் எங்களுடைய பகுதியைப்பற்றிய பஞ்சப் பாட்டைத்தான் வழக்கம்போல் பாடவேண்டியவனாக இருக்கின்றேன். இந்த வருஷத்திலும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவிலே இரண்டு வட்டாரங்களில், கிராமங்களெல்லாம் கடந்த ஐந்து ஆண்டுகளைப்போலவே பஞ்சத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாரத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களின் தலைவர்களும் பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவரும் கையெழுத்திட்டு பஞ்சாயத்து ஒன்றியத்தினுடைய கூட்டத்தில் ஒரு கோரிக்கையை முதலமைச்சர் அவர்களுக்குத் தயாரித்து அதை அச்சிட்டே

1973 மார்ச் 27] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

அவர்கள் எல்லோரும் கையொப்பமிட்டு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்குமாறு எனக்கு அனுப்பியிருக்கின்றார்கள். இந்த விண்ணப்பம் ஏழு பக்கங்களைக் கொண்டதாக இருக்கின்றது. அச்சிடப்பட்ட விண்ணப்பம் அது. அந்த விண்ணப்பத்தில் அவர்களுடைய துயரங்களெல்லாம் கூறப்பட்டிருக்கின்றன. கடந்த 5, 6 ஆண்டுகளாக அந்தப் பகுதியிலுள்ள நிலைமையை நான் விவரித்துக் கூறவேண்டியதில்லை. பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றேன். உண்மையிலேயே அந்தப் பகுதி விவசாயிகள் எப்படி வாழ்கின்றார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், யாரேனும் கிராமங்களுக்குத் நேரடியாகச் சென்று தெருவழியாக ஒவ்வொரு வீட்டையும் எட்டிப்பார்த்துக்கொண்டே போனால், அவர்கள் இருக்கக்கூடிய நிலவரத்தை சரிவரத் தெரிந்துகொள்ள முடியும். அமைச்சர்களோ நாமோ ஒரு ஊருக்கு வருகிறோம் என்று சொல்லிவிட்டுப்போனால், நமக்கு முன்னாலே அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் மறைத்துக்கொண்டு கஷ்டம் தோன்றாமல் வெள்ளை வேஷ்டி அணிந்துகொண்டு செளகரியமாக இருப்பவர்கள் போல சில பேர் வந்து நிற்பார்கள். உண்மையான கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள முடியாது. அப்படி இந்த கஷ்டங்களினாலே உருகி உருகி வருக்குலைந்துபோன பல பேர்களை நாம் கிராமங்களிலே பார்க்க முடியும். ஒரு சில தினங்களுக்கு முன்னாலே கிராமங்களுக்குச் சென்றிருந்தேன். நான் அவர்களுக்குச் சொந்தக்காரன். மேலும் பல இடங்களுக்குச் சென்றிருந்தபோது, எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரிந்தவர்கள் இருந்தார்கள். அவர்களை நான் அழைத்தபோதும்கூட என்னிடத்திலே நேராக வருவதற்கு—அவர்கள் உருக்குலைந்து போய் கஷ்டமான ஒரு நிலைமையில் இருப்பதால், என்னை வந்து பார்ப்பதற்கு— அவர்கள் வெட்கப்பட்டுக்கொண்டு வராமல் போனவர்கள் பல பேர்கள் இருக்கின்றார்கள். இந்த வருடம் மட்டுமல்ல, கடந்த சில வருடங்களிலேகூட இந்த நிலைமையை நாம் பார்த்திருக்கின்றோம். அந்தக் கஷ்டங்களை நீக்குவதற்காக, இந்த மனுவிலே கூறப்பட்டுள்ள விஷயங்களைக் கவனித்து துரிதமாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியைப் பெற்று, நான் இந்த மனுவை முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கின்றேன். அங்கே

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 27

கடந்த ஆண்டுகூட, சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய கடன்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் இவை களைக்கூட கெடுபிடி செய்து வசூல் செய்ய வேண்டாமென்றும், ஜப்தி செய்ய வேண்டாமென்றும் அரசு உத்தரவிட்டிருக்கின்றது என்று பல சந்தர்ப்பங்களிலே சொன்னார்கள். இப்போதுகூட ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுக்காவிலே இந்தப் பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அரசு உத்தரவிட்டுவிடுகிறது. ஆனாலும், அந்த வசூலை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம் என்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். அரசும் அவர்களும் ஒருவருக் கொருவர் நாங்கள் சொல்லிக்கொண்டிருப்பதுபோல சொல்லிக் கொண்டிருப்போம், நீங்கள் செய்வதைச் செய்துகொண்டிருங்கள் என்று கூடிப்பேசிச் செய்கிற மாதிரி இந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை மறுப்பதற்கில்லை. அரசாங்கம் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து இப்போது நடந்து கொண்டிருக்கின்ற கெடுபிடி வசூலை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அது இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அதைப்பற்றி விரைவான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மின்சாரம் இப்போது இல்லை. மண்ணெண்ணெயும் இல்லை. இதன் காரணமாக அங்கே பெரும் கஷ்டங்கள் தோன்றியுள்ளன. கிராமங்களிலே மின்சாரமே இல்லாததினாலே விவசாய வேலைகள் நடைபெறுவதில்லை. டீசல் ஆயில் கிடைப்பதில்லை. மழை பெய்த பகுதிகளிலேகூட நெல் மகசூல் விளைந்திருக்கின்றது. நான் போனபோது பார்த்தேன். கிணற்றிலே தண்ணீர் இருக்கின்றது. என்னுடைய பகுதியிலே இருந்து 10, 15 மைல்களில் உள்ள கிராமங்களில் உள்ள கிணற்றிலே 4 அடி, ஆறடியில் தண்ணீர் இருக்கின்றது. ஆனால் மின்சார பம்புசெட்டுக்கள் வந்துவிட்ட தன் காரணமாக மாடு வைத்து கவலை மூலமாக தண்ணீர் இறைக்கும் வழக்கம் போய்விட்டது. அதனாலே கவலை குழி யெல்லாம் தூர்ந்துவிட்டது. கவலை குத்தக்கால், கற்கள் இவைகள் எல்லாம் கிணற்றிலே கிடையாது. எங்கே கிணற்றிலும் கிடையாது. பம்புசெட்டு கட்டிடம்தான் இருக்கின்றது. திடீரென்று மாடு பிடித்து கவலை வைத்து தண்ணீர் இறைப்பதற்கும் இல்லை. இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. உடனே என்ஜின்களை வாங்கியிருக்கி

1973 மார்ச் 27] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

றார்கள். அதுவும் அந்தப் பக்கத்தில் விளைந்த நெல்லையெல்லாம் விற்றுவிட்டு அதிக விலை கொடுத்து என்ஜின்கள் எல்லாம் வாங்கியிருக்கின்றார்கள். அதிக விலை கொடுத்து டீசல் என்ஜினை வாங்கிவிட்டார்கள். அதனாலே செலவுக்கு வேறு பணம் இல்லையென்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. டீசல், மண்ணெண் ணெய் வினியோகம் சம்பந்தமாக பலவிதமான புகார்கள் அங்கே கூறப்படுகின்றன. ஒரு விவசாயி வந்து சொன்னார். முக்கிய மானவர். பேரல் 150, 160 என்று விற்பதை ரூபாய் 360 வீதம் 12 பேரல்களை ஒருவருக்கே கொடுத்தார்கள். அவரிடத்திலிருந்து நான் வாங்கினேன் என்று சொன்னார். என்னைக் கூப்பிட்டுக் கேட்டால், எங்கும் வந்து நான் சொல்கின்றேன் என்று சொன்னார். இந்த மாதிரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மண்ணெண்ணெய் விஷயத்தில், ஒரு டின் 12 ரூபாய் விற்கக் கூடியது 30 ரூபாய் வரையில் விற்கப் படுகிறது என்று சொன் னார்கள். இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த வினியோகம் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் தாசில்தாரிடம் 15-ம் தேதி போய்ப் பேசினேன். அப்போது நான் கேட்டதற்கு அவர் சொன்னார். கிராமப்புறங் களில் மண்ணெண்ணெய் விநியோகிக்க 10, 12 ஊர்கள் அடங்கிய ஒரு சென்டர் வட்டத்திற்கு மொத்தமாக ஒருவருக்கு மண்ணெண்ணெய் டின்களை அனுப்பி, அந்த இடத்திற்கு வந்து கிராம மக்கள் வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின் றார்கள். கால் லிட்டர் வாங்குவதற்கு ஒரு மைல், இரண்டு மைல் தூரத்திலிருக்கும் அடுத்த ஊருக்குப் போய், இந்த மண்ணெண் ணெயை வாங்க வேண்டிய நிலைமை இருந்தால், எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பார்த்து அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக நம்முடைய சட்ட மன்ற விடுதி சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். இதற்கு முன்னாலேயும் சொல்லியிருக்கின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: அதையே சொன்னால் எப்படி? திருப்பித்திருப்பிச் சொல்லக்கூடாது. சொன்னதையே திரும்பக் கேட்க நல்லதாக இருக்காது. அழகால் தும்பம்

[சட்ட மன்றத் தலைவர்] [1973 மார்ச் 27

ஆண்டாள் . . . . என்று பிரபந்தத்திலே இருக்கின்றது. ஸ்ரீவில்லிப்புத்தூரைச் சுற்றி நல்ல வயல்கள் இருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சட்ட மன்ற நிர்வாகம் திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லவேயில்லை. அவ்வளவு மோசமாக அங்கே உள்ள அலுவலர்கள்

திரு. கே. ராஜாராம்: சட்ட மன்ற அங்கத்தினர்கள் ஓய்வு விடுதி என்று சொல்லுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சட்ட மன்ற அங்கத்தினர்கள் விடுதிதான். அங்கேயுள்ள அலுவலர்கள் அவர்களுடைய மேலதிகாரிகள் சொல்லுகின்றபடி நடக்க இயலாதவர்களாக, அசக்தர்களாக இருக்கின்றார்கள். நல்ல முறையில் அங்கு நடத்த அவர்களை விடுவதில்லை. அங்கு அதிகாரம் செய்கின்றார்கள். ஒரு நாள் நானே கூடப் பார்த்தேன். பெயர்கூடத் தெரியவில்லை. திடுதிடுவென்று படியிலேயிருந்து இறங்கி ஒருவர் 'எவண்டா சொன்னது' என்று சொல்லிக்கொண்டு, ஒரு பாடியைப் போட்டுக்கொண்டு வருகிறார். அங்கே இருக்கின்றவர்களுக்கு கிடுகிடுத்து விடுகின்றது, நடுங்குகின்றார்கள்.

அங்கே எத்தனையோ கார்கள் நிறுத்துவதற்கு அழகான கான்கிரீட் போட்ட இடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. சட்ட மன்ற விடுதிக்கு முன்னால் எல்லோரையும் வரவேற்கும் இடத்திற்கு முன்னால் கேலிமான, சுகாதாரக் கேடுகள், நடக்கின்றன. ஒரு ஓர்சாப்பில் எப்படி சுகாதாரம் அற்ற முறையிலும், கண்ணுக்குத் தகாத காட்சியையும் காண முடியுமோ அதைப் போன்றவைகளை—பொருள்களை நாம் விடுதிமுன் பார்க்கலாம். அங்கே இருக்கக்கூடிய தண்ணீரை எடுத்து அங்கே கொண்டு போய்க் கழுவுவது இல்லை. கார்களை வரிசையாக நிறுத்துவதில்லை. அந்த டிரைவர் அங்கத்தினருக்குச் சொல்கிறார். அவர்கள் வந்து அதிகாரம் செய்கிறார்கள். அம்மாதிரி தண்ணீரை எடுத்து சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு முன்னால் காரைக் கழுவுவதை எல்லாம் தடுக்கலாம். இரவு நேரங்களில் எவ்வளவு அழகான இடங்கள் முன்னால் இருக்கிறது கண்ணுக்கு இனிய இடமாக அங்கே நிறுத்தக்கூடாதா? அவர்கள் கண்டபடி உள்ளே பிரவேசிக்க முடியாதபடி செய்வதற்கு அழகான செடிகளை வைத்து

1973 மார்ச் 27] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

தொட்டிகளை வைக்கிறார்கள். ஒரு வாரம், பத்து நாட்களுக்குப் பிறகு, அவைகள் உடைந்து கிடக்கின்றன. வேண்டுமென்றே உடைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட அவல நிலையில், அங்கு இருக்கக்கூடியவர்கள் விடுதியைச் சரியாக வைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். வரக்கூடியவர்களுக்குத் தலையணை கொடு, பெட்ஷீட் கொடு, என்று அத்தனை பேரையும் தங்கச் சொல்லுகிறார்கள். ஒழுங்காக ஒரு அங்கத்தினர் ரூமில் இன்னொருவர் கூட இருக்கலாம். இது விதிக்குப் புறம்பானதல்ல. ஒரு ரூமில் பத்துப் பேர், இருபது பேர் வரிசையாகப் படுத்திருக்கக்கூடிய காட்சியைப் பார்க்க முடிகிறது. இவ்வளவு மோசமான நிலை சட்டசபை அங்கத்தினர்கள் விடுதியில் இருக்கிறது. முன்பெல்லாம் இரவு 10, 11 மணிக்கு ஒரு அலுவலர் டார்ச்சை வைத்துக்கொண்டு ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு போவார், ஒரு விருந்தினரோ அல்லது சிநேகிதரோ அல்லது அதற்கு மேலாக இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்வதற்காக. அந்த நிலைமையெல்லாம் இப்போது கிடையாது. அவர்கள் மேலே போக முடியாது. அவ்வளவு அழகான இடத்தைப் படுத்துகிற விடுதியாகவா இருக்கிறது? இரண்டு கேன்டீன்கள் இருக்கின்றன. அதில் 150 பேர்கள் இருக்கிறார்கள். மலஜலம் கழிக்க வசதியில்லை. முன்புறம் இருக்கக்கூடிய மலஜல வசதி நாற்றம் அடிக்கும் என்று வேறுவிதமாக உபயோகிக்கிறார்கள். வெளியிலிருந்து செல்லுபவர்கள் கேன்டீனுக்குள் நுழைய வேண்டியிருக்கிறது. கேன்டீன் பின்புறத்தை எட்டிப் பார்த்தால், அந்த அலங்கோலத்தைச் சொல்ல வேண்டியதே இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் சுற்றுப்புறங்களில் காட்சி அளிக்கின்றன. ஆகையால் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் இரண்டொரு விஷயங்கள் தான். விவசாயப் போராட்ட காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இன்னும் செய்ய வேண்டிய விஷயங்களைச் சொல்லுவதற்கு நேரம் இல்லை. அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், ஜூலை மாதம் 5-ம் தேதி போராட்ட தினத்தன்று நான் குடியிருந்த வீட்டில் கொள்ளை யடிக்கப்பட்டது என்று சொன்னேன். நான் போலீசாரிடத்தில்

புகார் செய்திருந்தேன். அந்தப் புகாருக்கு 6 மாதத்திற்குப் பின்னால் டிசம்பர் மாதம் 31-ம் தேதி கேஸ் கண்டுபிடிக்க முடியாததால் அதுபற்றி ஸ்ரீவில்லிபுத்தூர் செகண்டு கிளாஸ் மேஜிஸ்டிரேட்டுக்கு ரிப்போர்ட் செய்யப்படுகிறதென்றும் இந்த ரிப்போர்ட் செய்வதில் ஏதாவது ஆட்சேபணையிருந்தால், ஒரு வாரத்திற்குள் அந்த மேஜிஸ்டிரேட்டுக்கு ஆட்சேபணை செய்து கொள்ள வேண்டுமென்றும் நோட்டீசு பிறப்பிக்கப்பட்டது. என்னிடத்தில் அந்த 6 மாதங்களுக்குப் பின்னும் அதன் பின் 72 நாள் கழிந்த பிறகு கொடுத்தார்கள். இங்கு பல சந்தர்ப்பங்களில் பேசுகிறபோது ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர நம்பிக்கையோடு வாழ வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த சம்பவம் எப்படி இருக்கிறது. இதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்? கண்டுபிடிக்க முடியாத கேஸ் என்று சொல்லுவதற்கு வேறு எதைச் சொல்ல வேண்டும்? எத்தனை செக்ஷன்கள் போடப்பட்டிருக்கின்றன? நான் சொல்ல வேண்டாம். பழைய ரிகார்டுகளை போலீஸ் ஸ்டேஷனில் தேடினால் கிடைக்கும். கண்டுபிடிக்க முடியாததற்கு, நோட்டீசு கொடுக்கப்படுவதைப் போல இதற்கும் அது உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. எப்படி நிலைமைகள் இருக்கின்றன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். உண்மைக்குப் புறம்பான வகையில் எப்படி இந்த நிலைமைகள் இருக்கின்றன என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது, ஒரு அரசுக்குரிய, ஒரு ஆட்சிக்குரிய, போலீஸ் ஆட்சிக்குரிய வகையில் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று நாம் நம்புவதற்குக் கூட இடமில்லாதபடி. இந்தச் சங்கடங்கள் இருந்துகொண்டிருந்தால், என்ன செய்வது என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். ஹரிஜனங்களுடைய புகார்கள் அங்கே அலட்சியம் செய்யப்படுகின்றன. அவர்களுடைய புகார்களை அமைச்சர் அவர்களிடம் ஒன்றிரண்டு கொடுத்தேன். சிவலிங்கபுரம் கேஸ் பற்றி ஜில்லா கலெக்டர் உசிதம் போல் செய்ய வேண்டுமென்று இங்கிருந்து தாக்கீது அனுப்பியதாகச் சொன்னார்கள். அந்த கிராமத்தவர்களை ஏதோ வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை, அந்த மேஜிஸ்டிரேட் வாரத்துக்கு இரண்டு வாய்தா போடுகிறார், ஆனால் விசாரணைக்கு எடுப்பதில்லை. இதுவரை

ரூ. 1,300 வரை செலவாகியிருக்கிறது. ஊரில் வரி வைத்து வசூலித்து செலவு செய்திருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றியும் சீக்கிரம் ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். சிறை நிர்வாக விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டிற்கான இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் சார்பாக இங்கு நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்தில் பல முறைகளில் ஊராட்சி ஒன்றியங்களுடைய பணிகளைப் பற்றி இங்கே பங்கேற்கிற உறுப்பினர்கள் எல்லாம் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தான் அரசினுடைய பல்வேறு நிர்மாணத் திட்டங்களை, மக்களுக்குப் பலன் அளிக்கும் நன்மைகளை மிகத் திறமையாகச் செய்கிறோம் என்பதை ஒத்துக்கொண்டு, அப்படி ஒத்துக்கொண்ட காரணத்தால் இந்த ஒன்றியங்கள் சுயேச்சையாக நடைபெற நாம் அனுமதிக்காவிட்டாலும்கூட, மிகத் திறம்பட நடைபெறுவதற்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு ஒன்றியங்களுக்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். எவ்வளவோ திட்டங்களை நாம் உருவாக்கினாலும் கூட, அந்தத் திட்டங்களின் பலன் மக்களுடைய கரங்களுக்கு போய்ச் சேர்ந்து, மக்கள் நன்மை அடையும் அளவுக்குக் காரியம் நிறைவேற வேண்டுமென்று இந்த அரசாங்கம் உளப்பூர்வமாக நம்பி திட்டங்களை இயற்றுகிறபோது, நாம் ஒன்றியங்கள் மூலம் அத்தகைய திட்டங்களையெல்லாம் மிக வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் கூட அகில இந்திய ரீதியிலே நடைபெற்ற ஒரு மிகப் பெரிய மகாநாட்டில் இந்தத் திட்டத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். நாடு முழுவதும் பஞ்சாயத்து ராஜ்யத்தின் மூலம், பஞ்சாயத்து அமைப்புகள் மூலம் திட்டங்கள் நிறைவேறினால் தான், அந்தத் திட்டங்கள் மக்களுடைய நன்மைகளை, எண்ணங்களை பிரதிபலிக்கத்தக்க அளவுக்கு இருக்குமென்ற கருத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தமிழக அரசுக்கு

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 27

அந்தத் திட்டத்தையும் உளப்பூர்வமாக நிறைவேற்ற வேண்டுமென்ற தூய எண்ணம் இருக்கிற காரணத்தால், ஒன்றியங்களுக்கு இருக்கிற அதிகாரங்களை மிக நல்ல முறையில் பயன்படுத்தி, அவைகள் இயங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்யுகளைக் கண்காணிப்பதற்கு அங்கு ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அவர்களுக்கு எஸ்.இ.ஓ. என்று பெயர். அதே சமயத்தில் 'டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்' என்ற அதிகாரியும் இருக்கிறார்கள். அங்கே 'டீப்ளிகேஷன் ஆப் ஸ்டாப்' இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு மாநிலத்தில் பல விதமான இலாக்காகள் இருப்பது போல் மத்தியிலும் பல இலாக்காகள் இருக்கின்றன, 'This is duplication of staff' என்று சொன்னார்கள். அதே போல் ஊராட்சி ஒன்றியங்களிலே அதற்கு ஒரு தனி அலுவலர் இருக்க, அதே ஆசிரியர்களைக் கண்காணிக்க கல்வித் துறையில் ஒரு அதிகாரி இருக்கிறார். இப்படி இரட்டிப்பு அதிகாரிகள் இருப்பதால், வேலைகளும் தடங்கல்படுகின்றன, வேகமாக நடைபெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே அரசு அருள்கூர்ந்து இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், ஒரு தவறான நம்பிக்கையிருக்கிறது. இன்றையதினம் உணவு அமைச்சர் இங்கே இருக்கிறார். ஒரு உண்மையை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இன்றையதினம் தமிழகம் உணவுப் பிரச்சினையில் வெற்றிகரமாக நன்னிறைவு பெற்றிருக்கிறது. தமிழ் நாடு உணவுப் பிரச்சினையில் தகை நிமிர்ந்து நிற்கிறது. மற்ற மாநிலங்களுக்கு இங்கிருந்து உணவு தானியங்கள் அனுப்புகிற அளவுக்கு தமிழ் நாடு உணவு உற்பத்தியில் முன்னேறியிருக்கிறது என்றால், அதற்கு முழுக்க முழுக்க ஊராட்சி ஒன்றியப் பணிதான் காரணம். விவசாய இலாகா எவ்வளவு தான் முயன்றாலும் கூட, இந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தான் கண்மாய் மராமத்து செய்கிறோம். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தான் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடுகிறோம். கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போட்டு, நல்ல போக்குவரத்துக்கு பாலம் அமைக்கிறோம். பயிர் பாதுகாப்புக்கு நல்ல போதனையைச்

1973 மார்ச் 27] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

சொல்லித் தருகிறோம். எந்தப் பணியை எடுத்துக் கொண்டாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளத் தூய்மையோடு மிக சுறுசுறுப்பாகப் பணியாற்றினால் தான் நிச்சயமாக இத்தகைய காரியங்களில் வெற்றி காண முடியும். விவசாய இலாகா எங்கோ ஒரு மண்டலத்திலிருந்து கொண்டு அல்லது தாலுகா தலைநகரில் இருந்து கொண்டு பல காரியங்கள் செய்துவிட்டதால் நிச்சயமாக தன்னிறைவு பெற்றுவிட்டது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அடிமட்டத்தில் வேலை செய்கின்ற ஊராட்சி மன்றமும் ஊராட்சி ஒன்றியமும் தான் இந்த வெற்றிக்கெல்லாம் காரணம் என்பதை நாங்கள் மிக மகிழ்ச்சியோடு, அதே சமயத்தில் மிக உறுதியோடு, சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே இதுபோன்ற பல்வேறு காரியங்களுக்கு, அது நீர்ப்பாசனத் திட்டங்களானாலும், குடும்ப நலத் திட்டங்களானாலும் அல்லது எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறதோ அந்தக் காரியத்திற்கெல்லாம் கை கொடுக்கிற கருவியாக, அடித்தளம் அமைத்து வெற்றி பெறச் செய்யும் முதல் படிக்கட்டாக ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் இருக்கின்றன என்பதை இந்த அவை உணர்ந்திருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே மேலும் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று மேற்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 5-20 பிற்பகல்

இன்னுமொன்றை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்று பல அரசாங்க அலுவலகங்கள், தாலுகாவிலேயும் மாவட்டத்திலேயும் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. ஆகவே 'அட்மினிஸ்ட்ரேடிவ் பிளாக்' என்று ஒவ்வொரு தாலுகாவிலேயும் உள்ள அரசாங்க அலுவலகங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அரசாங்கக் கட்டிடத்திலேயே இருக்க வேண்டும் என்று ஒரு நீண்ட கால திட்டமிட்டு, கட்டிடங்கள் கட்டினால், அரசாங்கத்திற்கு என்று சொந்தக் கட்டிடங்களும் கிடைக்கும். அதே சமயத்தில் வேறு பல காரியங்களுக்கு பல்வேறு பகுதியாகப் பிரிந்து செல்லும் காலதாமதத்தையும் தடுத்து நிறுத்தலாம். ஆகவே அரசாங்க அலுவலகங்களுக்காக வேண்டிய கட்டிடங்களை தாலுகா மட்டத்திலேயாவது கட்டி முடிப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 27

இப்பொழுது காலுகாலிலே பணியாற்றுகிற தாசில்தார்களுக்கு ஜீப் வசதி இல்லாமல் இருக்கிறது. பெரும்பாலான தாலுகாக்களிலே ஜீப்கள் இல்லாத காரணத்தால், உளவாட்டி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஜீப்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு வருகின்றார்கள். இப்பொழுது சிறு சேமிப்புத் திட்டமானாலும் அல்லது வேறு பல காரியங்களானாலும், புரோமோஷன் திட்டம் அரசாங்கத்தாலே அறிமுகப்படுத்தப்பட்டவுடனே கிராமத்திலே உள்ள ஒன்றியங்களிலேயுள்ள ஸ்டாஃப் எல்லாம் அதற்குத்தான் படுகின்றனர். தாலுகாக்களுக்கு ஸ்டாஃப் சென்றுவிடுகின்ற காரணத்தால், ஒன்றிய லெவலில் அலைச்சல் பலமாக இருக்கிறது. ஆகவே எல்லா தாலுகாக்களிலும் பணியாற்றுகின்ற தாசில்தார்களுக்கு ஸ்டாஃப் கொடுத்தால், அங்கே பல்வேறு காரியங்களை நிறைவேற்ற முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, தாலுகாவிலே உள்ள ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஐந்து அல்லது ஆறு போலீஸ் ஸ்டேஷன்கள் என்ற கணக்கில் இருக்கின்றது. சங்கீதமாகட்டும் ஸ்ரீமுஷ்ணமாகட்டும் பிரச்சினை ஏற்பட்டுவிட்டால், உடனடியாக அந்த இடத்திற்குப் போய் நிலைமைகளை நேரிலே தெரிந்துகொள்ள முடிவதில்லை. அந்த சட்ட ஒழுங்குப் பிரச்சினை அதிகப்படி, வேலை ஏதுமில்லாதவர்கள் ஏற்படாவண்ணம் முன்னெச்சரிக்கையாக அங்கு போலீஸ் உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு செல்ல வேண்டியது கடமையாகிறது. ஆகவே அதை அரசாங்கம் கவனித்து போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உடனடியாகக் கவனிப்பதற்காக, வாகனம் கொடுத்தால், அவர்கள் உடனுக்குடன் தங்களுடைய காரியத்தைச் செவ்வனே செய்வதற்கு உறுதுணையாக இருக்கும். ஆகவே அரசாங்கம் அதைப் பற்றியும் ஆலோசித்து எல்லா போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும் வாகனங்கள் கொடுக்கக்கூடிய அளவுக்கு திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கக் காலத்திலே பல காரியங்கள் செய்யப்படுகின்றன. அவற்றை மனப்பூர்வமாக மக்கள் வரவேற்கிறார்கள். 1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கெல்லாம் இணைப்புச் சாலைகள் போடுகின்றோம் என்று அறிவித்திருக்கிறார்கள். மேலும்

1973 மார்ச் 27] [திரு. வே. தங்கபாண்டியன்]

கிராமங்களிலே சர்கிள் செக்ஷன் என்று சொல்லப்படுகிற வரைக்கும், பாலங்கள் போன்றவர்களைப் பற்றி பல்வேறு உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே நல்ல நிலைமையிலே இல்லாதவர்களுக்கெல்லாம் இப்பொழுது நம்முடைய அரசாங்கம் வீட்டு மனைகள் கொடுக்கின்றது. இதனால் ஒவ்வொரு கிராமத்திலேயும் அவர்களுக்கு நிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கொடுத்து விட்டு பலரிடங்களில் நிரந்தரமாக வீடு கட்டிக் கொள்ள, இலவசமாகக் கொடுக்காவிட்டாலும், நீண்டகாலத் தவணையில் கடன் கொடுக்கலாம், இங்கே எத்தனையோ ஆயிரம் மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் அமைத்து வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். அதுபோல கிராமங்களிலே வாழ்கிற இப்படிப்பட்ட மக்களுக்கு 25 ஆண்டு தவணையிலே கடன் கொடுத்து, நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். அதிலே ஒரு பகுதியைக் கடனாகவும் ஒரு பகுதியை மானியமாகவும் கொடுத்தால், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இது எல்லா கிராமங்களிலேயும் உள்ள, சமுதாயத்திலே பொருளாதாரத்திலே பின் தங்கிய மக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும், அதையும் அரசாங்கம் ஆலோசித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்று. இப்பொழுது கிராமங்களிலே கண்மாய்களை 'டீசில்ட்' செய்வதற்கு எவ்வளவோ பேப்பர் வேலை இருக்கிறது. ஆனால் அதனுடைய சப்மிஷன் சேனலில் 'டீசில்ட்' செய்வதற்கோ அல்லது 'ரெக்ளெய்ம்' பண்ணுவதற்கோ இடமில்லை. இதற்கு என்ன காரணமென்றால், அவற்றை குடிமராமத்திலே தான் செய்ய வேண்டும். அங்கே விவசாயம் செய்கிற விவசாயிகள்தான் தங்களுடைய செலவிலே கண்மாய்க்குத் தண்ணீர் வருகிற கால்வாயை மராமத்து செய்ய வேண்டுமென்று திட்டமிருக்கிறது. இது முன்னாலே வெள்ளைக்காரன் காலத்திலே, ஜமீன்தார் காலத்தில் வைத்திருந்த முறை. அந்தக் காலத்தில் விவசாயிகளுக்கெல்லாம் வாய்க்காலைச் செப்பனிட வேண்டும் என்ற மனப்பக்குவம் இருந்தது. ஆனால் இப்பொழுது எல்லாவற்றையுமே அரசாங்கந்தான் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிற காரணத்தால், புதிய மனப்பக்குவம் தோன்றி விட்ட காரணத்தால், இந்தக் காரியங்களுக்கு மட்டும் பொது

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 27

மக்களே மராமத்து செய்ய வேண்டுமென்றால், அதற்கு யாரும் வரத் தயாராயில்லை. ஆகவே அந்தக் கண்மாயை மராமத்து செய்வதோடு, அதற்கு இணைப்பான தண்ணீர் போக்குவரத்துக் கால்வாயையும் மராமத்து செய்ய எஸ்டிமேட்டிலே இடம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, 1972–73 ஆம் ஆண்டுக்குரிய துணை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு மிகவும் மகிழ்கின்றேன். நான் சுருக்கமாக சில கருத்துக்கள் மட்டும் சொல்லி முடிக்கின்றேன். ஐந்தாவது பக்கத்திலே முத்திரைத் தாள் நிர்வாகம் என்ற தலைப்பு இருக்கின்றது. ஸ்டாம்ப் ஒட்டி, வசூல் செய்யப்படக்கூடிய கட்டணம். இதிலே என் அனுபவத்திலே கண்ட ஒரு உண்மையை இங்கே சொல்ல விரும்புகின்றேன். ஒரு சொத்து வாங்கினால், அதற்கு மதிப்பு வைத்து, அந்த மதிப்பிற்குரிய 'ஸ்டாம்ப் டூட்டி' செலுத்தப்படுகின்றது. ரெஜிஸ்டிரார் ஆபிசிலே ரெஜிஸ்டிரேஷனுக்கு சரியான மதிப்பிருந்தால் ஏறுமுகம்கொள்ளப் படுகின்றது. குறைவாக மதிப்புப் போட்டு 'ஸ்டாம்ப் டூட்டி' மிச்சப்படுத்தியவர்கள் மீது குறை கூறப்பட்டு, அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு தண்டனை நிர்ணயிக்கப்படுகின்றது. அது நியாயம். ஆனால் சில சமயங்களிலே சொத்துக்குரிய நியாயமான 'ஸ்டாம்ப் டூட்டி' செலுத்தியுங்கூட, தவறுகச் செலுத்தி யிருக்கின்றீர்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகின்றது. இது நியாயமற்ற போக்கு. அதற்கு அளவுகோல் சரியாக இல்லை. அதனால்தான் அவர்களுக்கு விருப்பப்பட்டால் குறைத்து எழுதிக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கின்றார்கள். அந்த ரெஜிஸ்டிரார் விருப்பப்படாவிட்டால் சரியாகக் கொடுத்தாலும் "நீ குறைவாகக் கொடுத்தாய், தண்டனைக்குரியது" என்று சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது. நிலங்கள் ரெஜிஸ்டர் செய்வதற்கு, கைடு லைன்ஸ் என்று சொல்கிறார்கள். ரெஜிஸ்டிரார் ஆபிசிலே, இந்த ஊரிலே உள்ள நிலம் இவ்வளவுதான் மதிப்பு என்று நிர்ணயித்துள்ளார்கள். அந்த கைடு லைன்சைத் தாண்டி, அதற்கு வித்தியாசமாக எழுத முடியாது. அந்த கைடு லைன்சுக்கு உட்பட்டு எழுத வேண்டும் என்று இருக்கிற அளவுகோல் திட்டவட்டமாக இருக்கிறது.

1973 மார்ச் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

ஆனால் கட்டடங்களைப் பொருத்து அப்படி அல்ல. தம் இஷ்டம் போன போக்குக்கு அவர்கள் மதிப்பு நிர்ணயிக்கின்றார்கள். இது நியாயமற்ற முறை. நேரடியாக நானே பாதிக்கப்பட்டவன். ஒரு சந்தர்ப்பத்திலே அந்த அநியாயத்தை நமது தொழில் துறை அமைச்சரிடத்திலே நான் சொன்னேன். அவர்கள் என் உதவிக்கு வந்தார்கள். நியாயம் கிடைத்தது. எனக்கு நிகழ்ந்ததைப் போன்ற அநியாயம் மற்றவர்களுக்கும் நிகழக்கூடாது என்பதற்காக இந்தக் கருத்தினைச் சொல்கின்றேன். கட்டடங் களுக்கும் அரசு 'கைடு லைன்ஸ்' நிர்ணயிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பிலே சில கோரிக்கைகள் இங்கே வைக்கப்படுகின்றன. இந்தக் கோரிக்கை களிலே பல்கலைக் 'பிரிபாஸ்' சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்ததற்காக அங்கீகாரம் கேட்கப்பட்டு அதற்காக அனுமதி கேட்கப்படுகின்றது. இது சம்பந்தமாக நான் ஒரு கருத்தை நம்முடைய அன்புக்குரிய முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவர்கள் இந்தக் கருத்தைக் கொஞ்சம் கவனித்தால், பயனுள்ளதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அதாவது, சட்ட மன்றம் பற்றி சட்ட சபை உறுப்பினர்களுக்கு வசதிகள் என்ற தலைப்பிலே நான் சட்ட மன்ற உறுப்பினராக ஆகி இன்றைய தேதி வரைக்கும் என்றைக்குமே பேசியதில்லை. காரணம் நம்முடைய வசதி களுக்காகப் பேசுவதற்காக நாம் இங்கே வரவில்லை. மக்களுடைய வசதிக்காகப் பேசுவதற்குத்தான் வந்தோம். அதுபற்றிக் குறையிருந்தாலும், நாம் சமாளித்துக்கொள்ள வேண்டும், நாம் அதுபற்றிப் பேசுவது முறையல்ல என்ற உணர்வுடன்தான் இத்தனையாண்டும் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. இன்றைக்கு ஒரு சில கருத்துக்கள் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். எங்களுக்கு இலவச பாஸ்கள் கொடுத்தது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பெருவாரியாக கார்களிலும் புகைவண்டிகளிலும் பிரயாணம் செய்தாலும், சில அவசரத் தேவைகளுக்கு பஸ்களில் நானும் செல்கின்றேன். மிகவும் பயனுள்ளதாக இருக்கிற இந்த 'பாஸ்' கொடுத்தமைக்காக நான் சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பில் அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1973 மார்ச் 27

5-30 பிற்பகல்

மற்றொன்று நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஏனைய மாநிலங்களிலுள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குண்டான சலுகைகள் இந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையாகும். நான் பல்கத்தாவுக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு அமைச்சருடன் பேசும்போது நான் கேள்விப்பட்டது, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும்--மேலவை இப்போது அங்கு இல்லை—முன்பு இருந்தது—ரயிலில் பிரயாணம் செய்ய இலவச பாஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. உத்திரப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தேன். தமிழ் நாட்டைப் போன்று இரண்டு பகுதிகளைச் சுற்றளவாகக் கொண்ட அந்த உத்தரப்பிரதேசத்திலேயும் சட்ட சபை உறுப்பினர்களுக்கு இலவச ரயில்வே பாஸ் கொடுக்கப் படடிருக்கின்றது. நமது அண்டையில மாநிலமான கேரளத்திலே இத்தனை மைல் என்று நிர்ணயம் செய்து பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கே அமைச்சராக இருக்கின்ற ஐ. எச். மொகமது கோயா அவர்களிடம் கேட்டேன். நான் கொடுக்கின்ற தகவலிலே தப்பு இல்லை. எனவே, இப்படி ரயில்வே பாஸ் கொடுக்க வேண்டு மென்று, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் கேட்டுக்கொள் கிறேன்.

நான் டெல்லி பாராளுமன்றத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே செண்டிரல் ஹால் என்று ஒரு இடம் இருக்கிறது. லோக் சபா, ராஜ்ய சபா, உறுப்பினர்களுடைய ஜாயிண்ட் சேஷன் அங்கே தான் நடக்கின்றது. மற்ற நேரங்களில் சபை உறுப்பினர்கள் உட்கார்ந்து பொழுதுபோக்குவதற்குப் பயன்படுத்து கிறார்கள். பல நல்ல கருத்துக்கள் அங்கே உருவாக்கப்படுகின்றன. இரண்டு சபை உறுப்பினர்களும் கலந்து பேசுவதற்கு சாதனமாக அதைப் போன்றதொரு வெண்டிரல் ஹால்—இரண்டு சபை அங்கத்தினர்களுக்கும் பொதுவாக— அமைக்கப்பட்டால் அது ஒரு நல்ல காரியமாக இருக்கும். அங்கே அமைச்சர்கள் கூட வந்து உட்காருகிறார்கள். எனவே இந்த முயற்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாடாளு மன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு செட்டியார் - மன்னிக்க வேண்டும்—திரு. திருநாவுக்கரசு நாயுடு—அவருடைய

1973 மார்ச் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

ஜாதி பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது—பேசும்போது சட்டசபை ஹாஸ்டலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்ல, மேலவை உறுப்பினர்களும் தங்குகிறார்கள். ஹாஸ்டலிலிருந்து சட்டசபைக்கு வரக்கூடிய பஸ்களில் முன்பெல்லாம் "எம்.எல்.ஏ. ஸ்பெஷல்" என்று போட்டி ருந்தார்கள். "எம்.எல்.ஏ. ஸ்பெஷல்" என்றால் "எம்.எல்.சி"-க்கு இடம் இல்லையா என்று எம்.எல்.சி-க்கள் கேட்டார்கள். உடனடியாக "எம்.எல்.ஏ. ஸ்பெஷல் என்பதை எடுத்துவிட்டு, 'லெஜிஸ்லேடார்ஸ் ஸ்பெஷல்" என்று போட்டிருக்கிறார்கள். அது ஒன்று ஹாஸ்டலில் தங்குபவர்களில், எம்.எல்.ஏ-க்களும் உண்டு, எம்.எல்.சி-க்களும் உண்டு. அது. ஹவுஸ் கமிட்டியின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறது. பேரவைக்கும் ஒரு ஹவுஸ் கமிட்டி உண்டு, மேலவைக்கும் ஒரு ஹவுஸ் கமிட்டி உண்டு. ஆனால் பேரவையின் ஹவுஸ் கமிட்டிக்குத்தான் அத்தனை அதிகாரங்களும் உண்டு. மேலவை கமிட்டிக்கு ஒரு இம்மியளவும் சத்தம் போடக் கூட அதிகாரம் கிடையாது. ஒரு சமயம், திரு. சுவாமிநாதன் சில நியாயமான கோரிக்கைகளைச் சொன்னார்கள். அது நமது ஹவுஸ் கமிட்டியில் பேசப்பட்டது. செயலாளர் அவர்கள் சொன்னார்கள், நமக்கு அந்த உரிமையும் இல்லை, நாம் ஒன்றும் சொல்ல முடியாது, நமது உரிமைகளைப் பேச வேண்டுமானால், ஜாயிண்ட் கமிட்டியில் கூடிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக ஜாயிண்ட் கமிட்டி கூட்டப்பட்டது. இந்தக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் தனிக் கமிட்டி கூடும்போது அந்த முடிவுகள் காற்றில் பறக்க விடப்பட்டு என்னென்னவோ செய்தார்கள். இந்த நிலை மாற வேண்டும். ஹவுஸ் கமிட்டியில் பேரவையைப் பொறுத்த மட்டில் பேரவை சம்பந்தமான காரியங்களைப் பார்க்கட்டும் மேலவைக் கமிட்டி, மேலவை சம்பந்தமான காரியங்களைப் பார்க்கட்டும். ஹாஸ்டலைப் பொறுத்து, ஜாயிண்ட் ஹாஸ்டல் கமிட்டி என்று அமைத்து அந்தக் கமிட்டிக்கு ஹாஸ்டலை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவம் என்ற தலைப்பிலே, திருச்சி ஜில்லாவிலே ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று பல முறை

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1973 மார்ச் 27

சொல்லியிருக்கிறேன், அடுத்து வரக்கூடிய முதல் கல்லூரி திருச்சியிலே வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.பி.பி.எஸ். அட்மிஷன்கள் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டது முஸ்லிம்களுக்கு ஜனத்தொகை விதாசாரப்படி குறைவாக இருக்கின்றது. குறைந்தபட்சம், விதாசாரப்படியாவது கொடுக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பின்தங்கிய வகுப்பினர்கள் என்ற தலைப்பிலே உள்ள பிரச்சினை முஸ்லிம்கள் பின்தங்கியவர்களாக அறிவிக்கப்பட வேண்டுமென்பதாகும். இந்தக் கோரிக்கை பல முறை, பல கோணங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் கூட, நமது மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் அதை லட்சியம் செய்யவில்லையோ கவனிக்கவில்லையோ அல்லது இனிமேல் கவனிக்க விருக்கிறாரோ, என்னவோ, ஆண்டவனே அறிவார். இது கவனிக்கப்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று நினைவுபடுத்துகிறேன். சென்ற ஆண்டு முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த தின விழாவன்று முஸ்லீம்களுக்கு ஒரு நற்செய்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். நான் முஸ்லீம் லீக்கின் மாநிலத் தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 20-வது நாள் முதலமைச்சருடைய பிறந்த தின விழா வந்தது. நான் வைத்த முதல் கோரிக்கை முஸ்லிம்களைப் பிற்பட்டவர்களாக அறிவியுங்கள் என்பது. அந்த முதல் கோரிக்கையை தயவுசெய்து நிராகரிக்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டேன். "செய்கிறேன், ஆனால் அவகாசம் கொடுங்கள்" என்று பதில் சொன்னார்கள். அவகாசம் கொடுத்துவிட்டேன். ஒரு ஆண்டு நிறைவேறுகிறது. தயவுசெய்து அடுத்த பிறந்த தின விழாவை எங்களுக்கு நற்செய்தி கொடுக்கக் கூடிய விழாவாக அமைய வேண்டுமென்று மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

1973 மார்ச் 27]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய திரு. திருஞானசாமி நாயுடு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்களும் மேலவை உறுப்பினர்களைப்பற்றிய சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருக்கிற விடுதி சரியான முறையில் இயங்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த விடுதியைப் பொறுத்த வரையில் என்னென்ன சரியாக இல்லை என்பதை ஒரு நீண்ட பட்டியலாகவே எழுதிவிடலாம். காரணம், அது அங்கே இருக்கக்கூடிய நிர்வாகிகளுடைய தவறோ, அல்லது உறுப்பினர்களுடைய தவறோ—அந்த விவரத்திற்கு நான் போகவில்லை—இரு பக்கமும் தவறு அதிகமாக இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். குறிப்பாக, இதிலே நான் கூற விரும்புவதென்னவென்றால், அந்த விடுதி திருத்தம் செய்யக் கூடிய நிலையில் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இப்போது இருக்கக் கூடிய நிலைமை நீடித்துக்கொண்டிருந்தால், அந்த முறையிலே நான் போய்க் கொண்டிருக்கும். அங்கே யார் தங்குவது, உறுப்பினர்கள் மட்டும் தங்குவதா ? அவர்களைத் தவிர வேறு யாரும் தங்கக் கூடாது என்று சொன்னால், "நாங்கள் தேர்தலில் நிற்பவர்கள், மற்றவர்கள் வந்து தங்காமல் என்ன செய்ய முடியும் ?" என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மீண்டும் மீண்டும் உருவாகிக்கொண்டே இருக்கிறது. ஆக, நாங்கள் கேட்பதெல்லாம் என்னவென்றால், மேலவை உறுப்பினர்கள் அந்த இடத்திலே தங்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், எங்களைத் தனியாகப் பிரித்து நியூ எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் எங்களுக்கு இடம் கொடுங்கள். அது முன்பு எம்.எல்.ஏ. ஹாஸ்டலாக இருந்தது—இப்போது அங்கே ஒருவரும் இல்லாத நிலைமை—ஓரிருவர் தான் போய் இருக்கிறார்கள்—ஆகவே, மேலவை உறுப்பினர்களுக்கு அந்த நியூ எம்.எல்.ஏ. ஹாஸ்டலை, "எம்.எல்.சி. ஹாஸ்டல்" என்று போட்டு, அதையும் தலைவர் அவர்களுடைய நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவார்களேயானால், நல்ல முறையில் இருக்க வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே, குறைந்தபட்ச வசதிகள் தேவை. அவற்றையும் செய்து கொடுக்கலாம். இந்த வசதிகளைச் செய்து கொடுத்தால் மிகவும் உபகாரமாக இருக்கும்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 27

அடுத்தபடியாக, திரு. வகாப் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். பஸ்களுக்கு பாஸ் கொடுத்தது போல ரயில்வே பாசும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். நான் ரயில்வே பாஸ் கூட கேட்கவில்லை. அந்த ரயிலில் வருவதற்கு டிக்கெட்டில் பிரையாரிடி கொடுத்தால் போதும். 2 நாட்கள், 3 நாட்களில் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். 2 நாட்களில் வர வேண்டு மானால், காரில் வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சில சமயங்களில் காரில் கூட வர முடியவில்லை. ரயிலில் டிக்கட் கிடைப்பதில்லை. இந்த மாதிரி சங்கடங்கள் ஏற்படுகின்றன. நாங்கள் டிக்கட் பணம் கொடுத்து வாங்குகிறோம். ஒரு பிரையாரிடி வேண்டுமென்று தான் கேட்கிறோம். இந்த மாதிரி பிரையாரிடி திருப்பதியில் இருக்கிறது. தஞ்சையிலோ, மாயவரத் திலோ, குப்பகோணத்திலோ இல்லை. திருச்சிக்குச் சென்று வாங்குவது என்பதில் கஷ்டமான நிலை இருக்கிறது. அப்படியும் கிடைப்பதில்லை. அந்த மாதிரி சென்னையில் இருக்கிறது. மற்ற இடங்களில் இல்லை. ஆகவே, எம்.பி. களுக்குக் கொடுப்பது போல எம்.எல்.ஏ-க்களுக்கும் பிரையாரிடி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

5.40 பி. ப. அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே இரண்டு அறிவிப்புகளைத் தொடுத்தார்கள். அந்த அறிவிப்புகள் இதுவரையிலே நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். "Committee on Government Undertakings" என்று அரசுத்துறை இன்டேக்கிங்களைப் பொறுத்து, நிர்வாகக் கமிட்டி போட வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய மதிப்பிற் குரிய 'விப்' அவர்கள் அந்தக் கமிட்டி போடப்படுமென்று அறிவித்தார்கள். நாளைக்கு அறிவிக்கப்படும் என்கிறார்கள். நன்றி. இன்றைக்கு அந்த அறிவிப்பு வருமென்று எதிர்பார்த் தேன், நாளைக்கு வருமென்று சொல்கிறார்கள், அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை அவர்கள் சென்ற ஆண்டு சொன்னார்கள். எலெக்டிரிசிடி போர்டு பட்ஜெட் வருகிறபோது, அதைப்பற்றி உறுப்பினர்கள் என்னென்ன கருத்தைச் சொன்னார்களோ அதை எடுத்து அதற்குக் கூறப்பட்ட பதில்களையும் அவர்களே

1973 மார்ச் 27] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அச்சடித்துக் கொடுக்கிறார்கள். அதிலிருந்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதைத் தெரிந்து கொள்ள லாம். அதே போல சட்ட மன்றத்திலே பேசியதையெல்லாம் தொகுத்து, நம்முடைய பிரதமச் செயலாளர் அவர்கள் கொடுப்ப தாகச் சொன்னார்கள். அதன்மேல் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதற்கு ஒரு புத்தகம் அச்சடித்து நமது உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுமென்று ஒரு அறிவிப்பைக் கொடுத்தார்கள். இந்த ஆண்டு அது வருமென்று எதிர்பார்த்தேன். இதுவரை வரவில்லை. அதற்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடிக்க விரும்பு கிறேன். தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்தவன் என்ற காரணத் தினால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தென்னையினம் பூச்சிகளினால் பாதிக்கின்றபோது, மைசூர் அரசு மிக வேக மாகவும் விரைவாகவும் இந்த அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்றது என்பது மட்டுமல்ல, அந்த அணைக்கட்டுத் திட்டத்திலிருந்து எங்களுக்குத் தண்ணீர் கொடுக்க மாட்டோ மென்ற பாணியிலே அவர்கள் பேசுகிறார்கள். இப்படி அவர்கள் முகத்தில் அடிக்கடி கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், நம்முடைய முதல மைச்சர் கோர்ட்டிற்குச் சென்று, ஒரு டிரிப்யூனல் போட வேண்டுமென்று ஒரு ரிட் மனு கொடுத்தது. பிறகு அதை நல்ல முறையிலே பேசித்தீர்த்து விடலாம் என்று மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவும, பிரதம அமைச்சரவர்களும் சொன்னதின் பேரிலே எல்லா அமைச்சர்களும் சேர்ந்து பேசினார்கள். பேசியதற்குப் பிறகு ஒரு முடிவு 6 மாதத்திற்குள்ளாக சொல்லப்படுமென்று சொன் னார்கள். 6 மாதங்களாகியும் சொல்லப்படவில்லை. இப்போது அந்த அணைக்கட்டைத் தொடர்ந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே போராடினால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு இருண்ட நிலைமை இருக்கும் என்பதை முதலமைச்சரவர்கள் முன்னிலை சொல்லுகிறோம். இன்றைக்கு திருச்சி மாவட்டமும் ஒரு இருண்ட நிலைமையிலிருக்கும் என்று சொன்னார்கள். இந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இதற்கு உடனடியாக என்ன பரிகாரத்தைக் காணப் போகிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 27

நாம் கொடுத்த அந்த ரிட் பெடிஷனுவது இன்னும் இருந்தால், ஒரு டிரிப்யூனலே அவர்கள் போடுவார்கள் என்ற நிலைமை யிருந்தது. ஆனால் அவர்கள் சொல்வதைக் கேட்டு, நாம் அவர்கள் வார்த்தையை நம்பி, அதையும் வாபஸ் வாங்கிக்கொண்ட நிலைமை யில் எதுவும் நாம் பற்றுவதற்கு இல்லாத நிலைமை இருப்பது போன்று தோன்றுகிறது. தமிழகத்திற்கு, அதுவும் குறிப்பாக தஞ்சை மக்களுக்கு, இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ப தைத் தெரிவித்துக் கொண்டு அதைப்பற்றி முதலமைச்சரவர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிய நாங்கள் மிகவும் ஆவலாக இருக்கிறோம் என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, முதலில் நமது சட்ட மன்ற நிர்வாகத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முன்பெல்லாம் நாம் பேசி முடித்தால், பேச்சின் குறிப்புகள் அச்சாகி வருவதற்கு அதேக மாக 7 மாதங்கள், 8 மாதங்களாகும். இப்போதெல்லாம் அப்படி யில்லாமல் ஒரு மாதத்திற்குள் வரும்படியான நிலைமையில் நிர்வாகம் முன்னேறி வருகிறது. அதைக் கண்டு, நான் மகிழ்ச்சி யடைகிறேன். இன்னும் கூட அது முன்னேற வேண்டும். எனென்றால் பார்லிமெண்டில் 4 தினங்களில் டிபேட்டெல்லாம் அச்சடித்துக் கையிலே கொடுத்து விடுகிறார்கள், அல்லது ஒரு வாரத்திற்குள் அங்கு அச்சடித்துக் கொடுத்து விடுகிறார்கள். இந்தத் தொடர் கட்டத்திலே ஆரம்பத்தில் நான் பேசிய பேச்சுக் களெல்லாம் அச்சாகி வந்துவிட்டது என்று தெரிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதை இன்னும் வேகப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, குறிப்புகள் சரியான முறையிலே எடுக்கப்பட்டு வருகின்றன பார்லிமெண்டில். இங்கு பல தவறுகள் அதிலே இருக்கின்றன. திருத்துவதற்கு பல மணி நேரங்கள் கூட சமயத்தில் நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாகச் செய்கிற நிலைமைகள் இருந்தால், அது கஷ்டமாகி விடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1973 மார்ச் 27]

திரு. கே. ராஜாராம்: அதைச் சொல்லத்தான் இருந்தேன். ஒரு மணி நேரம் நான் பேசினேன். அதைத் திருத்துவதற்கு 2 மணி நேரம் ஆயிற்று. ஆகவே கொஞ்சம் தேர்ச்சி அடைந்த வர்களை ரிப்போர்ட்டர்களாகப் போட வேண்டும். இப்போதே தன்முக ரிப்போர்ட் பண்ணுகிறார்கள். இருந்தாலும் நல்ல ரிப்போர்ட்டர்களாகப் போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். ரிப்போர்ட்டர்களைப் போடும்போது தற்காலிகமாக ஆட்களை நியமிக்கிறார்கள். தற்காலிகமாகப் போடுகிற ஆட்கள் கவனக் குறைவாக 'ரிப்போர்ட்' செய்கிறார்கள். இன்னும் நல்ல ஆட்க ளாக நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறை சம்பந்தமாக யாரும் சொல்லாத ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தில் ஸ்தல ஸ்தாபனத் தொகுதிகள் செங்கற்பட்டு, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மூன்று ஜில்லாக்களைத் தவிர எல்லா ஜில்லாக்களிலும் இரண்டு உறுப்பினர்கள் தொகுதிகளாக இருக் கின்றன. அதை ஒற்றை மெம்பர் தொகுதிகளாகப் பிரித்து விட்டால், யாருக்கும் கஷ்டமிருக்காது. இப்போது தேர்தல் நடத்தப்படுவதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. தேர்தலில் ஈடுபடுகிறவர்களுக்கு அது கஷ்டமாக இருக்கிறது. ஆக இரட்டை மெம்பர் தொகுதியையெல்லாம் ஒற்றை மெம்பர் தொகுதியாகப் பிரிக்க வேண்டுமென்று நமது அரசாங்கம் தேர்தல் கமிஷனுக்குச் சிபாரிசு செய்தால், தேர்தல் கமிஷன் ஒப்புக் கொள்ளும். அதிலே கஷ்டம் ஒன்றுமில்லை. ஆகையினால் ஒரே நேரத்தில் தேர்தலை வைத்து விடலாம். இரட்டை மெம்பர் தொகுதியை ஒற்றை மெம்பர் தொகுதியாகப் பிரித்து வைப்பது நல்லது. இப்போது தவளையும், எலியுமாக காலைக் கட்டிக்கொண்டு தண்ணீருக்குள் இறங்குவது மாதிரி வேட்பாளர்கள் சேரு கிறார்கள். இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு ஒரே ஓட்டரைப் போய் பிடிப்பதால், வெற்றியடைவார் என்று எதிர் பார்த்தவர் எங்கேயோ போய் விடுகிறார். போகிற போக்குத் தெரியவில்லை. எவர் தோற்றுப் போய்விடுவார் என்று நினைக்கிறோமோ அவர் பஸ்டில் ஜெயித்து வந்து விடுகிறார். பல விதமான இடைஞ் சல்கள், எதிர்பாராத கஷ்டங்கள் வந்து விடுகின்றன. ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிற இரட்டை மெம்பர் தொகுதி

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 27

யையும் ஒற்றை மெம்பர் தொகுதியாகப் பிரித்துவிட்டால், கொம்ப சௌகரியமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

சுகாதார அமைச்சரவர்கள் அதிகாலையில் மதுரைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். திருமங்கலம் ஆஸ்பத்திரி, தரம் உயர்ந்த தலைநகர ஆஸ்பத்திரியாகத் தல்ல நிலைமையில் அங்கே செயல்பட்டு வருகிறது. இப்போது இந்த வசதி-செலவுத் திட்டத்தில் அங்கே ஒரு எக்ஸ்ரே இயந்திரம் வாங்கி வைப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நல்ல முறையில் முன்னேறி வருகிறது. மதுரையில் இருக்கக்கூடிய தொண்டு ஊழியர்கள் ஆஸ்பத்திரி சொம்பப் பெரிய ஆஸ்பத்திரி தான். அங்கு போகக் கூடிய கூட்டத்தில் ஒரு பகுதியை நிலக்கோட்டை, மேலூர், திருமங்கலம் இம்மாதிரி பக்கத்தில் 15 மைலுக்குள் இருக்கக் கூடிய ஆஸ்பத்திரிகள் பகிர்ந்துகொள்கின்றன. அந்த மாதிரி ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடிய கூட்டங்களில் பெரும் பகுதி இந்தத் தலைநகர் ஆஸ்பத்திரிக்குப் போய்கொண்டிருக்கிறது. ஆனால் திருமங்கலம் ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில், டாக்டர்கள் இருக்கிறார்கள். நன்றாக வைத்தியம் நடக்கிறது. ஆனால் இடவசதி தான் இல்லை. பல வருஷங்களுக்கு முன்பு லேயே காங்கிரஸ் ஆட்சி நடந்தபோதே, நிலம் பற்றி நான் எடுத்துச் சொன்னேன். பக்கத்திலுள்ள கட்டடம் முன்சீப் கோர்ட் கட்டிடம். இந்தக் கட்டடத்தைக் கூற்றி ஏராளமான நிலம் இருக்கின்றது. பெரிய காம்பௌண்டு. அதை அப்படியே ஆஸ்பத்திரிக்குக் கொடுத்துவிட்டால், விஸ்தரிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று அவைக்கு இருந்த அரசாங்கம் முடிவு செய்து ஹைகோர்ட்டிற்கு எழுதியிருந்தார்கள். ஹைக்கோர்ட்டிலிருந்து 1968-ல் ஒரு ஜட்ஜ் நேரில் வந்து பார்வையிட்டு 1968-லேயே அதைக் கொடுத்து விடுவதற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டார்கள். மாண்புமிகு திரு. மாதவன், சட்டத் துறையமைச்சரவர்கள், நேரிலே வந்து பார்த்து முன்சீப் கோர்ட்டிற்கு வேறு இடத்தைப் பார்த்து நிர்ணயம் செய்து விட்டு வந்து விட்டார்கள். ஆகவே எல்லாம் முடிந்து விட்டது. முதலமைச்சரவர்கள் இதில் சற்றுக் கவனம் செலுத்தி, "சரி" என்று உத்தரவு போட்டு விட்டால், வேலைகள் நடந்து விடும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைகள் நீங்கி விட்டன,

1973 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

சட்டத்துறை வேறு இடம் பார்த்துவிட்டது, ஆகவே இந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக சென்னை நகரில் பல கட்டடங்கள், முதலமைச்சரவர்களின் வாசகத்திலே சொன்ன மாதிரி, மளமளவென்று கட்டப்பட்டு வருகின்றன. ஒன்றை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கட்டடங்களுக்குத் தண்ணீர் வசதி செய்யாமல் யாரையும் குடியேற்றக் கூடாது. தண்ணீர் வசதி பண்ணுமல் குடியேற்றினோமானால், அது பெரிய அபாயமாகும். நகரத்தின் மின்சார வசதிக்கோ பெரிய கொடுக்க வேண்டும். பினஸ் அவர்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். தண்ணீர் வசதி செய்யாவிட்டால், அது பின்பு அந்த அடுக்குமாடி யில் தண்ணீர் வசதி பண்ணித் தருவதற்கு அதன் பிறகு அவர்களைக் குடியேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில், இட நெருக்கடி இருக்கிறது. வேறு வழியில்லை. அங்கத்தினர்களாகிய எங்களுக்கு இந்த இடம் போதும். ஆனால் விசிட்டர்களாக வருகிறவர்களுக்கு உட்காருவதற்கு சொம்ப நிலைமை மோசமாக இருக்கிறது. இதையே மாற்றியமைத்துக் கட்ட வேண்டும் அல்லது வேறு எதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படியே இட வசதி செய்து கொடுக்காமலிருந்தால், சொம்பக் கஷ்டமாக இருக்கும். அதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையில் வளர்ச்சிப்பற்றி நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வருஷம் தொழில் வளர்ச்சிக்கு ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. 18 கோடி 5-50 பி. ப. ரூபாய் செலவில் தமிழ் நாட்டில், 'தமிழ் நாடு பவர் லிமிடெட்' என்ற ஒரு கம்பெனியை ஆரம்பிக்கப் போகிறோம். 18 கோடி ரூபாய் மூலதனம் போட்டு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம். ஆனால் அங்கு மேலே 500 பேருக்குத்தான் கிடைக்கும். அதேமாதிரி 25 கோடி ரூபாய் செலவில் மற்றொரு கம்பெனியை, 'தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ்' என்று

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 27

ஆரம்பிக்கப்போகிறோம். அங்கே 600 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். இவ்வளவு பெருந்தொகைகளைச் செலவழித்து தொழிற்சாலைகளை ஏற்படுத்துகின்ற நேரத்தில், அவசியமான தொழில்களை, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான தொழில்களை ஆரம்பிக்கும்போது, அந்தத் தொழில்களுக்குப் பெரும் மூலதனம் போடும்போது, வேலை வாய்ப்புகள் அதிகமான பேர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தொழில்களை ஆரம்பிக்கும்போது, அதிகமான வேலை கொடுப்பதாக இருக்க வேண்டும். உப தொழில்களை பக்கத்திலே உருவாக்க வேண்டும்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :. தலைவரவர்களே, சில தொழில்கள் மூலத் தொழில்களாக இருந்தால், அதிலே உற்பத்தியாகிற பொருள்களைக்கொண்டு பல்வேறு தொழில்கள் இயங்க முடியும். அதே போன்றுதான் டையர் தொழிற்சாலையும், அல்கலி கெமிக்கல் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது வேறு மாநிலங்களில் உற்பத்தியாகிற டையர்களைப் பயன்படுத்தி வருகிறோம். தமிழ் நாட்டிலேயே பிற மாநிலங்களுக்குத் தேவையான டையர்களை உற்பத்தி செய்யலாம். அதே போலத்தான் 'கெமிகல்' தொழிற்சாலையும், வேறு பல தொழில்களுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்த உதவியாக இருக்கும்.

திரு. கே. ராஜாராம் : வேறு வழியில்லை. பெரும் தொகையைப் போட்டு இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டியதுதான். இதை ஆரம்பிப்பதனால், உப தொழில்களும் வளர்ச்சி அடைகின்றன. எனவே தாமதமில்லாமல் அந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால்தான் ஏராளமான பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படுமென்று அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். "Scheme for Uneducated" என்ற தலைப்பின்கீழ் 1972-73-வது ஆண்டில், Revised Estimate -ல் 33,98 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. படித்தவர்களுக்கு "Trainign" கொடுப்பதற்காக கிட்டத்தட்ட 34 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகிற ஆண்டில் ரூ. 1.8 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசிலிருந்து மானியம் இல்லையென்பதால் குறைக்கப்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன். "Industries Department Performance Budget"

1973 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

43-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 34 லட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். வரப்போகிற ஆண்டில் 1.8 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அன்று தொழில் துறைக் கொள்கை விளக்க விவாதத்தில் பேச வேண்டுமென்று இருந்தேன். அன்று வரமுடியவில்லை. முக்கியமான 'Point'-ஐச் சொல்லிவிட்டேன். அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டும். இல்லையென்றால், மத்திய அரசுக்கு வலியுறுத்தி வேலையின்மையைப் போக்குவதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்றும், பணம் ஒதுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நாம் 'Hydro-Electricity'-ஐ நம்பிக்கொண்டிராமல், நீண்ட காலத் திட்டங்களைப் போட வேண்டும். இந்த வருஷம் வானம் பொய்த்துவிட்டதால், மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டது. எப்போதும் பொய்த்துவிடுமென்று அச்சமுறத் தேவையில்லை. வானை நம்பியே உலகம் இருக்கிறதென்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதை நம்பாமல் இருக்க முடியாது. நம்ப வேண்டியதுதான். ஆனால் மழை பொய்த்து விட்டாலும், மின்சார சக்தி குறையாமல் கிடைக்கும்படி, ஒரு நீண்டகாலத் திட்டத்தை வகுத்து, பருவ மழை தவறி விட்டாலும், மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு, நம்மைப் பாதிக்காமல் இருக்கும் வகையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குக் கொடுக்கும் படியைப் பற்றி நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் கூறினார்கள். ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்களுடைய நிலைதான் அதைவிட மிகவும் மோசமாக இருக்கிறது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒன்றியக் கூட்டம் நடைபெறுகிறது. அதற்கு அவர்களுக்கு இரண்டு ரூபாய்தான் படி. பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு 2 மாதத்திற்கு ஒரு முறை நடக்கும் கூட்டத்திற்கு வர, 5 மைலுக்கு உட்பட்ட ஊராகயிருந்தால் 2 ரூபாய்; 5 மைல்களுக்கு அப்பாற்பட்ட ஊராக இருந்தால் 4 ரூபாய். ஆனால் அவர்கள் நாள் தவறாமல் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு வந்து போக வேண்டிய அவசியம் இருக்கிறது. எல்லா எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களும் வட்டார அலுவலகத்தில் இருக்கிறார்கள்.

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 27

அதனால் அங்கு வந்து போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மீட்டிங் 2 மாதங்களுக்கு ஒரு முறை போடப்படுகிறது. எனவே அவர்களுக்கு 2 மாதத்திற்கு 2 ரூபாய் படியாகக் கொடுக்கப் படுகிறது. அதை மாற்ற வேண்டும். அதை அவசியமான அளவுக்கு அதிகப்படுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு நூறு ரூபாய் பிரயாணப்படி ஒதுக்கியிருக்கி றார்கள். நூறு ரூபாயை ஒதுக்கியிருந்தாலும், அதை அப்படியே எடுத்துக்கொள்ள முடியாது. பிரயாணம் செய்து, டி.ஏ.பில். போட்டுத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவர் களுக்குக் கீழே இருக்கக்கூடிய பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு முதலில் அதிகப்படுத்திவிட்டு இதையும் அதிகப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு முடித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த இறுதித் தீர்ணை மதிப்பீடுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். எனக்கு ஒரு கவலை இருந்தது. இந்த மன்றத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றியும், சட்ட மன்ற நிர்வாகத்தினைப் பற்றியும் பேச வேண்டுமென்று ஒரு நாள் ஒதுக்கப்பட்டு, பிறகு அது, அந்த நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டு விட்டது. பேரவையிலுடைய முன்னவர் நாவலர் அவர்களுக்குக் கிடைத்த அந்த வாய்ப்பு, மேலவையில் முன்னவராக இருக்கிற எனக்குக் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந் தேன். ஆனால் இன்று தீர்ணை மதிப்பீடுகளில் பேசுகிற நேரத்தில், ஒரு வேளை அந்த நடவடிக்கைக் குறிப்பு மாற்றப்பட்டு, அதிலே விடுபட்டதை மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதிக்கப் படுகிறதோவென்று நினைக்குமளவுக்கு அனைவரும் தங்களுடைய பேச்சில் பெரும்பான்மையாக சட்ட மன்ற உறுப்பினர்கள், அவர்களது வசதிகள், வாய்ப்புகள், ஓழுங்கு முறைகள்— இவைகளைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் நான், என்னுடைய பேச்சில் வேறொரு பகுதியில் குறிப்பிடலாமென்று கருதுகிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்கிவைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் யூனியன் கூட்டங்களுக்கு

1973 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

வருகின்ற நேரத்தில், ஊராட்சி மன்றங்களுடைய தலைவர்கள், யூனியன் தலைவர்கள் பெறுகின்ற பயணப்படி மிகக் குறைவாக இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்லும்போது, யூனியன் தலைவர்களுக்கு 100 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிற தென்று சொன்னார்கள். நான் கூட வருத்தப்பட்டேன். பிறகு தான் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அளிப்பதாக விளக்கம் அளித் தார்கள். அப்பொழுது, இவ்வளவு கொடுக்கிறார்களேவென்று ஆச்சரியப்பட்டேன். கொடுத்ததைக் குறைக்கக்கூடாதென்று நானும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் முடிவு எடுத் திருக்கிறோம். (சிரிப்பு.) அந்த முடிவை மகிழ்ச்சியோடு திரு. அய்யணன் அம்பலம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இந்தக் கூட்டங்களுக்குச் செல்கிற நேரத்தில், அவர்களுக்கு ஒரு நாள் படியாக இரண்டு ரூபாய்தான் தரப்படுகிறதென்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அது உள்ளபடியே கொஞ்சம் உயர்த்த வேண்டிய ஒன்றுதான். அவர்கள், அவர்களுக் கென ஒரு 'அசோசியேஷன்' வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லாமல் உயர்த்தி, மறுபடியும் ஒரு போராட்டம் வராமல்—இந்த அரசினுடைய ஜாதகமே நிறைவேற்றினால் போராடுவது என்று இருக்கிற காரணத்தால்—அந்த 'அசோசி யேஷன்'-ஐக் கலந்துகொண்டு, அதைப் பற்றி யோசிக்கலா மென்று கருதியிருக்கிறோம்.

திரு. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் அவர்கள், பூச்சி மருந்து தெளிப்பான கருவிகள், செய்யக்கூடிய விலையிலேயே கிடைப்பதற்கான வசதிகளை அரசு செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தீர்ணை மதிப்பீட்டிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். 20 லட்ச ரூபாய் செலவில், 2,000-க்கும் மேற்பட்ட பூச்சி மருந்து தெளிப்பான்கள் இப்போது வாங்கப் பட்டிருக்கின்றன. 'ஏரியல் ஸ்பிரே' என்பதை நிறுவி, அதன் மூலமாக விவசாயிகள் அதிகப் பயன் பெறுவதும் கஷ்டமாக இருக்கிறது. அதை அவர்கள் உடனடியாகப் பெறுவதும் சிரமமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நாம் தருகின்ற பணத்தை அவர்களிடமிருந்து திரும்பப் பெறுவதும் கஷ்டமாக இருக்கிற தென்பதை எண்ணிப்பார்த்து, அந்தக் கருவிகளை நாமே வாங்கி, ஆங்காங்கு இருக்கிற யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்குக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 27

குறைந்த வாடகைக்கு அவைகளைத் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், அடிக்கடி அவைகளில் பழுது ஏற்படுகிறது என்கின்ற கருத்தையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவைகளைப் பயன்படுத்துகின்றவர்
6 00 களுக்கு நல்ல பயிற்சி அளிப்பதற்காகத்தான் ஏற்பாடுகளை யூனியன்
பி.ப. வாயிலாகச் செய்வதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டு இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மேலும் குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகள் களையப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. காட்டூர் கோபால் 'கேங்க்' கூலிகள் நிரந்தரமாக ஆக்கப்பட்ட நிலையை மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறார்கள். கடந்த ஐந்து, ஆறு நாட்களாக மாத்திரம் நாம் அறிவித்திருப்பவை ஏராளமான மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரத்தக்க காரியங்கள் ஆகும். 'கேங்க்' கூலிகள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நீண்ட நெடு நாட்களாக நம்முடைய நண்பர் திரு. பராங்குசம் அவர்களும் மற்றும் அந்தத் தொழில் சங்கத்திலேயேயுள்ளவர்களும் இந்த அரசுக்கு எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். அதை ஆராய்ந்த பின்னர் ஏறத்தாழ ஆறு ஆயிரத்திற்கு மேற்பட்ட அந்த 'கேங்க்' கூலிகள் இன்றைக்கு நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றார்கள். அது மாத்திரம் அல்ல. நேற்றைய தினம் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள 50 ஆயிரம் ஆலயப் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு, ஊதிய சீரமைப்பு இவைகளைப்பற்றி அறிவித்திருக்கின்றார்கள். திரு. காட்டூர் கோபால் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். 50 ஆயிரம் பேர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 10 ரூபாய் ஊதிய உயர்வு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர் அதைத் தவறுதலாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கருதுகிறேன். 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள ஆலயங்களிலே வேலை பார்க்கின்ற பணியாளர்களுக்குத் தான் அந்த 10 ரூபாய் உயர்வு. ரூ. 50 அவர்கள் ஊதியம் பெறுவார்களானால் அது ரூ. 60 ஆக ஆக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள்கூட 'பார்ட் டைம்' ஆகத்தான் பணியாற்றுகின்றார்கள். அவர்கள் 2, 3 கோயில்களிலே பணியாற்றுவார்களானால், ரூ. 150 ஊதியம் பெறுவார்களானால், இனிமேல் ஒவ்வொரு கோயிலிலும் ரூ. 10 வீதம் மூன்று கோயில்களிலும் சேர்த்து ரூ. 30 அதிக

1973 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

மாகப் பெறுவார்கள். ரூ. 5 லட்சம், ரூ. 15 லட்சம் வரையிலே வருமானமுள்ள ஆலயங்களிலே பணியாற்றுகின்ற அர்ச்சகரை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், அர்ச்சகர், ஓதுவார் இவர்களெல்லாம் ரூ. 170 சம்பளம் பெறுகின்றவர்கள் என்றால், ரூ. 250 சம்பளம் பெறுகின்ற அளவுக்கு வழிவகைகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டு ரூ. 250 லிருந்து ரூ. 350 வரையிலே அவர்கள் ஊதியம் பெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. 50 ஆயிரம் ஆலயப் பணியாளர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் அகமகிழ்ச்சி அடையத்தக்க ஒரு அறிவிப்பு நேற்றையதினம் செய்யப்பட்டிருக்கின்றது.

நம்முடைய அங்கத்தினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி வழக்கம்போல் பஞ்சப்பாட்டுப் பாடப் போவதாகச் சொன்னார்கள். ஏதாவது ஒரு பாட்டுப் பாடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் இன்றைக்கு அப்படிப் பட்ட செய்யுளோ கவிதையோ எதுவும் இல்லாமல், இருக்கின்ற சங்கடங்களையெல்லாம் தொகுத்து, ஊராட்சி மன்றத்தின் தலைவர்கள் எல்லாம் கையெழுத்துப்போட்ட ஒரு நீண்ட அறிக்கையைத் தந்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையை நானும் ஏனைய தொடர்புடைய மற்ற அமைச்சர்களும் கலந்து ஆலோசித்து அதிகாரிகளிடத்திலே அதன் தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று ஆலோசிக்கக் கூடும் என்பதை நிச்சயமாக நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய் கால் லிட்டர், அரை லிட்டர் வாங்குவதற்குக்கூட நெடுந்தொலைவு செல்லவேண்டிய சங்கடங்களை எடுத்துச்சொன்னார்கள். டீஸல் எண்ணெயைப் பெறுவதிலே உள்ள சங்கடங்களையும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மண்ணெண்ணெய் வாங்குவதிலே உள்ள சங்கடங்களை எப்படிப் போக்குவது என்பது பற்றி நானும் உணவு அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் கலந்தாலோசித்து வருகிறோம். அவைகளைப்பற்றி யெல்லாம் உணவு அமைச்சர் அவர்கள் அடுத்த மான்யக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 27

குறிப்பிலே பேசுகின்ற நேரத்தில், தக்க பதில்களை அளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். டீஸல் எண்ணெயைப் பொறுத்த வரையிலேகூட, அண்மையிலே நமது தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றபோது அங்கேயுள்ள மத்திய அமைச்சரைச் சந்தித்தார். வெகு விரைவிலே போதுமான எண்ணெய் இங்கு அனுப்பி வைக்கப்படும் என்ற நல்ல செய்தியைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த எண்ணெய் வர்ணத்திலே சற்று கறுப்பாக இருந்தாலும் அது தரமையானது, நல்ல எண்ணெய் அல்ல என்று கருதிடத் தேவையில்லை, அது பயன் படக்கூடிய எண்ணெய்தான் என்று அவர்கள் கூறி அனுப்பியிருக்கின்றார்கள். விரைவிலே நமக்கு அது கிடைக்குமென்று நம்புகின்றேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசுகின்ற நேரத்திலே உள்ளாட்சித் தொகுதியினுடைய இரட்டை உறுப்பினர் தொகுதிகளையெல்லாம் ஒற்றை உறுப்பினர் தொகுதியாக ஆக்க வேண்டுமென்று கூறினார்கள். அது நல்ல யோசனை. அது நல்ல யோசனை என்று சொல்லுகின்ற அடிப்படையிலே, அது பற்றி ஆராயப்பெற்று விரைவிலே ஒரு நல்ல முடிவினை தேர்தல் அதிகாரிகள் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் அரசின் சார்பில் ஆராயப்பட்டு பரிந்துரை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்வேன். திருமங்கலம் முன்சீப் நீதி மன்றக் கட்டிடத்தை மருத்துவ விடுதிக்குக் கொடுத்துவிடலாம் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். நாங்களும் அதைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கின்றோம். இப்போது திருமங்கலம் மருத்துவ மனையை நாங்களாகவே அனுமதிக்கின்றோம் என்று சொன்னால், ஏதோ தேர்தல் நேரத்திலே விடுத்த அறிவிப்பாக ஆகிவிடுமோ என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

திரு. கே. ராஜாராம்: பத்து ஆண்டுகளாகப் 'பெண்டிங்' ஆக இருந்துகொண்டிருக்கின்றது. போன பொதுத் தேர்தலிலேயே 1970-லேயே, அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த ஊரிலேயே நேரே பார்த்து முடித்ததுதான். பழைய சமாசாரமே தவிர, புதிய சமாசாரம் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆகவே பாதுகாப்போடு நான் அறிவிக்கின்றேன். அங்கு நீதி மன்றத்திற்கென ஒரு

1973 மார்ச் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

தனிக்கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும், திருமங்கலம் நீதி மன்றக் கட்டிடத்தை மருத்துவமனைக்குக் கொடுத்துவிடவும் அரசு தீர்மானித்திருக்கின்றது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கு நல்ல பீடிகையெல்லாம் போட்டுச் சொன்னதற்குக் காரணம் இது பத்து ஆண்டுக்கால மாக இருக்கின்றது. தேர்தல் காரணமாக வந்த அறிவிப்பு அல்ல அது என்று அவர்களே ஒப்புக்கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்ட சபையினுடைய ரிப்போர்ட்டிங் (குறிப்புகள்) இன்னும் செம்மையாக இருக்க வேண்டுமென்று என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி நம்முடைய செயலர்களிடத்தே, பேரவைச் செயலர் அவர்களிடத்திலேயும், மேலவைச் செயலர் அவர்களிடத்திலேயும், நானும், பேரவையினுடைய மூன்னவர் அவர்களும் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றோம். அதற்கு நிரந்தரமான குறிப்பு எழுதுபவர்கள் தேவை என்கின்ற ஒரு குறை பாடும் இருந்து வருகின்றது. அவைகளெல்லாம் விரைவிலே ஒழுங்கு செய்யப்படும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அங்கலாய்த்துக்கொண்டார்கள். திருத்திக்கொடுப்பதற்கே ரொம்ப சிரமமாக இருக்கின்றது என்று அவர்கள் சொன்னார்கள். சில நேரங்களில் வார்த்தைகளேகூட அல்ல, வாக்கியங்களேகூட மாறிவிடுகின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். எதற்கும் விழிப் பாக குறிப்பு எழுதுபவர்கள் இப்போது இருந்துவருகின்றார்கள். மேலும் நல்ல முறையிலே செம்மைப்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையினுடைய கட்டடத்தை மாற்றி விரிவுபடுத்த வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய யோசனை யை ஒத்துக்கொள்வதாக இருந்தால், உங்களுடைய அறை யைத்தான் பாதிக்கும் என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் எற்கெனவே அவர்கள் அந்த அறையோடு நீட்டி இணைத்து விடலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். உங்களிடத்திலே அவர்களுக்கு என்ன கோபமோ தெரியாது. அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கின்றார்கள். உள்ளபடியே மேலவையின் நடவடிக் கைகளைப் பார்ப்பதற்கு பார்வையாளர்கள் மிகவும் விரும்புகின்

ருர்கள். ஆனால் தற்போது 10 அல்லது 15 பேர்களுக்குத்தான் அனுமதிக்கின்ற சூழ்நிலையிருக்கின்றது. அதிலே பத்திரிகை நிருபர்களுக்கும் அமரவேண்டிய சங்கடங்கள் இருக்கின்றன அந்தச் சங்கடத்தினைக் குறைப்பதற்கு இந்த அவையை எப்படி விரிவுபடுத்தலாம்—உறுப்பினர்கள் எண்ணிக்கையை அல்ல—கட்டிட அமைப்பை எப்படி விரிவுபடுத்தலாம் என்பதைப்பற்றி யோசிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டையர் தொழிற்சாலை 18 கோடி ரூபாயிலே வருகிறது. 500 பேர்களுக்குத்தான் வேலை கிடைக்கின்றது என்ற கருத்தைச் சொன்னார்கள். டையர் தொழிற்சாலை இல்லாவிட்டால், டையர் கிடைக்காமல் பல பஸ்கள், அதன் தொடர்பாக ஓடுவதற்கு வழியில்லாமல்—இங்கு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னதைப்போல,—வெளி மாநிலங்களின் டையர்களுக்காகக் காத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே 500 பேர்களுக்குத்தானே இந்த டையர் தொழிற்சாலையால் வேலை கிடைக்கின்றது என்று நிறுத்திவிட முடியாது. டையர் இல்லாவிட்டால் அதனால் ஓடுகின்ற பஸ்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பலருக்கு வேலையில்லாமல் போய்விடும். ஆகவே ஒவ்வொன்றுக்கும் சங்கிலித் தொடர்போல விவரம் இருக்கின்றது என்று எண்ணி, ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்குகின்ற முயற்சிகள் நடைபெறுகின்ற காரணத்தால்தான், 500 பேருக்கு மாத்திரமல்ல, மேலும் நாற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதற்கு நம்மால் இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். அது தொழில் பற்றியதாக இருக்கின்றது. தொழிற்குறிப்பிலே இருக்கின்ற அதைச் சுட்டிக்காட்டினார்கள். நான் அதை விரிவாக ஆராயவில்லை. ஆனாலும் இந்த ஆண்டு இன்னும் ஏழு கோடிக்குமேல் செலவு செய்து படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு நாங்கள் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை மறந்துவிடக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

6-10 பி. ப. சட்டமன்ற விடுதியில் இருக்கின்ற சங்கடங்களைப் பற்றி எல்லாம் பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்

இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், காலையில் பேசிய சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுக்கு இருக்கிற சங்கடங்களையே எடுத்துச் சொன்னார்கள். பேசியவர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவே பேசினார்கள். நான் எதிர்பார்த்தபடி திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் நம்முடைய வசதிகளை மட்டும் பேசிக் கொண்டிராமல், நம்மால் மற்றவர்களுக்கு துன்பம் ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும், நாம் இருக்கும் இடங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும், செம்மையாக நடந்து கொள்ள வேண்டும், மற்றவர்கள் பார்த்துப் பாராட்டத்தக்க வகையில் நம் பண்பாடு இருந்திட வேண்டும் என்ற கருத்தை சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவையில் உள்ளவர்களானாலும் மேலவையில் உள்ளவர்களானாலும், பெறுவது மிகமிக சிலாக்கியமானதாகும். ஆகவே அந்தக் கருத்துக்கு முன்னோடியாக திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நான் வரவேற்கிறேன். அவர்கள் கார் நிறுத்துவதிலிருந்து, அதிகாரம் செய்வதிலிருந்து, அங்கே நடைபெறுகிற பல நிகழ்ச்சிகளை சங்கடத்தோடு எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் அனைவருமே, இப்போது ஹவுஸ் கமிட்டி அவர்கள் தேவைகளை, வசதிகளை ஆராய்வதைப் போல, ஒரு யூனியனாக, கட்சி சார்பற்ற முறையில் இருந்து அவர்களுக்குள்ளாக எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்கிற அறிவுரைகளைச் சொல்லுவார்களேயானால், சட்டமன்ற விடுதியில் நாம் போற்றிக் காப்பாற்ற வேண்டுமென்கிற தூய்மை, இடத் தூய்மை என்பது மட்டுமல்ல, எல்லா வகையிலும் தூய்மை நிச்சயமாகக் காப்பாற்றப்படும். அதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்ற யாராவது முன்நின்று "சட்டமன்ற உறுப்பினர்கள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை அமைக்கலாம். அதில் சம்பளப் போராட்டம் நிச்சயம் வராது என்று கருதுகிறேன். ஏனென்றால் ஜானி பாய் அப்துல் வஹாப் அவர்கள் எங்கள் வசதிகளைக் கேட்பதற்கு இங்கே வரவில்லை, மக்கள் அதிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, ரயில்வே பால் வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போல உறுப்பினர்

களுடைய வசதிகளைக் கேட்பதற்காக அந்தச் சங்கத்தை அமைக்காமல், உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பதற்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சங்கம் பயன்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுவேன். அதுவன்னியில் நானும் பேரவை முன்னவரும் கல்வி அமைச்சருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அந்தக் காரியங்களையெல்லாம் இன்றைக்கு கவனிக்கிறோம் என்றாலும், எங்களுக்கு அப்பாற்பட்டு அங்கிருக்கிற உறுப்பினர்கள் மாத்திரம் அறியத்தக்க நிகழ்ச்சிகள் பல நடைபெறலாம். அதைக் கண்காணிக்க, கட்டுப்படுத்த, ஒழுங்குப்படுத்த நீங்கள் உருவாக்குகிற அமைப்பு பெரிதும் பயன்படும் என்று நான் கருதுகிறேன். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவேன்.

நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அங்கிருக்கிற கட்டிடத்தைத் தனியாக பிரித்து மேலவை உறுப்பினர்கள் கட்டிடம் 'எம்.எல்.சி. ஹாஸ்டல்' என்று ஆக்கிவிட வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே நாம் அவையை இரு பிரிவாக நடத்திக் கொண்டிருக்கிறோம். இரண்டுபேரும் கலந்து இருந்தால்தான், பேரவையில் என்ன நடந்தது என்பதைப்பற்றி மேலவை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளலாம். மேலவையில் நடந்ததைப்பற்றிப் பேரவை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வசதி ஏற்படும். அப்படியில்லாமல் பிரிவினையை இந்த விஷயத்தில் நிச்சயமாக நான் ஆதரிக்கத் தயாராயில்லை. இந்த விஷயத்தில் என்றால், வேறு விஷயங்களில் ஆதரிப்பதாக அர்த்தமில்லை. இந்த விஷயத்தில் ஆதரிக்கத் தயாராயில்லை. ஏனென்றால் மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள் இடையே உலவிடும் நல்லுறவும் நட்பும் இதன் மூலம் தடைப்பட்டுவிடும், விரோதமாகிவிடும் என்பதால் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. ஆதலால், இருவரும் கலந்து பேசக்கூடிய நல்ல வாய்ப்புகளை நாம் இழந்துவிட நேரிடும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

வழக்குகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வீட்டில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறித்து, கொடுக்கப்பட்ட புகாரில் குற்றவாளி

கண்டுபிடிக்கப்படவில்லையென்று ஆறு மாதம் கழித்து அவருக்குத் தகவல் வந்ததாகச் சொன்னார்கள். அதிலிருந்து ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். உடனடியாக குற்றவாளியை கண்டுபிடிக்க முடியவில்லையென்று யாரும் சொல்லவில்லை. ஆறு மாதம் தேடிப் பார்த்து, புலன் விசாரித்து, பல்வேறு சிரமத்தை எடுத்துக் கொண்டு, கிடைக்காத காரணத்தால்தான், கண்டுபிடிக்க முடியவில்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். இதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வித்தியாசமில்லாமல், அரசோ அல்லது காவலர்களோ நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நான் பேரவையில்கூட காவல் துறை மானியத்தில் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டேன். மதுரை மாவட்டத்தில் சின்னவர் பட்டியில் ரமணி என்கிற முன்னேற்றக் கழக நண்பர் ஒருவர் கொல்லப்பட்டார். பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தது. அதைச் சார்ந்தவர்கள் புகார் கொடுத்தார்கள். ஒரு எதிர்க் கட்சிக்காரர் கொன்று விட்டார், அடித்து மிதித்து பலாத்காரமாக வாயில் விஷத்தை ஊற்றிக் கொன்றுவிட்டார் என்று புகார் கொடுத்தார்கள். பயங்கரமாகத்தான் செய்தி இருந்தது. ஆனால், போலீசார் விசாரித்துப் பார்த்து, கழகத்துக்காரன் கொல்லப் பட்டானே, ஆகவே யாரையாவது கைது செய்ய வேண்டுமென்று இல்லாமல், அந்தப் புகாரை மதித்து எதிர்க்கட்சிக்காரர்களை கைது செய்ய வேண்டுமென்ற அவசியமில்லாமல், அவர்கள் நியாயமாக நடந்துகொண்டு, அந்தப் புகார் சரியானதல்லவென்று தள்ளிவிட்டார்கள். ஆளும் கட்சிக்காரர் கொலை செய்யப் பட்டார், ஆகவே ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இல்லாமல் நேர்மையாக உண்மை நிலைமைக்கேற்ப நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தகராறில் கூட்டமாக வந்து கலவரம் செய்த காரணத்தால், புலன் கிடைக்காமல் போயிருக்கலாம் என்பதைத் தவிர, வேண்டுமென்றே திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வீட்டில் நடைபெற்ற தாக்குதலில் சம்பந்தப் பட்டவர்களை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டுமென்று அவர்கள் மீது வழக்குப் போடக்கூடாதீ என்ற குறுகிய மனப் பான்மையில் இது நடந்திருக்க முடியாது என்று கருதுகிறேன். மேலும் அவர்கள் ஏதாவது விவரங்கள் தருவார்களேயானால், அதுபற்றி நிச்சயமாக விசாரிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் உணவுக்கு நல்ல பணியாற்றுகின்றன என்பதை திரு. தங்கப்பாண்டியன் பாராட்டிவிட்டு, அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருப்பதற்கு பதிலாக, எல்லாக் கட்டிடங்களும் சொந்தக் கட்டிடங்களாக வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசுக்கு இருந்தாலும், நிதி ஆதாரங்கள் அடிப்படையில்தான் அவை களைச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன். பட்டாக் கொடுத்தால் மட்டும் போதாது. நீண்ட காலத் தவணையில் வீடு கட்டுவதற்கு கிராம மக்களுக்குப் பணம் தரவேண்டும், அந்தத் தொகையில் ஒரு பகுதி மானிய மாகவும் ஒரு பகுதி கடனுகவும் இருக்க வேண்டுமென்று திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகளெல்லாம் உடனடியாகக் கவலிக்கக்கூடிய காரியம் அல்ல. எப்படி சென்னையிலே குடிசை மாற்று வாரியம் இருக்கிறதோ, அதைப் போல இன்னும் கிராமங்களில் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சென்னை நகரத்திலுள்ள நெருக்கடி., கிராமங்களில் உள்ள நெருக்கடி., இவைகளிலே உள்ள வேறுபாடுகளை நாம் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆகவே கிராமங்களில் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைகள் இன்றைக்கு இடம் தரவில்லை என்பதையும், ஆனாலும் ஏறிஞன மக்களுக்கு இருவையில் வாங்கித் தரப்பட்டிருக்கிற 86 ஆயிரம் வீடுகளில் இந்த ஆண்டு பத்தாயிரம் வீடு கட்டுவதற்கு ஆக ஏற்பாடு செய்து அதற்காக ஒரு தனி வாரியத்தை அமைக்கிறது என்ற அறிவிப்பை நிதிநிலை அறிக்கையில் நான் வெளியிட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே அந்தக் காரியங்கள் நடைபெறும் என்று நான் கூறிக் கொள்வேன்.

நம்முடைய திரு. அப்துல் வகாப் அவர்கள் காலையில் சட்ட மன்றத்தில் கிளப்பிய அதே பிரச்சினையை இன்றும் சொன்னார்கள். அவர்கள் எல்லோருக்கும் ரயில்வே பாஸ் வேண்டுமென்று சொன்னார்கள். 2, 3 மாநிலங்களில் தரப்படுவதாகவும் சொன்னார்கள். இந்தியாவிலே இருக்கிற கிட்டத்தட்ட 17 அல்லது 18-க்கு மேலுள்ள மாநிலங்களில் 2, 3, மாநிலங்களில்தான் அந்த ரயில்வே பாஸ் தரப்படுகிறது. தென் மாநிலத்தில் கேரளாவில்

தரப்படுவதாகச் சொன்னார்கள். அது உண்மைதான். கேரளாவில் இருப்பதைப் போல எல்லாம் இருந்தால் இங்கும் ரயில்வே பாஸ் தரலாம். கேரளாவில் ரூ. 200 தான் மாதத்திற்கு அலவன்ஸ் தருகிறார்கள். கேரளாவில் Travelling Allowance—One First Class Fare plus 12 paise paper mile towards incidental expenses என்று இருக்கிறது. இது எப்படி இருக்கிறது. என்றால், இங்கு மேலவைக்கு வருகிற நேரத்தில் கொடுப்பதைப் போலத்தான், அங்கும் தரப்படுவதாக பேரவை முன்னவர் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆகவே அதை ஒத்துக் கொண்டதும் தவறுகிவிட்டது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஒரு வருவுத்திற்கு, ஒரு குவார்ட்டருக்கு இத்தனை மைலுக்கு ஒரு பாஸ் என்று கொடுத்து விடுகிறார்கள். எங்கு வேண்டுமானாலும் தங்கள் மாநிலத்தில் போய்க்கொள்ளலாம். சட்டசபைக்கு வருவதற்கும் போவதற்கும் மட்டுமல்ல. ஒரு உறுப்பினருக்கு இத்தனை மைலுக்கு என்று நிர்ணயம் பண்ணிக் கொடுக்கிறார்கள். பெங்காலிலும் 'பிரி பாஸ்' கொடுத்திருக்கிறார்கள். இத்தனை மாதம் இத்தனை மைல்கள் என்று கணக்கிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்களுக்குத் தரப் பட்ட தகவலின்படி ரயில்வே பாஸ் தருவதாக இல்லை. அது மட்டுமல்ல. படி கூட கேரளாவில் ரூ. 10 தரப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை அதில் ஆர்வம் இருந்தால், அதையும், திரு. அப்துல் வகாப் அவர்கள் விசாரித்துத் தெரிவிப் பார்களேயானால், நாங்களும் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். இன்றைக்கு காலையில் பேரவையின் முன்னவர் பேரவையில் அறிவித்திருக்கிறார்கள்.. பல கோரிக்கைகள் இப்படி மாண்புமிகு உறுப்பினர்களால் அங்கு எழுப்பப்பட்டு, எதையும் நிறைவேற்றவில்லை என்கிற பழிக்கு ஆளாகக்கூடாது என்று— ஏனென்றால் பலருக்காக வாதாடி அவர்களுக்கெல்லாம் பெற்றுத் தந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒரு கோரிக்கை யைக்கூட நிறைவேற்றுமல் இருப்பது கூடாது என்ற முறையில்— ரூ. 20 ஆக இருந்த படியை ரூ. 25 ஆக ஆக்கியிருக்கிறோம். கை தட்டுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். (கை தட்டல்.) அதுவும் இந்தச் சட்டமன்றத் தொடர் ஆரம்பித்த தேதியிலிருந்து

'செட்டாஸ்பெக்டிவ் எஃபெக்ட்' உடன் தரப்படவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலும் நிதி ஒதுக்கீட்டில் பேச வேண்டிய பல்வேறு விஷயங்கள் இங்கே பேசப்பட்டிருக்கின்றன. தனித்தனியாக எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கும் நான் பதில் சொல்லியிருப்பதாக அறிகிறேன். மேலும் சொல்வதற்கு ஏதாவது விடப்பட்டிருந்தால், அவைகளைப் பற்றியும் நான் பிறகு நிதி ஒதுக்கீட்டிலே ஞாபகப்படுத்தவிருக்கிறேன் என்று எடுத்துக் கூறி, நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவில் அமைகிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

6 20 பி.ப.

உணவுக் கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, "சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'உணவுக் கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு' @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'உணவுக் கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. எம். எம். பக்கர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உணவுக் கொள்கை மீதான விவாதத்தில் சில வார்த்தைகள் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற சில ஆண்டுகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு தமிழகத்தினுடைய உணவுத் துறையில் எப்படிப்பட்ட விரிவான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது

@ 299–317 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

என்பதை புள்ளிவிவரத்திலிருந்து மட்டுமல்ல, மக்களுடைய முகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மலர்ச்சியிலே இருந்தும்கூட தெரிந்து கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்திலேகூட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே சராசரியாக மக்கள் கூட்டம் கடைகளிலே நின்று அரிசி கிடைக்கவில்லை என்று திரும்பிச் செல்கின்ற பரிதாப நிலையெல்லாம் இருந்த காலம் மாற்றப்பட்டு, இன்று தமிழகம் உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்றிருப்பது மட்டுமல்லாமல், ஓரளவுக்கு பிற மாநிலங்களுக்குக்கூட உதவி அளிக்கின்ற ஒரு நிலைக்கு வந்திருப்பதற்காக இந்த அரசையும், உணவுத் துறையையும் நான் முதலில் பாராட்டுகிறேன். உணவு உற்பத்தியிலே தஞ்சை மாவட்டம் தமிழகத்திலே முன்னணியிலே நிற்கின்றது என்று எல்லோருமே பெருமையாகச் சொல்வார்கள். சோழநாடு சோறுடைத்து, என்றெல்லாம் சொல்லி தஞ்சை மாவட்டக்காரர்களைப் பாராட்டுவது தமிழகத்திலே சாதாரணமாக நடந்துவருகிற ஒரு நிகழ்ச்சிதான். ஆனால், தஞ்சை மாவட்டம் உணவுத் துறையிலே சாதித்திருக்கின்ற இந்த நல்ல காரியத்தைப் பாராட்டுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், உணவுத் துறையிலே இவ்வளவு தூரம் பிரத்தை எடுத்துக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குகிற தஞ்சை மாவட்டத்தில் பொதுவாக அரிசி மாத்திரந்தான் 'சீப்'பாகக் கிடைக்கிறதே தவிர, மற்றப் பொருள்களுடைய விலையெல்லாம் தினசரி விஷம்போல் ஏறிக்கொண்டிருப்பதை நாம் எல்லோருமே அங்கே உணர்ந்து வருகின்றோம். உற்பத்தியாகும் அரிசி, நெல் முதலியவற்றுக்கு அதிகமான விலை மத்திய சர்க்காருடைய அனுமதியில்லாமல் தரமுடியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியுமானாலும், அந்த மாவட்டத்திலேயுள்ள கஷ்டத்தை சொல்லாமலிருப்பது என்னால் முடியாது. ஏனென்றால், பொதுவாக நான் சென்ற முறை ஊர் சென்றிருந்தபோது—தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது—என்னுடைய நண்பர்கள் பரிதாபமாகக் கேட்டார்கள். பொதுவாக மாட்டுத் தீவனமாகப் பயன்படும் புண்ணாக்கு ஒரு கிலோ 2¾ ரூபாய் விற்கிறது. ஆனால், மனிதத் தீவனமாகிற அரிசி ஒரு கிலோ 1¼ ரூபாய்க்குக்கூட போகவில்லையே, இப்படி இருக்கும்போது எப்படிக் காலம் கழிப்பது என்றெல்லாம் கேட்டார்கள். உணவுத்துறையிலே, அரிசி நெல்லுக்கு மாத்திரம் விலைவாசிக் கட்டுப்பாடு கொண்டு வந்து, அதைக் கட்டுப்படுத்தி விட்டோம். மக்களுக்கெல்லாம் அரிசி தாராளமாகக் கொடுக்கிறோம் என்பது பெருமைப்படக்கூடிய

[திரு. எம். எம். பக்கர்] [1973 மார்ச் 27

விஷயந்தான். அதே சமயத்திலே உற்பத்திக் குறையிலே வாடி பட்டிருக்கின்ற தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மற்றப் பொருள்கள்—மற்றப் பொருள்கள் என்றால் எல்லாப் பொருள்களும்கூட அல்ல—அத்தியாவசியமான, அன்றாடத் தேவைக்கான பொருள்கள், எண்ணெய், மற்றும் சில தானியங்களெல்லாம் ஓரளவு சுலபமாகக் கிடைப்பதற்கு அரசு தீவிரமாக வழி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஒரு விசித்திரமான திட்டம் போடுவது உண்டு. அறுவடைக்காலங்களிலே கொள்ளிடக்கரையிலே பார்ப்போமானால், கொள்ளிடத்தினுடைய தெற்குக் கரையிலே ஒரு மூட்டை நெல் 30 ரூபாய்க்கு விற்கும். ஆனால் வடக்குக் கரையிலே ஒரு மூட்டை நெல் 40 ரூபாய்க்கு விற்கும். இந்த லாபம் தஞ்சை மாவட்டத்திற்கு இருப்பதில்லை. பொதுவாக அங்கே ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவந்து, சுங்கச் சாவடிகளையும் ஏற்படுத்தி, வெளியே போக வேண்டாம் என்று நெல்லை அங்கே இருத்திக்கொள்வதனாலே இந்த லாபத்தை தஞ்சை விவசாயிகளால் பெற முடிவதில்லை. மற்ற மாவட்டங்களிலே போய்ப் பார்த்தால், பொதுவாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் போய் அங்கே ஒரு மூட்டை நெல் என்ன விலை என்று கேட்டால், 45 ரூபாய்க்குக் குறைவாகக் கிடைக்காது. ஆனால் தஞ்சை மாவட்டத்திலே 32 ரூபாய்க்கு வாங்குவதற்கு ஆள் இருக்காது. இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு தஞ்சை மாவட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பாராட்டுவார்கள். தஞ்சை மாவட்டம் அதிர்ஷ்டம் செய்த மாவட்டம். காரணம், இந்த அமைச்சரவையிலே உள்ள நான்கு முக்கியமான அமைச்சர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நாவலர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், பேராசிரியர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வார்கள். நல்லவேளை, இந்த நான்கு பேரும் இங்கே இல்லை. இந்தப் பெருமை எங்களுக்கு உண்டு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சோழநாடுதான் இன்னும்.

திரு. எம். எம். பக்கர் : இந்த நிலைமையில் தஞ்சை மாவட்டம் பொருளாதாரத் துறையில் சொம்பவும் சீரழிந்து விட்டது

1973 மார்ச் 27] [திரு. எம். எம். பக்கர்]

என்பது எல்லோருக்கும் தெரிகின்ற ஒன்றுதான். 1944-க்கு முன்னாலே தமிழ் மாநிலத்திலே வருமானத்திலேயும் வசதியிலேயும் முதலாவதாக இருந்த தஞ்சை மாவட்டம் 1973-லே கடைக் கோடிக்கு வந்துவிட்டது. ஏனென்றால் மற்ற மாவட்டங்களிலே தொழில் துறைகள் ஏற்பட்டுவிட்டன. தஞ்சை மாவட்டத்திலே தொழில் துறை என்றே இல்லை. நண்பர் திரு. இராமநாதன் விளக்கம் சொல்வார். "எங்கள் மாவட்டத்திலே எத்தனையோ பஞ்சாலைகள் இருக்கின்றன, உங்கள் மாவட்டத்திலே ரைஸ் மில்தான் இருக்கின்றது" என்று சொல்வார்கள். எனவே வேறு தொழில் துறைகள் அங்கே இல்லை. இப்படி இருப்பதற்குக் காரணமே தொழில் துறை வளராததுதான், "சோழநாடு சோறுடைத்து" என்று பாராட்டி எங்களிடமிருந்து உணவு உற்பத்தியை எதிர்பார்க்கின்ற இந்த அரசு, இந்த உணவு உற்பத்தியை மகிழ்ச்சியோடு தருகின்ற எங்களுக்கு மற்ற அன்றாடத் தேவைகளுக்கான சில சாமான்கள் நல்ல முறையிலே கிடைப்பதற்கு வழி செய்தால், அது நன்றாக இருக்கும் என்று நம் அரசுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று, இப்பொழுது திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட இங்கே பேசினார்கள். திரு. தேவராஜ் அர்ஸ், மைசூர் முதலமைச்சர் மிரட்டத் தொடங்கியிருக்கிறார். மறுபடியும் காவிரித் தண்ணீரை, ஹேமாவதி அணைக்கட்டு போன்ற அணைக்கட்டுத் திட்டங்களையெல்லாம் போட்டு, தேக்கிவிடப் போவதாக எல்லாம் பேசுகிறார்கள். மத்திய அரசு இது சம்பந்தமாக ஒரு கமிட்டியைப் போட்டு ஆராய்ந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையிலே இவர்கள் இப்படிப் பேசுவது சரியல்ல என்று சரியான நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஆனால் ஒன்று சொல்வேன். ஆயிரம் ஆண்டுகளாக கரிகாலன் காலத்திலேயிருந்து தஞ்சை மாவட்டத்திலே நடைபெறுகின்ற உணவு உற்பத்திக்கு மூலகாரணமாக இருக்கின்ற காவிரித் தண்ணீரை மற்ற இடத்திற்குத் திருப்புவதற்கோ அல்லது அணை கட்டித் தடுப்பதற்கோ மைசூர் அரசு முயலுமானால், இப்பொழுது வாய் வேதாந்தம் பேசுகிறார்களே, இந்தியாவின் ஒருமைப்பாடு என்று, அது கேலிக் கூத்தாகிவிடும் என்று மைசூர் அரசுக்கு மட்டுமல்ல, மத்திய

[திரு. எம். எம். பக்கர்] [1973 மார்ச் 27

அரசுக்கும் எச்சரிக்கை விடவேண்டியது நம்முடைய கடமை என்று எண்ணுகிறேன். வெறும் வாய் வேதாந்தமாக "ஒருமைப் பாடு, எல்லோரும் சகோதரர்கள்" என்றெல்லாம் பேசப்படுகிறது. சர்வ தேச சட்டத்திலேகூட ஒரு நாட்டுக்கு இன்னொரு நாட்டி லிருந்து போகிற தண்ணீரை அவ்வளவு சுலபமாகத் தடுத்துவிட முடியாது என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையிலே ஒரே நாட்டைச் சேர்ந்த, ஒரு மாநிலத்திலேயிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போகிற தண்ணீரைத் தடுப்பதற்கு அந்த மாநிலம் முயற்சி செய்யுமானால், அது விரோதமான செயல, பாதகமான செயல் என்பதை மைசூர் அரசுக்கும், மத்திய அரசுக்கும் கண்டிப் பாகத் தெரிவிக்க வேண்டியது நம் அரசினுடைய கடமை என்று நான் பணிவன்போடு சொல்லிக் கொள்வதற்கு ஆசைப்படுகிறேன். உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள மாவட்டக்காரர், உணவு உற்பத்தியிலே எங்களுடைய மாவட்டம் நிறைய இன்னும செய்ய வேண்டும் என்று அவர்கள் அனுதினமும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். இருந்தாலும் இன்றைய தினம் நான் கேட்டுக்கொள்வேன், அன்றாடம் தேவைப்படும் சாதாரண சாமான்கள் விலை குறைவதற்கு—அது நம் கையிலே இல்லை என்பதுகூட நன்கு தெரியும். மத்திய அரசின் நடவடிக்கை இல்லை என்றால், அதைச் செய்ய முடியாது என்பது உண்மைதான்.

(மாற்றுத்தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை)

தஞ்சை மாவட்டத்திலுள்ள மக்கள் திரளாகக் கஷ்டப்படுகிற போது இதற்கு இந்த அரசு ஏதாவது வழி வகை செய்ய வேண்டும். இது, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுடைய கடமை என்று கூறி, இந்த விவாதத்திலே பங்கு பெறுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றியைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

6-30 பி.ப.

* திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: மேலவைத் தற்காலிகத் தலைவரவர்களே, அரசின் உணவு தானியக் கொள்கை குறித்துப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழக அரசு பொறுப்பேற்று, ஆறு ஆண்டுகளில்—1965-66-இல் அரிசி உற்பத்தி 35¼ லட்சம் டன்களாக இருந்ததை 1972-73-இல் 55 லட்சம் டன் என்ற அளவுக்கு—20 லட்சம் டன் உற்பத்தியை

1973 மார்ச் 27] [திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]

அதிகரித்ததற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள் கிறேன். நமது அரசு விவசாயிகளுக்குத் தேவையான எல்லா விதமான உதவிகளையும் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி, நடப்பு ஆண்டில் 1 லட்சம் டன் அரிசி மத்திய அரசின் சேமிப் புக்கும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்களை, ஆயிரக்கணக்கான டன் களையும் அனுப்புகின்ற அளவிற்கு, உற்பத்தியைப் பெருக்கியதற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 1970 ஆம் ஆண்டு முதற்கொண்டு அரசாங்கம் பின் பற்றி வருகின்ற உணவுக்கொள்கை—அதாவது தனியார் துறை வாணிபமும் நடைபெற வாய்ப்பளித்து, மூட்டை இருப்பு வைத்துக் கொண்டு மிகக் குறைந்த அளவில் கட்டுப்பாடுகள் விதித்து வருகின்ற உணவுக்கொள்கை வெற்றி பெற்று வருகிறது என்பது கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறையைத் தொடர்ந்து நமது அரசு பின்பற்ற வேண்டு மென்று நான் பணிவன்போடு வேண்டுகிறேன். இப்போதுள்ள நடைமுறையில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. எந்தவிதமான குறைபாடும் இல்லை. ஆகவே, இப்போதுள்ள நடைமுறையே சிறந்ததாக இருக்கிறது. அதையே தொடர்ந்து பின்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

கள்ளக்கடத்தலைத் தடுக்கும்பொருட்டு, எல்லையோர கிராமங் களில் குடும்பக் கார்டு முறையை நீக்கி சட்டபூர்வமான பங்கீட்டு முறையைக் கொண்டு வருவது கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும். இந்தப் பிரச்சினையிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும். தற்போது கோவை நகருக்குக் கொண்டு வரப்படும் அரிசி கோட்டா முறை—பெர்மிட் முறை—வரவேற்கக்கூடியதென்றாலும், கோவை, பல்லடம், அவனாசி தாலுக்காக்கள் முற்றிலும் நெல் விளையாத பகுதிகளாக இருப்பதால்—இந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 20 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்—இவர்களுக்குத் தேவையான அரிசியை முழுமையாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கோட்டா முறையில் கொடுக்கப் படுகிறது என்றாலும்கூட, அங்கே உள்ள தேவையை முழுமை யாகப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு, குறிப்பாக, 16

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [1973 மார்ச் 27

அவுன்ஸ், நபர் ஒன்றுக்கு என்ற அளவிலே மொத்தத் தேவையைக் கணக்கிட்டு, அந்த அளவுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளை இந்த மூன்று தாலுக்காக்களுக்கும் செய்து கொடுத்தால், ஓரளவுக்கு கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு வசதியாக அமையும என்று நான கருதுகிறேன். மேலும், கோவை மாவட்டம் என்றாலே கள்ளக்கடத்தல் மாவட்டம் என்று பொதுவாகப் பேசப்பட்டு வருகின்ற இந்த நேரத்திலே, கோவை மாவட்டத்தில்—முன்பு பாண்டிச்சேரியை பிரெஞ்சுக்காரர்கள் ஆண்ட நேரத்தில் முள் வேலி போட்டது போல—முள் வேலி அமைத்து தலைச்சுமையாக அரிசி கடத்தப்படுவதை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், தற்போதுள்ள நிலைமையில், இப்படிப் பட்ட தலைச் சுமை அரிசிக் கடத்தலைத் தடுப்பது என்பது கொஞ்சம் கஷ்டமாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்த முறையில் அரிசியை எடுத்துப்போக முடியாத அளவுக்கு ஏற்பாடு களைச் செய்து தரவேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

கோதுமைப் பொருட்களான மைதா, ரவை, கோதுமைத் தவிடு ஆகியவற்றின் வினியோகத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் இன்றைய தினம் கடைப்பிடிக்கும் நடைமுறையே மிகச் சிறப்பான தாகவும், எந்த விதமான புகாருமற்ற நிலையில் அமைந்துள்ளது. ஆனால் இந்த கோதுமைப் பொருள்களுடைய பிரச்சினையிலே நான்காண்டு, ஐந்தாண்டுக்கொருமுறை, பற்றாக்குறை ஏற்பட்டு ஒன்றுக்கு இரண்டாக விலை ஏறக்கூடிய சூழ்நிலை அடிக்கடி ஏற் பட்டு வருகிறது. எனவே, கோதுமைப் பொருள்களை தயாரிக்கக் கூடிய ரோலர் பிளவர் மில்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்துவது மிகவும் சிலாக்கியமானதாக இருக்கும். நமது வாணிபக் கழகத்திற்கு எப்படி ரைஸ் மில்கள் சொந்தமாக இருக் கின்றனவோ, அதே போல கோதுமைப் பொருட்களைத் தயாரிக் கும் ரோலர் பிளவர் மில்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு, அந்த கோதுமைப் பொருள்களைத் தயாரிக்குமேயானால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

சர்க்கரை வினியோகத்தைப் பொறுத்தவரை, நமது அரசு சாதாரணமான குக்கிராமங்கள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் ஆங்காங்கே வியாபாரிகளை நியமித்து, சர்க்கரை கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. பெரும்பாலான குக்கிராமங்

1973 மார்ச் 27] [திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]

களில் சர்க்கரை வினியோகிக்கின்ற முறையில் சிறு சிறு தவறுகள் ஆங்காங்கே ஏற்பட்டு விடுகின்றன. பொதுவாக, நகரங்களுக்கும் நகரப் பஞ்சாயத்துகளுக்கும் மட்டுமே சர்க்கரைக் கார்டுகளைக் கொடுத்து, குக்கிராமங்களிலே மொத்தமாக உபயோகிப்பவர் களுக்கு பர்மிட் முறையில் கொடுத்தால், அந்தத் தவறுகள் நடை பெறுமல் தடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, சென்ற ஆண்டு ஜூலை முதல் தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்திலிருந்து, அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற பொருள்களை வழங்குகின்ற முயற்சியினால் மக்களிடையே எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படாமல் சிறப்பாக அமைந் துள்ளது. மேற்கண்ட கழகம் குஜராத் போன்ற மாநிலங்களுக்கு மக்காச் சோளம், கம்பு போன்றவற்றை அனுப்புவதுபோல, மாநி லங்களுக்கிடையே நடைபெறும் எல்லா வியாபாரமும் இதன் மூலமே நடைபெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால், விற்பனை வரி ஏய்ப்புகளைக் கூடத் தவிர்க்க முடியும். முதல் முறையாக, மத்திய சர்க்காரிலே கோதுமை அரிசி, வியாபாரத்தை அரசே மேற்கொள்ள வேண்டுமென சமீபத் தில் முடிவு செய்திருக்கிறார்கள். கோதுமை வியாபாரத்தை இந்த ஆண்டிலேயே மேற்கொள்வது என்றும், அரிசி வியாபாரத்தை அடுத்த ஆண்டு மேற்கொள்வது என்றும் முடிவு செய்திருக்கிறார் கள். இந்த முடிவு வரவேற்கக் கூடியது என்றாலும் கூட, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும், கிட்டத்தட்ட 3 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு வேலைவாய்ப்பு அற்ற நிலைமையை அரசாங்கம் உருவாக்கா மல், அவர்களுக்கும் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் இந்த வியாபாரத்தை ஏற்று நடத்துகின்ற நேரத்தில், இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு அரசாங்கத்திலே வேலை கொடுக்க வேண்டுமானால். சில தருணங்கள் அவர்களுக்கு இருக்காது. அனுபவரீதியாக இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் என்ற முறையில் கல்வி, வயது போன்ற யோக்கியதாம்சங்களை நிர்ணயித்து அவர் களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலைமையை உருவாக்காமல், ஏற்கெனவே மேற்பட்ட அனைவருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [1973 மார்ச் 27

அடுத்து, உணவுப் பொருள் வழங்கு கழகத்தில் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி, தமிழகத்தில் மின்வெட்டின் காரணமாக நூற் பாலைகளில் பஞ்சை வாங்க முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்ப தால், அந்தப் பிரிவுக்கு விவசாயிகளிடையே உள்ள பருத்தியை அரசு மில்களுக்கும் கூட்டுறவு மில்களுக்கும் வாங்கக்கூடிய பொறுப்பைக் கொடுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டு மென்ற என்னுடைய கருத்தைக் கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

திரு. எம். கே. டி. நடராசன்: மாண்புமிகு தலைவரவர்களே,

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): மாண்புமிகு உறுப் பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

6-40 பி.ப.

***திரு. எம். கே. டி. நடராசன்:** உணவுக் கொள்கைக் குறிப்பின் அடிப்படையில் இங்கே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விழைகின்றேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, உணவுப் பகுதியில் மிக அதிகமான முன்னேற்றங்களை நாம் பெற்றிருக்கிறோம்.

குறிப்பாக, உணவு உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகும் முறையில், நல்ல முறையிலே விவசாயத் துறையிலே ஈடுபட்ட காரணத்தினாலே, நல்ல விளைவு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, கரும்பு உற்பத்தியைப் பொறுத்த வரையிலே, நம்முடைய மாநிலத்திற்கும், வடக்கில் உள்ள மாநிலங்களுக்கும் மிக அதிகமான மாறுபாடுகள் இருக்கின்றன. கரும்பு ஒரு எக்கராவிற்கு 15 டன், 16 டன்தான் அங்கே உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய மாநிலத் தைப் பொறுத்த வரையில், ஏக்கருக்கு சராசரி 36 டன் விளைவிக் கின்றார்கள். நமக்குக் கிடைக்கின்ற விலையையும், அவர்களுக்குக் கிடைக்கின்ற விலையையும் பார்க்கின்ற நேரத்தில், ஏறத்தாழ 30, 35 ரூபாய் வித்தியாசம் இருக்கின்றது. வட மாநிலங்களில் ஒரு டன்னுக்கு 125 ரூபாய் கொடுக்கின்றார்கள். நம்முடைய மாநிலத் திலே டன்னுக்கு 90 ரூபாய்தான் கொடுக்கின்றார்கள். கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் ஒரு குவிண்டாலுக்கு 12¼ ரூபாய் கொடுக் கின்றார்கள். மேற்கு உத்திரப் பிரதேசத்தில் ஒரு குவிண்டா லுக்கு 13¼ ரூபாய் கொடுக்கின்றார்கள். வாரணாசி மாவட்டத்தில் கூட்டுறவு ஆலையில் 14 ரூபாய் கொடுக்கின்றார்கள். அரியானாவில்

1973 மார்ச் 27] [திரு. எம். கே. டி. நடராசன்]

12½ ரூபாய் கொடுக்கின்றார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திலே சக்தி ஆலையிலே சிறப்பு ரக கரும்பிற்கு 120 ரூபாய் கொடுக்கிறார் கள். சாதாரண ரகத்திற்கு 97 ரூபாய் கொடுக்கின்றார்கள். ஆனால் வடக்கு மாநிலங்களிலே கரும்பினுடைய சக்துக்களை நாம் பார்த்தால் கிட்டத்தட்ட 6½ சதவிகிதம், 7 சதவிகிதம் அளவிற்குத் தான் அவர்கள் அங்கே சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய கரும் பைப் பயிரிடுகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கிட்டத்தட்ட 9 சத விகிதம், 9¼ சதவிகிதம் சர்க்கரை வரக்கூடிய கரும்பை உற்பத்தி செய்தாலும்கூட, விலைகளைப் பார்க்கின்ற நேரத்தில், ஏறத்தாழ 30 ரூபாய் அளவிற்குக் குறைவாகக் கொடுக்கின்றார்கள். இந்த மாதிரி கரும்புக்குப் பணம் அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்ற நோக்கத்திலேதான் எக்சைஸ் வரியைக் கூடக் குறைத் திருக்கிறார்கள். அப்படிக் குறைத்திருந்தாலுங்கூட அவர்கள் கரும்பிற்கு அதிக விலை தருவதில்லை. ஆனால் அதே நேரத்தில் சர்க்கரையைப் பார்த்தால் 380 ரூபாய் வரையில் விற்கிறார்கள். சர்க்கார் நிர்ணயித்த விலை 133 முதல் 153 ரூபாய் வரை. ஆனால் அவர்கள் விற்கிற விலை 380 ரூபாய். இப்படி ஆலைகளிலிருந்து சர்க்கரையை விற்கிற விலை அவர்களுக்கு அதிகமாக இருந்தாலும் குடியானவர்களுக்கு விலை கொடுக்கின்ற நேரத்திலே குறைத்துக் கொடுக்கிறார்கள். இந்தப் பாகுபாடுகளையெல்லாம் நீக்க சென்ற ஆண்டுகூட அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் நல்ல முறையிலே கூடினார்கள். கரும்பு ஆலையாளர்களையும், அதே நேரத்தில் கரும்பு உற்பத்தியாளர்களையும் இங்கே அழைத்து வைத்துப் பேசி 10, 15 ரூபாயைக் கூட்டி வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அந்த உற்பத்தியாளர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல இந்த ஆண்டும் அவர்களை அழைத்து, விவசாயிகளுக்கு 110 ரூபாய் முதல் 115 ரூபாய் வரையில் கிடைக்கக் கூடிய அளவிற்குச் செய்தால், விவசாயிகள் மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். அதே போல கரும்பு ஆராய்ச்சிக்கு என்று இந்த அரசாங்கத்தின் சார்பில் 5 லட்ச ரூபாயும், அலுவலாளர்களின் சார்பில் 5 லட்ச ரூபாயும் சேர்த்து ஒரு அலோசனைப் பிரிவை ஏற்படுத்தியிருக் கிறார்கள். இந்த அலோசனைப் பிரிவை மிக அதிகமாக சர்க்கரை அலையினைக் கொண்டு வருவதால், நாம் பாகை திரட்டியில் அமைத் துக்கொடுத்தால், மிக நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[திரு. எம். கே. டி. நடராசன்] [1973 மார்ச் 27

அதே போல சர்க்கரை வினியோகத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகளும் பொது மக்களைப் போல சர்க்கரையை வாங்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றி, கரும்பு உற்பத்தி செய்கின்ற வர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த ஆலையிலிருந்து நேரடியாக இந்த அளவிற்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பேரட்டால் நலமாக இருக்கும். சர்க்கரை உற்பத்தியிலே, கரும்பு உற்பத்தி செய்கின்ற எங்களுக்குக் குறைந்த விலை கொடுப்பதை மாற்றி, மிக அதிகமான விலை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்குத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : துணைத் தலைவரவர்களே, உணவுக் கொள்கை மீது பேசுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியை முதன் முதலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் வாழ்கிற தமிழ் மக்களுக்குத் தயாராகச் சாப்பாடு வேண்டுமென்ற காரணத்திற்காக நம்முடைய ஆட்சியாளர்கள் மிக்க முயற்சி எடுத்துக்கொண்டு 4 ஆண்டுக் காலமாக 35 லட்சம் டன்களை இருந்த அரிசி உற்பத்தியை 55 லட்சம் டன்களை அதிகமாக்கிக் காட்டி யிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மூலம் ஏற்படுத்தப் பட்ட இந்த அரசு மக்களுக்குச் சாப்பாடு போட வேண்டுமென்ற எண்ணத்தில் மிகச் சிரமப்பட்டு உணவு உற்பத்தியை அதிகமாக்கி யிருக்கிறது. இந்த எண்ணத்திலேதான் நம்முடைய பெரியவர் களெல்லாம் பாடியிருக்கிறார்கள்.

" கனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் " என்று.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : பாரதியார் அவர்கள் பாடினார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : " இறத்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பறந்து கெடுக உலகியற்றியான் " என்றார் வள்ளுவர் பெருமானார். எனவேதான் நம்முடைய அரசு இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு, நல்ல முறையிலே உணவு எல்லோருக்கும் கிடைக்க வழிவகைகளைச் செய்திருக்கிறது. உணவு இல்லாமல் ஒருவன் இறந்து போகக் கூடிய நிலை ஏற்படுமானால், உலகத்தைப் படைத்த ஆண்டவனேகூட இறந்து போகட்டும் என்றார் வள்ளுவர். இப்படிப் பேரறிஞர்கள் எல்லாம் சொன்ன

1973 மார்ச் 27] [திரு. சி. வி. ராஜகோபால்]

காரணத்தினால், பேரறிஞர் அண்ணா அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பாடுபட்டார்கள் பேரறிஞர்கள் எல்லாம் பாடின கருத்தின் அடிப்படையில் " பார் முழுதும் ஏர் முனையிலே உழவன் பாட்டிலே கொண்டாட்டம் போடுது " என்றார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். இந்த உலகம் ஏர்முனையிலே இருக்கிறது என்று எடுத்துக் காட்டினார்கள். உணவு இல்லாத காரணத்திலேதான் வறுமை ஏற்படுகிறது என்ற கருத்திற்கு ஏற்ப முதன் முதலில் அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக, பசுமைப் புரட்சியிலே அவர்கள் ஈடுபட்டு. இந்த நாட்டில் இருக்கக் கூடியவர்கள் எல்லாம் மூன்று வேளை வயிறாரச் சாப்பிட வேண்டுமென்ற எண்ணத்தோடு விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்தார்கள். பாட்டாளி மக்கள் எவ்வளவுதான் பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கினாலும், மக்கள் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே உற்பத்தியை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று பாடுபட்டார்கள். உற்பத்தி அதிகமானாலும், விலை கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. உணவு இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கிற வகையிலே இருந்தாலும், விலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது.

[மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை]

யூரியா ஒரு மூட்டை 50 ரூபாயென்றால், 70 ரூபாய் கொடுத்து 6 50
விவசாயி வாங்குகிறான். பூச்சி மருந்தும் அப்படித்தான். அதற்குச் பி.ப.
செலவு ஏராளமாகிறது. நான் அதுபற்றி மாண்புமிகு உணவு அமைச்சரவர்களிடத்திலே சொன்னேன். இந்த யூரியாவை கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்கிறார்கள். அதைத் தடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கூறினேன். அவர்கள் அதை மாவட்டக் கலெக்டரிடம் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுத்தார்கள். 2 நாட்கள் பொறுத்து, " கண்டுபிடித்துவிட்டேன் : 50,000 ரூபாய் அளவுக்குக் கண்டு பிடித்துவிட்டேன் ; நன்றி உண்டா " என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். ஆனால், அதிலே இன்னும் சில பேர்கள் சிக்கியிருக்கிறார்கள். அந்த மூலகர்த்தாக்கள் இதிலே காணப்படவில்லையென்று நான் சொன்னேன். ' அது யார் என்று சொல், நான் பிடித்து விடுகிறேன் ' என்று அவர்கள் சொன்னார்கள். தயவுசெய்து, தலைவரவர்களே, ஒன்றைச் சொல்லிக்கொள்ளுகிறேன். யார் யார் கள்ள மார்க்கெட் விற்பனையில் ஈடுபட்டுள்ளார்களோ,

அவர்களெல்லாம் முக்கியஸ்தர்களாக இருக்கிறார்கள். அவர்களே என் பிடிக்கவில்லையென்று கேட்டால், அந்த முக்கியஸ்தர்கள் விஷயத்தில் "பாலிடிக்ஸ்" கூட கலந்திருக்கிறதென்று சொல்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: கலிவரவர்களே, 'பாலிடிக்ஸ்' என்றால் என்னவென்று விளக்கக் கோருகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: திரு. சுவாமிநாதனையும், என்னையும் போன்றவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதுதான் அதன் பொருள். தயவுகூர்ந்து அதற்கெல்லாம் விளக்கம் கேட்க வேண்டாம். அப்படி இருக்கிறதென்ற உண்மையை நான் அறிந்தாலும், ஓடையாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சரவர்களே இவைகளை ஆராய்ந்து அப்படி இருக்குமானால், எதிர்காலத்தில். . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கலிவரவர்களே, உறுப்பினரவர்கள் நன்பு ரகசியமாகச் சொன்னார்கள். பிடித்து விடுவேன். இப்போதும் ரகசியமாகச் சொல்லுகிறேன். தவறு செய்பவர்களைக் கண்டுபிடித்துவிடலாம். அவர் சொல்வது பத்திரிகையில் செய்தியாக வருமானால், தவறு செய்தவர்கள் தப்பித்துக்கொள்ள நேரிடும். தனியாகச் சொன்னால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: இப்போது எல்லா வகையிலும், எல்லா மக்களும் கெரிக்கை கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையில் வருகையான் கெரிக்கைகொள்ள வேண்டுமென்ற துர்பாக்கியமான நிலையில் மக்கள் இல்லை. (சிரிப்பு)

நமது தமிழகத்திற்குத் தேவையான பருப்பு வகைகள் ஏறக்குறைய 4½ டன்களாகும்—4½ லட்சம் டன்களாகும். அதில் நாம் பயிரிடுவது, உற்பத்தி செய்வது 1½ லட்சம் டன்களாகும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலிவர்: கல்யாணத்திற்குத்தான் கேட்கிறீர்களோவென்று பார்த்தேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவைகளை வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். அதிலே நாம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். அரிசி

ஒன்றைத்தான் நாம் மக்களுக்குத் தருகிறோம். மக்கள் பருப்பு வகைகளைப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தமிழ் நாட்டிற்கு 6 லட்சம் டன் எண்ணெய் தேவைப்படுகிறது. அதில் இங்கு கிடைப்பது 2 லட்சம் தான். மேற்கொண்டு நமக்கு 4 லட்சம் டன் அளவுக்கு எண்ணெய் வேண்டும். இங்கு மணிலாக் கொட்டை ஏராளமாகப் பயிராகிறது. இந்த வருஷம் மழை இல்லாததால் கொஞ்சம் குறைந்திருக்கிறது. இப்படி விளைகிற மணிலாக்கொட்டையெல்லாம் எங்கே போகிறதென்று தெரியவில்லை. குஜராத், பம்பாய் போன்ற மாநிலங்களுக்குச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப் போவதை தயவுகூர்ந்து தடுக்க வேண்டும். எண்ணெய் விலை அதிகமாக இருப்பதைக் குறைக்க வேண்டும்.

இப்போது ராட்சஸ மில்கள் என்று ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அதற்கு ஏறக்குறைய 2 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல்லை அரைத்துத் தருவதற்கு செலவு ரூபாய் 6. அரைப்புக்கூலி 6 ரூபாய் ஆகிறது. அதைப் பல இடங்களில் இருக்கிற சின்ன சைஸ் மில்களிலே, அதே 75 கிலோ கொண்ட ஒரு நெல் மூட்டைக்கு அரவைக் கூலி 1½ ரூபாய்தான். இந்த நிலையிலே இடையிலே யிருக்கிற வித்தியாசத்தை தயவுகூர்ந்து பார்க்க வேண்டும். 6 ரூபாய் நாம் அங்கே கொடுக்கிறோம். 2 கோடி ரூபாய் செலவு செய்து ஏற்படுத்திய ராட்சஸ மில்களிலே கொடுக்கிறோம். ஒரு மூட்டை நெல்லை அரைப்பதற்கு 6 ரூபாய் கொடுக்கிறோம். அதைத் தெருக்கு அங்காங்குள்ள சின்ன சைஸ் மில்களிலே 1½ ரூபாய் கொடுக்கிறோம். இடையில் 4½ ரூபாய் ஒரு மூட்டைக்கு விக்கியாசம் வருகிறது. எனவே இந்தமாதிரி சின்னச் சின்ன சைஸ் மில்கள் கிராமங்களிலும், பட்டணங்களிலும் தொடங்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் என்று எங்கும் சொல்லிக்கூடிய இந்தக் காலத்தில், அங்கு 10 பேர்களுக்காவது வேலை கிடைக்குமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, I am glad that this House has been given an opportunity to discuss the policy note on food and civil supplies and in view of the very brief time that is available, I would like to highlight three or four points that I have in mind.

[Thiru A. R. Damodaran] *[1973 மார்ச் 27*

The first is the distribution of sugar and kerosene being undertaken on the basis of family cards in Tamil Nadu and in the distribution of kerosene I have noted that many of the people from the rural parts have surrendered or have given away, in an unauthorised manner, their family cards to certain grocery merchants in their respective villages and those merchants have utilised those cards for selling sugar in the black market or in whatever market that exists in the village as a result of which many people in the village have not been able to purchase kerosene. The long queues which we see in the villages have swollen as in the urban centres. There are a very few villagers who have confessed that they do not have family cards and they are unable to purchase kerosene. Of course, sugar they do not want, but kerosene is an absolutely essential commodity. I would, therefore, request the Hon. the Minister for Food, just as he has recalled many ghost cards in the Madras City.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போதே, ஒரு விஷயத்தைச் சொல்லிவிடலாமென்று நினைக்கிறேன். ஏழை மக்கள், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட குடும்பக் கார்டுகளை, சர்க்கரைக்காகக் கொடுக்கப்பட்ட குடும்பக் கார்டுகளை விற்று விட்டார்கள், அடகு வைத்திருக்கிறார்களென்று சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக மாற்றுக் கார்டுகள் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யலாமென்றால், அது முடியாது. எனென்றால் 'டியூப்ளிகேட் கார்டு' வந்துவிடும். அரசு சார்பில் தெரிவிப்பது என்னவென்றால், எந்த இடத்திலே கொடுக்கிறார்களென்ற விவரத்தை ஏழை, எளிய மக்கள் சொல்வார்களேயானால், அந்தக் கார்டுகளை வாங்கி, உரியவர்களுக்குக் கொடுத்துவிடலாம். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கார்டைக் கொடுத்துள்ள இடத்தைச் சொன்னாலும்கூட அதைப் பெற்றுக் கொடுக்க அரசு ஆவன செய்யும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : விக்ரவண்டி என்ற ஊரில் ஒட்டக்கட்ட 60 கார்டுகளை அடகு வைத்திருப்பதாக என்னிடம் சொன்னார்கள். விக்ரவண்டி என்பது திருக்காட்டுப் பள்ளியில், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. இதைபோல் பல இடங்களில் நடந்திருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இல்லையென்று சொல்லவில்லை. உறுப்பினர்களுக்குத் தெரிந்து தகவல் கொடுத்தாலும் சரி. கார்டுகளை அடகு வைத்துள்ள கிராம மக்களே தகவல் கொடுத்தாலும் சரி. யாராவது அப்படி அடகு வைத்திருக்கிறார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தகவல் கொடுத்தால், அவர்களிடமிருந்து அப்படிப்பட்ட கார்டுகளைக் கைப்பற்றிவிடலாம். அதற்கு உறுப்பினர்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Sir, my intention in mentioning this was not to find fault with the Government. The Government are not responsible, I agree. They have voluntarily surrendered the cards. Both the complainants and the persons against whom they have complained, have been involved in this transaction and, therefore, villagers will not come forward to say. They have voluntarily sold or mortgaged these cards to the merchants. This is the problem that is facing us in the rural areas. Generally speaking, whenever there is scarcity of kerosene, it is the urban area which is thought of in the first instance and even the civil supplies service authorities have taken the view that the urban section, being the most vociferous, should be taken care of first and a person who wants to purchase half a litre of kerosene or one litre of kerosene without a family card is put to great difficulty. This is purely an administrative matter. Instructions may be issued, perhaps warning may be issued by the Government that those who are in possession of so many sugar cards will be guilty of an offence. Some sort of corrective action is necessary. Sir, that was the only reason for which I wanted to mention this. At least 20 to 25 per cent of the rural population in South Arcot District who purchase 1½ or 2 litres of kerosene per month are not able to get that because of the lack of family cards. I hope that something will be done. If it is not possible to issue fresh cards, then some way must be found either by arranging for distribution in those parts through authorised retail dealers without cards if necessary or it may be done under the supervision of village officials and the Panchayat President, if necessary.

Honourable Members have also referred to the terrible shortage in cattle feed and poultry feed that exists in Tamil Nadu at the

present time. When I say this, it may draw the attention of the people in other parts of India, where due to severe drought conditions, even food for human beings is not available. I accept this fact. I do not say that we should reserve maize or other millets that may be available including groundnut cake for cattle feed in Tamil Nadu because there are numerous other products which we are importing into Tamil Nadu. But I would like the Government to investigate what kind of substitute food can be made available in view of the fact that the farmers are unable to purchase ready-made cattle food.

One further point, Sir, that I wanted to mention and which I have stressed in the past is about State Trading and State Civil Supplies Corporation which has been formed. Even in the supplementary demands, a sum of Rs. 50 lakhs has been given as capital to the Civil Supplies Corporation.

MR. CHAIRMAN: Time is extended till the discussion is over.

THIRU A. R. DAMODARAN: I realise, Sir, that all over India, today, there is a climate of opinion which is being built on the hope that the entire distribution of foodgrains and essential commodities and every commodity that is in short supply, will somehow be made available by magic to the people if the State steps in and takes over distribution. In fact, I have a definite feeling that Government have a vested interest in creating shortages in essential commodities whereby this can be taken over from the private trade, and, Sir, hitherto we have been thinking that Government would step into heavy industry or core industry requiring Rs. 50 crores and Rs. 100 crores as capital. If we come to the unfortunate and destitute stage of the Government entering into trading activities, I am positive that nothing has any future in our country. This is a dangerous concept that Government should play a dominant part in trade and business, as has been pointed out by the Food Minister, and I hope he will consistently hold this view although I have no such hopes in view of the extreme pressure that is brought to bear upon him and also because of his fear of departing from the path of socialism if he does not follow the ideology that is being propagated by the Centre, namely, that the entire wholesale trading in grains should be taken over by the State authorities. This is a very dangerous

concept. I am fully in agreement with the view that the weaker sections of society have to be protected and, if necessary, we may have to distribute certain essential commodities at subsidised rates. Here again I would suggest that the only limited control that the State should exercise is in acquiring certain buffer stocks and in having fair price shops and during the period of need or emergency when prices rise above a certain normal level, the Government may step in and release the stock so that it could act as an effective control. Taking over wholesale trade in foodgrains, does not mean only taking over the business of 3,000 or 2,000 wholesalers. You must have a permit system for retailers and once you have the permit system, then all the necessary corruption in the bureaucratic apparatus in the distribution of permits and licences will come in. You have to go a stage further. When the State procures paddy or any other essential commodity, it has to fix a definite price at which its procurement agents, the Government officers, can procure. Sir, therefore, the greatest danger will be the danger to the producers who will not be able to get better price for their produce. As against procurement price of Rs. 54 per quintal for paddy in the villages, the price is about 1/3 above the Government procurement price. What is happening is that whereas the farmer surrenders 15 to 20 per cent of his produce at a slightly lesser rate, he is given an opportunity of selling 75 to 80 per cent of the balance of his produce at a higher price. My feeling, therefore, is that if State trading in paddy, wheat and any other commodity that have been announced is taken over as the responsibility of the State, then the Government will have no other business except to purchase and sell them. Their entire time and resources will be taken up in this way. Only the other day the Finance Minister of the Government of India announced that Rs. 160 crores would be required to trade in 2 million tons of wheat that must be imported into India to cover up the temporary shortage in wheat supply. I shudder to think what amount of resources would be required both by the State Government and by the Central Government in taking over the wholesale trade in foodgrains. It would necessarily mean diversion of resources and although they may say that they have the nationalised banks and L.I.C. resources at hand, I am certain that the diversion of such resources to such an unnecessary facet of the Nation's activity as retail or wholesale trade is totally unnecessary, and I

[Thiru A. R. Damodaran] *[1973 மார்ச் 27*

hope that the State Government will resolutely resolve to stand against this proposal although they may be the only one amongst the 14 who are prepared to stand against, because ultimately the fate of the State Government itself depends on the successful implementation of such a scheme and I do not think, Sir, we have either the expertise or the organisation or even the resources to take up wholesale State trading in grains. I hope, Sir, that this idea will not be countenanced by this Government. Thank you.

7-00 பி.ப. **திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இந்த உணவுத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பினைப் பற்றிய புத்தகத்தில் முதன்முதலிலே கொள்முதல் பற்றி விளக்கியிருக்கின்றார்கள். அந்த முதல் பக்கத்தில், எவ்வளவு முறைகள் இந்த லெவி முறையானது தஞ்சாவூர் மாவட்டத்திலே குறிப்பாகக் கொண்டு வரப்பட்டது, எத்தனை சதவிகிதம் கொண்டுவரப்பட்டது, எத்தனை சதவிகிதம் மாற்றப்பட்டது, சுறுவையின்போது அந்த லெவி மாற்றப்பட்டு மறுபடியும் லெவி கொண்டுவரப்பட்டது என்ற விவரங்களையெல்லாம் போட்டிருக்கின்றார்கள். இதிலிருந்து கொள்முதல் விஷயத்தில் அரசாங்கத்திற்கு ஒரு நிலையான, உறுதியான திட்டம் இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஏதாவது ஒரு நிரந்தரமான திட்டம் இருக்க வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு சம்பாவுக்கு ஒரு லெவி, குறுவைக்கு ஒரு லெவி என்று இருக்கின்றது. ஒரு சமயத்தில் சுறைவாக இருக்கின்றது. நெல் தேக்கமாக இருந்தால், அந்த விலை குறைவாக இருந்தால், அந்த லெவியை எடுப்பது அல்லது விடுப்பது—இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் மாறி மாறி வருகின்றபோது தஞ்சை மாவட்டக்காரர்களில் ஒருவனை என்னைப் போன்றவர்களுக்கும்—அமைச்சர் அவர்களும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான்,—அவர்களுக்கும் தெரியும்—அரசாங்கம் அடுத்த முறை என்ன செய்யப் போகின்றது என்ற நிலைமையிலிருக்கின்றது. அதை எல்லாரும் பார்த்துக் காத்துக் கிடக்க வேண்டியதாக இருக்கின்றது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதுபற்றி நானும் அவரும் தனியாகக் கூடப் பேசியிருக்கின்றோம். லெவி போடுவது அப்போதைக்கப்போது நமக்கு எவ்வளவு

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தேவையுள்ளதோ அவ்வளவு சர்க்கார் கொள்முதல் செய்வதற்காகச் செய்யப்படுவது. கொள்கையில்லை என்பதல்ல. லெவி போடுவதே ஒரு கொள்கை என்று சொல்லிக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த மாதிரி ஒரு நிலைமையைக் கொண்டுவரும்போது, அந்த விலை என்ன நிலைமையிலே வரப் போகிறது என்று தெரியாத, புரியாத நிலைமையிலே தஞ்சை விவசாயிகள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்காக, கொள்கையாகவே அந்த லெவி முறையைக் கொண்டு வந்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இந்தக் கொள்முதல் காரணமாக மிகுந்த துயரத்தை அனுபவிக் கின்றவர்கள் தஞ்சை மாவட்டக்காரர்கள். மற்ற மாவட்டங்களிலே மூட்டைக்கு 15, 20, 25 ரூபாயிலிருந்து 40 வரையிலே விற்றுக் கொண்டிருந்தது. ரூ. 40-க்குக் குறைவாக விற்க வேண்டிய அவசியத்திலே தஞ்சை மாவட்டக்காரர்கள் அப்போதே நஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் தஞ்சையில் அதிகமாக விளைகிறது. விளைகின்ற நெல்லிலிருந்து தான் நாம் நிதி எடுக்க வேண்டும். அதிலிருந்துதான் அரசாங்கத்திற்கு 'பப்பர் ஸ்டாக்' வரவேண்டுமென்ற காரணத்திற்காக லெவி கொண்டுவருகின்றோம். சென்னையிலே உள்ளவர்களுக்குப் படி அரிசித் திட்டத்திற்கும் அல்லது மலிவு விலையிலே சென்னையிலே இருப்பவர்களுக்கும் கோவையிலே இருப்பவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதற்காக, தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்கள் இதுகாறும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தஞ்சை மாவட்டத்தில் லெவி போடுகிறபோது நண்பர் திரு. சுவாமிநாதன் வருத்தப் படுகிறார்கள். இந்தமாதிரிக் குறுவை உற்பத்தியை அரசாங்கம் வாங்கத் தவறிவிட்டாலும், வருத்தப்படுகின்றார்கள். சில நேரங்களில் அரசாங்கம்தான் வாங்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்திலேயிருந்து கோரிக்கை வருகின்றது. ஆனால் தேவை யில்லாத நேரத்தில் அரசாங்கம் வாங்க வேண்டும், வாங்குவதற்கு தேவையான நேரத்தில் அரசாங்கம் வாங்கக்கூடாது என்று சொல்லக்கூடாது.

திரு. [illegible]: தலைவரவர்களே, மாநிலம் ஒரே 'ஸோன்' ஆக இருக்கின்ற காரணத்தினாலேதான் இந்த வம்பெல்லாம் வருகிறது என்று நான் சொல்வேன். இதை மாநில அளவிலே நீங்கள் வைத்திருக்கின்ற காரணத்தினால் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாநிலம் ஒரு 'ஸோன்' ஆக இருக்கின்ற காரணத்தினாலேதான், தமிழ் நாட்டிலே விலையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிகிறது. பொதுவாக தமிழ் நாடு முழுவதும் நாம் பார்க்கும்போது, தமிழ் நாடு முழுவதும் விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது என்று சொன்னால், மாநிலம் முழுவதும் ஒரே 'ஸோன்' ஆக இருப்பதனாலேதான். இல்லை என்று சொன்னால் தமிழ் நாட்டில் விலை ஏறிவிடும். இங்கே இருக்கின்ற மோட்டா அரிசி, விலை குறைவாக இருக்கின்றபோது கேரளத்திற்குப் போகும். ஆந்திராவிலிருந்து விலை அதிகமான அரிசி தமிழ் நாட்டிற்கு வரும். அதனால் விலை ஏறிவிடும். விலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே தயவுசெய்து இந்த யோசனையைச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: கட்டுபடுத்துகின்ற நிலைமைக்காக சில மாவட்டங்கள் பாதிக்கப்படக்கூடாது என்று கூறுகிறேன். இதை ஏன் சொல்கின்றேன்? இதனால் தஞ்சாவூர்க்காரர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கொள்முதல் நிலைமை சீராக இருக்க வேண்டும். எல்லா விலைகளையும் அனுசரித்து இருக்க வேண்டும். அந்த ஸோனுக்கு நிலக்கேசன் வந்தால், உண்மையாக அந்த நெல்லுக்குக் கொடுக்கவேண்டிய விலை என்ன என்பது தெரியும். கொள்முதலைப் பொறுத்தவரையிலே, லெவியை எடுப்பதும் விடுப்பதும் இல்லாமல், வேறு என்ன செய்வது என்று கேட்கின்றார்கள். இப்போது லெவி விதித்திருக்கின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, ஒரு 'பேர் பிரைஸ்' கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையில் விலை இறங்கி விடுகின்றது. இது அரசாங்கத்தினுடைய கட்டுதிட்டத்தால் தான் ஏற்படுகின்றது. இந்த மாநிலத்தை ஒரு அளவாக வைத்திருக்கின்ற காரணத்தால், குறுவை கோளத்துக்குப் போகாத நிலைமையிருக்கின்றது. தஞ்சையிலே குறுவைக்கு விலை இறங்கி விடுகின்றது. அதனால் இந்த 'ஸோனை' அதிகப்படுத்தி, கோளர விற்குச் செல்லுமாறு வைத்தால், குறுவைக்கு இன்னும் அதிக

மான விலை தஞ்சை ஜில்லாவிலருக்குக் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புகள் உண்டாகும். இந்த லெவியின் காரணமாக அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிற பப்பர் ஸ்டாக் கிடைக்கின்றது என்பதை நான் மறுப்பதற்கில்லை. ஆனால் வாங்குகிறபொழுது என்ன விலையிலே தஞ்சாவூர் மாவட்டத்திலே மற்ற மாவட்டங்களிலே விற்கப்படுகிறதோ 'ஓப்பன் மார்க்கட்' டில் எந்த அளவில் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அந்த விலைக்கு அரசாங்கம் வாங்கினால் உண்மையாகவே உற்பத்தியாளருக்குப் பயன்படும். லெவி முறை மூலம் வாங்கினால், ஒரு மூட்டைக்கு ரூ. 7 அல்லது 8 குறைகிறது. அது விவசாயிகளுக்கு இழைக்கும் அநீதி என்பதைத்தான் சொல்லுகிறேன். ஆகவே அரசாங்கம் வாங்கும் போது ஒரு சில லட்சமோ கோடியோ நஷ்டம் கூட வரலாம். 7–10 பிற் பகல்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: லெவி சம்பந்தமாக இரண்டு கொள்கை இருக்கிறது. ஒன்று புரொடியூசர் லெவி, இன்னொன்று டிரேடர் லெவி. ஆந்திரா மாநிலத்தில் இன்னொரு முறை வைத்திருக்கிறார்கள்—மில்லர்ஸ் லெவி; ஹல்லிங் மெஷின் காரர்கள் எவ்வளவு அரைக்கிறார்களோ அதன் மீது லெவி விதிக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அமைச்சர் அவர்கள் பிரச்சினையைக் குழப்புகிறார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் புரொடியூசர் லெவியானாலும் டிரேடர் லெவியானாலும் பாதிக்கப்படுவது புரொடியூசர் தான். அரசு அரசியல் ரீதியாக புரொடியூசரிடமிருந்து வாங்குகிறது. லெவியாக இருந்தால், அவர்கள் தந்தும் பிடித்து வார்கள். மில்லிலிருந்து வாங்கும்போது, அந்த பிரச்சினை ஏற்படாமல் வாங்கிவிடலாம் என்பதைத் தவிர, அதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்பதைப்பற்றி எந்தவித ஆட்சேபணையும் இருக்கக் காரணம் இல்லை. ஆகவே அரசாங்கம் முடிந்தால், குறைந்தபட்சத் தேவைக்கு ஓப்பன் மார்க்கட் விலைக்கு வாங்கலாம். அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை எல்லா மக்களும் பங்கிட்டுக்கொள்ளச் செய்ய வேண்டும். மாநிலத் திலுள்ள அந்த விவசாயிகள் மட்டும் நஷ்டத்திற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்பது சரியான நிலை இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 27

அடுத்தபடியாக, தமிழ் நாடு உணவு வழங்குக் கழகம் ஒன்றை தஞ்சையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போல், மத்திய சர்க்கார் எல்லாத் துறையிலும் அரிசி, மற்ற உணவு தானிய வியாபாரத்தை அரசாங்கமே நடத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால் இந்தப் பொருள்களின் விற்பனையாளர்களுக்குப் பரிந்து பேசவில்லை. அரசாங்கத் துறையில் வாணிபத்தை எடுத்துக்கொண்டால், என்னுடைய கவலையெல்லாம் இதுதான். இப்போது விவசாயி களுக்கு லெவி முறையில், 'புளோர் பிரைஸ்' என்ற முறையில், ஓளவுக்கு விலை கொடுக்கிறார்கள். சில சமயம் மூட்டை விலை ரூ. 29.70. அது ரூ. 34, 37, 40 வரையில் விற்கக்கூடிய வசதிகள் இருந்தன. லெவி மார்க்கெட்டில் அந்த விலைக்குப் போகும் பொழுது, சில சமயங்களில் நெல் உச்ச விலையில் இருந்தபோது அதிகப்படியாக விவசாயிகளுக்கு ரூ. 10 லாபம் கிடைக்கக்கூடிய தாக இருந்தது. நாளை அரசாங்கம் உணவுக் கொள்முதலை எடுத்துக்கொண்டால்,—இப்போதே விலை போதாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்—என்னதான் அரசாங்கம் கொடுத் தாலும், மூட்டைக்கு ரூ. 2 அல்லது 3 கொடுத்தாலும் மூட்டைக்கு ரூ. 8 அல்லது 10 கிடைக்க வாய்ப்பு இருந்தும், அரசாங்கத்தைத் தவிர வேறு யாருக்கும் விவசாயி நெல்லைப் போட முடியாத ஒரு நிர்பாக்கிய நிலைமை ஏற்பட்டால், இன்னும் கஷ்டமான நிலை விவசாயிகளுக்கு ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லுகிறேன். மொத்த வியாபாரிகளுக்காகச் சொல்லவில்லை. விவசாயிகளின் சார்பாக இந்தக் கருத்தைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. மல்லூ ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, பின்னடிச் சொல்லுவார்கள் என்று காத்துக் கொண்டிருந்தேன். இந்தக் குறுவை நெல்லுக்கு அரசாங்கம் நெல் கொள்முதல் ஆரம்பித்த பிறகு தான், விலை ஏறவில்லை என்று சொன்னார். 100க்கு 90 விவசாயிகள் குறுவை நெல்லை அதிகமாக விற்றதே கிடையாது. ஆயிரம் ஏக்கர், ஐநூறு ஏக்கர் வைத்திருக்கிற பெரிய மிராசுதார்கள் வேண்டுமானால் பணமுடை இல்லாமல் விற்றிருக்கிறார்களே தவிர, சர்க்கார் கொள்முதல் செய்யும் காலத்துக்கு முன்னடி வரையில் அதை விற்றது கிடையாது. குறுவை அறுவடையானவுடன், மழை பெய்யும்.

1973 மார்ச் 27] [திரு. மல்லூ ப. நாராயணசாமி]

இந்த ஆண்டு இவ்வளவு கட்டு திட்டம் இருந்தும் கூட, இரண்டு நாளைக்கு முன்பு சப்ளை எஸ்.டி.சி. கொள்முதலில் தாமதம் ஏற்பட்டது. இரண்டு நாளில் மூட்டை விலையைக் குறைத்து விடுகிறார்கள். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் சொல்லு கிறேன். இதற்கு முன்பு ஆறுகிறபோது தை மாதமானாலும் சரி, கார்த்திகை மாதமானாலும் சரி, மூட்டைக்கு ரூ. 5 அல்லது 10 அளவில் வியாபாரிகள் கொள்முதல் செய்திருக்கிறார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது போல், அவர் விற்றுப் பார்த்திருக்கலாம். எனக்குத் தெரியாது—எல்லா மக்களுக்கும் இன்றைக்கு சர்க்கார் கொள்முதல் வந்த பிறகு. குறுவை நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்கிறது. விலை குறையாமல் பாதுகாத்துக்கொள்ளுகிறோம். இப்போது தெரியும். அன்றைக்கு சீர்காழி பகுதியில் ஒரு விவரம் சொன்னார்கள். வேண்டுமென்றால் டி.ஆர்.ஓவைக் கேட்கலாம். இரண்டு நாட்கள் திடீரென்று கொள் முதல் செய்யும்போது, யாரோ ஒரு வியாபாரி ஒரு மூட்டைக்கு ரூ. 5 கூடக் கொடுக்கிறேன் என்று கொள்முதல் செய்திருக்கிறார். வசதி படைத்தவர்கள் குறுவை நெல்லை அப்படியே அமுக்கி வைத்தார்கள். 132 இடங்களில் கொள்முதல் பண்ணிக்கொண்டி ருந்தோம். அதிகாரிகள் கேட்கும்போது கொடுக்க முடியாது, ரூ. 3 அதிகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சுற்றி வளைத்துக் கொள்முதல் செய்த பிறகு, நெல் தேங்கிவிட்டது. திரு. சுவாமிநாதன் அவர்களிடம் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் வருகிறபோது கேட்டால், ரூ. 5 மூட்டைக்குக் கேட்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வியாபாரி களிடம் விட்ட பொழுது, அங்கே இருக்கிற ஏழை விவசாயிகள் குறுவையில், மழை காலத்தில், விற்றுப் பார்த்ததே கிடையாது. 1967-ல் இந்த சர்க்கார் வந்து கொள்முதல் ஆரம்பித்த பிறகு, நல்ல விலையை பார்த்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'புளோர் பிரைஸ்' முறை வேறு. அதிகப்படியாக வரக்கூடிய லாபம் வேறு. ஒரு மூட்டை குறைந்த விலையில் தஞ்சாவூரில் விற்றுக் கொண்டிருந்தது. நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் அடிப்படையான விலை விவசாயி களுக்கு வேண்டுமென்ற நிலைமையில் தான் அடிப்படை விலையை நிர்ணயம் செய்கிறோம். ஒரு சமயத்தில் வெளியில் வியாபாரி ஒரு மூட்டைக்கு ரூ. 3, 4 அல்லது 5 அதிகப்படியாகக் கொடுக் கிறோம் என்று சொன்னால், ஒரு விவசாயி என்ற முறையில்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 27

அமைச்சர் அவர்கள் கையில் மூட்டைகள் இருந்தாலும், ரூ. 3 அல்லது 4 மேலே வருகிறது என்ற நிலைமையில் அங்கே போடுவார்களே தவிர அரசாங்க விலைக்குப் போடவேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் வராது. ஏனென்றால் அதிக விலை வருகிற போது அதை விரும்புவது தான் யாருக்கும் இயல்பாக இருக்கும். ஆனால் நுகர்வையைப் பொறுத்த வரையில், அதிகாரிகளோ விசாரிக்கிறபோது, எங்களிடத்தில் மூட்டைகள் இருக்கின்றன. இன்னும் 1 மாதம், 2 மாதம் வைத்துக்கொண்டு வரத் இருக்கிறது. இன்னும் ரூ. 3 அல்லது 4 அதிகமாகக் கிடைக்கும்", என்று சொன்னார்கள். அதே சமயத்தில் பல இடங்களில் பரவலாக மூட்டைகள் இருக்கின்றன, ஆனால் அவர்கள் விற்க முடியாது இருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். என்னிடத்தில் அவர் சொல்லுகிறபோது, "அமைச்சரிடத்தில் இந்தக் கருத்து எட்டுகிறதோ இல்லையோ. என்னிடத்தில் கேட்டுவிட்டு நான் மூட்டைகளைப் போடவில்லை என்று சொன்னவுடன் எல்லோரும் போடவில்லை என்ற கருத்தைச் சொன்னாலும் சொல்வார்கள்" என்ற கருத்தைச் சொன்னார்கள். அதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்களென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அதிக விலை வேண்டுமென்று சொல்லுகிறபோது, உணவுத் துறை வியாபாரிகளிடம் இருந்தால், விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வசதியிருக்கிறது. அந்த நிலைமை இனிமேல் வராதோ என்ற பயம் விவசாயிகளுக்கு ஏற்படும். ஏனென்றால் இன்றைய தினம் ரூ. 29½க்கு பதில் ரூ. 31 கொடுத்தாலும்கூட மேற்கொண்டு விலை ஏறக்கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் வாணிபத்தை எடுத்தால், அதனால் சரிவர நடைபெறுத நிலைமை ஏற்படக்கூடும் என்ற பயம் எல்லோருக்கும் இருக்கிறது.

அடுத்தபடியாக, நண்பர் திரு. எஸ். ஏ. சாஜுமாணிக்கம் ஓரளவுக்கு இதைத் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு அரசு ஆணையின் மூலம் மொத்த வியாபாரிகள் இவ்வளவு ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாக என்னிடத்தில் தெரிவித்தார்கள். அதன் காரணம் என்ன என்று பார்க்கிறபோது, அண்மையில் கேரளாவுக்குக் கடத்தல் செய்கிறார்கள் என்பதற்காக, இம்மாதிரி முறை கொண்டுவந்தால் கடத்தலாகப் போகாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிக் கடத்தலாகப்

1973 மார்ச் 27] [திரு. ஜி. சுவாமிநாதன்]

போகாமலிருப்பதற்காகக் கொண்டு வந்த திட்டத்தின் காரணமாக, மூட்டை ரூ. 13 லிருந்து ரூ. 25 வரை விலை ஏறிவிட்டதாக கோவை நகரத்திலிருந்து, அந்தப் பகுதியிலிருந்து வந்தவர்கள் சொல்லுகிறார்கள் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடத்தல் கூடாது என்பதற்காக அங்கிருக்கிற மக்கள் எல்லாம் அகலிலேக்கு வாங்கவேண்டுமென்ற நிலைமையை அமைச்சர் அவர்கள் உருவாக்கக்கூடாது. அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதை மக்களுடைய சார்பாக இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்த பட்ஜெட்டின் மீது பேசும்போது சொன்னேன். மலிவு விலை அரிசித் திட்டம் என்பது சென்னைக்கும் கோவைக்கும் என்று நம்முடைய அரசாங்கம் எற்பாடு செய்திருந்தது. இன்றைய நிலைமை காட்டிலே மக்கள் விலைவாசியின் உயர்வால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிற நிலைமையில், மற்ற மாவட்டக் தலைநகரங்களிலும் தாலுகாவுக்கு இந்த மலிவு அரிசித் திட்டத்தை கொண்டுவர வேண்டு மென்று நான் அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக ரேஷனிலே அரிசி கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன்.

கடைசியாக, ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். சர்க்கரை கார்டைக் கொண்டு சர்க்கரை கொடுக்கிற அளவை குறைத்து, மண்ணெண்ணெய் கொடுப்பது என்பது, சர்க்கரை கார்டு கொடுக்கிறபோது வருமானத்திற்குத் தகுந்தவாறு கார்டு கொடுக்கிறார்கள். சாதாரணமாக எளிய மக்களுக்கு சர்க்கரை அவ்வளவு தேவையில்லை என்ற நிலையில் அவர்களுக்கு ஒரு கிலோவும் ஒரளவு உள்ளவர்களுக்கு 6 கிலோவும் கொடுத்துவருகிறார்கள். இந்த மண்ணெண்ணெய் கொடுப்பதை அந்த சர்க்கரை கார்டு அடிப்படையில் என்று இருக்கிற காரணத்தால், ஒரு கிலோ சர்க்கரை கார்டு உள்ளவருக்கு இவ்வளவு மண்ணெண்ணெய், 6 கிலோ சர்க்கரை கார்டு உள்ளவருக்கு இவ்வளவு மண்ணெண்ணெய் என்று வைத்தால் சரியாக இருக்காது. எளியவராக இருப்பவர்களுக்கு மண்ணெண்ணெய் அதிகமாகச் செல்லவேண்டும். ஆகவே சர்க்கரையையும் மண்ணெண்ணெய்யையும் சேர்த்து இணைத்து ஒரு கார்டு கொடுக்கக்கூடிய நிலைமையை மாற்ற வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 27

முடிவாக நான் சொல்ல வேண்டியது இந்த சர்க்கரையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ ரூ. 2.15க்கு விற்கிறோம் என்று சொன்னாலும்கூட ரூ. 4 வரை விற்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் இந்தச் சமயத்தில் பார்க்கிறோம். பல இடங்களில் சர்க்கரை ரேஷன் கடைகள் கிராம அலுவலர்களுக்கும் அங்கே இருக்கிற கூட்டுறவு யூனியன்களுக்கும் கொடுக்கப்பட்டு, வட ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில், அந்த மூட்டைகள் மலைகளுக்குப் போய்ச் சேராத நிலைமையில் விற்கப்பட்டு, பல கம்ப்ளெய்ண்டுகள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அந்த மாதிரி முறைகளை மாற்றி மக்களுக்கு நல்ல முறையில் சர்க்கரை கிடைக்கக்கூடிய வசதியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு வாழ்நாம் கார்ப்பரேஷனைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். உணவுத் தானியத்தை அரசு எடுத்துக் கொண்டால் பல கோடி ரூபாய் மாநில அரசு அதில் போட வேண்டியிருக்கும்.

7.30 பி.ப. இந்த உணவுத் துறையில் வியாபாரம் செய்வதற்காக 'புட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா' வேண்டிய அளவு பணத்தை மூட்டை கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடு அரசாங்கத்திற்கு எவ்வளவு உபரி வேண்டுமோ அதையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அவர்களை வைத்தே வாங்கச் சொல்லி இந்த அரசாங்கத்திற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை போக, நீங்களாக ஒரு வர்த்தகக் கார்ப்பரேஷனை ஆரம்பிப்பீர்களானால், அதற்கு கோடிக்கணக்கான பணம் தேவைப்படும். அது மாநில அரசுக்கு இருக்கிறதா? இது மாதிரி போட்டியிலே இறங்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கருத்தூன்றி கவனிக்கும்படி கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவுப் பொருள்கள் சம்பந்தமாக சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். பொதுவாக உணவுப் பொருள்களுடைய விலைகள், குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்களாக இருப்பவைகளின் விலைகள், மனிதனுடைய வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட நிலைமைக்கு உயர்ந்துகொண்டு போய்க்கொண்டிருக்கின்றன.

1973 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

அவசியத்தை முன்னிட்டு, சாமான் கிடைக்கவில்லை என்ற நிலைமையில் ஒரு நாளைக்கு ஏதாவது ஒரு பொருளின் விலை ஏறி விட்டால், மறுநாள் அந்தச் சாக்கு எராளமாகக் கிடைத்தாலும் கூட, விலை குறைவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்பே புரியவில்லை. இந்த விலைகளைக் குறைப்பதற்கு நமது மாநில அரசு மட்டும் நடவடிக்கை எடுப்பதனால் முடிவதில்லை என்று சொல்வதை, ஓரளவில் வேண்டுமானால் நாம் ஒப்புக்கொள்ளலாம். மத்திய அரசு மற்ற மாநிலங்களிலிருந்து சரக்குப் போக்குவரத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் பெற்றிருக்கிறது, ஆகையினால் நாமே அதைச் செய்துவிட முடியாது என்று சொல்வதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் சில சாமான்கள், சில விஷயங்களில் நாமே கட்டுப்படுத்தக்கூடிய அளவில் இருக்கக் கூடியதை அரசாங்கம் கவனிக்காமல் இருப்பது நல்லதல்ல. மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டம் அளவுக்கு மீறிப் போய்க் கொண்டே இருக்கிறது. சில பொருள்களின் விலை வாங்கும் சக்திக்கு மேல் அதிகமாகிக்கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்காக உணவுக் கொள்கை சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த அறிக்கையில் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கமே கடைகளை வைத்து அத்தியாவசியப் பண்டங்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கத் தகுந்த ஒரு விஷயந்தான். இதிலே இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் பழைய அனுபவத்தையும், இதற்கு முந்திய அரசாங்கம்--காங்கிரஸ் அரசாங்கம்--இருந்த காலத்திலிருந்த அனுபவத்தையும் எடுத்துக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகவும் உஷாராக நாம் நடக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக, யோக்கியப் பொறுப்புள்ள நபர்கள், மேலேயிருந்து கீழே வரை இருந்தாலொழிய, இது சரிவர நடைபெறுவதில்லை. மதுரையிலே பூமிதிக்கணக்கான மூட்டை கோதுமை, அரிசி, இவைகளுக்கு வியாபாரிகள் (Chalan) சலான் கட்டுவதாகப் பொய்ச் சலானைக் கொண்டுவந்து காட்டி சரக்குகளை எற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அந்தக் கேஸ் நடந்து கண்டிக்கப்பட்டிருக்கிறது. விடவில்லை. அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்து கண்டித்துவிட்டார்கள். சர்க்காருடைய கோடவுனில் இருக்கும் மூட்டைகளை எடுத்துக் கொண்டு போவதற்கு வண்டிகள். லாரிகள் வந்து, ஏற்றிக்

[1973 மார்ச் 27

திரு. கே. ராஜாராம்: முதலில் இருக்கட்டும். நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே. அதை நான் மீண்டும் சொல்ல வேண்டுமா?

அடுத்தபடியாக, சர்க்கரை விநியோகம் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலேகூட அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற அளவு—6 கிலோகிராம்—மாதா மாதம் கிடைப்பதில்லை. 5 கிலோகிராம் கொடுத்துவிட்டு, இந்த மாதம் இவ்வளவுதான் வந்தது என்று சொல்லிவிடுகிறார்கள். இது வேறு யாரும் சொல்வதில்லை. செக்ரடேரியட்டிலே வேலை செய்கிற குமாஸ்தாக்களே என்னிடம் வந்து இந்தக் குறையைச் சொல்கிறார்கள், மாதம் 5 கிலோவிற்கு மேல் இல்லை என்று சொல்லி விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே சொன்ன 6 கிலோவாவது கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள்.

அடுத்தபடியாக, கொசின் கண்டிப்பாக கிராமங்களில் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். எனென்றால் பல கிராமங் களில் தெருவிளக்குகள்தான் இருக்கின்றனவே தவிர, வீடுகளுக்கு விளக்கு இல்லை. நகரங்களில் எல்லா வீடுகளுக்கும் 'கூப்' கொடுத் திருக்கிறோம். கிராமங்களில் கொசின் இல்லையென்றால், அவர் களால் தாங்க முடியாது. ஆகவே அவசியமாக கிராமங்களில் தாராளமாக கொசின் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பருப்பு வியாபாரம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய மாகாணம் போன்ற பிற மாகாணங் களிலேயிருந்து பருப்பு தருவிப்பது பற்றிச் சொன்னார்கள். இதிலும் நான் சிறு எச்சரிக்கையிட கடமைப்பட்டிருக்கிறேன். துவரம் பருப்பிலே கலர் ஏற்றுகிறார்கள்.

7-30 பி.பி

கேசரி பவுடர் கலரை ஏற்றுகிறார்கள். மஞ்சள் கலரில் 'லெட்' ஈயத்தைக் கலந்து செய்யப்பட்டதால்—பத்திரிகையில் கூட செய்தி வந்தது—பலர் விஷ உணவை உட்கொண்டு வைத்தியம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது, என்று. அதற்குக் காரணம் இருந்தப் பருப்புதான். ஆகவே, கொள்முதல் செய்யும் பருப்பில் கலர் ஏற்றிய பருப்பைத் தருவிக்க வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

27 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

இப்போது அரிசி மைடையிலே வியாபாரம் நடப்பதால் அமோனியம் போன்ற பல உப்புகளை அதிலே கலக்கிறார்கள், கனத்தை அதிகரிப்பதற்காக. இதிலும் அரசு கொள்முதல் செய்யும்போது கலப்படம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அமைச்சரவர்களுக்கு, பொதுவாக இந்த வருஷம் கஷ்டம் ஏற்படவில்லை. இனிமேல், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கஷ்டம் வராமலிருந்தால் நல்லதுதான். கொள்முதல் செய்யும்போது அதிகமாக சிரமப் படுத்தாமல், சில பகுதிகளைப் பிரித்து வைத்து, லெவி கொள் முதலை வசூலிக்கலாம். இந்த முறை சிரமத்தைக் கொடுக்காது. யார்டம் இருக்கிறதோ அவர்களிடம்தான் வாங்கவேண்டும். கொள்முதல் பண்ணி வெளியிலே கொண்டுபோகிற சாக்குகளுக்கு மட்டும் லெவி என்று வைத்துவிட்டால், விலை தானாக உயர்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், 160 மூட்டையில் 15 மூட்டையை அரசு குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து விட்டால், அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட மீதமுள்ள 85 மூட்டைக்கு அதிகமாக விலை வைத்து விற்கிறார்கள். ஆகவே, அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறது. குறைவதாகத் தெரிய வில்லை. அரசாங்கம், உணவுப் பஞ்சம் ஏற்பட்டு விடாமல் பாதுகாப்பதற்காகத்தான் லெவி கொள்முதல் நடத்தி இருப்பு வைத்திருக்கிறார்கள். புதிதாக ஒரு வார்த்தை— 'முடை' என்ற வார்த்தையைப் பார்க்கிறேன். அதனுடைய பொருள், "மொத்த ஸ்டாக்" என்று நினைக்கிறேன். பெரிய அளவு ஸ்டாக் செய்வதற்கு முடை இருப்பு என்று போட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ஸ்டாக் செய்வதில் தனிப்பட்ட வியாபாரிகள் அடிக்கடி குத்தாசி போட்டு எடுத்துப் பார்த்து, கெடாமலிருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பத்து ஆண்டு களுக்கு முன்னால் எற்பாட்ட ஒரு அனுபவத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆயிரக்கணக்கான மூட்டை அரிசியை குப்பை யிலே கொட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டது. "மக்கிப் போய் விட்டது—மனித உபயோகத்திற்குக் குறுகி ஆற்றுப்போய்விட்டது அந்தக் கெட்டுப்போன அரிசியின் மாதிரியை இங்கே கொண்டு வந்து 163-64-வது ஆண்டு டாக்டர் மானே அவர்கள் இந்தப் பகுதியில் எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்த போது,

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 27

காண்பித்தார். எவ்வளவு பயங்கரமான நிலைமையில் அது கெட்டுப் போயிற்று என்பதைப் பார்த்தோம். ஆகவே, சர்க்கார் வாங்கி ஸ்டாக் வைக்கும் அரிசியை ஒவ்வொரு மூட்டையையும் 15 நாட்களுக்கு ஒரு முறை சரி பார்த்துவிட வேண்டும். கெட்டுப் போயிற்று என்று பார்க்க வேண்டும். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இதை அமைச்சரோ, செக்ரடரியோ, அல்லது இலாக்கா டைரக்டரோ போய்ப் பார்த்துவிட முடியாது. ஸ்டாக் இருக்கிற அரிசி கெட்டுப் போயிற்று என்று ஒவ்வொரு மாதமும் பரிசீலனை செய்வதற்காக தனியாக இன்ஸ்பெக்டர்களைப் போட வேண்டும். கெட்டுப்போன அரிசியைக்கூட விற்றுவிட வேண்டும் என்று தான் மனிதனின் இயற்கை சுபாவம் விரும்பும். கழிவுப் பொருளாகக் கழித்துவிட மனம் வராது. ஆகையால், இன்ஸ்பெக்டர்களை நியமித்து, அதிக ஸ்டாக் இருக்கிறபோது பரிசீலனை பண்ண வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உணவு மானியம் மிக முக்கியமானது என்றாலும்கூட, உறுப்பினர்கள் அதிகம் பேர்கள் சென்றுவிட்டார்கள். அமைச்சர்களிலே கூட நான் ஒருவன் தான் இருக்கிறேன். ஆகவே, உணவுத் துறை கொஞ்சம் கஷ்டமான துறையாக இருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

(குறுக்கீடு)

உறுப்பினர்கள் எல்லாம் கூடியவரையிலும் என்னுடைய உணவுத் துறைக்கு எந்த அளவுக்கு ஆதரவாகப் பேச வேண்டுமோ அந்த அளவுக்குச் சிறப்பாகப் பேசியிருக்கிறார்கள். அதிலேயும் குறிப்பாக, நம்முடைய மேலவையைப் பொறுத்தவரையிலும், மேல் சபையிலிருந்து அமைச்சரானவர் என்ற முறையிலே நமது உறுப்பினர்கள் எல்லாம் எனக்கு எந்த அளவுக்கு போசனைகளையெல்லாம் கூறி இந்த உணவுத் துறையை சிறப்பிக்க வேண்டுமோ, அந்த ஆற்றலை எல்லாம் எனக்குத் தந்தமைக்கு உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஏதாவது ஒருசில குறைகள் இருந்தாலும் கூட, மீண்டும் மீண்டும் உங்கள் யோசனைகளைக் கேட்டு நான் செயல்படுவேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

ஒவ்வொரு உறுப்பினரும் தம்முடைய எண்ணங்களையெல்லாம் எந்த அளவுக்குச் சொல்ல முடியுமோ, அந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக 10 நாட்களாக நம்முடைய பத்திரிகைகளைப் பார்த்தபோது, நம் உணவு மானியம் விவாதத்திற்கு வருகின்றபோது, மத்திய அரசின் முடிவைப்பற்றி திரு. காமோதரன் அவர்களும் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் அவர்களும் மிகவும் காரசாரமாகப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் காரமாக வார்த்தைகளை உபயோகிக்காவிட்டாலும் எந்த அளவுக்கு என்னைப் பயமுறுத்த வேண்டுமோ, எந்த அளவுக்கு இனி செய்ய வேண்டுமோ, அதைச் செய்திருக்கிறார்கள். தனியார் துறையில் செய்யப்படுகிற காரியம் எவ்வளவு சிறப்புடையது என்றும், அதே நேரத்திலே பொதுத் துறையிலே வருகின்றபோது, பொத்தக் கொள்முதலை சர்க்கார் எடுத்துக்கொண்டால், எதிர்காலத்தில் என்னென்ன சங்கடங்கள் எல்லாம் வரும் என்பதையும் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இராச மாணிக்கம் முன்னதாகப் பேசியதை வைத்துக்கொண்டு, அதை ஆமோதிக்கின்ற விதத்திலே, பேசியிருக்கிறார்கள். உள்ளபடியே, இதிலே கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. நானும் தெரிந்திருக்கிறேன். இருந்தாலும் எப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று நீங்கள் எல்லாம் தயவு செய்து மீண்டும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரிசி ஒன்றுக்கு மட்டும் தமிழ்நாடு தனி மண்டலமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று திரு. சுவாமிநாதன் சொன்னார். மற்றவைகள் எல்லாம் சர்க்காருடைய கட்டுப்பாட்டில் இல்லை. அரிசி, ஜீனி ஆகிய இரண்டும் கூடியவரையில் மத்திய சர்க்காருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன. ஜீனியைப் பொறுத்தவரையில், நாங்கள் இங்கே செயல்படுகிறோம். அரிசியைப் பொறுத்தவரையில், தனி மண்டலமாக ஆக்கிச் செயல் படுகிறோம். என்ன இருந்தாலும் திரு. சுவாமிநாதன் தன்னுடைய முழுப் பேச்சிலும் அரிசி விலை ஏறவில்லை, அரிசி விலை ஏறவில்லை அரிசி விலை ஏறவில்லை என்ற ஒன்றையேதான் பேசி வந்தார். இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரிசிக்காக தனி மண்டலமாக ஆக்கியிருப்பதால், ஆண்டொன்றிற்கு 1 லட்சத்து 10 ஆயிரம் என்ற அளவுக்குக் கொள்முதல்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

செய்து வைத்திருக்கிற காரணத்தால், எங்கெங்கே வியாபாரிகள் கொடுமை செய்கிறார்களோ, ஏழைகளிடம் அதிக விலைக்கு விற்கிறார்களோ, அந்த இடத்தில் அரிசியைக் கொண்டு சென்று உணவு விலையை ஓரளவுக்குச் சமாளிக்கின்ற காரணத்தால், அரிசியைப் பொறுத்தவரையிலும், ஓகோ என்ற அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்குச் சமாளிக்க முடிகிறது. விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது.

திரு. இராசகோபால் அவர்கள் அரிசி அதிகமாகச் சாப்பிடாதவர். அரிசி வாங்குகிறாரோ, என்னவோ, தெரியாது. யார் சொல்வதை வைத்துக்கொண்டோ, என்னவோ, அரிசி விலை ஏறியிருக்கிறது என்று அவரும் சொன்னார். ஆனால், அரிசி விலை ஏறிவிட்டது என்று யாரும் சொல்ல முடியாது. அதிலும் அப்படி

7-40 பி. ப.

எங்கேயாவது ஒரு இடத்திலிருந்தாலும் கூட, அதை நிச்சயமாக நாமே சமாளிக்கிற அளவிற்கு நம்முடைய நுறை அரிசியைப் பொறுத்த அளவிற்கு செயல்பட்டு வருகிறது. மற்றவைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியும். பருப்பு விலை என்ன உயர்ந்திருக்கிறது? எண்ணெய் விலை என்ன உயர்ந்திருக்கிறது? இதையெல்லாம் சர்க்கார் தலையிட்டுச் செய்திருக்கிறதா? என் விலை உயர்ந்திருக்கிறது? இஷ்டப்படி வியாபாரிகள் விலை வைத்து விற்பதால் இது ஏற்படுகிறது. ஏழை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருளைக் கொண்டுவருகிறபோது மார்க்கெட்டிலே எவ்வளவு விலை வைத்திருக்கிறார்கள்? நம்முடைய திரு. சுவாமிநாதன் முன்னே சொன்னதுபோல, படி அடி அடித்துக் குறைத்து வாங்குகிறார்கள். முதல் மாதத்திலே 80 ரூபாய் விற்றது. அடுத்த மாதம், அறுத்து எடுத்த உடனே 50, 40 என்று கொள்முதல் செய்கிறார்கள். சென்ற ஆண்டு பார்த்தோம். விவசாயிகள் எல்லாம் கொடுத்த பிறகு, திடீரென்று 15 நாள், 20 நாள், ஒரு மாதத்திற்குப் பின்னே நாறு ரூபாய்க்கு மேலே விலை ஏறுகிற நிலைமை வந்துவிட்டது. இதை யார் செய்கிறார்கள்? இப்படி ஏறிய விலைக்கு யார் காரணம்? எண்ணெய் விலை ஏறியதற்கு யார் காரணம்? இன்னும் மற்ற விலைவாசிகளெல்லாம் ஏறியதற்கு யார் காரணம்? நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் இந்தக் கொடும் பாவிகள் அரிசியிலே கலப்படம் செய்கிறார்கள் என்று சொன்னார். அரிசி வியாபாரத்தை எடுத்திருக்கிற காரணமே அதிலே அவர்கள் கலப்படம் செய்கிறார்கள் என்பதுதான். இந்த வியாபாரிகள்தான் உண்ணும் உணவில் கொடுமை செய்கிறார்கள்.

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இப்படி கொடுமை செய்கிறவர்கள் கையிலே இன்றைக்கு வியாபாரத் துறை மாட்டிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இதை யாரும் மறுக்க முடியாது. என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறார்கள். யார் இதற்கு ஜவாப்தாரி? யார் இதற்குப் பதில் சொல்வது? மொத்தக் கொள்முதலையும் சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பெரிய அளவிலே சொல்கிறார்கள். நானும் சரி என்று ஒத்துக்கொள்கிறேன். நான் அரிசியைப் பொறுத்தவரைக்கும் வியாபாரத்தை தருகிறேன். ஜீனியைப் பொறுத்த வரைக்கும், நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னதுபோல, இப்போது பிளாக் மார்க்கெட்டிலே விற்கப்படுகிறது. ஏழை எளியவர்கள் வாங்க வில்லை. அவர்களுக்குக் கொடுத்ததையே அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் தங்களுடைய கார்டுகளை விற்று விடுகிறார்கள். இது தான் நடைபெறுகிறதே தவிர, வாங்குகிறவர்கள் வலிவு உள்ளவர்கள் வாங்குகிறார்கள். பிளாக் மார்க்கெட்டில் வாங்குகிற அளவிற்குத் தகுதி உள்ளவர்கள் வாங்குகிறார்கள். ஆனால் ஏழை எளியவர்களுக்கு கிட்டத்தட்ட 89 ஆயிரம் மக்களுக்கு கார்டு கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு ஒரு கிலோவிலிருந்து 6 கிலோ அளவிற்கு மேல் போகாமல் நாங்கள் ஜீனி கொடுக்கிறோம். கொடுப்பதிலே அவர்களுக்கு ஒன்றும் குறையவில்லை. ஆனால் அவர்களுக்கு வாங்கும் சக்தி இல்லை. இப்படி விலை ஏறுகிறது. தயவு செய்து நீங்கள் அந்த நிலைமைகளை எடுத்துப் பார்த்தீர்களானால், அதிலே தவறு நடந்திருப்பது தெரியும்.

ஆனால் துவரம் பருப்பைப் பொறுத்த வரைக்கும் உங்களுக்குத் தெரியும்; மற்ற பருப்பு வகைகளின் நிலைமையும் உங்களுக்குத் தெரியும். அந்த அளவிற்கு நாட்டு நிலைமை இருக்கிறது. இதை இன்னும் கொள்ளை லாபக்காரர்கள் கையிலே விட்டுவைத் திருப்பதா? அதிலிருந்து நாம் மக்களைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து, தயவு செய்து செயல்பட வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இங்கு அரிசிக் கொள்முதல் முழுவதையும் நீங்களே செய்கிற காரணத்தினால், நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள்—பிராசுதார்கள் சார்பில் பேசினார்—விலை ஏறவில்லை, விலை ஏறவில்லை, அதிகமான ரூபாய் பிராசுதார்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்களே தவிர....

[1973 மார்ச் 27

திரு. ஜி. சுவாமிநாதன் : விவசாயிகள் தான் இருக்கிறார்களே தவிர, பிராசுதார் என்று யாரும் கிடையாது. 15 ஏக்கரா என்று நீங்கள் கொண்டுவந்து விட்டீர்கள். 15 ஏக்கரா உள்ளவர்களுக்கு அதனாலே வருமானம் வந்தால்தான் இன்னும் உற்பத்தியில் ஈடுபடுவார்கள். இன்னும் அரிசி விலை குறையும் என்ற கருத்தை யொட்டிச் சொன்னேனே தவிர, பிராசுதார்கள் என்று யாரும் கிடையாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், 2 ஏக்கரா இருந்தாலும் பத்திரிக்கையில் பிராசுதார்கள் என்று நான் போட்டுக்கொள் வோம். அந்த முறையிலே நான் சொன்னேன். பிராசுதார் என்று வடபாதி மங்கலத்தைச் சொல்லவில்லை. சாதாரண சிறு விவசாயிகளுக்காகத் தான் இந்தத் திட்டமே போடப் பட்டது. இன்றைக்கு நாட்டில் ஒவ்வொரு நாளுக விலை ஏறுகிறதென்றெல்லாம் பலர் பேசியிருக்கிறார்கள். "பண வீக்கமே முக்கிய காரணம். விலைவாசி உயர்வு மிகவும் பகத்தான தாகச்சினை. இன்றைக்கு ஏறும் விலைவாசியைக் கண்டு அரசாங்கம் மிகவும் கவலையடைந்திருக்கிறது. இந்தச் சவாலை சமாளிக்க அரசாங்கம் இயன்ற அளவிலே முயன்று வருகிறது", என்று மத்திய அமைச்சர் திரு. மோகன் தாரியா பதிலளித்திருக் கிறார். அங்குள்ள மத்திய அரசாங்கமே இதிலே சொல்லவும் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்படி மத்திய அரசாங்கம் பல முயற்சிகளைச் செய்தாலும், இந்த வியாபாரி களுடைய நிலைமைகளை அடக்க முடியவில்லை. அதற்காக இரண்டொரு பொருளைக் கடுமையாக எடுத்துப் பார்த்திருக்கிறோம். எடுத்ததிலெல்லாம் சர்க்கார் இதுவரையிலே வெற்றி கண்டிருக்கிறது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், அவர்கள் இந்தக் கொள் முதலிலே மாட்டை வைப்பதனால் ஏற்படுகின்ற சங்கடங்களைச் சொன்னார்கள். 5 ஆண்டுகளுக்குள்ளே ஓரளவிற்குச் சீராக்க முடியும். வேண்டிய அளவிற்கு அப்போதெல்லாம் கோடவுன் வசதி கிடையாது. இந்த அளவிற்கு கோடவுன் வசதி யெல்லாம் இருக்கிற காரணத்தினால் இதன் மூலம் 'ஸ்டாக்' செய்து அதற்கான மருந்துகளைப் போட்டு வைக்கிற நிலைமை இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளையெல்லாம் சர்க்காரிலே எடுத்திருக்கிறோம் என்கின்ற நிலையில் அந்த யோசனைகளை யெல்லாம் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

அதே போல இன்றைக்கு நாம் 25 லட்சம் டன் உற்பத்தி என்று சாதாரணமாகச் சொல்கிறோம். உற்பத்தி எந்த அளவிற்குப் பெருக வேண்டுமென்று நாம் பணம் அதிகமாகக் கொடுத்தோமோ அந்த அளவிற்கு உற்பத்தி பெருகவில்லை. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும், 1967லேயிருந்து 1972க்குள் 20 லட்சம் டன் நெல், அரிசி உற்பத்தி செய்திருக்கிறோம். அது குறைவானதல்ல. மற்றபடி பருப்பு வகையறாக்களெல்லாம் அங்கேயிருந்து வர வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையெல்லாம் உங்களுக்குத் தெரியும். அவர்கள் அதைச் சரியான முறையிலே அங்கெல்லாம் செய்யாத காரணத்தினால், இப்படி ஒரு தட்டுப்பாடு இதுவரையிலே வந்திருக்கிறது. அதிலே இந்த ஆண்டு ஒரு 60 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்திருக்கிறோம். மேலும் ஒரு 50 ஆயிரம் டன் கொள்முதல் செய்வதற்கு இருக்கிறோம். அதோடு மட்டுமல்ல. ஒரு லட்சம் டன் அரிசி கேரளாவிற்கு மத்திய அரசாங்கத்தின் மூலம் தமிழ் நாட்டிலிருந்து கொடுத்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்

மற்றும் லெவி முறையைப்பற்றி நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திலே லெவி போட்ட உடனே 25%, 30% லெவி போட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது நாம் எல்லா இடங்களிலும் 20% லெவி போட்டிருக் கிறோம். அது மாதிரி ஒரு நிலைமை இருந்தது. பக்கத்தில் இருக்கிற திருச்சியில் ஒன்றுமேயில்லை. தஞ்சாவூரிலே இருக்கிற விவசாயிகள் 25 ரூபாய்க்கு சர்க்காருக்குக் கொடுத்து விட்டு சாதாரணமாகப் போகின்ற நிலைமை இருந்தது. இப்போது திருச்சியிலும் அதே நிலைமை. திருச்சி மாவட்டம் பூராவும் போட்டிருக்கிறோம். தஞ்சை மாவட்டம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டம் பூராவும், திருநெல்வேலி, கோயம்புத்தூர், தன்னியாகுமரி, மதுரை மாவட்டத்தில் உத்தம பாளையம், பெரியகுளம் இங்கெல்லாம் போட்டிருக்கிறோம். இவை களிலே கள்ளக் கடத்தல் இருப்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ஒன்றிரண்டு தாலுகா தவிர மற்ற தாலுகாக்களிலே அந்த அளவிற்கு டெபிசிட்டாக உள்ளது. மற்ற தாலுகாக்கள் சர்பிளஸ் தாலுகாக்கள். எனவே எங்களில் பாதுகாப்புப் போட வேண்டி யிருக்கிறது. உதாரணம் கோவை மாவட்டத்தைப் பொறுத்த

[திரு. மன்னே ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

டன் கொள்முதல் செய்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். லெவி போடுவதே தவறு என்பது சரியல்ல. சர்க்காருடைய நடைமுறையை நாம ஆராய்ந்து பார்ப்பதற்கு லெவி போடுகிறோம். திடீரென்று விலை குறைந்துவிட்டால், லெவியை எடுத்து விடுகிறோம். 4, 5 நாட்கள் கழித்துப் பார்த்தால், விலை ஏறி விடும். ஒரு மாதம் நாங்கள் "மைய்ல்டேயின்" பண்ணுகிறோம், சொம்ப அதிகமாக ஏறும்போது. விலை குறைந்தால் லெவியை எடுத்து விடுகிறோம். லெவியை எடுத்தால், விலை மறுபடியும் ஏறுகிறது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கு விலை குறையாமலும், சர்க்கார் கொள்முதலுக்கு சாதகமாகவும் இருப்பதற்காக நாங்கள் இந்த லெவி முறையைப் போட்டிருக்கிறோம். ஆகையினாலே லெவி முறை நிச்சயமாக கொள்கை அற்றது என்ற நீதியில் இல்லை. இப்படி எல்லை ஓரங்களில் 5 மைலுக்கு அங்கே "செக் போஸ்ட்"களை வைத்திருக்கிறோம். ஆந்திரா கூட சில வேறுபாடுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லைப் புறங்களில் வைத்துக்கொண்டிருப்பதால் அதில் இன்னும் அதிகமான ஒத்துழைப்பை எல்லோரும் தர வேண்டும். நாட்டுக்குத் தேவையானது இது. நண்பர் திரு. ராஜகோபால் அவர்கள் சொன்னது போல, சிறு கள்ள மார்க்கெட்காரர்களைக் கண்டுபிடிக்கவே இந்த நாட்டிலே முடியவில்லை. இப்படிச் சில வியாபாரிகளைப் பார்த்தால், கள்ளக் கணக்கு எழுதுகிறவர்களைப் பார்த்தால், பெரிய ஆஸ்தாட பூதிகளாக இருப்பார்கள். அவர்களைப் பார்த்தால் அதிக லாபம், கள்ள வியாபாரம் செய்யக்கூடியவர்கள் என்ற தோற்றமில்லாமல், அவர்களைப் பார்த்தவுடனே மனம் இரங்குவதாக இருக்கும். அவர்கள் வைதிகர்களாக இருப்பார்கள்.

7-50 P.M. ஆனால் அவர்கள் அப்படிக் கள்ள வியாபாரம் பண்ணுகிற இடத்தில் சாம்பிராணி புகைந்துகொண்டேயிருக்கும். ஆண்டவனின் படங்களை அங்கேதான் வைத்திருப்பார்கள். பக்கத்தில் உள்ளவர்களைக் கேட்டால்தான் அங்கே என்ன வியாபாரம் நடக்கிறதென்பது தெரியும். ஆண்டவன் பெயரைச் சொல்லி கள்ள வியாபாரம் செய்கிறார்கள். தவறு செய்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பொது மக்களுடைய ஒத்தாசை நிரம்பத் தேவையென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசிகளைப் பற்றியெல்லாம் சொல்லிவிட்டேன். 52—49—46 என்று இருந்ததை 54—51—47 என்று விலையை உயர்த்தித் தந்திருக்கிறோம். இப்போது மறுபடியும் 4 ரூபாய் உயர்த்த வேண்டுமென்று

1973 மார்ச் 27] [திரு. மன்னே ப. நாராயணசாமி]

மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அந்த ஒப்புதல் அவர்களிடமிருந்து வந்துவிட்டால், 4 ரூபாயைக் கூட்டிக் கொடுப்பதற்கான முயற்சி மாநில சர்க்காரிடம் இருக்கிறதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரிசி விலையெல்லாம் உயர்ந்துவிட்டதென்று சொன்னார்கள். அரிசி முதல் ரகம் 1 ரூபாய் 10 பைசா; இரண்டாவது ரகம் ரூ. 1.04. பச்சை அரிசி முதல் ரகம் ரூ. 1.14; இரண்டாவது ரகம் ரூ. 1.10. இப்படித்தான் விலை இருக்கிறது. ஒரிரு இடங்களில் இதைவிட அதிகமாக விற்கிறதென்ற தகவல் வந்தவுடன், உடனடியாக நம்முடைய சிவில் சப்ளைஸ் துறையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் எங்களிடம் இருக்கிற 30,000 டன் அரிசியிலிருந்து, தேவையான அளவுக்கு அங்கு அனுப்பி அதிகமாக விற்கிற கடைகளுக்கும் பக்கத்தில் வைத்து, சரியான விலைக்குக் கொடுத்து, அந்த அதிக விலையைக் குறைத்திருக்கிறோம். அரிசி ஆலையைப் பற்றி திரு. ராஜகோபால் அவர்கள் சொன்னார்கள். அரிசி ஆலை வந்ததற்குக் காரணம் உங்களுக்கெல்லாம் தெரியும். அதைப்பற்றி நான் இங்கே சொல்லியிருக்கிறேன். அரிசி ஆலைகளிலே எல்லாம் கஷ்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அது கூட்டுறவுத் துறையில் இருந்தது. என்ன கஷ்டங்கள் என்றால், நெல் வாங்குபவர் ஒருவர்—அதாவது கொள்முதல் செய்பவர் ஒருவர், அதைக் கொண்டு கொடுத்து 'டர்ன்-அவுட்' கேட்பது இன்னொருவர். அரிசி வாங்குவதென்ற நிலைமை வரும்போது, வாங்குபவர்களுக்கும், அரிசிக்கும் சம்பந்தம் கிடையாது. கொண்டு கொடுக்கும்போது ஒருவரின் பொறுப்பாக இருக்கிறது. மறுபடியும் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டிலே வாங்குகிறபோது குவாலிடியைப் பார்க்கிறார்கள். எனவே பல மில்களுக்கு நஷ்டம் வந்தது. நானேகூட, தலைவனாக இருந்து ஒரு மில்லை நடத்தினேன். வாங்கிய நெல்லை அப்படியே அரைத்துக் கொடுத்தோம். ஒரு வருஷத்தில் 50,000 ரூபாய், 60,000 ரூபாய் 'லாஸ்' வந்தது. காரணம் வந்த நெல்லை அப்படியே வாங்கி, அரைத்துக் கொடுத்தோம். ஆகையினாலே குவாலிடி இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் அவைகளைப் பார்க்கிறபோது, சர்க்காரிலிருந்து சர்க்காருக்கு என்கிறபோது, அதிகமான 'கட்' விழுந்து விடுகிறது. தலியார்களுக்கு அவ்வளவு 'கட்' இருக்காது. அந்தக் கஷ்டங்களையெல்லாம் தனியார்கள் கெட்டிக்காரத்தனமாக, எந்த அரிசியாக இருந்தாலும், 'கட்' இல்லாமல் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். இது கூட்டுறவு

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

கூரையில், நமது அருமை நண்பர் திரு. ராஜமாணிக்கம் ரொம்ப அங்கலாய்த்துக்கொண்டார். அவர்கள், அரிசி விலையெல்லாம் ஏறுகிறது, குறைகிறது என்று சொல்கிற அதே நேரத்தில் "அங்கிருந்து கள்ளக் கடத்தல் நடக்கிறது அல்லவா? 'பல்டி லேவென்' கொடுக்கவேண்டும். 16 அவுன்சு கொடுத்து விட்டுத் தான் நீங்கள் லெவி போட வேண்டும்" என்று சொல்கிறார்கள். முந்தாநாள் 50 பேரைப் பிடித்திருக்கிறார்கள், நேற்று இரவு ஒரு டிராக்டரைப் பிடித்திருக்கிறார்கள். இன்னும் பல ஆயிரக் கணக்கான மூட்டைகள் தலைச்சுமையாகப் போய்க்கொண்டிருக் கின்றன. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படி லெவி போட்டு ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகும், நம்முடைய அதிகாரிகள் இரவு பகல் என்று தூங்காமல் செயல்பட்டாலும் கூட, கோயம் புத்தூரிலிருந்து அந்தக் கள்ள வாணிபம், இப்படி எல்லை கடந்துபோகின்ற நிலைமை இருக்கிறது. நாகர்கோவில் பகுதிக்கு நான் நேராகப் போயிருந்தேன். அப்படியே கேரளாவிற்குக் கூட நான் போனேன். ஒரு பகுதியில் நான் போய்க் கொண்டிருக்கும் போதே, திடீரென்று அங்கேயிருந்து ஒரு லாரியை அப்படியே தகர்த்திக்கொண்டு போய் விட்டார்கள். என் கார் போடுகிற சத்தம் கேட்டவுடனே நகர்த்தி விட்டார்கள். அது என் என்று கேட்டால், அது கேரளா பார்டர். எல்லையை அதிகாரிகள் போய் அதைப் பிடிக்க முடியவில்லை. முடிவில் ஒரு லாரியைப் பிடித்து விட்டார்கள் என்று அந்தச் சர்க்கார் நம்மிடம் கோபித்துக்கொண்டார்கள் என்பதனால், நம்முடைய அதிகாரிகள் கிட்டேயே போகமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். நான், ஒரு அமைச்சரே, அன்றைக்கு நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். நம்முடைய மாநிலத்திலிருந்து அந்த அளவிற்குக் கடத்தல் செய்கிற நிலைமை இருப்பதாலே, நாம் அவ்வளவு விழிப்பாக இருந்து செயல்பட வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறோம். கள்ளக்கடத்தல் கொஞ்சம் குறைந்திருக்கிற நிலைமை ஏற்பட்டி ருக்கிறது. அப்படியே இருந்தாலும், கோவை மாவட்டத்திலிருந்து கள்ள வாணிபம் நடந்துகொண்டிருக்கிறது.

அடுத்து, தமிழ் நாட்டில் எங்கேயாவது நட்டுப்பாடு இருக்கு மானால், இப்போது "பெர்மிட்" கொடுக்கிறோம். கோவை மாவட்டத்திற்கு "பெர்மிட்" கொடுக்கிறோம். ராமநாதபுரம் மாவட்டத்திற்கு 'பெர்மிட்' கொடுக்கிறோம். சர்ப்பளஸ் மாவட் டங்கள் என்று எடுத்துக்கொண்டு, அந்த மாவட்டங்களிலே லெவி

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

போட்டிருக்கிறோம். இப்போது தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்கு அரிசி, நெல் போகாது. தஞ்சாவூரிலிருந்து தென் ஆற்காட்டிற்கு நெல் போகக் கூடாது. தஞ்சாவூரிலிருந்து வட ஆற்காட்டிற்கு நெல் போகக் கூடாது. தஞ்சாவூரிலிருந்து கோயம்புத்தூருக்கு நெல் கொடுக்கிறோம். வியாபாரிகள் 20% லெவி கொடுத்துவிட்டு, எவ்வளவு வேண்டுமானாலும் 'பெர்மிட்' வாங்கிக்கொண்டு அங்கிருந்து நெல் எடுத்துக்கொண்டுபோய் வேண்டிய அளவிற்கு விற்றுக்கொள்ளலாம். ஆனால் அதிகமான அளவிற்கு விற்கிறார்கள் என்ற நிலைமை ஏற்படுகிறது என்றால், கொஞ்சம் அங்கே தடம் மாறுகின்றார்கள், கள்ள வாணிபம் செய்கிறார்கள் என்றால், அதைத் தடுப்பதற்கான ஒத்துழைப்பை போலீஸ் அதிகாரிகளுக்கும் சிவில் சப்ளை அதிகாரிகளுக்கும் கொடுப்பீர்களானால், நிச்சயமாக இந்த நிலைமைகளை நாம் சீர்படுத்த முடியுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். இப்போது லெவி போட்டிருக்கிற முறைகளிலே, நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னது போல, கொள்கையற்ற தன்மையில்லை. அவர்கள் அதைக் குற்ற மென்று சொன்னார்கள். கோயம்புத்தூரிலிருந்து நாம் ஓளவிற்குக் கொடுக்கிறோம். இப்படிக் கட்டுப்படுத்தவில்லையென்றால், ஒரு தாலுகாவிலிருந்து வரக்கூடிய அரிசியை எப்படி வாங்குவது? அப்படி லெவி போட்டால் தானே, கட்டுப்படுத்தினால் தானே, வாங்க முடியும்? அவர்கள் மொத்தக் கொள்முதலை, கொள்முதல் பூராவும் சர்க்காரே செய்ய வேண்டுமென்ற நிலையை எதிர்க் கிறார்கள். அரசாங்க அளவில் நாம் ஒரு கட்டுப்பாட்டை வைத்து, அதிகமான அளவுக்கு கடத்தல் இல்லாமல், இந்த லெவியைப் போட்டு வாங்குகிறோம். இந்த முறையை நீங்கள் பரிகாசம் செய்வீர்களானால், அது அவ்வளவு நன்றாக இருக்காது. எந்தப் பொருளும் மக்களை, ஏழை மக்களைத் தாண்டி, கள்ள வாணிபம் போன்ற காரியங்களுக்குப் பயன்படாமல் பாதுகாப்பதற்குத் தான் தமிழ் நாட்டைத் தனி உணவு மண்டலமாக ஆக்கியிருக் கிறோம். தனியாக ஆக்கியிருக்கிற காரணத்தினாலேயே, நாம் கொள்முதல் செய்து அதை நாம் நம்முடைய மாநிலத்தில் பற்றாக் குறைப் பகுதிகளுக்குக் கொடுக்கலாம். கிட்டத்தட்ட சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் 80 ஆயிரம் டன் வேண்டி யிருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கும் பாவலாகக் கொடுப் பதற்கு கிட்டத்தட்ட 30 ஆயிரம் டன், ஆக மொத்தம் 109 ஆயிரம் டன் வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு ஒரு லட்சத்து 9 ஆயிரம்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

ஸ்தாபனம் அல்லவா? ஆகையினாலே குவாலிடி 'கட்' பார்த்து சரியான முறையில் திருப்பி வாங்கிக்கொள்ள முடியாத அளவுகுக் கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த ஒரு காரணமும் உண்டு. நமமுடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களும் சொன்னார்கள். பல வியாபாரிகளுக்கு நெல் கொடுத்து, வாங்கிய அந்த நெல்லையெல்லாம் ஸ்டாக் இல்லாமல் பண்ணிய கதைகளை யெல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் லட்சக் கணக்கான ரூபாய் பாக்கி இருக்கிறது. அதாகக 13 மில்கள் கூட்டுறவுத் துறையிலும், புட் கார்ப்பரேஷனில் 4 மில்களும் ஆகமொத்தம் 17 மில்கள், நாம் வாங்குகிற லெவி நெல்லை அரைக் கலாமென்று எடுத்திருக்கிறோம். இதற்கு எவ்வளவு 'கெபாசிடி' வேண்டுமென்றால், 1,20,000 டன் நெல் தேவைப்படுகிறது. அது அரைத்தபோக, மீதியை, தேவைப்பட்டால் மற்றவர்களுக்குக் கொடுக்கலாமென்று இருந்தோம். புதிய மெகானிசம் காரணமாக சில ஆலைகள் சரியாக ஓடுகின்றன. சில ஆலைகள் இன்னும் சரியான முறையில் வேலை செய்யாமலிருக்கின்றன. அதில் சில கஷ்டங் களெல்லாம் இருக்கிற காரணத்தால்—முன்னாலேயே நான் சொன்னேன், பிரைவேட்டு ஆலைகளுக்கெல்லாம் கொடுப்பதில்லை யென்று—பிரைவேட்டு ஆலைகளுக்குக் கொடுக்காமல் அதில் அரைத்தால் நமக்குத் தேவையுள்ள அரிசி கிடைக்குமாவென்ற நிலைமைகள் வந்துவிட்டதால், தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 44 பேர்களுக்கு மறுபடியும் அரைப்பதற்காக நெல் கொடுத்திருக் கிறோம். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னது போல, முன்னால் நமக்குக் கடன் பாக்கி இல்லாதவர்களாகப் பார்த்தும், வழக்கு ஏதும் போடாதவர்களாகப் பார்த்தும், கூடிய வரையில் நாணயமானவர்களைப் பார்த்தும் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதை எந்த அளவுக்கு தவிர்க்க முடியும், அதை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமென்பதற்காக எற்பாடு நடக்கிறது. அடுத்த ஆண்டு கொள்முதல் செய்வதை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, அந்த அளவுக்குக் குறைத்துக் கொண்டு, பிரைவேட்டாக சரியான முறையில் நடக்கின்ற மில் களுக்குக் கொடுக்கும், யோசனை இருக்கிறதென்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோதுமையைப்பற்றிச் சொன்னார்கள். முதலில் 35'00 டன் நமக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். 1972-லிருந்து போத வில்லை, போதவில்லையென்று சொன்னவுடன், அதை 15,000

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

டன்களாக்கி இருக்கிறார்கள். 35,000 டன் வந்த இடத்திலே, இப்போது 15,000 டனதான் கிடைக்கிறது. அதிலே 500 டன்னைத் தனியாக, கோதுமையாகத் தருகிறோம். மீதமுள்ளதை மில்களுக்குக் கொடுத்து, அரைத்து, அது பேக்டரிகள், ஓட்டல்கள் எல்லாவற்றிற்கும் கொடுக்கப்படுகிறது. அதனுடைய விவரத்தைக் கூற விரும்புகிறேன். அரிசிக் கார்டுக்குத் திங்கள் ஒன்றுக்கு 4 கிலோ கொடுக்கப்படுகிறது. அரிசி, கோதுமை சேர்த்து 20 கிலோ கொடுக்கிறோம். ஒரு கிலோ ரவை ரூ. 1.20; ஒரு கிலோ மைதா ரூ. 1.16. ஆக மொத்தத்தில் 2 கிலோ மைதாவும், 2 கிலோ ரவையும் அரிசிக் கார்டுக்குக் கொடுக்கப்படுகின்றன. சென்னையைப் பொறுத்தவரைக்கும் இவ்வாறு கொடுக்கிறோம். சொட்டிக் கடை வைத்திருப்பவர்கள் சொம்பப் பேர்கள் தொல்லை கொடுக்கிறார்கள். மொத்தத்தில் 25,000 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள வர்களுக்கு விற்பனை வரி கிடையாது. 25,000 ரூபாய்க்கு மேலே, 'டர்ன்-ஓவர்' உள்ளவர்களுக்கு, அதற்குத் தகுந்தாற்போல கொடுக்கப்படுகிறது. 10,000 ரூபாய் வரை வியாபாரம் செய்பவர் களுக்கு 5 மூட்டை மைதா கொடுக்கப்படுகிறது. உணவு விடுதிகளுக்கு, 20,000 ரூபாய் 'டர்ன்-ஓவர்' செய்பவர்களுக்கு ஒரு மூட்டை மைதாவும், ஒரு மூட்டை ரவையும் கொடுக்கிறோம். சேமியா விற்பனையாளர்களுக்கு 11/10 பங்கு என்ற அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் மாவைப் பிசைந்து, அடிந்து தயார் செய்வதால் அவர்களுக்கு அந்த அளவுக்குக் கொடுக்கப் படுகிறது. தெருவில் சொட்டி விற்கிறவர்களுக்கு 50 கிலோவும், ஸ்டால் வைத்திருப்பவர்களுக்கு 15 நாளைக்கு 50 கிலோ மைதாவும் கொடுக்கிறோம். குடும்ப கார்டுகளுக்காக ஏஜன்சி கொடுத்துள்ள சில வியாபாரிகளுக்கு 250 கார்டுகளுக்கு 2 மூட்டை ரவையும், 2 மூட்டை மைதாவும் கொடுக்கப்படுகிறது. 250-லிருந்து 400 கார்டுகள் வரை 3 மூட்டை ரவையும், 3 மூட்டை மைதாவும் கொடுக்கப்படுகிறது. 401-லிருந்து 500 கார்டுகள் வரை 4 மூட்டை மைதாவும், 4 மூட்டை ரவையும் கொடுக்கப்படுகிறது. 501-லிருந்து 700 கார்டுவரை 6 மூட்டை மைதாவும், 6 மூட்டை ரவையும் கொடுக்கப்படுகிறது. அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிற தென்றாலும், இல்லை, இல்லை என்ற பிரச்சினை வருகிறது. மைதா யாருக்குத் தேவையென்று உங்களுக்குத் தெரியும். நம்முடைய குடும்பங்களில் மைதாவையும், ரவையையும் அதிகமாகப் பயன் படுத்துவதில்லை. கோதுமைப் பொருள்கள், மைதா போன்ற

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

வைகளெல்லாம் கூடியவரையிலும் நமது மாநிலத்தில் அதிகமாகத் தேவையில்லாத காரணத்தாலே, இவையும் வெளி மாநிலங்களுக்குப் போகின்றன. கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குப் போகின்றன. மேலும் அங்கெல்லாம் மாவு அரைகின்ற மில்கள் அதிகமாக இல்லாத, அவர்களெல்லாம் வாங்கிக்கொண்டு போகிறார்கள். இதனால், "நான் 10 வருஷத்திற்கு முன்பு சொட்டிக் கடை வைத்திருந்தேன், 5 வருஷத்திற்கு முன்பு சொட்டிக் கடை வைத்திருந்தேன், என்னுடைய தாத்தா சொட்டிக் கடை வைத்திருந்தார். ஆகவே கொடு" என்கின்ற புதிய கடிதங்கள் எல்லாம் வருகின்றன. இந்த மூட்டையை வாங்கி, சொட்டி போட்டால் அவர்களுக்கு லாபம் வராது. இந்த மூட்டையைக் கோளாவுக்கு அனுப்பினால் லாபம் கிடைக்கும். இப்படிப்பட்ட நிலைமைகளில், 'இல்லை, இல்லை' என்ற பிரச்சினை வருகிறது. உள்ளபடியே ஏழை மக்கள், 'எனி இல்லை' என்று சத்தம் போடுவதில்லை. இந்த மூட்டையை வாங்கி வெளியே விற்கிறவர்கள்தான் 'இல்லை' என்று சத்தம் போடுபவர்கள். எப்படி 'சீனி'யை வாங்கி விற்கிறார்களோ, அப்படி உரத்தை வாங்கி விற்கிறார்கள். நம்முடைய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குத் தெரியும். ஐ.எம்.எஸ். லோனில் உரத்தை வாங்குகிறார்கள். கூட்டுறவுத் துறையிலிருந்தும் உரத்தை வாங்குகிறார்கள். இரண்டிலும் வாங்கி அதை விற்கிறார்கள். சாதாரண விவசாயி 80 ரூபாய்க்கு வாங்கவில்லை. சாதாரண விவசாயிக்கு, கூட்டுறவுத் துறையிலிருந்தும், ஐ.எம்.எஸ்.லிருந்தும் கடன் கொடுத்திருக்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகள் விவசாயிகளுக்குக் கடனைக் கொடுக்க நேரிடையாகப் போகிறார்கள். கூட்டுறவுத் துறையிலிருந்து வாங்கிய உரத்தை விற்கிறார்கள். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதெல்லாம், கள்ள வாணிபம் செய்பவர்கள்தான். நம்முடைய மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு இப்படிக் கள்ள வாணிபம் செய்பவர்கள், ஒரு லோடைக் கொண்டு விட்டு விட்டு, மறுபடியும் இங்கே வருகிறார்கள். மறுபடியும் 10 விவசாயிகளை அழைத்துக் கொண்டு, 'உரம் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை, 80 ரூபாய், 80 ரூபாய்' என்று சத்தம் போடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றனவே தவிர, உள்ளபடியே தமிழ்நாட்டில் தாலுகா வாரியாக, மாவட்ட வாரியாக எடுத்துப் பார்த்தால், குறைவாக உரங்களை சப்ளை செய்யவில்லையென்பதை அறியலாம். எந்த அளவுக்குப் பங்கீடு

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குப் பங்கீடு செய்திருக்கிறோம். அதே போன்று மைதாவும் கொடுத்திருக்கிறோம். நமமுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் வீட்டிலே வேணுமானால் மைதா சாப்பிடுவார்கள். கோதுமையை என்னைப் போன்ற சர்க்கரை வியாதி உள்ளவர்கள் சிலர் சாப்பிடுவார்கள். மைதா வாங்க வேண்டுமென்பது ஏழைக் குடும்பங்களுக்கில்லை. ஆனால் மைதா கிடைக்கவில்லை, மைதா கிடைக்கவேலை என்று சொன்னால், அது தவறான கருத்தாகும். நம்முடைய அதிகாரிகள் பொம்பவும் சிறப்பாக வினியோகிக்கிறார்கள். அதிலே ஏதாவது குறைகள் இருந்தால், அவற்றைச் சொல்ல வேண்டும். இல்லையென்று சொலலுகிற வார்த்தை அத்தனையும் ஏமாற்றுகிறவர்கள் வாயிலிருந்துதான் கிளம்புகிறதே தவிர, மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்வது தவறென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். கோதுமைத் தவிட்டுக்குக் கூட ஒரு பெரிய பிரச்சினை எழுந்துவிட்டது. கோதுமைத் தவிடு இல்லை, கோதுமைத் தவிடு இலலை என்று சொல்லுகின்றார்கள். அதற்காக நமது கமிஷனர், 8-00 செக்கரட்டரி அவர்கள் எல்லாம் தனியாக உத்தரவே பி. ப. போட்டிருக்கின்றார்கள். ஒரு பெரிய மாடு இருந்தால், அதற்கு 2½ கிலோ, ஒரு கன்றுக்குட்டி இருந்தால் 1 கிலோ என்று ரேஷன் போட்டிருக்கின்றார்கள். அதற்கும் கார்டு சிஸ்டம் போட்டு மதராஸில் கொடுத்திருக்கின்றோம். மற்ற மாவட்டங்களிலே இந்த சிஸ்டத்தை பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்த உத்தரவு போட்டிருக்கின்றார்கள். இந்த மாட்டுத் தீவனத்தைத் தனியாகத் தயாரிக்கின்ற பேக்டரிகள் இருக்கின்றன. அவர்கள்தான் இப்படிச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். 'இன்டஸ்ட்ரீஸ்' ஆக இருக்கின்ற இடங்களுக்கெல்லாம் போய்ப் பார்த்து வருகின்றோம். ஒவ்வொன்றுக்கும் ஒரு தகுதி வைக்க வேண்டும் அல்லவா? எங்கேயாவது இருந்து ஒருவர் வந்து எனக்கு 50 மூட்டை கொடுங்கள் என்று சொல்லுகின்றார். இன்னொருவர் எனக்கு 15 மூட்டை கொடுங்கள் என்று கேட்கின்றார். இதை எப்படிக் கொடுப்பது என்ற தகுதி வைத்து, அவர்களுடைய 'டர்ன் ஓவர்' பார்த்து, அவர்களிடத்திலே எத்தனை பேர் வேலை செய்கின்றார்கள் என்று பார்த்து, அதை ஒரு இன்டஸ்ட்ரீ என்று பெயர் வைத்து நடத்தினால்தானே, அதற்குக் கொடுக்க முடியும் என்று பார்த்துக் கொடுக்கிறோம். அதிலே கிடைக்கின்ற

[திரு. மன்னே ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

பொருள்கள் பயன்படுத்தப்படாமல் போய்விடலாம் என்ற காரணத்தாலே, அதிலே ரேஷன் பண்ணிக் கொடுக்கிறோம். ஒரு கிராமத்திலே மாட்டுத் தீவனம் செய்கின்ற பாக்டரி வைத்திருக்கின்றோம் என்று சொன்னால், அங்கே இருக்கின்ற டி.எஸ்.ஓ. அல்லது மற்ற அதிகாரிகள் போய்ப் பார்த்து, அங்கே என்ன நடக்கிறது, அதற்கு என்ன டர்ன்ஓவர் என்கின்ற கணக்குகளையெல்லாம் பார்த்து, விநியோகம் செய்கிறார்கள். இப்போது யார் யாரிடம் மாடு இருக்கின்றது என்று பார்த்து, கறவை மாடு வைத்திருப்பவர்களுக்கு, பெரிய மாடாக இருந்தால் எவ்வளவு கொடுப்பது, சின்னக் கன்றுக் குட்டியாக இருந்தால் எவ்வளவு கொடுப்பது என்ற அளவிலே ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, கடலைப் பிண்ணாக்கு பற்றி அங்கத்தினர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் சொல்வது, நமக்கு வேண்டிய அளவுக்கு கடலை இருக்கின்றது. நமக்குத் தேவையான அளவுக்கு, கடலை விளைகின்றது. ஆனால் அந்தக் கடலை நமக்குப் பயன்படவில்லை. அதற்குக் காரணம் உங்களுக்கெல்லாம் தெரியும். எந்த ரோடிலே போய் நின்று பார்த்தாலும், இப்போது கடலை லாரிதான் போய்க்கொண்டிருக்கிறது. அந்த லாரியைத் தடுக்கின்ற உரிமை நமக்கு இல்லை. கடலை பல இடங்களுக்குப் போகின்றது. வெளி மாநிலங்களுக்குக் கடலை அதிகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. கடலை 6 லட்சம் டன் உற்பத்தி ஆகின்றது. அதிலே 2½ லட்சம் டன் எண்ணெயை நாம் இங்கு உற்பத்தி பண்ணுகின்றோம் என்றாலும்கூட, அது நமக்குப் போதவில்லை. இதில் கிட்டத்தட்ட வனஸ்பதிக்கு மட்டும் இப்போது 12 ஆயிரம் டன் எடுத்துக்கொண்டு போய்விடுகின்றார்கள். மற்றது அத்தனையும் வெளி மாநிலங்களுக்குப் போய்விடுகின்றது. அதை எப்படி, யார் கட்டுப்படுத்துவது என்பது தெரியவில்லை. அதை கட்டுப்படுத்தியாக வேண்டும். அதைக் கட்டுப்படுத்தி எங்களுக்குத் தேவையுள்ளது போக மற்றதைக் கொடுக்கின்றோம் என்ற அளவிலே மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கின்றோம். எங்களுக்கு கட்டுப்படுத்த அதிகாரம் கொடுங்கள், எங்களுக்குத் தேவையுள்ளதை மட்டும் வாங்கி வைத்துக் கொள்கின்றோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அளவிற்கு கடலை எண்ணெய் விலையைக் குறைப்பதற்காகச் செய்திருக்கின்றோம். இந்த

1973 மார்ச் 27] [திரு. மன்னே ப. நாராயணசாமி]

விஷயத்தில் அங்கத்தினர்கள் அறிய வேண்டும். டெல்லியிலே கடலை எண்ணெய் என்ன விலை விற்கின்றது? மத்திய சர்க்கார் மந்திரியும் சொல்லுகின்றார். சர்க்காருடைய சர்க்கரைக் கொள்கை தோல்வி என்று மத்திய மந்திரியே ஒப்புக் கொள்கின்றார்கள். பம்பாயிலே ரூ. 4 சொச்சம், மற்ற இடங்களில் ரூ. 4 சொச்சம் இப்படி விற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த அளவிற்கு அவர்கள் எல்லாமே சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். எண்ணெய், மற்றப் பொருள்களெல்லாம் மற்ற மாநிலங்களில் என்ன விலை விற்கிறது என்று பார்க்க வேண்டும். உள்ளபடியே நான் சொல்கின்றேன். நம்முடைய மேலவையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் இதயத்தோடு, மனிதாபி மானத்தோடு பேசியிருக்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாம் நாக்கிலே நரம்பில்லாமல் பேசியிருக்கின்றார்கள். எதோ தமிழ்நாட்டிலேதான் இந்தனையும் இருக்கின்றது என்று நினைக்கின்றார்கள். அதற்கு யார் காரணம் என்று அவர்களே ஒத்துக்கொண்டார்கள். அது பத்திரிகையிலும் வருகின்ற செய்தியாகியிருக்கின்றது. பாராளுமன்றத்திலே பேசி யிருக்கின்றார்கள். சாஸ்திர சபையிலே பேசியிருக்கின்றார்கள். அங்கு அங்கத்தினர்கள் பேசி அதற்கு மந்திரியும் பதில் சொல்லியிருக்கின்றார்கள். அந்த ரிஸ்க்கையும் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியிருந்தும் வீண் பழி எங்களுக்கு. எனக்குப் பெயர்தான் உணவு மந்திரி. எனக்கும் கீழே ஒரு செயலாளர் இருக்கின்றார். அவருக்கும் கீழே கமிஷனர் இருக்கின்றார். எனக்கு வேறு பெயர் வைக்க வேண்டுமே தவிர, மந்திரி என்கின்ற பெயர் அவ்வளவு நல்லது அல்ல என்றுதான் நான் சொல்லுகின்றேன். உணவு மந்திரி என்றால், அவருக்கு மேலே ஒரு உணவு மந்திரி, கல்வி மந்திரி என்றால் அவருக்கு மேலே ஒரு கல்வி மந்திரி போல் இருக்கிறார்கள் அவர்கள். இன்னும் சொல்லப்போனால் மாமியார் மருமகள் நிலைமை போன்று இருக்கின்றது. இங்கு விளைகின்ற கடலையை நாம் சரியாக வைத்துக்கொள்ள முடியவில்லை. நமக்கு வேண்டிய எண்ணெயை நாம் தயார் பண்ண முடியவில்லை. நாம் கட்டுப்படுத்துவதற்காகக் கேட்டால், அதற்கு வேறு பல காரணங்களையெல்லாம் சொல்லுகின்றார்கள். நம்முடைய செயலர் அவர்களும் அவர்களுக்கு எழுதி அனுப்பியிருக்கின்றார்கள். செய்தி போயிருக்கின்றது. அதற்கு நல்ல பதில் கிடைக்கும்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

என்று நினைக்கின்றேன். அப்படி வந்துவிட்டால், கடலை எண்ணெய் மற்றவைகள் எல்லாம் நமக்குச் சரியான முறையிலே கிடைக்கும். கடலைப் பிண்ணாக்கு பற்றிச் சொன்னார்கள். மாட்டுத் தீவனத்திற்கு மட்டுமல்ல, வயலுக்குப் போடுவதை தஞ்சை மாவட்டத்திலே பிண்ணாக்குதான். அந்தப் பிண்ணாக்கு தான் நாங்கள் எல்லாம் போடுவது. அது அங்கே கிடைக்கவில்லை. மற்ற ரசாயன உரங்களை வாங்கிப்போட வசதியற்றவர்களாக சில விவசாயிகள் இருக்கின்றார்கள் என்றாலும், அந்தக் கடலைப் பிண்ணாக்கு கிடைக்கின்ற ஒரு நல்ல நிலைமையை உண்டாக்க அங்கே நிலக் கடலையைக் கொண்டு போக வேண்டுமென்று நான் கேட்டிருக்கின்றேன்.

மற்றபடி, சிறு தான்யங்கள்—சோளம், கம்பு, கேழ்வரகு இவைகளை கிட்டத்தட்ட 15 லட்சம் டன் நமது மாநிலத்திலே உற்பத்தி பண்ணுகின்றோம். நமக்குக் கிட்டத்தட்ட 18 லட்சம் டன் தேவை இருக்கின்றது. அதிலே மக்காச்சோளம் கொஞ்சம் விளைகின்றது. மக்காச்சோளத்தை நமது நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கும், யாரும் சாப்பிடுவதில்லை. அதனால் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்துக்கொண்டிருக்கின்றது. மிச்சமாவதை அதைச் சாப்பிடாமல் கட்டுப்படுத்த நமக்குக் கொஞ்சம் வரி இருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்தினால், கொஞ்சம் விலை இறங்குகின்றது. அதை வெளியிலே அனுப்பலாமாக யோசித்துக் கொண்டிருக்கின்றோம். கனியாருக்கு பெர்மிட் கொடுக்கக் கூடாது என்ற முறையிலே நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: The Civil Supplies Corporation can purchase maize and use it as a substitute for cattle feed.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: யோசனையில் இருக்கின்றது. அதற்காக அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டிருக்கின்றோம். நாங்கள் வாங்கி வைத்திருக்கின்றோம். அவர்கள் வாங்க வேண்டும். எங்கெங்க இடத்திற்கு, பாக்டரிகளுக்குத் தேவை என்று தெரிந்துகொண்டு கொடுக்கலாம். அதற்கு எப்படி நாம் ஸ்டாக் பண்ணலாம் என்ற யோசனை இருக்கின்றது. அதிலே அது கொஞ்சம் யோசனையில்

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இருக்கின்றது. நம்முடைய குஜராத் மாநிலத்திலிருந்து வந்தவர் அங்கே கொஞ்சம் பஞ்சம் வந்துவிட்டது என்று—நான் டெல்லியில் உணவுப் பிரச்னையைப் பற்றி, உங்களுக்குப் பிடிக்காத கொள்கையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தபோது—சொன்னார்கள். அப்படி குஜராத் பற்றிப் பேசும்போது, அவர்களுக்கு 5 ஆயிரம் டன் கொடுப்பதாக சம்மதித்து வந்தேன். அந்த 5 ஆயிரம், 10 ஆயிரம் டன் அவர்களுக்குக் கொடுக்கின்றதாக இந்த 'பாலிஸி நோட்'ல் சொல்லியிருக்கின்றேன். இதனால் விவசாயத்திற்குக் கொஞ்சம் பணம் கிடைக்கின்ற அளவுக்குச் சமாளித்து வந்திருக்கின்றோம்.

மிளகாய், மஞ்சள், ஏலக்காய் போன்ற பொருள்கள் எல்லாம் நமக்கு சீசனல் பிளினஸ். கீரைத் தண்டு விலை என் ஏறிவிட்டது, அவரைக்காய் விலை என் ஏறிவிட்டது, வெண்டைக்காய் விலை என் ஏறிவிட்டது என்று சொல்லுகின்றார்கள். எனென்று உங்களுக்குத் தெரியும். சீசனிலே தஞ்சை மாவட்டத்திலே, மற்றப் பகுதிகளிலே பார்த்தோமானால், கிராமத்திலே இருப்பவர்களைப் பார்ப்போமானால், அவர்கள் ஒரு வருடத்திற்கு வேண்டியதை வாங்கி வைத்துக்கொள்வார்கள். அது ஒரு சீசனிலேதான் கிடைக்கும். குடை மிளகாய் என்றும் பச்சை மிளகாய் என்றும் வாங்கி, அதை மொளியிலே போட்டு வைத்துக்கொள்வார்கள். அதேபோல் எந்தப் பொருளாக இருந்தாலும், அதற்கு என்று ஒரு சீசன் இருக்கின்றது. கத்திரிக்காய் கிடைக்கின்ற சீசனிலே ஒரு கூடை விலை என்ன என்றுதான் கேட்பார்கள். அப்படிப்பட்ட காலம் சீசன். 3 மாதம் கழித்தால் கிலோ என்ன விலை என்றுதான் கேட்பார்கள். அதற்குப் பிறகு கத்திரிக்காய் முற்றிப் பருப்பு விலை விற்கும். இப்படித்தான் சீசனைப் பொறுத்து, விலை ஏறும், இறங்கும். சீசனில் திடீரென்று மிளகாய் விலை ஒரு கிலோ 5 ரூபாய்க்கு விற்கும். அடுத்த வருடம் மிளகாய் போட வேண்டும் என்று ஆரம்பித்துவிடுவார்கள். எங்கு பார்த்தாலும் மிளகாய், மிளகாய் என்று ஆகிவிடும். உடனே விலை ஒரு கிலோ ரூ 2 என்று ஆகிவிடும். வியாபாரிகள் விவகாரங்கள் எல்லாம் நமக்குத் தெரியும். ஓஹோ, இந்த வருடம் விலை படுத்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு அடுத்த வருடம் மஞ்சள் போடுவார்கள். அந்த வருடம் மஞ்சள் உற்பத்தி அதிகமாகப் போய்விடும். அப்படி

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

சீசனிலே மஞ்சள் வரும்போது, மஞ்சள் விலை குறைந்துவிடும். இதிலே ஒரு கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் ஒரு வருடம் உற்பத்தி அதிகமாகப் பண்ணலாம், விலை குறைந்துவிடும்; உற்பத்தி குறைவாக இருந்தால், சீதோஷ்ண நிலை காரணமாக, மற்ற நிலைமைகள் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டால் விலை, ஏறுவதான ஒரு நிலைமை இருக்கின்றது. இதில் சர்க்கார் எப்படி முயற்சி எடுக்க முடியும்? இவ்வளவு எக்கிலே இன்னது போட வேண்டும் என்று வரையறுக்கும் அதிகாரம் சர்க்காருக்கு இருக்க வேண்டும். அது வந்துவிட்டால், இதை நாம் சமாளித்துவிடலாமே தவிர, வேறு வழியில் சர்க்காருக்கு முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, பருப்பு பொறுத்துச் சொன்னார்கள். நம் நாட்டில் ஒரு லட்சம் டன்தான் உற்பத்தியாகின்றது. 4 லட்சம் டன் நமக்கு வேண்டியிருக்கின்றது. இது மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து வர வேண்டியிருக்கின்றது. இதிலே துவரை 65 டன், உளுந்து, உளுத்தப்பருப்பு 50 ஆயிரம் டன், கடலைப் பருப்பு 2 லட்சம் டன் வருகிறது. இவையெல்லாம் நம் நாட்டில் விளைகின்ற பொருள்கள் அல்ல. கடலைப் பருப்பு தவிர, மற்ற எல்லாமே 1 லட்சம் டன்தான் இங்கே விளைகின்றது. அந்த அளவுக்குத் தான் நம்முடைய பூமியின் தன்மை இருக்கின்றது. உளுந்து பயிரிடலாம், துவரை பயிரிட லாம் நமது நிலத்தில் ஒரு ஏரியா கிடைக்கவில்லை. நாம் அதற்காக முயற்சியில் விஞ்ஞானிகளும் கூட, அந்த அளவுக்கு உற்பத்தியை நாம் செய்ய முடியும் என்று சொல்வதற்கில்லை. அவைகளை வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வர வேண்டியிருப்பதனால், இப்போது நம்முடைய சில்லி சப்ளைஸ் கார்ப்பரேஷன் இவைகளை மக்களுக்கு விநியோகம் செய்கின்ற ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்காகத் தொஞ்சம் ஆசீர்வாதத்தை உங்களிடம் கேட்கலாம் என்றாலும் கூட பயமாக இருக்கின்றது. நீங்கள் ஸாக்கிரதை, ஸாக்கிரதை, பார்த்து வாங்குங்கள் என்று சொல்லீர்கள். இப்போது துவரம் பருப்பு 542 டன் வாங்கியிருக்கின்றார்கள், உளுந்து 1,500 டன் வாங்கியிருக்கின்றார்கள், உளுத்தம் பருப்பு 503 டன் வாங்கியிருக்கின்றார்கள், கடலைப் பருப்பு 20 டன் வாங்கி வந்து, இப்போது சென்னையிலே விற்பார்களானால் ரூ. 2.80 பைசா

1973 மார்ச் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

அல்லது 3 ரூபாய் வரையில் விற்கிறார்கள். துவரம் பருப்பு ரூ. 2.30-க்கு விற்கிறோம். ஆனால் கமிஷனர் அந்த அளவுக்கு ஓடவில்லையென்று சொல்லுகிறார். ஜாஸ்தி வாங்கமாட்டேன் என்கிறார்களாம். உளுத்தம் பருப்பு ரூ. 3.20, கடலைப் பருப்பு ரூ. 1.75, பச்சைப் பயறு ரூ. 2.05. இந்த விலைக்கு விற்கிறோம். ஆனால் இந்தப் பொருள்களை வாங்க ஆட்கள் வரவில்லையென்று சொல்லுகிறார்கள். காரணம் ஆங்காங்கே ஜவுளிகள் தனியாக வியாபாரிகளிடமிருந்து கடனுக்கு வாங்கிக்கொண்டிருப்பதால், அவர்களிடமே போய்த் திரும்ப வாங்குகிறபடியால், அந்த வியாபாரிகள் அவரவர்கள் இஷ்டம்போல் விலையை மாற்றுகிறார்கள். இருந்தாலும் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய திரு. சுவாமிநாதன் அவர்களும், நாயுடு அவர்களும் அவர்கள் ஊரில் கடையை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் ஒன்றும் தப்பு இல்லை. நகரத்தில் மட்டுமல்லாமல் கொடுத்துக்கொண்டு, கிராமங்களில் உள்ளவர்களுக்கு இல்லையென்று சொன்னால், என்ன செய்வார்கள் என்று கேட்டார்கள். இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். கூடிய விரைவில் மிக விரைவாகச் செய்யவிருக்கிறோம். கிராமங்களுக்கு சிலர் கொடுக்கும் பொறுப்பு வந்தாயிவிட்டது. மண்ணெண்ணெய் கொடுக்க பொறுப்பை வற்றுக் கொண்டிருக்கிறோம். கொள்முதல் செய்து கிராமங்களுக்குக் கொடுக்க முடியும். சர்க்கரையைப் பற்றி பலமுறை மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஆகவே அதில் விளக்கம் தேவையில்லை. உற்பத்தி மாதம் 25 ஆயிரம் டன். இதை அவர்கள் வாங்கிக்கொண்டு நமக்கு இப்போது 9,600 டன் தான் கொடுக்கிறார்கள். இதில் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒரு ஆளுக்கு ஒரு கிலோ என்ற கணக்குப் போட்டால், எட்டாயிரத்து சொச்சம் டன் வருகிறது. 90 ஆயிரம் கார்டுகளுக்குக் கணக்குச் சொல்லுகிறேன். ஒரு கிலோ வீதம் போட்டால் 8,000 சொச்சம் டன் வருகிறது. மற்ற ஆயிரம் டன்னை வைத்துக்கொண்டு இந்த 6 கிலோ கார்டுகளுக்கு போடுகிற நிலைமை இருக்கிறது. மற்றபடி வெள்ளை மார்க்கெட், கறுப்பு மார்க்கெட் என்று சொல்லுகிறார்கள், அதிக விலை கொடுத்து வாங்குபவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி டீக் கடைக்காரர்கள், காபி கடை வைத்திருப்பவர்கள், ஹோட்டல்காரர்கள்தான் வாங்குகிறார்கள். அந்த நிலைமையில்லாது பண்ண வேண்டுமென்றால் ஒரு 15 ஆயிரம் டன் கொடுத்தால் போதும். அந்த நிலைமையை நாம் 8·10 பிற பகு

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

கட்டுப்படுத்த முடியும். யார் யார் கிராமங்களில் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்களோ, அவர்களுக்கு இந்த விலையில் சினியைக் கொடுத்தால் அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க மாட்டார்கள். அதற்காக 15 ஆயிரம் டன் கொடுத்துவிடுங்கள் என்று கேட்கிறோம். 25 ஆயிரம் டன்னை உற்பத்தி செய்து மத்திய சர்க்காரிடம் கொடுத்துவிட்டு, 15 ஆயிரம் டன் கொடுங்கள் என்று கெஞ்சுகிறோம். இடைக்கவில்லை அவ்வளவு தான் சொல்ல முடியும். எதிர்க் கட்சித் தலைவர் ஆரம்பிக்கும்போது, ஜாடையாகச் சொன்னார்கள். தாயுடு அவர்கள் கொஞ்சம் காதில் வாங்க வேண்டும். 25 ஆயிரம் டன்னைக் கொடுத்துவிட்டு 15 ஆயிரம் டன் கொடுங்கள் என்று கேட்கிறோம். 9 ஆயிரம் டன் கொடுக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் மத்திய சர்க்கார் காரணம் என்று சொன்னார்கள். இருந்தாலும், மாநில சர்க்கார் தான் பொறுப்பு. எப்படியாவது நம்மை ஒரு அடி அடிக்காமல் இருக்க முடியாது. உள்ளபடியே சொல்லுகிறேன். எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது? எதிர்காலத்தில் நம் முடைய சந்ததியினரெல்லாம் கொம்பக் கஷ்டப்படப் போகிறார்கள். விரோதிக்கு விரோதி நண்பன் என்ற முறையில், உண்மையைப் பேசுவதில் தப்பு இல்லை. சினியைப் பொறுத்த வரையில், நமக்கு 15 ஆயிரம் டன் கொடுத்தால் ஓளவுக்கு நிலைமையைச் சமாளிக்க முடியும். சினிக் கார்டு பற்றி உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். நானும் சொல்லியிருக்கிறேன். பல இடங்களில் இதைக் கண்டிப்பிடிக்கச் சொல்லியிருக்கிறேன். மேலேயிருந்து கலெக்டருக்கு உத்தரவு போயிருக்கிறது, மறுபடியும் 'வெரிபை' பண்ணச் சொல்லி. எங்கெங்கு கார்டு இருக்கிறதோ அங்கே 'வெரிபை' பண்ணி சரிபண்ணிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மண்ணெண்ணெயைப் பொறுத்த வரையில்....

திரு. கே. ராஜாராம்: ஒரு சிறு விளக்கம் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் பேசும்போது கேரளா பார்டரில் அவர்கள் இருக்கும்போதே, அவர்களுக்கு எதிராகவே ஒரு லாரி சாக்கோடு கேரள எல்லைக்குள் போனதாகச் சொன்னார்கள். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? லாரியைப் பிடித்தார்களா? லாரியை அனுமதித்தவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப்

1973 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

பட்டிருக்கிறதா? லாரி நம்பரைக் குறித்து கேரளா அரசாங்கத்திற்குப் புகார் செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தைச் சொல்லவேண்டும். எனென்றால் இனியாவது இதுமாதிரி நடக்காமலிருக்க உஷாராக இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அந்த லாரி கேரளா லாரி. இடத்தின் பெயர் மீஞ்சூர்புரம் ரெயில்வே ஸ்டேஷன். சென்னைக்கு இங்கே இருக்கிறது. இது ரோடு. இந்தத் தெரு நம் தெரு. அந்தப் பக்கம் லாரி நிற்கிறது. நான் போய்விட்டேன். லாரி மூவாகிறது. இங்கிருந்து ஹெட் லோடு மூலம் எற்றிவிட்டார்கள். முதலில் ஒரு லாரியைப் பிடித்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடாது. நம் அதிகாரிகளைக் கூப்பிட்டுத் திட்டிவிட்டு நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். மறுபடியும் நடக்காமலிருக்க விசாரித்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம்.

மண்ணெண்ணெயைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தில் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும் அளவுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு முன்னாலே யார் யார் சின்ன ஏஜண்டுகளாக இருக்கிறார்களோ அவர்களைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். கார்டு இல்லாத காரணமாக அப்போது கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. அதற்கு கார்டு கொடுத்து இரண்டு நாளைக்குள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறோம். இப்போது கொஞ்சம் கஷ்டம். இந்தியன் ஆயில் கம்பெனியில் மொத்தம் கொடுக்க வேண்டிய ஸ்டாக்கிலிருந்து 10 சதவிகிதம் குறைத்துத் தற்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு பயங்கர தட்டுப்பாடு இல்லாத அளவுக்கு நிரவலாகக் கொடுக்க முடியும். வந்ததற்குக் காரணம் சொல்லுகிறேன். கூட்டுறவுத் துறையில் கொடுக்க வேண்டுமென்று நான் ஏற்பாடு பண்ணியதால், கூடிய விரைவில் கள்ள மார்க்கெட் வியாபாரிகள் அதிக லாபம் அடிக்க முடியாமல் தப்பித்திருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறையிருக்காது என்று கருதுகிறேன். இருந்தால் திரு. சுவாமிநாதன் சொல்லியிருப்பார். கூட்டுறவுத் துறை நல்ல முறையில் செயல்படுகிறது. அதே உத்தரவை ராமநாதபுரம்

மாவட்டத்திற்குப் போட்டிருக்கிறோம். மதுரை மாவட்டத்திற்கும் போட்டிருக்கிறோம். சிவில் சப்ளைஸ் கமிஷனர் நடவடிக்கை எடுத்து, நேரில் செல்கிறார்கள். ஒரு இடத்தில் ஒரு பஞ்சாயத்தில் 5 'ஹாம்லட்' இருக்கிறது. 4, 5 மைல் அங்கே போகாமல் இருந்து விடுகிறார்கள். இதற்காக நாங்கள் ஒரு யோசனை சொல்லியிருக்கிறோம். அதற்காக ஒரு ஸ்பெஷல் அப்பாயிண்டுமெண்டு பண்ணி அவரை ஒரு இடத்தைச் சொல்லி, அங்கே போகச் சொல்லுகிறார்கள்.

• THIRU A. R. DAMODARAN: Sir, since the Hon. Minister's reply may give a wrong impression to the people of Tamil Nadu I would like to inform him that there is going to be a very serious shortage of kerosene within two days' time, because kerosene production is being diverted to high-speed diesel oil and Aviation turbine fuel and all the three Companies have cut down the quota for the month of March. Let him not convey the impression that the business men and black markets are responsible for the shortage. He should go into the overall supply position of the oil companies from which he will find that there has been more than a 20 per cent cut in the month of March.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்களையெல்லாம் கூப்பிட்டு கமிஷனர் ஒரு நாள் மீட்டிங்கே நடத்தியிருக்கிறார். அதிகாரங்கள் ஏகதேசமாக நம்மிடம் இருந்தால், எதையும் செய்ய முடியும். எங்களுக்கும் மேலேயிருக்கிற காரணத்தால், சிலவற்றையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத நிலையிருக்கிறது. அதற்கான நடவடிக்கையை நேற்று கமிஷனர் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே எங்கு குறைபாடுகள் இருந்தாலும், தயவுசெய்து சட்ட சபைக்குப் போய்ப் பேசுவது என்ற வாய்ப்பைப் பார்க்காமல், நேரடியாகக் குறைபாட்டைப் பற்றி எழுதியனுப்பினால், உடனடியாக நடவடிக்கை எடுத்து நிவர்த்தி செய்யும் அளவுக்கு நம்முடைய இலாகா செயல்பட்டு வருகிறது. சீனியாக இருந்தாலும், அரிசியாக இருந்தாலும், உமாக இருந்தாலும், மண்ணெண்ணெயாக இருந்தாலும், தயவுசெய்து நீங்கள் அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறையட்டும், குறையட்டும், பஞ்சம் வரட்டும் என்று பார்த்துக் கொண்டு இருந்துவிட்டுச் சொல்லுவதைவிட

இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில், எங்களுக்கு உண்மை நிலைமைகளைச் சொல்வதோடு இப்படித் தவறான சில காரியங்கள் செய்பவர்களைக் கண்டுபிடிக்க, சமூக விரோதிகளைக் கண்டுபிடிக்க நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கரும்பு விலை நிர்ணயம் பற்றிப் பேசியவர் சென்றுவிட்டார். அதற்கு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். உறுப்பினர்கள் திருவாளர்கள் சுவாமி நாதனும், தாமோதரனும் சோசியலிசத்தைக் கட்டாயப் படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காகக் கட்டாயப் படுத்த மாட்டோம். இதிலும் கொள்கைதான் இருக்கிறது. ஆண்டவனைப்பற்றிச் சொல்லுவதும் கொள்கை தான். அரசியலைப் பற்றிச் சொல்லுவதும் கொள்கை தான். காந்தியின் பெயரைச் சொல்லுவதும் அண்ணாவின் பெயரைச் சொல்லுவதும் ஒரு கொள்கை தான். இப்படி ஒவ்வொரு இடத்தில் ஒரு பெயரைப் பயன்படுத்தலாம். சோசலிசத்தை வைத்து அந்தக் கட்சியை வளர்ப்பதும் மக்களைச் சுரண்டுவதுமான நிலைமை கிடையாது. எந்த அளவுக்கு மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்வோம். கூடிய வரையில் முதலமைச்சர் அவர்கள் திட்டம் 90 பேருக்கு சாதகமாகத் தான் இருக்கும். 10 பேருக்கு இருக்காது. அவர்களுக்குள்ள கஷ்டத்தைச் சரிபண்ணினால்கூட சரியாகிவிடும். நாங்கள் சோஷலிசம் என்கிறதை வைத்துக் கொண்டு அதற்காக கஷ்டப்படுத்துவோம் என்று நீங்கள் தயவுசெய்து எண்ண வேண்டாம். எந்தெந்த அளவுக்கு மக்களுடைய நன்மையைப் பாதிக்காத அளவுக்கு, எந்தெந்த முறையிலே திட்டங்களையெல்லாம் கொண்டுவர வேண்டும், கொள்முதல் பற்றிய நிலைமைகளையெல்லாம் கொண்டுவர வேண்டும் என்பதிலே நாங்களெல்லாம் அக்கறை கொண்டிருக்கிறோம். ஆகவே தனிப்பட்ட வியாபாரிகள் இதுவரையிலே மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து கொஞ்சம் யோசிக்க வேண்டும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும் வியாபாரி அல்ல. திரு. தாமோதரன் அவர்களும் வியாபாரி அல்ல. நானும் வியாபாரி அல்ல. அவர்களும் பெரிய மிராசுதார் அல்ல. நானும் பெரிய மிராசுதார் அல்ல. நமக்குள் ஏதோ தனிப்பட்ட நிலைமைகளுக்காகவோ, கொள்கை

8-20 பிற் பகல்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 27

களுக்காகவோ விரோதங்கள் இருந்தாலும்கூட, மக்களைப் பொறுத்த வரையிலே, ஒரு கிட்டம் என்று வரும்போது, தனிப்பட்டவர்கள் மக்களை எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. துவரம் பருப்பிலேகூட கலப்படம் செய்து விற்கிறார்கள். மனிதன் சாப்பிட்டால் நோய் வருகிற அளவுக்கு விஷம் கலந்து விற்கிற அளவிலேகூட செய்கிறார்கள் தனிப்பட்ட வியாபாரிகள். இதிலேயிருந்து மக்களைத் தப்புவிக்க, சர்க்கார் எடுக்கும் முடிவு, மக்களுக்காக ஏற்றுக்கொள்ளும் முடிவு வருமானால், நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது தலைவர் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீண்டநேரம் அவர்கள் பொறுத்திருந்தார்கள். இந்த முக்கியமான உணவுப் பிரச்சினைபற்றி நான் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். மீண்டும் உங்களுக்கெல்லாம் நன்றி கூறிக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

6. மன்றத்தின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்

A *Statutory Rules and order*—Nil.

B. Reports, Notifications and Other Papers.

* 110. Policy Note on Agriculture 1973–74. (Tamil).

111. Policy Note on Dairy Development Department 1973–74. (English and Tamil).

112. Commercial Budget for 1973–74, relating to Dairy Development Department.

* Circulated to all M.L.C. on 26th March 1973.

1973 மார்ச் 27]

இணைப்பு—I.

[183 ஆம் பக்கத்தில் 281 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

கும்பகோணம் அரசு மருத்துவமனையில், உதவி மருத்துவர் திரு. திருநாவுக்கரசு 5—1—1973 அன்று கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். திரு. இ. எஸ். ராஜகோபால் என்ற வட்ட காவல் ஆய்வாளர் மாலை ஆறு மணி அளவில் கும்பகோணம் மருத்துவ மனைக்கு வந்து மருத்துவர் திரு. திருநாவுக்கரசிடம் தான் கொண்டுவந்த டி.டெடிசால் என்னும் ஊசி மருந்தை ஊசி மூலம் தனக்கு போடும்படி கேட்டார்.

மாலை ஆறு மணிக்கு மருத்துவர் திரு. திருநாவுக்கரசு, டி. டெடிசால் என்னும் மருந்தில் ஒரு சி.சி. அளவு திரு. இ. எஸ். இராஜகோபால் அவர்களுக்கு ஊசி மூலம் செலுத்தினர்.

ஆனால் மாலை 6.20 மணியளவில் ஊசி போட்டதின் எதிர் விளைவு உண்டாகி அதனை நிவர்த்திக்க அனைத்து முயற்சிகள் செய்தும் மாலை 6.40 மணிக்கு அவர் இறந்துவிட்டார்.

இணைப்பு—II.

[242 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு.

1. கொள்முதல்.

1972 ஆம் ஆண்டில் வணிகர்களிடம் "லெவி" (விதிப்புக் கொள்முதல்) முறையில் நெல், அரிசி கொள்முதல் செய்யும் திட்டம், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு உபரி மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. தொடக்கத்தில் 25 சத வீதமாக இருந்த "லெவி" வீதம் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைப் பொறுத்தமட்டில்,

1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் முதல் 15 சத வீதமாகக் குறைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாளிலிருந்து வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாளிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திலும் "லெவி" முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் 1.10 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படவேண்டுமென்று திட்டமிட்டிருக்க, 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் 1.09 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப் பட்டிருந்தது.

லெவி முறையில் கொள்முதல் செய்ததைத் தவிர, முடை பிருப்புகளை மேலும் பெருக்குவதற்காக 1972 சம்பாப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 57 கிலோ கிராம் கொண்ட நெல் மூட்டை ஒன்றுக்கு ரூ. 30-லிருந்து ரூ. 32 வரையுள்ள விலையில் வெளிச்சந்தையில் 33,230 டன் அரிசி கொள்முதல் செய்யப் பட்டது. விற்பனை செய்யத்தக்க உபரிக் குறுவை நெல்லை தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு வசதி செய்யும் பொருட்டு, அந்த மாவட்டத்தில் செயலிலிருந்த லெவி முறையும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாளிலிருந்து நீக்கப் பட்டன. அதே நேரத்தில், விலைகள் சரிவதைத் தடுக்கும் பொருட்டு, நெல் உற்பத்தியாளர்கள் விற்பனை செய்த குறுவை நெல்லை அரசு அறிவித்த விலைகளில் அரசும், இந்திய உணவுக் கழகமும் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்ய அரசு ஏற்பாடு செய்தது. "லெவி" முறை மீண்டும் செயல் படுத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ம் நாள் வரை 15,628 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

கொள்முதல் விலைகள்.

1971 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளிலிருந்து திருத்தி அமைக்கப்பட்ட கொள்முதல் விலைகள் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ம் நாள் வரை நீடித்தன. 1972 ஆம் ஆண்டு

1973 மார்ச் 27]

அக்டோபர் திங்கள் 14-ம் நாளிலிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு விலைகள் ஏறுமுகமாகத் திருத்தியமைக்கப்பட்டன :—

	1971 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளிலிருந்து 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ஆம் நாள் வரை.	1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாளிலிருந்து.
1. மிக நேர்த்தி		குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 56 (புதிய வகைப் பாடு அறிமுகப்படுத்தப் பட்டது).
2. நேர்த்தி	ரூ. 52·00 (குவிண்டால் ஒன்றுக்கு).	ரூ. 54·00 (குவிண்டால் ஒன்றுக்கு).
3. நடுத்தரம்	ரூ. 49·00 (குவிண்டால் ஒன்றுக்கு).	ரூ. 51·00 (குவிண்டால் ஒன்றுக்கு).
4. மோட்டா ரகம் ..	ரூ. 46·00 (குவிண்டால் ஒன்றுக்கு).	ரூ. 47·00 (குவிண்டால் ஒன்றுக்கு).

நடுத்தர ரகங்களுக்கு ஏறுமுகமாக விலைகளை மாற்றி யமைத்ததன் விளைவாக, மிகுபயன் தரும் ரகங்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டு வந்த ரூ. 1, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது.

அரிசிப் பங்கீடு.

வெளிச் சந்தையில் அரிசி கிடைப்பதையும், அதன் விலையையும், வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி வாயில்களைச் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, "படி அரிசி"த் திட்டம் 1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாளில் கைவிடப் பட்டது. ஆயினும் மாத வருவாய் ரூ. 300-ம், அதற்குக் குறைந்தும் பெறுகிற குடும்பத்தினர்க்காக, மலிவு விலைகளில் அரிசி வழங்கும் திட்டம் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் 1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டது. அற நிறுவனங்கள், அரிசன நல மாணவ விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் ஆகியவற்றுக்கும்

[1973 மார்ச் 27

மலிவு விலைகளில் அரிசி கிடைக்க வகை செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதிகளில் முன்பு உள்ளூர் மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கிய இருப்புகளிலிருந்து செய்யப்பட்ட பங்கீட்டு முறையை (முறைப்படுத்தப்பட்டது) அரசே மேற்கொண்டது. இதனால் இந்தப் பகுதிக்கு வரும் நெல் வரவுகளை மேலும் செவ்வையாகக் கட்டுப்படுத்துவதற்கு வழி ஏற்பட்டது. தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறைந்த அளவில் அரிசி பங்கீடு செய்யப்பட்டது. இவ்வாண்டில் வெளிச்சந்தையில் அரிசி விலை பெருமளவுக்கு ஏறுதலால், பற்றுக்குறைப் பகுதிகளில் மலிவு விலைகளில் அரிசி வழங்கவேண்டிய அவசியம் எழவில்லை. தனியார் வாணிபம் நடைபெற வாய்ப்பளித்து, முடையிருப்பு வைத்துக் கொண்டு மிகக் குறைந்த அளவில் கட்டுப்பாடுகள் விதித்து, 1970 முதற்கொண்டு அரசு பின்பற்றி வரும் உணவுக் கொள்கை வெற்றி பெற்று வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். அரசு இருப்புகளிலிருந்து 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை வழங்கப்பட்ட அரிசி 57,740 டன்களாகும். இது தவிர வெளி அங்காடிகளில் பச்சரிசி விலைகள் மிக அதிகமாயிருந்ததால், இந்திய அரசு நமது மாநிலத்திற்கு ஒதுக்கிய 1,376 டன் நெல்லூர் பச்சரிசியும் 1,000 டன் (நேர்த்தியான) மத்தியப்பிரதேச பச்சரிசியும் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

அவ்வப்போது முடிவு செய்யப்பட்ட மலிவு விலைகளில் வழங்கிய அரிசியின் விலை விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

(சில்லறை விற்பனை விலை—கிலோ கிராம் ஒன்றுக்கு)

புழுங்கல் அரிசி முதல் தரம்	..	ரூ. 1·08	1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் வரை.
		ரூ. 1·10	1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ம் நாளிலிருந்து.
இரண்டாந்தரம்	..	ரூ. 1·02	1972-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ம் நாள் வரை.
		ரூ. 1·04	1972-ஆம் ஆண்டு மே திங்கள் 16-ம் நாளிலிருந்து.

1973 மார்ச் 27]

சச்சரிசி முதல் தரம்	..	ரூ. 1·14	1971-ஆம் ஆண்டு நவம்பர் 26-ம் நாளிலிருந்து.
		ரூ. 1·08	1972-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரை
இரண்டாந்தரம்	..	ரூ. 1·10	1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாளிலிருந்து.
நெல்லூர் பச்சரிசி	..	ரூ. 1·32	
மத்தியப் பிரதேச பச்சரிசி.	..	ரூ. 1·30	

கள்ளக்கடத்தலைத் தடுக்கும் எதிர் நடவடிக்கைகள்.

இம் மாநிலம் தொடர்ந்து தனி மண்டலமாக இருந்து வருகிறது. இம் மாநிலத்திற்கு வெளியே நெல், அரிசி இவற்றை ஏற்றியனுப்புவதற்கு அனுமதிச் சீட்டுகள் தேவையாகும். கேரள மாநிலத்திற்கு அனுமதியின்றி தானியங்கள் ஏற்றியனுப்பப்படுவதாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. இவ்வாறு அனுப்பப் படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகளும், சோந்துக் காவலர் பிரிவுகளும் பலப் படுத்தப்பட்டுள்ளன. உபரி மாவட்டங்களில் "லெவி" முறை செயல்படுத்தப்படாமல், வேலை குறைந்துள்ள காலத்தில், மாவட்டங்களிலுள்ள பணியாளர்கள், எல்லைகளில் சோதனைப் பணியை வலுப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர். எல்லைப் பகுதிகளில் சோதனையை மேலும் கடுமையாக்கும் நோக்கத்துடன், உள்ளூரில் கிடைக்கும் தானிய அளவைக் கருத்திற்கொண்டு எல்லைப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வணிகருக்கும் பங்கீட்டு அளவுகளை முடிவு செய்து, அதன்படி அந்தப் பகுதிக்குள் செல்லும் தானியங்களை முறைப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. எல்லைப் பகுதிகளுக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் தானியங்கள் அந்தப் பகுதியில் அவற்றைப் பயன்படுத்து வோருக்கே அவை விற்பனை செய்யப்படுகின்றனவாவென்றும், நேர்மையற்ற வணிகர்களால் எல்லையைத் தாண்டி கள்ளத் தனமாக கடத்திக்கொண்டு போகப்படாமலும் பார்த்துக்கொள்ளும் பொருட்டு, சர்க்கரைப் பங்கீட்டிற்காக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளின் பேரில் அரிசிப் பங்கீட்டு முறை கொண்டுவரப் பட்டது. இந்த எல்லைப் பகுதிகளில் நெல், அரிசி போக்குவரத்தை

[1973 மார்ச் 27

மிக விழிப்புடன் கண்காணித்து வரவும், இந்த மாநிலத்திற்கு வெளியே நெல், அரிசி ஆகியவற்றைக் கடத்திச் செல்வதற்காகக் கள்ளத்தனமாக இருப்பு கட்டி வைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் வகையிலும் எல்லையோரத்தில் 5 மைல் சுற்றளவுக்குள் வருபவையும் ஏற்கெனவே போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் கீழ் வருபவையுமான பகுதிகளைத் தவிர, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் கட்டுப்பாட்டு விதிகளை மீறுவதற்கு ஏதுவாயுள்ள பகுதிகளுக்கு அடுத்துள்ள பகுதிகளும், தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு நெல், அரிசி (போக்கு வரத்துக் கட்டுப்பாட்டு) ஆணையின்கீழ் அறிவிக்கப்பட்டன.

அடுத்து வரும் ஆண்டிற்கான கொள்கை

சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் மாத வருவாய் ரூ. 300-ம் அதற்குக் குறைந்தும் உள்ள குடும்பங்களுக்கு மலிவு விலைகளில் அரிசி தொடர்ந்து வழங்கப்படும். அதற்காகவும், முடையிருப்புகட்டும் பொருட்டும், உபரி பகுதிகளில் செய்யப்படும் கொள்முதல்கள் மீதும் உபரிப் பகுதிகளிலிருந்து வெளியே அனுப்பப்படும் தானியங்கள் மீதும் "லெவி" விதித்துக் கொள் முதல் செய்ய அரசு கருதியுள்ளது. முந்திய ஆண்டுகளில் "லெவி" செயல்படுத்தப்பட்டுவந்த தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைத் தவிர, இவ்வாண்டில் உபரி விளைச்சல் பெற்றுள்ள மாவட்டங்களாகிய திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கும் "லெவி" முறை நீட்டிக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்பு லெவி முறை செயல்படுத்தப்பட்டு வந்த கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங் களிலும், "லெவி" முறை தொடர்ந்து செயலில் இருக்கும். இது தவிர, "லெவி" முறை கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதற்கும் பொருந்தும். எல்லைப் பகுதிகளில் தானியம் வழங்கவும், இவ் வணிகத்தில் ஒழுங்கு முறையை நிலைநாட்டும் பொருட்டும் இந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய தானிய இருப்புகளை வெளிப்படுத்து வதற்காகவுமே இந்த "லெவி" முறை கொண்டுவரப்பட்டது.

1973 மார்ச் 27]

2. கோதுமை

1972-ல் இந்திய அரசு 426,800 டன் கோதுமையை இம் மாநிலத்துக்கு ஒதுக்கியது. நவம்பர் வரையில் சராசரி திங்கள் ஒதுக்கீடு 35,000 டன்களாக இருந்தது. 1972 டிசம்பரில் இது 25,000 டன்களாகக் குறைக்கப்பட்டது. நாடு முழுவதிலும் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக ஜனவரி முதல் இது மேலும் திங்கள் ஒன்றுக்கு 15,000 டன்களாகக் குறைக்கப்பட்டது. 1972-ல் கோதுமைப் பொருள்கள் தயாரிப்புக்காக உருளைமாவு ஆலை களுக்கு 402,295 டன் ஒதுக்கப்பட்டது. எஞ்சியவை பொதுப் பங்கீட்டு முறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

கோதுமைப் பொருட்கள் (மைதா/ரவை)

பல மாநிலங்களில் வறட்சி நிலைமைகள் நீடித்ததன் காரணமாக, கோதுமைக்கு அதிகத் தேவை ஏற்பட்டதால், மாவு ஆலைகள் தயாரிக்கும் கோதுமைப் பொருட்கள் முறையான பங்கீட்டின்கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்று இந்திய அரசு கருத்து தெரிவித்திருந்தது. இதற்கிணங்க, கோதுமைப் பொருள் களைப் பெருமளவில் பயன்படுத்தி வந்தவர்களுக்கு அவர்கள் இதற்குமுன் செலவு செய்த பொருள்களின் அடிப்படையிலும், விற்பனை வரிக்காக மதிப்பிடப்பட்ட மொத்த வியாபாரத் தொகையின் அடிப்படையிலும் அவர்களுக்கு இப் பொருள் களுக்காக அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. சர்க்கரை வழங்கும் சில்லறை வியாபாரிகளின் மூலம், தேவை ஏற்படும் போதெல்லாம், குடும்ப அட்டைகளின் பேரில் குடும்பத்தினருக்கும் கோதுமைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

கோதுமைத் தவிடு

இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவு குறைந்ததால், கோதுமைத் தவிடு உற்பத்தியும் குறைந்துவிட்டது. இதனால் கால்நடை வளர்ப்போருக்கு, அனுமதிச் சீட்டின் பேரில், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாகக் கோதுமைத் தவிடு வழங்கும் முறை சென்னை மாநகரில் கொண்டுவரப்பட்டது. கால்நடை வளர்ப்போர்

[1973 மார்ச் 27

அனுப்பும் விண்ணப்பங்களைச் சரிபார்த்த பின்னர் அவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க மாநகர் உணவுப் பொருள் வழங்கல் துணை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறை ஏனைய பெரிய நகரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளோருக்குக் குறிப்பிட்ட அளவுக்கே கோதுமைத் தவிடு வழங்கப்படுகின்றது.

3. சிறு தானியங்கள்

1972 ஆம் ஆண்டில், சிறு தானியங்கள் வெளி அங்காடியில் நியாயமான விலைக்குத் தாராளமாகக் கிடைத்ததால், இம் மாநிலத்திற்கு மைலோ ஒதுக்கப்படவில்லை. இம் மாநிலத்திற்குள் மக்காச்சோளம் அதிகமாய்த் தேவைப்படாததால், உற்பத்தியாளர்களுக்கு நியாய விலை கிடைக்கச் செய்வதற்காக, 1972 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மக்காச்சோளம் ஏற்றுமதிக்காக அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. குஜராத் அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், குஜராத் வெள்ளத் துயர் தணிப்புக்குழு இங்கிருந்து 5,000 டன் கம்பும், 3,000 டன் மக்காச் சோளமும் ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, குஜராத் அரசுக்கு 5,000 டன் மக்காச் சோளமும், 2,500 டன் கம்பும் வழங்குவதற்காக அவற்றைக் கொள்முதல் செய்யும் வாய்ப்புபற்றிப் பரிசீலிக்கவும் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் காரணமாக, மக்காச் சோளத்திற்குப் போதுமான விற்பனை வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தனியார் ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

4. சர்க்கரை

இந்திய அரசு, சர்க்கரை ஆலைகளுடன் செய்துகொண்ட ஓர் ஏற்பாட்டின்படி, 1972 ஜனவரி முதல், சர்க்கரை ஆலைகளிலிருந்து உற்பத்தியாகும் சர்க்கரையில் 60 சத விதத்தை, அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அமைப்புகள் மூலம் வழங்குவதற்காக எடுத்துக் கொண்டு இம் மாநிலத்திற்குத் திங்கள் தோறும் சுமார் 10,000 டன் சர்க்கரையை ஒதுக்கி வந்தது. நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள்களையும் இன்றியமையாப் பிற பொருள்களையும் பங்கீட்டு

1973 மார்ச் 27]

முறையின்கீழ் வழங்க நேரிட்டால், அப்படி வழங்கப்படும் பொருள்களைப் பதிவு செய்வதற்கேற்ற வண்ணம் இந்த அட்டைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்குக் குறைந்த அளவு ஒரு கிலோ சர்க்கரையும் பேரளவாக 6 கிலோ சர்க்கரையும் வழங்குவதற்குட்பட்டு, சர்க்கரை பயன்படுத்தும் அளவையொட்டி இது வருமானத்தைப் பொறுத்தது. வெவ்வேறு பகுதிகளில் சர்க்கரை வழங்கும் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது. 1972 ஆம் ஆண்டில் 117,922 டன் சர்க்கரை விற்பனையாயிற்று. சர்க்கரை ஆலைகள் மீது 60 சத வீதத்தில் சட்டப்படிக்கான 'லெவி' முறை 1972 ஜூலைத் திங்களில் கொண்டுவரப்பட்டது. இந்த 'லெவி' 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் 70 சதவீதமாக உயர்த்தப்பட்டது. மாநிலம் முழுவதிலும் 9,000-க்கும் அதிகமான சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இந்திய அரசு நிர்ணயித்துள்ள லெவி விலைகளை வைத்து, லெவி சர்க்கரையின் விற்பனை விலை 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் நாள் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 1.85 ஆகக் குறைக்கப்பட்டது. பின்னர், சர்க்கரை விற்பனை விலை நாடு முழுவதுக்கும் ஒரே சீரான விலையாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசு முடிவு செய்ததன் விளைவாக, சர்க்கரை விலை 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 ஆகவும், 1972 டிசம்பர் முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.15 ஆகவும் உயர்த்தப்பட்டது. சர்க்கரை உற்பத்தி குறையுமென்று எதிர்பார்க்கப்பட்டதன் காரணமாக, இம் மாநிலத்துக்கு வழங்கப்படும் சர்க்கரையின் அளவு திங்கள் ஒன்றுக்கு ஏறத்தாழ 9,700 டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

5. அரசு வணிகம்

1972-73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை சட்ட மன்றத்தின் முன் வைத்து முதலமைச்சர் உரையாற்றுகையில், இன்றியமையாப் பொருள்களை உற்பத்தி செய்வோர், பயன்படுத்துவோர் ஆகியோரின் நலனுக்காக இன்றியமையாப் பொருள்கள் வாணிபத்தை மேற்கொள்ள தமிழ் நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தை அமைப்பது பற்றி குறிப்பிட்டார். இக் கழகம் 1972 ஜூலை முதல் செயல்படத் தொடங்கியது. அரிசிப் பங்கீட்டு முறை செயலில் இருந்து வரும் சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் உணவுப்பொருள்கள் வழங்கல்

[1973 மார்ச் 27

துறை பார்த்துவந்த அலுவல்கள், அதாவது அரிசி, சர்க்கரை, கோதுமை, கோதுமைப் பொருள்கள் வழங்குவது போன்ற பணிகள் இக் கழகத்திற்கு மாற்றப்பட்டன. கழகம் நலன்தரும் அளவிற்குச் செலவு செய்து இயங்குவதற்காக, "லெவி" தானியங்களைக் கொள்முதல் செய்வதோடு, சர்க்கரை, கோதுமை வழங்கும் முறையை இணைக்க இயலும்போதெல்லாம் பொதுப் பங்கீட்டு முறை மூலம் இப் பொருள்கள் வழங்கும் பணியும் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோதுமைப் பொருட்கள் குறுகிய காலத்திற்குள் கெட்டு விடுவதால் இப் பொருள்களை இருப்பு வைத்துக்கொள்வதனால் ஏற்படும் விரயத்தைத் தவிர்க்கும் பொருட்டு கூடுமானவரை ஆலைகள் அல்லது ஆலைகளிடமிருந்து கோதுமைப் பொருட்களை வாங்கி இருப்பு வைத்துக் கொள்பவர்கள் மூலமாக கோதுமைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. நடப்புப் பருவத்திற்கான "லெவி" கொள்முதல் பணியும் கழகத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களினால் முன்னரே நிறுவப்பட்டு பின்னர் உணவுத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள நவீன அரிசி ஆலைகள், 'லெவி' நெல்லைக் கொள்முதல் செய்து அதனை அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 'லெவி' நெல்லைக் கொள்முதல் செய்து அதனை வழங்குவதற்காக மாநிலக் கிடங்கு வசதிக் கழகத்தின் பணியும் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. பல நகர்ப்புறப் பகுதிகளில் சில்லறை விற்பனைக் கடைகளையும் கழகம் நேரடியாகத் தொடங்கி யுள்ளது. இதற்காகும் செலவைக் குறைக்கும் பொருட்டு பல இடங்களில் மாநிலக் கிடங்கு வசதிக் கழகத்தின் கிடங்குகளையும் மேற்படிக் கழகத்தின் பணியாளர்களையும் கழகம் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

சட்டப்படி அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற பொருள்களைப் பெறுவதோடு, பருப்பு வகைகளை வெளி அங்காடிகளில் விற்பனை செய்யும் பணியையும் கழகம் மேற்கொண்டுள்ளது. தற்போது இப் பருப்பு வகைகள் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. இப் பருப்பு வகைகள் உற்பத்தியாகும் பகுதிகளில், வேளாண்மை தேசியக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலமாக இவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் விற்பனையைப் பொறுத்து இந்த வாணிபம் தகுந்தவாறு பெருக்கப்படும்.

1973 மார்ச் 27]

இன்றியமையாப் பொருள்கள் பலவற்றின் விலைவாசிகளின் உயர்வு அரசுக்குக் கவலையைத் தருகிறது. அரிசி வாணிபத்தை முறைப்படுத்தும் பணி முழுவதும் மாநில அரசின் வரம்பிலேயே இருப்பதால், அரிசி விலை கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், பிற பொருள்கள், குறிப்பாக பருப்பு வகைகள் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால், அவற்றின் விலை உயர்வை நாம் தடுக்க முடியாத நிலையில் உள்ளோம். எண்ணெய் நிலையும் பெரும்பாலும் இதே தான். இம் மாநிலத்தில் வேர்க்கடலை போதுமான அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற பிற உணவு எண்ணெய்களை வெளி மாநிலங்களிலிருந்தே நாம் பெற வேண்டியுள்ளது. இவை உற்பத்தியாகும் பகுதிகளில் வறட்சி பரவலாக நிலவியிருந்ததன் காரணமாக, நடப்பாண்டில் இவை மிகக் குறைந்த அளவுக்கே கிடைத்து வருகின்றன. இதன் விளைவாக வேர்க்கடலைக்கு அதிகத் தேவை ஏற்பட்டது. நமது மாநிலமும் வறட்சியின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுபடவில்லை. தென் மேற்குப் பருவ மழை ஓரளவு பொய்த்ததன் காரணமாக, வேர்க்கடலை உட்பட கோடை காலப் பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மற்றும், அது காரணமாகவே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு, நடப்பாண்டில் உழவு வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய இன்னல்கள் இருப்பினும், மத்திய அரசு இருப்பிற்கு ஒரு லட்சம் டன் அரிசி கொடுத்துதவ நாம் முன்வந்துள்ளோம். தவிர, குஜராத் அரசின் அனுமதி பெற்ற முகவர் அமைப்புகள் நமது மாநில வெளி அங்காடிகளில், கம்பு, மக்காச்சோளம் இவற்றைக் கொள்முதல் செய்யும் அளவிலிருந்து குஜராத் மாநிலத்திற்கு அவற்றை 15,000 டன்னுக்கு மேல் ஏற்றுமதி செய்யவும் நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். நாட்டில் இக்கட்டான நிலைமை நிலவி வருவதைக் கருதி, பற்றாக்குறையாகவுள்ள பருப்பு வகைகள், உணவு எண்ணெய்கள் போன்ற பொருள்களைப் பயன்படுத்துவதில் ஓரளவு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூரில் போதுமான அளவுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களையும்கூட, நாடு முழுவதின் நலனைக் கருதி நாம் அத்தகைய ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். விலைச்சல் குறைந்து விடுவதனாலும், பயிர்கள் சேதமடைவதாலும் உற்பத்தியாளரும் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளார். விலைகளைக் கட்டுப்படுத்து

வதனல் உற்பத்தியாளர் மேலும் பாதிக்கப்படுவார். சில பொருள்கள் மீது பற்பல பகுதிகளில் வெவ்வேறு வகையில் தனிக் கட்டுப்பாடுகள் விதிப்பதனல், அப் பகுதிகளிலுள்ள மக்கள் அதிருப்தியடைகின்றனர். இத்தகைய இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்வதிலும், பற்றுக்குறைக் காலங்களில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அவற்றை, உற்பத்திப் பகுதிகளிலிருந்து, பற்றுக்குறைப் பகுதி களுக்கு அனுப்புவதிலும் நாடு முழுவதற்குமான ஒரு கொள்கை வகுக்கப்பட வேண்டும். பொதுப் பொருளாதார நிலையின் அடிப்படையிலேயே விலைவாசிகளை நிச்சயிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் விவசாயிக்கு நியாய விலை கிடைக்கும்; பண வீக்கம் காரணமாக அவ்வப்போது ஈட்டுத் தொகைகள் பெறும் நகர மக்களோடு அவரும் நியாயம் பெற முடியும். எனவே, நாடு முழுவதுக்கும் பொருந்தும் விலைவாசி-உறுதியக் கொள்கையொன்று வகுக்கப்பட்டால்தான், இடைவிடாமல் ஏற்பட்டு வரும் இந்த விலைவாசிச் சிக்கலுக்கு நாம் நிலையான தீர்வு காண முடியும்.

1. Procurement

During the year 1972 the scheme of procurement of paddy/rice by a levy on dealers was continued in the four surplus districts, viz., Thanjavur, North Arcot, South Arcot, and Chingleput. The rate of levy which was initially 25 per cent, was reduced to 15 per cent in respect of North Arcot and Chingleput districts with effect from 12th April 1972. The levy was suspended in North Arcot district, South Arcot district and Chingleput district with effect from 20th July 1972 and in Thanjavur district with effect from 14th September 1972. Against a target of 1.10 lakhs tonnes for the year 1972, 1.09 lakhs tonnes rice had been procured till 31st December 1972.

In addition to procurement under levy 33,230 tonnes of rice was purchased in the open market at the rates ranging from Rs. 30 to Rs. 32 per bag of 57 kgs. of paddy in Thanjavur district during Samba 1972 season, with a view to build up larger buffer stocks.

In order to facilitate the movement of the marketable suplus of Kurvai paddy from out of Thanjavur district, the levy and the

restrictions on movement enforced in that district were lifted with effect from 14th September 1972. At the same time with a view to prevent a fall in prices, the Government arranged for the purchase of Kurvai paddy offered by the producers at the Government notified rates through purchase centres opened by the Government and Food Corporation of India. 15,628 tonnes were purchased up to 18th January 1973 when levy was reintroduced.

Procurement prices

The procurement prices that were revised with effect from 15th October 1971 were continued till 13th October 1972. The prices were revised upwards as noted below with effect from 14th October 1972—

	From 15th October 1971 to 13th October 1972.	*From 14th October 1972.*
	((RUPEES PER QUINTAL.)	
1 Superfine		56·00 (New classification introduced.)
2 Fine	52·00	54·00
3 Medium	49·00	51·00
4 Course	46·00	47·00

Consequent on the upward revision of prices for medium varieties the additional payment of Re. 1 for High Yielding varieties was discontinued after 14th October 1972.

Distribution

Taking into consideration the availability and price of rice in the open market and the need to conserve and mobilise resources for development activities, the scheme of issue of rice at "One rupee a measure" was given up on 1st Januray 1972. However, a scheme for issue of rice at economic rates was introduced with effect from 1st January 1972, limited to families with a monthly income of Rs. 300 and below in Madras City and Coimbatore. Charitable institutions, Harijan Welfare Hostels and Government

Hospitals, Beggar Rehabilitation Centres are also given the benefit of supply at economic rates. Regulated distribution in the border areas of Kanyakumari district which was done earlier out of stocks purchased localy by wholesalers, was taken over by Government to exercise better control on the inflow into the area. Limited quantities were distributed in the affected areas following the unpreceedented floods in the districts of South Arcot and North Arcot. The need for issue of rice at economic rates in the deficit pockets did not arise during the year, as the price of rice in the open market did not show any sharp rise during the year. This is a measure of the success of the Government food policy adopted since 1970, of limited control with buffer stocks leaving scope for private trade to operate. 57,740 tonnes of rice was issued up to 31st December 1972 from Government stocks. In addition 1,376 tonnes of Nellore raw rice and 1,000 tonnes of Madhya Pradesh raw rice (fine) as also obtained from Food Corporation of India on allotment by Government of India and issued to consumers in view of higher prices of raw rice in the open market. The issue prices of rice at economic rates fixed from time to time are as follows :—

	(Per Kilogram Retail Selling Price.) Rs.	
Boiled rice—		
I sort	1·08	up to 15th June 1972
	1·10	from 16th June 1972
II sort	1·02	up to 15th May 1972
	1·04	from 16th May 1972
Raw rice—		
I sort	1·14	from 26th November 1971
	1·08	up to 31st May 1972
II sort	1·10	from 1st June 1972
Nellore raw rice	1·32	
Madhya Predesh raw rice	1·30	

Anti-smuggling Measures

The State continues to be a separate zone and movement of paddy and rice outside State would require permits. There have been persistent complaints of unauthorised movements across the border into Kerala. The check on the borders has been strengthened by checkposts and mobile units. During the lean season, when levy was not enforced in the surplus districts, the staff in the districts were diverted to the State borders to strengthen the check. With a view to further tightening the check on the borders, Collectors have been instructed to fix quotas for each dealer in the border areas after taking into account the local availability and regulate the movement into the area accordingly. Regulated distribution against family cards issued for distribution of sugar has been introduced in the border areas to ensure that the quantities that are permitted into the border areas are sold to the genuine consumers in the area and not moved clandestinely across the border by unscrupulous dealers. Apart from the border areas covering a width of 5 miles on the State borders already covered by movement controls, areas adjoining the sensitive borders in Kanyakumari, Coimbatore, Tirunelveli and Madurai districts were notified under the Tamil Nadu Paddy and Rice (Movement Control) Order 1970 to permit a close watch on the movements in the areas and facilitate check on the clandestine build up of stocks for movement outside the State.

Policy for the ensuing year

The supply of rice at economic rates to families with a monthly income of Rs. 300 and less in Madras City and Coimbatore will continue. For this purpose and in order to have a buffer stock, the Government propose to procure by means of a levy on purchases in and movement out of the surplus areas. Apart from Thanjavur, North Aroct, South Arcot and Chingleput districts in which levy was enforced in earlier years, levy has been extended to Tirunelveli and Tiruchirappalli districts which have a surplus this year.

The levy will continue in the border areas in Kanyakumari district, Periakulam and Uthamapalayam taluks of Madurai district in which levy was enforced earlier. In addition the levy will cover the whole of Coimbatore district. Such levy in the border

2. Wheat

areas is intended to mop up a part of the stocks available in such areas to feed the border areas and to exercise a discipline on the trade.

The Government of India have allotted 426,800 tonnes of wheat to this State during 1972. The average monthly allotment was 35,000 tonnes till November and was reduced to 25,000 tonnes in December 1972. From January this has been further reduced to 15,000 tonnes per month in view of the overall shortage. 402,295 tonnes were allotted to Roller Flour Mills for manufacture of products in 1972 and the balance utilised in the public distribution system.

Wheat Products (Maida/Sooji)

In the context of pressure of demand on wheat due to drought conditions in different States, the Government of India had suggested that wheat-products produced by the Millers should be brought under regulated distribution. Accordingly, supply to bulk consumers is regulated by issue of authorisation based on past consumption and turnover assessed for sales tax. Domestic consumers are given supplies against family cards through retail outlets distributing sugar whenever there is demand.

Wheat Bran

Consequent on the shortfall in the production of wheat bran, due to reduced allotments of wheat a system of distribution of wheat bran on permits to cattle owners through the Tamil Nadu Civil Supplies Corporation retail points was introduced in Madras City. The Deputy City Supply Officers have been authorised to issue permits, after verification, on application from the cattle owners. This has been extended to other major towns also.

Bonafide cattle feed manufacturers are given limited allotments of wheat bran to manufacture cattle and poultry feed.

3. Coarse Grains

During the year 1972, there was no allotment of milo to this State, as millets were freely available in the open market at reasonable rates. Early in 1972 export permits were issued for

maize to ensure a fair price to the produces as in view of the limited demand within the State. On a request from Gujarat Government the Government have permitted export of 5,000 tonnes of bajra and 3,000 tonnes of maize by Gujarat Flood Relief Committee. Apart from this, the Government have also agreed to consider the possibility of procurement of 5,000 tonnes of maize and 2,500 tonnes of Bajra for supply to Gujarat Government. In view of this, adequate market for maize is assured and therefore export on private account has been stopped.

4. Sugar

From January 1972 onwards, the Government of India by an arrangement with the sugar mills took over 60 per cent of the release for distribution through authorised channels and allotted about 10,000 tonnes per month to the State. Family cards have been distributed in all urban and rural areas with provision to record supply of foodgrains and other essential commodities against these cards to cover possible extension of the public distribution system. Subject to a minimum of one kilo per family and a maximum of six kilos per family, scales of supply have been fixed in different areas with reference to the pattern of consumption which is generally related to income. The off-take of sugar during 1972 was 117,922 tonnes. The statutory levy on sugar mills which was introduced in July 1972 at 60 per cent was increased to 70 per cent with effect from 1st October 1972. There are over 9,000 retail outlets throughout the State. In keeping with the levy prices fixed by Government of India, the sale price of levy sugar was reduced to Rs. 1.85 per kg. with effect from 1st August 1972. This was subsequently raised to Rs. 2 from 1st October 1972 and to Rs. 2.15 per kg. from December 1972 in view of the decision of Government of India to have a uniform issue price for the entire country. Due to the anticipated shortfall in production the State's quota has been reduced to about 9,700 tonnes per month.

5. State Trading

In the course of his speech while presenting the Budget for 1972–73 the Chief Minister has referred to the formation of Tamil Nadu Civil Supply Corporation for taking up trading activities

in essential commodities for the benefit of the consumers as well as the producers. The Corporation commenced functioning from July 1972 and the trading activities handled by the Civil Supplies Department such as Distribution of Rice, Sugar, Wheat and Wheat Products in Madras, Coimbatore and Kanyakumari where distribution of rice is in force, was transferred to the Corporation. Distribution of commodities covered by the public distribution system such as sugar and wheat is also entrusted to the Corporation, whenever they could be integrated with the collection of levy, to enable the Corporation to operate at optimum costs. The distribution of wheat products is handled as far as possible through the mills or stockists of the mills, in order to avoid loss in storage since these products are liable to deterioration in a short time. The levy collection for the current season has also been entrusted to the Corporation. The Modern Rice Mills earlier set up by Co-operative, which have been handed over to the Food Department, are being utilised for collection and processing of the levy paddy. The services of the State Ware Housing Corporation are also fully used for collection of levy and distribution. The Corporation has also opened direct retail shops in several urban centres, in many cases, utilising the Ware Houses of the State Ware Housing Corporation and their staff in order to minimise the costs.

Apart from the commodities such as rice, sugar and wheat obtained under statutory authority, the Corporation has also taken up the open market operations in pulses, which are distributed through these retail shops. Procurement has been made in the producing areas, through the agency of National Agricultural Co-operatve Federation. Depending on the off-take the scope of such trading will be suitably expanded.

The rise in prices of many of the essential commodities has been causing concern to the Government while the price of rice has been under check because regulation of trade is fully within the purview of the State Government, similar effective check in regard to other commodities particularly pulses has not been possible, since they have to be imported from other States. The same applies in a large measure to oils. Even though groundnut is produced in adequate quantities in the State, other edible oils such as Gingelly oil and Coconut oil have to be obtained from outside the State. Because of the extensive impact of the drought

in producing areas, the availability during the current year is very deficient, with the result there has been a great pressure of demand on the supply of groundnut available within the State. Our State also did not escape the drought entirely. The summer crop including groundnut was affected due to shortfall in the South West Monsoon which has also left a legacy in the form of power shortage with adverse impact on the agricultural operations during the current season. In spite of this, we have offered to the Central Pool one lakh tonnes of rice and have also agreed to the export of over 15,000 tonnes of maize and Bajra to Gujarat State out of open market purchases to be made by agencies authorised by the Government of Gujarat. In view of the difficult overall situation in the country, there has to be some discipline in the consumption of commodities in short supply such as pulses and edible oils and even of items which may locally available adequately in the overall interest of the country as a whole. Any control on the prices would be at the cost of the producer who has also suffered to an extent due to the poor yields and loss of crops. Ad hoc controls on certain commodities with varying impact on different sectors could result in local dissatisfaction in different areas. There has to be a policy for the country as a whole for the procurement of such essential commodities and for their transfer, in times of scarcity on State to State basis, from producing areas to deficit consuming areas. The prices have to be fixed in relation to the general economic levels in order to ensure that the agriculturist gets a fair deal to enable him to keep pace with his urban counter part who very often gets compensated for the inflationary pressures. Only prices and wages policy for the country as a whole can be lasting solution to the continuing problem of price spiral.

தமிழ்நாடு சட்ட மன்றம்

புதன்கிழமை, 1973 மார்ச் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 3-30 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. ஒ. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

@* 285 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLA PANDIAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the purposes for which the Building Materials Display Centre, Chepauk, is kept ; and

(*b*) the number of persons who have visited the Centre so far ?

சென்னை, சேப்பாக்கத்தில் கட்டிடக் கட்டுமானப் பொருட் காட்சி நிலையம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில் :) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சேப்பாக்கத்தில் கட்டிடக் கட்டுமானப் பொருட் காட்சி நிலையம் வைத்து வரப்படுவதன் நோக்கங்கள் யாவை ?

(இ) இது வரை அந்நிலையத்தைச் சென்று பார்வையிட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) புத்தம் புதிய வழிமுறைகளையும், புதிய கட்டிடப் பொருட்களையும் சேகரித்தும், அவைகள் கிடைக்கும் இடங்களைத் தெரியப்படுத்தவும் இக்கட்டிட மத்தியக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

(இ) சுமார் 10 நபர்கள் ஒவ்வொரு நாளும் இக்காட்சியகத்திற்கு வந்து செல்கின்றனர்.

@27—3—1973-ஆம் தேதி வினாப்பட்டியலிருந்து நீக்கிப் போடப்பட்டது.

Agro-Service Entrepreneurs Training Programme.

* 295 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN); Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the Tamil Nadu Agro-Service Corporation Scheme of the Centrally sponsored Agro-Service Entrepreneurs Training Programme organised in October, 1972 ?

வேளாண்மை பணித் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

தமிழ்நாடு வேளாண்மை பணிக் கழகத்தின் திட்டமாக 1972, அக்டோபரில் தொடங்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் வேளாண்மை பணித் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டங் குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவர அறிக்கை @ ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் 286, 287 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Incentive Increments to Teachers with Post-Graduate Degrees.

* 288 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether G. O. Ms. No. 42, Education, dated 10th January, 1969 is still in force ?

(*b*) whether the incentive increments contemplated in the above G. O. were given to teachers with Post-Graduate degrees in the year 1971 ; and

(*c*) if so, the number of teachers who were given such incentive increments during the nine months from 1st April to 31st December, 1971 ?

@ 54-56 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பட்ட மேற்படிப்புத் தகுதியுடைய ஆசிரியர்களுக்கு ஊக்கச் சம்பள உயர்வுகள்.

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 10—1—1969 ஆம் நாளிட்ட 42-ஆம் எண் அரசாணை இன்னும் செல்திறனில் உள்ளதா ?

(இ) மேற்குறிப்பிட்ட ஆணையிற் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்கச்சம்பள உயர்வுகள் பட்ட மேற்படிப்புத் தகுதியுடைய ஆசிரியர்களுக்கு 1971 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டனவா ?

(உ) ஆமெனில், 1971, ஏப்ரல் முதல் நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் முடிவுள்ள ஒன்பது திங்களில் எத்தனை ஆசிரியர்களுக்கு அந்த ஊக்கச் சம்பள உயர்வுகள் கொடுக்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) 122.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்கள் 2—10—1970-க்குப் பின்னால் பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்கு அனுகூலம் கிடைக்கிறது. அதற்கு முன்னால் பெற்றவர்களுக்கு அந்த அனுகூலம் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. அரசுக்கு ஏதேனும் பரிந்துரை செய்யப்பட்டு அவர்களுக்கும் இந்த அனுகூலம் கிடைக்க வேண்டுமென்ற முறையீடு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 2—10—1970 மாற்றத்திற்குப் பிறகு இதுவும் அதற்குள்ளே அடங்கி விட்டது. தனியாகக் கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, தமிழ் ஆசிரியர்கள் பி. டி. பட்டம் பெற்றால், அவர்களுக்கு 2 இன்கிரிமெண்ட் கொடுக்கலாம் என்று ஜி. ஓ. 42 குறிப்பிடுகிறது. எனவே, ஒரு பட்டதாரி ஆசிரியரும் தமிழ் ஆசிரியரும் ஒரே சமயத்தில் ஒரு பள்ளியில் சேர்ந்தால், தமிழ் ஆசிரியருக்கு ரூபாய் 350-ம் பட்டதாரி ஆசிரியருக்கு ரூபாய் 300-ம் கிடைக்கிறது. இந்த நிலை மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பட்டதாரி ஆசிரியர்களும் தமிழ் ஆசிரியர்களும் ஒரே நிலையில் வைக்கப்படுகிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் பி. டி. படித்தவராக இருந்தால், மேற்கொண்டு ஒரு

நிலை பெறுகிறார் என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு பி. டி. பட்டத்திற்காக இரண்டு இன்கிரிமென்டுகள் என்ற முறையில் வழங்கப்படுகிறது.

THIRU K. S. GANAPATHI again rose....

MR. CHAIRMAN: The time is too short. Too many supplementaries should not be put. We will have to wind up our business today at about 5-30 p. m. I would, therefore, request all the members to cut short their speeches, since there are eight or nine speakers listed for today.

Teachers Serving in Private Tamil Colleges.

* 289 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Memorandum has been received requesting to bring the scales of pay of teachers serving in private Tamil Colleges on a par with those of Arts College Teachers; and

(b) if so, the action taken thereon by the Government?

தனித் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனித் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தை கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கலைக்கல்லூரிகளில் உள்ளதைவிட தமிழ்க் கல்லூரிகளில் வேலைப் பளு குறைவாக இருப்பதாலும் பல்கலைக்கழக மானியக் குழுவின் பொறுப்பின்கீழ் தமிழ்க் கல்லூரிகள் வராததாலும், மேற்சொன்ன கோரிக்கையை நிறைவேற்ற வழியில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் கலைக் கல்லூரியில் பணி செய்யும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கல்வித் தகுதியில் வேறுபாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்நிலைப் பள்ளியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழ் கல்லூரியில் பணி செய்யும் தமிழ் ஆசிரியர்களுக்கும் வேறுபாடு இல்லை. புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 275—10—375—15—450 என்று இருந்தது. இப்போது பி. டி. ஆசிரியர்களுக்கெல்லாம் ரூ. 275 என்பதை ரூ. 300 ஆக்கியதிலிருந்து அவர்களுக்கும் அதே அளவிலே ரூ. 275 என்பதை ரூ. 300 ஆக்கி, அதே விகிதத்திலே சம்பளம் நிர்ணயிக்க வேண்டும்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, கலைக்கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களைப் போல் தமிழ்க் கல்லூரிகளிலேயும் அதே தகுதியோடு பணியாற்றுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். புலவர்களே கலைக்கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களாகவும் இருக்கிறார்கள். அதேபோல, எம். ஏ. படித்தவர்களும் தமிழ்க் கல்லூரிகளில் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். இந்த முறையில் ஆலோசித்து அரசு, தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் ஊதியத்தை உயர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மற்ற கல்லூரிகளோடு இணைத்து தமிழ்க் கல்லூரிகளை பல்கலைக் கழக மானியக் குழு எண்ணுவதில்லை. அந்த வகையில் அதற்கான வசதிகளும் சலுகைகளும் அளிப்பதில்லை. எம்.ஏ.,பி. டி. படித்தவர்கள் உயர்நிலைப் பள்ளியில் இருந்தால், பணிக்கேற்ற சம்பளம்தான் பெறுவார்கள். எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் என்பதற்காக கல்லூரிச் சம்பளத்தைத் தருவதில்லை. அந்த வகையில் தான் எம். ஏ. படித்திருந்தாலும், கலைக்கல்லூரியில் இருப்பவர்களுக்கு அந்த விகிதத்தின் அடிப்படையில் தரப்படுகிறது. தமிழ்க் கல்லூரியில் அந்த விகிதத்தில் தரவேண்டிய நிலை இருக்கிறது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி: திருவையாற்றிலுள்ள இசைக் கல்லூரியிலிருக்கும் ஆசிரியருக்கு ரூ. 400 ஊதியம் தரப்படுகிறது. இயல் கல்லூரி ஆசிரியருக்கு இந்தவிதமான ஊதியம் தரப்படவில்லை. ஒரே அமைப்பின்கீழ் இருக்கின்ற இரண்டு கல்லூரிகளில், ஒரு கல்லூரிக்கு ஒரு விதமும், இன்னொரு கல்லூரிக்கு இன்னொரு விதமுமாக ஊதியம் வழங்கப்படுகிறது. இதை மாற்றுவதற்கும், இயற் பேராசிரியர்களுக்கும் ரூ. 400 ஊதியம் பரிவோடு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. இரண்டு கல்லூரிகளும் ஒன்றல்ல என்று அவரே குறிப்பிட்டார். ஒன்று இசைக் கல்லூரி—மற்றொன்று தமிழ்க் கல்லூரி. அதற்கு என்ன விகிதங்கள் இருக்கின்றன என்று ஆராய வேண்டும். தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து சொல்லலாம்.

Starting of a new University.

* 290 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to start a new University in the State?

புதிய பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

இம் மாநிலத்தில், புதிய பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

Whips Conference.

* 291 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the expenditure incurred by the Government in connection with the attendance of the Whips of both the Houses of Legislature at the Whips Conference held at Bhopal in November, 1972?

கட்சிக் கொறடாக்கள் மாநாடு.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972 நவம்பரில், போபாலில் நடைபெற்ற கட்சிக் கொறடாக்கள் மாநாட்டில், சட்ட மன்றத்தின் இரு அவைகளின் கொறடாக்களும் கலந்து கொண்டதால் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இம் மாநாட்டில் சட்ட மன்றப் பேரவை ஆளுங்கட்சித் தலைமைப் பாகர் (Whip) மட்டும் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்பட்டார். இதற்கான செலவு ரூபாய் 664·90 ஆகும்.

1973 மார்ச் 28]

Analytical Laboratories to control drug manufacture and Distribution.

* 292 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether it is a fact that the Union Government have suggested to the State Government to set up Analytical Laboratories to ensure effective control over the drug manufacture and distribution;

(*b*) if so, whether there is any promise of financial assistance for the same from the Union Government; and

(*c*) the action proposed to be taken by the Government in this matter?

மருந்துகள் தயாரித்தல், அவற்றை வழங்குதல் ஆகியவற்றிற்குப் பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மருந்துகள் தயாரித்தல், அவற்றை வழங்குதல் ஆகியவை குறித்து, திறமையான கட்டுப்பாட்டை உறுதி செய்ய, பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடம் அமைக்க, மாநில அரசுக்கு, மத்திய அரசு கருத்துத் தெரிவித்தது உண்மையா?

(இ) ஆமெனில், இதற்கு மத்திய அரசு நிதி உதவி ஏதும் தரும் உறுதியுள்ளதா?

(உ) இது குறித்து, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:—(அ) ஆம்.

(இ) இதுபற்றி இம் மாநில அரசு எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசிலிருந்து இதுவரை பதிலில்லை.

(உ) இம்மாநில அரசே ஒரு மருந்துகள் சோதனைக் கூடம் தொடங்க முடிவு செய்துள்ளது.

Standing Technical Committee for water and Sewage Purification.

*293 **Q.— THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN).—Will the Hon. the Minister for Public Health be plesed to state:**

(a) whether any Standing Technical Committee for Water and Sewage Purification has been set up in the State; and

(b) if so, the details thereof?

நீர், கழிவு நீர் தூய்மைப்படுத்துவதற்கான தொழில் நுட்ப நிலைக்குழு.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம் மாநிலத்தில், நீர், கழிவு நீர் தூய்மைப்படுத்துவதற்கான தொழில் நுட்ப நிலைக்குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் (அ) ஆம்.

(இ) நீர் மற்றும் சாக்கடை கழிவை தூய்மைப்படுத்துதல் பற்றிய குழு, சமீபத்தில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது :—

1. மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர்.	தலைவர்.
2 தலைமைப் பொறியாளர் (பொது உடல்நலப் பொறியியல், நகராட்சிப்பணிகள்) தலைமைப் பொறியாளர் (தமிழ்நாடு நீர்-சாக்கடைக் கழிவு வாரியம்).	உறுப்பினர்.
3 மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை கூட்டு இயக்குநர்.	,,
4 இயக்குநர், இங் நிலையம், இண்டி	,,
5 திரு. மியாகான், தனி அலுவலர், சுற்றுப்புறத் தூய்மை.	,,
6 திரு. டி. என். எஸ். ராகவாச்சாரி, ஓய்வுபெற்ற மூத்த பொது உடல் நல உதவியாளர்.	அலுவல் சார்பற்ற உறுப்பினர்.
7 திரு. கே. ஜி. வீராகவன், ஓய்வு பெற்ற தலைமை நீர்ப்பகுப்பாய்வர்களர்	,,
8 தலைமை நீர்ப்பகுப்பாய்வாளர்	உறுப்பினர் செயலாளர்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினா 294 ஒத்திப்போடப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

"தமிழரசு."

39. கே.—திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழரசு திங்களிருமுறை இதழில் பணிபுரியும் அலுவலர்களின் தகுதி, சம்பளம் ஆகிய விவரங்கள் என்ன?

(இ) தமிழரசில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதுவோருக்கென மாதச் சம்பளமோ, அல்லது அவை ஒவ்வொன்றுக்கும் சன்மானம் போன்று பண உதவி எதேனும் தரப்படுகிறதா?

(உ) ஆமெனில் உதவி தருப் குறைந்த பட்ச, உயர்ந்த பட்ச தொகை எவ்வளவு?

(எ) தமிழரசு இதழ் 1 முடிந்து வருடத்தில் அதன் வரவு-செலவு என்ன?

ப.—(அ) தமிழரசு இதழில் நிருபர், துணை ஆசிரியர், உதவி ஆசிரியர், ஓவியர்கள் போன்ற தொழில் நுணுக்க ஊழியர்களும் பிற துறைகளிலுள்ளது போன்ற ஊழியர்களாக உதவியாளர்கள், கணக்கர், எழுத்தர், கடைநிலை ஊழியர் உள்ளனர். அவர்களின் அடிப்படைச் சம்பளம் பின் வருமாறு :—

	ரூபாய்.
இணை ஆசிரியர்	550
துணை ஆசிரியர்	275
நிருபர்	350
உதவி ஆசிரியர்	425
ஓவியர்கள்	250
மேலாளர்	550
கணக்கர்	350
உதவியாளர்	275
இளநிலை உதவியாளர்	200
தட்டச்சர்	200

பிராட்மா இயக்குநர்	200
எழுத்தர்	140
கடைநிலை ஊழியர்	130

தொழில் நுணுக்கப் பிரிவினருக்கு வழக்கமான தகுதிகளுடன் நாளிதழ் ஏடுகளில் பணியாற்றிய அனுபவம் முதலியவைகளைத் தகுதியாக வைத்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(இ) ஆம்.

(உ) அரசின் துறைகளின் திட்டங்கள் பற்றிய கட்டுரைகளை மாத ஊதியம் பெறும் அலுவலர்கள் தயாரிக்கின்றனர். கதை, கவிதை வெளியாரிடமிருந்து பெறப்படுகிறது. இதற்குத் தகுதிக்குத் தக்க குறைந்தது ரூ. 25 முதல் அதிகம் ரூ. 50 வரை தரப்படுகிறது.

(ஊ) வரவு : 1—7—1970 முதல் 30—11—1971 முடிய ரூ. 8,28,912·94.

செலவு : அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படுவதால் இதற்கான திட்ட வட்டமான செலவு பற்றி கணக்கு எடுக்க தனியே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

40. கே.—திரு செ. முத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் . .

(அ) தமிழ் நாடு அரசு நடத்தும் 'தமிழரசு, மாதமிருமுறை' ஏட்டின் மூலம் 1971—72 வரை எவ்வளவு லாபம் ஈட்டியது ?

(இ) லாபமில்லையெனில், நட்டமானால் எவ்வளவு ?

(உ) நட்டமேற்பட்டதற்கான காரணமென்ன ?

ப. (அ), (இ), (உ) : அரசு நடத்தும் ஏடு லாப நஷ்டத்தைக் கருதி நடத்தப்படும் ஏடல்ல. அரசின் பல சாதனைகளையும் பற்றிய கட்டுரைகள், கவிதை, வெண்பாப் போட்டி போன்ற பல செய்திகளைத் திரட்டி குறைந்த விலையில் எல்லா தரப்பட்ட மக்களும் படித்து பயன்பெறும் நோக்கத்தோடு நடத்தப்படுவதாகும். இதற்கு முன் அரசால் நடத்தப் பட்ட மேழிச் செல்வம், சீரணி, பாக்கியலட்சுமி போன்ற இதழ்கள் குறைந்த விலையில் விற்கப்பட்டன. மேற்கண்ட ஏடுகள் லாப நஷ்டத் தைக் கருதி வெளியிடப்படவில்லை. உதாரணமாக ஆரோக்கிய மார்க்கம் எல்த் எஜுகேஷன் போன்ற இதழ்கள் அரசு செலவில் அச்சடிக்கப் பட்டு இலவசமாகவே வெளியிடப்பட்டுள்ளன. தற்போது மக்கள் நல் வாழ்வுத் துறையில் வெளியிடும் குடும்ப நல செய்திக் கதிர் என் னும் இதழ் மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

41 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased t state the circulation figures of the Government Fortnightly "Tamil Arasu" for the years 1970-71, 1971-72 and 1973.

A.—List @ is placed on the table of the House.

@57-60-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

State Raffle.

42 *Q.*— THIRU G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the number of First, Second and Third Prizes of the Raffle tickets which have not been awarded during the last 6 months after the draw ;

(*b*) the total amount so far not distributed ; and

(*c*) the reasons therefor ?

A.—(*a*) The number of I, II aud III prices of the Raffle tickets which have not been awarded during last 6 months (up to 31st January 1972).—

Special Bumper—	I Prize	1
	I Prize	3
	II Prize	13
	III Prize	17

(*b*) Rs. 8,25,000.

(*c*) The claims along with Raffle tickets have not been presented by the prize winners, hence the prize amounts have lapsed to Government.

43 *Q.*—THIRU G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government are aware that some of the State Raffle Agents are engaged in converting Black money into White through purchase and sale of prize winning tickets ; and

(*b*) if so, the steps proposed to be taken by the Government to avert this anti-social act ?

A.—(*a*) No. This Government do not have any information in this matter except news item that appeared in the press.

(*b*) Does not arise.

44. Q.—Thiru G. SWAMINATHAN and Thiru V. ISVARMURTI—Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that some of the individuals have won more than 100 prizes in the State Raffles from the beginning ; and

(*b*) if so, the details thereof including the total amount won by each such individual in the aggregate on the different draws?

A.—(*a*) Yes. A very few individuals have won more than 100 prizes from the inception of the Tamil Nadu Raffle Scheme (i.e. from 15th August 1968).

(*b*) The particulars are furnished in the Annexure.@

45 Q.—THIRU G. SWAMINATHAN.—Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether it is a fact that complaints have been received by the Director of State Raffles during October 1971 that printed words including numbers on the Raffle Tickets faded out and disappeared in course of time ;

(*b*) if so, the reason for such occurrence ; and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

(c) Does not arise.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) உடுக்குறியிடப்பட்ட விஞக்களுக்கு உடுக்குறியிடப்படாத விஞக்களாக விடைகள்.

3-40. பி. ப.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : உடுக்குறியிட்ட எழு விஞக்களுக்கு அரசிடமிருந்து இடைக்கப்பெற்ற விடைகள் 39 முதல் 45 வரை உள்ள உடுக்குறியிடப்படாத விஞக்களுக்குரிய விடைகளாக இன்று மேலவை முன்னர் வைக்கப்படுகின்றன என்று நான் அறிவிக்கிறேன்.

(2) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்

MR. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1973-74 :—

(1) THIRU R. KRISHNASWAMY NAIDU,

(2) THIRU T. V. MUTHUKRISHNAN,

@61-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது

(3) THIRU M. RAJAH IYER,

(4) THIRU RAMA SUBBIAH,

(5 THIRU R. SAKTHI MOHAN, and

(6) THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under rule 173 (1) of the Council Rules, I have nominated the following two members to be Members of the House Committee :

(1) THIRU C. V. RAJAGOPAL, and

(2) THIRU M. MASILAMANI.

The Deputy Chairman of the Council shall be *ex officio* Chairman of the Committee.

3. கவன ஈர்ப்பு.

(1) மயிலாப்பூரிலும், காந்தி நகரிலுள்ள இராணி மெய்யம்மை மாணவர் பள்ளியிலும் பள்ளி செல்லும் குழந்தைகளைக் கடத்திச் சென்றதால் ஏற்பட்டுள்ள பரபரப்பு குறித்து.

THIRU G. VASANTHA PAI : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the scare existing in the City of Madrasdue to kidnapping of school-going children on 28th February 1973 Mylapore and on 1st March 1973 at Rani Meyyammai Boys School at at Gandhinagar and the anxiety caused to the parents and guardians consequently.

The word ' respectively ' is wrong and it must be ' consequently'.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காந்தி நகர் இராணி மெய்யம்மை மாணவர் உயர்நிலைப் பள்ளியிலோ அல்லது அவ்வட்டாரத்திலுள்ள இதர பள்ளிகளிலோ எந்தப் பிள்ளைகளும் கடத்திச் செல்லப்படவில்லை என்று சென்னை மாவட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். எனினும், விசாரித்ததில், மைலாப்பூர் லேடி சிவசாமி அய்யர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவி 27—2—1973 அன்று காணுமல் போனதாக மைலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருந்ததாகவும், பிறகு அம்மாணவி கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாகவும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of information. May I tell the Hon. Minister that my house is just opposite the Gandhinagar Boys' School and the other day, the persons working in my house brought their children to my house and kept them there for 15 to 20 minutes and then took them away. This information is wrong.

THE HON. THIRU K. ANBAZHAGAN: I would like to know whether the culprits brought the children to the house of the hon. Member or they were the parents of the children.

THIRU G. VASANTHA PAI: Sir, the labourers working in my house brought their children from the school at about 2 or 3 p.m. and kept them in the house, saying that there was a scare in the school and the pupils were asked to go away.

The Hon. THIRU K. ANBAZHAGAN: Sir, naturally a scare is created either by interested parties or by people who have no proper responsibility. Because of the scare, such things take place.

MR. CHAIRMAN.: Culprits will never enter into the house of the hon. Member Thiru G. Vasantha Pai.

(2) மாணவிகள் பள்ளிகளிருக்கும் பகுதிகளில் மாணவர்கள் பள்ளிகளில் மாணவிகளைச் சேர்க்கக்கூடாதென்ற அரசு ஆணையால் ஏற்பட விருக்கும் திண்டாட்டம் குறித்து.

MR. CHAIRMAN: Thiru G. Swaminathan.

THIRU K. S. GANAPATHI: Mr. Chairman, Sir, on behalf of Thiru G. Swaminathan, I call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, G.O. Ms. No. 1664, Education, dated 19th October 1972 according to which girls should not under any circumstances be admitted in Boys' Schools in areas where there are separate schools for girls and the consternation caused to thousands of parents and girl students in the State who may be put to difficulties because of the Government Order during the ensuing academic year.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 8-வது வகுப்பு வரை உள்ள எல்லாத் துவக்கப் பள்ளிகளும், மாணவரும், மாணவியரும் சேர்ந்து பயிலும் பள்ளிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கல்வி விதி 33-ன் படி, மாணவியருக்கென்று தனியே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லாத இடங்களில் ஆண்களுக்கான உயர் நிலைப் பள்ளிகளில் மாணவியரை அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துச் சேர்க்கலாம். ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளி களில் மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தால், ஆசிரியைகள் அவர்களுக்கென்று வேலையில் அமர்த்தப்பட வேண்டும். பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைப் பெண்களுக்கான பள்ளிகளில் சேர்க்கக் கூடாது.

மாணவியர்களுக்கு என்று தனியே பள்ளிகள் இருக்கும் இடங்களில் மாணவியர்களை, ஆண்களுக்கான பள்ளிகளில் தகுந்த காரணங்களுக்கு ஆய்வு அலுவலர்களின் தனிப்பட்ட முன் ஒப்புதல் பெற்றுத்தான் சேர்க்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின் ஏற்பிற்கு இதுவும் ஒரு நிபந்தனையாகும் என ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாணையின் நோக்கம் பின் வருமாறு :—

(அ) ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள கல்வி நிறுவனங் களில் மாணவ, மாணவியர்களைச் சேர்ப்பதில் உள்ள போட்டியைத் தவிர்க்க வேண்டும்;

(ஆ) வயது வந்த பெண்களை ஆண்கள் பள்ளியில் சேர்ப்பது நல்லது அல்ல.

(இ) பெண்களின் உடற் பயிற்சிக்கு ஆண்கள் பள்ளிகளில் வசதி இருக்க முடியாது.

இவ்வாணையினால் பள்ளி ஆய்வாளர்களின் முன் அனுமதியுடன் ஆண் களின் பள்ளிகளில் பெண்களைச் சேர்க்கலாம். இதனால் எந்த ஆசிரியரின் வேலைக்கும் பங்கம் வராது. இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது புது உத்திரவு அல்ல என்பதையும், ஏற்கனவே இருந்த ஆணை மீண்டும் வலியுறுத்தப்பட்டே உள்ளது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இவ்வாணையை மறு பரிசீலனை செய்யக் கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

4. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைத் துறை கொள்கை விளக்க குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்: "சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 'வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 333-ஆம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கலியபதி : தலைவரவர்களே, விவசாயம் இந்திய நாட்டின் பொருளாதாரத்திலே ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது என்று நாம் எல்லோரும் கூறுகிறோம். ஆனால் அண்மையில் கொண்டுவரப்பட்ட "லேண்ட் சீலிங்" போன்ற உச்ச வரம்புச் சட்டங்களால் நனி நபர் வைத்துள்ள நில உடைமை மிகவும் குறைந்து விடப்பட்டதனாலே, "அன்எகனமிக் ஹோல்டிங்" என்று சொல்வார்கள், அதன்படி ½ எக்கரா, 3/4 எக்கரா வைத்துள்ள நிலச்சுவான்தார்களுடைய எண்ணிக்கை நம் நாட்டிலே குறிப்பாக அதிகமாகியிருக்கிறது. இதைத் தவிர்க்க இப்படி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டுமளவிலே நாம் ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஆனால் கூட்டுறவு "பார்மிங்" என்பது, என்னைப் பொறுத்த வரையிலே, ஒரு தோல்வி என்றே ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே அந்தச் சிறு நிலச்சுவான்தார்களை ஒன்று சேர்த்து "கோவாப்பரேடிவ் பார்மிங்" வருவது தவறு என்று நான் கருதுகிறேன். எனவே வேறு ஒரு முறையிலே விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே ஒரு திட்டத்தை நாம் தீட்ட வேண்டும்.

அடுத்து, விவசாயிகளுக்கு இருக்கும் ஊதியத்தைப்பற்றி, வருமானத்தைப்பற்றிப் பரவலாக அரசாங்கம் ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் உண்மையிலே விவசாயிகளுக்குக் கிடைக்கும் ஊதியமானது, வருமானமானது மிகவும் குறைவு. ஆனால் அரசாங்கத்தைப் பார்ப்போமானால், ஸ்டேட் கவர்ன்மெண்டானாலும், சென்ட்ரல் கவர்ன்மெண்டானாலும் இரண்டும் சேர்த்து விவசாயிகளுக்கு அதிகமான வரியை விதிக்கிறார்கள். அது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. எனென்றால் மிகவும் குறைந்த வருமானமுடைய விவசாயிகள் மேலும் மேலும் அதிகமான வரியைச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிக மிகக் குறைவு. இதற்காக நமது அரசு "அக்ரிகல்சரல் மினிமம் வேஜ் கமிட்டி" என்ற ஒரு கமிட்டியை "அப்பாயிண்ட்" செய்தார்கள். அது வரவேற்கத் தகுந்த ஒன்று. ஆனால் இன்னும் அவர்கள் முடிவு தரவில்லை என்று நினைக்கிறேன். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கட்டாயம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஆனால் அதற்காக பரம்பரையாகச் சொல்லப்படுகிற காரணம் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் நம் நாட்டில் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர் என்பது. இதைத் தவிர்க்க ஆங்காங்கு கிராமங்களுக்கு அருகிலேயே "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்" சிறுதொழில் அமைப்புகளை ஏற்படுத்தி, அந்த விவசாயத் தொழிலாளர்களை அந்த "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்"ல் ஈடுபடுத்து அவற்றில் நாம் வேலை வாய்ப்புகளைக் கொடுப்போமானால், இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் எண்ணிக்கையினரை மிகவும் குறைக்கலாம். அதே சமயத்தில் அவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்கலாம்.

மி. ப. 3·50. "பர்சேஸ் அண்ட் பிரைஸ் இயாரண்டி" என்கிறபடி நாம் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்வதற்குச் சந்தை வேண்டும். அதே நேரத்திலே அந்தப் பொருட்களுக்கு இன்ன விலை நிர்ணயிக்கப்பட

வேண்டும் என்று இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்து இப்படிச் செயல்பட்டால்தான் முடியும். உதாரணத்திற்காக நெல்லை எடுத்துக் கொண்டால், ஒரு குறிப்பிட்ட விலையை அரசாங்கம் இப்போது கொடுக்கிறது. நேற்று மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் கூட குவின்டாலுக்கு 4 ரூபாய் உயர்த்த இருக்கிறோமென்று சொன்னார்கள். ஆனால் வெளி விலையைவிட மிகவும் குறைவான விலைக்கு நாம் வாங்கிக் கொள்கிறோம். எனவே விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஜப்பானில் உள்ள அரசாங்கம், "சப்சிடைஸ்" பண்ணி, மார்க்கெட் விலையைவிட அதிகமான விலைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்கிறார்கள். அமெரிகாவிற்கே எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு அரசாங்கமும், வெளி விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு, உற்பத்தி செய்த தானியங்களை வாங்கிக்கொள்ளும் நிலைமைகள் ஏற்பட வேண்டும். (குறுக்கீடு). வெளி விலையைக் கொடுத்தாலே போதுமென்று உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் வெளி விலைக்கு அதிகமாக விலையை நிர்ணயித்து வாங்கிக் கொண்டால், அவ் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். அதிலும் சிறிய விவசாயிகளுக்கு, கூட்டுறவுத் துறையிலிருந்து கொடுக்கும் கடன் சரியாகச் செல்வதில்லை. 1,000 ரூபாய் கடன் வாங்குகிறார்களென்றால், 500 ரூபாயைச் செலவழித்து அந்தக் கடனை வாங்குகிறார்கள். இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்து, தண்டிக்க வேண்டும். இதைக் கருத்திற்கொண்டு, சிறிய விவசாயிகளுக்குக் கடனை நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் பல "Seed Farms" வைத்திருக்கிறோம். இவைகள் மூலம் விதைகளை அளிக்குமென்று சொல்லுகிறோம். விவசாயிகளுக்கு தேவையான விதைகள் தேவைப்படுமளவுக்கு "Seed Farms-ல்" இல்லை. எனவே விவசாயிகளிடமிருந்து விதைகளை வாங்குகிறார்கள். ஆனால் அந்த விதைகள் தரக் குறைவாக இருக்கின்றன. இதனால் பயிரின் விளைச்சல் அளவு மிகவும் குறைந்து போகிறது. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"சம்மர் பிராப்" என்று தஞ்சையில் பருத்தியை விளைவிக்கச் சொன்னார்கள். ஆனால் அதை வாங்கிப் போக அதிகமானவர்கள் வராத நிலையைப் பார்க்கிறோம். அது மட்டுமல்லாமல், அந்தப் பயிர் வைப்பதில் அவர்களுக்கு ஆர்வமில்லாமல் போய்விடுகிறது. அதோடு உரம் விநியோகம் செய்ததைப்பற்றி பலர், பலவிதமாகப் பேசுகிறார்கள். அதில் "பிளாக் மார்க்கெட்டிங்" இருக்கிறது. இதற்கு ஒரு சின்ன யோசனையைச் சொல்லுகிறேன். இப்போது "டெனன்சி ரிகார்டு" இருக்கிறது. அதுபோன்று அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு கார்டு கொடுத்துவிட வேண்டும். "Identification card" போன்று கொடுத்துவிட வேண்டும். அந்தக் கார்டில் அங்குள்ள "Village Officer" அந்த விவசாயி என்ன பயிர் செய்கிறார் என்று எழுதிக் கொடுத்துவிட வேண்டும். அதற்குப் பிறகு "Agriculture Department" அதிகாரிகள் நெல்லுக்கு இவ்வளவு என்.பி.கே. உரம், கரும்புக்கு இவ்வளவு என்.பி.கே. உரம் என்று அந்தக் கார்டைப் பார்த்துச் சொல்லட்டும். இந்த மாதிரி உண்மையான விவசாயிக்குக் கொடுக்கக் கூடிய நிலையிருந்தால், அது பயனுள்ளதாக

[திரு. கே. எல். கணபதி] [1973 மார்ச் 28

இருக்கும். டிபார்ட்மெண்டில் எவ்வளவு உரம் கொடுத்தாலும், "Short supply of fertilisers" என்று கூறுகிறார்கள். எனவே கிராமங்களில் "Green Manure" அதிகமாகப் பயன்படுத்தச் சொல்லலாம். கிராமங்களில் இதைப் பற்றிச் சொன்னால், ஆடு மாடுகள் மேய்ந்து விடுவதால் போட மாட்டேன் என்கிறார்கள். எனவே அரசாங்கமே, "Green Manure" ஐப் போட்டு, அதை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால், விவசாயம் சிறப்புறுமென்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. வி. நாராயணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, வேளாண்மைத்துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாகப்பட்ட இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, வேளாண்மைத்துறையிலே நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே, 1965–66-ல் அரிசியினுடைய உற்பத்தி 35.24 லட்சம் டன்களாக இருந்ததை, 1972–73-ம் ஆண்டில் அரிசியினுடைய உற்பத்தியை 55 லட்சம் டன்களாகவும், சிறு தானியங்கள் உற்பத்தியை 15.10 லட்சம் டன்களாகவும், பருப்பு வகைகள் உற்பத்தியை 1·92 லட்சம் டன்களாகவும், மொத்தம் 72.02 லட்சம் டன்களாகவும் செய்யப்பட்டிருக்கிற நிலையைக் காண்கிறோம். மேலும் 1973–74-ம் ஆண்டுக்கான உற்பத்தி இலக்கு 79 லட்சம் டன்களென்பதை இங்கே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு காட்டுகின்றது. நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விவசாயத்தைப்பற்றி நேரிடையாகத் தெரிந்தவர்கள். அப்படிப்பட்டவர் இந்தத் துறையிலே நல்ல திட்டங்களை உருவாக்கி, நமது மாநிலத்தில் மேலும் மேலும் வளர்ச்சியை உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதுபோல உணவுத் துறையிலே இருக்கிற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மன்னை அவர்களும் சிறந்த விவசாயக் குடும்பத்தில் தோன்றியவர்கள். அவர்களும் இந்த வளர்ச்சிக்கு இணை நின்று, உற்பத்தியைப் பெருக்கி நல்லதொரு சாதனையை விளைவித்திருக்கிறார்கள்.

இங்கே இருக்கின்ற சாதனைகளைப்பற்றிப் பேச வேண்டுமென்றால், அதிகமான நேரம் வேண்டுமென்றாலும், நான் கூற வந்த ஒரு கருத்தை மட்டும் இங்கே தெரிவித்துவிட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வனத்துறையிலே ஏராளமான நிலங்கள் இருப்பதை நாம் அறிவோம். வனத்துறைக்கு உட்பட்ட, பலவிதமான நிலங்கள், ஏராளமான சமவெளிப் பகுதிகளில் இருக்கின்றன. அதே நேரத்தில் திட்டங்களில் உட்படாத, முந்திரிச் செடிகள் மற்றும் பயன்தரும் மரங்கள், மற்றும் கொடிகள் வளைய முடியாத, வெறும் முட் செடிகள் முளைத்துக் கிடக்கின்ற லட்சக் கணக்கான ஏக்கர்கள் இருப்பதை நாம் காண முடியும். இம்மாதிரியான இடங்களிலும் ஒரு தனித் திட்டத்தின் கீழே, அதையெல்லாம் மிகப் பெரிய பண்ணையாக்கி, 1,000 ஏக்கர்கள், 500 ஏக்கர்கள் என்ற அளவிலே அமைத்து, ஏராளமான அளவிலே மிகுந்த பயன் தரும் மரங்களை நல்ல மா, பலா, வாழை போன்ற தோட்டங்களை ஏற்படுத்துவதோடு, அது மழை பெய்யவும் ஏதுவாகும். இடையிடையே வயல்வெளிகளை உருவாக்கி நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்கி, ஆழ்ந்த கிணறுகளை ஏற்படுத்தி, அதன் மூலம் விவசாயம் இடைத்தால், நிச்சயமாகப் பல லட்சக் கணக்கான டன்கள் தானிய வகைகளை உற்பத்தி செய்ய முடியுமென்ற

கருத்தினை இங்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி தமிழகமெங்கும் பல மாவட்டங்களிலே ஏராளமான நிலங்கள், செம்மண் நிலங்கள், கரிசல் மண் நிலங்கள், விவசாயத்திற்கு அருகதை பெற்ற நிலங்கள் முட்செடிகள் மூடிக் கிடக்கும் காட்சியைப் பார்க்கும்போது, இதிலே யெல்லாம் விவசாயம் செய்தால் ஏராளமான தானியங்களை உற்பத்தி செய்யலாமே என்ற எண்ணம் தோன்றும். இப்படி 1,000 ஏக்கர்கள், 500 ஏக்கர்கள் என்று பண்ணைகளை அமைத்து, நவீன விவசாயத்தைப் பெருக்குவதன் மூலம், செய்து காட்டுவதன் மூலம், நாட்டிலே கூட்டுறவு மனப்பான்மைக்கு நல்ல ஆக்கம் ஏற்படச் செய்யலாம்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கூறினார்கள். கூட்டுறவு இயக்கம் நமது நாட்டிலே தோல்வி அடைந்துவிட்டதென்று சொன்னார்கள். தோல்வி கண்டு நாம் துவண்டு விடக் கூடாது. எதிர் காலத்தில் நாம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால், விவசாயத்துறையைப் பொறுத்தவரையில், கூட்டுறவு மனப்பான்மையை நாம் வளர்க்க வேண்டும். அதிலுள்ள குறைபாடுகளை நீக்கி, லட்சக் கணக்கில் துண்டு, துண்டாக உள்ள நிலங்களை இணைத்து, ஏராளமான பண்ணைகளை அமைத்து, நிறைய பணத்தை ஒதுக்கி, நவீன முறையில் விவசாயம் செய்வோமானால் நிச்சயமாகக் கூட்டுறவுத் திட்டம் வெற்றி பெறுமென்று கருதுகிறேன். சிறிய நிலச்சுவான்தார்களையெல்லாம் சேர்ப்பதற்கு இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கு முதற்படியாக, இந்தத் திட்டத்திலெல்லாம் ஐயப்படுகிறவர்கள், விரும்பி வரவேற்கிற வகையில், அரசுத் துறையில் விதைப் பண்ணைகளை வைத்திருப்பதுபோல, சும்மா கிடக்கின்ற நிலங்களை, சாதாரண முட்செடிகள் உள்ள நிலங்களை விவசாயிகளுக்கு 5 ஏக்கர், 5 ஏக்கர் என்று பிரித்துக் கொடுப்பதைவிட்டு, பெரிய அளவிலே, நல்ல முறையிலே திட்டமிட்டு, டிராக்டர்களை வைத்து, அந்த நிலங்களைச் செப்பனிட்டு, ஏதாவது ஒரு இடத்தில் அந்த நிலங்களில் தகுந்த முறையில் தானியங்களை உற்பத்தி செய்தால், அது நிச்சயமாக வெற்றி பெறும். பிறகு கூட்டுறவுத் திட்ட அடிப்படையிலே இம்மாதிரி 1 ஏக்கர், 2 ஏக்கர்கள், 5 ஏக்கர்கள், 10 ஏக்கர்கள் என்று இருக்கும் நிலங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, எதிர்காலத்திலே அந்தத் துறையிலே வெற்றி காண முடியும். இன்றைய தினம் நில உச்சவரம்புச் சட்டம் வந்த காரணத்தாலே, நிலங்களெல்லாம் சிதறி விட்டன. பெரிய அளவிலே விவசாயம் செய்ய முடியாதென்று தனியுடமைக் கோட்பாட்டிலே நம்பிக்கையுடையவர்கள் கூறுகிறார்கள். ஆனால், நம் நாட்டிலே, உச்சவரம்பு என்று, 40, 50 ஏக்கர்கள் புஞ்சை நிலத்தை வைத்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது.

மேலும், ஏழை விவசாயிகள் பெரிய கிணறுகளைத் தோண்டி அதிலிருந்து சிறந்த முறையில் விவசாயம் செய்ய அவர்களுக்குப் போதிய பண வசதியில்லை. நாம் அதற்கெல்லாம் திட்டம் போட்டு, ஏராளமான உதவிகளை நாம் விவசாயிகளுக்கு நேரடியாகத் தந்து வருகிறோமென்றாலும் கூட, ஒரு புரட்சிகரமான மாறுதலைச் செய்வதற்கு ஏராளமான பணத்தைச் செலவிட வேண்டும். திட்டமிட்ட அடிப்படையிலே, நவீன முறையிலே விவசாயத்தைப் பெருக்குவதற்கு பெரிய திட்டங்களுக்கு நாம் செலவிடுவது போன்று, நவீன முறையிலே எஞ்சியுள்ள நிலங்கள்;

[திரு. டி. வி. நாராயணசாமி] [1973 மார்ச் 28

வனத்துறையின் திட்டத்தின்கீழ் உட்படாத நிலங்கள்—இவற்றையெல்லாம் வேளாண்மைத் துறையினர் கோரிப் பெற்று, நல்ல திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கி
பி.ப. 4·00. றேன். திட்டவட்டமான அடிப்படையிலே நவீன முறையிலே விவசாயத்தைப் பெருக்குவதற்கு திட்டங்களைப் போட வேண்டும். வனத்துறையிலே, எஞ்சி யிருக்கின்ற நிலங்களை, திட்டங்களிலே உட்படாத நிலங்களை எல்லாம் கோரிப் பெற்று அதற்கான நல்ல திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டுமென்றும், உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும், நான் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். வேளாண்மையினுடைய சிறப்புக்களைப் பற்றி, நாம் என்ன என்ன செய்திருக்கிறோம், நமது அரசுத் தரப்பில் எந்த அளவுக்கு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம், இந்த 5, 6, ஆண்டு களில் நாம் செய்த சாதனைகள் என்ன என்பதை மக்கள் அறியும் வண்ணம் அரசு சிறந்த முறையில் விளம்பரம் செய்ய வேண்டும். பத்திரிக்கையிலே விளம்பரம் செய்வது மட்டுமல்லாமல், இம்மாதிரிக்குறிப்பு களைப் போட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் கலை நிகழ்ச்சிகளின் மூலம் நல்ல நாடகங்கள் மூலம் நீங்கள் அதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். குடும்ப நலத்தைப் பற்றி மக்கள் தீவிர கவனம் செலுத்தக்கூடிய அளவுக்கு கலை நிகழ்ச்சிகளையும் நாடகங்களையும் பார்த்து மக்கள் பயனடைந்துள்ளார்கள் என்று நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். பணச் செலவினைச் செய்து விளம்பரம் செய்வதன் மூலமாக கலைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க முடியும். எத்தனையோ கலைஞர்களும் அதிலே வாழ்வு பெறு வார்கள் என்று கூறிக் கொண்டு, நான் கூறியவாறு அந்த வனத்துறை நிலங்களை, வீணாகக் கிடக்கின்ற நிலங்களை, ஒருங்கு சேர்த்து நல்ல திட்டங்கள் அமைத்து, உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கான நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களையும் நம்முடைய அரசினையும் கேட்டுக்கொண்டு நன்றி கூறி, வணக்கம் கூறி, அமைகின்றேன்.

திரு. அய்யணன் அம்பலம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, விவசாயக் கொள்கைக் குறிப்பின் மீது பேச சந்தர்ப்பம் அளித்த தலைவரவர் களுக்கு நன்றி கூறுகிறேன். நமது நண்பர் திரு. நாராயணசாமி அவர்கள் இப்போது இந்த உணவு உற்பத்தித் திட்டத்தினைப் பற்றியும், எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திட்டம் நாட்டிலே உணவுப் பஞ்சம் இருக்கின்றது என்ற நிலைமையை மாற்றி, உபரியாக ஆக்கி, நாம் பசுமைப் புரட்சி ஏற்படுத்தி, நல்ல நிலைமையை அடைந்திருக்கின்றோம் என்றால், அதற்கு ஊராட்சி ஒன்றியங்களின் ஒத் துழைப்பும் ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைந்த விவசாய இலாக்காவினர் செய்த இடைவிடாத முயற்சியும் காரணம் என்பதைச் சொல்லி நான் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கின்றேன். எ.ஆர். சுப்பையா முதலியார் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவிலே விவசாய இலாக்கா ஊராட்சி ஒன்றியங்

1973 மார்ச் 28] [திரு. அய்யணன் அம்பலம்]

களின் அங்கமாகச் செயல்படலாமா அல்லது தனித் தனியாக இயங்கலாமா என்று உத்தியோக வட்டாரங்களிலும் மற்றும் அரசியல் வட்டாரங் களிலும் கருத்து இருக்கின்றது. அது ஊராட்சி ஒன்றியம் இல்லாமல், செயல்படமுடியுமா, அப்படி இருந்தால் வெற்றி பெறுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம்தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கின்றேன்.

அடுத்தபடியாக, ஐ.ஆர்.8, ஐ.ஆர். 20 போன்ற நெல்லை நாம் அதிகமாக விவசாயம் செய்து, அதிகமான மகசூலை அடைந்திருக்கிறோம். சென்ற இரண்டு ஆண்டுகளாக ஐ.ஆர்.8, ஐ.ஆர்.20 என்ற ஒட்டு விதைகள் முதலிலே அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலே இருந்த அளவைவிட இப்போது அதனுடைய மகசூல் அளவு குறைந்து கொண்டே வரு கின்றது என்ற உண்மை நிலையை என்னைப் போன்றவர்கள் சொல்லாமல் இருக்க முடியாது. இதற்கு காரணம் என்ன?

விவசாய இலாக்காவினர் அந்த ஒட்டு விதைகளை உடனுக்குடன் கொடுக்க வேண்டும். அந்த ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற விதைகள் நல்ல மகசூலைக் கொடுக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அதை ஒரு விவசாயியிடம் கொடுத்து, 2, 3, வருடங்களுக்குப் பின்னர் இன்னொரு விவசாயியிடம் கொடுப்போமேயானால், அதனுடைய உண்மையான தன்மை மாறி விடுகின்றது. இப்போதெல்லாம் ஐ.ஆர். 8 போன்றவைகள் பழைய நெல்கள் போல் வளரும் தன்மையுடையனவாக இருப்பதால் அவற்றிலுள்ள மகசூல் குறைந்து கொண்டுதான் வருகின்றது. அந்த விதைகள் அறிமுகப் படுத்தப்படுகின்ற காலத்தில் இருந்த தன்மை இல்லாமல் இப்போது மகசூல் குறைகிறது என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீர் விவசாயத் திட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு முற்போக்கான திட்டமாக அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது. அங்கு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகவும் விவசாய இலாக்கா அதிகாரிகள் மூலமாகவும் அவர்களுக்கு சில வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு விசேஷக் கடன்களும் கொடுக்கப்படுகின்றன. அதே மாதிரி மதுரை மாவட்டத்தில் பெரியாறு பாசன வசதியுள்ள டெல்டா பிரதேசங் களில், தஞ்சை ஜில்லாவில் எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகின்றதோ, அந்த அளவுக்கு அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு உதவிகள் செய்து, தீவிர விவசாயத் திட்டங்களைச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது தென்னை உற்பத்திக்காக லோன்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் கொடுத்து, அதிகமான நிலங்களில் தென்னந்தோப்புக்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அர சாங்கக் குறிப்பு இருக்கின்றது. அந்த முறையிலே வைகைப் பாசனம் உள்ள கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் அதை விஸ்தரிக்க வேண்டும். நான் இந்தக் குறிப்பிலே பார்த்தேன், நீலகிரி, கிழக்கு ராமநாதபுரம் பகுதி நீங்கலாக மற்ற மாவட்டங்களில் அது செயல்பட்டுக்கொண்டிருக் கிறது என்றும் தென்னை வளர்ப்பதற்கு கிழக்கு ராமநாதபுரம், வைகை பகுதிதான் வசதியாக நீர் ஊற்றுள்ள இடமாக இருப்பதால், அதை

[திரு. அய்யணன் அம்பலம்] [1973 மார்ச் 28

அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும். இன்னொன்று, தென்னை சாகுபடி செய்ய கடன் கொடுப்பதற்கு முன்னால் கிணறு இருக்கின்றதா என்ற நிலைமையைப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் முதலிலேயே தென்னை நடுவதற்கு முன்னால் கிணற்றைப் போடுவதற்கு அரசாங்கம் கடன் கொடுக்க வேண்டும். கிணற்றைப் போட்டதற்குப் பின்னால், தென்னை நட்டால் தான் அந்தத் தென்னை வளர்ச்சியடைய முடியும். ஆகவே அதையும் அந்தக் குறிப்பிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ரசாயன உரம், பூச்சி மருந்து, மற்ற காம்ப்ளக்ஸ் உரம் போன்ற உரங்களையெல்லாம் தனித்தனியாகச் சிதறிப்போய் விடாமல், போட வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியத்திலே, அதன் கிராமங்களிலே விவசாய இலாகாவினர் சென்று, ஊராட்சி மன்றத் தலைவர்கள் விவசாயிகள் மத்தியில் சொல்லுகின்றார்கள். அந்த உரங்களை அந்த விவசாய இலாக்காவினர் கொடுக்க முடியாது செயலற்ற நிலைமையிலே இருக்கின்றார்கள். ஆகவே உரங்களைப் பற்றி எப்படி விவசாய இலாக்கா அதிகாரிகள் கிராம விவசாயிகளிடத்திலே பிரசாரம் செய்கின்றார்களோ, அப்படி விவசாயி விவசாய இலாக்காவைத் தேடி, ஒரு ஊராட்சி மன்றத்திற்கு விதைகளைத்தேடி வருவாரேயானால், அவருக்கு எல்லாவிதமான உரம், பூச்சி மருந்து ஆகியவைகள் எல்லாம் விவசாய டிப்போவிலே கிடைக்கின்ற அளவுக்கு விவசாய இலாக்காவிற்கு எல்லாவிதமான உரங்களையும் அரசாங்கம் ஒதுக்கவேண்டும். அப்படி இல்லாமல், ஒரு இடத்தில் வாயினால் மட்டும் பிரசாரம் செய்துவிட்டு, அவர்கள் எந்த உதவியும் செய்யமுடியாத நிலைமையில் வைக்கக்கூடாது. விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில் தேவையான பூச்சி மருந்துகள், உரங்கள் கிடைப்பதில்லை. ஆகவே விவசாய இலாக்கா இன்னின்ன மருந்துகளை இன்னின்ன விலைகளில், இன்னின்ன கம்பெனிகளிலிருந்து ஜில்லா மட்டத்திலே வாங்கிக்கொள்ளலாம். அதற்குப் பணம் தேவையென்றால், ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்து அதற்காகப் பணம் கொடுப்பதற்கும், அந்தப் பணத்தை விவசாய இலாக்காவிலிருந்து முன் பணமாகப் பெற்று வாங்கிக் கொள்வதற்கும் உத்தரவிட வேண்டும். அப்படி இல்லாமல் பூச்சி மருந்து வேண்டுமென்று சொன்னவுடனே, எந்த மருந்தை அடிக்க வேண்டுமோ அந்த மருந்து இல்லாமல், இன்னொரு மருந்தைக் கொடுக்கின்றார்கள். அதனால் அந்த மருந்து எந்தப் பூச்சியைக் கொல்ல வேண்டுமோ அதைக் கொல்வதில்லை. உண்மையான பூச்சியைக் கொல்வதில்லை. அந்த மருந்து வருவதற்குள் அந்தப் பயிர் முதிர்ந்து அறுவடையே வந்து விடுகின்றது. ஆகவே விவசாய இலாக்காவினர் அந்த மருந்துகளை வாங்கி வைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு முன் அனுமதி கொடுக்க வேண்டும்.

ஐ.எம்.எஸ். லோன், மற்ற லோன்கள் எல்லாம் விவசாய இலாக்காவினர் ஒரு பகுதி, தாசில்தார் ஒரு பகுதி, கூட்டுறவு ஒரு பகுதி என்ற முறையிலே கொடுக்கப்படுகின்றன. அந்த முறையையெல்லாம் மாற்ற

1973 மார்ச் 28] [திரு. அய்யணன் அம்பலம்]

வேண்டும். ஒரு விவசாயியினுடைய சரித்திரமே நம்முடைய ரெவின்யூ இலாக்காவிலே இருக்கின்றது. அந்த விவசாயியின் விவரம் அங்கே இருக்கின்றது. ஒரு விவசாயியினுடைய குடும்பத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், எவ்வளவு எக்கர் நிலப்பரப்பு இருக்கிறது, சொந்த நிலம் எவ்வளவு, குத்தகை நிலம் எவ்வளவு, கோடையிலே பயிர் செய்கின்ற நிலம் எவ்வளவு, இரு போகமா, ஒரு போகமா இப்படிப்பட்ட விவரங்கள் எல்லாம் அங்கு இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப்பகுதியிலுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் அந்த ஆண்டு வருவதற்கு முன்னாலேயே எத்தனை எக்கரிலே அவர்கள் ஐ.ஆர்.8, ஐ.ஆர். 20 விவசாயம் செய்கிறார்கள் என்ற கணக்கு புள்ளிவிவரங்களையெல்லாம் எடுத்து, அவர்களுக்கு "பாஸ் புக்" மாதிரி"யாக ஒரு புஸ்தகம் கொடுக்க வேண்டும். அவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் உரம் வேண்டுமானால் உரமோ, கடன் வேண்டுமானால் கடனோ, விதை வேண்டுமானால் விதையோ யாருடைய தயவும் இல்லாமலேயே, எந்தவிதமான அரசாங்க உதவியையும் யாரையும் தேடாமல் பெறுவதற்கு அந்தப் புத்தகத்திலேயே குறித்துக் கொடுத்துவிட வேண்டும். இந்த டிராக்டர்கள், பூச்சி மருந்து தெளிப்பான் கருவிகள் எல்லாம் அடிக்கடி ரிப்பேர் ஆகிவிடுகின்றன. அதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஜில்லா, கோட்ட அளவிலாவது, ஊராட்சி ஒன்றியத்தின் அளவிலாவது ஒரு பட்டறை அமைத்து, அப்படி அடிக்கடி ஏற்படுகின்ற ரிப்பேர் வேலைகளைச் சரிசெய்து கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது புதிய கிணறுகள் தோண்ட பம்பு செட் போடும் கருவிகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே ஏற்கெனவே இருந்த குளங்களெல்லாம் அழிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பின் பெயரால், நிலமில்லாத விவசாயிகளின் பெயரால், நீர்த் தேக்கங்களை, குளங்களை அழித்துவிடுகிறார்கள். ஆகவே புதிதாகக் கிணறுகள், குட்டைகள் எல்லாம் வெட்ட வேண்டுமென்று நம்முடைய குறிப்பில் இருக்கிறது. ஏற்கெனவே உள்ள குளங்களை அழித்துவிட்டு, புதிய கிணறுகளைத் தோண்டுவதைக் காட்டிலும், அந்த ஆக்கிரமிப்பை யாருடைய தயவும் இல்லாமல் வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும்போது விவசாயக் குடும்பத்திலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எதோ வேறு தொழிலில் இருப்பவர்களைக் காட்டிலும் விவசாயத்தை நம்பி இருக்கும் விவசாயி மகன் கல்லூரிக்குச் சேர வந்தால், அவனுக்கு முன்னுரிமை கொடுத்து 50 சதவீதம் விவசாயி வீட்டுப் பிள்ளைகளுக்கு கல்லூரியில் இடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன். நேரம் அதிகம் ஆகிவிட்டபடியால் என்னுடைய விளக்கங்களை சுருக்கமாகச் சொல்லி இங்கு பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. க. அறிவழகன்: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பு பசுமைப் புரட்சி எவ்வளவு பசுமையானதாக ஆகியிருக்கிறது தமிழ் நாட்டிலே என்பதை மிக நன்றாக எடுத்துக்காட்டுவதோடு, இந்தத் துறை அறிக்கையும் பச்சை நிறத்தில் போட்டிருப்பதன் மூலம் மிகக் கவர்ச்சிகரமாக அமைந்திருக்கிறது. இது குறித்து 'உழுவார் உலகத்துக்கு ஆணி' என்ற வள்ளுவருடைய வாக்கு பொய்த்துவிடுமோ என்று கருத்து இருந்த சூழ் நிலையில் வேளாண்மை துறை அமைச்சகம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வளர்ச்சியடைந்துள்ளதன் காரணமாக, உணவுத் துறை அமைச்சர் உயர்திரு மன்னை நாராயணசாமி அவர்கள், அல்லது அறநிலைய அமைச்சகம், ஹரிஜன நலத்துறை அமைச்சகம், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ஆகிய எல்லோரும் இந்தத் துறையினுடைய மகிழ்ச்சியைப் பெறும்படி, கிராமத்தில் வாழ்கிற சிறிய குழந்தைகளும் நல்ல பலன் பெறத்தக்க சூழ்நிலை மிக வேகமாக வளருவதைக் கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப நலத் திட்டத் துறையில் தஞ்சைத் தரணியில் மிகப் பெரிய மாற்றத்தை விளைவித்து அதன் மூலமாக அகில இந்தியப் புகழ் பெற்ற ஒருவர் இந்தத் துறையினுடைய நெறியாளராகப் பணியாற்றுவதாலும், இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்கள் நல்ல கற்பனையும் சிறந்த விஞ்ஞான நோக்கமும் மிக்கவர்களாகவும் சிறப்பாக இதன் செயலாளர், துணைச் செயலாளர் ஆகியோரும் இவர்கள் இருப்பதன் காரணமாகவும் இந்தத் துறை வேகமாக வளரும் என்று நம்புகிறேன். மிக சமீபத்தில் இந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் ஸ்டாக் ஹோமில் இந்திய நாட்டைப் பற்றி பாராட்டு தெரிவித்து, 'குன்னர் மிர்டால்' பொருளாதார நிபுணர்—பண்டித நேருவின் நண்பர்—" What India needed today, he said, was aneconomic and social revolution and revolution in the agricultural field. It needed for reaching radical reforms " என்று குறிப்பிட்டார். இந்த வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே, மிகச் சிறப்பான, புரட்சிகரமான மாற்றங்கள் மிக வேகமாக தமிழ் நாட்டிலே ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. அந்த வளர்ச்சியை மேலும் வளர்க்க வேண்டும் என்பதற்கு நான் மிக அழுத்தம் திருத்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையில் ஏற்படுகின்ற பல்வேறு மாற்றங்கள் மக்களுக்குப் பயனளிக்கும்படி இருக்க வேண்டும். விதைகளிலே ஏற்படுகிற மாற்றங்கள், உரம் வேகமாகக் கிடைப்பது, நிலச் சீர்திருத்தம் ஆகியவற்றால் ஏற்படுகிற பலன், விவசாயத் துறையில் இருக்கிற பணக்கார வர்க்கம் பெற்று மிக வேகமாக மேலும் கொழுத்து விடாமல், ஏழை எளிய மக்கள், நசுக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கும்படி இருக்க வேண்டும். கணபதியா பிள்ளை அவர்கள் தஞ்சைத் தரணியைப் பற்றிச் சொன்ன அறிக்கையில், சிறுகுடித் தஞ்சை மாவட்டத்தில் வாழ்கிற விவசாய மக்கள், நிலமற்ற விவசாய மக்கள் வறுமையிலே இந்திய உப கண்டத்திலேயே மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட மக்கள் பலன் பெறத்தக்க முறையில் திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். வாழைப்பழம் எவ்வளவு அதிகமாக இப்போது விளைவிக்கப்படுகிறது என்ற கணக்கைத் தந்தார்கள்.

நான் ஒரு கணக்கைச் சொல்லி உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்த நாட்டுப் பள்ளிகளில், ஆரம்பப் பள்ளிகளில் ஏறக்குறைய 26 லட்சம் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று கல்வி அமைச்சகத்தின் கணக்கு தெரிவிக்கிறது. அந்த 26 லட்சம் பிள்ளைகளும் ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழம் பெறுகிற அளவுக்கு நம்முடையே விவசாய அமைச்சகம் பாடுபட்டு, எல்லாப் பிள்ளைகளும் இலவசமாக ஒரு வாழைப்பழம் ஒரு நாளைக்கு பெறத்தக்க அளவுக்கு விளைவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். (குறுக்கீடு) இது 'பனனை ரெவலூஷன்'. எந்த வாழைப் பழமாக இருந்தாலும் சரி, அந்த வாழைப்பழத்தில் கலப்படம் இருக்கமுடியாது என்ற காரணத்தால், வாழைப்பழம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. வி. நாராயணசாமி பண்ணைகளை அமைக்கவேண்டுமென்று சொன்னார். இந்தப் பண்ணைகள் அமைப்பது பற்றி நான் குறிப்பிடுகிற கருத்து இதுதான். நிலச் சீர்த் திருத்தத்தின் மூலமாக நிலமற்ற எல்லா விவசாயிகளுக்கும் நிலம் கொடுக்கிற அளவுக்கு நம் நாட்டில் நிலம் இல்லை. 1969-ல் பார்த்த கணக்கின்படி ஒரு விவசாயிக்கு, விவசாயக் குடும்பத்திற்கு 3/4 ஏக்கர் தான் கிடைக்குமென்ற நிலை இருந்தது. அதனால், அரசுடமையாக்குகிற பல்வேறு காரியங்களை வேறு துறைகளில் செய்கிறமாதிரி, இன்றைய தினம் விவசாயத் துறையில் ஆராய்ச்சி செய்வதற்காக ஆடுதுறை பண்ணை வைத்திருப்பதுபோல், நிலச் சீர்த்திருத்தத்தின் மூலம் கிடைக்கும் நிலங்களை ஒருங்கிணைத்து பண்ணைகளாக அமைத்து அப்பண்ணைகளில் பணியாற்றுகிற பண்ணை உழவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து உழவுத் துறையிலும் உழவர்கள் வருமானத்திலும் ஒரு பெரும் புரட்சியைச் செய்ய நமது அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவேன். நாம் எந்தக் கணக்கையும் சரியாகப் பார்த்து விட முடியும். ஆனால் ஒரு கணக்கை இன்னும் சரியாகப் பார்க்க முடியவில்லை. இந்த விவசாயத் துறையில் வேலையற்ற நிலையில் உள்ள உழவர்கள் எத்தனைபேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் எவ்வளவு கீழ் வருமானத்தில் வதைகிறார்கள், அவர்கள் அதைப்பற்றி எண்ணிப் பார்க்க வாவது அறிவு பெற்றிருக்கிறார்களா என்பது நமக்குக் கிடைக்காத கணக்காகும். அதை நிறைவு செய்யத்தக்க முறையில் விவசாயத் துறையில் நிலமற்ற விவசாயிகள், சரியான கூலி பெறுத விவசாயக் குடும்பங்களுக்கு பலன்தரும் புதிய புதிய திட்டங்களை விவசாயத் துறையில் நாம் கண்டாக வேண்டும். நகரை நோக்கி வேகமாக மக்கள் வருகிறார்கள், என்ன செய்ய முடியும், நகரத்தில் எப்படி வீடுகள் கிடைக்கும் என்று ஒரு பக்கத்தில் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி நான் அதிகமாக வருத்தப்படவில்லை. காரணம் நிலத்தை நம்பியிருக்கும் விவசாய மக்கள் ஒரு பகுதியினர் நகரத்திற்கு வந்தது போக எஞ்சியுள்ள மக்களே அந்த நிலத்தில் எவ்வளவு தான் பாடுபட்டாலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய நிலை இல்லை. அதே நேரம் நம் தமிழ்நாட்டில் விவசாயம் முன்னேறியிருக்கிற அளவு கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகப் புரட்சிகரமான மாற்றமும் வெற்றியும் பெற்றிருக்கிறது. அந்த வெற்றி இன்னும் அதிகமாகி, ஏழை எளிய மக்கள் மேலும் பயன் பெறுகிற அளவுக்கு

[திரு. க. அறிவழகன்] [1973 மார்ச் 28

அந்தத் துறை பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிராக்குகிற முறையில், நீர் வீணுகாமல் பாதுகாக்கிறதிட்டம் வேண்டும். இன்றைய தினம் உதகமண்டலத்தில் மழை பெய்யவில்லை. அங்கே பயிர் ஆக்குகிற முறை பதிய விஞ்ஞான முறை பயன்படுத்தவில்லை. மிகச் சாதாரண முறையில் கூட அங்கே பயிராக்குகிறார்கள். அது காபி செடியானலும் சரி, டீ செடியானலும் சரி, வேறு பல பயிர்கள் ஆனலும் சரி, நீர் வேகமாக ஒடிவிடத்தக்க அளவுக்கு பயிர் ஆக்குகிற காரணத்தால், நிலம் அழிகிறது காட்டேரி என்று பெரிய ஏரி இருந்தது. தலேவர் அவர்கள் தமிழ் நாட்டில் செல்லாத இடம் இல்லே. அந்த ஏரியில் இப்போது தண்ணீர் இல்லே. மண்மேடாக இருக்கிறது. நாம் பல கோடி ரூபாய் செலவு செய்து குந்தா திட்டம் உருவாக்கினேம். இன்று நான் சொல்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் ஒரு நாளைக்கு வருந்தக்கூடிய நிலேமைகூட வரலாம். அந்தத் திட்டத்தைச் சுற்றி மேடுகளில் இருப்பவர்கள் பயிராக்கும் தவருன முறையால் அந்த அரிய திட்டம் மண்மேடு ஆகிவிடும் நிலேமை 10 ஆண்டுக்காலத்தில் வரக்கூடும் என்ற மிகப் பயங்கரமான உண்மைகள் தெரியவந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் போக்கத்தக்க அளவுக்கு நம்முடைய விவசாய மக்கள் நல்ல முறையில் பயிராக்குவது எப்படி என்பதற்கும் தண்ணீரும், அதே நேரத்தில் சேறும் கலந்து, அந்த ஏரிகளே, அணைக்கட்டுகளே பாழாக்கிவிடாத முறையிலும், புதிய திட்டங்கள்படி டயிராக்க வேண்டும். நாட்டில் பல்லாயிரக்கணக்கான மைல்கள் சுற்றிய நேரத்தில் நீர் வறட்சி மிக்க பகுதிகளே நானும் பார்த்தேன். அந்தப் பகுதிகளில் எல்லாம் நிச்சயமாகப் பயிராக்க முடியுமென்று சொல்ல மாட்டேன். ஆனல், மரங்களேயாவது நட்டாக வேண்டும். நாம் இன்றையதினம் நெல்லேயும் பருப்பையும் மட்டுமே நம்பாமல், காய் கறிகளே, பழங்களே, நேராக உணவுப் பொருள்களாக உண்ணும் புதிய முறைகள் உடலுக்கு நல்லது என்ற காரணத்தால், 79 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம் என்று சொல்வதில் பெருமை இருப்பது போல் எதிர்காலத்தில் 50 லட்சம் டன் காய்கறிகளே, நேரடியாக உண்ணக்கூடிய உணவு வகைகளேத் தயாரிக்கும் அளவுக்கு விவசாயத்தில் புதிய மாற்றம் வந்தால் தான் நம்முடைய மனேவிமார்களே நம்பி அவர்கள் சமைத்தால் தான் சாப்பாடு என்ற நிலேமை இல்லாமல், மனேவிமார்களும் நன்றாகப் படித்து முன்னேற அந்த நேரத்தை ஒதுக்குவதற்கு வசதியாக இருக்கு மென்று கூறி இந்த அளவில் அமைகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I rise to compliment the Minister for Agriculture on the excellent performance of this Government in the field of agriculture and I do not think there are many who will differ from me when we pay our tributes, not only to the Minister, not only to the department of agriculture and its dedicated staff, but also to the vast millions of our farmers who have also contributed in no small measure to the prosperity of agriculture in Tamil Nadu. Members have complimented, Sir, this Government on the tremendous progress that has been made in the cultivation of paddy and while it is undoubtedly true that in the field of paddy cultivation Tamil Nadu has recorded the best performance all over India during the past four years as the following figures will show, I must confess, Sir, that in other fields of

1973 மார்ச் 28] [Thiru A. R. Damodaran]

activity such as coarse cereals, pulses and oil-seeds we have not registered that amount of progress which is so essential to ensure a balanced growth in the agricultural field. As far as rice is concerned, between the years 1967–68 and 1971–72, All-India production increased from 37·6 million tonnes to 42·7 million tonnes, an increase of 14 per cent over the base year 1967–68. The only other State in India which produced more rice is West Bengal which has gone up from 5·2 million tonnes to 6·5 million tonnes registering an increase of 25 per cent. As far as Tamil Nadu is concerned, Sir, although in terms of volume, in terms of total production, we may be less than West Bengal, we have gone up from 4·1 million tonnes to 5·4 million tonnes which means an increase of 32 per cent over the year 1967–68. All this has been possible because in the Fourth Five-Year Plan greater emphasis has been laid on agriculture, more inputs have been forthcoming and the availability of fertilizer was also there during this period and if we are to maintain this progress, especially in the high yielding variety, I would like to make a special plea, Sir, that so far as fertiliser inputs are concerned, all these interruptions in supply should be eliminated and we should have a constant flow of the required fertilizer which will enable the farmers to grow these high yielding varieties.

One of the disadvantages in high yielding variety programme is that if you plant these high yielding varieties and if you do not have enough fertilizer as inputs into this, the entire yield pattern may be affected and farmers may lose interest and revert to the traditional practice of old grains. I, therefore, request the Hon'ble the Minister for Agriculture to apply as much pressure as possible on the Hon. the Minister for Co-operation so that fertilizer would be distributed through the co-operatives in a fair way to ensure that at least during the next monsoon season we will have adequate stock of fertilizer to keep this thing going.

Sir, as far as pulses and oilseeds are concerned, our production in the matter of pulses is only 108 thousand tonnes while the all-India production is 11 million tonnes. We are only producing 1 per cent of the total all-India production. As far as oilseeds are concerned, we are producing 14 per cent and I am very glad that the Tamil Nadu Government are not only thinking of stepping up production of groundnut, castor, cashew and other oilseeds but also a new variety which is stated to be yielding very good results, namely, sun flower. I hope, Sir, that this programme will be intensified in the coming year. While we have to grow groundnut in increasing quantities, this new variety of sun flower which is expected to yield a very good type of oil can be used progressively as a cooking medium in our State. Intensive efforts will be made to grow those seeds all over Tamil Nadu and especially in dry-farming areas more intensive cultivation of sun flower is required so that the economy may be improved in those areas.

[Thiru A. R. Damodaran] [1973 மார்ச் 28

Sir, reference was made in the policy note on agriculture to the appointment of a committee to go into the cost structure and production. I am very happy, Sir, that this is being done because in all the Acts that have come before this House, whether it pertains to land reform as to how many acres a man should have or what is an economic holding or whether it is agricultural income-tax, I am afraid that the statistics that have been furnished are totally unrealistic and I hope that this new committee which will be appointed by the Tamil Nadu Government will make a serious study of this problem, because there are wide variations regarding soil conditions, fertility, availability of water resources and costs of inputs. I hope, Sir, that this Committee—we had a Committee in 1965 which also produced a very good report, but I think it is a little out of date now-will go into it and we may be able to know how much a man can earn if he has ten standard acres or 15 standard acres or 20 standard acres. I do not—want to go into the question of land reforms and how revolutions can be effected in our agrarian economy. It is quite true that we have vast millions of unemployed people or under-employed people in our rural areas and unless we do not have the lands to distribute to all these people and unless we think of diversifying agricultural activities and introducing new activities of animal husbandry, poultry keeping, development of Inland fisheries and perhaps a few cottage industries, I do not think we are ever going to solve the problem by merely distributing the land, because our population is exploding at a fantastic rate. We had 360 million rural population in 1966 which has gone up to 434 million in 1971 and which will probably go up to 550 million and at this rate if we are going to sub-divide the land, it will become totally an uneconomic proposition.

Sir, one other point I would like to mention and this I have already mentioned in a previous debate. I would like to know from the Minister whether there are any difficulties in adopting a plan which I have suggested, i.e., apart from dry lands in Ramanathapuram district and various other districts where intensive dry farming has to be adopted and new techniques have to be evolved, I would like to know whether we could not start agricultural estates on the model of industrial estates that we have in our country ; industrial estates formed by purchasing undeveloped lands, laying roads, water pipes, giving power supply, etc., and selling the developed areas to small-scale, medium-scale and large-scale industrialists for setting up industries. I believe, Sir, that in the field of agriculture, some pioneering effort is required.

I am sure the Hon. the Minister for Agriculture would take a very deep interest in the plan, being an agriculturist himself, and will try to have a plot of ten to twenty thousand acres anywhere between South Arcot and Tiruchirappalli districts, where we have thousands of acres of dry land, where nothing grows and nothing has ever grown ; and

1973 மார்ச் 28] [Thiru A. R. Damodaran]

we should think in terms of using that land for agriculture. I quite agree that it would require heavy investment. But, I think, as a pioneering attempt at least we can find out whether five or ten thousand acres of land could not be taken up in Tiruchirappalli district itself, because that is the district, the Hon. Minister hails from and he would be naturally more interested in the project itself. I would strongly urge that this may be taken up as a plan scheme, that the details may be given to the Government of India and that full attention may be given to this project and, if necessary, after five or ten years, by which time a great deal of Government assistance would be required, these lands could be distributed, not to any person already having lands, but to those landless labourers who are so plentiful in our State.

Sir, one word more and I have done, namely, the point which my hon. Friend Thiru Arivazhagan referred to and that was in regard to fruit and vegetable cultivation. I have been told that in Delhi and in places in Punjab, vegetable cultivation has become so much profitable that many farmers have diverted their lands to vegetable cultivation. Although I know that some attempts are being made, the Agricultural Department has 100 such schemes, every one a wonderful scheme only on paper, Sir. But, unfortunately, there is not a single scheme to which we are able to devote that much attention or probably allocate that much resources which will be necessary to get the results required. I hope that in our urban or municipal areas and towns with a population of over 20,000, intensive steps would be taken not by way of subsidies—I am not asking for subsidies—but at least by ensuring that seeds for vegetable cultivation and proper know-how are given to the people cultivating garden plots. One of the essential needs of the agricultural services is not merely to say that we have the seeds and fertilisers available at certain Panchayat Union Headquarters and the District Headquarters. But I have always been insisting that if our agricultural services should reach the farmers, we must have a greater degree of mobility in our own agricultural services. This would require our extension staff being given facilities to reach the farmer, because whatever advice you may give, whatever broadcast you may have over the All India Radio there is nothing like personal contact. I would strongly advocate that our agricultural extension staff be strengthened so that they could have more direct talk and contact with the farmers. Thank you, Sir.

4·30 P.M.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, விவசாய வளர்ச்சியும் உற்பத்தியும் நாட்டில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதுபற்றி நாம் அனைவரும் மகிழ்ச்சி அடையலாம். திட்டங்களின் மூலமாக ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திட்டத்தின் இறுதி ஆண்டிலும் அனுபவத்தை மேலும் மேலும் பெற்று அதை அமிலிருத்தி செய்வதற்காக வழிவகை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த வளர்ச்சி மென்மேலும் முனைப்புடன் வெற்றி அடைந்துகொண்டு வருகிறது. நமது மாநிலம் சம்பந்தப்பட்ட மட்டில்

[திரு. இருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 28

1972-73-ஆம் வருஷத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததை விட இந்த ஆண்டு இட்டத்தட்ட ரூ. 66 லட்சம் குறைவாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது எப்படிக் குறைந்தது என்று தெரியவில்லை. மேலும் விவசாயத் துறையில் அதிக வளர்ச்சி காண, நாம் விவசாயத் துறைக்கு அதிகம் ஒதுக்கியிருக்க வேண்டும். கொள்கை விளக்கத்தில் கொடுத்திருக்கக்கூடிய முயற்சிகளைக் கவனிக்கும்போது, இன்னும் அதிகமாகத் தொகை ஒதுக்கியிருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விவசாயிகளுக்கும், நமது பல்வேறு துறைகளுக்கும் மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு திட்டங்களில் வழிவகைகளைச் செய்துகொண்டு வருகிறது. அப்படி பல திட்டங்களின் மூலமாக பல கோடி ரூபாய்களைச் செலவழித்தாலும் கூட, அந்தந்த திட்டங்களின் மூலமாக செலவிடக் கூடிய ஒவ்வொரு பைசாவும் பலன் தரத்தக்க அளவிலே செலவழிக்கப்பட வேண்டுமென்ற நிதத்தை மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் எற்பட்டு, எல்லோரும் சேர்ந்து இணைந்து செயல்படுவதன் மூலமாகத்தான் நல்ல பலனை விரைவில் காணமுடியும். அந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகுபயன் தரும் பயிர் திட்டங்கள் 10, 12 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆரம்பிக்கப்பட்டு, நாள் அதிகமாக, அதிகமாக, பிந்திய வருஷங்களில் அந்தத் திட்டங்கள் நல்ல பலனை அளித்து வருகின்றன. அவற்றைத் தொடர்ந்து செய்துகொண்டு வருவது அவசியம். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதுபோல், இந்திய-ஜெர்மனி-நீலகிரி திட்டத்திலே "தாசனிட்" என்று ஒரு வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன பொருள் என்று விளங்கவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, இலாக்கா மூலமாகக் கொடுக்கக்கூடிய புல்டோசர் என்று நினைக்கிறேன்—"சங்கிலிச் சக்கர டிராக்டர்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 'புல்டோசர்' என்று கருதுகிறேன். அந்த டிராக்டர் யந்திரங்களுக்கு வாடகை வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும். அதிகத் தொகை வாடகையாக நிர்ணயத்திருக்கிறார்கள். அந்தத் தொகை குறைக்கப்பட வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய விவசாயிகளுக்கு உரிய தீவிரத் திட்டம் சில ஜில்லாக்களில் மட்டும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

உரம் சம்பந்தப்பட்ட வரையிலும், நமக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்தாலும் கூட அவற்றை நிவர்த்திக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். மாநில அளவில் முயற்சிகளை எடுக்கும்போது, ரெவின்யூ போர்டோ, ஃபுட் டிபார்ட்மெண்டோ, அதிகாரிகளோ, யாராக இருந்தாலும், சிரத்தையோடு அதைப் பெறுவதற்காக, ஃபுட் கார்ப்பரேஷனோடு சண்டை யிட்டு, முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1973 மார்ச் 28] திரு. ரா. இருஷ்ணசாமி நாயுடு,

நமது மாநிலத்தில், சென்னையும் நாகப்பட்டினமும் துறைமுக நகரங்களாக இருப்பதாலே, வேறு மாநிலங்களுக்குச் செல்லும் உரத்தை எந்த அளவுக்கு இங்கே 'டேப்' செய்ய முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிகளை எடுக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த வகையிலே அவர்கள் இந்த உணவு உற்பத்தித் துறையில்—அவர்கள் ரெவின்யூ இலாக்காவில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையில் இருந்தாலும் சரி, தேவையான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறார்கள். வினியோகம் சம்பந்தமாகக் கூறப்படும் குறைபாடுகளை அகற்ற ஆவன செய்யவேண்டும். விவசாயிகளும் இதிலே கவனம் செலுத்த வேண்டும். உரம் இருப்பு வைக்குமிடத்தில், உர மூட்டைகள் கெட்டுப்போகாதவாறும் குறைந்து விடாதவாறும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்தக் காரியங்களை செவ்வனே நேர்த்தியாகச் செய்வதன் மூலமாக விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படாமல் தடுக்கலாம். அதை அரசு யோசிக்கவேண்டும். போதிய கோடவுன் வசதிகள் செய்யப்பட வேண்டும். மூட்டைகளை கப்பலிலிருந்து இறக்கி சென்னையிலிருந்து மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு அனுப்புகிறபோது ரயிலில் வரக்கூடிய மூட்டைகள் குறைந்து விடுகின்றன. ஃபுட் கார்ப்பரேஷனில் இதைப் பற்றிக் கேட்டால், எற்றிவிட்டோம் என்று சொல்கிறார்கள். எற்றியபோது பக்கத்திலே இருந்து பார்த்துக்கொண்டா இருந்தோம் என்று ரயில்வே டிபார்ட்மெண்டார் சொல்கிறார்கள். யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. எங்கள் மார்க்கெட்டிங் சொசைடியில்கூட 26 மூட்டைகள் குறைவாக வந்து சேர்ந்தன. அத்தனை பேரையும் அணுகியாயிற்று. ரயில்வே டிபார்ட்மெண்டின் மீது வழக்குத் தொடர கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இப்படியெல்லாம் நடக்காமல், இப்படிப்பட்ட புகார்கள் வராமல் கவனிக்க வேண்டும். இன்னூர் தான் பொறுப்பு என்ற வகையிலே அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உரப் பற்றுக்குறையைப் பொறுத்தவரையில், எங்களிடம் இல்லை. வியாபாரிகளிடம் தான் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதையும் யோசிக்க வேண்டும். வியாபாரிகள் உர வியாபாரம் செய்யலாம். கூட்டுறவுத் துறையின் மூலமாக வினியோகிக்க வேண்டுமென்று சொல்லலாம். வியாபாரிகளுக்கு அந்த மூட்டைகள் எங்கேயிருந்து வந்தன என்ற கணக்கு எடுக்க வேண்டும். விவசாயிகளே விற்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஒழுங்காக நடந்துகொள்ளாமல், வாங்கிய இடத்திற்குப் பக்கத்திலேயே வியாபாரிகளிடம் விற்றுவிடுகிறார்கள் என்ற குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன. இது வருந்தக்கூடிய விஷயந்தான் இதை யோசித்துப் பார்த்து ஆவன செய்ய வேண்டும். விவசாயிக்கு உரக்கடன் கொடுக்கிறபோதுகூட யார் விவசாயி என்று அறிந்துகொள்ளாமலேயே உரக் கடன் கொடுக்க சிபாரிசு செய்யப்படுகிறது. அவர்கள் உர மூட்டைகளை, பயிருக்குத் தேவையில்லை என்றால், வியாபாரிகளுக்கு ரூ. 10. 20 என்று அதிகமாக லாபம் வைத்து விற்கிறார்கள். இதிலே சம்பாத்தியம் தேடிக்கொள்கிறார்கள். இப்படி சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இவைகளை யெல்லாம் தடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உரம் சம்பந்தப்பட்ட வியாபாரம் செய்யக்கூடியவர்களுடைய தவறான நடவடிக்கைகளையெல்லாம்

[திரு பா. திருஞ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 28

தடுக்க வேண்டும். இந்த மாதிரி உரம் கொடுப்பதற்கு விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கும்போது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பூச்சி மருந்துகள் விஷயத்திலும் கூட அதே மாதிரித் தேர்ந் தெடுக்க வேண்டும். பூச்சி மருந்து வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மூலமாக இலாக்காவில் கொடுக்கப்படுகிறது. இந்தப் பூச்சி மருந்து வாங்கும்போதுகூட, சர்க்கரை வாங்கி விற்பதுபோல, பக்கத்திலேயே வியாபாரி இருக்கிறார். அவரிடம் கொடுத்துவிட்டு உடனே பணம் வாங்கிக் கொண்டுபோகிற பரிதாபகரமான காரியங்கள் நடைபெறுகின்றன. இந்தக் காரியங்களைக் கண்டுபிடித்து, அவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இப்புத்தகத்தில் "பாத்திகள்" என்ற வார்த்தை வருகிறது. செயல் விளக்கமுறை சம்பந்தமாக. "பாத்தி" என்பது சிறிய இடத்தைத்தான் குறிக்கும். 10 செண்டு, 1 எக்கர், 1 ஹெக்டேர் பாத்தி என்று குறிப்பிடப்பட்டி ருக்கிறது. "கர்ப்பூர பாத்தி கட்டி, கஸ்த்தூரி எரு போட்டு . . ." என்று சொல்வார்கள். பாத்தி என்றால், 12 அடி நீளம், 8 அடி அகலம். எனவே, இந்த இடத்தில் பாத்தி என்ற வார்த்தையை உபயோகித்திருப்பது சரியல்ல. வேறு ஒரு வார்த்தை கண்டுபிடிக்க வேண்டும்.

பருத்தி சம்பந்தப்பட்ட மட்டில், என்னுடைய அனுபவத்தின் மூலமாக அறிந்த ஒரு சில விஷயங்களைச் சொல்கிறேன். பருத்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. வெளி இடங்களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி யிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் பருத்தி பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய காரியமாகும். அங்கே பருத்தி வாங்குவதற்கு யாரும் இல்லை என்று சொல்வதைக் கேட்க கஷ்டமாக இருக்கிறது. ஒன்று சொல்லலாம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்து அங்கேயுள்ள பருத்தியை எல்லாம் சங்கம் மூலமாகக் கொள்முதல் செய்து, அரைத்து அங்கேயே பேலாகக் கட்டி, அங்கேயிருந்து நேடியாக நடுத்தரகர் களில்லாமலேயே, பஞ்சு மில்களுக்குக் கொடுத்து பணம் பெற முடியும். அந்த முறையை நன்றாகச் செய்யலாம். விவசாயிகளும் அனுகூலம் அடைய முடியும். அதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பருத்தி வாங்க ஆள் இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. இதை வாங்க ஆள் இல்லையே என்பதற்காக அங்கேயே வாங்கி, அங்கேயே அரைத்து அவற்றை விற்பதற்கு, ஆசை காட்டுவதற்கு— ஆசையூட்டுவதற் கும், நான் தயாராக இருக்கிறேன்—எனது மார்க்கெட்டிங் சொசைட்டி தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தஞ்சை ஜில்லா விவசாயிகள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகமாகப் பஞ்சு தேவையாக இருக்கிறது. 10 லட்சம் எக்கரை இப்போது உற்பத்தியாகிறது. 20 லட்சம் எக்கரால் உற்பத்தி செய்தால் தான், நமக்குத் தேவையான பருத்தி கிடைக்குமென்று இங்கே

[1973 மார்ச் 28] [திரு. சா. திருஞ்ணசாமி நாயுடு]

சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அதற்கு விவசாயிகளுக்கு வேண்டிய ஊக்கம் கொடுப்பதற்கான ஏற்பாடு களை அரசு செய்ய வேண்டும்.

பருத்தி, மிளகாய் முதலிய மகசூல்களுக்கு நோய்கள் எங்கிருந்து தான் வெகு சீக்கிரமாக வருகின்றனவோ, தெரியவில்லை. ஒன்று போனால் ஒன்று வந்து பற்றிக்கொள்ளும். பருத்தியை இங்கே அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, அதிலே வரக்கூடிய நோய்களைத் தடுப்பதற்கான முறையிலே உடனே முயற்சிகள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் இந்த விவசாயத் துறையில் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை மேலும் மேலும் ஊக்கமாக நடத்தி நம்முடைய நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கான வகையிலே அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Thiru T. K. Ponnuvelu, Only 10 minutes.

*திரு. டி. கே. பொன்னுவேலு : மாண்புமிகு தலைவரவர்களே, வேளாண்மைத்துறை பற்றிய கொள்கைக் குறிப்புகளை திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் என்ற முறையிலே வரவேற்கிறேன். அதனைவிட மேலாக அதே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவன் என்ற முறையிலே நான் வரவேற்பதிலே உள்ளபடியே பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன்.

கடந்த 5, 6 ஆண்டு காலமாகத் தமிழ்நாட்டிலே எவ்வளவோ இடுக்கண்களுக்கிடையில் வேளாண்மைத் துறையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்திய ஒரு சர்க்கார் இன்றைய தினம் விவசாயிகளுக்கு எந்த அளவிலே உதவியாக இருக்க முடியுமோ அந்த அளவிலே உதவி செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடிய சர்க்கார் இருக்கிறது என்பதிலேயும் நான் உள்ளபடியே பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. அய்யாவுன் அம்பலம் தலைமை.)

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கடந்த 6 ஆண்டுகளிலே விவசாயத்தில் எந்த அளவிலே நாம் ஈடுபட்டு எந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம் என்பதைப்பற்றியெல்லாம் புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். 40 லட்சம் டன்னிலிருந்து 72 லட்சம் டன்னை உணவுஉற்பத்தியைப் பெருக்கியதைக் கூறினார்கள். அதனை 79 லட்சம் டன்னை உயர்த்த இருப்பதையும் குறிப்பிட்டதையெல்லாம் நாம் பெருமையாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையில் நாம் மேலும் புகழாரங்களை சூட்டிக்கொண்டிருப்பதை விட, தேவையான பலவற்றைச் செய்தவர்கள் இருக்கிறார்கள், விவசாயத்தைப் புரிந்தவர்கள் இந்தத் துறை யின் அமைச்சர் பொறுப்பை இன்றையதினம் நிர்வாகம் செய்கின்றார்கள், ஆகவே சொன்னால் செய்வார்கள் என்ற உணர்ச்சியில், விவசாயிகளுக்குத்

[திரு. டி. கே. பொன்னுவேலு] [1973 மார்ச் 28

தேவையான சில விவகாரங்களை நான் சொல்லவிரும்புகிறேன். அந்த விவகாரங்கள் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் வேறு வேறாக இருக்கலாம்; ஆனால் அவை விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் தேவை என்பதாலே, கூட்டு மொத்தமாக இலாக்காக்களைப் பார்க்காமல், இவை விவசாயிகளுக்குத் தேவை என்னும் உணர்வில் நான் உங்கள் முன்னால் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழைய ரக நெல்லைப் பயிரிடுவதற்குப் பதிலாகப் புதிய ரக நெல்லைப் பயிரிடுகிறோம். அதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டது போல, தங்குதடையில்லாமல் உரம் தேவைப்படுகிறது. ஆண்டிற்கு ஆண்டு உரத்தின் தேவை அதிகப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதே போல உரம் மட்டும் இந்தப் புதிய ரக நெல்லுக்குப் போதுமா என்று பார்த்தால், நிச்சயமாக அது போதாது என்பதையும் அதற்கு முன்பு இருந்ததைப்போல இரண்டு பங்கு தண்ணீர் தேவை என்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும். அந்த அளவிற்குத் தண்ணீர் இன்றைய தினம் தங்குத் தடையில்லாமல் கிடைக்கிறதா என்றால், இல்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்தாக வேண்டும்.

இருக்கக் கூடிய வரிகளை முறையாகப் பராமரிக்கவேண்டும். ஆனால் இன்று உள்ள சட்டப்படி வரிகளைப் பராமரிக்கும் பொறுப்புத்தான் சர்க்காருக்கு உண்டே தவிர்த்து வரிக்கு நீர் வரக்கூடிய வரவுக்கால்வாயைப் பராமரிப்பதற்கு வேண்டிய பொறுப்பு குடிமராமத்து என்ற நிலைமையிலே மட்டும் தான் இருந்து வருகிறது. குடிமராமத்து என்பது, தலைவரவர்களே, நான் மிகவும் வினயமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்—அது பத்தாம் பசலி உணர்வுகள்; நடைமுறைக் காலத்தில் ஒழிந்து போகவேண்டிய பழைய ஜமீன் முறை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கக்கூடிய ஏழை எளியவர்கள் ரத்தத்தை உறிஞ்சக்கூடிய மிக மோசமான நிலையிலே உள்ள ஒரு திட்டம். நூற்றுக்கணக்கான காணிக்குச் சொந்தக்காரனும் ஒரே ஒரு ஆளை அனுப்புவான், நிலமே இல்லாத ஒரு ஏழைக் குடிமகனும் ஒரு ஆளை அனுப்ப வேண்டுமென்ற நிலைமையில் உள்ள ஒரு பத்தாம் பசலிக் கொள்கை அது. அந்த முறை மாற்றப்பட வேண்டும். அல்ல, அல்ல, அந்த முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

சர்க்கார் பொறுப்பிலே எப்படி வரிகளை பராமரிப்பது என்று எற்றுக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல வரவு கால்வாய்களையும் பராமரிக்கும் பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் மூலமாக பெய்யும் மழையை ஒழுங்காக நாம் நாட்டிலே வரிகளை நிரப்புவதற்குப் பயன்படுத்தவேண்டும். நிரம்பிய அந்தத் தண்ணீரை முறையாகப் பாதுகாக்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன். நம்முடைய நாவலர் அவர்களுடைய மிக நெருங்கிய உறவினராகவும் எனக்கு மிக வேண்டிய நண்பராகவும் இருக்கக்கூடிய திரு. குமாரசாமி அவர்களுடைய சீரிய தலைமையில், மிக நல்ல முறையிலே பூண்டியிலே தண்ணீர் பாதுகாப்பிற்கு வேண்டிய வழிவகைகள் என்ன

1973 மார்ச் 28] [திரு. டி. கே. பொன்னுவேலு]

என்பதை ஆய்வு நடத்த அனைத்து இந்தியாவிலிருந்து வல்லுநர்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டார்கள். அது பற்றி ஆய்வுகள் நடைபெற்றன. ஆனால் அவர்கள் அதற்குரிய விஞ்ஞான ரீதியான கெமிகல்ஸ் மிக கூடுதலான விலையில் இருக்கின்றன. கெமிகல்ஸ் முறையில் பாது காப்பற்கு அதிகச் செலவு ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். கெமிகல்ஸ் இங்கேயே தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சர்க்கார் அதற்கு ஆவன செய்யவேண்டும். மேலும் அதுபற்றிய ஆராய்ச்சிகள் செய்ய ஊக்குவதற்கு வேண்டிய முறையிலே சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். தண்ணீர் விஞ்ஞான ரீதியிலே பாதுகாக்கப்பட வேண்டும்.

இன்றைய தினம் வரிகளில் தங்குகிற தண்ணீரில் 40 சத வீதம் "எவாப்பரேஷன்" மூலமாகப் போய் விடுகிறது. அதைத் தடுக்கவேண்டும். அதே போல அந்தத் தண்ணீர் கால்வாய்கள் மூலம் வீணடிக்கப் படுகிறது. நமக்குத் தண்ணீர்த் தேவை அதிகமாக இருக்கிறது. எவ்வளவு தான் உரம் கொடுத்தாலும், கொடுத்த உரத்தை எவ்வளவுதான் விவசாயிகள் பயன்படுத்தினாலும், பின்னர் அதற்கு வேண்டிய தண்ணீர் இருந்தால் தான் எக்கராவிற்கு ஐ. ஆர். 8 நெல், 75 கிலோ கொண்டது 50 மூட்டை பயிரிடக்கூடிய அதே விவசாயி 75 மூட்டை 80 மூட்டை கிடைக்குமளவுக்கு பயிரிட முடியும். தங்கு தடை இல்லாமல் தண்ணீர் கிடைக்க வேண்டியது மிகவும் முக்கியம் என்பதை நான் விவசாயி என்ற ஹோதாவில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கார் தன்னுடைய இலாக்காக்கள் மூலமாக தரைக்கு அடியில் தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கும், அதற்குப் பிறகு குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்து தருகிறார்கள். லட்சக் கணக்கிலே பணம்போட்டு அதற்கு உரிய ஒவ்வொரு இயந்திரமும் வாங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு அந்த இயந்திரத்தை அனுப்பும் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கிலே மானியம் என்ற முறையிலே தரப்படுகிறது. நான் அதனைப் பயன்படுத்தியவன், ஆகவே இதனை உணர்ந்திருக்கிறேன். இயந்திரத்திற்குச் சுமார் மூன்று லட்சம் ரூபாய் மூலதனம் போடுகிறோம். அத்துடன் அனுப்பும் டிரில் ஆபரேசர், டிரில்லர், தூண டிரில்லர் ஆகியோர் முறைப்படி படிக்காதவர்களாக இருக்கிறார்கள். பவர் டிரில்லர்களை படித்த, பொறுப்புள்ளவர்கள் மூலமாகத்தான் அனுப்ப வேண்டும். இன்றுள்ள நிலையில் தரைமட்டத்திலிருந்து போடும் பவர் டிரில்லர் சர்க்கார்வசம் இருக்கிறது. ஆனால் எல்லா விவசாயிகளும் தரை மட்டத்திலிருந்து போடவேண்டுமென்று இல்லை. பல விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை இன்னும் ஆழப்படுத்தி குழாய்க் கிணறுகளைப் போட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்கு சர்க்கார் துறையிலே வேண்டிய நவீன இயந்திரம் இல்லை. தனியார் துறையிலே இருக்கிறது. அதே போல சர்க்கார் துறையிலே அவைகளை வாங்கியாக வேண்டும். அதை நாம் பயன்படுத்தினால், நல்ல பலன் கிடைக்கும், "எர் கம்பிரசர்கள்" தேவை. போடப்பட்ட அந்தக் குழாய்க் கிணறுகளில் தண்ணீர் உண்டா? இல்லையா? என்பதை நாம் தெரிந்துகொள்ள மிகக் காலதாமதமாகிறது. நீண்ட பல மாதங்கள்

காத்திருக்க வேண்டியிருக்கிறது. 28, 30 பவர் டிரில்லர்கள் இருக்கக் கூடிய ஒவ்வொரு யூனிட்டுக்கும் ஒரே ஒரு எர் கம்ப்ரெஸர்தான் இருக்கிறது. பவர் டிரில்லரைக் கொண்டு வந்து ஒரு முறை போட்டு விட்டால், குழாய்களின் தரத்தை ஒட்டி நல்ல முறையிலே போட்டுவிட்டால், அப்படிப் போட்டதற்குப் பிறகு ஆயுள் முழுவதும், தண்ணீர் நல்ல முறையில் இருந்தால் மறுபடியும் இந்தக் குழாய்க் கிணறுகளுக்குப் பவர் டிரில்லர் தேவையில்லை. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு எர் கம்ப்ரெஸர் தேவைப்படுகிறது. ஆனால் பிராந்தியத்திற்கு ஒரே ஒரு எர் கம்பிரஸர்தான் இருக்கிறது. நாம் நம் வீட்டிலே பிறந்துள்ள குழந்தை ஆணு, பெண்ணு என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முடியாமல் கதவுக்கு இந்தப் பக்கம் நீண்ட பல மாதங்கள் காத்துக் கொண்டு இருப்பதைப் போல விவசாயிகள் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் வேடிக்கையுடன் கூடிய வேதனையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உர விநியோகம் பற்றி நம்முடைய பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்குக் கவனம் இருக்கிறது, 1967-ம் ஆண்டில் இதே போல ஒரு தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றைய துணைப் பொதுச் செயலாளரும், நம்முடைய ஆட்சியிலே பிற்பட்டோர் நல அமைச்சராகவும் இருக்கக் கூடிய மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்தார்கள். அப்போது அவர்கள் இப்படிப்பட்ட தட்டுப்பாடு வந்ததும் பாராளுமன்றத்திலே பேசியது எனக்கு ஞாபகத்திலே இருக்கிறது. 'இப்படி உரம் வந்ததும் எந்தெந்த இடங்களுக்கு வந்திருக்கிறது என்பதை உடனே பிராந்தியச் செய்தியில் அறிவித்தால், திருடு போவதற்கு பிளாக் மார்க்கெட் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல், ஊர் மக்களே பார்த்துக் கொள்வார்கள். இதனை நீங்கள் செய்ய வேண்டும்" என்று அன்றைய தினம் அவர்கள் பாராளுமன்றத்திலே பேசினார்கள். அதற்குப் பிறகு பிராந்தியச் செய்தியில் அது ஒலிபரப்பப்பட்டது. அதன் விளைவாக அந்த பிளாக் மார்க்கெட் தடுத்து நிறுத்தப்பட்டது. அதே போல இன்றைய தினம் நாமும் அந்த முறையைப் பின்பற்றினால் நல்ல பலன் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு விவகாரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். இருந்தும் விவசாயிகளுக்கு வேளாண்மை துறை பற்றிக் கூட பேச நேரம் கொடுப்பதில்லை. ஆகவே, ஒன்றிரண்டு மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய மாவட்ட விவசாய இலாகாவில் வேலை செய்யக்கூடிய கடைநிலையில் இருக்கக்கூடிய இந்த இலாகா சிப்பந்திகளுக்கு ஊதிய முறை சரியில்லை என்பதனை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் சரிவர நம்முடைய நிலங்களுக்கு வருவதில்லை, நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மைதான் ; அவர்கள் வேலை வாங்க வேண்டிய முறையில் வேலை வாங்க வேண்டுவது நம்முடைய கடமை என்றாலும், அவர்களுக்குத் தர வேண்டிய ஊதிய உயர்வைத் தர வேண்டுமென்று மிகவும் பணிவோடு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வேன்.

அதேபோல ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. என்னுடைய மாவட்டமான செங்கற்பட்டு மாவட்டத்திற்குப் பக்கத்தில் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள அந்த விற்பனை வாரியம் கடந்த 34 35 வருஷங்களுக்கு மேல் இயங்குகிறது. ஏறத்தாழ விவசாயிகளில் 80 சதவிகிதம், நிலக்கடலையை 40, 50, டிலோதான் என்றாலும், இந்த கமிட்டிக்குக் கொண்டுவந்துதான் விற்கிறார்கள். அதன் மூலம் தான் விற்பனை செய்யப்படுகிறது. அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள் ; நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் நெல்லைக் கொண்டு வருவதில்லை. ஏன் என்று அருள் கூர்ந்து எண்ணிப் பார்த்தாக வேண்டும். அது ஒன்று.

4·40 பி. ப.

இரண்டு, அந்த விற்பனை வாரியத்திற்கு ஒரு மேலிடம் இருக்கிறது. அந்த மேலிடத்திலிருந்து ஒரு உத்தரவு வரும். அதற்கு முரணான உத்தரவு சர்க்காரிடமிருந்து வருகிறது. அதே போல் மார்க்கெட்டிங் கமிட்டியிலிருந்து நாங்கள் தீர்மானங்கள் போட்டு அனுப்புகிறோம். அப்படிப் போட்ட தீர்மானங்கள் போடப்படியே இருக்கின்றனவே தவிர—மாதங்கள் என்றல்ல, ஆண்டுகள் ஆனாலும்—பதிலே வருவதில்லை. 2½ வருஷங்களுக்கு முன்னால் என்று நினைக்கிறேன், எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் அடையாளச் சின்னத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று எழுதி அனுப்பியதற்கு பதிலே அனுப்ப வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, விவசாயம் நமது நாட்டின் முதுகெலும்பு போன்றது. நாட்டு மக்களில் பெரும்பாலோர், சுமார் 80 சதவிகிதத்தினர் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். அவர்களுடைய முக்கிய தொழில் விவசாயம்தான். ஆகவே, எந்த அரசு வந்தாலும் விவசாயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய அவசியமுள்ளது. இதையெல்லாம் அறிந்துதான், ஆட்சியில் உள்ளவர்கள், கிராமங்களிலேயுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் விவசாயத்தையும் இதுபோன்ற முக்கியத்துவமுடைய கல்வியையும், இந்த இரண்டு பொறுப்புக்களையும் மேற்கொண்டு செய்து அங்குள்ள குறைகளைப் போக்க வேண்டுமென்ற அளவுக்கு, இந்தியாவுக்கு வழி காட்டியாக நமது மாநிலத்தில் இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தோம். 1958-ம் வருஷச் சட்டத்தின் மூலம் இது அமலுக்கு வந்தது. இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுவது

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 28

கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். எந்த நோக்கத்துடன் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தோமோ அந்த நோக்கம் நிறைவேறுவது கண்டு மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. இதிலுள்ள குறைகளை அரசாங்கமும், அமைச்சரவர்களும் நேரடியாகக் கவனித்து, போக்கி வந்தால் இன்னும் கூட நல்ல முறையில் நாம் வெற்றியடைய முடியும். எனவே அதிலுள்ள குறைகளைப் போக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல இடங்களில் விவசாயிகளுக்குப் பல குறைகள் இருக்கின்றன. இணற்றைத் தோண்டும்போது, அவற்றில் கறும் பாறை வந்து விடுகிறது. எனவே அந்தக் கற்களை உடைத்து, தண்ணீரை மேலே கொண்டுவர முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இப்போது தரப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் "Rock Blasting Unit" வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது முக்கியமான விஷயம். அதை நிறைய வாங்கி அளிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் கிடைக்கும் படியாக, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி "போரிங்" போடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். நவீன முறையில் துளைகள் போடுவதற்கு இயந்திரங்கள் வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு 38·87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. "Rock Blasting Unit"க்காக 71·5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆரம்பக் கட்டமென்று நினைக்கிறேன். இது நமக்கு ரொம்பத் தேவை. நமது மாநிலமே விவசாயத்தை நம்பி வாழும் மாநிலம். விவசாயத்தை அஸ்திவாரமாகக் கொண்டு தொழில் நடத்தும் மாநிலம். எனவே இவைகளுக்காக அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெகு நாட்களாக நாம் பேசி வரும் விஷயம் "Crop Insurance" ஆகும். எல்லா "Crop" களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முடியவில்லையென்றாலும், முக்கியமான பயிர்களுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். பயிர்கள் கெட்டுப்போனால், இடிப்பு ஒடிந்தது போல, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எனவே முக்கியமான பயிர்களாகிய நெல் பயிரையும், பருத்திப் பயிரையும் இந்த "Crop Insurance" திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த இரண்டும் பெரும் பணம் செலவழித்து விவசாயம் செய்யப்படுவதாகும். இந்த இரண்டையும் "Crop Insurance" திட்டத்தின் கீழ் முதலில் கொண்டுவந்துவிட்டால், மற்றப் பயிர்களை வருடத்திற்கு இரண்டு பயிர்களாக "Extension" கொடுத்துக் கொண்டு வரலாம். எனவே இதை இப்போதுள்ள அமைச்சரவர்கள் கவனிப்பார்களென்று நம்புகிறேன். பொதுவாக நாம் நெல் பயிரைப் பயிரிடுவதில் தான் அதிகமான கவனத்தைச் செலுத்துகிறோம். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன். நெல்லை மட்டும் விளைவிப்பதன் மூலம் நமது பசி, பஞ்சத்தை நீக்கி விட முடியாது. சோளம், கம்பு, வரகு, கேழ்வரகு, தினை, குதிரைவாலி

1973 மார்ச் 28] [திரு. கே. ராஜாராம்]

போன்ற மற்ற தானியங்களையும் அதிகமாக விளைவிக்க வேண்டும். அப்போதுதான் நெல் விலையைக் குறைக்க முடியும். இல்லையென்றால் நெல் வேண்டுமென்றும், அரிசி வேண்டுமென்றும் மக்கள் சொல்வார்கள். இந்தத் தானியங்கள் நெல்லுக்குக் குறைந்தவையல்ல. கிராமங்களில் உள்ள மக்கள் இந்தத் தானியங்களை மிகவும் விரும்புவார்கள். இவைகளில் அதிக விளைச்சலைத் தரும் பயிர்களை—ஐ.ஆர். 8 போன்ற ரகங்களைப் போல, இந்தப் பயிர்களிலும்—உண்டு பண்ண வேண்டும். இப்போது சோளம், கம்பு ஆகியவற்றில் வந்திருக்கிறது. வரகு, கேழ்வரகு, தினை, குதிரைவாலி போன்ற மற்ற தானியங்களிலும் இவைகள் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதே போன்று பருப்பு வகைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பச்சைப் பயிறு போன்றவைகள் குறைந்த அளவில்தான் விளைந்து கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். பருத்தியைப் பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களே அதைப்பற்றிச் சொல்லிவிட்டார்கள்.

விவசாயம் நன்முறை நடக்க வேண்டுமென்றால், வரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வருகின்ற "சப்ளை சேனல்"ஐ நன்முறைத் தூர் எடுத்து, ஆவன செய்ய வேண்டும். பல இடங்களில் இப்படி இருக்கிறது. மதுரை ஜில்லாவில்கூட இப்படியிருக்கும் இரண்டு குளங்களைப் பற்றி எழுதியிருக்கிறேன். மாவட்டக் கலெக்டரிடமும் சொல்லியிருக்கிறேன். அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது விவசாயத்தைப் பற்றி நிறைய ரிசர்ச் செய்கிறார்கள். அதற்காக நிறைய பணம் செலவழிக்கிறார்கள். இந்த ரிசர்ச் செய்வதன் பலன், விவசாயிகளுக்கு, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ரிசர்ச் செய்வதன் பலன் உடனடியாகக் கிடைக்க வேண்டும். இல்லையென்றால் பிரயோசனம் இல்லை. உதாரணமாக நெல்லுக்கு இவ்வளவு தண்ணீர் தேவை என்றிருக்கிறது. இப்போது பார்ப்போமானால், நெல்லுக்கு எந்த அளவுக்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால், 5 அங்குலம் அல்லது 6 அங்குலம் அளவுக்குக் குறையாமல் நிலங்களில் தண்ணீரை நிறுத்தி வைக்க வேண்டுமென்று விவசாயிகள் சொல்கிறார்கள். அதனால் அவர்களுக்கு நிறைய கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆனால் ரிசர்ச்சில் என்ன சொல்லுகிறார்கள் என்றால், காயக் காய தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தால், நல்ல பயன் கிடைக்கும் என்கிறார்கள். தண்ணீரை எப்படிக் கட்ட வேண்டுமென்று அவர்கள் குறித்த காலத்தில் விவசாயிகளுக்குச் சொன்னால், இன்னும் அதிகமான ஏக்கர்களுக்கு அந்தத் தண்ணீரைப் பாய்ச்சலாம். 100 ஏக்கர் அளவுக்குப் பாயும் தண்ணீரை, 120, 150 ஏக்கர்களுக்குப் பாய்ச்சலாம். எனவே ரிசர்ச் செய்வதால் ஏற்படும் பயனை உடனுக்குடன் விவசாயிகளுக்கு, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. அ. கே. ராஜாராம்] [1973 மார்ச் 28

கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிகமாகப் புகாரினைச் சொல்கிறார்கள். மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கரும்பின் விலையும், சர்க்கரையின் விலையும் இருந்துகொண்டிருக்கிறது. அரியானா, உத்திரப் பிரதேசம் மாநிலங்களில் ஒரு டன் கரும்புக்கு 125 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஒரு டன் கரும்புக்கு 85 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இங்கு இருக்கும் விவசாயிகள் ஏமாளிகள் அல்ல. இனியும் இதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

அரியானாவில் ஒரு டன்னுக்கு 125 ரூபாய் கொடுக்கும்போது, இங்கு மட்டும் 85 ரூபாயென்று அமைச்சரவர்கள் எப்படி நிர்ணயிக்க வேண்டும்? அரசாங்கம் அதனுடைய கவனத்தையும், சாமர்த்தியத்தையும் இதில் காட்டவில்லை. இந்த மாநிலத்தின் விவசாயிகளுக்கு அரியானாவில் கொடுக்கும் விலையைப் போல் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இல்லையென்றால், நாம் ஏன் 85 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று கேட்கிறேன். சர்க்கரையை எல்லா இடங்களிலும் ஒரே விலைக்கு விற்கிறார்கள். அது மாதிரி கரும்புக்கும் ஒரே விலையை நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் சொல்லலாம், "Sugar Content" அங்கே அதிகமிருக்கிறதென்று. அது தப்பு. மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய "Sugar Content" சர்க்கரைச் சத்து இந்தியாவிலேயே இல்லையென்று சொல்லப்படுகிறது. அது போக நமது விவசாயிகளைப் பற்றிக் கூட நான் சொன்னேன். விவசாயிகள் விவசாயத்தை மட்டும் நம்பி வாழமுடியாது. ஆகவே, சில தொழில்களை விவசாய இலாகா நிறுவுவது நல்லதென்று நினைக்கிறேன். கிராமங்களில் சிறு குடிசைத் தொழில்கள் இருந்தால் தான், அவர்கள் 12 மாதங்களும் பசியில்லாமல் வாழ முடியும். அவர்கள் விவசாயம் செய்யும் நேரம் போக, மீதியுள்ள நேரத்தில் குடிசைத் தொழில்கள் செய்து வாழ வழி வகைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும். கிராமங்களில் மின்சார வசதி கிடைக்கிறது. எனவே, அந்தந்த கிராமங்களில் இந்த மின்சார வசதியை உபயோகப்படுத்திக்கொண்டு சிறு தொழில்களோ, கூட்டுறவு முறையில் செய்யலாம். கிராம மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பி வாழ முடியாது. நல்ல முறையில் அவர்கள் வாழ வேண்டுமென்றால், இதை விவசாய இலாகா கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன், வணக்கம்.

5-00
பி ப

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த வேளாண்மைத் துறை விவாதத்தில் கலந்துகொண்டு நல்ல கருத்துக்களை அளித்து மேலும் அந்தப் பணிக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் நல்ல பல கருத்துக்களைச் சொன்ன எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், விவாதத்திலே கலந்துகொண்ட அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே பல நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். சிறப்பாக, இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கின்ற உழவர் பெருமக்களுக்கும் அதற்காகப் பாடுபடுகின்ற அத்தனை பேர்களுக்கும் என்னுடைய பாராட்டு தலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனென்றால் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகின்ற நிலப் பரப்பில்,

1973 மார்ச் 28] [திரு. ஜி. தர்மலிங்கம்]

அதிகமான உற்பத்தியைப் பெருக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற எல்லாப் பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வேளாண்மைத் துறையில் இருக்கின்ற நிலங்கள் ஆண்டுக்கு ஆண்டு வீடுகளின் பெயராலும், தொழிற்சாலைகளின் பெயராலும், வேறு பலவற்றின் பெயராலும் குறைந்துகொண்டே வருகின்றன. அப்படிக் குறைக்கப்பட்டு வந்தாலும், ஆண்டுதோறும் உணவு உற்பத்தியை எந்த அளவுக்குப் பெருக்கி வருகின்றோம் என்பதை நீங்கள் பாராட்டியதிலிருந்து இங்கிருக்கும் மற்றவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகின்றேன். பொதுவாக இப்போது விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஓரளவுக்கு உணர்ந்து அதைப் போக்கவேண்டுமென்பதற்காக இங்கே பல கருத்துக்கள் சொல்லப்பட்டன.

முதலாவதாக திரு. கணபதி அவர்கள் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவதைப் பற்றி ஏதோ ஆயிரம் ரூபாய் கடன் வாங்குவதற்கு 500 ரூபாய் செலவாகிறது என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. கணபதி அவர்கள் பேசுகின்றபோது ஆயிரம் ரூபாய் கடன் வாங்க கூட்டுறவுத் துறையிலே ரூ. 500 வரை செலவு செய்ய வேண்டியதாக இருக்கின்றது என்று சொன்னார்களாம். கூட்டுறவுத் துறையிலே பல வகையான வங்கிகள் இருக்கின்றன. அர்பன் பாங்கி—அது நகரத்தில் கடன் கொடுப்பது, அல்லது கிராம நாணய சங்கம்—அது கிராமத்தில் பணம் கொடுப்பது. பொதுவாக ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே கடன் கொடுப்பது அர்பன் பாங்கியாக இருக்க வேண்டும் அல்லது அக்ரிகல்சுரல் பாங்கியாக இருக்க வேண்டும்; இல்லையென்றால் கிராம நாணய சங்கமாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) இதில் 500 ரூபாய் எதற்காகச் செலவு செய்தீர்கள்? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். நான் அதைத் தெரிந்துகொண்டால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். 500 ரூபாய் எதற்காகச் செலவு? எந்தக் கிராம நாணயச் சங்கத்திலே அல்லது எந்த அர்பன் பாங்கியிலே கொடுத்தீர்கள்? லஞ்சமாகக் கொடுத்தீர்களா? அல்லது வேறு எதற்காகக் கொடுத்தீர்கள் என்று தெரிந்தால், அதை மாற்றி சீர்திருத்தம் செய்ய பெரும் வசதியாக இருக்கும் என்பதற்காக அந்த விவரத்தைக் கேட்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: எனக்காகத் திரு. கணபதி அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டாராக்கள். நான் சொல்லுகிறேன் அதற்குக் காரணம். இந்தக் கருத்தை இன்றையதினம் என்னால் பேச இயலாது என்ற நிலை ஏற்பட்டதால், அவர்களிடத்திலே சொல்லி இந்த அவையிலே சொல்லும்படி நான் அவர்களுக்குச் சொன்னேன். ஆகவே அந்தக் கருத்தை அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தைச் சொல்லுவதற்குக் காரணம் (குறுக்கீடுகள்) இல்லையில்லை. அவர்களுக்கு முழு விவரம் தெரியாது. அப்போது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இருந்திருந்தால், அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள். அவர்களுடைய துறையைச் சேர்ந்த விஷயம். அவர்கள் கேட்டதனாலே, நான் அந்தக் கருத்தை அவர்களிடத்திலே சொன்னதனாலே, நான் அதற்குப் பதில் சொல்ல என்னை அனுமதிக்க

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 28

வேண்டும். அது ஒரு முக்கியமான காரணம். விவசாயக் கூலிகளுக்கு அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் நம்முடைய மாநிலத்திலே இல்லை என்பதற்காக மினிமம் வேஜஸ் கமிட்டி என்ற பெயரால், ஒரு கமிட்டி போட்டார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய அரசாங்கம் போட்ட 4 பேரிலே நானும் ஒருவனாக இருக்கின்றேன். அந்த உறுப்பினர்களுடைய தலைவராக திரு கார்த்திகேயன் அவர்கள் இருக்கின்றார்கள். நான் இட்டத்தட்ட 4 மாவட்டங்களுக்குப் போனேன். தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய பல மாவட்டங்களுக்கு அந்தக் கமிட்டி சென்றது. அந்தக் கமிட்டியின் உறுப்பினனாக நான் சென்ற பல இடங்களிலே என்னிடத்திலே நேரடியாகக் கொடுக்கப்பட்ட புகார்கள் பற்றி எனக்கு நினைவிருக்கிறது. குறிப்பாகக்கூடச் சொல்கிறேன். தஞ்சை அருகிலே கந்தர்வகோட்டை பிரைமரி வங்கியிலிருந்து நிலத்திற்கு வேண்டிய செலவு செய்வதற்கு கடன் வாங்குவதற்குப் போகிறபோது ஒரு ஆயிரத்திற்கு 500 ரூபாய் வரையிலே அதற்காக லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று கூறினார் ஒருவர். அங்கு இருக்கின்ற அதிகாரிகளுக்கு, அங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலே யார் கடன் வழங்க அதிகாரம் பெற்றிருக்கின்றாரோ அவருக்குத்தான் அந்த மாதிரிப் பணம் லஞ்சமாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது என்ற கருத்தை கமிட்டியின் முன்பு, ஒரு இடத்திலே இல்லை, தமிழகத்திலேயுள்ள பல இடங்களிலே பல மாவட்டங்களிலே சொன்னார்கள். அதனுடைய குறிப்புகள் வந்திருக்குமானால், அந்தக் குறிப்புகளைக்கூட அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஆயிரம் ரூபாய் கடன் வாங்குவதற்கு 500 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது என்று சொன்னார்கள். அவர்கள் எதோ செலவு என்று சொல்லியிருக்கிறார்களே அதிலே உள்ளபடியே எதோ லஞ்சம் என்ற கருத்து இருக்கின்றது. செலவு என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அப்புறம் நிலவள வங்கி என்று சொன்னார்கள். நிலவள வங்கி ஆயிரம் ரூபாய் கடன் கொடுப்பதில்லை. ஆனால் ஆயிரம் ரூபாய் வாங்க 500 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கின்றது என்கிறார். அப்படி என்றால் அர்பன் பாங்கியிலாவது இருக்க வேண்டும் அல்லது ஸ்ரோம நாணய சங்கமாகவாவது இருக்க வேண்டும். யாருக்குக் கொடுத்தீர்கள் ?

திரு. ஜி. சுவாமிநாதன் : அவசரத்திற்குக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். கடன் வாங்க அவர்கள் கணக்குப்பிள்ளையிடம் சர்டிபிகேட் வாங்குவதிலிருந்து, அதிகாரிகள் வரையிலே இவ்வளவு பணம் என்று கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : கணக்குப்பிள்ளையிலிருந்து செலவாகின்றது என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவதற்கு என் கணக்குப்பிள்ளைக்குப் பணத்தைக் கொடுத்தீர்கள் ? தெரியாத்தனமாக கணக்குப்பிள்ளையிடத்தில் பணத்தைக் கொடுத்து இவ்

1973 மார்ச் 28] [திரு. அ. பெ. ஆதித்தனார்]

வாறு செலவு செய்திருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் இருந்தும் அந்த ஸ்ரோமத்திலே இருக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யவிட்டிருக்கிறீர்கள். அது சரியல்ல. கணக்குப் பிள்ளைகள் ரெவின்யூ டிபார்ட்மென்டைச் சேர்ந்தவர்கள்.

திரு ஜி. சுவாமிநாதன் : கூட்டுறவுச் சங்கத்திலே கடன் வாங்காமல் எதற்காக வெளியாரிடத்திலே அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டும் என்று விவசாயிகளிடத்திலே நான் கேட்டபோது அவர்கள் அவ்வளவு புகார்களையும் கொடுத்தார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு அய்யணன் அம்பலம்) : முதலில் அமைச்சர் அவர்கள் பேசட்டும். சட்டமன்றத் தலைவர் அவர்கள் ஐந்தரை மணிக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்போது விவசாயிகளுக்கு எப்படியெப்படித் தொல்லைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பது பற்றியும் இங்கே நீங்கள் கண்டிருக்கின்றீர்கள். கொண்ட இலட்சியமாகிய உற்பத்தியைப் பெருக்குவதிலே எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும், அவைகளையெல்லாம் பொருட்படுத்தாது, அவைகளிலே முன்னேற்றத்தையும் காட்டுவோம் என்ற ரீதியிலே இன்றையதினம் இந்தத் துறை பணியாற்றிக்கொண்டிருக்கின்றது. பொதுவாக இந்த விவாதத்திலே கலந்துகொண்டவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். முதலாவதாக, இந்த வேளாண்மைத் துறைக்கு உறுதுணையாக இருக்கின்ற பிற துறைகளுக்கும் அந்தத் துறைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்றையதினம் தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற சிறப்புத் திட்டங்களையெல்லாம் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றேன். அவைகளையெல்லாம் பற்றித் தனித்தனியாக எடுத்துச் சொல்வதென்றால் இப்போது காலம் அதிகமாகிவிடும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு சில நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகள் தரமான விதைகளை உபயோகிக்க வேண்டும் என்பதையும் அந்த விதைகள் அவர்களுக்குச் சீரான முறையில் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் நிச்சயமாகச் சொல்லுகின்றேன். தரமான விதைகளை 'சர்டிபை' செய்து, எற்றவை என்ற நற்சான்றுகள் பெற்றுத்தான் விதைகளைத் தரவேண்டுமென்று நாங்கள் ஒன்றியத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஆணைகள் பிறப்பித்திருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நேரடியாகப் பார்த்தால் நல்லது என்று சொன்னார்கள். கூடுமான வரையில் நானே அவைகளையெல்லாம் கவனித்துக்கொள்கின்றேன். வேளாண்மைத் துறை அதிகாரிகளும் அதிலே மிகவும் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள். இன்றையதினம் எங்காவது முளைக்காத விதைகள் இருக்குமானால், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 23

அடுத்து, பருத்தியைப் பற்றிச் சொன்னார்கள். பெருமதிப்பிற்குரிய பெரியவர் திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் டி.ஆர்.எஸ். 72 பருத்தி தஞ்சை மாவட்டத்திலே செய்யப்பட்டு கோடைப் பயிர் சரியான விலை போகாததினாலே அது நிறுத்தப்பட்டுவிட்டதாக திரு கணபதி அவர்கள் குறிப்பிட்டதற்கு எவ்வளவு கொடுத்தாலும் நான் வாங்கிக்கொள்கின்றேன் என்று அன்றைக்கு அவர்களே சொன்னார்கள். சென்ற ஆண்டு டி.ஆர்.எஸ். 72 பருத்தி 10 ஆயிரம் எக்கரில் பருத்தி சாகுபடித் திட்டம் ஒன்றை தஞ்சையில் கொண்டுவந்து நேரத்தில் சரியான விலைக்கு விற்கப்படாத காரணத்தால் இந்த ஆண்டு அதைக் கூட நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், எப்படியும் அதையும் வாங்கிக் கொள்ளுகிறோம், நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று அவர்களிடத்தில் ஒரு உறுதியளித்து இந்த ஆண்டும் அதை நீங்கள் விவசாயம் செய்யுங்கள் என்று கேட்டோம். அதற்கிடையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் சொன்னதுபோல், நாம் எவ்வளவுதான் அரிசி உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவு பெற்றாலும் பருப்பு வகையில் தன்னிறைவு பெறவில்லையே என்ற காரணத்தாலே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே ஏறத்தாழ 5 லட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கர்களில் தீவிர பருப்புச் சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்தி இன்றையதினம் அது சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5. 10. பி. ப-

அதைப்போலவே ஒரு தீவிர சாகுபடித் திட்டத்தின் மூலமாக இன்றைய தினம் சென்ற ஆண்டைவிட அதிகமான அளவு பருத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருவதை நீங்கள் இந்தக் குறிப்பில் பார்த்திருப்பீர்கள். இந்தப் புத்தகத்தில் பார்ப்பதை விட, போகிற இடங்களில் எல்லாம் அந்தப் பசுமையைப் பார்ப்பதிலிருந்து பசுமைப் புரட்சி எவ்வளவு தீவிரமாக நடைபெற்று வருகிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். எனெனறால் புத்தகத்திலே திட்டத்தைக் கொடுக்கலாம். ஆனால் கொடுக்கப்படுகிற திட்டத்தைப பார்க்கிற வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு போட்ட திட்டம் 72·2 என்ற அளவிற்கு இருந்து, அது நிறைவேறுமா நிறைவேறாதா என்று அன்றையதினம் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதைப் போலவே 79 லட்சம் டன்னாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற திட்டத்தை இந்த ஆண்டு போட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு அரிசி 55 லட்சம் டன்னாக இருந்தது இந்த ஆண்டு 59 லட்சம் டன் என்ற அளவுக்கு உயர திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சிறு தானியங்கள் 15·10 லட்சம் டன் என்ற நிலைமையை மாற்றி 17·50 லட்சம் டன் என்ற அளவுக்கு உயர்த்த முடியும் என்று திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. பருப்பு வகைகள் 1·92 லட்சம் டன்னாக இருந்ததை மாற்றி 2·50 லட்சம் என்ற அளவுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பருப்பு வகைகளைப் பெருக்குவதற்கு இந்த ஆண்டு தீவிரத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதைப் போல மதிப்புக்குரிய திரு. டி. வி. நாராயண சாமி அவர்கள் இங்கே விளம்பரம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் எங்களுடைய விளம்பரம் தான் அதிகமாக இருக்கும் என்று கருதுகிறேன். எனென்றால் மற்ற விளம்பரங்களைவிட எந்தச் சாலையில் நடந்து சென்றாலும், அல்லது காரில் சென்றாலும்கூட

1973 மார்ச் 23] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பக்கத்தில் திரும்பிப் பார்த்தீர்களேயானால், பசுமைப் புரட்சி, அமோக விளைச்சல் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, சன்ன ரக அரிசி, இன்ன இன்ன பருவங்களில் இன்ன இன்ன பயிர்கள் செய்ய வேண்டும், இடையே ஊரு பயிராக பருப்பு உற்பத்தியைப் பெருக்குங்கள், இன்ன வகைகளைச் செய்யுங்கள் என்றெல்லாம் ஆங்காங்கே சுவரொட்டிகள் இருப்பதையும் ஆங்காங்கே விளம்பரம் செய்யப்படுவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது மாத்திரம் அல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் விளம்பரம் செய்வதற்காக பல நடனக் காட்சிகளும் சினிமாப் படக் காட்சிகளும் கூட நடத்தி அதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. அது மாத்திரம் போதாது என்று சொல்லி, சினிமாப் படம் ஒன்றைத் தயாரித்து, எந்தப் பயிரை எந்தப் பருவத்தில் எப்படி நடுவது, நட்டதற்குப் பிறகு எப்படிக் காப்பது என்ற முறையில் ஒரு சினிமாப் படம் தயாரிக்கப்பட்டு, அது அடுத்த மாதம் அல்லது ஜூன் மாதத்தில் வெளிவர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப் போலவே திரு. அய்யாவு அம்பலம் ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல், இன்றையதினம் வேளாண்மைத் துறைக்கு மூல காரணமாக இருப்பவர்கள் விவசாயப் பெருமக்கள் மட்டுமல்ல; அவர்களுக்கு உறுதுணையாக ஊராட்சி ஒன்றியங்கள் சிறந்த முறையில் ஒத்தாசை அளித்து வருகின்றன. இணைந்து பணியாற்றுகிற காரணத்தால், இன்றையதினம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் தென்னந் தோப்பைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, கிழக்கு ராமநாதபுரத்தை விட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். கிழக்கு ராமநாதபுரத்தை விட்டு விடவில்லை. ஏற்கெனவே அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இப்போது கிழக்கு ராமநாதபுர மாவட்டத்தில் தென்னை வளர்ப்புத் திட்டம் நிலமற்ற ஏழைகள் குடும்பத்தினரையும் இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவதற்காக நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் மூன்று முதல் ஐந்து ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. கடன் உதவி அளிப்பதன் மூலம் அவர்கள் தென்னை பயிரிடுவதை மேற்கொள்ளுகிறார்கள். 1973–74-ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படும். இத்திட்டத்தின்மேல் செயல்புரியும் தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் ஆண்டுதோறும் 1·2 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்யும். இப்படி சென்ற ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த ஆண்டும் நடைபெறுகிறது. ஆனால் ஏற்கெனவே செயல்பட்டு வந்த திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்று அவர்கள் கருதுகிற வகையில், " நீலகிரி, கிழக்கு ராமநாதபுரம் நீங்கலாக " என்று இருக்கிறது. அதற்குக் கொடுக்கப்பட்டது போக பாக்கி இந்த ஆண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுவேலு அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பற்றி என் இந்தப் பயிர் மட்டுமிருக்கிறது, இதை எல்லாம் என் சேர்க்கவில்லையென்று சொன்னார்கள். இதற்குக் கட்டாயம் என்று சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குத் தெரியும். ஆனால் ஒரு சில

வியாபாரிகள் தங்களுடைய பொருள்களை அங்கே கொண்டுவந்து விற்பதற்கு அச்சப்படுகிறார்கள். அல்லது எற்கெனவே பட்ட கடனுக்குப் பயந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு: அவர்கள், ஏன் கொண்டு வருவதில்லை ? நம் முறைகளில் பல குறைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. பொன்னுவேலு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரு இயக்குநராக இருக்கிறார் என்று கருதுகிறேன். அவர்கள் அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களேயானால், நிச்சயமாக நான் அவர்களுக்குத் துணை செய்வேன். இன்னொன்று சொல்லுகிறேன். விளம்பரம் தேவை என்றார்களே, அதைப் போலவே இப்போது ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் சரியான எடை, சரியான விலை, குறித்த காலத்தில் கொடுக்கப்படும் என்பதை விளம்பரம் செய்யத்தக்க அளவுக்கு ஒவ்வொரு வசதியுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும் ஒரு "வான்" வாங்குவதற்கு சமீபத்தில் அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "வாட்டர் மேனேஜ்மெண்டு ஸ்கீம்" பூண்டியில் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். வாட்டர் மேனேஜ்மெண்டு பற்றி இப்போது நான் சொல்லுவதற்கு முன்னால், நான் அடிக்கடி சொல்லுவது போல், "வரினும் நன்றுன் னெருவிடுதல், நட்டபின் நீரினும் அதனை காப்பு" என்று வள்ளுவர் கூறியதற்கொப்ப, இன்றையதினம் கிடைக்கிற நீரை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதுவும் தஞ்சை மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் சோதனைக்கு மேல் சோதனையாக, பயிரில் பூச்சி விழுவது போல், அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது. அதை நிரந்தரமாகப் போக்குவதற்கு இன்றையதினம் பல்வேறு திட்டங்கள் தீட்டி வருகிறோம். இன்றையதினம் ஆடுதுறையிலும், பட்டுக்கோட்டையிலும், எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல், 30 நாள் பயிருக்கு எவ்வளவு கட்ட வேண்டும், 10 நாள் பயிருக்கு எவ்வளவு கட்ட வேண்டும், 60 நாள் பயிருக்கு எவ்வளவு கட்ட வேண்டும், அறுவடை சமயத்தில் எவ்வளவு கட்ட வேண்டும் என்று வாட்டர் மேனேஜ்மெண்டு ஸ்கீம் நடந்துகொண்டிருக்கிறது. விரைவில் அதன் முடிவுகள் தமிழ் நாடு பூராவும் தெரிவிக்கப்படும். எனென்றால் புஞ்செய்ப் பயிருக்கும் அந்தத் திட்டத்தை எப்படி விஸ்தரிப்பது என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். மதிப்புக்குரிய திரு. தாமோதரன் அவர்கள் நாம் எல்லாம் அதிகமாக புஞ்செய் தானியம் விளைவிப்பது பெரும் கடமையாகும் என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலே அவர்கள் சொன்னதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே விற்பனை செய்வதற்கு அந்தப் பொருள்களோடு இணைந்த தொழில்களும் வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திரு. தாமோதரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதற்காக இப்போது இண்டஸ்டிரியல் புரொடக்டிவிட்டி கவுன்சில் இருப்பது போல், விவசாயத் துறையிலும் சமீபத்தில் புரொடக்டிவிடி கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறோம். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுடன் இணைந்த சிறு தொழில்கள் என்ன செய்யலாம் என்பதை ஆராய்வதற்கு அந்தக்

குழு அமைக்கப்பட்டு அதன் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட பின், மற்ற பல திட்டங்களையும் உருவாக்குவதற்கும் அது சமீபத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது. பொதுவாக சோளத்திலிருந்து குளுகோஸ் தயாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். இப்போது அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பூச்சி மருந்துகளை அவர்களே தயாரித்துக் கொடுக்கிறார்கள். அதைப் போலவே இயந்திரங்களின் மூல மாக என்ன செய்ய முடியுமோ, அது அவர்கள் மூலமாக வழங்கப் படுகிறது. அதைப் போலவே இதைச் செய்யவும் அவர்களிடத்தில் விடப் பட்டிருக்கிறது. "அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன்" செயலாற்று வதில் இன்றையதினம் பல பொருள்கள் வீணுக்கப்படுகின்றன. இப் போது குடுமியாமலையில் அண்ணா பண்ணையில் தக்காளியிலிருந்து விதையை எடுத்துவிட்டு தக்காளியை வீணுக்கி எறிந்து விடுகிறார்கள். நான் சமீபத்தில், அந்த தக்காளியிலிருந்து ஜூஸ், ஜாம் செய்வதற்கு ஒரு திட்டம் தயாரிக்க வேண்டுமென்று சொல்லி அவர்கள் இப்போது அதற்கான ஏற்பாட்டைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த புரொடக்டிவிடி கவுன்சில் சொல்லக்கூடிய நல்ல கருத்துக்களைக் கேட்டு சிறு சிறு தொழில்களை விரைவாகச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்ய இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப் போல பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் "டேஷ் நைட்" என்றால் என்ன என்று கேட்டார்கள். இண்டோ ஜெர்மன் நீலகிரிஸ் பிராஜெக்ட்டின் கீழ் உருளைக் கிழங்கைப்பற்றி நீலகிரியில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அங்கே "கோல்டன் நெமட்டோ" என்று பொன்னிறப் புழு ஒன்று வயலில் தங்கிவிடுகிறது. அது ஒரு வயலில் வந்துவிடுமேயானால், அதை 20 ஆண்டுகளுக்குப் போக்கமுடிவதில்லை. அதற்காக ஜெர்மனியிலிருந்து "டேஷ் நைட்" என்று ஒரு வகையான மருந்து அனுப்பப்படுகிறது. அதை 2, 3, 4 முறை தெளிக்க வேண்டி யிருக்கிறது. அப்படித் தெளித்தால்தான் அந்தப் புழு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளில் செத்துப் போய்விடுகின்றது. அப்படியிருந்தாலும் அந்த உருளைக் கிழங்கை மேலே கொண்டுவர வேண்டாம் என்று சொல்லி இப்போது கொடைக்கானலிலும் வேறு பகுதிகளிலும் வேறு வகையான உருளைக் கிழங்கைப் பயிரிடச் சொல்லுகிறோம். எனென்றால் அந்தப் புழு வந்துவிட்டால் 20 வருஷங்களுக்குப் போகாது. "டேஷ் நைட்டை" பயன்படுத்துவதால் அந்தப் புழுக்கள் செத்துவிடுகின்றன என்று சொல்லுகிறார்கள். நான் அடிக்கடி சொல்லுவது போல் பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தான் என்ற ஒரு பழமொழி உண்டு. அதைப் போல் ஜெர்மனியிலிருந்து இலவசமாகக் கொடுக்கிறார்கள். ஜெர்மனியில் இருப்பவர்கள் இங்கேயிருக்கிற விவசாயிகளின் பேரில் பரி தாபப்பட்டு "டேஷ் நைட்"டை இலவசமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு அதற்கு ஒரு டேட்டி, ஒரு வரி, விதிக்கிறார்கள். சென்ற மூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ 58 லட்ச ரூபாய் தமிழக அரசு அதற்கு வரியாகக் கொடுத்திருக்கிறது. சமீபத்திலே நான் மதிப்புக்குரிய திரு. விண்டே அவர்களிடத்தில் உரங்களைப்பற்றிப் பேசச் சென்றபோது, அவர்களிடத்தில் இதையே சொன்னேன். "பிச்சைக் காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்த மாதிரி" அவர்கள் வந்து நம்முடைய நிலைமையைப் பார்த்துக்கொடுக்கின்றார்கள். எழை

பி.ப. 5·20

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1963 மார்ச் 28

விவசாயிகளுக்குக் கொடுக்கின்றார்கள். ஆனால் 58 லட்ச ரூபாய், இப் பொழுது ரூ. 14 லட்சம் என்கிறார்கள், ஆக 72 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. தயவுசெய்து அது கூடாது என்றேன. அவர்கள் சொன்னார்கள் இந்தப் போர்வையில் ஏதேதோ வந்துவிடும் என்பதற்காக இருக்கிறது என்று. இல்லே, இது விவசாயிகளுக்காகவே கொடுக்கப் படுகிறது, இதை நீங்கள் போக்கியே தீர வேண்டும் என்று அவர் களிடத்திலே சொன்னேன்.

அது மாத்திரமல்ல. இப்பொழுது அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு அம்மோனியம் சல்பேட் இல்லே என்ற விஷயத் தைப் பேசியபோது, ஜெர்மனியைச் சேர்ந்த நிபுணர்கள் இதைக் கேட்டுச் சென்று, ஒரு 12,000 டன் அம்மோனியம் சல்பேட்டை இலவசமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்கும் வரி போட்டு விடாதீர்கள் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் பல நல்ல பொருள்கள் விவசாயிகளுக்காகக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் வரியின் மூலம் தமிழக அரசு பல லட்சக்கணக்கான ரூபாயைக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன்.

அதைப் போலவே, புன்செய் நிலங்களைப் பற்றி மதிப்புக்குரிய எதிர்க கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். "புன்செய் விளையின் பஞ்சம் போம்" என்ற பழமொழியே உண்டு. புன்செய் விளைந்தால் நாட்டில் பஞ்சம் இருக்காது. அந்தப் புன்செய் அபிவிருத்திக் திட்டத் திற்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே பலவகைத் திட்டங்கள் இன்றைய தினம் செயல்பட்டு அதிலே பல வெற்றியும் கண்டு வருகிறோம். சிறப்பாக சிறு தானியங்கள் பயிரிடுவதில் 'ஹை ஈல்டிங் வெரைடி', 'ஹை ஈல்டிங்' சோளம், 'ஹை ஈல்டிங்' கம்பு போன்ற வீரிய வித்துக்கள் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். குடுமியாமலைப் பண்ணையிலே புன்செய்ப் பகுதிகளுக்கு, மானாவாரி பகுதிகளுக்கு ஏற்ற பல வீரிய வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அதிலேகூட மேலும் பல வீரிய வித்துக்களைக் கண்டு பிடிப்பதற்கு இன்றைய தினம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களும் வேளாண்மைத் துறை ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்தவர்களும் பல முயற்சி கள் எடுத்துக்கொண்டு அதிலே ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

அடுத்து, "ஸ்ரோப் இன்ஷூரன்ஸ்" பற்றிச் சொன்னார்கள். இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம் மிக மிகத் தேவையானதுதான். நான் சென்ற ஆண்டே அதைப்பற்றி ஒரு முடிவெடுத்து, அது மற்ற மாநிலங்களிலே எப்படி நடைபெறுகிறது என்பதையெல்லாம் கேட்டு, அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அவர்களுடைய அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அதன் காரணமாக சென்ற ஆண்டு, கோவை மாவட்டத்திலே அந்தத் திட்டத்தை எப்படிச் செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்யச் சொல்லி, என்ன செய்கிறோம், எப்படிச் செய்யலாம் என்ற யோசனை வந்திருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அடுத்த ஆண்டு எப்படியாவது அதை நாம் நடை முறைக்குக் கொண்டு வரமுடியுமா என்பதற்கான ஏற்பாடு செய் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 மார்ச் 28] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அடுத்து, கரும்பு விலை நிர்ணயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் இன்று காலே விவசாயிகளைச் சந்தித்து அவர்களிடம் பேசினேன். மத்திய அரசினர் 73·78 ரூபாய் என்று ஒரு விலையை நிர்ணயித்திருக் கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அது போதாது, அவர்களிடத்திலே கலந்துபேசுங்கள் என்று சொன்ன காரணத்தாலே, கலந்து பேசினோம். மத்திய அரசு 80 ரூபாய் என்ற விலை நிர்ணயித் திருந்தது. நான் அவர்களிடத்திலே கூட சொன்னேன். இந்தத் திறனை எப்படிக் கணக்கிடுவது என்று யாருக்கும் தெரியவில்லே. ஒரு பக்கத்திலே 7·8 என்கிறார்கள். ஒரு மில்லிலே 8·4 என்கிறார்கள். இது எப்படி என்று கண்டுபிடிக்க விவசாயிக்குத் தெரியவில்லே. அவர் களுக்குத் தெரிந்தது எல்லாம், ரூபாய் குறைவு என்பதுதான் ; எனவே அதற்கு வழி சொல்லுங்கள் என்று கேட்டேன். சென்ற ஆண்டு எல்லா விவசாயிகளையும் அழைத்து, அதைப்போலவே மில் சொந்தக் காரர்களையும், கூட்டுறவு ஆலை நிர்வாகிகளையும், நம்முடைய இயக்குனர் களையும் சந்தித்துப் பேசி மத்திய அரசு 80 ரூபாய் நிர்ணயம் செய்திருக் கலாம், அது கட்டாது, எப்படி இருந்தாலும், 80 ரூபாயை 85 ரூபா யாகக் கொடுக்க வேண்டும்.

திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : கரும்பு விலையைப் பற்றி மதிப்புக்குரிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே ஒவ்வொரு மில்லும் ஒவ்வொரு விதமாகக் கொடுத் துக்கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியிலே உள்ள சக்தி சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு 115 ரூபாய் கொடுத்துக்கொண்டு வருகிறது. இதைப் போலவே மற்ற சர்க்கரை ஆலைகளும் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அதை யும் சொல்ல வருகிறேன். சென்ற ஆண்டு எவ்வளவு திறன் குறைவாக இருந்தாலும் அதற்கு 85 ரூபாய் ஒரு டன்னுக்குக் கொடுக்க வேண்டும். 9·4-க்கு மேல் அதனுடைய ரெக்கவரி வருமானால் ஒரு பாயின்ட்டுக்கு 6·6 காசு கொடுக்க வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து அதன் பயனை எறத்தாழ 80 ரூபாய், 85 ரூபாய் என்று பேசப்பட்டாலும், தமிழ் நாட்டில் ஒரிரு ஆலையைத் தவிர மற்ற எல்லா ஆலைகளிலும் 95 ரூபாய்க்கு மேல் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கை விவசாயிகளிடத்தில் வைத்துப் பேசினேன். மதிப்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சக்தி சுகர்ஸ் ஆலையில் 115 ரூபாய் கொடுக்கின்றார்கள். அதையும் பார்த்தோம். அவர்களுக்கு ரெக்கவரி 10·8 வந்திருக்கின்றது. அதுமாத்திரமல்ல. அவர்கள் வேறு சில திட்டங் களையும் செயல்படுத்தி வருகின்றார்கள். அவர்கள் சென்ற ஆண்டு 105 ரூபாய் கொடுத்தார்கள். அதிலேயும் 5 ரூபாய் ஷேர் கேபிடல் என்று முதலிலே எடுத்துக்கொண்டு, 100 ரூபாய் கொடுக்கின்றார்கள். இந்த ஆண்டு 115 ரூபாய் கொடுக்கின்றார்கள். இப்பொழுது கூட்டுறவு ஆலையிலே எறத்தாழ 96 ரூபாய் வரையில் கொடுத்துக்கொண்டு வரு கின்றோம். பொதுவாக விவசாயிகளிடத்திலே பரவலாக ஒரு சந்தேகம் இருந்தது. கூட்டுறவு ஆலைகளை சர்க்கார் நடத்துகிற காரணத்தாலேதான் மற்ற முதலாளிகளை இவர்கள் நெருங்கமாட்டேன் என்கிறார்கள், கெடுபிடி

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 28

செய்யமாட்டேன் என்கிறார்கள் என்ற எண்ணம் இருந்துவந்தது. இன்றைய தினம் விவசாயிகளிடத்திலே இந்தப் புள்ளி விவரத்தைக் காண்பித்து மற்ற ஆலைகளைவிட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 96 ரூபாய் மட்டுமல்ல, அதனுடைய தாராத்தைக் கணக்கெடுத்து ஒரு டன்னுக்கு 5 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை அவர்கள் வண்டி வாடகையாகக் கொடுக்கின்றார்கள். இப்படி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் டன்னுக்கு 100 ரூபாய் வரையில் கொடுத்து வருகின்றன என்று சொன்னபோது அங்கேயிருந்து வந்த அத்தனை விவசாயிகளும் ஒத்துக்கொண்டார்கள். இப்பொழுது கூட்டுறவுத் துறை மில்கள் இவ்வளவு கொடுக்கிறபொழுது, தனியார் ஏன் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். நாளையோ, அல்லது நாளைய மறுதினமோ அவர்களையும் அழைத்துப் பேசி நல்ல தொகை கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்றேன். சென்ற ஆண்டு திறனைப்பற்றிச் சொன்ன காரணத்தாலே, இந்த ஆண்டு மத்திய சர்க்காரிலிருந்து ஒரு உத்தரவு வந்தது. 8·5 அதனுடைய ரெக்கவரி இருக்குமானால், அதற்கு 80 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசின் சார்பில் அது போதாது, 8·5-க்குச் சென்ற. ஆண்டு 85 ரூபாய் கொடுத் திருக்கிறோம். நீங்கள் 80 என்று கொடுத்திருக்கிறீர்கள். அது போதாது என்று சொல்லி, அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். 9·4-க்கு 80 ரூபாய் சென்ற ஆண்டு நிர்ணயித்திருந்தார்கள். இப்பொழுது 8·5க்குக் குறைத்து நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனாலும் விலை அதிகமாக வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு புள்ளிக்கு 6·6 காசு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதை 9·4 காசாக இந்த ஆண்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் விவசாயிகளுக்குக் கட்டவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

மதிப்புக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், அரியானாவில் 125 ரூபாய் கொடுக்கிறார்கள். வேறு சில, மகாராஷ்டிராவைப் போன்ற மாநிலங்களிலும் 125 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. ஆனால் ரெக்கவரி 10·8 , 11·2 என்று வருகிறது. ஆனால் அரியானாவில் 7·8 என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பேசியதை பத்திரிகையிலே பார்த்தோம். அதற்குப் பிறகு இதுவரையில் 7·8 வரவில்லை. 8·8 வந்திருக்கிறது என்றார்கள். இவைகளும் ஒன்றைச் சொல்கிறேன். அங்கே மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன— அரியானாவில். அதில் இரண்டுதான் வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஒன்று சிக்காக இருக்கிறது. இந்த இரண்டும் செய்ய முடியவில்லை என்று விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கரும்பைக் கொடுக்க மறுக்கின்ற காரணத்தாலே, இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது என்றார்கள். மதிப்புக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அரியானா என்பது திருச்சி மாவட்டத்தைப் போலவோ, தஞ்சை மாவட்டத்தைப் போலவோதான் இருக்கும் மாநிலம் என்று குறிப்பிட்டார்கள். அதனால் அங்கே அது நடைபெற சவுகரியமாக இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இந்தக் கரும்பு விவசாயத்தைப் பொறுத்த வரையில், அவர்களோடு

1973 மார்ச் 28] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

லைந்து பேசி ஒரு நல்ல முடிவை விரைவிலே இந்த அரசு எடுக்கும். விவசாயிகளுக்கும் பாதகம் இல்லாமல், தொழில் துறையையும் பாதிக்காத அளவுக்கு நிச்சயமாக நல்ல முடிவை எடுக்கும் என்று மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். விரைவிலே அதைப் பேசி முடிவு செய்வது என்று இருக்கிறோம்.

அதைப் போலவே வாழைப்பழத் திட்டத்தைப்பற்றி மதிப்புக்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு அறிவழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மிகத்தீவிர சாகுபடித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற குட்டை வாழை, 'ரெபஸ்டா' என்ற வாழை பயிரிடப்பட்டு வருகின்றது. அதிலேயும் தீவிர சாகுபடித் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆளுக்கு ஒன்று கொடுக்கவில்லை என்றாலும், ஏதோ இந்த ஆண்டு கொஞ்சமாவது கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே காய்கறித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது சென்னையிலும், திருச்சி, மதுரை, தஞ்சை போன்ற பெரிய நகரங்களிலே 'கிச்சன் கார்டன்' என்று ஒவ்வொரு வீட்டிலேயும் ஒரு தோட்டத்தைப் போடுவதற்கு ஒரு செயல்குறிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, சென்னையிலேயும் மதுரையிலேயும் இப்பொழுது நடைபெற்று வருகிறது. அதைப் போல, பொது நிறுவனங்கள், மற்றவர்கள் அதற்காக முன் வருவார்களானால், அவர்களுக்கு வேண்டிய உதவியையும் செய்யும் திட்டத்தையும் இன்றைய தினம் நிறைவேற்றுவதற்கு இருக்கிறோம். அதற்கிடையிலே சென்னையிலே இருக்கிற பஞ்சத்தைப் போக்குவதற்காக வருகின்ற புத்தாண்டிலேயிருந்து நீலகிரியிலேயிருந்து காய்கனி வியாபாரத்தைக்கூட எற்று நடத்தலாமா என்று யோசனை செய்துகொண்டிருக்கிறோம். அநேகமாக வேளாண்மைத்துறை இயக்குநர் அவர்களும், வேளாண்மைத்துறை செயலாளர் அவர்களும் மற்றும் அதிலே பணியாற்றுகிற நண்பர்களும் நிச்சயமாக அந்த முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், எம்.எல்.ஏ. ஆஸ்டலுக்குப் பக்கத்தில் காய்கனித் தோட்டம் என்ற போர்டு இருக்கிறது. அலுவலகம் இருக்கிறது. ஆனால் காயையும் காணோம், கனியையும் காணோம். வேதனையாக இருக்கிறது. எங்களுக்கு முன்னாலேயே இருக்கிறது என்று சொல்லி ஒரு தீவிர திட்டத்தை எற்படுத்தி எப்படியும் புத்தாண்டிலேயிருந்து சென்னை மாநகரத்திலே இந்தக் காய்கனிகளைக் கொண்டுவந்து கொடுக்கிறோம்.

பத்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அல்லது பால் பி.ப
டெப்போக்களில் கொடுத்தாவது விநியோகம் செய்கிறோம் என்று உறுதி 5–3(
அளித்திருக்கிறார்கள். நிச்சயமாக என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் துணையாக இருக்கின்ற அலுவலர்களும், இயக்குநர் அவர்களும், செயலாளர் அவர்களும், நிச்சயமாக இந்தத் திட்டத்தையும் எற்றுக்கொண்டு வெற்றி தரத்தக்க அளவுக்குச் செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 மார்ச் 28

அதைப்போலவே வேறு பல திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன யோசனைகளையெல்லாம் நிச்சய மாகக் கேட்டுச் செயல்படுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம், திரு. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் 2 ஆயிரம் பூச்சி மருந்து தெளிப்பான்கள் வேண்டுமென்று சொன்னார்கள். 2 ஆயிரம் பூச்சி மருந்து தெளிப்பான்கள் வேண்டுமென்று சொன்னேன். ஆனால், இயக்குநர் அவர்கள், 2,400 வாங்கி விட்டோம் என்று வந்து சொன்னார்கள். வாங்கிப் பிரயோசனம் இல்லை. பழுதாக இருக்கிறது என்று சொன்னார்கள். பழுது பார்ப்பதற்கும் ஒவ்வொரு பஞ்சாயத் திலும் ஒவ்வொருவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், விவசாய சாமான்கள் வாங்க ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 500 அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு உத்தரவு செய்யப்பட் டிருக்கிறது, அதுவும் போதாது என்று நடமாடும் பழுது பார்க்கும் கூடங்களும், அனுப்பப்பட்டு, வருகின்றன. மண் வள பரிசோதனைக் கூடங்களைப் போல, பூச்சி மருந்து தெளிக்கின்ற தெளிப்பான்கள் பழுதடைந்திருந்தால், அவைகளையும் பழுது பார்ப்பதற்கு இப்போது 'மொபைல் யூனிட்' ஒன்று வாங்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மேலும் ஒன்று வாங்க முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக் கிறார்கள். எல்லா இடங்களிலும் 'டீலட் டெலிவரி' நிறுப் பதற்கும் மற்ற காரியங்களுக்கு உதவவும் என்று சொல்லியிருக்கிறார்கள். பூச்சி மருந்து தெளிக்கும்போது இறந்தவர்களுக்கு ரூ. 1,000 கொடுக் கப்படும் என்று சொன்னார்கள். உடனே இதைச் சொல்லி பலர் பணம் வாங்கிவிடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்ட காரணத்தால், நாங்கள் கொடுக்கின்ற எல்லாத் தெளிப்பான்களையும் ஒவ்வொரு பஞ்சாயத்துக் கும் கொடுத்து, வேலையில்லாமல் இருக்கிறவர்களாகப் பார்த்து, 10, 50 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஒரு ஏக்கருக்கு ரூ. 3 அல்லது ரூ. 5 என்று நிர்ணயித்து, அவர்களிடத்திலே அந்தத் தூவானைக் கொடுத்து விட்டால், ஒவ்வொரு நாளைக்கு இவ்வளவு கொடுத்து விடுங்கள் என்று அவர்கள் அதை வாங்கி அவர்கள் பிழைப்பு நடத்தத்தக்க அளவில் ஒரு திட்டம் செயல்படுத்த ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறார்கள். ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அதுவும் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே சமீபத்தில் பெய்த மழை வெள்ளத்தின் காரண மாக, தென்னற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சி, சேலம் மாவட்டங்களிலே ஏற் ட்டுள்ள நிலைமை உங்களுக்கெல்லாம் தெரியும். ஏறத்தாழ 13 ஆயிரம் ஏக்கர் நிலம் மணல்மேடிட்டுக் கிடந்த நேரத்தில் அன்றைய தினம், தமிழக அரசு சார்பில் எங்களுடைய கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். இந்த மணலை வாரமுடியாது, ஒவ்வொரு நிலத்தையும் தீர்த்திருத்தம் செய்ய வேண்டு மானால், விவசாயி, இன்னொரு நிலத்தை விற்றுத்தான் முடியும் என்று சொன்னேன். "உனக்கு அனுபவம் உண்டா?" என்று கேட்டார்கள். "ஆமாம், எனது தந்தையார் 1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் அவர் வாங்கிய கடனை 3 ஏக்கர் நிலத்தை விற்றுத்தான் தீர்த்தேன்" என்று சொன்னேன். என்னைப்போல

பலரும் கஷ்டப்படுவார்கள் என்று சொன்ன நேரத்தில் "ஏதோ உதவி செய்கிறேன்" என்று சொன்னவர், "நாமே முழுவதுமாகச் செய்து விடுவோம்" என்று சொல்லி, நம்முடைய புல்டோசர்களையும் அதிகாரிகளையும் அனுப்பி அத்தனை மண்ணையும் அப்புறப்படுத்தினார்கள். இப்பொழுது கடலூர் பகுதியில் போய்ப்பார்த்தால், வெள்ளம் வந்ததா, மண் மேடிட்டதா, என்றுகூட சந்தேகம் ஏற்படும். அந்த அளவுக்கு பணியாற்றி ஏறத்தாழ ரூ. 1½ கோடியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்காக வழங்கினார்கள். அவர்களுக்கு, உழவர் பெரு மக்களுடைய சார்பில், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பல்வேறு காரியங்கள் தமிழக அரசின் சார்பில் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, இந்தத் திட்டங்கள் மேலும் தீவிரமாகச் செயல்படுவதற்கு உங்கள் அனைவருடைய யோசனையையும் எனக்கு உரியதாக ஆக்கி அதைப் பயன்படுத்திக் கொள் கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and other papers.*

*113. Policy Note on Agriculture 1973–74 (English).

114. Answers to Unstarred Questions Nos. 39 to 45.

‡115. Speech of Hon'ble Dr. M. Karunanidhi, Chief Minister presenting the Final Supplementary Estimates for the year 1972–73 (English and Tamil).

‡116. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1972–73 (English and Tamil).

‡117. Notice on Demands for further Grants during the year 1972–73 (English and Tamil).

118. Policy Note on Animal Husbandry 1973–74 (Tamil).

119. A review on Road Development and Buildings Programme in Tamil Nadu 1972–73. (English and Tamil).

120. Supplement to the Review on Road Development and Buildings Programme in Tamil Nadu 1972–73 (English).

121. Speech by Hon'ble Thiru S. Ramachandran, Minister for Transport on Demands No. 35—Road Transport Schemes and No. 48—Capital Out-lay on Road Transport Schemes 1973–74 (English and Tamil).

122. Employee Participation in the Equity Capital of State Owned Transport Corporations (English and Tamil).

‡ Laid on the Table of the House on 26th March 1973.

* Circulated to all M.L.Cs. on 27th March 1973.

இணைப்பு I.

[1973 மார்ச் 28

[2-ஆம் பக்கத்தில் 295-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

வேளாண்-பணி கழகம் என்ற ஓர் அமைப்பு எதும் இல்லை.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான வேளாண்மைப் பணி-தொழில் முனைவோர் பயிற்சித்திட்டம் 1972 அக்டோபர் திங்களில் தொடங்கப் பட்டது. வேலையற்றிருக்கும் பொறியாளர்களை மாநில வேளாண்-தொழில் கழகங்கள் இத் திட்டத்தின் மேம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தாங்களே பயிற்சி அளிக்கின்றனர். அல்லது ஹிசாரிலோ புதினியிலோ பயிற்சியளிக் கின்றனர். பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 1,500 என்ற வீதத்தில் பயிற்சிக் கான செலவு உட்பட இதற்காகத் தேவைப்படும் நிதியுதவியை இந்திய அரசு, வேளாண்-தொழில் கழகங்களுக்கு வழங்குகிறது.

2. இத் திட்டத்தின்மேம், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம், பயிற்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. 1972–73 ஆம் ஆண்டில், மேற்காணும் எண்ணிக்கையிலான தொழில் முனைவர்களுக்குத் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் பயிற்சியளித்தது.

(1) 1—7—1972 முதல் 31—10—1972 வரை நான்கு மாத காலத் திற்கு புதினி, ஹிசார், சென்னை ஆகிய இடங்களில் பயிற்சிபெறும் பொருட்டு, முதற் தொகுதியாக, வேலையற்றிருக்கும் தொழில் முனைவர் 17 (பதினேழு) பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2) தொழில் முனைவோர் 36 (முப்பத்தாறு) பேர் கொண்ட இரண் டாவது தொகுதி ஜனவரித் திங்கள் முடிவில் பயிற்சி முடிவுறப்பெற்றது.

இவர்கள் ஊரகப் பகுதிகளில் வேளாண்-பணி நிலையங்களைத் தொடங் கும் பொருட்டு இவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக இவர்களது திட்ட அறிக்கைகளும் கடன் விண்ணப்பங்களும் சென்னை, இந்திய ஸ்டேட் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்குக் கடன் விரைவில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3) 29 (இருபத்தொன்பது) தொழில் முனைவோர் கொண்ட மூன்று வது தொகுதி தெரிந்தெடுக்கப்பட்டு மத்திய பிரதேசத்திலுள்ள புதினி, குஜராத் மாநிலத்திலுள்ள மெஹ்சானு டிராக்டர் பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிபெற அனுப்பப்பட்டுள்ளது.

சுமார் 30 (முப்பது) வேப்பாளர்கள் 1973 பிப்ரவரி திங்கள் முடிவில் தெரிந்தெடுக்கப்பட்டு மைசூர் மாநிலத்தில், இராம கிருஷ்ணபுரம் என்ற இடத்திலுள்ள " எஸ்கார்ட்ஸ் " (Escorts Training School) பயிற்சி பள்ளிக்கு அனுப்பப்படுவர்.

முதலிரண்டு தொகுதிகளைச் சேர்ந்த தொழில் முனைவோரால் தொடங்கக் கருதியுள்ள, வேளாண்-பணி நிலையங்களின் அமைப்பிடங்கள் இவ்வறிக்கையில் பின் சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. வேளாண்-பணி நிலையத் திட்டத்தின்கீழ், மேற்காணும் நிதி யுதவியை அளிக்க இந்திய அரசு உறுதியளித்துள்ளது :—

(1) இயந்திரங்கள் முதலியன குறித்த மூலதனச் செலவுக்காக ரூ. 3.45 லட்சம் வழங்குதல்.

(2) திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் 4 திங்களுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி உதவித்தொகை அளித்தல்.

(3) வங்கிகளிடமிருந்து தொழில் முனைவோர் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை குறித்த அவர்கள் செலுத்த வேண்டிய 5 சதவீத வட்டிக்கு மேற்பட்ட வட்டித் தொகையை வழங்குதல்.

மூலதனச் செலவு குறித்து முதல் தவணைத் தொகையாக ரூ. 2.45 லட்சத்தை இந்திய அரசு 1972 ஏப்ரல் திங்களில் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 1 லட்சமும், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் ஏற்கெனவே கொடுத்துள்ள பயிற்சி உதவித்தொகையும் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. (5 சதவீதத்திற்கு மேற்பட்ட) வட்டித் தொகை நாளடைவில் இந்திய அரசிடமிருந்து பெறப்படும்.

பிற்சேர்க்கை.

தொழில் முனைவோரால் தொடங்கக் கருதியுள்ள வேளாண்-பணி நிலையங்களின் அமைப்பிடங்கள்.

மாவட்டம்.	முதல் தொகுதி.	இரண்டாம் தொகுதி.	மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
செங்கற்பட்டு	1 பெரியபாளையம்.	1 பொன்னேரி	5
		2 செங்கற்பட்டு	
		3 சுங்குவார்சத்திரம்	
		4 பூவிருந்தவல்லி	
வடாற்காடு	1 திமிரி	1 வேலூர்	
	2 ஆம்பூர்	2 குடியாத்தம்	5
		3 போளூர்	
தென்னார்க்காடு ..	1 பண்ருட்டி	1 பெண்ணாடம்	5
		2 புவனகிரி	
		3 கள்ளக்குறிச்சி	
		4 திண்டிவனம்	

1973 மார்ச் 28]

மாவட்டம். (1)	முதல் தொகுதி. (2)	இரண்டாம் தொகுதி. (3)	மொத்த எண்ணிக்கை. (4)
தஞ்சாவூர் ..	1 நாகூர்	1 பேரளம் 2 கீவளூர் 3 கும்பகோணம் 4 மாயவரம் 5 திருத்துறைப்பூண்டி	6
திருச்சி	இல்லை.	1 துறையூர் 2 லால்குடி 3 ஜெயங்கொண்ட சோழபுரம். 4 குளித்தலை 5 புகளூர் 6 பேட்டைவாய்த்தலை	6
சேலம்	1 வேலூர்	1 ராசிபுரம் 2 நாமக்கல் 3 புதுசத்திரம்	5
கோயம்புத்தூர் ..	1 கோபிசெட்டி பாளையம். 2 ஆனைமலை	1 சத்தியமங்கலம் 2 தாராபுரம் 3 பவானி 4 ஆப்பக்கூடல்	6
தர்மபுரி	1 ஒசூர்	இல்லை	1
மதுரை	இல்லை	1 மேலூர்	1
திருநெல்வேலி ..	1 சேரன்மாதேவி 2 கோவில்பட்டி	1 ஆலங்குளம் 2 புதுக்கோட்டை 3 தாழையூத்து 4 சங்கரன்கோவில்	6
இராமநாதபுரம் ..	..	1 அருப்புக்கோட்டை	1
கன்னியாகுமரி ..	..	1 நாகர்கோவில்	1
			48

[10ஆம் பக்கத்தில் 41 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

இணைப்பு II. [1973 மார்ச் 28

"தமிழரசு" தமிழ்/ஆங்கில இதழ்கள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட எண்ணிக்க விவரம் இதழ் வாரியாக.

1970

இதழ் வெளியாகும் நாள். (1)	தமிழ். (2)	ஆங்கிலம். (3)
1-ந் தேதி ஜூலை 1970	30,000	5,000
16-ந் தேதி ஜூலை 1970	30,000	7,500
1-ந் தேதி ஆகஸ்ட் 1970	45,000	6,100
16-ந் தேதி ஆகஸ்ட் 1970	50,000	6,000
1-ந் தேதி செப்டம்பர் 1970	52,000	6,500
16-ந் தேதி செப்டம்பர் 1970	52,000	6,000
1-ந் தேதி அக்டோபர் 1970	52,000	6,000
16-ந் தேதி அக்டோபர் 1970	52,000	6,000
1-ந் தேதி நவம்பர் 1970	52,000	6,000
16-ந் தேதி நவம்பர் 1970	52,000	6,000
1-ந் தேதி டிசம்பர் 1970	52,000	6,000
16-ந் தேதி டிசம்பர் 1970	52,000	6,000
1970 முடிய மொத்தம் ..	5,71,000	73,100

1971

1-ந் தேதி ஜனவரி 1971	52,000	6,000
16-ந் தேதி ஜனவரி 1971	52,000	6,000
1-ந் தேதி பிப்ரவரி 1971	1,00,000	10,000

1971—தொடர்ச்சி.

இதழ் வெளியாகும் நாள். (1)	தமிழ். (2)	ஆங்கிலம். (3)
1-ந் தேதி மார்ச் 1971	55,000	5,000
1-ந் தேதி எப்ரல் 1971	52,000	3,000
1-ந் தேதி மே 1971	52,000	3,500
16-ந் தேதி மே 1971	52,000	3,500
1-ந் தேதி ஜூன் 1971	52,000	3,500
16-ந் தேதி ஜூன் 1971	45,000	3,500
1-ந் தேதி ஜூலை 1971	45,000	3,500
16-ந் தேதி ஜூலை 1971	45,000	3,500
1-ந் தேதி ஆகஸ்ட் 1971	45,000	3,500
16-ந் தேதி ஆகஸ்ட் 1971	50,000	3,500
1-ந் தேதி செப்டம்பர் 1971	52,000	3,500
16-ந் தேதி செப்டம்பர் 1971	52,000	3,500
1-ந் தேதி அக்டோபர் 1971	52,000	3,500
16-ந் தேதி அக்டோபர் 1971	52,000	3,500
1-ந் தேதி நவம்பர் 1971	55,000	3,500
16-ந் தேதி நவம்பர் 1971	55,000	3,500
1-ந் தேதி டிசம்பர் 1971	55,000	3,500
16-ந் தேதி டிசம்பர் 1971	55,000	3,500
1971 முடிய மொத்தம் ..	11,25,000	86,000

[1973 மார்ச் 28

இதழ் வெளியாகும் நாள். 1972 (1)	தமிழ். (2)	ஆங்கிலம். (3)
1-ந் தேதி ஜனவரி 1972	53,000	3,500
16-ந் தேதி ஜனவரி 1972	53,000	3,500
1-ந் தேதி பிப்ரவரி 1972	53,000	3,500
16-ந் தேதி பிப்ரவரி 1972	55,000	3,500
1-ந் தேதி மார்ச் 1972	52,000	3,500
16-ந் தேதி மார்ச் 1972	52,000	3,500
1-ந் தேதி ஏப்ரல் 1972	52,000	3,500
16-ந் தேதி ஏப்ரல் 1972	52,000	3,500
1-ந் தேதி மே 1972	50,000	3,500
16-ந் தேதி மே 1972	50,000	3,500
1-ந் தேதி ஜூன் 1972	50,000	3,500
16-ந் தேதி ஜூன் 1972	49,000	3,500
1-ந் தேதி ஜூலை 1972	49,000	3,000
16-ந் தேதி ஜூலை 1972	45,000	2,750
1-ந் தேதி ஆகஸ்ட் 1972	46,000	3,000
16-ந் தேதி ஆகஸ்ட் 1972	45,000	3,000
1-ந் தேதி செப்டம்பர் 1972	46,000	3,000
16-ந் தேதி செப்டம்பர் 1972	46,000	**
1-ந் தேதி அக்டோபர் 1972	46,000	2,600
16-ந் தேதி அக்டோபர் 1972	46,000	—
1972 அக்டோபர் முடிய ..	9,90,000	59,350

** ஆங்கில இதழாக மாற்றப்பட்டது.

1973 மார்ச் 28]

(1)	தமிழ். (2)	ஆங்கிலம். (3)
1970 முடிய	5,71,000	73,100
1971 முடிய	11,25,000	86,000
1972 அக்டோபர் முடிய	9,90,000	59,350
மொத்தம் அச்சிட்டு விநியோகித்தது ..	26,86,000	2,18,450

மேலே உள்ள பட்டியலில் கண்ட "தமிழரசு" தமிழ்/ஆங்கில இதழ்கள் அச்சிட்டு சந்தாதாரர்கள் மூலமும், முகவர்கள் மூலமும் விநியோகிக்கப்பட்டது. மேற்கண்ட இதழ்கள் இலவசமாக அமைச்சர்கள், சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்கள், வெளிநாட்டில் உள்ள இந்திய தூதரகங்கள், அரசு செயலாளர், விளம்பரதாரர்கள், வெண்பாப் போட்டியில் பங்கு பெற்றவர்கள், மற்றும் தமிழரசு இதழில் கதை கட்டுரை கவிதை எழுதும் தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு இலவசமாக இதழ்கள் அனுப்பப் பட்டு வருகின்றன. 1973-ஆம் ஆண்டிலும் வறக்குறைய இதேபோல் இதழ்கள் அச்சிட்டு வெளியிடப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.

இணைப்பு III

[11 ஆம் பக்கத்தின் 44 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

STATEMENT SHOWING THE NAMES OF PERSONS WHO HAVE CLAIMED MORE THAN 100 PRIZES FROM THE DATE OF INCEPTION OF THE RAFFLE SCHEME TO AUGUST 1972.

Serial number and name of the prize winner.	*Number of claims presented.*	*Total amount claimed.*
1 P. Ghisulal, No. 391, T.H.Road, Madras-5.	545	68,900
2 Manakchand Nahar, No. 1/12 Mylapore Bazaar Road, Madras-4.	151	15,100
3 S.S. Chokkalingam, 102, Linghichetty Street, Madras-1.	177	24,000
4 N. Gowthamchand Jain, 399, T. H. Road, Madras-5.	104	15,800
5 Rajesh Dalal, C/o Kalpace Sadar, anthishaw, Surat-3.	143	62,000

1973 மார்ச் 28]

[... ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1973-74 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கம்

தோற்றுவாய்.

1972–73 ஆம் ஆண்டில் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களை நிறை வேற்றியதில் அடைந்த முன்னேற்றம் குறித்த ஆய்வுரையையும், 1973–74 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் இப்பேரவை முன் வைக்கிறேன்.

பல்வேறு வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின்கீழ் நமது ஆற்ற லுக்கு அறைகூவல் விடுக்கும் மாபெரும் பணியை நாம் மேற்கொண்டுள் ளோம். பல்வேறு வகைப் பயிர்களுக்கு முடிவிட்ட இலக்குகளை அடைய வேளாண்மைத் துறையில் உள்ள பணியாளரமைப்பு முழுவதும் பணி யாற்ற ஊக்குவித்து முடுக்கி விடப்பட்டது. இருந்த போதிலும், தென் ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக நாம் உற்பத்தியில் பெரிதும் பின்னடைய நேரிட்டதும், சுமார் 5,463 ஹெக்டேர் (13,500 எக்கர் நிலம்) மணல் மேடிடப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. ஆயினும், மற்ற பகுதி களில் உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் மேற் கொண்ட முயற்சிகளில் சிறிதும் தடுமாறவில்லை. கடந்த ஆண்டு உற்பத்தியாகிய 70·45 லட்சம் டன்னுடன் ஒப்பிடுகையில், 1972–73-ல் 72·02 லட்சம் டன் உற்பத்தி நிலையை அடையக் கூடும் என்னும் நம்பிக்கையுடையவர்களாய் உள்ளோம். தமிழ் நாட்டு உழவர் பெருமக்கள் உணவு உற்பத்தியில் துணிவுடன் இந்த அறைகூவலை ஏற்றுப் பாராட்டும் வகையில் உணவு உற்பத்திப் பெருக்கத் தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன். உணவு உற்பத்தி இலக்கை இதே அளவில் நிலைநிறுத்த லாம் என்பதில் நமக்கு நம்பிக்கையும் உண்டு.

அடுத்து வரும் ஆண்டுக்கான உற்பத்தி (1973–74) இலக்கு 79 லட்சம் டன் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. உழவர்பெருமக்களும், அரசுப் பணியாளர்களும் உடன் நின்று உறுதியுடன் உழைப்பதன் மூலம் நாம் நமது திட்ட இலக்கை அடையக் கூடும் என்று நம்புகிறேம்.

1972–73 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை உற்பத்தி குறித்த பல்வேறு சிறப்புக் கூறுகளைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பருவ நிலைமைகள்.—இவ்வாண்டில் 1972 மே மாதம் முடிவதற்குள் முன்னதாகவே தென்மேற்குப் பருவமழை தொடங்கிய போதிலும், மழை போதிய அளவுக்கு இல்லாததோடு பரவலாகவும் பொழியவில்லை.

இதன் காரணமாக, குறுவைக் காலத்தில் உணவு தானிய விளைச்சல் குறைந்து விட்டது. உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்ட குறைவு சுமார் 2·54 லட்சம் டன் என மதிப்பிடப்பட்டது.

இம்மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் 1972 அக்டோபரிலிருந்து 1972 நவம்பர் இடைப்பகுதி வரை வடகிழக்குப் பருவ மழை தீவிரமாக இல்லை. 1972 டிசம்பரில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றழுத்தங்களினால், மாநிலமெங்கும் கனத்த அடை மழை பெய்தது. இம் மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் குறிப்பாக டிசம்பர் திங்கள் முதற் பாதியில் கனமழை பொழிந்தது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்கள் புயற்காற்றுக்கும் வெள்ளச் சேதங்களுக்கும் உள்ளாயின. மாநிலம் முழுவதும் மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், பெருத்த மழையினால், 2·20 லட்சம் எக்கர் நெற்பயிர், 50,000 எக்கர் பருத்தி, 12,000 எக்கர் கரும்பு, 0·22 லட்சம் எக்கர் பலவகைப் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

உணவு தானிய உற்பத்தி அளவு.—1972–73 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி அளவு 72·02 லட்சம் டன் வரை இருக்கக்கூடும் என்பதை தற்காலிக மதிப்பீடு சுட்டிக் காட்டுகிறது. தனித்தனியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	(லட்சம் டன்களில்.)
அரிசி	55·00
சிறு தானியங்கள்	15·10
பருப்பு வகைகள்	1·92
மொத்தம் ..	72·02

தென்மேற்குப் பருவக்காலத்தின் போது, டிசம்பரில் கனத்த மழையோடு பாதகமான பருவ நிலைகள், பருத்தி, நிலக்கடலை உற்பத்தியிலும் மோசமான விளைவுகளை உண்டாக்கின.

1973–74 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தியளவு கீழ்க் கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது :—

	(லட்சம் டன்களில்.)
அரிசி	59·00
சிறு தானியங்கள்	17·50
பருப்பு வகைகள்	2·50
மொத்தம் ..	79·00

மத்திய அரசுக்குழு ஒன்று 1972 டிசம்பர் கடைசி வாரத்தில் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தது. இம் மாநிலத்தில் புயற்காற்றும், வெள்ளமும் விளைவித்த சேத நிலைமையை உரிய இடங்களுக்கே சென்று மதிப்பிட்டுப் பார்த்த பிறகு மத்திய உதவிக்காக செலவு வரம்பை பரிவுரை செய்தது. இந்தப் பரிவுரைகளின் அடிப்படையில், இந்திய அரசு மற்றவைகளுக்கு இடையில் 1972–73, 1973–74 ஆண்டுகளுக்காக மொத்த மத்திய நிதியுதவி ரூ. 14·25 கோடியிலிருந்து, மணல் மேடிட்ட நிலங்களைப் பண்படுத்துவதற்காக உதவித் தொகையாகவும், கடனுகவும் முறையே ரூ. 25 லட்சமும், ரூ. 50 லட்சமும் அனுமதித்துள்ளது. 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் வரையில் மணல் மேடிட்ட நிலங்களைப் பண்படுத்துவதன் கீழ் மேற்கொண்ட செலவு ரூ. 10 லட்சம்; 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் மேற்கொள்ள எதிர் பார்க்கும் செலவு ரூ. 50 லட்சம் ஆகும்.

மிகு பயன் தரும் தானிய வகைகள் திட்டம்.—நெல், சிறுதானியங்கள் உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு 1966–67-லே தமிழ்நாட்டில் மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1966–67-ல் 5·27 லட்சம் எக்கர் என்று சிறிய அளவில் தொடங்கப்பட்ட இத் திட்டம், 1971–72-ல் 64·14 லட்சம் எக்கராக படிப்படியாக உயர்ந்துள்ளது. குடியானவர் நிலங்களில் பெரிய அளவில் பயிர் முறை விளக்கங்களைச் செய்து காட்டுவதோடு, வானொலி, ஒலி-ஒளிச் சாதனங்கள் மூலம் பயிர் முறை பற்றி அவர்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் வேளாண் பொருளாதார நடவடிக்கைகள், பயிருக்கு இடப்படும் உரத்தின் அளவு, பயிரிடும் முறை ஆகியவற்றில் புரட்சிகரமான மாறுதல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. குடியானவர்களுக்கு உரிய காலத்தில் வேண்டியுள்ள விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள் முதலியவை போன்ற பயிரிடு பொருட்கள் யாவற்றையும் கொடுப்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

சிறு பாசனம் மூலமாகவும், நிலநீர் ஆதாரங்களைக் கண்டு பிடித்து அதன் மூலமாகவும், கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இவ்வரசு முனைப்பாக ஈடுபட்டுள்ளது. அதே சமயத்தில், இந்தப் பகுதிகளில் மிகு பயன் தரும் பயிர்வகைகளை முனைப்பாகப் பயிராக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1971–72 ஆம் ஆண்டில் மிகு பயன் தரும் நெற்பயிர் (ஐ.ஆர். 8) 55·43 லட்சம் எக்கரும், அதன் இனத்தைச் சேர்ந்த மற்ற ரகப் பயிர்கள் 31·53 லட்சமும், மற்ற வகைப் பயிர்கள் 23·90 லட்சமும், கலப்பினச் சிறு தானியங்கள் 3·92 லட்சமும், வீரியக் கம்பு (எச்.பி. 3) 4·81 லட்சமும் விரைவுத் திட்டத்தின்கீழ் பயிரிட்டு பிரம்மாண்டமான சாதனைகளை அடைந்தோம். இந்தச் சாதனையின் அடிப்படையில் 1972–73, 1973-74

ஆம் ஆண்டுகளிலும், நெற்பயிர் 55 லட்சம் எக்கரும் சிறு தானியங்கள் 4·15 லட்சம் எக்கரும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனல், எச்.பி. 3 வீரியக் கம்பு பயிரிடும் விரைவு திட்ட இலக்கு 1972–73-ல் 11 லட்சம் எக்கராக உயர்த்தப்பட்டு, அதே இலக்கு 1973–74-ஆம் ஆண்டிலும் அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி 1965–66-ல் 35·24 லட்சம் டன் மட்டுமே இருந்தது. நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங் களிலும் மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் காரணமாக, இதன் உற்பத்தி 1972–73-ல் 55·00 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது பெருமிதப்படக்கூடியதாகும்.

அவசரகால சம்பா உற்பத்தித் திட்டம், 1972–73.

இவ்வாண்டில் 1972 மே மாதம் முடியுமுன்னமேயே, தென்மேற்குப் பருவ மழை தொடங்கியபோதிலும் மழை போதுமானதாயில்லை. மழையும் அங்கோரிடத்திலும் இங்கோரிடத்திலும் பொழிந்தாலும், தேவைப் பட்டபோது உரிய காலத்தில் பொழியவில்லை. இதன் காரணமாக, அரிசி 1·00 லட்சம் டன்னும், சோளம் 0·86 லட்சம் டன்னும், கம்பு 0·58 லட்சம் டன்னும், பருப்பு வகை தானியங்கள் 0·10 லட்சம் டன்னும் ஆக மொத்தம் 2·54 லட்சம் டன் உணவு தானியங்களில் இழப்பு ஏற்பட்டது. 1972 டிசம்பர் முதல் வாரத்தில் பெய்த கனமழை காரணமாக, பாசனத் திட்டங்களுக்கும், பாசன எரிகளுக்கும் போதிய அளவு நீர் கிடைத்தது.

இவ்வாறு 1972 குறுவைப் பயிர் காலத்தில் 2·54 லட்சம் டன் உணவுத் தானிய இழப்பை ஈடு செய்வதற்காக, அவசரகால சம்பாப் பயிர் திட்டம் தொடங்குவதென்று திட்டமிடப்பட்டது. இத் திட்டம், நெற் பயிருக்காக, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 1972 டிசம்பர் மூன்றாவது வாரத்திலிருந்து தொடங்கப்பட்டது.

பாசனம் பெறும் சிறு தானியங்களாகவும் இதைப்போன்றதொரு திட்டம், கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 1973 ஜனவரியில் தொடங்கப்பட்டது. பருப்பு வகை தானிய விரைச்சல் திட்டம் தஞ்சாவூர், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்திலும், 1972 டிசம்பரிலும், 1973 ஜனவரியிலும் தொடங்கப்பட்டிருக்கிறது.

நவரைப் பருவத்தின்போது, அவசரகால சம்பாப் பயிர் உற்பத்தித் திட்டத்தின் கீழ் தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங் களில் 4·82 லட்சம் எக்கர் பயிரிடப்படும். CO. 29 ரகத்திற்குப் பதிலாக ஐ ஆர். 8, ஐ ஆர். 20 இங்கு பயிரிடப்படுகிற பிரதான நெற்பயிர் ரகங்களாக அமைந்திருக்கும்.

நெல்.—CO. 29 மற்றும் வேனய ரகங்களுக்குப் பதிலாக ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 ரகங்களைக் கூடுதலாக 2 லட்சம் எக்கரில் தென்னற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களில் நவரையின்

போது பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மூன்று மாவட்டங்களில் நவரைக் காலத்தில் பயிரிடப்படும் ஐ. ஆர். 8 ரகங்கள் பின் வருமாறு :—

	லட்சம் எக்கரில்.
செங்கற்பட்டு	1·97
வட ஆற்காடு	1·83
தென்னற்காடு	1·02
மொத்தம் ..	4·82

புதிய ரகங்களையும் புதிய பயிர் முறைகளையும் பிரபலப்படுத்துவதற்காக கிராம நிலையில் கூட்டங்கள் நடத்துவதற்குத் தனி முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. முனைப்புப் பயிர் நடைமுறைகளையும், பயிரிடுவதில் சரியான முறைகளையும் பின்பற்றுவதில் கவனம் செலுத்து வதற்கு பொருட்காட்சிகளும், தனிப்பிரச்சார இயக்கங்களும் நடத்தப்படும்.

இப்பிரச்சார இயக்கத்தின்போது முனைப்புப் பயிர் நடைமுறையினைப் பற்றிய விளம்பரங்கள் மூன்று கட்டங்களாக வெளியிடப்படும். முனைப்புப் பயிர் நடைமுறையை விளக்கும் சிலேடுகள் திரையிடப்படும்—அத்துடன் கலைப்பணியாளர்களால் சிலேடுகள் காட்டி விரிவுரை ஆற்றவும் ஏற்பாடு செய்யப்படுகிறது—தமிழகம் முழுவதும் கிராம வளர்ச்சிக் கூட்டங்கள் நடத்தப்படும்.

சிறு தானியங்கள்.—சிறு தானியப் பயிர்களுக்கு இரசாயன உரம் அல்லது பயிர்ப்பாதுகாப்பு முறைகள் இயல்பாகவே வெகுவாகப் பயன் படுத்துவதில்லை. மிக அண்மையில்தான் CH1, CH3, சுவர்ணா, சோளம், CO 1, CO 2, சாரதா கேழ்வரகு, HB 1, HB 3, HB 4, கம்பு பிரபலமடைந்துள்ளன. இத்தகைய மிகு பயன்தரும் பயிர்வகைகள் பயிரிடப்படும் பகுதியை கூடியமட்டில் நவரைக்காலத்தில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கண் ஆறு மாவட்டங் களில் ஜனவரி மத்தியிலிருந்து மார்ச் முடிய பாசனத்தினல் பயிரிடப் படும் சிறு தானியங்களுக்கு இரசாயன உரம், பயிர்ப் பாதுகாப்பு முறை கள் இவற்றைப் பயன்படுத்துவதில், குடியானவர்களுக்கு அறிவுரை தரவும் திட்டமிட்டுள்ளது. சிறு தானியங்களுக்கு இரசாயன உரங் களையும் பயிர்ப் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்துமாறு குடி யானவர்களுக்கு நயமுடன் எடுத்துச் சொல்லப்படும். இத்திட்டத்தின் கீழ், கீழ்காணும் பகுதி கொண்டுவரப்படும்.

மாவட்டத்தின் பெயர்.	பரப்பளவு எக்கரில்.
1. கோயம்புத்தூர்	1,50,000
2. சேலம்	60,000
3. மதுரை	67,500
4. திருச்சிராப்பள்ளி	65,000
5. திருநெல்வேலி	52,000
6. தருமபுரி	19,000
மொத்தம் ..	4,13,500

பருப்பு வகைகள்.—தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென்னற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்திலும் உள்ள தரிசு நிலங்களில், பெருவாரியான பகுதிகளில் பருப்பு வகைப்பயிரை பயிரிடுவதையே, இத் திட்டம் முக்கியமாகக் கொண்டு அமைந்துள்ளது. கடந்த ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உளுந்து, பச்சைப் பயிறு 3·5 லட்சம் எக்கரில் பயிரிடப்பட்டதற்கு மாறாக, மேலும் 2·0 லட்சம் எக்கரில் பயிரிடத்திட்டமிட்டு உள்ளது. ஆக மொத்தம் 5·5 லட்சம் எக்கரில் பயறு வகைகள் பயிரிடப்படும். தென்னற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்தில் 40,000 எக்கர் பயிரிட மதிப்பிட்டதற்கு மாறாக, 20,000 எக்கர் கூடுதல் பரப்பளவில் பயிரிடவும் திட்டமிட்டுள்ளது. பருப்புத் தானியங்களின் கீழ், மேலும் கூடுதலான பகுதிகளைக் கொண்டு வருவதற்கும், அந்தப் பயிர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பருப்புத் தானியங்களின் நபர்வாரிச் செலவு 8 கிராம் மட்டும்தான். ஆனால், இதன் தேவையே 56 கிராம். தமிழ் நாட்டில் பருப்புத் தானியங்களின் தேவை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 7 லட்சம் டன் ஆகும். நான்காவது திட்டமுடிவுக்குள் தமிழ் நாட்டின் தேவையை ஈடு செய்ய நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

பருப்புத் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியமான வற்பாடுகளில் ஒன்று, தரம்படுத்திய விதைகளைப் பயன்படுத்துவதாகும். துவரை விதைகளின் தேவையை ஈடு செய்யும் பொருட்டு திருவரங்குளம் காட்டுப் பகுதியில், விதைப் பெருக்குத் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டது. தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் எல்லா மாவட்டங்களிலும் பருப்புத் தானியங்களைப் பயிரிடுவதைப் பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. விரைவுத் திட்டத்தின்கீழ், 31–12–1972 வரை பருப்புத் தானியங்கள் 16·20 லட்சம் எக்கரின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. தனிப்பயிர் ஊடுபயிராகவும், இவ்வகையில் இலக்கமிட்டதன் அளவு 23·50 லட்சம் எக்கர்தான். இவ்வாண்டைப் போலவே 1973–74-லிலும் 23·50 லட்சம் எக்கர் பயிரிடப்படக் கூடும். தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென்னற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரத்திலும் நெல் பயிரான பின்னர் உள்ள தரிசு நிலங்களில் பருப்புத் தானிய உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பருப்புத் தானிய உற்பத்திக்கென மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம் ஒன்றுக்கு, இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், பயிரிடு பொருட்களுக்கு ஆகும் செலவிற்கு நிதி யுதவி அளிக்கப்படுகிறது. தரமுள்ள பருப்புத்தானிய வகைகளைப்பயிரிட விளக்கப்பாத்திகள் அமைப்பதற்கு குடியானவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்வர். அரசுப் பண்ணைகளில், விதைப் பண்ணைகள் அமைக்கப் பயிரிடு பொருட்களின் விலையில் 50 சதவீதம் வரையில் எக்கர் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூ. 75 கொடுக்கப்படுகிறது. 1972–73, 1973–74-ஆம் ஆண்டுகளில், குறுவை, சம்பாப் பயிர்க் காலங்களில் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவு ரூ. 19 லட்சமாக இருக்கும்.

1973–74-ல் அரசு மேற்கொள்ளக் கருதி வரும் புதிய திட்டங்கள் பின்வருமாறு :—

(1) அவசர கால உணவுப் பயிர் கோடைத் திட்டத்தின் கீழ், ஐ.ஆர். 8 மற்றும் மிகு பயன்தரும் பயிர் வகைகளாகிய சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவற்றில் 2·75 லட்சம் எக்கர் பயிரிடப்படுதல்.

(2) பருப்பு தானிய விரைவுத் திட்டத்தின்கீழ், 23·5 லட்சம் எக்கர் பயிரிடுதல்.

(3) சூரியகாந்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 3·75 லட்சம் எக்கர் பயிரிடுதல்.

பல போகப் பயிர் முன்னேடித் திட்டம்.—தமிழ்நாட்டில் பலபோகப் பயிர் முன்னேடித் திட்டம், மூன்று வேளாண்மைக் கோட்டங்களாகிய கடலூர் (தென்னர்க்காடு மாவட்டம்), முசிறி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 1971 மார்ச் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முன்னேடித் திட்டத்தின் நோக்கம் மூன்றாண்டுக் கால அளவில் அதாவது 1971–72 முதல் 1973–74 வரை பயிரிடப்படும் பரப்பளவை 20 சதவீதத்திற்குப் பெருக்குவதே ஆகும்.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பயிரிடப்படும் அளவு 1 லட்சம் எக்கராகும்.

இந்தப் பகுதிகளில் ஆராய்ச்சி சோதனைகள், நவீன முறை விளக்கங்கள், ஒலி–ஒளிச் சாதனங்களுடன் குடியானவர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியவை மூலம் பலபோகப் பயிர் வளர்ச்சித் திட்டம் விரைவுபடுத்தப்படும்.

நீண்ட கால வாலாயமான பயிர்களுக்குப் பதிலாக மிகு பயன்தரும் குறுகியகாலப் பயிர் பயிரிடப்படும். ஊடு பயிரும் தொடர்ப் பயிரும் அறிமுகப்படுத்தப்படும்.

1971–72-ல் முசிறித் திட்டத்தில் (10,000 எக்கர்), 4,000 ஹெக்டேர் இலக்கிட்டதற்கு மாறாக, 51·51 ஹெக்டேர் (12,877·5 எக்கர்), பட்டுக்கோட்டையில் (15,000 எக்கர்), 6,000 ஹெக்டேருக்கு மாறாக 4,734 ஹெக்டேர் (11,835 எக்கர்), கடலூரில் 2,000 ஹெக்டேருக்கு (5,000 எக்கர்) பதிலாக 4,140 ஹெக்டேர் (10,350 எக்கர்) பயிரிடப்பட்டன.

1972–73-ல், கடலூர் திட்டத்தில் 3,140 ஹெக்டேர் (7,850 எக்கர்), முசிறித் திட்டத்தில் 5,000 ஹெக்டேர் (12,500 எக்கர்), பட்டுக்கோட்டைத் திட்டத்தில் 8,066 ஹெக்டேர் (20,165 எக்கர்) மேற்கொண்டும் கூடுதலாகப் பயிரிடப்படும்.

1973–74-ல் முசிறியில் 5,750 ஹெக்டேர் (14,375 எக்கர்), கடலூரில் (5,264 ஹெக்டேர் (13,160 எக்கர்), பட்டுக்கோட்டையில் 5,070 ஹெக்டேர் (12,675 எக்கர்) கூடுதலாகப் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்

(i) முனைப்புப் பயிர் முறைகளை உருவாக்கிப் பல உத்திகளை குடியானவர்களிடையே பிரபலப்படுத்தியும், (ii) குடியானவர்களுக்கு உரிய காலத்தில் பயிரிடு பொருட்களைக் கிடைக்கச்செய்து, சராசரி நெல் உற்பத்தி அளவையும், பயிர்ப் பரப்பளவையும் பெருக்குவதற்காக 1960 ஆம் ஆண்டில் மும்முர வேளாண்மைத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

எல்லாத் துறைகளின் ஒருங்கிணைந்த உதவியோடு தரப்படுத்தப்பட்ட விதைகள், நைட்டிரஜன் போன்ற ரசாயன உரங்கள், தகுந்த பயிர்ப் பாதுகாப்பு, ரசாயன மருந்துகள் போன்ற பயிரிடு பொருட்கள், அந்தப் பயிரிடு பொருட்களை வாங்கக் குடியானவர்களுக்குத் தேவைப்படும் கடன்கள் ஆகியவை கிடைக்கின்றன.

பயிர் முறை ஆராய்ச்சி, புதிய முறையில் அமைந்த பயிர் வளர்ப்புத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பயனுள்ள வகையில் பயன்படுத்தப் பட்டன. விரிவான ஆய்வுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் சோதனை செய்து நவீன முறையில் அமைந்த பயிர் முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சிச் சோதனைகளோடு மூன்று எக்கரில் பல பயிர் விளக்கங்களும் நடத்திக் காட்டப்பட்டு வருகின்றன.

பயிர் ரகங்களை மாற்றியமைத்தும், பயிராகும் பரப்பளவை முனைப்பாக்கியதன் காரணமாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் உற்பத்தி 1959-60-ல் 8·86 லட்சம் டன்னாக இருந்தது, 1971-72-ல் 13·59 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உற்பத்தியைக் கணிசமான அளவிற்குப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மும்முர வேளாண்மைப் பகுதி திட்டம்

மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் இப்பொழுது மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 169 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இடையறு பாசனவசதியுள்ள பெருவாரியான பகுதிகளைக் கொண்டுள்ளதால், இந்த மாவட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியிலுள்ள குடியானவர்கள் தங்கள் நிலங்களில் பயிரிடுவதில் முனைப்புத் திட்ட முறைகளைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். இரசாயன உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள், விதைகள் முதலியவை போன்ற பயிரிடு பொருட்கள் வாங்குவதற்கு குடியானவர்களுக்கு அவசிய மான கடன் உதவி அளிக்கப்படுகிறது. 31-12-1972 வரை, ரூ. 10·67 லட்சம் இலக்கிற்கு, ரூ. 7·61 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த செய்முறை விளக்கத் திட்டங்கள் முனைப்புப்பயிர் முறைகளை குடியானவர்கள் பின்பற்றுவதற்கு நடத்தப்படுகின்றன. இந்த விளக்கத் திட்டங்கள் நெல், சிறு தானியங்கள் போன்ற மிகு பயன் தரும் பயிர் வகைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிர்முறை விளக்கங்கள் ஒன்று அல்லது இரண்டு முக்கியமான இடங்களில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், பயிராகும் ஒருங்கமைந்த தொகுதிக்கு இந்த விளக்கங்கள் நல்ல பயனை

விளக்கும். 1972–73 ஆம் ஆண்டிற்கு இலக்கிட்ட செய்முறை விளக்கப் பாத்திகள் 605 ஆகும். ஆனால், 31–12–1972 வரை இட்டிய சாதனை 548 பாத்திகளாகும். 1973–74 ஆம் ஆண்டிற்கான இலக்கு 1,405 செய்முறை விளக்கப் பாத்திகளாகும். ஒவ்வொரு செய்முறை விளக்கப் பாத்திக்கும் உதவித் தொகையாக ரூ. 125 அளிக்கப்படுகிறது.

நீரை விவேகமுடன் பயன்படுத்தி குறைந்த அளவு நீரைக் கொண்டு நிறைந்த பயனைப் பெறுவது பற்றி குடியானவர்களுக்கு அறிவுறுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த பயிர் முறை விளக்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பயிர்முறை விளக்கப் பாத்தியின் பரப்பளவும் 5 எக்கராகும். ஒவ்வொரு பயிர்முறை விளக்கப் பாத்திக்கும் உதவித் தொகையாக ரூ. 750 கொடுக்கப்படுகிறது. 1972–73 ஆம் ஆண்டிற்கான இலக்கு 76 பயிர் முறை விளக்கப் பாத்திகளாகும் ; சாதனை 31–12–1972 வரை 75 ஆகும். 1973–74 ஆம் ஆண்டிற்கான இலக்கு 76 விளக்கப் பாத்திகளாகும்.

பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின் கீழ், பயிர்முறை விளக்கப் பண்ணைகள் அமைத்தல்.

ஆயக்கட்டுப் பகுதி

பயிரிடுவதில் மேம்படுத்தப்பட்ட முறைகளைக் குடியானவர்களுக்குச் செய்து காட்டவும், திட்டப் பகுதிகளில் தகுந்த பயிர் முறையை வகுக்கவும், பாசனப் புன்செய்ப் பயிர்களைப் பிரசித்திப் படுத்தவும், குடியானவர் நிலங்களில் பயிர்முறை விளக்கப் பண்ணைகள் நடத்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

1969–70 ஆம் ஆண்டில், 134 பண்ணைகள் அமைக்கப்பட்டு உதவித் தொகையாக ரூ. 26,036 கொடுக்கப்பட்டது. 1970–71 ஆம் ஆண்டில், 180 பண்ணைகள் அமைக்கப்பட்டு, உதவித் தொகை ரூ. 43,566 கொடுக்கப் பட்டது. 1971–72 ஆம் ஆண்டில் 180 பண்ணைகள் அமைக்கப்பட்டு, உதவித் தொகையாக ரூ. 49,980 கொடுக்கப்பட்டது.

பயிரிடப்பட்ட பயிர் வகை பருத்தி, சிறு தானியங்கள், நிலக்கடலை என்பனவாகும். இப்போது சூரியகாந்தியும் சேர்க்கப்பட்டுள்ளது. 1972–73-ல் 180 பண்ணைகள் என்று இலக்கிட்டதற்கு மாறாக, 500 எக்கருக்கு ஒரு பண்ணை வீதம் 156 பண்ணைகள் தெரிந்தெடுக்கப்பட்டன.

1973–74 ஆம் ஆண்டிற்காக 103 பண்ணைகள் அமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. 1973–74 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 49,500 ஒதுக்கப் பட்டுள்ளது.

சித்தாறு–பட்டணங்கால் திட்டத்தில் பயிர்முறை விளக்கப் பண்ணைகள் அமைத்தல்.

நுட்ப ஆலோசனை அளிக்கப்படுகிறது. நோயற்ற வாழைக் கன்றுகள், வாழை பயிரிடுபவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிரிடு பவர்களின் நிலங்களில் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவு, வணிக வங்கிகளின் மூலம் எக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை குறுகிய காலக் கடன்கள் அளிக்கப்படுகின்றன. 1972-73 ஆம் ஆண்டில் 23,188 எக்கர் நிலத்தில் இத்திட்டம் அமுலாக்கப் பட்டது. 1973-74-ல் இத்திட்டம் தொடர்ந்து 25,000 எக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகள் உற்பத்தி செய்வதற்கான மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம்.—செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சீபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இத்திட்டம் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டேர் பரப்பில் ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளைப் பயிரிடுவதென்னும் குறிக்கோளுடன் இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டு களில் 3,000 ஹெக்டேர் பரப்பில் இவ்வாழையைப் பயிரிடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிரிடு பொருட்கள் வாங்கப்படுவதற் காக பாத்தி ஒன்றுக்கு ரூ. 1,000 உதவித் தொகையுடன் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படும். யூனிட் ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையுடன் விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத உதவித் தொகையுடன் கிடைக் கிறது.

1972-73-ல் இத்திட்டத்தின்கீழ் 2,000 ஹெக்டேர் பரப்பைக் கொண்டு வரவும், 124 விளக்கப் பாத்திகள் அமைக்கப்படவும் திட்டமிடப் பட்டுள்ளது. 1973-74-ல் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும் நிலம் 3,000 ஹெக்டேர் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளில் தோட்டப்பயிர் மேம்பாட்டுத் திட்டம்.—கோடைக் கானல், கல்ராயன், ஜவ்வாது, கொல்லிமலை, பச்சைமலை ஆகிய ஐந்து மலைப் பகுதிகளில் தோட்டப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் 16-2-1972-லிருந்து செயற்படுத்தப்படுகிறது. அப்பகுதியின் வளங்கள் குறித்த ஆய்வு தற்போது நடத்தப்பட்டு வருகிறது.

1973-74 ஆம் ஆண்டிலும் உதவித் தொகையுடன் தொடர்ந்து இத் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, தோட்டப் பயிர்கள், காய்கறிகள் முதலியவை பயிரிடுவதன்கீழ் 1,160 எக்கர் நிலப்பரப்பைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.—நம் நாட்டின் வேளாண்மைப் பொருளாதாரத்தில் எண்ணெய் வித்துக்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. 10 லட்சம் டன் அடிப்படை உற்பத்தி அளவுக்கு மாறுக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இம் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அளவை 13 லட்சம் டன்னுக்கு உயர்த்துவதற்காக எண்ணெய் வித்துக்கள் மேம் பாட்டுத் திட்டங்கள் பல செயல்படுத்தப்படுகின்றன.

பகுதிகளை நல்ல தரமுள்ள விதைகளின் கீழ்க் கொண்டுவருவதற்காக தரமான விதைகளைப் பெருக்கி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் இம்மாநிலத்தின் உற்பத்தியை உயர்த்தலாம். வேர்க்கடலை பயிரிடுவதற்காக, உழவர்கள் நிலங்களில் மண்டலத் தொடக்க நிலை விதைப் பண்ணைகளும், இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. தவிர, குடுமியான் மலையிலுள்ள அண்ணா பண்ணையில் 200 எக்கர் பரப்பிலும், வேதகரை, மேக்கரை ஆகிய இடங் களில் 147·12 எக்கர் பரப்பிலும் மூல விதைப் பண்ணைகளும் துறைக் கண்காணிப்பில் நடத்தப்படுகின்றன. குத்தகைக்கு அதிகமாக நிலங்கள் கிடைக்கும்போது இப்பரப்பளவு அதிகப்படுத்தப்படும் விதைப்பெருக்கத் தின் மூன்றாம் நிலைப் பணியை வேளாண்மைத் துறையின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் கூட்டுறவுச் சங்கங்களால் கவனித்துக் கொள்ளப்படுகின் றன. பயிர்ச் சாகுபடியின் மேம்பட்ட முறையைப் பிரபலப்படுத்துவதற் கென 300 செய்முறை விளக்கங்களும் நடத்தப்படுகின்றன. ½ எக்கர் கொண்ட விளக்கப் பாத்தி ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. அதேபோல், எள், ஆமணக்கு விதைப் பண்ணைகளுக் கும் ஏற்பாடு செய்யப்பட்டு, விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப் படுகின்றன.

விதைப்பண்ணை வைத்திருப்பவர்களிடமிருந்து, வேர்க்கடலை, ஆமணக்கு விதைகளைப் பொறுத்தவரையில் அங்காடி விலைக்கு மேல் 20 சதவீதம் அதிகத் தொகை கொடுத்தும் கொள்முதல் செய்யப்படுகின்றன. எள்ளைப் பொறுத்தவரையில் 5 சதவீதம் அதிகத் தொகை கொடுக்கப்படுகிறது.

வேர்க்கடலை முனைப்புத் திட்டம்.—முனைப்புத் திட்டத்தின் நடைமுறைகளை உழவர்கள் அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவை யாவன ;—

(1) தர விதைகளை வழங்குதல்,

(2) மேம்படுத்தப்பட்ட வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகள்,

(3) உரங்களைப் பயன்படுத்துதல்,

(4) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

செய்முறை விளக்கங்களும் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன. தஞ்சா வூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பிற்சேர்க்கை இரண்டில் குறிப்பிட்ட 8 பிரிவுகளில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ½ எக்கர் பரப்புள்ள நிலப்பகுதி விளக்கப்பாத்தி ஒன்றுக்கு 50 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. குறுவைப் பயிர் போன்ற முன்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 350 வீதமும் சம்பா போன்ற பின்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 450 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலம் குறுகிய காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

நிறுவனக் கடன் உதவி.—இத்திட்டத்தின்கீழ், 1973-74-ஆம் ஆண்டில் 240 விளக்கப் பாத்திகள் அமைப்பது நீங்கலாக, 3·65 லட்சம் எக்கர் நிலம் வேர்க்கடலை பயிரிடப்படுவதன் கீழ் கொண்டுவரப்படும்.

[1973 மார்ச் 28

ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக வேர்க்கடலை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.—இது மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டமாகும். பரிவுரை செய்யப்பட்டுள்ள முனைப்புத் திட்ட நடைமுறைகள் அனைத்தையும் மேற்கொள்வதன்மூலம் ஏற்றுமதி செய்யும் காரியங்களுக்காக வேர்க்கடலை உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அந்த நடைமுறைகளாவன :—

(1) தர விதைகளை வழங்குதல்,

(2) உரமிடுதல்,

(3) பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளல்.

ஏற்பளிக்கப்பட்ட மேம்படுத்திய வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகளை மேற்கொள்ளலும், கட்புல விளக்கங்களை நடத்துதலும் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் பிற்சேர்க்கை மூன்றில் குறிப்பிட்டுள்ள 11 பிரிவுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்பருவப் பயிர்கள் குறித்தும், பின் பருவப் பயிர்கள் குறித்தும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றை நடத்துவதற்காக, முன்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 60 வீதமும், பின்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 80 வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. முன்பருவப் பயிர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 70 வீதமும் பின்பருவப் பயிருக்காக எக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமாக குறுகிய காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. 1973–74-ல் இத்திட்டத்தின் கீழ் 8·58 லட்சம் எக்கர் நிலம் கொண்டுவரப்படும். 1,540 விளக்கப் பாத்திகள் அமைக்கப்படும்.

ஆமணக்கு செய்முறை விளக்கத் திட்டம்.—SA 1, SA 2 போன்ற குறுகிய காலத்தில் மிகு பயன் அளிக்கும் ஆமணக்கு ரகங்களையும், முனைப்புத் திட்ட நடைமுறைகளை மேற்கொள்ளுதலையும் அனைவரும் அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஒரு எக்கர் பரப்புள்ள பாத்தி ஒன்றுக்கு ரூ. 50 என்ற உதவித் தொகையுடன் உழவர்களின் நிலத்தில் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. 1973–74-ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ஒரு எக்கர் பரப்புள்ள 200 விளக்கப் பாத்திகள் உழவர்களின் நிலங்களில் தொடர்ந்து அமைக்கப்படும்.

சூரியகாந்தி

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்குத் தேவைப்படும் சூரியகாந்தி எண்ணெயின் அளவு 57 கிராம் (அனைத்துநாட்டு தரத்தில்) ஆகும். தற்போதைய தேவையைச் சரிக்கட்ட 31 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் (வேர்க்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றின்) மொத்த அளவு சுமார் 11 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. உணவு எண்ணெய்களின் அதிகரித்து வரும் தேவையைச் சமாளிப்பதற்கென அந்த எண்ணெய்களின்

1973 மார்ச் 28]

உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு அதிக எண்ணெய் தரும் கூடுதலான எண்ணெய் வித்துக்களை நாம் நாடவேண்டியுள்ளது. சூரியகாந்தி அதிக எண்ணெய் கொடுக்கும் வளமுடையதாகும். மேலும், யூனிட் பகுதி ஒன்றுக்கு அது அதிக விளைச்சலைத் தரும்.

ஊட்டச்சத்துணவு நோக்கில் பார்த்தாலும், சூரியகாந்தி எண்ணெய் பிற எண்ணெய்களைக் காட்டிலும் மேன்மையானதாகும். சூரியகாந்தி எண்ணெய்யில் கொழுப்பும் A,B,C,K போன்ற கரையத்தக்க உயிர்ச் சத்துக்களும் உள்ளன. சூரியகாந்தி எண்ணெய்யில் 52 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை "லினோலிக்" அமிலம் உள்ளது. அது கரையா நிலையிலுள்ள கொழுப்பு அமிலமாகும். இதய நோயுள்ளவர்களுக்கு அது ஓர் வரப்பிரசாதமாகும். "ஆர்த்தரோஸ்கிலோரோவிஸ்" என்ற கொடிய ரத்தவோட்ட வியாதி பரவுவதை இந்த எண்ணெய் குறைக்கிறது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும் இந்த எண்ணெய் பயன்படுகிறது. சூரியகாந்தி எண்ணெயில் நுண்ணியிர் இயக்கமும் உள்ளது. அது சிறுநீர்க் கழிவினைத் தூண்டுகிறது. காற்றுக் குழாய், குரல்வளை, நுரையீரல் சார்ந்த தொற்றுகளில் கபத்தை வெளிக்கொணரும் மருந்தாகப் பயன்படுகிறது.

உற்பத்தியைப் பெருக்கவும், வீடு, தொழிற் பயன்களுக்கான உணவு எண்ணெய்களின் அதிகரித்துவரும் தேவையை நிறைவு செய்யவும், 1971–72 முதல் 1973–74 வரையிலான கால அளவுக்கு இம்மாநிலத்தில் சூரியகாந்தி உற்பத்தி குறித்த செய்முறை விளக்கத் திட்டத்தைச் செயல்படுத்த இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, 1971–72-ல் வெளிநாட்டு ரகத்தைச் சேர்ந்த, குறுகிய காலத்தில் மிகுபயன் தரக்கூடிய, அதிக அளவு எண்ணெய்ச் சத்துள்ள சூரியகாந்தி விதைகளைக் கொண்டு செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டன.

400 எக்கர் நிலத்தில் மொத்தம் 299 பாத்திகள் அமைக்கப்பட்டன.

EC. 68415 வகை சூரியகாந்தி, தமிழ்நாட்டிற்கு தகுந்ததாக கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, சூரிகாந்தியை 2 லட்சம் எக்கர் நிலத்தில் பயிரிடுவதற்கான மத்திய அரசால் தொடங்கப்படும் திட்டம் ஒன்று, ரூ. 26·175 லட்சம் மொத்தச் செலவில் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படுவதற்காக 1972–73-ல் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சுமார் 0·50 லட்சம் டன் சூரியகாந்தி விதைகளை உற்பத்தி செய்யக் கருதுகிறது. மேம்பட்ட முனைப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி 800 விளக்கப் பாத்திகளும் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள பாத்தி ஒன்றுக்கு ரூ.300 வீதம் உழவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு எக்கருக்கு 4 கிலோகிராம் விதைகளும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும், பயிரிடு முறை குறித்த சிறு வெளியீடு ஒன்றும் அடங்கிய சிறுபைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அந்தப் பை ஒவ்வொன்றின் மதிப்பு ரூ. 11 ஆகும். இவை தவிர, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் குறுகிய காலக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும்.

1973–74-ல் 3·75 லட்சம் எக்கர் பரப்பளவுள்ள நிலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். 500 செய்முறை விளக்கங்கள் நடத்தப்படும்.

தென்னை வளர்ப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் தென்னை வளர்ப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன:—

(i) **தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்துதல்.**—தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை வளர்க்கும் தனிப்பட்ட நபர்கள், ஊராட்சிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் 8·10 லட்சம் தென்னங்கன்றுகளை வளர்க்கும் வசதியுடன் கூடிய 18 தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் பிற்சேர்க்கை நான்கில் குறிப்பிட்டுள்ள இடங்களில் தற்பொழுது இம்மாநிலத்தில் உள்ளன. உயரமான அல்லது குட்டை வகையைச் சேர்ந்த தென்னங்கன்று ஒவ்வொன்றும் ரூ. 1·50 என்ற சலுகை விதத்திலும், "ஹாவாஜெயண்ட்" என்ற வகையைச் சேர்ந்த தென்னங்கன்று ஒவ்வொன்றும் ரூ. 1·80 என்ற சலுகை விதத்திலும் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1973—74-ஆம் ஆண்டில் சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் மேலும் இரண்டு தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) **தமிழ்நாட்டில் தென்னை உற்பத்தியைப் பெருக்குவதற்கானத் திட்டம்.**—தென்னை வளர்ப்பை மக்களிடையே பிரபலப்படுத்தி மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகள், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்களைப் பயன்படுத்துவது ஆகியவற்றைக் கடைப் பிடிக்க மும்முரப் பிரச்சாரம் இம்மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு தெளிப்பானுக்கும் ரூபாய் 100 என்ற பேரளவு உதவித் தொகைக்குட்பட்டு தென்னங்கன்றுகளுக்கு மருந்து தெளிப்பதற்குத் தகுந்த தெளிப்பான்களுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் தென்னை வளர்ப்பின்கீழ் உள்ள மொத்தப் பரப்பில் கிட்டத்தட்ட 50 சதவீதம் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும். ஒவ்வோர் ஆண்டும் 100 தெளிப்பான்கள் பங்கிடப்படும்.

(iii) **புதிய தென்னந் தோப்புகளை ஏற்படுத்துதல்.**—தென்னை வளர்ப்பின் கீழ் அதிகப் பரப்பைக் கொண்டு வரும் நோக்கத்துடன், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 3,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதம் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது. இக்கடன்கள் பதினேராவது ஆண்டிலிருந்து வட்டியுடன் ஐந்து சம ஆண்டுத் தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படத்தக்கவையாகும். நீலகிரி, கிழக்கு இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம்மாநிலம் முழுவதும் இது நிறைவேற்றப்படுகிறது.

1973-74-ஆம் ஆண்டில் 800 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்தில் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(iv) **கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப்புத் திட்டம்.**—நிலமற்ற ஏழைக் குடும்பங்களையும் இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவது இத் திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் 3 எக்கர் முதல் 5 எக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறது. கடன் உதவி அளிப்பதன் மூலம் அவர்கள் தென்னை பயிரிடுவதை மேற்கொள்ளச் செய்யப்படுகிறது.

1973-74-ஆம் ஆண்டில் இத் திட்டம் தொடர்ந்து செயல்படும். இத் திட்டத்தின்கீழ் செயல்புரியும் தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் ஆண்டு தோறும் 1·20 லட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்யும்.

(v) **முன்னோடி விளக்கப்பாத்திகள் (Pilot Demonstration Plots) அமைப்பதற்கான திட்டம்.**—நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியில் ஒவ்வொன்றும் ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள 900 விளக்கப் பாத்திகள் அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ், தென்னை வளர்ப்பவர்களுக்கு உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விசையேற்றங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காகும் செலவுக்காக உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

1973-74-ல் 200 விளக்கப்பாத்திகள் அமைக்கப்படும்.

(vi) **ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம்.**—தென்னங்கன்றுகளைக் கருந்தலைக் கம்பளிப் புழு தாக்குவதால் ஏற்படும் பயிர் நோயைக் கட்டுப்படுத்துவதற்கென ஒட்டுண்ணிகளைப் பெருமளவில் வளர்த்து, நோயினால் பாதிக்கப்பட்ட தென்னந் தோப்புகளில் அவற்றை இலவசமாக விடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். காஞ்சிபுரம், குடியாத்தம், இராமநாதபுரம், உடங்குடி, நாகர்கோயில், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தருமபுரி ஆகிய இடங்களில் 11 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் உள்ளன. 1973-74-ல் கூடுதலாகச் சில நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(vii) **திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தென்னை, முந்திரி வளர்ப்பு.**—சாகுபடி செய்யத்தக்க தரிசு நிலங்களில் தென்னை வளர்ப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் தென்னங் கன்றுகளை வளர்த்து வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். முந்திரி, தென்னைப் பயிர்களை வளர்ப்பதற்காக எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 370 நீண்ட காலக் கடன் வழங்கப்படுகிறது. 1973-74-ல் 1,000 எக்கர் பரப்பில் முந்திரி பயிரிடவும், 750 எக்கர் பரப்பில் தென்னை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னங் கன்றுகளின் வகை (மத்திய அரசு தொடங்கிய திட்டம்).

ஆண்டு ஒன்றுக்கு 5,000 கலப்பினத் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

[1973 மார்ச் 28

வேப்பங்குளம் வட்டாரத் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உயரமான, குட்டையான, கலப்பினத் தென்னங் கன்றுகள் பயிரப்பட்டு வருகின்றன. 1973-74-ல் 5,000 தென்னங்கன்றுகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

முந்திரி

முந்திரி, இம்மாநிலத்திற்கு டாலர் வசதியை ஈட்டித்தரும் முக்கிய மான வணிகப் பயிராகும். தற்போது 2,09,103 எக்கரில் (சாதாரண பகுதிகள் 1,36,468 கூட காட்டுப் பகுதிகள் 72,635 எக்கர்) முந்திரி பயிரிடப் படுகிறது. இப்பகுதிகளில் 21,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் முந்திரி கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் கீழ்க்காணும் முந்திரி வளர்ப்புத் திட்டங்கள் செயலில் உள்ளன :—

(a) தமிழ்நாட்டில் முந்திரி வளர்ப்புத் திட்டம்.

(b) கிழக்கு இராமநாதபுரத்தில் முந்திரித் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(c) திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் முந்திரி, தென்னைத் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(d) முந்திரி பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் (மத்திய அரசு தொடங்கிய திட்டம்)—

(i) முந்திரி பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள்.

(ii) முந்திரி விளக்கப் பாத்திகள் அமைத்தல்.

ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 3,000 என்கிற உயர்ந்த அளவுக்குட் பட்டு எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதம் நீண்டகாலக் கடன்கள் வழங்கி, ஆண்டு ஒன்றுக்கு 5,000 எக்கர் வீதம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25,000 எக்கரில் முந்திரிச் சாகுபடியை நீட்டிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973-74 ஆம் ஆண்டில் 5,000 எக்கர் பரப்பில் முந்திரிச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் 3,000 எக்கரிலும், திருச்சி மாவட்டத்தில் 2,916 எக்கரிலுமாக மொத்தம் 5,916 எக்கர் நிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 310 விளக்கப்பாத்திகளை அமைப்பதும், முந்திரி வளர்ப்பு முனைப்புத் திட்டத்தின் (இது 1970-71-ல் தொடங்கப்பட்டது) நோக்க மாகும். பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ், முந்திரி வளர்ப்பவர் களுக்கு இரசாயன மருந்து வாங்குவதற்காக எக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25 உதவித் தொகை வழங்கப்படுகிறது. விளக்கப்பாத்திகளின் கீழ், 2 எக்கர் ருக்கு ரூபாய் 300 உதவித் தொகை இந்திய அரசால் வழங்கப்படுகிறது 1973-74 ஆம் ஆண்டில் 7,900 எக்கர் நிலப்பரப்பில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி 20 சதவீதம் உயருமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1973 மார்ச் 28]

பாக்கு.

இம் மாநிலத்தில் சுமார் 4,500 எக்கரில் பாக்கு பயிரிடப்படுகின்றது. பாக்கு உற்பத்தித் திட்டம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. இத திட்டத் தின்கீழ், சுமார் 100 எக்கரில் துறையினைச் சேர்ந்த நாற்றுப் பண்ணைகள் மூலம் வழங்கப்பட்ட உயர்ந்த ரக நாற்றுகளைக் கொண்டு பாக்கு பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது பாக்கு பயிரிடுவோர் இனிமேல் பாக்கு பயிரிடும் வாய்ப்புள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, வட்டார அடிப்படையில் குற்றாலம், கன்னியாகுமரி, கல்லார், கூடலூர், பெரியகுளம் ஆகிய இடங்களில் ஐந்து நாற்றுப் பண்ணைகளை அமைத்து, தரமான பாக்கு நாற்றுகளை வளர்த்து வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பம்பாய் வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன், பெத்தநாய்க்கன் பாளையத்தில் பாக்கு பயிரிடும் திட்டம் ஒன்று நடை பெற்று வருகின்றது.

பம்பாய் வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன் மேட்டுப்பாளையத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் O. V. C. கால்வாய்க்கு அருகில் உள்ள பிற வட்டாரங்களிலும் 245 எக்கரில் பாக்கு பயிரிடும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பயிரிடு வோர் ஒவ்வொரு எக்கருக்கும் கடனாக ரூபாய் 5,000 வழங்கப்படுகின்றது.

பருத்தி

தமிழ்நாட்டின் பயிர்களில் பருத்தி இன்றியமையாத வாணிகப் பயிராகும். சுமார் 10 லட்சம் எக்கரில் பருத்தி பயிரிடப்படுகின்றது. இம்மாநிலத்தில் உள்ள ஆலைகளின் தேவையை நிறைவு செய்ய குறைந் தது 7 லட்சம் பஞ்சுப் பொதிகள் வேண்டியுள்ளது. ஆனால், இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுவதோ 4 லட்சம் பொதிகளேயாகும். இக்கடுமையான பற்றாக் குறை ஆலைகளின் பணிகளைப் பாதிப்பதை அரசு உணர்ந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பருத்தி பயிரிடும் முழுப் பரப்பையும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோயில் பட்டியில் மானவாரிப் பகுதி முழுமையையும் மும்முர வேளாண்மை மேம்பாட்டுத் திட்டக் கண்ணோட்டத்துடன் பருத்திச் சாகு படியின் கீழ்க் கொண்டுவந்து பருத்தி உற்பத்தியை 4 லட்சம் பொதி யிலிருந்து 8 லட்சம் பொதியாக உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் முனைப்புத் திட்டப் பகுதிகளில், 82,000 ஹெக்டேரில் பருத்தி சாகுபடிக்காகப் பல்வேறு அறிவியல் நுட்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு இலக்கினை எய்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 28

பினவரும் திட்டங்கள் இம்மாநிலத்தில் செயற்பட்டு வருகின்றன:—

திட்டத்தின் பெயர்.	திட்ட இலக்கீட்டின் கீழ் வரும் பரப்பளவு.
பருத்தி முனைப்புத் திட்டம்	2·05 லட்சம் எக்கர்.
ஒருங்கிணைக்கப்பட்ட பருத்தி வளர்ச்சித் திட்டம்.	3·87 லட்சம் எக்கர்.
மும்முர பருத்தி வளர்ச்சிக்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம்.	2·50 லட்சம் எக்கர்.

1972–73 ஆம் ஆண்டிற்காக இலக்கிடப்பெற்ற பருத்தி உற்பத்தியின் அளவு, ஒவ்வொன்றும் 180 கிலோ கிராம் கொண்ட 5·30 லட்சம் பொதிகளாகும்.

1973–74-ல் ஒவ்வொன்றும் 180 கிலோகிராம் கொண்ட 5·35 லட்சம் பொதிகள் உற்பத்தி செய்ய மேற்குறிப்பிட்ட திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சணல்-புளிச்சை (Mesta) வளர்ச்சி திட்டம் முன்னோடித் திட்ட ஆராய்ச்சி சோதனைகள்

இத் திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டதாகும். பொருத்தமான பகுதிகளில் சணல்-புளிச்சை சாகுபடியைக் கொண்டுவருவதற்கான சாத்தியக் கூறுபற்றி ஆராய்ச்சி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1971–72-ல் தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன; தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

இத் திட்டத்தின்கீழ் சணல்-புளிச்சை ஆகியவை ஒவ்வொன்றிற்குமாக 50 சோதனைப் பாத்திகள் போடப்பட்டுள்ளன. விதைகளும் பயிரிடு பொருட்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஊர வைப்பதற்கான தொட்டிகள், பலகைகள் ஆகியவை உழவர்களுக்கு வகைசெய்து தரப் படுகின்றன. தவிர, மும்முர முறைகளையும் பின்பற்றும்படித் தெரிந் தெடுக்கப்பட்ட உழவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. துறையால் தொழில்நுட்ப ஆலோசனையும் வழிமுறையும் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்திற்கு 1971–72-ல் ரூ. 30,785-ம் 1972-73-ல் ரூ. 46,500-ம் செலவானது.

புகையிலை அபிவிருத்தித் திட்டம்

சுருட்டுப் புகையிலை, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, புகையிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எக்கர் ஒன்றில் புகையிலை விளைச்சலை அதிகரிக்கச் செய்ய, கோயம்புத்தூர் மாவட்டத்திலும் புகையிலை முனைப்புத்

1973 மார்ச் 28]

திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சுருட்டுப் புகையிலைக் காகச் சோதனைத் திட்டமொன்றும், புகையூட்டிப் பக்குவப் படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலை வளர்ச்சித் திட்டமும் ஒசூர்ப் பகுதியில் செயல் படுகின்றன.

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போதுள்ள முனைப்புத் திட்டத்தின்கீழ்வரும் நிலப் பரப்பினை 6,000 எக்கராக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1973–74-ல் பின்வரும் பரப்பளவில் புகையிலை பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது:

புகையூட்டிப் பக்குவப் படுத்தப்பட்ட புகையிலைத் (P. C. V.) திட்டம்.	245 ஹெக்டேர்கள்.
புகையிலை முனைப்புத் திட்டம்	8,090 ஹெக்டேர்கள்.
சுருட்டுப் புகையிலை	170 ஹெக்டேர்கள்.
ஆராய்ச்சிச் சோதனைகள்	20 எண்ணிக்கைகள்.

புகையிலை வளர்ச்சிக்கான அடங்கல் திட்டம்

(i) மேம்பட்ட முறை சாகுபடி	12,000 ஹெக்டேர்கள்.
(ii) செய்முறை விளக்கப் பாத்திகள்	40 எண்ணிக்கை.

மேற்கண்ட திட்டங்களைச் செயற்படுத்துவதனால், உற்பத்தி 24,000 மெட்ரிக் டன்னாக உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

கரும்பு வளர்ச்சித் திட்டம்

இத் திட்டத்தின் நோக்கம், உழவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு மும்முர பிரசாரத்தை மேற்கொள்வதாகும். நிலப்பரப்பு முழுமையும் உறுதியாகப் பலன்தரக்கூடிய தூய, வளமிகுந்த, நோயற்ற குறுகியகால கரும்புப் பயிர் நிறைந்திருக்கும் கருத்தோடு நோய்த்தடுப்புக்காப்பு, முதல் நீலை, இரண்டாம் நிலை நாற்றங்கால்கள் பயிரிடுவோரின் நிலவுடைமைகளில் வளர்க்கப்படுகின்றன. அத்தகைய குறுகிய காலப் பயிர் நாற்றுக்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும்பொருட்டு, கரும்பு நாற்றுப் பண்ணைகள் வைத்துள்ள கரும்பு பயிரிடுவோருக்கும், அந்தப் பண்ணைகளிலிருந்து நாற்றுக்களைத் தங்கள் நிலங்களுக்கு எடுத்துச் சென்று பயிரிடும் உழவர் களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் செயற்படுத்தப் பட்டதன் விளைவாக, கரும்பு பயிரிடப்படும் நிலம் முழுமையும் மேம்படுத்தப் பட்ட கோயம்புத்தூர் ரகம் பயிரிடப்படுகின்றது. உரமிடுவது குறித்த செய் முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. செய்முறை விளக்கப் பாத்தி ஒவ்வொன்றிற்கும் உதவித் தொகை ரூ. 50 அளிக்கப்படுகிறது. நியாயமான வாடகைக் கட்டணங்களில், கையால் இயக்கப்படுவனவும், மின்சார சக்தியால் இயங்குபவையுமான தெளிப்பான்கள் உழவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யப்படுகின்றன. காஞ்சிபுரம், ஆம்பூர்,

[1973 மார்ச் 28

கோபிச்செட்டிப்பாளையம், லால்குடி, மேலூர், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களிலுள்ள ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களில் உயிரியல் கட்டுப் பாட்டின்கீழ் ஒட்டுண்ணிகள் வளர்க்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கோடை காலங்களில் நீர் பற்றாக்குறையினால், கரும்பு உற்பத்தியில் தரமும், அளவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, கரும்பு பயிரிடுவோர், பல்வேறு மாவட்டங்களிலும் இணறுகள் தோண்டுவதற்காக கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசின் விரைவுத் திட்டத்தினைப் பயன்படுத்திக்கொண்டு, கோடைக்காலங்களில் முறையாக நீர்பாய்ச்சும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளனர். அதிக விளைச்சலைத் தரும் ரகங்களைப் பயிரிட ஊக்குவித்து, அதனால் உற்பத்தியைப் பெருக்க, மாநில, வட்ட, ஆலைகள் அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வோராண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பல்வேறுபட்ட ஆலை மண்டலங்களில், பல்வேறு ரக கரும்பு பயிடுவதற்கான தகுதிக் கூற்றினைக் கண்டறியவும் ஒவ்வொரு பகுதிக்கும் சிறந்த வேளாண்மை முறைகளை வகுக்கவும் கரும்பு மண்டலப் பண்ணைகள் (Sugar Cane Zone Farms) நடத்தப்படுகின்றன. தேவையான நிலம், எனைய வசதிகளையும் சர்க்கரை ஆலைகள் தருகின்றன. சோதனைகளை நடத்துவதற்குத் தொழிநுட்பப் பணியாளர்களுக்கு வகை செய்கின்றது. பணியாளர்க்கு ஆகும் செலவினை அரசு ஏற்கின்றது. பயிரிடுவதற்கு ஆகும் செலவினை ஆலைகள் ஏற்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கரும்பு பயிரிடப்படும் நிலப்பரப்பினை 2·3 லட்சம் எக்கரிலிருந்து (1968–69 ஆம் ஆண்டிற்கு உறுதியளிக்கப்பட்ட அளவு) 1973–74 ஆம் ஆண்டு இறுதிக்குள் 2·60 லட்சம் எக்கராக உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வெல்லத்தின் விலை மிகவும் உயர்ந்திருந்ததாலும் எனைய சாதகமான சூழ்நிலைகளின் காரணமாகவும் 1968–69-ல் கரும்பு பயிரிடப்படும் நிலப் பரப்பு இயல்புக்கு அதிகமாக 4·03 லட்சமாக உயர்ந்தது. 1972–73-ல் மதிப்பிடப்பட்ட நிலப்பரப்பு சுமார் 2·98 எக்கராகும். 1973–74 ஆம் ஆண்டு இறுதியில், மதிப்பிடப் பட்டுள்ள நிலப்பரப்பு இலக்கிடப்பட்ட நிலப் பரப்பு 2·60 லட்சம் எக்கருக்கு மாறாக, சுமார் 3·20 லட்சம் எக்கராக இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

நான்காவது, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உற்பத்தியைப் பொறுத்த மட்டில் கரும்பு வெல்ல அளவில் 8·90 லட்சம் டன்னிலிருந்து 1973–74 இறுதியில் 11 லட்சம் டன்களை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்கு 9·91 லட்சம் டன்னிற்கு மாறாக கரும்பு வெல்ல அளவில் மதிப்பிடப்பட்ட உற்பத்தி 9·96 லட்சம் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1973–74 ஆம் ஆண்டு

1973 மார்ச் 28]

இறுதியில் கரும்பு வெல்ல அளவு இலக்கான 11 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழான இலக்குகளும், சாதனைகளும் பின்வருமாறு :—

ஆண்டு.	இலக்கு.	சாதனைகள்.	உற்பத்தியான வெல்லத்தின் அளவு.
	(லட்சம் எக்கரில்.)		(லட்சம் டன்களில்.)
1970–71	2·37	2·42	11·43
1971–72	2·48	2·48	9·91
1972–73	2·54	2·98	9·96
1973–74	2·60	3·20 (எதிர்பார்க்கப் படுகிறது.)	11·00

1973–74-ஆம் ஆண்டிற்கான இலக்குகள் பின்வருமாறு :—

(i) கரும்பு பயிரிடப்படும் பரப்பினைப் பெருக்குதல் .. 3·20 லட்சம் எக்கர்

(ii) நிலத்தைச் செவ்வனே பண்படுத்தல் .. .. 1·43 லட்சம் எக்கர்.

(iii) தெரிந்தெடுக்கப்பட்டவற்றைப் பயிரிடுதல் .. 1·32 லட்சம் எக்கர்.

(iv) உரிய அளவு உரமிடுதல் .. .. .. 2·14 லட்சம் எக்கர்.

(v) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் .. .. 2·06 லட்சம் எக்கர்.

(vi) முனைப்புத் திட்டம் .. .. 0·52 லட்சம் எக்கர்.

(vii) கரும்பு உற்பத்தி லட்சம் டன்னில் .. 112·00 லட்சம் டன்கள்.

(viii) வெல்ல அளவில் உற்பத்தி லட்சம் டன்னில் 11·00 லட்சம் டன்கள்.

1971–72 சர்க்கரை உற்பத்திக் காலத்தில், கரும்புக்கான குறைந்த விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 73·70 ஆக வரையறுக்கப்பட்டது. சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தினரைக் கூட்டி குறைந்த விலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 85 ஆக உயர்த்துமாறு இணக்கமாக அரசு கேட்டுக்கொண்டது.

2. 1972-73 ஆம் ஆண்டிற்குக் கரும்பிற்கான குறைந்த விலையை உயர்த்துமாறு அரசு பரிவுரை செய்துள்ளது. கரும்பு விலையை நிர்ணயிப்பதில் விதாச்சாரத்தைப் பின்பற்றும்படி தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் வாதாடுகின்றன. 1972—73 கரும்பு பருவத்திற்கான விலையை நிர்ணயிக்கும்போது, இக்கருத்துக்கள் இந்திய அரசால் ஏற்றுக்

[1973 மார்ச் 28

கொள்ளப்பட்டன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நேர்வில் ஆலைகளாற் கொடுக்கப்படும் குறைந்த விலை, மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 90 அல்லது அரசால் நிர்ணயிக்கப்படும் விலை, இவற்றில் எது அதிகமோ அவ்விலையாகும்.

3. 1971-72 கரும்புப் பயிர் காலத்தில், கரும்புப் பயிரிடுவோருக்கு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைக் காட்டிலும் அதிக விலையினைக் கொடுத்தன. 1972–73 கரும்புப் பயிர் காலத்தில்கூட, ஆலைகளுள் செயற்படுதன்மையைக் கவனித்த பிறகு கரும்பு பயிரிடுவோருக்கு விலை அதிகமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு தொழிற்சாலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்

வயல்களிலிருந்து கரும்பைத் தொழிற்சாலைகளுக்கு எளிதாகவும், விரைவாகவும் எடுத்துச் செல்வதற்குச் சர்க்கரைத் தொழிற்சாலைப் பகுதிகளிலும், அவற்றைச் சுற்றிலும் உள்ள சாலைகளை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு செஸ் நிதியிலிருந்து ஒரு பகுதி ஒவ்வொராண்டும் இதற்காகச் செலவு செய்யப்படுகின்றது. 1972–73 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உயர்த்தப்பட்ட ஒதுக்கீடு ரூ. 50 லட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, கரும்பு தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக சிறப்புப் பொறியியல் உட்குழு ஒன்று செயல்படுகின்றது. பவானி, பண்ணுருட்டி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இடங்கள் இக்குழுவிற்குக் கிளைகள் உள்ளன. கரும்பு வளர்ச்சியின்கீழ் பணிகளையும், எனைய சாலைப் பணிகளையும் கவனிப்பதற்காக, காவிரிப் பாசனப் பகுதியின்கீழ் (Cauvery Commond Complex) தனியானதொரு வட்டத்தை அமைப்பது குறித்து, அரசு தனியாகப் பரிசீலனை செய்து வருகிறது. 1972–73-ல் பல்வேறு சர்க்கரைத் தொழிற்சாலைப் பகுதிகளில் சாலைப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்காக ரூ. 265·68 லட்சம் மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1972–73-ற்கான செலவு ரூ. 50 லட்சமாக வரவு-செலவுத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் சாலைப்பணிகள், தங்கு தடையற்ற கரும்பு போக்குவரத்துக்கு உதவும் வகையில் நல்ல நிலையில் உள்ளன என்பதை உறுதி செய்யும் முறையில், கரும்புத் தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும். சாலைப் பணிகளைப் பேணும் பொறுப்பினை, அரசு, மாநில நெடுஞ்சாலைகள் துறையிடம் ஒப்படைத்துள்ளது. அதற்காகும் செலவு கரும்பு செஸ் நிதியிலிருந்து சரிக்கட்டப்படும். 1973–74 ஆம் ஆண்டிற்காக, கரும்புத் தொழிற்சாலைப் பகுதிச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1973–74 ஆம் ஆண்டின் இலக்கு 40 கிலோ மீட்டர் சாலைகளை அமைப்பதும் மேம்படுத்துவதுமாகும்.

1973 மார்ச் 28]

காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்

மேம்படுத்தப்பட்ட முனைப்பு முறைகளைக் கையாண்டு, காய்கறி உற்பத்தியை பெருக்குவதும், காய்கறிப் பயிரின்கீழ் கூடுதலாகக் கணிசமான அளவு நிலப்பரப்பைக் கொண்டுவருவதும் இத்திட்டத்தின் நோக்கம். ஒவ்வொருவருக்கும் உயரளவு ரூ. 240 என்ற நிபந்தனைக்குட்பட்டு, ஒரு பகுதி விதை, உரம் போன்றவையாகவும் ஒரு பகுதி ரொக்கமாகவும் எக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகியக் காலக் கடன் வழங்கப்படுகின்றது. இத் திட்டம் 1973-74-லும் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ், 1973–74-ல், 3,200 எக்கர் நிலப்பரப்பைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப் பகுதித் திட்டம்.

வேளாண்மை மாணியத் திட்டத்தின் கீழ், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு வழங்கப்படுவது போல நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள உழவர்களுக்கும் சலுகைகள் வழங்க வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

இனம்.	சலுகை விலையில் விற்பனை.
1 காய்கறி விதைகள், பழச் செடிகள்..	காய்கறி விதைகள் 50 சதவீதமும், தென்னங் கன்றுகள் உட்பட பழச் செடிகள் 25 சதவீதமும் சலுகை விலையில் வழங்கப்படுகின்றது.
2 தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கருவிகள்.—	
(1) மண்வெட்டிகள்	50 சதவீத சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.
(2) களைக் கொட்டுகள்	
(3) பரம்புகள்	
(4) வெட்டுக் கத்தரிகள் ...	
(5) பூவாளிகள்	

குறிப்பு—1. பொது நிறுவனங்களுக்கு முழுத் தொகுதியும் வழங்கப்படும்.

2. தனிப்பட்டவர்களுக்கு ஒரு கருவி மட்டும் வழங்கப்படும்.

இத் திட்டம் 84 நகராட்சிகளிலும் இந்த நகராட்சி, மாநகராட்சி எல்லைகளிலுள்ள பள்ளிகள், அனுதை இல்லங்கள் முதலிய பொது நிறுவனங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

[1973 மார்ச் 28

உருளைக் கிழங்கு பயிர் மேம்பாட்டுத் திட்டம்.

கோடைக்கானலிலும், தருமபுரி மாவட்டம் ஒகூரிலும் உருளைக் கிழங்கு பயிரிடும் நிலப் பரப்பைப் பெருக்குவது இத் திட்டத்தின் நோக்க மாகும். ஹோகூரில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்குத் துறையின் மூலமாக எக்கர் ஒன்றுக்கு ரூ. 750-ம், கோடைக்கானல் மலைப்பகுதியில் பயிரிடுபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக எக்கர் ஒன்றுக்கு ரூ. 900-மும் கடனுக வழங்கப்படுகின்றன. பயிரிடுவோருக்குத் துறை யினைச் சேர்ந்த பணியாளர்கள் தொழில் நுட்ப உதவிகள் அளிக்கின்றனர்.

தற்போது, "ரைபிள் ரேஞ்ச்" என்னும் இடத்தில் ஒன்றும் மதுரை மாவட்ட, கோடைக்கானல் கோட்டம் வில்பட்டியில் ஒன்றுமாக இரண்டு அரசு விதைப் பண்ணைகள் உருளைக்கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்காக உள்ளன. ரூ. 4·00 லட்சம் செலவில் உருளைக்கிழங்குப் பயிரின்கீழ் 5,200 எக்கர் நிலப்பரப்பினைக் கொண்டு வருவதனால் 1973–74-ம் ஆண்டிலும் இத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

தரவிதைகளும், 1973–74-ம் ஆண்டிற்கு அரசு விதைப் பண்ணைகளைத் தொடங்குதலும்

வேளாண்மை உற்பத்தி பெருக பாசனம், உரம், பயிர்ப்பாதுகாப்பு போன்ற பயிரிடு பொருட்கள் இன்றியமையாதவையாயிருப்பது போலவே தரவிதைகளும் இன்றியமையாதவையாகும். அரசு நடத்தும் அரசு விதைப் பண்ணைகளில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதைகள், இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன. தனியார் பண்ணை களில் பதிவு செய்து கொண்ட பயிரிடுவோர்களாலும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழும், அவர்களது ஆலோசனையின் மேலும் தரவிதைகள் பெருக்கப்படுகின்றன. அரசு விதைப் பண்ணை களில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்வதற்காகத் தேவைப்படும் மூல விதைகள் அரசினால் நடத்தப்படும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன. தற்போது இம் மாநிலத்தில் குடுமியாமலையிலுள்ள அண்ணா பண்ணை உட்பட பிற் சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ள 55 அரசு விதைப் பண்ணைகள் செயற்பட்டு வருகின்றன. விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் அடிப்படை அல்லது ஆரம்ப விதைகள் உற்பத்தி இலக்கினை அரசு விதைப் பண்ணைகள் எய்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

குடுமியாமலை அண்ணா பண்ணையில் விதைகளைத் தரப்படுத்தும் பிரிவு ஒன்று அமைக்கும் பணி முடியுந்தறுவாயில் உள்ளது. 1972–73-ல் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சாக்கோட்டையில் விதை களைத் தரப்படுத்தும் மற்றொரு பிரிவு ஒன்று அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அது 1973–74-ல் தான் செயற்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. "யூனிசெஃப்" (UNICEF) திட்டத்தின்கீழ், காய்கறிப் பயிர் விதைகளைப் பக்குவப்படுத்த விதைப் பக்குவப்படுத்தும் பிரிவுகள் இரண்டினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 28]

தர விதை வழங்கும் திட்டம்.—நெல், சிறு தானியங்களின் சான்றளிக் கப்பட்ட விதைகளைப் பெருக்கி, வழங்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும் இரண்டாம் நிலை விதைகளைக் குடியானவர்களுக்கு வழங்குவதற்காக அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் அடிப்படை விதைகள் இரண்டாம் நிலை விதைகளாகப் பெருக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிரிடுவோருக்கு வழங்கப்படுகின்றன. இரண்டாம் நிலை விதைப்பண்ணை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் விதைகள் செய்முறைப்படுத்தப்பட்டு, குடியானவர்களுக்கு அவை சான்றளிக்கப்பட்ட விதைகளாக விற்கப்படு கின்றன. இந்த விதைகள் மூலம் திட்டமிடப்பட்ட பகுதியை இத் திட்டத் தின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. இத் திட்டத்தின்கீழ், மூன்றாண்டு களுக்கொருமுறை மாறி மாறி இம்மாநிலத்திலுள்ள மொத்த விளைச்சல் பகுதியில் 1/3 பகுதியில் தர விதைகள் விதைக்கப்படும். மேற் சொன்ன பகுதியின் 1/3 பகுதியில் மாநில வேளாண்மைத் துறை வழங்கும் விதைகள் விதைக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 2/3 பகுதி யில் உழவர்கள் தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொள்கிற விதை கள் பயிரிடப்படும். 1973–74-ல் பின்வரும் அளவுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது :—

	இலக்கு (டன்னில்.)
நெல் முதல் நிலை	2,780
நெல் இரண்டாம் நிலை	41,700
சிறுதானியங்கள் முதல் நிலை	60
சிறு தானியங்கள் இரண்டாம் நிலை	1,528

விதைகளின் தரம் பற்றி சான்றளிக்கும் திட்டம்.—குடியானவர் களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத் துடன், 1966-ம் ஆண்டு விதைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்திய அரசு, வெவ்வேறு மாநிலங்களுக்குச் சாகுபடி செய்யும் பயிர்களின் முக்கிய மான ரகங்களை அறிவிக்கிறது.

வேளாண்மைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் விதைகள் தரம் குறித்துச் சான்றளிக்கும் நிறுவனம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இது 1–4–1970 முதற்கொண்டு செயல்படத் தொடங்கி யது. சான்றளிக்கும் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யும் பகுதி களுக்கு மூன்று முதல் நான்கு முறை சென்று, அப்பயிரில் அயல் ரகங்கள் கலக்காமல் உள்ளதா என்று சோதிப்பார். விதைகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அறுவடை, உலரவைத்தல், சுத்தப்படுத்தல், சலித்தல், மூட்டைகளில் கட்டுதல் ஆகிய நடைமுறை களைச் சான்றளிக்கும் பணியாளர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

1972, டிசம்பர் வரை இத்திட்டத்தின்கீழ் 6,466 எக்கர் நிலப்பரப்பு கொண்டு வரப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 28

1972–73-ல் சான்றளிக்கப்படவிருக்கிற திட்டமிட்ட பகுதியின் பரப்பளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது: —

நெல்—3,000 எக்கர்.

பருத்தி—6,000 எக்கர்.

கலப்பினச் சிறு தானியங்கள்—3,000 எக்கர்.

விதைப் பரிசோதனை.—கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் மற்றொன்றுமாக இம் மாநிலத்தில் இரண்டு விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றும், ஓராண்டில் 10,000 மாதிரிகளைச் சோதனை செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972 டிசம்பர் முடிய 9,161 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத் தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகுபயன் தரும் தானிய ரகங்கள் பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்த பிறகு, இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உள் நாட்டு உர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த இரசாயன உரத்தின் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்தியதன் காரணமாக மத்திய உரக் களஞ் சியம், இறக்குமதியாகும் உரங்களை மட்டும் பங்கீடு செய்து வருகிறது.

2. பல்வேறு இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது படிப்படியாகப் பெருகி வருகிறது என்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது :—

ஆண்டு.	பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்கள்.		
	நைட்ரஜன்.	பாஸ்பேட்.	பொட்டாஷ்.
(1)	(2)	(3)	(4)
	(லட்சம் டன்களில்.)		
1968–69	1·13	0·35	0·31
1969–70	1·48	0·42	0·33
1970–71	1·73	0·72	0·51
1971–72	2·14	0·71	0·61

1973 மார்ச் 28]

அமோனியம் சல்பேட், யூரியா போன்ற இரசாயன உரங்கள் இறக்குமதியின் மீது கட்டுப்பாடுகள் விதித்ததன் காரணமாக, நாடு முழுவதும் உரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தவிர, உள் நாட்டிலும் இந்த உரங்கள் உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. இந்திய அரசிடமிருந்து, சிறப்பு நேர்வாக, உரம் பெறவும் இவ்வரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆயினும், இம் மாநிலத்திற்குத் தேவையான 2·74 லட்சம் டன் நைட்ரஜனுக்குப் பதிலாக 1972 ஏப்ரல் முதல் 1973 ஜனவரி வரை 1·48 லட்சம் டன் நைட்ரஜன் உரம் வழங்கப்பட்டது.

உரங்கள் போதிய இருப்பு இல்லாததன் காரணமாக, பருவக் காலத்தில், நைட்ரஜன் உரம் பயன்படுத்தும் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது.

3. பெங்களூரில், 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி 23, 24 ஆம் நாட்களில் நடந்த உர மண்டல மாநாட்டில் 1973–74 ஆம் ஆண்டுக்கான உரத்தேவை பற்றி மதிப்பிடப்பட்டது. முன் பருவத்திற்கு (1973 பிப்ரவரி முதல் 1973 ஜூலை வரை) நைட்ரஜன் கணக்கில் 1·20 லட்சம் டன உரம் தேவைப்படுமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. கையிலுள்ள இருப்பு, தொகுப்பில் அடங்காத வழங்கல் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு 1973 பிப்ரவரி முதல் ஜூலை ஈறுகவுள்ள கால அளவில் நைட்ரஜன் கணக்கில் 44,000 டன் உரத்தைத் தொகுப்பு அளவிலிருந்து வழங்க வேண்டும்.

4. மாநில அரசு நியமனம் செய்துள்ள வணிகர்களுக்கு, ஒவ்வொரு மாதமும் முடிவதற்கு முன்பு, குறிப்பிட்ட அளவு உரத்தை வழங்குமாறு உள்நாட்டு உரத் தயாரிப்பாளர்களுக்கு 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் கட்டளை ஒன்றை இந்திய அரசு 1972 ஜூலையில் பிறப்பித்தது. இரசாயன உரங்கள் மண்டல மாநாட்டில் உரத் தயாரிப்பாளர்கள் வழங்க ஒப்புக் கொண்ட உர அளவின் அடிப்படையில் மாநில அரசுக்கு வழங்க வேண்டிய உரங்களின் அளவு குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும், மின்வெட்டு, தொழிலாளர் பிரச்சினை, மூலப் பொருள்கள் கிடைக்காமை ஆகியவற்றினால், உள்நாட்டு உரத் தயாரிப் பாளர்கள் ஒப்புக் கொண்ட அளவினை வழங்க முடியவில்லை. எனவே, பல்வேறு வேளாண்மைத் திட்டங்களின் தேவையை நிறைவு செய்ய மாநில அரசு, மத்தியத் தொகுப்பையே முழுதும் நம்பியிருக்கிறது. உழவர்களின் தேவையை நிறைவு செய்ய, இயன்ற வரை மத்திய உரத் தொகுப்பிலிருந்து போதிய அளவு உரம் பெற மாநில அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. இரசாயன உரத் தயாரிப்பாளர்கள் கூட்டத்தைக் கூட்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, குறிப்பிட்டபடி உரங்களை வழங்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவர். உரத்தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்தவும், அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

[1973 மார்ச் 28

பயிர்ப் பாதுகாப்பு.—1969–70 முதல் 1971–72 வரை வழங்கப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு இரசாயன உரங்களின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

	1969–70	1970–71.	1971–72.	1972–73.
		(மெட்ரிக் டன்களில்.)		
தூள் (Dust)	23,247	25,079	30,787	23,586
திரவம் (Liquid)	639,880 லிட்டர்.	543,293 லிட்டர்.	1,057,384 லிட்டர்.	589,154 லிட்டர்.

1969–70 முதல் 1971–72 வரை பயிர்ப் பாதுகாப்பு குறித்து ஏற்பட்ட செலவு பின்வருமாறு :—

	1969–70.	1970–71.	1971–72.	1972–73. (திருத்த மதிப்பீடு).	1973–74 (திருத்த மதிப்பீடு).
			(ரூபாய் இலட்சத்தில்.)		
மொத்தம்	3,40·50	4,28·07	3,62·83	3,54·64	4,29·00
வருவாய் ..	2,25·89	2,85·61	2,44·09	3,30·00	3,50·00
நிகரம் ..	1,14·61	1,42·46	1,18·74	24·64	79·00

பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் நிறுத்தப்பட்டு விட்டதன் காரணமாக 1972–73-ல் நிகரச் செலவு குறைந்துள்ளது.

பயிர்ப் பாதுகாப்பின்கீழ் செயல் படுத்தப்படவிருக்கும் பெரும் திட்டங்கள் பின்வருமாறு —

பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் வழங்குதல்.—துறை மூலமாக விற்பனைக்கு வரும் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் அனைத்தும் முதற்கண் இரசாயன வகையிலும் நுண்ணுயிரியல் வகையிலும் நன்முறைச் சோதனையிடப்பட்டு அவை சிறந்தவையெனக் கண்டறியப்பட்ட பின்னரே அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த இரசாயனங்களை திறந்த ஒப்பந்தப் புள்ளி முறை மூலம் இயக்குநர் வாங்கி அவற்றை இம் மாநிலத்திலுள்ள வேளாண்மை விற்பனை நிலையங்கள் அனைத்திற்கும் வழங்குகிறார். 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 562 லட்சம் மதிப்புடைய இரசாயனங்கள் வாங்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன. நடப்பாண்டில், ரூ. 570 லட்சம் மதிப்புடைய இரசாயனங்கள் நமது விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1973 மார்ச் 28]

தரக் கட்டுப்பாடு.—விற்பனை நிலையங்கள் மூலமாக தரமான மருந்துகள் மட்டுமே வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ள, மருந்துகள் பொதுமக்களுக்கு விற்பனைக்காக வழங்கப்படுவதற்குமுன்பு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் குவியல் முறையில் பெறப்பட்ட இரசாயன மாதிரிகள், பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை கோவை, மதுரை, ஆடுதுறை, கோவில்பட்டி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஆய்வுக் கூடங்கள் ஐந்தில் சோதனையிடப்படுகின்றன. தரம் குறைந்த இரசாயனங்கள் வழங்கப்படும் நேர்வில், அவற்றை வழங்கியவர்கள் தண்டிக்கப் படுகின்றனர்.

பூச்சிக் கொல்லிகள் சோதனையிடுதல்.—தற்போதுள்ள பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 4,000 மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் திறனுடையவையாகும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில், சேலத்திலும், திருச்சிராப்பள்ளியிலும் மேலும் இரு ஆய்வுக் கூடங்களை விரைவில் அமைத்தும் இந்த ஆய்வுக்கூடங்களில் பணியாற்றும் வேளாண்மைத் துணை அதிகாரிகளின் எண்ணிக்கையை எழுவரிலிருந்து 26 பேராக உயர்த்தியும், 20,000 மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் அளவுக்கு இந்த ஆய்வுக்கூடங்களின் திறனளவை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்புச் சாதனம் வழங்குதல்.—கையினால் இயக்கப்படுபவையும், விசையில் இயங்குபவையுமான தெளிப்பான்கள், தூவு கருவிகள் ஆகியவை, சிறப்புத் திட்டப்பகுதிகளில் உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கையினால் இயக்கப்படும் தெளிப்பான்கள், குறைந்த விலையில் வட்டாரங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன், துறை அதிகாரிகள் பயிர்ப்பாதுகாப்புப் பொருள்களுக்கான மையத் தொகுதி ஏற்பாட்டை வைத்து வருகின்றனர். இந்த மையத் தொகுதியிலிருந்து பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள் நாள்தோறும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 500 விசைத் தெளிப்பான்கள் வாங்கப்பட்டு இந்த மைய ஏற்பாட்டில் போதுமான அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளப்படுகின்றன. இதோடு, அவசரத் திட்டத்தின் ஒரு பாகமாக, இவ்வாண்டு 2,000 விசைத் தெளிப்பான்கள் வாங்கப்பட்டு, அவசரத் திட்டம் செயலில் இருக்கும் மாவட்டங்களில் உள்ள தொகுப்புகளில் வைத்து வரப்படும்.

மேற்கண்டவற்றுடன், கிராமங்களிலும், வட்டாரங்களிலும் உள்ள தெளிப்பான்கள் தாமதமின்றி பழுது பார்க்கப்படும் வகையில் 6 இயல் ஊர்திப் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அவை இப்போது செயல் பட்டு வருகின்றன. இந்த ஆறு இயல் ஊர்திப் பிரிவுகளை மதுரை, வேலூர், திருவாரூர், கோவை, சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவிடங்களிலுள்ள வேளாண்மை பொறியியல் தொழிற் கூடங்களுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பயிர்களைப் பூச்சிகள் தாக்குவது பற்றிக் கண்காணிப்பு.—பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்குவது பற்றி உழவர்களுக்கும், வளர்ச்சி அதிகாரிகளுக்கும் முன்னதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டால், உரிய வழிகளைக் கையாண்டு பூச்சிகள், நோய்கள் தாக்கா வண்ணம் பயிர்களைச்

சிறந்த முறையில் பாதுகாக்கலாம். எனவே, பூச்சிகள் தாக்குவதும், நோய்கள் பரவுவதும் பற்றி உழவர்களுக்கு முன்னதாகத் தகவல் தெரிவிக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பூச்சிகள் கண்காணிப்பு—முன்னறிவிப்புத் திட்டம் தற்போது செயலில் இருந்து வருகின்றது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இத் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

களைகளை இரசாயன முறையில் கட்டுப்படுத்துதல்.—இரசாயனங்களைப் பயன்படுத்தி களைகள் வளராவண்ணம் கட்டுப்படுத்துவது நவீனமுறையாகும். மிகவும் முன்னேற்றம் அடைந்த மேலை நாடுகளில் இந்த முறை மிகவும் பிரபலமாயிருந்தாலும்கூட, இது நமது நாட்டு உழவர்களை இன்னும் கவரவில்லை. நிலத்தில் போடப்படும் இன்றியமையாமையாப் பயிரிடுபொருள்களில் 25 சதவீதம் முதல் 50 சதவீதத்தினை இந்தக் களைகள் எடுத்துக் கொண்டு விடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்து இக் களைகளைக் கட்டுப்படுத்துவதனால், பயிர்கள் அதிகம் விரயமாவதையும், அதனைத் தொடர்ந்து உற்பத்தி குறைவதையும் தவிர்க்கலாம். எனவே, களைகளைக் கட்டுப்படுத்தும் இந்த நவீன முறையை உழவர்களிடையே பிரபலப்படுத்தும் பொருட்டு இரசாயன களைக் கொல்லிகளை 75 சதவீதம் விலையில் வழங்குவதற்காக 25,000 எக்கர் பரப்பில் ரூ. 3·75 லட்சம் செலவில் களைக் கொல்லிகள் பயன்படுத்தும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம்.—1968 ஆம் ஆண்டு பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம் 1—8—1971 முதல் செயலுக்கு வந்தது. தரக் குறைவான மருந்துகளை வழங்கி அதன் விளைவாக மக்களின் உடல் நலன் கெடுவதைத் தடுப்பதும், தரமான பூச்சிக் கொல்லி மருந்துகளை வழங்குவதுமே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது உயிர் இழக்கும் விவசாயியின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.

வேளாண்மை விற்பனை நிலையங்களைக் கூடுதலாகத் தொடங்குதல்.—மிகுபயன் தரும் தானிய வகைகள் திட்டம், நவரை முனைப்புத் திட்டம் ஆகியவற்றினால், வேளாண்மை பயிரிடு பொருள்களை உழவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்காக அதிக இருப்பு வைத்துக் கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மை பயிரிடு பொருள்களை உழவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய, ஆண்டுதோறும் 50 விற்பனை நிலையங்கள் என்ற வீதத்தில் இதுவரை 150 விற்பனை நிலையங்களைத் தொடங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 150 விற்பனை நிலையங்கள் யாவும் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1973–74 ஆம் ஆண்டில் மேலும் 15 விற்பனை நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களும், ஐந்தாண்டுகள் பணியாற்றியுள்ளவர்களுமான குற்றேவலர்கள் 1,194 பேரை அரசுப் பணியாளர்களாக மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டு இறுதிக்குள் 597 பதவிகள் அரசுப் பதவிகளாக மாற்றப்படும். எஞ்சிய 597 பதவிகள் 1973–74 ஆம் நிதியாண்டில் அரசுப் பதவிகளாக மாற்றப்படும்.

வேளாண்மை உற்பத்தித் திறன் குழு

உழவர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், வளர்ச்சி பணியாளர்கள், தொழில் முனைவர்கள், வேளாண்மையிலும், தொடர்புள்ள பிற துறைகளிலும் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவர்களுக்கு உற்பத்தித்திறனைப் பெருக்கும் உணர்வினை ஊட்டுவதற்காக, தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் திறன் குழுவை ஏற்படுத்தி தமிழகம் புதுமையான, முற்போக்கான நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளது. இக்குழு தனது பிற பணிகளுடன் கீழ்க்கண்ட பணிகளையும் ஆற்றி வரும் :—

(1) வேளாண்மைக் கருத்தரங்குகள் பல நடத்துவதன் மூலம் உழவர்களிடையே உற்பத்தித் திறனைப் பெருக்கும் உணர்வினை ஊக்கி வளர்த்தல்;

(2) வயலிலே மேற்கொள்ளும் பணிகளிலும் நவீன பயிரிடு பொருள்களைப் பயன்படுத்துவதிலும் வேளாண்மை உற்பத்தியில் தோன்றும் சிக்கல்கள் பலவற்றிலும் தொழில் நுட்ப உத்திகளை உழவர்களுக்கு அளித்தல்;

(3) வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் துறையிலும் தொடர்புடைய பிற துறைகளிலும் உள்ள சிக்கல்கள் குறித்து ஆழ்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ;

(4) பொதுவாக எல்லா வகையான உழவர்களுக்கும் குறிப்பாக ஏழை உழவர்களுக்கும் பயனுள்ள ஆலோசனைகள் பலவற்றை நல்குதல்.

இக்குழுவை அமைப்பதற்காக ரூ. 1 லட்சம் தொகைக்கு அரசு முன்னரே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இம்மன்றம் சிறந்த முறையில் செயல்படுவதற்காக எண்ணற்ற உழவர்கள், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறக் கருதப்பட்டுள்ளது.

விற்பனை வசதி.

சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனும், துய்ப்போர் கொடுக்கிற விலையிலிருந்து தகுந்த பங்கை, உற்பத்தியாளர் பெறுவது இயலும் பொருட்டும், முறைபடுத்தப்பட்ட பதினெரு அங்காடிக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்திலும் விற்பனைக் குழு நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துடன் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்படி, முறைப்படுதப்பட்ட 128 அங்காடிகள் தொடங்கப்பட்டுள்ளன. பிற்சேர்க்கை ஆறில் இம்மாநிலத்திலுள்ள ஒழுங்கு முறைவிற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வரும் இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதிக்குள், மேலும் 22 முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நான்காம் திட்ட இறுதிக்குள் 150 அங்காடிக் கூடங்களை தொடங்கும் இலக்கு எய்தப்படும். இம்மாநிலத்தில் இருக்கும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக, மத்திய அரசின் மூலமாக உலக வங்கியின் உதவி கோரி ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை அனுப்ப

உத்தேசிக்கப்பட்டுள்ளன. மேற்படி திட்ட அறிக்கைதயாரிப்பில் உள்ளது. உழவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், தங்களது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்தும்படி அவர்களைத் தூண்டும் நோக்கத்துடனும், இதுவரை 28 தரப்பிரிவு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 12 நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972-73 வரையில் 12 தரப்பிரிவு ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. "அக்மார்க்" தரத்தின் கீழ் எல்லாப் பொருட்களையும் தரப்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பூர், இராஜபாளையம், பொள்ளாச்சி, பெருந்துறை, புதூர் ஆகிய விடங்களில் "கப்பாஸ்" பருத்தித் தரப் பிரிவு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1971-72-ல் வணிகத் தரங்களுக்கேற்ப கீழ்க்கண்ட அளவுள்ள வேளாண்மைப் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன :—

வரிசை எண்ணும், விளைபொருட்களின் பெயரும்.		எய்திய சாதனைகள். (குவிண்டால் அளவில்.)
1.	வேர்க்கடலைப் பருப்பு	30,15,60
2.	எள்	3,69,73
3.	வெல்லம்	6,53,60
4.	உருளைக்கிழங்கு	18,20,49
5.	பழங்கள் (எண்ணிக்கையில்)	27,87,650

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெறவும், சென்னை மாநகரில் காய்கறி பயன்படுத்துபவர்களுக்கு நியாயமான விலையில் புதிய காய்கறிகளை வழங்கவும் வேண்டி, சென்னை மாநகரில் காய்கறி விற்பனை வசதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

நிறுவனக் கடனுதவி

வேளாண்மை நிதியுதவிக் கழகம்

திருநெல்வேலி மாவட்டத்தில் பின்வரும் திட்டம், வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவி பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது.

தூத்துக்குடியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள "தேரி நிலங்களை" வாழை பயிரிடுவதற்காக மேம்படுத்தும் திட்டம்

இத்திட்டம் தூத்துக்குடியிலும் அதனைச் சுற்றிலுமுள்ள "தேரி நிலங்களை" ஏற்றுமதி செய்வதற்கேற்ற வாழை பயிரிடும் நிலங்களாக மேம்படுத்துவதைக் கருதியது. இத் திட்டத்தினால் 6,000 ஏக்கர்

நிலங்கள் பலன் பெறும். 3,000 ஏக்கர் வாழை பயிரிடுவதின் கீழும், எஞ்சிய பரப்பு, நெல், வேர்கடலை போன்ற பயிர்களையும், காய்கறிகளையும் பயிரிடுவதன் கீழும், கொண்டுவரப்படும். இதற்காகும் மொத்தக் கடன் தொகை ரூபாய் 443·30 லட்சமாகும்.

1970 மே 1-லும் அதற்குப் பிறகும் உழவர்களுக்குக் கடனாக வழங்கிய தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு இத் திட்டத்தின் கீழ் ரூ. 241·80 லட்சம் வரை, மாநில அரசு, வேளாண்மை நிதியுதவி கழகத்திற்கு உத்தரவாதம் அளிக்கும். இத்திட்டத்தின்கீழ் வெட்டப்படும் கிணறுகளின் எண்ணிக்கை 580-லிருந்து 380-ஆகக் குறைக்கப்பட வேண்டுமென்று வேளாண்மை நிதியுதவிக் கழகம் அரசுக்குத் தெரிவித்துள்ளது. இச்செயற்குறிப்பு குறித்து அரசு, சென்னை-17, நிலநீர் இயக்குநருடன் கலந்தாலோசித்துப் பரிசீலித்து வருகிறது.

வாணிக வங்கிகள்

தமிழ்நாடு அரசின் உத்திரவாதத்தின் கீழ் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பதினொன்று கடன் வழங்கி வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் டிராக்டர்கள், மின்சார மோட்டார் விசையேற்றங்கள், எண்ணெய் என்ஜின்கள், விசைக் கலப்பைகள் முதலியவை வாங்குவதற்காக உழவர்களுக்கு நடுத்தரக் காலக் கடன்களை, இந்த வங்கிகள் வழங்குகின்றன. பதினொரு வங்கிகளுக்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்ட ரூபாய் 490·00 லட்சம் அளவில் வங்கிகள், ரூபாய் 347·11 லட்சத்தைக் கடனாக வழங்கியுள்ளது.

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம்—கொள்கை விளக்கக் குறிப்பு

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கடன் வழங்குகின்றது. இக் கடன்கள் மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்றன. நிலவள வங்கி வெளியிடும் கடன் ஈட்டுப் பத்திரங்களில் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகமும் மாநில அரசும் 3 : 1 என்ற விகிதத்தில் பங்கேற்றுள்ளன.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை வளர்க்கும் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,500 ஏக்கர் பரப்பில் ரப்பர் வளர்க்கும் திட்டம் ஆகிய இரு மலைத் தோட்டத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு திட்டங்களில் தென்னை, ரப்பர் வளர்க்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. இவற்றை நல்ல முறையில் பேணி வருவதற்காகக் கடன்கள் வழங்க இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுபோலவே, நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட அதிபர்களுக்காக 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடும் முனைப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இன்னும் கூடுதலாக 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடும் மற்றொரு திட்டம் பரிசீலனையிலுள்ளது. சிறு அளவில் காப்பி பயிரிடுவோர்க்குக் குறிப்பாக பழங்குடியினருக்காக, சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காட்டில் 2,000 ஏக்கர் பரப்பில் காப்பி பயிரிடும் திட்டமும்,

மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி மலைப்பகுதியில் 4,500 எக்கர் பரப்பில் காப்பி பயிரிடும் திட்டமும் ஆகிய இரு மலைத் தோட்டத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எற்காட்டில் 772 எக்கர் பரப்பிலும், பழநி மலைப் பகுதியில் 2,067 எக்கர் பரப்பிலும், இதுவரை காப்பி பயிரிடப்பட்டுள்ளது. 1973-74-ல் காப்பி பயிரிடும் இவ்விரு திட்டங்களின் கீழ் 1,300 எக்கர் பரப்பில் காப்பி பயிரிடத் திட்டமிடப்பட்டு உள்ளது. இத்திட்டங்கள் அனைத்திற்கும் ரூபாய் 163·17 லட்சம் செல வாகும். இதில், 1972–73 இறுதிக்குள் ரூபாய் 97·90 லட்சம் வரை கடன்கள் வழங்கப்படும். 1973–74-ல் மேலும் ரூபாய் 29·96 லட்சம் வழங்கப்படும்.

செ3. ரூ. 12·50 லட்சம் செலவில் 1,000 எக்கர் பரப்பில் கோக்கோ பயிரிடும் திட்டம், மதுரை மாவட்டத்தில் ரூ. 1000 லட்சம் செலவில் 1,000 எக்கர் பரப்பில் திராட்சை பயிரிடும் திட்டம், நீலகிரியில் ரூ. 60 லட்சம் செலவில் 2,000 எக்கர் பரப்பில் ஜெரேனியம் (Geranium) வளர்க்கும் திட்டம், தென்னார்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ரூ. 280 லட்சம் செலவில் 70,000 எக்கர் பரப்பில் முந்திரி பயிரிடும் திட்டம் ஆகிய சில திட்டங்கள் குறித்து அரசும், வேளாண்மை மறுநிதியுதவிக் கழகமும் பரிசீலித்து வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் 1,000 எக்கர் பரப்பில் தேயிலை பயிரிடும் முனைப்புத் திட்டமும் 3,000 எக்கர் பரப்பில் புதிதாகத் தேயிலை பயிரிடும் (வளர்ச்சித் திட்டம்) திட்டமும் இறுதி வடிவம் பெறும் நிலையிலுள்ளன. இவ்விரு திட்டங்களும் 1973–74-ல் செயல்படுத்தப்படுமெனத் தெரிகிறது. கன்னியாகுமரி மாவட் டத்தில் கோக்கோ பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தொடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, மதுரை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு மாவட்டங்களில் தென்னை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில், மதுரை மாவட்டத்தில் ரூ. 145 லட்சம் செலவில் 5,000 எக்கர் பரப்பில் தென்னை வளர்க்கும் திட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 300 லட்சம் செலவில் 7,500 எக்கர் பரப்பில் தென்னை வளர்க்கும் திட்டத்திற்கும் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

4. எனவே, ரூ. 1,666·88 லட்சம் செலவாகும் திட்டங்கள் குறித்த செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ரூ. 837·50 லட்சம் செலவாகக் கூடிய திட்டங்கள் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடம் முடிவுரு நிலையில் உள்ளன. இத் திட்டங்களைச் செயல்படுத்து வதனால் தமிழ்நாட்டில் வேளாண்மைத் தொழில் கணிசமான அளவுக்கு வளர்ச்சியடையும்.

கால்நடை வளர்ப்புப் பிரிவில், திருநெல்வேலி, சேலம், மதுரை, வடஆர்க்காடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர், செங்கற்பட்டு, தருமபுரி மாவட்டங்களில் ரூ. 83·29 லட்சம் செலவில் செம்மறியாடு வளர்ப்புத் திட்டங்கள் 39 வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் கடன் உதவி யுடன் வகுக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளன.

இதுபோல், இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகரில் மொத்தம் ரூ. 13·035 லட்சம் செலவில் கோழி வளர்ப்புத் திட்டம் வகுக்கப்பட்டு வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஒப்பளிப்புக்காக அனுப்பப் பட்டுள்ளது.

இதுபோலவே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டத் தில் ரூ. 14·40 லட்சம் மதிப்பீட்டுச் செலவிலும், உதகமண்டலம் பகுதியில் (நீலகிரி மாவட்டம்) ரூ. 18·45 லட்சம் மதிப்பீட்டுச் செலவிலும், கோயம் புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் கிணத்துக்கடவு கிராமத்தில் ரூ. 11·25 லட்சம் செலவிலும், கலப்புப் பண்ணைப் பிரிவுகளை ஏற்படுத்து வதற்கான திட்டங்களும் கோயம்புத்தூர் மாவட்டம் தீதிபாளையம் கிராமத்தில் ரூ. 18·00 லட்சம் செலவிலும் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு பகுதியில் ரூ. 18·00 லட்சம் செலவிலும் கோழி வளர்க்கும் பிரிவுகளை ஏற்படுத்துவதற் கான திட்டங்களும் உள்ளன. இத்திட்டங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. முடிவு எடுக்கப்பட்டவுடன், இத் திட்டங்கள் தேவைப்படும் நிதியுதவிக்காக, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

சிறு உழவர்கள், குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்குரிய திட்டம்,

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழி லாளர்களின் பயனுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நெருக்கமான பகுதிகளில் கொண்டு வரப்பட்டிருக்கிற சிறப்புத் திட்டங்களுக்கு இந்திய அரசு நிதியுதவி அளித்துள்ளது. இத் திட்டங்கள் நான்காம், ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசுத் திட்டங்களாக இருக்கும். அதன்படி, சிறு உழவர்களுக் கான இத்திட்டதை, ஒவ்வொரு மாவட்டத்திலும் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் (மாவட்ட ஆட்சித் தலைவர் இதன் தலைவராவார்) மேற்பார்வையின்கீழ்ச் செயல்படுத்த தென் ஆற்காடு மாவட்டத்தில் 12 வளர்ச்சி வட்டாரங்களும், மதுரை மாவட்டத்தில் 18 வளர்ச்சி வட்டாரங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 11 வளர்ச்சி வட்டாரங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சிறு உழவர்கள் மேம்பாட்டு முகவர் அமைப்பு மாவட்டங் கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1·6 கோடி இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத் திட்டத்தின்கீழ் 50,000 உழவர்கள் பயன் பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த பயிரிடு முறைகளை மேற்கொள்ளவும், கிணறு வெட்டுதல், ஏற்கனவேயுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், கிணறுகளுக்கு மின்சக்தி அளித்தல் மூலமாக நிலையான மேம்பாடுகளை மேற்கொள்ளவும் பாற்பண்ணை வளர்ச்சி, கோழி இன வளர்ச்சி முதலிய துணைப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் உழவர்களுக்கு இயலும் வகையில் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்கனவே மேற்கொண் டுள்ள இருப்பு, விற்பனை, முறைப்படுத்து வசதிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 28

சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரு வளர்ச்சி வட்டாரங்களில், இது காரியத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஓர் நிறுவனத்தின் மேற்பார்வையின்கீழ், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான்காம், ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ஒவ்வொரு திட்டத்திற்கும் இந்திய அரசு ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது. குறைந்த நிலமுள்ள உழவர்கள், மிகக் குறைந்த அளவுள்ள நிலமுடைய உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றுசேர்த்து சுமார் 20,000 குடும்பத்தினரை இத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதே இதன் நோக்கமாகும். மிகக் குறைந்த அளவுள்ள நிலம் உடையவர்கள். தங்களிடமுள்ள குறைந்த நிலங்களில், தோட்டங்கள் வளர்த்தல், கால்நடை வளர்ப்பு, கோழி இன வளர்ப்பு முதலியவற்றை மேற்கொள்வதன் மூலம் பெருமளவிற்கு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்வதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கடன் வசதிகள், மேம்பாடடைந்த பயிரிடு பொருட்கள், நவீன நடைமுறைகளுக்கு வழி வகுப்பதன் மூலம் பெருமளவுக்கு வருவாயைப் பெருக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமச் சிறப்புப் பணிகள் மூலம் பெருமளவிற்கு எற்படுத்தப்படும் வேலைவாய்ப்புகளைக் கொண்டு, குறைந்த நிலமுள்ள உழவர்களுக்கும், சிறப்பாக நிலமற்ற பண்ணைத் தொழிலாளர்களுக்கும் உதவி செய்யப்படும். இப் பகுதிகளில் பெருமளவிற்கு வேளாண்மை செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதில் அவர்களுக்கு இவை உதவி புரியலாம்.

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்கான இந்தச் சிறப்புத் திட்டங்கள் 1970–71 பிற்பகுதியில் தொடங்கப்பட்டுள்ளன. 1972–73-ம் ஆண்டில், வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், உழவர்களுக்கு சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம் குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் இதுவரை ரூ. 231·98 லட்சம் கடனுதவி கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 1973–74-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1972–73 ஆம் ஆண்டில் மாவட்டங்கள் அனைத்திற்கும் மொத்தம் ரூ. 48·83 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் 1,00,510 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்கள்.

மத்திய அரசின் உதவி பெறும் திட்டமாகிய ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் இரண்டு வட்டங்களில், அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டத்திலும் செயலில் உள்ளது. கோவில்பட்டித் திட்டம் 1970 செப்டம்பர் திங்களிலிருந்தும் புதுக்கோட்டைத் திட்டம் 1971 செப்டம்பர் திங்களிலிருந்தும் செயலில் உள்ளன. கோவில்பட்டித் திட்டம் கரிசல் மண் நிலவளம் பெற்றது. புதுக்கோட்டைத் திட்டம் செம்மண் நிலவளம் பெற்றது.

மேம்படுத்தப்பட்ட புன்செய்ச் சாகுபடி முறைகளைக் கையாளுவதிலும் போதிய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்து கொடுப்பதிலும் புன்செய்ச் சாகுபடியாளர்களுக்கு உதவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973 மார்ச் 28]

கோவில்பட்டித் திட்டம் 10 கிராமங்களிலும் புதுக்கோட்டைத் திட்டம் 8 கிராமங்களிலும் செயல்படுகின்றன. இந்த திட்டத்தின்கீழ், உழவர்களுக்கு இலவசமாக பயிரிடு பொருள்கள் வழங்கப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்பு, நில மேம்பாடு, பாசனத்திற்கான ஊற்றுநீரைப் பெருக்க நீரைச் சேமித்து வைத்தல், சிறுபாசனம் போன்ற நீலையான பணிகள், கடன் உதவித் தொகை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. குடியான வர்களுக்கும் உழவர்களுக்கும் புன்செய் நிலச் சாகுபடியில் புதிய தொழில் முறைகள் செய்முறையில் விளக்கப்படுகின்றன. பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. கலப்புப் பண்ணை முறையைக் கொண்டுவர, கால்நடை வளர்ப்பிற்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

எரிகளை தூர் எடுத்துப் புதுப்பித்தல், பாசன வாய்க்கால்களை துப்புரவு செய்தல், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தல் ஆகிய பணிகளினால் பாசனவசதி சீரடைவதுடன் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

இத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் கலப்புப் பண்ணையினால், உழவரது குடும்பத்திற்கு உணவு, அவர்களது கால் நடைகளுக்குத் தீவனம், ஆகியவை கிடைப்பதுடன், அவரது எனைய செலவுகளுக்கு வேண்டிய பணமும் கிடைக்கிறது. மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகளைக் கையாளுவதனால், விளைச்சலும் அதிகமாகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 2,000 எக்கர் நிலம் இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படவிருக்கிறது. 1973–74 ஆம் ஆண்டில் கோவில்பட்டியில் 3,000 எக்கரும் புதுக்கோட்டையில் 6,000 எக்கரும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும்.

கோவில்பட்டித் திட்டத்தில், 1971–72 வரை 4,138 எக்கருக்குப் பயிரிடு பொருட்கள் வழங்கப்பட்டன. 1972–73-ல் கூடுதலாக 4,000 எக்கருக்கு பயிரிடு பொருட்கள் வழங்கப்பட்டன. 1973–74-ல் கூடுதலாக 2,000 எக்கர் நிலத்திற்குப் பயிரிடு பொருட்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

புதுக்கோட்டைத் திட்டத்தில், 1971–72 ஆம் ஆண்டில் 442 எக்கருக்குப் பயிரிடு பொருட்கள் வழங்கப்பட்டன. 1972–73ஆம் ஆண்டுக்கான இலக்கு 2,000 எக்கராக இருக்கையில், 1972 நவம்பர் திங்கள் வரையில் 300 எக்கருக்குப் பயிரிடு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. 1973–74 ஆம் ஆண்டில் கூடுதலாக 2,000 எக்கருக்குப் பயிரிடு பொருட்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு

இந்திய வேளாண்மை ஆராய்சிக் குழு ரூ. 6,76,846 செலவில், 1970–71 முதல் 1973–74 வரையிலான நான்கு ஆண்டுக் காலத்திற்கு கோவில்பட்டியில் புன்செய்ச் சாகுபடிக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளித்துள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழு முழு உதவி அளிக்கிறது.

இத்திட்டத்திற்கு 1971 மார்ச் இறுதியில் ஒப்பளிக்கப்பட்டது. 19-4-1971-லிருந்து இத்திட்டம் செயல்படத் தொடங்கியது. மண்ணின் நீர் ஈர்த்துச் சேமித்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெருக்கவும், பயிர் உற்பத்திக்கான ஈரத் தன்மையைச் சேமித்து வைக்கும் திறனை அதிகரிக்கவும் இவ்வகையில் தொழில் நுட்பமுறையை மேம்படுத்துவதும் புன்செய்ச் சாகுபடியில் உரங்களைத் திறம்படப் பயன்படுத்தும் முறைகளை வகுப்பதும் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

காவிரி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

காவிரிப் பாசனப் பகுதியில் அங்காடி இணைப்புச் சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மத்திய அரசுத்துறைத் திட்டத்தின்கீழ் ரூ. 150 லட்சம் செலவில் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, குத்தாலம் (தஞ்சாவூர் மாவட்டம்), மணச்சநல்லூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), காட்டுமன்னார் கோவில் (தென் ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் ஆறு அங்காடித் தொகுதிகளை அமைக்கவும், இந்த அங்காடித் தொகுதிகளை இணைக்கும் இணைப்புச் சாலைகளை மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. 1973 ஜனவரி இறுதி வரையில் ரூ. 91·53 லட்சம் செலவாகியுள்ளது. 45 சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அங்காடிக் கூட்டுத் தொகுதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் திட்டம்

டிராக்டர்கள் வழங்கல்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்து திட்டத்தின் மூலம், 5,000,000 டாலர் மதிப்புள்ள (இந்திய மதிப்பு ரூ. 3,75,00,000) 1,500 டிராக்டர்களையும் உதிரி பாகங்களையும் இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, டிராக்டர்கள் வாங்குவதற்காகக் கடன் கோரி உழவர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து கடன் வழங்கப்படுவதற்கான இறுதிப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து மாநில வேளாண்மைத் துறைக்கு அனுப்பியது. நிலவள வங்கி, உழவர்களிடமிருந்து இக்கடனை வசூலித்துக் கொள்ளும். உலக முழுவதிலுமிருக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று டிராக்டர்கள் வாங்கப்படும். இந்த டிராக்டர்கள் நிலவள வங்கிகள் மூலமாக பயனாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை டிராக்டர்களை வழங்கிய நிறுவனங்களுக்குத் தொகை செலுத்திவிடும். 750 டிராக்டர்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டு இந்திய அரசின் ஏற்புக்காக அனுப்பப்பட்டுள்ளன.

துளைக்கிணறுகள் தோண்டும் இயந்திரமும் மண்வாரி இயந்திரமும் வாங்குதல்.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, 27,00,000 டாலர்கள் (இந்திய மதிப்பு ரூ. 202.50 லட்சம்) மதிப்புள்ள துளைக்கிணறுகள் தோண்டும் இயந்திரங்களும், மண்வாரி இயந்திரங்களும் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் குறித்த ஆவணங்கள் இந்திய அரசின் ஏற்பளிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளன. இது ஏற்பளிக்கப்பட்ட பின்னர், இந்த இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முக்கிய பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

வேளாண்மைப் பொறியியல்.

வேளாண்மைத்துறையின் வேளாண்மைப் பொறியியல் பணிகளில் மேற்கண்ட பெரும் பணிகள் அடங்கும் :—

(1) மண்வள - நீர் பாதுகாப்பு.

(2) வேளாண்மைப் பொறியியல் பணிக்களரிகள் உப்பட சிறு பாசனம், நிலமேம்பாடு.

(3) ஆராய்ச்சியும் பயிற்சியும்.

பொறியியல் திட்டங்களின் மொத்த மூலதனம் ரூ. 6·43 கோடியாகும். இத் திட்டங்களில் 148 பரம்புப் பொறிகள் (Bull-dozer), சங்கிலிச் சக்கரவகை டிராக்டர்கள் (Wheel-type Tractors) 160, விசைத்துளைக் கருவிகள் 122, கையால் இயக்கப்படும் துளைக் கருவிகள் (Hand-boring Sets) 386, கல் உடைப்புப் பிரிவுகள் (Rock-blasting Units) 125, காற்று அழுத்தக் கருவிகள் 8, ஆகியவை உள்ளன. இப்பிரிவின் நிர்வாகத்தின் கீழ், மதுரை, வேலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், கோவை மற்றும் சென்னை ஆகிய இடங்களிலுள்ள ஆறு வேளாண்மைப் பொறியியல் பணிமனைகளும், கோவையில் ஒரு மண்டல ஆராய்ச்சி நிலையமும் உள்ளன. மேலும் ஒரு பணிக்களரி திருநெல்வேலியில் அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர், கோயம்பத்தூர் ஆகிய இடங்களில், பழுதுபார்க்கும் இயல் ஊர்திகள் இரண்டு செயல் படுகின்றன. இவற்றைத்தவிர, வேளாண்மை இயந்திரங்களை நிறுத்தி வைப்பதற்கும் அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கொட்டகைகள் உள்ளன. வேளாண்மைத் துறையின் கூட்டு இயக்குநர் (பொறியியல்) இந்தப் பொறியியல் கருவிகள் அனைத்திற்கும் பொறுப்பு வகித்தார். அவருக்கு உதவி புரிய, தலைமை இடங்களிலும், மாவட்டங்களிலும் தேவையான துணைப் பணியாளர்கள் இருந்தனர். இவ்வளவு அதிகமான கருவிகளையும் ஒருவரே நிர்வகிப்பது மிகவும் கடினமாக இருந்

ததால், வேளாண்மைத்துறை இயக்குநர், வேளாண்மைத்துறை கூட்டு இயக்குநர் (பொறியியல்) பதவியை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியாளர்) பதவியாகத் தரம் உயர்த்துவதன் மூலம் தலைமையிடங்களில் உள்ள பிரிவில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தத் திட்டமிட்டுள்ளார். இதற்கு அரசு இசைவு தெரிவித்துள்ளது. தலைமையிடத்தில் உள்ள மூன்று வேளாண்மைக் கோட்டப் பொறியாளர்கள் அதே சம்பள வீதத்தில் துணைத் தலைமைப் பொறியாளர்கள் எனப் பதவி மாற்றப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்களைக் கவனித்துக் கொள்வதற்காக தலைமையிடத்தில் மற்றுமோர் துணைத் தலைமைப் பொறியாளரும் உள்ளார். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேலும் ஒரு கோட்டமும் இரண்டு துணைக் கோட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பொறியியல் பிரிவு முழுவதும் தலைமைப் பொறியாளர் நிர்வாகத்தில் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலான நிர்வாகப் பொறுப்பு வேளாண்மைத் துறை இயக்குநரைச் சார்ந்ததாகும்.

நிலமேம்பாடு

டிராக்டர் பணிக்களரிகள் திறத்தல் உட்பட டிராக்டர்கள் வாடகைக்குவிடும் திட்டம்.—வேளாண்மைத் துறையின் பணிகளின் முக்கியக்கூறு டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டமாகும். இதுவரை பயிரிடப்படாத நிலங்களையும், தரிசு நிலங்களையும் பயன்படுத்துவதற்காகவும், ஏற்கெனவே உள்ள நிலங்களின் விளைச்சலைப் பெருக்க அவற்றை உழுவதற்காகவும் உழவர்களுக்கு வேளாண்மை இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதே டிராக்டர் வாடகைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யும் முறையை மேம்படுத்துவதில் இத்துறை கணிசமான அளவுக்கு உதவியுள்ளது. சொந்தமாக டிராக்டர் வாங்குவது எல்லா உழவர்களுக்கும் இயலாத ஒன்றாகும். தங்களது சாகுபடியையும், தங்களது தரத்தையும் மேம்படுத்திக் கொள்வதில் தங்களுக்கு என்று சொந்தமாக டிராக்டர்கள் வைத்திராத உழவர்களுக்கு உதவி செய்வதற்காக, இத்துறை அவர்களுகுச் சாதனங்களையும் சங்கிலிச் சக்கர டிராக்டர்களையும் வாடகைக்கு விடுகிறது. உழவர்களுக்கு டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது.

வேளாண்மையில் இயந்திர முறைகளைப் பயன்படுத்தி அதனால் கிடைக்கும் நன்மைகளை அடையச் செய்வதற்காக 21—9—71 முதல் டிராக்டாகளுக்கான வாடகை வீதங்கள் பெரிதும் குறைக்கப்பட்டிருந்தன. 22—9—71 அன்றிலிருந்து இந்த வாடகை வீதங்கள் கட்டுபடியாகக்கூடிய வீதங்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

பயிரிடு பருவங்களல்லாத வேளை பருவங்களில், உழவு கருவிகளுக்கு அதிகத் தேவையில்லாதபோது, உழவு வேலைகளுக்கு பாதகமில்லாமல் பயிர்த் தொழிலைச் சாராத காரியங்களுக்கும் டிராக்டர்களும் சங்கிலிச் சக்கர டிராக்டர்களும் வாடகைக்கு விடப்படுகின்றன. சாதாரண வாடகைக்கு மேல் கூடுதலாக ரூ. 5 விதித்து இவ்வாறு வாடகைக்கு விடப்படுகின்றன. அரசுத் துறையில், உள்ளாட்சி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் டிராக்டர்கள் பயிர்த் தொழிலைச் சாராக் காரியங்களுக்காக பயன்படுத்தப்பட்ட போதிலும் உழவுக் காரியங்களுக்கு வசூலிக்கப்படும் அதே வீதங்களே வசூலிக்கப்படுகின்றன.

1971–72 ஆம் ஆண்டில், 10,615 ஏக்கர் நிலத்தை சமப்படுத்தவும் 50,900 ஏக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டது. ஆனால், உண்மையில், 14,859 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமே சமப்படுத்தப்பட்டது. 48,955 ஏக்கர் நிலத்தில் இயந்திர முறை சாகுபடியும் செய்யப்பட்டது. அதாவது உணவு உற்பத்திக் கணக்கில் பார்த்தால் 8,607 டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டது. 1972–73 ஆம் ஆண்டில் 11,573 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும் 53,590 ஏக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் கருதப்பட்டுள்ளது. 1972–73-ல் 8,243 டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1973–74 ஆம் ஆண்டில் 12,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், 54,000 ஏக்கர் நிலத்தில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூடுதலாக 8,400 டன் உணவு தானிய உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 13,500 ஏக்கர் நிலத்தில் மணல் மேடிட்டுவிட்டது. தேவையான சிறப்புப் பணியாளர்களுடன் சுமார் 100 பரம்புப் பொறிகள் இந்த நிலங்களைப் பண்படுத்தி வருகின்றன. இச்செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

வெள்ளத்தால் மணல் மேடிட்ட நிலங்களின் பரப்பும் 10—3—1973 வரை மீட்புப் பணிகள் செய்யப்பட்ட நிலங்களின் விவரங்களும் இங்கே குறிக்கப்பட்டுள்ளன :—

மாவட்டத்தின் பெயர்.	பாதிக்கப்பட்ட பரப்பு. (ஏக்கர்.)	மீட்கப்பட்டுள்ள பரப்பு. (ஏக்கர்.)
தென்னற்காடு	10,000	2,700
கோவை	1,800	300
சேலம் மற்றும் தர்மபுரி	1,200	550
திருச்சிராப்பள்ளி	500	150
மொத்தம் ..	13,500	3,700

மேலும், மேற்கண்ட ஆறு மாவட்டங்களில் 2,100 எக்கராபரப்பளவில் மண் அரிப்பும் ஏற்பட்டிருக்கின்றது. இவைகளையும் மீட்பதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

		எக்கர்.
1.	தென்னற்காடு	910
2.	சேலம்	450
3.	தர்மபுரி	100
4.	கோவை	550
5.	திருச்சிராப்பள்ளி	15
6.	தஞ்சாவூர்	75

தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம்.

இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களை உழவர்களுக்கு வழங்கும் ஒரே முகவமைப்பாகிய தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இது வரையில் 2,145 டிராக்டர்களை விற்றுள்ளது. மற்றும் அண்மைக் காலமாக விசைக் கலப்பைகளையும், வழங்கத் தொடங்கியுள்ளது. 1970-71-ல் 760 டிராக்டர்களை விற்ற இக்கழகம் 1971-72 ஆம் ஆண்டில் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட 775 டிராக்டர்களை வழங்கியுள்ளது. இதனால் ரூ. 8·31 லட்சம் ஆதாயம் கிட்டியது.

2. 1971-72 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, தேனி, பரமக்குடி ஆகிய இடங்களில் நான்கு டிராக்டர் வாடகை—பழுது பார்க்கும் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கோயம்புத்தூரில் மேலும் ஒரு முக்கிய நிலையமும், 12 துணை நிலையங்களும் இக் கழகத்தினால் அமைக்கப் படும். வேளாண்மைக் கருவிகளை தயாரிப்பதற்காக இக்கழகம் திண்டி தொழிற்பேட்டைக்கு அருகில் ரூ. 5·82 லட்சம் செலவில் நவீன பணிக் களரி ஒன்றை அமைத்து வருகிறது. இப் பிரிவு 1973-74-ல் பணிபுரியத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் புரியும் மற்றொரு முக்கியப் பணி, வேலை வாய்ப்பற்ற தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் உதவுவதேயாகும். இந்திய அரசுத் திட்டத் தின்கீழ், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம், தொழில் நுட்பத் தகுதி பெற்று வேலையற்றிருப்போர், தாமாகவே டிராக்டர் வாடகைக்குவிட, மருந்து தெளிக்கும் பணியை ஒப்பந்தத்திற்கு எடுக்க, பயிரிடுபொருள்களைப் பிரித்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய இயலும் வகையில் அவர் களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட உதவி களைச் செய்ய இந்திய அரசு உறுதி அளித்துள்ளது: —

(a) இயந்திரங்கள் வாங்குவதற்கான மூலதனச் செலவிற்காக ரூ. 3·45 லட்சம் வழங்கல்.

(b) மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் நான்கு மாதத்திற்கு உதவித் தொகை வழங்கல்.

(c) தொழில் முனைவர் வங்கியிலிருந்து பெற்ற கடன்மீது செலுத்தும் வட்டியை விட 5 சதவீதம் அதிகமாக கொடுத்தல்.

இக்கழகம் இவ்வாண்டில் மேற்கொண்ட மற்றுமோர் முக்கியப் பணி, பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிப்பேயாகும். விற்பனை செய்யப் படும் பூச்சி கொல்லிகளின் தரம் அவற்றின் விலை ஆகியவற்றை முறைப் படுத்துவதற்காக எண்ட்ரின் 20 சதவீதம் E.C. B.H.C. 10 சதவீதம் தூள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட சில இரசாயனப் பொருட்களை இக் கழகம் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இது வரையில் ரூ. 31 லட்சம் மதிப்புள்ள எண்ட்ரின் 20 சதவீதம் B.C. மருந்தும் சுமார் ரூபாய் 4 லட்சம் மதிப்புள்ள 1,109 மி. டன். B.H.C. 10 சதவீதம் தூள் மருந்தும் தயாரித்துள்ளது.

கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றி தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் மும்முரமாகப் பரிசீலித்து வருகிறது:—

(1) மக்காச் சோளத்தைச் செய் முறைப்படுத்தும் கூட்டு ஆலைகள் அமைத்தல்.

(2) ஆப்பிள், திராட்சை, அன்னாசி போன்ற பழங்களை சேமித்து வைப்பதற்காக சென்னை மாநகரில் குளிர் பதனப் பொறிகள் அமைத்தல்.

மீனளத்தைப் பொறுத்தவரையில் நைலான் மீன் வலை தயாரித்தல், உறையவைக்கப் பொருட்கள் சேமிப்பு ஆகியவற்றிற்கான திட்டங்களை இக் கழகம் முடிவு செய்து வருகிறது. ஒன்று அல்லது இரண்டு பாகங் களை இறக்குமதி செய்வதன் மூலம் இவ்விரு திட்டங்களும் விரைவிலேயே செயல்படத் தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

1970-71-ஆம் ஆண்டில் தமிழ் நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு ரூ. 1·93 லட்சமே நிகர ஆதாயம் கிடைத்திருக்க 1971-72-ல் ரூ. 3·93 லட்சம் நிகர ஆதாயம் கிட்டியது.

சிறுபாசனம்

தனியார் குழாய்க் கிணறுத் திட்டங்கள்

ஊற்று நீரைப் பாசனங்களுக்காகப் பயன்படுத்த, இத்துறை விசைத் துளைக்கருவிகள், கையினால் இயக்கப்படும் துளைக்கருவிகள் ஆகியவற்றின் உதவியைக் கொண்டு உழவர்களின் நிலங்களில் குழாய்க்கிணறுகள் (துளைக் கிணறுகள்) தோண்டுகிறது. வேளாண்மை வளர்ச்சி அடைந்து வருவதாலும் ஊற்று நீர்மட்டம் குறைந்து கொண்டே வருவதாலும், துளைக் கிணறுகள் தோண்ட வேண்டிய அவசியம் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஆரம்பத்தில், துளையிடும் கருவிகள் வாடகைக்கு விடப்பட்டு வந்தன. அவ்வாறு தோண்டுகையில் தண்ணீர் இருப்பது தெரிய வந்தால், (1) துளையிடும் கருவிகளுக்கான வாடகைச் செலவு உட்பட கிணறு தோண்டு

வதற்கான செலவு, (2) வரிசை யேற்றங்கள், அதன் துணைப் பொருள்கள் (3) விசையேற்றக் கொட்டகைகளைக் கட்டுதல் ஆகியவற்றிற்காக சம்பந்தப் பட்ட உழவர்களுக்கு பேரளவு ரூ. 750 வரையில் கடன் வழங்கப்படுகிறது.

உழவர்களுக்குக் கடன் வழங்குவதை அரசு 1—4—1969 முதல் நிறுத்தி விட்டது. இப்பொழுது, நிலவள/வணிக வங்கி இவ்வுதவி அளிக் கிறது. எனினும், 16—10—1971 வரையில், அரசு, ரூ. 500 என்னும் பேரளவுக்கு உட்பட்டு, கடன் தொகையில் 10 சதவீதத் தொகையை உதவித் தொகையாக அளித்தது. இப்பொழுது, சிறு உழவர்களுக்கு அல்லது சிறு உழவர்களடங்கிய ஒரு தொகுதியினருக்கு மட்டும் இவ் வுதவித் தொகை வழங்கப்படுகிறது.

கிணறுகளில் தூர்வியெடுதல்.

சில மாவட்டங்களில், நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கொண்டே வருவதால், கிணறுகளில் நீர் ஊற்று மிகவும் குறைவாக இருக்கிறது. சில சமயங்களில் கிணறுகள் வற்றிக்கூடப் போகின்றன. இத்திட்டத்தின் கீழ் நீர் ஊற்றைப் பெருக்குவதற்காக கிணற்றுக்குள் தூர்வியெடுத் திட்டமிட பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான கடனையும் நிலவள/வணிக வங்கிகளே அளிக்கின்றன. எனினும், 16—10—1971 வரையில் ரூ. 500 என்னும் பேரளவுக்கு உட்பட்டு, கடன் தொகையில் 10 சதவீத உதவித் தொகை வழங்கப்பட்டது. அதன் பின்னர், சிறு உழவர் களுக்கு அல்லது சிறு உழவர்கள் அடங்கிய தொகுதியினருக்கு இவ் வுதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்.

பாறைப் பகுதிகளில் உள்ள பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக காகப் பாறை வெடி வைத்துத் தகர்க்கப்படுகிறது. கிணறுகளைத் தூர் யிருவதற்குப் பதிலாக, 20 அடி முதல் 40 அடி வரை கனமுள்ள பாறைகள் வெடி வைத்துத் தகர்க்கப்படுகின்றன. இவ்வாறு வெடி வைத்துத் தகர்க்கப்படுவதால் புதிய ஊற்றுக் கண்கள் திறந்து கிணறுகளுக்கு அதிகப்படியான நீர் கிடைக்கின்றது. இது காரியத் திற்காக, வெடி வைத்துக் கல்லைத் தகர்க்கும் பிரிவுகள் குறைந்த வீதத்தில் உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. தற்பொழுது நிலவள/வணிக வங்கிகள் இக்கடன் உதவியை அளிக்கின்றன. முன் பெல்லாம் கடன் பெற்றவர்கள் அனைவருக்கும், ஒவ்வொரு நேர்விலும் ரூ. 200 என்னும் பேரளவுக்கு உட்பட்டு கடனில் 10 சதவீதத் தொகை உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. இப்பொழுது இந்தச் சலுகை நிறுத்தப்பட்டு விட்டது. இத் திட்டம் 1964–65 முதல் செயலில் இருந்து வருகிறது.

உழவர்களுக்கு வெடி மருந்து கிடைப்பது கடினமாக இருந்தது. எனவே தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங் களில் வெடி மருந்துச் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன,

இத்துறை வெடி மருந்துகளை வாங்கி, சேமித்து வைத்து உழவர்களுக்கு வழங்குகிறது. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம், வட ஆற்காடு மாவட்டங்களில் இது போன்ற வெடி மருந்து சேமிப்பு கிடங்குகள் கட்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம்

குறைந்த ஆழத்திலேயே நீர்க்கசிவு கொண்ட மணல் இருப்பதனால் பாசனக் கிணறுகள் அமைப்பது கடினமாக உள்ள பகுதிகளில் வடி முனைக் குழாய்க் கிணறுகள் தோண்டப் படுகின்றன. வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு மிகக் குறைந்த செலவே ஆகிறது; கட்டுவதும் எளிது, மேலும், இக்கிணற்றிலிருந்து பாசனத்திற்கு ஏராளமாகத் தண்ணீர் கிடைக்கிறது. இத்திட்டத்திற்கும் கடன் வழங்கு வதை அரசு நிறுத்தி விட்டது. நிலவள/வணிக வங்கிகள் கடன் உதவி செய்கின்றன. 16—10—1971 வரையில் தோண்டி முடிக்கப்பட்ட கிணறுகளுக்கு ரூ. 150 என்னும் பேரளவுக்கு உட்பட்டு கடன் தொகையில் 10 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. அதன்பின்னர், சிறு உழவர்களுக்கும் சிறு உழவர்கள் தொகுதிக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஊருணிக் கிணறுகள் திட்டம்

சிறு உழவர்களுக்கு உதவுவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தில் 50 ஊருணிக் கிணறுகள் தோண்டி பின்னர் பாசனக்காரியங் களுக்காக அவற்றை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங் களுக்கும் மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கிணறுகளில் பொருத்து வதற்கான விசையேற்றங்கள், கடன் அடிப்படையில் வழங்கப்படும். நீரேறறு இயந்திரத்திற்கான செலவில் 75 சதவீதம் கடனுகவும், 25 சத வீதம் உதவித் தொகையாகவும் கருதப்படும். எஞ்சிய தொகையை ஊராட்சிகளும் கூட்டுறவுச் சங்கங்களும், அரசினால் அவ்வப்போது வரை யறுக்கப்படும் வீதத்தில் சென்டேஜ் கட்டணங்கள் வட்டி ஆகியவற்றையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் விசையேற்றங் கள் செயல்படத் தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தவணை செலுத்தப்படவேண்டும். நடைமுறைச் செலவு முழுவதையும் நிறுவ னங்கள் ஏற்க வேண்டும். இந்த நிறுவனங்கள் பயன் துய்ப்போரிடமிருந்து தண்ணீர்த் தீர்வை வசூலிக்கவும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்து வதற்காகத் தொகை வசூலிக்கவும் அனுமதிக்கப்படுகின்றன. இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவோர், இக்கிணற்றுப் பாசனத்தினால் விளைந்த பயிருக்காகத் தண்ணீர்த் தீர்வை செலுத்த வேண்டும். கிராமங்களில் அத் தகைய பாசனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள வீதத்தில் இத்தீர்வை வசூலிக்கப்படும். இது வரையில், இத் திட்டத்தின் கீழ் 20 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இதுகாறும் இத் திட்டத்தை வேளாண்மைத் துறை நிர்வகித்து வந்ததற்குப் பதிலாக, இனிமேல் ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகித்து வரும்.

1971-72 வரையில் எய்திய சாதனை 1972-73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு, சாதனை, 1973-74-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு, எதிர்பார்க்கப்படும் சாதனை ஆகியவை குறித்த விவரங்கள் பின் வருமாறு :—

திட்டத்தின் பெயர்.	சாதனை 1971-72 வரை.	1972-73 குறிக்கோள் அளவு.	1972-73 சாதனை 1972 அக்டோபர் வரை.	1973-74 குறிக்கோள் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(எண்ணிக்கையில்.)		
(1) தனியார் குழாய்க் கிணறுகள் (1958).	15,753	2,531	1,689	2,750
(2) துளைக் கிணறுகள் (1966).	3,922	719	441	900
(3) வடிமுனைக் குழாய்க் கிணறுகள் முதல் திட்டம்.	20,563	2,540	1,321	3,300
(4) கிணறுகளை ஆழப்படுத்துதல் (1965-66).	5,426	1,405	1,040	900
(5) ஊருணிக் கிணறுகள் (1969-70).	20	..	..	10

மண்வளப் பாதுகாப்பு

பொருத்தமான மண் அரிப்புத் தடுப்பு முறைகளை மேற்கொண்டு மண் வளத்தைப் பாதுகாப்பதும், பயிர் வளர்ச்சிக்குத் தேவையான ஈரத் தன்மையைப் போதுமான அளவில் பாதுகாப்பதுதான் இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதிக அளவில் மழை பெய்யும் இடங்களிலும், நீலகிரி போன்ற சரிவு நிலப் பகுதிகளிலும் தக்கவாறு அமைக்கப்பட்ட வெளியேற்றுக் கால்வாய் மூலம் அதிக அளவு நீரை வெளியேற்றுவதும் இம் முறைகளின்மீது அடங்கும். உள்ளூரில் கிடைக்கும் கூலியாட்களை வேலைக்கு வைத்துக்கொண்டு முக்கியமாக விவசாயம் செய்ய இயலாத பருவத்தில் பல்வேறு மண்வளப் பாதுகாப்பு, நீர்ப் பாதுகாப்பு குறித்த பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. விவசாய மல்லாத பருவத்தில் அதிகமாக இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதால், ஏராளமான விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கும் காலத்தில் இத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்க வசதியாய் உள்ளது.

நீரினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கும் முறைகளில் மண் நீர் வளப் பாதுகாப்பு பணியின்கீழ் ஒவ்வொரு சரிவுப் பாத்தியிலும் அல்லது சுற்றிலும் கரை கட்டப்பட்ட பாத்திகளிலும் பரவலாகத் தண்ணீர் தேக்கப்படுகிறது. இவ்வாறு தேக்கப்பட்ட தண்ணீர் மண்ணில் கசிந்து பூமிக்குள் சென்று தங்குகிறது. திட்டப் பகுதியிலும் திட்டப் பகுதியைச் சுற்றிலும் உள்ள கிணறுகளின் நீரின் அளவும் பொதுவாகப் பூமிக்கடியில் உள்ள நீர் மட்டமும் இதன் விளைவாக உயர்கிறது. நீர்ப் பரப்புப் பகுதியில் அல்லது பூமிக்கடியில் உள்ள நீர் பரப்புப் பகுதியில் தண்ணீர் அளவை அதிகரிப்பதன் மூலம் எல்லா வகை நிலங்களுக்கும் ஏற்ற வகையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அதிக அளவு விளைச்சல் தரும் நிலப் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன; தஞ்சாவூர் மாவட்டத்தின் காவிரி கயவாய்ப் பகுதியிலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இங்கு நிலத்தைச் சமன் படுத்துதல், பாசனத்தை முறைப் படுத்துதல், வடிகால்கள், வயல் வரப்புகளைப் புதுப்பித்தல் அல்லது பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது வட ஆர்க்காடு மாவட்டத்தில் சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டத்தின் அதிக விளைச்சல் தரும் பகுதிகளிலும் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மண்வளப் பாதுகாப்புப் பணிகளின்கீழ் இதுவரை சமவெளி, மலைப் பகுதி உள்ளிட்ட 14 லட்சம் எக்கரில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1973-74-ம் ஆண்டு 1·20 லட்சம் எக்கரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது

மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்குச் சமவெளியில் எக்கர் ஒன்றுக்குச் சராசரி ரூ. 60 முதல் 65 வரை செலவாகிறது; மலைப் பகுதிகளில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 650 முதல் ரூ. 750 வரை செலவாகிறது. இத் திட்டத்திற் காகும் மொத்தச் செலவில் சமவெளிப் பகுதியில் 25 சத வீதமும் மலைப் பகுதியில் 40 சத வீதமும் உதவித் தொகையாக அனுமதித்; பிறகு மீதி செலவுத் தொகை இப் பணிகள் முடிவுற்ற இரண்டாண்டு களுக்குப் பிறகு 10 ஆண்டு சம தவணைகளில் விவசாயிகளிட மிருந்து வசூலிக்கப்படுகிறது. செலவுத் தொகை வசூலித்ததிலிருந்து தளர்த்தப்பட்ட முதல் இரண்டாண்டுகளுக்கு எவ்வித வட்டியும் வசூலிக்கப் படுவதில்லை. விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் திட்டச் செலவில் பணியாளர்களுக்காக ஏற்பட்ட செலவில் குறிப்பிட்ட ஒரு சத வீதத் தொகையும் நிர்வாகச் செலவுகளும் அடங்கும். விவசாயிகளின் இடர் களைக் குறைப்பதைக் கருத்திற்கொண்டு மேற்சொன்ன கட்டணங்களை வசூலிக்காமல் விட்டு விடுவது குறித்து அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

மண்வளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டதால், சமவெளிப் பகுதிகளில் எக்கர் ஒன்றுக்குக் கூடுதலாக ½ டன் அரிசி உற்பத்தி கிடைக்கும் என்றும் மலைப் பகுதிகளில் உருளைக்கிழங்கு விளைச்சலில் கூடுதலா 27 சத வீதம் உற்பத்தி கிடைக்கும் என்றும், மதிப்பிடப்பட்டுள்ளது விவசாயிக்குக் கிடைத்த இத்தகைய அதிக அளவு நிகர வருமானத்தில் பணிகளுக்கான செலவின் ஆண்டுத் தவணைகளை எவ்விதப் பணத் தொல்லையுமின்றி விவசாயி திருப்பிச் செலுத்த முடியும்; நிகர வருமானத்தில் ஆண்டுத் தவணைத் தொகை போக எஞ்சியுள்ள தொகையைக் கொண்டு விவசாயி தன் பொருளாதார நிலையையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

நீலகிரி மாவட்டத்தில் பீளட் நோயினால் உருளைக்கிழங்கு பயிர் பாதிக்கப் பட்டு மிகவும் இழப்பு ஏற்பட்டதால் அங்குள்ள விவசாயிகள் மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையைத் திருப்பித் தர முடியவில்லையென்று அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. மண்வளப் பாது காப்பு வேலைகள் நீர் மின் திட்டத்திற்கு மறைமுகமாக உதவுவதால் மின் வாரியம் மொத்தச் செலவுத் தொகையில் 50 சதவீதம் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் கருத்துரைக்கப்பட்டது. மின் வாரியம் அச் செலவுத் தொகையை ஏற்க இயலாது எனக் கூறிவிட்டது. விவசாயிகளின் துன்பங்களைக் கருதி நீலகிரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து 30—9—72 வரை திருப்பிப் பெறவேண்டிய தொகையான ரூ. 29·76 லட்சம் முழு வதையும் தள்ளுபடி செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

ஈடு செய் வீதத்தில் மண்ணைப் பண்படுத்தும் பொருள்களை வழங்குவதற்கான திட்டம்.

களிக்கல் (Gypsum), சுண்ணாம்பு போன்ற மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்கள் 50 சதவீத ஈடு செய் விலையில் விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது. மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்களை ஈடுசெய் விலை போக பாதி விலைக்குக் கூட வாங்க முடியாத விவசாயி களுக்குக் கடனுதவி வழங்கப்படுகிறது.

1972–73-ஆம் ஆண்டில் ரூ. 2·60 லட்சம் செலவில் 2,000 மெட்ரிக் டன் களிக்கல், 500 மெட்டிரிக் டன் சுண்ணாம்பு ஆகியவற்றை உற்பத்தி செய்ய வகை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து நல்ல ஆதரவு கிடைத்துள்ளதால் இத்திட்டத்தை 1973–74-ஆம் ஆண்டிலும் 1972–73 ஆம் ஆண்டுக்கான அதே அளவு குறிக்கோளுடன் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

மண் வளத்தைப் பண்படுத்தும் பொருள்களின் கட்புல விளக்கத் திட்டம்.

இம் மாநிலத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மண்ணைப் பண்படுத்தும் பொருள்களை ஈடுசெய் விலையில் விற்பனை செய்யும் திட்டத் திற்கு ஆதரவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் 100 ஏக்கர் நிலத் தில் மண்வளத்தைப் பண்படுத்தும் பொருள்கள் கட்புல விளக்கத் திட்டம் நடத்தப்பட்டது. மண்வளத்தைப் பண்படுத்தும் பொருள்களான சுண்ணாம்பு அல்லது களிக்கல்லை முறையே உவர் அல்லது களர் மண் நிலத்தில் போட்டுப் பயிரிடுவதன் பயனை விளக்குவதுதான இக்கட்புல விளக்கத் திட்டத்தின் நோக்கமாகும். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் உள்ள (PH) மதிப்பு உரிய அளவுக்கு உயர்கிறது; இதன் மூலம் அந்த நிலங்கள் ஆதாயமான பயிர் விளைச்சலைக் கொடுக்கும். இத் திட்டம் 1972–73-ஆம் ஆண்டில் 8 வட்டாரங்களில் 100 ஏக்கர் நிலத்தில் மொத்தம் ரூ. 1·20 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1973–74-ஆம் ஆண்டிலும் இதே குறிக்கோள் அளவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த இரு திட்டங்களும் 1968–69 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர் பயன், நீரைச் சிக்கனமாக பயன் படுத்துதல் ஆகியவை குறித்த ஆராய்ச்சி நிலையம்

தமிழ் நாட்டில் ஆற்றுப் பாசன வளம் முழுவதையும் பயன்படுத்தி விட்டதால், ஊற்று நீரை வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் உரிய அளவுக்குப் பயன்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. எனவே, மொத்தம் ரூ. 9·65 லட்சம் செலவில் இம் மாநிலத் தில் குறிப்பாக காவிரி கயவாய்ப் பகுதியில் நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துதல் குறித்த ஆராய்ச்சியை ஐந்தாண்டுக் கால அளவுக்கு மேற் கொள்ள மண் வள நிர்வாகம் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை, தஞ்சை மாவட்டத்தில் அரசு ஏற்படுத்தியது. இம் மாநிலத்தில் நீர் பயன்படுத்தும் முறை, நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய இந்நிலையம் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளும். விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கும் பயிர் விளைச்சலை அதிக அளவுக்கு உயர்த்தவும், இதன் மூலம் மாநிலத்தின் உணவு உற்பத்தி அதிக அளவு பெருகுவதற்கும, நீரைப் பயன்படுத்துவதில் உதவுவதிலும், இத்தகைய ஆராய்ச்சியின் முடிவு உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. இந்த ஆராய்ச்சி நிலையம் 1972, ஆகஸ்டு முதல் தஞ்சாவூர் மாவட்டம் காட்டுத் தோட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் இப்போது தொடக்க நிலையில் உள்ளது.

வேளாண்மைத் தகவல்—வேளாண்மை குறித்து செய்திப் படங்களைத் தயாரிப்பதற்கான திட்டம்

மிகச் சிறந்த தகவல் தொடர்பு சாதனமாகவுள்ள செய்திப் படங்கள் மூலம் ஏராளமான உழவர் பெருமக்களின் நாட்டத்தை ஈர்க்கமுடியும்; மேலும் இச்செய்திப படங்கள் பொழுதுபோக்கையும் அளிக்கின்றன.

நான்காவது திட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையாக "வேளாண் மைத் தகவல்" இனத்தின்கீழ், ஒதுக்கப்பட்ட ரூ. 20 லட்சம் தொகையில் இத்திட்டத்துக்காக ரூ. 6 லட்சம் தனியாக ஒதுக்கப்பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் 1969–70 முதற்கொண்டு மொத்தம் ரூ. 2·50 லட்சம் செலவில் அரசு இதுவரை ஆறு செய்திப் படங்களைத் தயாரிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றில் பின்வரும் பொருள் குறித்த 3 செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டன; இந்திய அரசு செய்திப் பிரிவின் மூலம் அண்மையில் இப்படங்கள் வெளியிடப்பட்டன :—

(i) அதிக விளைச்சல் தரும் ரகங்கள்.

(ii) உரங்கள்.

(iii) பயிர்ப் பாதுகாப்பு.

பின்வரும் பொருள் குறித்த எஞ்சிய மூன்று செய்திப் படங்களைத் தயாரிக்கும் பணி சென்னை-20, தமிழ்நாடு அரசு செய்திப் பிரிவின் தயாரிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :—

(i) நெல் பயிரிடுதல்.

(ii) பருத்தி பயிரிடுதல்.

(iii) விசைத் தெளிப்பான்களைப் பேணுதல்.

1973–74 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 1·53 லட்சம் செலவில் மேற்கொண்டும் மூன்று செய்திப் படங்களைத் தயாரிப்பு, வெண்மையில் இரண்டும், வண்ணப் படம் ஒன்றும் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1973–74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

1971, ஜூன் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கியது. கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகள், ஐந்து ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றை நடத்தும் பொறுப்பு இப்பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டு கல்லூரிகளிலும் 1,054 பட்ட வகுப்பு மாணவர்களும், 256 பட்ட மேற்படிப்பு வகுப்பு மாணவர்களும் பயிலுகின்றனர். இப்பல்கலைக் கழகத்தின் பயிற்றுத் திட்டம், நமது மாநிலத்திலுள்ள நிலைமைகளுக்கேற்பவும் பாடத்திட்டத்தை இக்காலத்திற்கேற்ப மேலும் புதுமுறைப்படுத்தியும் சீரமைக்கப்பட்டது. உழவர்கள் பயனடையும் வகையில் பயிரிடுவதில் எற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆராய்ச்சிப் பணிகள் மேலும் வதுமாகச் சீரமைக்கப்பட்டன. உழவர்களின் வாலாய மொழியில் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுதல், உழவர்களின் பயனுக்காக அறிவியற் கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துரைத்தல் ஆகிய பணிகளை பல்கலைக் கழகத்தின் கல்வி வளர்ச்சிப் பிரிவு மேற்கொண்டுள்ளது. இப்பணியில் இரண்டு வேளாண்மைக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் இரண்டும், தென்னார்க்காடு, திருச்சி ராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் தேசிய-கட்புல விளக்கப் பிரிவுகள் மூன்றும் கல்வி வளர்ச்சிப் பிரிவுக்கு உதவி புரிகின்றன.

வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் பல்கலைக் கழக எல்லைக்குள்ளேயே வேளாண்மை பொறியியல் கல்லூரி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இந்தாண்டு பி.ஈ. (வேளாண்மை) வகுப்பில் 40 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வேளாண்மை, பொறியியல் ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகள், மண் வளப் பாதுகாப்பு, நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துதல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி, விவசாய இயந்திரங்கள், பண்ணை விளைபொருள்களை முறைப்படுத்துதல், பண்ணை அமைப்புக்கள் ஆகியவை குறித்து அறிவு புகட்ட இப்பாடமுறை வகை செய்கிறது. கல்லூரி ஆசிரியர்கள் இப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்க அளவு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தில் உயிரியல், பௌதிக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், மொழிகள் துறைகளுடன் அடிப்படை அறிவியல்—கலையியல் பட்டத் துறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மையின் அடிப்படைக் கூறுகள் குறித்து ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதில் இத்துறைகள் உதவி புரியும் ; பட்ட வகுப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படைக் கூறுகள் குறித்து இத்துறைகள் பயிற்றுவிக்கும். அறிவியற் புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்தல், வேளாண்மை குறித்த புத்தகங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடுதல் ஆகியவற்றை மொழிகள் துறை கவனித்துக் கொள்கிறது.

1973–74-ஆம் ஆண்டில் வேளாண்மைப் புள்ளி விவரம், வேளாண்மை வானியல் ஆகியவற்றில் சில புதிய பணிகளை ஏற்படுத்துவதன் மூலம் கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகள், கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகள் மேற்கொண்டும் விரிவுபடுத்தபடவுள்ளன. வனஇயல், மீனளம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக இவற்றில் புதிய துறைகள் ஏற்படுத்தப்படவுள்ளன. பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலுள்ள ஐந்து ஆராய்ச்சி நிலையங்களிலும் ஆராய்ச்சிப் பணிகள் மேலும் வலுவாக்கப்படும். பாசனப் பயிர், மானவாரிப பயிர், கால்நடை வளர்ப்பு ஆகியவை குறித்தும், இருஷ்ணகிரி நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதியில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், வடிகால் பிரச்சினைகள் ஆகியவற்றைச் சமாளிப்பதற்காகவும் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள புதிய பலநோக்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த பல்கலைக் கழகம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

1973–74 ஆம் ஆண்டுக்கான மொத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடு ரூ. 211·586 லட்சம் ஆகும். இதில் இந்திய அரசு ஆதாவு தரும் திட்டங்கள் வகையில் சுமார் ரூ. 44 லட்சம் கிடைக்கும். பண்ணைகள் ஆராய்ச்சி நிலையங்கள், கல்லூரிப் பயிற்சிக் கட்டணங்கள் ஆகியவைகளின் மூலம் ரூ. 15 லட்சம் அளவுக்கு வருவாய் கிடைக்கும். தமிழ்நாடு அரசுக்கு ஏற்படும் நிகர செலவு ரூ. 157·923 லட்சம் ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டாம் பகுதி ஆராய்ச்சி திட்டங்களுக்கான செலவு, இந்திய அரசு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், ஆகியவற்றுல் ஒரு பகுதிக்கு நிதிவசதி அளிக்கப்படும் திட்டங்களுக்கான செலவும் அடங்கும். இத்திட்டங்களுக்காக இந்திய அரசும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகமும் மாநில அரசின் மூலம் நிதியுதவி அளிக்கின்றன. 1973–74 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள மூலதனப் பணிகளுக்காக ரூ. 17·432 லட்சம் செலவாகும். புதுரக நிலக்கடலையைக் கண்டுபிடிப்பதற்கான மாற்று இனப் பெருக்கம், சிலவகை நச்சுக் களைகளைக் கட்டுப்படுத்துதல், பயிர், மண் ஆகியவற்றில் தங்கிவருகிற பூச்சிக்கொல்லி மருந்துகள் குறித்து ஆய்வு செய்தல், வாழையில் ஏற்படும் புழுக்களை அழித்தல் குறித்த ஆய்வு ஆகிய பணிகள் பல்கலைக் கழகம் மேற்கொள்ளவிருக்கிற புதிய ஆராய்ச்சித் திட்டத்தில் அடங்கும்.

கோயம்புத்தூர், மதுரையிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களில் கோழி வளர்ப்பு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பு குறித்த ஆராய்ச்சிப் பணிகளுக்கு அதிக அளவில் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. கீழ்க் குறிப்பிட்டுள்ள நெல், சிறுதானிய ரகங்களை பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது :—

கேழ்வரகு—Co. 10.

நெல்—பவானி.

சப்போட்டா—Co. 1.

பருத்தி—MCU. 7.

பாரிமுல்லை.

வேளாண்மை ஆராய்ச்சி

1972, பிப்ரவரித் திங்களில் வேளாண்மைக் கூட்டு இயக்குநர் (ஆராய்ச்சி) தலைமையில் ஆராய்ச்சி ஒருங்கிணைப்புப் பிரிவு ஏற்படுத்தியதன் மூலம் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆராய்ச்சிப் பணியின் முன்னேற்றத்துக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியின் விளைவுகளைச் சிறந்த முறையில் பரிசீலனை செய்ததன் பலனாகவும் தரமான பயிர் வகைகளை நடைமுறையில் பயிரிட்டுப் பார்த்ததன் விளைவாகவும் மேம்படுத்தப்பட்ட ஒன்பது பயிர் ரகங்கள் மாநில வேளாண்மை கழகத்திலுள்ள 1971–72 பயிராண்டில் வெளியிடப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பருவத்தில் பயிரிடத் தகுதியான நெல வகையாக கண்ணகி (Pusa 2–21) கரிகாலன் (Culture 5652) ஆகிய புதிய ரகங்கள் வெளியிடப்பட்டன; தென் மாவட்டங்களின் மானவாரி பருத்தி பயிரிடப்படும் கரிசல் மண் பகுதியில் பயிரிடுவதற்கேற்ற தானிய தீவன வகையாக C.S.H. 5 சோளம் வெளியிடப்பட்டது; தென் மாவட்டங்களில் மானவாரிப் பயிர் விளைச்சலுக்கேற்ற குறுகிய கால ரகமான K. S. பருத்தி தமிழ்நாட்டின் எல்லாப் பருவங்களிலும் விளைவிப்பதற்கேற்ற K-1 சூரியகாந்தி ரகம், மழைக் குறைவாக உள்ள பகுதிகளில் முழு அளவில் ஒரே பயிராகப் பயிரிடுவதற்கும் தென் மாவட்டங்களின் மானவாரிப் பகுதியில் பருத்தியுடன் கலந்து பயிரிடுவதற்கான குறுகிய காலப் பயிரான S. A. 2 ரகம், மாநிலத்தில் இரு பருவக் காற்றுப் பருவங்களிலும் பயிரிடுவதற்கேற்ற 65 முதல் 70 நாள் வரையான மிகக் குறுகிய காலப் பயிராக K. K. R. I. 1 பச்சைப் பயறு ரகம் ஆகியவற்றையும் மாநில வேளாண்மைக் கழகம் வெளியிட்டுள்ளது. நெல், கரும்பு ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு சில ரகங்களும் வெளியிடப்படுவதற்காக தயாராக உள்ளன. புதிய ரகப் பயிர்கள் வெளியிட்டதைத் தவிர மேம்படுத்தப்பட்ட பயிர்முறைகள், பயிர் பாதுகாப்பு குறித்த ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவை 1972–73 பயிர் பருவத்தில் பயிர் வள ஆராய்ச்சிச் சோதனைகளை பரவலாக நடத்துவதற்காக, வளர்ச்சி களப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில்தான் முதன் முறையாக பயிர் வள ஆராய்ச்சி சோதனைகள் பெரிய அளவில் திட்டமிடப்

பட்டு மாவட்டங்கள் அனைத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டன. வெளியிடப்பட்ட புதிய ரகங்கள், விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதற்காக வளர்ச்சிப் பணியாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவை மாநிலத்தில் வேளாண்மை உற்பத்திப் பெருகுவதற்குப் பெரு மளவில் உதவிபுரியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலை வளர்ச்சி அடையும்.

1973–74 ஆம் ஆண்டில் பயிர் மேம்பாட்டுப் பணிகள் இன்னும் விரைவாகத் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வறட்சி தாங்கும் பயிர், குறுகிய காலப்பயிர் ரகங்களைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிப் பணி புன்செய் நிலப்பயிரில் பொருளாதார ஆதாயம் பெற புதிய மண் ஈரப்பாதுகாப்பு முறைகள், உரமிடுதல், தொழில் நுட்பம் ஆகிய பணிகள் கோயில்பட்டி வட்டார—வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் விரைவாக நடந்து வருகிறது; தொடர்பான சோதனை முறைகளும் மேற்கொண்டும் அவசியமான ஆய்வுப் பணிகளும் 1973–74 ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டியிருக்கும்: மதுரை வட்டாரத்தில் மலை வாழை குறித்த ஆராய்ச்சிப் பணி வட ஆர்க்காடு மாவட்டம் பாலாறு ஆற்றுப்படுகையில் குட்டை வாழை பயிரிடுதல் குறித்த ஆராய்ச்சிப் பணி ஆகியவை வரும் ஆண்டில் மும்முரப்படுத்தப்படும்.

இவ்வாண்டில் தருமபுரி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வட்டார நிலையத்தில் முறையான பயிர் மேம்பாட்டுப்பணி மேற்கொள்ளப்படும். வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி வட்டார நிலையத்தை (தஞ்சாவூர் மாவட்டம்) விரிவுபடுத்துவதன் வாயிலாக 1973–74 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிப் பணிகள் மும்முரப்படுத்தப்படும்; மாநிலத்திலுள்ள தென்னை பயிரிடப்படும் எனைய பகுதிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பணி, படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை.

மண்வள நிர்வாகம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்த பயிர்வள ஆராய்ச்சிப் பணியில் இந்நிலையம் முழு தாட்டத்தைச் செலுத்துகிறது. 1972–73 ஆம் ஆண்டில் பின்வரும் பொருள்கள் குறித்து ஆராய்ச்சிப் பணியை இந்நிலையம் மேற்கொண்டது :—

வேளாண்மைப் பொருளாதாரம்; வேளாண்மைப் பொருளாதாரம் (நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்), வேளாண்மை ரசாயனம், மண்வள இயல், பயிர்ப்பாதுகாப்பு, பண்ணை நிர்வாகம், வேளாண்மை குறித்த பொருளாதாரம்.

தேசிய கட்புல விளக்கத் திட்டம்

1972–73, 1973–74 ஆண்டுகளில் முறையே ரூ. 2,44,280 செலவிலும் ரூ. 2,54,650 செலவிலும் கோயம்புத்தூர், வட ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய நான்கு மும்முர வேளாண்மைத்

திட்ட மாவட்டங்களில் சிறப்பு கட்புல விளக்கங்கள் நான்கு உப்பிடு தேசீயக் கட்புல விளக்கத் திட்டங்கள் 100 நடத்த அரசு ஒப் பளிப்பு வழங்கியது. இவை தவிர மும்மூர வேளாண்மைப் பகுதி யில்லாத மாவட்டங்களில் (விவசாயப் பயிற்சி நிலையங்கள் அமைந் துள்ள மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய மாவட்டங்களில்) ரூ. 15,000 செலவில் தேசீயக் கட்புல விளக்கங்கள் 30 நடத்த 1972, 1973-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பயிர் காப்புறுதி.

தமிழ் நாட்டில் சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய சிறு தானி யங்கள், நெல் ஆகியவற்றிற்குப் பயிர் காப்புறுதித் திட்டம் கொண்டு வரும் சாத்தியக் கூறினை ஆராய்ந்து பார்க்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்தது. இதற்கான ரூ. 38,591 செலவுக்கும் அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டம் தொடங்கிய நாள் முதலாக ஈராண்டுக் காலத்திற்கு இத்திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் துணை அதிகாரிகள் மூவர் நியமிக்கப்படுவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

புன்செய் நில சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவற்றிற்காக கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங் கேயம், தாளவாடி வளர்ச்சி வட்டாரங்களிலும் நெற்பயிருக்காக பவானி வளர்ச்சி வட்டாரத்தில் முன்னோடித் திட்டம் தற்போது செயல்படுத்தப் பட்டுள்ளது. பயிர் விளைச்சல், நிலத்தின் மண் வளம், கடந்த சில ஆண்டுகளில் பயிர் சாகியாகப்போனது, பயிர் சாகியாகப் போனமைக் கான காரணங்கள் ஆகியவை பற்றி விவரங்கள் திரட்டுவதே இப்பணித் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆய்வுக் குறித்த அறிக்கை பரி சீலிக்கப்பட்டு வருகிறது.

முடிவுரை :

நம் மாநிலத்தின் விளைபொருள்களின் உற்பத்தி விலையின் அமைப்பை ஆய்வு செய்து அவைகளுக்கு பொருளாதார நிலைக்கு ஏற்ப விலைகளை நிர்ணயம் செய்து பரிந்துரைகளுடன் அறிக்கை தருவதற்கு ஒரு குழுவை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

நமது மாநிலத்தில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுகள் ஏற் பட்டிருந்தபோதிலும், நமது இடையறாத முயற்சியின் பலனாக 72·02 லட்சம் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று நம்புகிறோம். வேளாண்மை விளைபொருள் உற் பத்தியில் தற்போதுள்ள முன்னேற்ற வேகம், வரும் ஆண்டுகளில் மேலும் பெருகி, தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

பிற்சேர்க்கை I.

தோட்டக்கலை.

அரசு பழத்தோட்டம்—பழ நாற்றுப் பண்ணைகள்.

இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட ஒனபது இடங்களில பழத்தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன :—

ஆத்தூர்—செங்கல்பட்டு மாவட்டம்.
குப்பட்டு—வட ஆற்காடு மாவட்டம்.
மருங்குளம்—தஞ்சாவூர் மாவட்டம்.
கோடைக்கானல்—மதுரை மாவட்டம்.
பூவாணி—இராமநாதபுரம் மாவட்டம்.
குற்றுலம்—திருநெல்வேலி மாவட்டம்.
பெரியகுளம்—மதுரை மாவட்டம்.
திம்மாபுரம்—தருமபுரி மாவட்டம்.
குன்னூர்—நீலகிரி மாவட்டம்.

மேலும் கீழ்க்காணும் இரண்டு இடங்களில் அரசு பழத்தோட்டம் பழநாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட இருக்கின்றன:—

மேட்டூர்—சேலம் மாவட்டம்.
அண்ணா பண்ணை, குடுமியாமலை—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

பிற்சேர்க்கை II.

வேர்க்கடலை முனைப்புத் திட்டம்.

செயல்படும் பிரிவுகள்—8.

தொடர் எண்,	பிரிவு அமைப்பிடம். (1)	மாவட்டம். (2)
1	பொள்ளாச்சி	கோயம்புத்தூர்.
2	கோயம்புத்தூர்	ஷ
3	கோபிசெட்டிபாளையம்	ஷ
4	தேனி	மதுரை.
5	திருமங்கலம்	ஷ
6	அருப்புக்கோட்டை	இராமநாதபுரம்.
7	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி.
8	தஞ்சாவூர்	தஞ்சாவூர்.

பிற்சேர்க்கை III.

ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக வேர்க்கடலை உற்பத்தி பெருக்கும் திட்டம்.

செயல்படும் பிரிவுகள்—11.

தொடர் எண், பிரிவு அமைப்பிடம். (1)	மாவட்டம். (2)
1 வேலூர்	வட ஆற்காடு.
2 திருவண்ணாமலை	ஷி
3 திருப்பத்தூர்	ஷி
4 அரக்கோணம்	ஷி
5 கடலூர்	தென் ஆற்காடு.
6 திண்டிவனம்	ஷி
7 விருதாசலம்	ஷி
8 சேலம்	சேலம்.
9 நாமக்கல்	ஷி
10 கிருஷ்ணகிரி	தருமபுரி.
11 காஞ்சிபுரம்	செங்கல்பட்டு.

பிற்சேர்க்கை IV.

தென்னங்கன்றுகள் வளர்ப்புப் பண்ணைத் திட்டம்.

செயல்பட்டுவரும் தென்னங்கன்றுகள் வளர்ப்புப் பண்ணைகள்—18

தொடர் எண் பண்ணை அமைப்பிடம். (1)	மாவட்டம். (2)
1 பிச்சிவாக்கம்	செங்கல்பட்டு.
2 மாதவரம்	ஷி
3 காக்குப்பம்	தென் ஆற்காடு.
4 பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்.
5 மூவலூர்	ஷி
6 முத்துப் பேட்டை	ஷி
7 ஸ்ரீரங்கம்	திருச்சிராப்பள்ளி.
8 சோழவந்தான்	மதுரை.
9 பினாயூர்	ஷி
10 சிங்கம்புனேரி	இராமநாதபுரம்.

1973 மார்ச் 28]

தொடர் எண், பண்ணை அமைப்பிடம். (1)	மாவட்டம். (2)
11 செங்கோட்டை	திருநெல்வேலி.
12 வடகரை	ஷி
13 பூதாளம்	கன்னியாகுமரி.
14 சேலம்	சேலம்.
15 பி. ஜி. புதூர்	தருமபுரி.
16 பொள்ளாச்சி	கோயம்புத்தூர்.
17 கோயம்புத்தூர்	ஷி
18 வேலூர்	வட ஆற்காடு.

பிற்சேர்க்கை V.

கீழ்க்கண்ட அரசாங்க விதைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன:—

பகுதி. (1)	கோட்டம். (2)	அரசாங்க விதைப் பண்ணையின் பெயர். (3)
1 சென்னை	இராணிப்பேட்டை.	நவ்லாக்.
2 சென்னை .. .	திருவண்ணாமலை.	அதையீந்தல்.
3 சென்னை	திருவண்ணாமலை	வளவச்சனூர்.
4 சென்னை	காஞ்சிபுரம் ..	காஞ்சிபுரம்.
5 சென்னை	காஞ்சிபுரம் ..	சிறுகாவேரிப்பாக்கம்.
6 சென்னை	காஞ்சிபுரம் ..	பிச்சுவாக்கம்.
7 சென்னை	திருவள்ளூர் ..	ஊத்துக்கோட்டை.
8 சென்னை	திருவள்ளூர் ..	கொலந்தலூர்.
9 சென்னை	திருவள்ளூர் ..	பட்டலூர்.
10 திருச்சி	வில்லுபுரம் ..	கக்குப்பம்.
11 திருச்சி	வில்லுபுரம் ..	இருவேல்பேட்டை.
12 திருச்சி	திண்டிவனம் ..	வானூர்.
13 திருச்சி	கடலூர்	வண்டாரம்பேட்டை.
14 திருச்சி	கடலூர்	வெள்ளப்பாக்கம்.
15 திருச்சி	கடலூர்	மிரலூர்.
16 திருச்சி	கல்லக்குறிச்சி. ..	வடகநந்தல்.
17 திருச்சி	கரூர்	இனுங்கூர்.
18 திருச்சி	முசிறி	நெய்க்குப்பைப்புதூர்.
19 திருச்சி	முசிறி	புதூர் பாளையம்.
20 திருச்சி	புதுக்கோட்டை ...	திருவரன்குளம்.
21 தஞ்சாவூர் ..	மாயூரம் ..	நாகமங்கலம்.

பகுதி.	கோட்டம்.	அரசாங்க விதைப் பண்ணையின் பெயர்.
(1)	(2)	(3)
22 தஞ்சாவூர்	மாயூரம்	திருக்கடையூர்.
23 தஞ்சாவூர்	கும்பகோணம்	சாக்கோட்டை.
24 தஞ்சாவூர்	மன்னர்குடி	ஓரத்தூர்.
25 தஞ்சாவூர்	மன்னர்குடி	காஞ்சிகுடிகாடு.
26 தஞ்சாவூர்	மன்னர்குடி	நெடும்பலம்.
27 தஞ்சாவூர்	மன்னர்குடி	கீரந்தை.
28 தஞ்சாவூர்	மன்னர்குடி	தேவாம்பாள்பட்டிணம்.
29 தஞ்சாவூர்	நாகப்பட்டினம்	சிக்கல்.
30 தஞ்சாவூர்	நாகப்பட்டினம்	மூங்கில்குடி.
31 தஞ்சாவூர்	பட்டுக்கோட்டை.	நாட்டுமங்கலம்.
32 மதுரை	மதுரை	விளாயகபுரம்.
33 மதுரை	பெரியகுளம்	வைகை அணை I (மேலம் கங்கல்).
34 மதுரை	பெரியகுளம்	வைகை அணை II.
35 மதுரை	பெரியகுளம்	கீழக்கூடலூர்.
36 மதுரை	கோடைக்கானல்	ரைபிள்ரேஞ்சு.
37 மதுரை	கோடைக்கானல்	வில்பட்டி.
38 மதுரை	இராமநாதபுரம்	பரமக்குடி.
39 மதுரை	சாத்தூர்	தேவதானம்.
40 திருநெல்வேலி	தென்காசி	மேலகரம்.
41 திருநெல்வேலி	தென்காசி	மணிமுத்தாறு.
42 திருநெல்வேலி	நாகர்கோவில்	திருப்பதிசாரம்.
43 திருநெல்வேலி	திருநெல்வேலி	கரையிறுப்பு.
44 திருநெல்வேலி	தூத்துக்குடி	கிள்ளிகுளம்.
45 கோயம்புத்தூர்	பொள்ளாச்சி	கண்ணம்பாளையம்.
46 கோயம்புத்தூர்	பொள்ளாச்சி	பொங்கலூர்.
47 கோயம்புத்தூர்	பொள்ளாச்சி	பாப்பான்குளம்.
48 கோயம்புத்தூர்	சேலம்	முள்ளுவாடி.
49 கோயம்புத்தூர்	சேலம்	மேட்டூர் அணை.
50 கோயம்புத்தூர்	சேலம்	டேனிஸ்பேட்டை.
51 கோயம்புத்தூர்	தர்மபுரி	பாப்பாரன்பட்டி.
52 கோயம்புத்தூர்	தர்மபுரி	பவானிசாகர்.
53 கோயம்புத்தூர்	தர்மபுரி	சத்தியமங்கலம்.
54 கோயம்புத்தூர்	தர்மபுரி	பவானி.
55 திருச்சி	புதுக்கோட்டை	அண்ணா பண்ணை, குடுமியாமலை.

பிற்சேர்க்கை VI.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இதுவரை திருத்தப்பட்டுள்ள இடங்கள்.

கோயம்புத்தூர் விற்பனைக் குழு—

1. திருப்பூர்.
2. பொள்ளாச்சி.
3. கோபிசெட்டிபாளையம்.
4. ஈரோடு.
5. கோயம்புத்தூர்.
6. பல்லடம்.
7. பெருந்துறை.
8. தாராபுரம்.
9. உடுமலைப்பேட்டை.
10. அம்மூர்.
11. புளியம்பட்டி.
12. வெள்ளகோவில்.
13. அந்தியூர்.
14. கொடுமுடி.
15. குன்னத்தூர்.
16. கிணத்துக்கடவு.
17. தொண்டாமுத்தூர்.
18. ஆனைமலை.
19. மேட்டுப்பாளையம்.
20. சத்தியமங்கலம்.
21. கவுண்டப்பாடி.

தென் ஆற்காடு விற்பனைக் குழு—

1. திண்டிவனம்.
2. விருத்தாசலம்.
3. திருக்கோயிலூர்.
4. கடலூர்.
5. உளுந்தூர்ப்பேட்டை.
6. விழுப்புரம்.
7. பண்ருட்டி.
8. சின்ன சேலம்.
9. கள்ளக்குறிச்சி.
10. காட்டுமன்னர்கோவில்.
11. திட்டக்குடி.
12. ஜிஞ்ஜி.
13. சிதம்பரம்.
14. குறிஞ்சிப்பா.

வட ஆற்காடு விற்பனைக் குழு—

1. திருவண்ணுமலை.
2. வேலூர்.
3. ஆரணி.
4. ஆற்காடு.
5. திருப்பத்தூர்.
6. குடியாத்தம்.
7. வான்டிவாஷ்.
8. அரக்கோணம்.
9. சேத்துப்பட்டு.
10. செங்கம்.
11. செய்யாறு.
12. வாணியம்பாடி.
13. போளூர்.
14. காவேரிப்பாக்கம்.
15. தக்கோலம்.

திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழு—

1. ஜெயங்கொண்டான்.
2. அரியலூர்.
3. கரூர்.
4. ஆலங்குடி.
5. மணப்பாறை.
6. ஆணடிமடம்.
7. துறையூர்.
8. சேனூர்.
9. புதுக்கோட்டை.
10. பெரம்பலூர்.
11. லால்குடி.
12. மனச்சநல்லூர்.
13. தொட்டியம்.
14. திருச்சிராப்பள்ளி.

தஞ்சை விற்பனைக் குழு—

1. சீர்காழி.
2. தஞ்சாவூர்.
3. பட்டுக்கோட்டை.
4. முத்துப்பேட்டை.
5. அதிராம்பட்டினம்.
6. மன்னார்குடி.
7. குத்தாலம்.
8. கும்பகோணம்.
9. திருவாரூர்.

தஞ்சை விற்பனைக் குழு—தொடர்ச்சி.

10. பாபநாசம்.
11. கந்தர்வகோட்டை.
12. கொரடாச்சேரி.
13. செம்பனார்கோவில்.
14. மதுக்கூர்.
15. அறந்தாங்கி.
16. பேராவூரணி.
17. திருத்துறைப்பூண்டி.
18. ஒரத்தநாடு.
19. வல்லம்.
20. கீவளூர்.
21. பேரளம்.
22. வேதாரண்யம்.
23. அம்மாபேட்டை.

கன்னியாகுமரி விற்பனைக் குழு—

1. ஈத்தாமொழி.
2. வடசேரி.
3. களியக்காவிளை.
4. தொடுவாதி.
5. திங்கள் சந்தை.

மதுரை விற்பனைக் குழு—

1. திண்டுக்கல்.
2. திருமங்கலம்.
3. தேனி.
4. மதுரை.

தர்மபுரி விற்பனைக் குழு—

1. தர்மபுரி.
2. ஓசூர்.
3. கிருஷ்ணகிரி.
4. கெலமங்கலம்.
5. ஹரூர்.

செங்கை விற்பனைக் குழு—

1. காஞ்சிபுரம்.
2. திருவள்ளூர்.
3. திருத்தணி.
4. செங்குன்றம்.

செங்கை விற்பனைக்குழு—தொடர்ச்சி.

5. நசரத்பேட்.
6. மதுராந்தகம்.
7. உத்திரமேரூர்.

திருநெல்வேலி விற்பனைக் குழு—

1. கோவில்பட்டி.
2. சங்கரன்கோவில்.
3. கடம்பூர்.
4. அம்பாசமுத்திரம்.
5. வள்ளியூர்.
6. புதூர்.
7. தென்காசி.
8. தூத்துக்குடி.
9. கழுகுமலை.
10. ஸ்ரீவைகுண்டம்.
11. திருநெல்வேலி.

இராமநாதபுரம் விற்பனைக் குழு—

1. விருதுநகர்.
2. ராஜபாளையம்.
3. சாத்தூர்.
4. அருப்புக்கோட்டை.
5. சிங்கம்புணரி.
6. பரமக்குடி.
7. இராமநாதபுரம்.
8. கமுதி.
9. சிவகங்கை.

பிற்சேர்க்கை VII.

ஆராய்ச்சி நிலையங்களின் பட்டியல்

I. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, விக் இந்தியா தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட மூன்று கோரிக்கைகளை எழுப்பியுள்ளது:—

1. சம்பளம், பஞ்சப்படி மாற்றம் உள்பட பொதுக் கோரிக்கைகள்.

2. உடன்பாடு ஏற்படும்வரை தொழிலாளர்களுக்கு ரூ. 50 தற்காலிக நிவாரணம் அளித்தல்.

3. கோரிக்கைகளின் மீது தீர்வு காணும்வரை விழா முன்பணம் பிடித்தத்தை ஒத்திப்போடுதல்.

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 29

மேற்கூறிய கோரிக்கைகளின்மீது நிறுவனத்திற்கும் சங்கத்திற்கும் இடையே எந்தவிதமான உடன்பாடும் ஏற்படாததால், இதன் 600 தொழிலாளர்கள் (500 ஆண்கள், 100 பெண்கள்) பிப்ரவரி மாத ஊதியத்தை மார்ச் திங்களில் வாங்க மறுத்தனர். நிர்வாகத்தினருடன் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்திய பிறகு சங்கம் தொழிலாளர்கள் பிப்ரவரித் திங்களுக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும்படிச் செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்கத்தின் தலைவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர்கள் 26—3—1973 தேதியன்று ஊதியத்தைப் பெற்றுக்கொண்டனர். சங்கம் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து முன் பணமாகப் பெற்ற தொகையை பிடித்துக்கொள்ள ஒப்புக்கொண்டது. மேலும் இரு தரப்பினரும் இதர கோரிக்கைகளைக் குறித்து பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக் கொண்டனர்.

4. அரசினர் தீர்மானம்.

பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குச் சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அரசினர் தீர்மானத்தினை முன் மொழிந்து சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்:—

"பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு எனப்படும், பேரவையின் குழு ஒன்று இருபத்தோரு உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப் படவிருக்கின்றது. அவர்களில், பதினறு உறுப்பினர்களுக்கு மேற் படாத உறுப்பினர்களை, பேரவை, தனது உறுப்பினர்களிலிருந்து, ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஐந்து உறுப்பினர் களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, சட்ட மன்ற மேலவை, தனது உறுப்பினர் களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஆனால், முதற் குழுவின் உறுப்பினர்கள், நேர்வுக்கேற்ப சட்டப் பேரவைத் தலைவர் அல்லது சட்ட மன்ற மேலவைத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(2) இக்குழுவின் உறுப்பினர்கள், ஓராண்டுக் காலத்திற்கு அல்லது புதிய குழு அமைக்கப்படும் வரை பதவி வகிப்பர்.

1973 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

(3) இக்குழுவின் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தொழில் நிறுவனங்கள், சட்டப் பேரவைத் தலைவரால் அவ்வப்போது குறிப்பிடப்படக்கூடிய அது போன்ற ஏனைய நிறுவனங்கள் ஆகிய வற்றின் அறிக்கைகள், கணக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குறித்த தணிக்கையின் அறிக்கைகள் ஏதுமிருப்பின் அவற்றை ஆய்வு செய்தல்;

(உ) பொதுத் தொழில் நிறுவனங்களின் தன்னுட்சி உரிமை, திறமை ஆகியவற்றை நினைவிற்கொண்டு, நல்ல வணிகக் கொள்கைகள், செயல் திறனுடைய வர்த்தக நடைமுறைகள் ஆகியவற்றிற்கிணங்க, பொதுத் தொழில் நிறுவனங்களின் அலுவல்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றனவா என்பது குறித்து ஆய்வு செய்தல்;

(எ) விவர அட்டவணையில் குறித்த நிறுவனங்கள் சம்பந்தமாக பொதுக் கணக்காய்வுக் குழு, மதிப்பீட்டுக் குழு இவற்றின் அலுவல் களில் எதையாவது பேரவைத் தலைவர் இக்குழுவிற்கு ஒதுக்கினால் அந்த அலுவலை மேற்கொள்ளுதல்:

ஆனால், இக்குழு, கீழ்க்கண்டவை குறித்து ஆய்வு செய்தல் ஆகாது:—

(1) பொதுத் தொழில் நிறுவனங்களின் வணிக அல்லது வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து, வேறுபட்ட அரசின் கொள்கை குறித்தவை;

(2) அன்றாட நிர்வாகம் சம்பந்தமானவை;

(3) ஒரு பொதுத் தொழில் நிறுவனத்தை அமைத்த சட்டத்தின் படி அந்நிறுவனத்தில் குறித்த காரியங்களை ஆய்வதற்கான தனி அமைப்பு இருந்தால் அக்காரியங்கள் குறித்து;

(4) ஏனைய நேர்வுகளின், சட்டப் பேரவையின் பொறுக்குக் குழுவிற்குப் பொருந்தும் நடைமுறை விதிகள் பொருந்தும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 29

விவர அட்டவணை

பொதுத் தொழில் நிறுவனங்களின் பட்டியல்

தொடர் எண்	நிறுவனங்களின் பெயர்
	சட்டப்படி அமைந்த கழகங்கள்
1.	தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.
2.	தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், சென்னை.
3.	தமிழ்நாடு பண்டகசாலைக் கழகம்.
4.	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.
5.	தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.
6.	தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்.
	அரசுக் கம்பெனிகள்.
1.	தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.
2.	தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்றக் கழகம் லிமிடெட்.
3.	தமிழ்நாடு சிறுதொழில் கழகம் லிமிடெட்.
4.	தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.
5.	தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட்.
6.	தமிழ்நாடு சர்க்கை உற்பத்தி லிமிடெட்.
7.	தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் லிமிடெட்.
8.	தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் லிமிடெட்.
9.	தமிழ்நாடு திரைப்பட அரங்குக் கழகம் லிமிடெட், சென்னை.
10.	தமிழ்நாடு பால் பெருக்குக் கழகம்.
11.	பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2.

1973 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

விவர அட்டவணை.

பொதுத் தொழில் நிறுவனங்களின் பட்டியல்

தொடர் எண்.	நிறுவனங்களின் பெயர்
12.	பாண்டியன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், மதுரை மதுரை-16.
13.	சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கும்பகோணம்.
14.	சேரன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், பொள்ளாச்சி.
15.	அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம்.
16.	தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.
	அரசு நிறுவனம்
	தமிழ் நாடு அரசுப் போக்குவரத்து"

நமது தொழில் கொள்கையை ஒட்டி மக்கள் நலனுக்காக அரசு ஏற்றுள்ள பல்வேறு பொறுப்புகளில், பெரிய தொழிற்சாலைகளையும் மூலத் தொழில்களையும் கூடியவரை அரசே ஏற்று நடத்தவேண்டுமென்ற அடிப்படையில் அரசு மின்சாரம், போக்குவரத்து, பால வழங்குதல், குடிநீர் வழங்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு, பல வாரியங்கள் அல்லது தனி நிறுவனங்கள் மூலமாகச் செயல்பட்டு வருகிறது. அவ் வாரியங்களும், தனி நிறுவனங்களும் அரசின் கட்டு திட்டங்களின்படி இயங்குவதெனில், வணிகப் பொறுப்புகளுக்கு ஏற்றதாயில்லை என்ற நிலை உள்ளபடியால், அவை நல்ல வணிக முறையில் இயங்கவேண்டும் என்பதற்காகவும், நல்ல செயல் திறன் அடைவதற்காகவும், அன்றாட நடவடிக்கைகளில் மிகுந்த கட்டுப்பாடின்றி இயங்கவேண்டியது அவசியமாகிறது. இதற்காக தனி வாரியங்கள் அல்லது தனி நிறுவனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு மூலதனம் அரசின் கூட்டு நிதியிலிருந்து (Consolidated Fund) அவையின் அனுமதி பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதால், அந்த வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்குகளை இம் மன்றம் ஆய்வு செய்வது இன்றியமையாதது. அவைகள் அரசுத் துறைகளாக இயங்கியபோது, பொதுக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 29

கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகியவைகளின் தணிக்கையின்கீழ் வந்தன. வாரியங்கள், தனி நிறுவனங்களாக மாறிய பின்னர், அக் குழுக்களுடைய வரம்பிற்குள் வருவதில்லை. ஆகையால் இப்போதுள்ள வாரியங்கள், தனி நிறுவனங்கள், இனிமேல் அமையவிருக்கும் வாரியங்கள், தனி நிறுவனங்கள் ஆகியவற்றின் கொள்கைகள், கணக்கு களைத் தணிக்கை செய்வதற்கு பேரவை, சட்ட மன்றம் ஆகியவற்றின் வரம்பு எல்லைக்குள் அவைகளைக் கொண்டு வருவதற்கு இத்தீர்மானம் வகை செய்கிறது. இம்மாதிரியான குழு ஒன்று இருக்கவேண்டு மென்று மன்ற உறுப்பினர்கள் பல்வேறு முறைகளிலும் கூறி வந்திருக் கின்றனர். மேலும் குறிப்பாக இம் மன்ற விதிகள் விரிவாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அக் குழுவின் உறுப்பினர்கள் இம் மாதிரியான குழு ஒன்று இருப்பின், அது மிகுந்த பலனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து, இம் மன்ற விதி முறைகளில் மாறுதல் செய்வதற்கு முன்னதாக, பேரவை விதி முறைகளில் மாறுதல் செய்து, அதன் பின்னர் இம் மன்ற விதிகளிலும் மாறுதல் செய்யலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இக் கருத்து அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, "பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு" ஒன்றை ஏற்படுத்துவதற்கு பேரவையில் ஒரு தீர்மானம் நேற்றைய தினம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இக் குழுவின் பணிகளைப் பற்றி தீர்மானத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இக் குழு 21 உறுப்பினர்கள் கொண்டதாக இருக்கும்; அதில் 16 உறுப் பினர்கள் பேரவையிலிருந்தும், 5 உறுப்பினர்கள் இம் மன்றத்தி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இம் மாதிரி குழுக்கள் நாடாளுமன்றத்திலும், குஜராத், கேரளா, மகாராஷ்ட்டிரம், மைசூர் போன்ற பிற மாநிலங்களிலும் இயங்கி வருகின்றன. முதல் குழுவில் சட்ட மன்றத்திலிருந்து உறுப்பினர்கள் சட்ட மன்றத் தலைவர் அவர்களால் நியமிக்கப்படுவார்கள்.

இத்தீர்மானத்தின் மீது கருத்து வேறுபாடு இருக்க இடமில்லை யாதலால், இதனை ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தீர்மானம் மன்றத்தின்முன் விவாதத்திற்காக வைக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு ஒன்றை நம்முடைய அரசு அமைத்தது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதற்காக

1973 மார்ச் 29] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்ளுகிறேன். இது போன்ற ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து, மேலவையினுடைய விதிகளை மாற்றுவதற்காக ஒரு குழுக் கூட்டம் நடந்தபோது, பல உறுப்பினர்களால் சொல்லப்பட்டது. நான் அந்தக் கூட்டத்தில் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டேன். அப்போது நம்முடைய மேலவை யினுடைய விதிகளையே மாற்றியமைக்கலாம், இது போன்ற ஒரு குழு அமைக்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டபோது, மேலவை யினுடைய அந்த விதியை மட்டும் மாற்றினால் போதாது, பேரவை யினுடைய விதிகள் மாற்றம் செய்யப்படுகிறபொழுது அது போன்ற ஒரு முறையை வகுக்கலாம் என்று கருதி நம்முடைய விதிகளில் மாற்றம் செய்யாமல் விடப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே இது போன்ற ஒரு குழு இருக்கவேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கிவிட்டார்கள். இது போன்ற ஒரு குழு நாடாளுமன்றத்தில் 1964-ஆம் ஆண்டி லிருந்தே செயல்பட்டு வருகிறது. இந்தப் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு சிறந்த முறையில் தன்னுடைய பணிகளை ஆற்றும் என்ற நம்பிக்கை எனக்கும் நாட்டிலுள்ள பலருக்கும் இருக்கிறது. வாரியங்கள் போன்றவையின் கணக்குகள் சரியான முறையில் சட்டமன்றத்தால் கண்காணிக்கப்படவில்லை, கவனிக்கப்படவில்லை யென்ற கருத்து மாறுவதற்கு இந்தக் குழு உபயோககரமாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். சாதாரணமாக பொதுக் கணக்குக் குழு முடிந்துபோன கணக்குகளைப் பார்க்கிற குழுவாகத்தான் இருக்கிறது. அது "போஸ்ட் மார்டம்" செய்கிற அளவில் இருக்கிறது. அது போல எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்று சொல்லக்கூடிய மதிப்பீட்டுக் குழு இன்ன இன்ன செய்யலாம் என்ற கருத்துக்களைச் சொல்லுவதாக இருக்கிறது. என்ன நடந்தது என்று பார்த்து, அதற்குரிய ஆலோசனைகளை அவ்வப்போது சொல்லக்கூடிய நிலைமை இந்தப் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவுக்குத்தான் உண்டு. இந்த சமயத்தில் ஓரிரு கருத்துக்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கூட்டு ஆய்வுக் குழு 15, 16 பேரவை உறுப்பினர்களையும் மேலவை உறுப்பினர்களில் 5 பேர்களையும் கொண்டதாக அமைந்திருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்தார்கள். சாதாரணமாக இதுமாதிரி கூட்டு ஆய்வுக்குழு போடுகிறபோது, 2 : 1 என்ற விகிதத்தில் போடுவது வழக்கம். அங்கே பேரவையில் 10 பேர் இருந்தால் இங்கு 5 பேராவது அதில் உறுப்பினர்களாக இருப்பதுதான் நியாயமாக இருக்குமே தவிர, அதில் மூன்றில் ஒன்று என்று வைப்பது சரியானது

பி.ப. 4–30

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 29

என்று நான் சொல்லமாட்டேன். நாடாளுமன்றத்தில்கூட 2 உறுப்பினர்கள் அங்குள்ள மக்கள் அவை உறுப்பினர்கள் இருப்பார்களே யானால், மாநிலங்கள் அவை உறுப்பினர் ஒருவர் என்ற கணக்குப்படி தான் இருக்கிறது என்று பார்க்கிறபொழுது, இதுமாதிரி முறையை இங்கும் கொண்டுவருவதற்கு அரசு முயல வேண்டுமென்ற கருத்தைச் சொல்லுவேன்.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இது போன்ற பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் "one third of the members not to retire" என்று வைத்திருக்கிறார்கள். அது மாதிரி வைத்திருப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் சொல்லுவதற்குக் காரணம் இது போன்ற குழுவைப் போடும்பொழுது, அந்தக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒரு ஆண்டுக் காலம் பலவிதமான நிறுவனங்களைப் பார்த்து வந்து அவர்களுடைய அனுபவம் அடுத்து வருகின்ற குழுவுக்கும் பயன் படுவதாக இருக்க வேண்டும். அங்கு போடப்பட்ட உறுப்பினர் களோ "ரிட்டயர்" ஆகிவிட்டால், அடுத்த முறை வருகிற குழுவுக்கு இவர்களுடைய அனுபவம் பயன்படாது போகுமென்ற காரணத்தால், மொத்தத்தில் போடப்படுகிற 21 பேரில் "ஒன் தர்டு" மூன்றில் ஒரு பங்கினர் அடுத்த ஆண்டும் இருக்கலாம் என்பதற்கு ஒரு விதியை வகுத்தால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமான இன்னொரு குறிப்பைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதுமாதிரி பொதுத் தொழில் நிறுவனங்களைப் பற்றி நாமெல்லாம் ஆராய்கிறபொழுது, இது லாபகரமாக இயங்க வேண்டுமென்ற குறிப்பும் அதில் இருக்கிறது. அதை நம் உறுப் பினர்கள் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். இன்னொரு கருத்து, செலக்ட் கமிட்டி அல்லது கூட்டு ஆய்வுக் குழு போட்டு, மாநில அளவிலே அல்லது நாட்டு அளவிலே அக்குழு பல இடங்களுக்குச் சென்று வரும்போது, பல உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே அங்கத் தினர்களாக இருக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அதுமாதிரி செலக்ட் கமிட்டிகளிலோ அல்லது ஆய்வுக் குழுக்களிலோ பல உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்று சொல்வதற்கு முக்கியமான காரணம் நாட்டி லுள்ள பலவிதமான அரசுத் துறை நிறுவனங்களையும் மற்றவற்றையும் பார்த்துவரக்கூடிய வாய்ப்புகள் அந்த செலக்ட் கமிட்டியில் சேர்ந் திருந்தால்தான் கொடுக்கப்படும் என்பது, அந்தக் காரணத்தால்

1973 மார்ச் 29] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தான், அதுமாதிரி ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே யாரைப் பொறுக்கிப் போடுவது என்பதில் சில சமயங்களில் சச்சரவு ஏற்படுவதும், மற்றும் சில சமயங்களில் இன்னார்தான் தகுதி யானவர் என்று சொல்லும் நிலைமைகள் எல்லாம் மாறி, மற்றவர் களைப் போடக்கூடிய நிலைமை உருவாவதை நாம் சாதாரணமாக பொதுக்குழு, பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு இவை களிலே பார்க்கிறோம். அதற்கு ஒரு வழிமுறை சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாநில அளவிலோ அல்லது நாட்டின் அளவிலோ அரசாங்கத்தினுடைய பல்வேறு தொழில் நிறுவனங்களையோ, பல்வேறு அரசாங்கத்தின் செயல்களையோ பார்க்க விரும்புகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களில் 40 பேர் அல்லது 50 பேரை அரசாங்கமே கூட ஒவ்வொரு ஆண்டும் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யலாம். மொத்த உறுப்பினர்கள் 234 பேர்கள் என்றால் அங் கிருந்து 40 பேரும், இங்கு இருக்கக்கூடிய 60 பேர்களில், ஆறில் ஒரு பங்கு, அதாவது 10 பேர் சேர்ந்து 50 பேர் கொண்ட குழுவாக ஆக்கி அவர்கள் மாநில அளவில் பார்க்கவும், நாட்டின் அளவில் பார்ப் பதற்குமான ஒரு "டூரை" ஏற்பாடு செய்து, அவர்கள் இந்தக் கமிட்டியில் இல்லாமல் இருந்தாலும், அந்த வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தித் தரலாம். இது ஒரு புதிதான கருத்துக் கூட அல்ல. இதைப் பற்றி யோசித்துப் பார்க்கும்போது, இதற்கென்று ஒரு ஜி.ஓ.கூட முன்பு போட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஜி.ஓ. 1359 என்ற அரசு ஆணையில் இதற்கு முன்பாகவே நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற ஒரு குழுவாக மாநில அளவில் சென்று காணக்கூடிய வழிமுறைகளுக்கு அரசாங்கம் அந்தப் பணத்தை ஏற்கும் என்று அந்த அரசு ஆணையில் போட்டி ருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு காரணங்களுக்காக இதைச் செய்யலாம். ஒன்று அது போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் போகிறபோது, அவர்களுக்கு பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அதே சமயத்தில் பல இடங்களுக்குப் போக வேண்டுமென்பதற்காக இந்த ஆய்வுக் குழுவில் இடம் பெறவேண்டு மென்ற அவசியம் இல்லாது போகும்.

அடுத்தபடியாக, ஒன்றைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். நம்முடைய மேலவையைப் பொறுத்த வரையில், என்னுடைய கருத்தை "அப்ரோபிரியேஷன்" மசோதாவின் போது சொல்லலாம் என்று இருக்கிறேன். ஒரு கருத்தைச் சொல்லு

கிறேன். மேலவையைப் பொறுத்தவரையில், அரசினுடைய "நான்-மணி பில்ஸ்"—பணமல்லாத பில்கள்—வருகிறபோது பேரவையில் தான் நிறைவேற்றியாக வேண்டும், அதற்குப் பிறகு மேலவைக்கு வரவேண்டுமென்று இல்லாமல் அந்த பில்களை மேலவையில் வைத்து, அதற்குப் பிறகு பேரவைக்குக் கொண்டு போகலாமென்ற கருத்தைச் சொல்ல விரும்புகிற கார்ணம் என்னவென்றால் நேற்றைய தினம் சொன்னார்கள். பேரவையில் அந்தப் "பில்"-கள் பாஸ் ஆகா விட்டால் இங்கு நாளைக்கு விடுமுறை கூட விடக்கூடும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதுமாதிரி இல்லாத நிலைமையை உருவாக்கினால் நல்லது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேலவைச் செய்திகள் பத்திரிகையில் சரியான முறையில் வரவில்லையென்ற கருத்து இருக்கிறது. அதற்கு அரசுத் தரப்பில் ஒரு உதவி செய்யவேண்டும். முக்கியமான விஷயத்தைப் பற்றி அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறபொழுது, கீழவையில் 50 சத விகிதமும், இங்கு 50 சதவிகிதமும் சொன்னால், எங்களுக்கு பத்திரிகைத் தலைப்பில் ஒரு முக்கியமான இடத்தைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். அதைச் சொல்லுவதற்குக் காரணம் இரண்டு நாளைக்கு முன்பு மூன்று விஷயங்கள் இந்த மேலவையில் பேசப்பட்டன. நம்முடைய மாண்புமிகு நண்பர் திரு. அப்துல் வகாப் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த உருது பேசுபவர்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற நீண்ட நாளைய கோரிக்கையை வலியுறுத்தி, முதலமைச்சர் அவர்கள் எப்படியாவது செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய முகத்தைப் பார்க்கும்போது இங்கு இருக்கும்போதே சொல்லுவார்கள் என்று கூட எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு நாள் தாழ்த்தி அடுத்த நாள் காலையில் அங்குதான் அதைப் பற்றிச் சொன்னார்கள், "அனவன்ஸ்" செய்தார்கள். அடுத்து காவேரிபற்றி நான் என்னுடைய பேச்சில் சொன்னேன். அரசின் கருத்து என்ன என்று அறிவதற்கு கேட்கப் பட்டது. அந்த அனவன்ஸ்மெண்டு கூட இங்கு கொடுத்தால் ஒரு பக்கம்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கு ஒரு கேள்வி கேட்டிருந்தார்கள். மூலக் கேள்வியின் தொடர்பாக பல துணைக் கேள்விகள் எழுந்தன. அப்போதுகூட நான் இங்கு பேசுவதற்கு இருக்கிறேமே என்று குறுக்கிட்டுப் பேச வேண்டாம் என்று நீண்ட நேரம் பொறுமையாக இருந்தேன். பிறகு இரண்டு மாநிலத்திற்

கிடையே ஒரு பெரிய தகராறு ஏற்படக்கூடிய அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கேள்விகளைக் கேட்ட காரணத்தால்—அது வரையில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் அதன் தொடர்பாக சட்டத் துறை அமைச்சர் அவர்களும் பேசிக்கொண்டிருந்தார்கள்—பிறகு குறுக்கிட்டு விளக்கங்கள் அளித்தேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அளித்த விளக்கங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். என்றாலும் கூட விளக்கங்கள் அளிக்கும்போது ஒரு சமயம் இங்கு அளித்தால் நல்லது என்ற கருத்துடன் சொல்லுகிறேன். அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றிய முடிவை ஒரு வாரத்திற்கு முன்கூட்டியே செய்து வைத்திருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது வேண்டுமென்றால் ஒரு புத்தம் புதிய செய்தியைச் சொல்லுகிறேன், இங்கே. திண்டுக்கல் தேர்தல் மே 20-ம் தேதி.

திரு. ஜி. சுவாமிநாதன் : அடுத்து, இந்தப் பொதுத் துறை நிறுவனத்தைப்பற்றி இங்குதான் பேசப்பட்டது. இதுகூட நான் என்னுடைய பேச்சில் இரண்டு நாட்களுக்கு முன்னால் சொன்னேன். அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனங்களுடைய குழு அமைவதுபற்றி அங்கு குறிப்பிட்டார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்கு முக்கியமான காரணம் இதைப்போல சில பல விஷயங்களை அரசுத் தரப்பில், சொல்கிறபோது, மேலவைக்கும் ஒரு முக்கியத்துவம் வரும் என்ற கருத்தை மட்டும் நான் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் இந்தப் பொதுத் துறை நிறுவனங்கள் குழுவை அரசு அமைத்ததற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளாக நான் இம்மாதிரி ஒரு குழு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தேன். சென்ற வருடம் வரவு செலவுத் திட்டத்தின்மீது பேசும்போது தொழில் துறை அமைச்சர் அவர்கள், நான் சொல்லி முடித்தவுடனே எழுந்து, அதைப் போடுவதாக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம், யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னவுடன், நான் பேசிய பேச்சை அரைகுறையாக விட்டுவிட்டேன். இம்மாதிரி ஒரு குழுவை நியமிப்பதால் பொதுவாக அரசுக்கு உள்ள சுமையில் பெரும் பகுதி குறையும். தொழில் நிறுவனங்கள் பேரில் பலவிதமான குற்றச்சாட்டுகள் வருவதால் உடனுக்குடன் அனைத்துக் கட்சியினரும் மேல்பார்க்கும்படியான

4-40 பி.ப.

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 29

நிலைமை இருந்தால், அரசாங்கத்தின் பேரில் சாட்டப்படும் குற்றங்கள் குறைவு, மிகவும் குறையும். ஏனெனில் ஒவ்வொரு மாதமும் இவர்கள் சென்று ஏதேனும் ஒரு தொழில் ஸ்தாபனத்தை நேரில் பார்த்து அங்குள்ள குறைகளை அவர்களே கவனிப்பதோடுகூட, அவர்களே அந்தந்த உத்தியோகஸ்தர்களுக்கு எடுத்துச் சொல்லி அவைகளைத் தீர்த்து வைக்க முடியும். அவை தீராவிட்டால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவும், இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவும் உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும். ஆகையினால் இந்தக் குழு அமைக்க வேண்டும் என்று சொல்லி வந்தோம். அதை இதற்கு முன்னாலேயே போட்டிருக்கலாம். காலம் தாழ்த்தியாவது இப்பொழுது போட்டதற்கு உண்மையில் நாம் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வெகு காலம் தாழ்த்தியபோதிலும்கூட, இப்பொழுதாவது இந்தக் குழுவை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்கது.

நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்ன மாதிரி இந்தக் குழுவுக்கு மேல் சபையில் 8 அங்கத்தினர்களையாவது போட்டிருந்தால் ஏதோ ஒரு கட்சிக்கு ஒருவரையாவது போடுவதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது எதிர்க் கட்சிக்காரர்கள் அத்தனை பேருக்கும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று பேர்களைத்தான் நியமிக்கும்படியான நிலைமை இருக்கிறது. மூன்று பேர்கூட முடியாது. இரண்டு பேர்தான் நியமிக்க முடியும். இதனால் மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்படுகிறது. ஆகையினால் இப்பேர்ப்பட்ட குழுவில் 16 பேர் பேரவையில் இருந்தால், மேலவையில் 8 பேராவது இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுதும்கூட அதிகக் காலதாமதம் ஆகிவிடவில்லை. முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டால், இதைத் திருத்தலாம். சாதாரணமாக நமது தமிழ் நாட்டில் பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியானாலும், எஸ்டிமேட்ஸ் கமிட்டியானாலும், வேறு எந்தக் குழுவானாலும், அவற்றிலே இதுவரை மெஜாரிடி மைனரிடி பார்த்து, ஓட்டெடுத்து ஒரு முடிவு செய்வது என்பது ரொம்ப ஆபூர்வம். எனக்குத் தெரிந்தவரையில் கிடையாது. ஒரு அங்கத்தினர் ஆட்சேபனை சொன்னாலும், அவரைத் திருப்திப் படுத்தும் அளவுக்குப் பேசி, "கன்வின்ஸ்" பண்ணி, அவர் சொல்வது நியாயமாக இருந்தால், அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அளவுக்குத்தான் அனைத்துக் குழுக்களிலும் நாம் விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். பொதுக் கணக்குக் குழு கூட்டத்திலேயும் அப்படித்தான். எஸ்டிமேட்ஸ் கமிட்டிக் கூட்டத்திலேயும் அப்படித்

1973 மார்ச் 29] [திரு. கே. ராஜாராம்]

தான். சாதாரணமாக எந்தப் பொறுக்குக் குழுக்கள் வந்தாலும், டிசன்டிங் நோட் எழுதுவது என்பது ரொம்ப அபூர்வம். இதுகூட "டிசன்டிங் நோட்" எழுதுவார்களே தவிர, ஓட்டுப் போட்டு, மெஜாரிடி மைனரிடி பார்த்து முடிவு செய்வது என்பதே இது வரையில் கிடையாது. ஆகையினால்தான் கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்திருந்தால் நலமாக இருக்கும். அதற்கு மேல் விரிவாகப் பேசவேண்டிய அவசியமில்லை. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும் பேசிவிட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் விரிவாகக் கூறிவிட்டார்கள். இந்தக் குழு அடிக்கடி செயல்பட வேண்டும். ஏதோ அட்வைசரி கமிட்டிபோல் இருந்துவிடக்கூடாது. செயல் திறமையோடு இது செயல்பட வேண்டுமென்றால், தொழில் ஸ்தாபனங்களைப் பார்த்துக்கொண்டு, மாதாமாதமோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ அங்கே இருக்கக்கூடிய கஷ்ட நஷ்டங்களை, சிரமங்களைத் தெரிந்து, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கொஞ்சம் திறம்பட வேலை செய்வதற்கு அரசாங்கம் இந்தக் குழுவுக்கு உதவி செய்ய வேண்டும். சாதாரணமாக ஏதோ போய்ப் பார்த்தார்கள், சுற்றினார்கள், ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள் என்ற நிலைமை இல்லாது, திறம்பட வேலை செய்வதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்தப் பொதுத் தொழில் நிறுவனக் குழு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம். அந்தக் காரணத்தினாலேதான் பல்வேறு நிறுவனங்கள், வாரியங்கள், இவைகளிலே நடைபெறுகின்ற காரியங்களை நாம் கவனித்து அவ்வப்போது நடைபெறுகின்றவைகளை தெரிந்துகொள்வதற்கு ஏற்ப வசதியான முறையிலே இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அரசாங்கத்தில் நடைபெறுகின்ற காரியங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையிலே பொதுமக்கள் மத்தியிலே இருந்திட வேண்டும் என்பதை முழுக்க முழுக்க நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒரு அரசாங்கம் என்பது குறிப்பிட்ட ஒரு கட்சி இருந்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 29

நடத்துகின்ற அந்தக் கால கட்டத்திற்கு மாத்திரம் இல்லை என்பதையும், தொடர்ந்து பல்வேறு கட்சிகள் அந்த அரசாங்கத்தில் இடம் பெறக்கூடிய தகுதிகளைப் பெறுகின்ற சூழ்நிலைகள் உருவாகும் என்பதையும் மனதிலே கொண்டு பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கின்ற அரசியல்வாதிகள் விமர்சனங்களைச் செய்திட வேண்டும். நல்ல காரியம் ஒன்று செய்யப்படாவிட்டால், அது செய்யப்பட வேண்டும் என்று முறையீடுகளைச் செய்வது; அந்தக் காரியம் நடை பெறத் தொடங்கிவிட்டால், அந்த நல்ல காரியத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஏதோ பொத்தாம் பொதுவில் ஒரு வார்த்தை. அதிலே ஊழல், தவறு, குறைபாடு என்று கூறிவிடுவது—இவைகள் இன்றைக்கு நாட்டில் மிக மலிவான அரசியல் விமர்சனங்களாக ஆகிவிட்டிருக்கும் நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவேதான் எதிலும் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையிலே விளக்கங்களை அவ்வப்பொழுது அளிப்பதிலும் இதுபோன்ற குழுக்களின் மூலமாகக் காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதிலே எந்தவித தடங்கல் இல்லாமல் அவைகளை நிறைவேற்றித் தருவதிலும் இந்த அரசு முனைப்பாக இருந்து வருகின்றது. அதனையொட்டித்தான் இன்று பேரவையிலே பேரவையின் முன்னவர் நாவலர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, அங்கேயும் அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களும், மற்றவர்களும் இதை ஏகமனதாக ஒத்துக் கொண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இங்கேயும், இந்த மாமன்றத்திலே அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், நண்பர் திரு. சுவாமி நாதன் அவர்களும் பேசியிருக்கின்றார்கள்.

இதிலே ஒரு குறைபாடு சொன்னார்கள். இதிலே 16—5 என்று போட்டிருக்கின்றீர்கள். இதிலே எங்களுக்குக் கொஞ்சம் அதிகமாக இடம் தந்திருக்கக்கூடாதா என்று சொன்னார்கள். பொதுவாக நம்முடைய செலக்ட் கமிட்டிகள் போடுகிற நேரத்திலேதான் அவர்கள் சொன்ன விகிதாசாரக் கணக்கு வருகிறது. பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியானாலும், எஸ்டிமேட்ஸ் கமிட்டியானாலும் 16—5 என்கிற விகிதாசாரத்திலே போடப்படுகின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அவைகளிலேயும்கூட 2 :1 என்று போட்டால், நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அந்தக் கமிட்டிகளைப் போன்ற கமிட்டியாக இது இயங்குகின்ற காரணத்தினால், நாம் அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கு எப்படி 16 : 5 என்று போடுகிறோமோ, எப்படி எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு 16 :5 என்று போடுகிறோமோ, அதைப் போலத்தான் மேலவையிலேயிருந்து இந்த கமிட்டியிலும் 16 : 5 என்கின்ற வகையிலே நாம் உறுப்பினர்களை இணைப்பதாக இருக்கின்றோம். டெல்லியிலே அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கு 30 பேர் மொத்த உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு 30 பேர் இருக்கின்றார்கள் 30 பேர் இருந்துங்கூட இந்தக் குழுவுக்கு மாநில அவையினர் மொத்தம் 10 பேரைத்தான் போட்டிருக்கிறார்கள். இங்கேயும் குறைவாகத்தான் போடலாம் என்று முதலிலே எண்ணினோம். 12 பேர் போடலாம் என்று எண்ணினோம். ஆனால் நேற்று பேரவையிலே உள்ள கட்சித் தலைவர்கள் எல்லாம் கொஞ்சம் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்று கூறிய பிறகு, நாங்கள் அதை 21 உறுப்பினர்கள் என்கின்ற அளவுக்கு விரிவாக்கியிருக்கிறோம். டெல்லியிலே நாடாளுமன்றத்திலே இருக்கின்ற அந்தக் குழு 10 பேரோடு தான் இருக்கிறது. இங்கே 21 பேரோடு இந்தக் குழு அமைகிறது என்றால், இது உங்கள் கோரிக்கை அத்தனையையும் பெருந்தன்மையோடு நாங்கள் கவனிக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதிலும் நிறைவு கொள்ளவில்லை என்கின்ற நிலைமையில்லாமல் இப்போதைக்கு இதை ஒத்துக்கொண்டு எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்றினோம் என்கின்ற அளவுக்கு நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகின்றேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, on a matter of clarification. We are 63 Members in this House. I suggest that every Member of this House should be at least on one Committee. Some Members are on more than one Committee and there are a number of Members who are not on any Committee. There are Independents as well as Party members in this House. There should be only one representative for a Party on a Committee, because there are a number of Independents, so that each member could serve on one Committee at least. I think that it should be the method by which this should be done.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது இங்கு ஐந்து பி.ப. பேர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, வேண்டுமானால் கலந்து 4-50 கொண்டு இதுவரையிலே கமிட்டியிலே அங்கம் வகிக்காதவர்களை

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 29

இருக்கச் செய்யலாம் என்று எண்ணலாம். அதிலே ஒன்றை மறந்து விடக் கூடாது. தயவு செய்து உறுப்பினர்கள் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். இதைப் போன்ற காரியங்களைச் செய்கின்றவர் கள் கொஞ்சம் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கணக்கு வழக்குகளைப் பார்ப்பவர்கள் கொஞ்சம் கூர்மையான அறிவு படைத்தவர்களாக இருத்தல் வேண்டும். அறிவு படைத்தவர் கள் நிரம்ப இருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் கவனிப்பதற்கு தனிப்பட்ட, சிறப்பான அறிவு தேவை. அந்த அறிவைப் பெற்றவர்களைத்தான் இந்தக் கமிட்டியில் போட வேண்டிய வர்களாக இருக்கிறோம். ஆகவே, எதிலுமே இல்லை, ஆகவே போட வேண்டும் என்று எண்ணுவதைவிட, இதை என்னால் ஒழுங்காகச் செய்ய முடியும் என்ற அளவிலே கூறவேண்டும். இந்தக் கமிட்டியை முக்கியமான ஒன்றாகக் கருதுகிறேன். இதிலே எண்ணிக்கைக்காகப் போய் உட்கார்ந்துகொண்டு—யாரோ இங்கே பேசினார்கள்—தலைவர் தான் பேசியதாக நான் கருதுகின்றேன்—ஏதோ, போனோம், வந்தோம் என்றில்லாமல், கமிட்டி அந்தந்த ஊருக்குப் போயிற்று, 10 ஊர்களுக்குப் போயிற்று என்ற அளவுக்கு இல்லாமல், இந்தக் கமிட்டி நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். அந்த வாரியங்கள் நல்ல முறையில் செயல்பட்டாலும், மேலும் தீவிரமாகவும் செம்மை யாகவும் நடைபெறுவதற்கு இந்தக் குழு உதவிகரமாக இருக்க வேண்டும். இதை எண்ணித்தான் உறுப்பினர்கள் இதில் இடம் பெற வேண்டும். இப்படிப்பட்ட ஆற்றல் படைத்தவர்கள் தான் நிச்சய மாக இதில் இடம்பெற வேண்டுமென்பதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு எனப்படும், பேரவையின் குழு ஒன்று இருபத்தோரு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படவிருக்கிறது. அவர்களில், பதினெறு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, பேரவை, தனது உறுப்பினர்களி லிருந்து, ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்கத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஐந்து உறுப்பினர் களுக்கு மேற்படாத உறுப்பினர்களை, இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, சட்ட மன்ற மேலவை, தனது உறுப்பினர்க ளிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

1973 மார்ச் 29] [சட்ட மன்றத் தலைவர்]

ஆனால், முதற்குழுவின் உறுப்பினர்கள், நேர்வுக்கேற்ப சட்டப் பேரவைத் தலைவர் அல்லது சட்ட மன்ற மேலவைத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

2. இக்குழுவின் உறுப்பினர்கள், ஓராண்டுக் காலத்திற்கு அல்லது புதிய குழு அமைக்கப்படும் வரை பதவி வகிப்பர்.

3. இக்குழுவின் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தொழில் நிறுவனங்கள், சட்டப் பேரவைத் தலைவரால் அவ்வப் போது குறிப்பிடக் கூடிய அது போன்ற ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் அறிக்கைகள், கணக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் ;

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குறித்த தணிக்கையின் அறிக்கைகள் ஏதுமிருப்பின் அவற்றை ஆய்வு செய்தல் ;

(உ) பொதுத் தொழில் நிறுவனங்களின் தன்னாட்சி உரிமை, திறமை ஆகியவற்றை நினைவிற்கொண்டு, நல்ல வணிகக் கொள்கைகள், செயல் திறனுடைய வர்த்தக நடைமுறைகள் ஆகியவற்றிற்கிணங்க, பொதுத் தொழில் நிறுவனங்களின் அலுவல்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றனவா என்பது குறித்து ஆய்வு செய்தல் ;

(எ) விவர அட்டவணையில் குறித்த நிறுவனங்கள் சம்பந்தமாக பொதுக் கணக்காய்வுக் குழு, மதிப்பீட்டுக் குழு இவற்றின் அலுவல் களில் எதையாவது பேரவைத் தலைவர் இக்குழுவிற்கு ஒதுக்கினால் அந்த அலுவலை மேற்கொள்ளுவது ;

ஆனால், இக்குழு, கீழ்க்கண்டவை குறித்து ஆய்வு செய்தல் ஆகாது :—

(1) பொதுத் தொழில் நிறுவனங்களின் வணிக அல்லது வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்ட அரசின் கொள்கை குறித்தவை;

(2) அன்றாட நிர்வாகம் சம்பந்தமானவை;

(3) ஒரு பொதுத் தொழில் நிறுவனத்தை அமைத்த சட்டத்தின் படி அந்நிறுவனத்தின் காரியங்களை ஆய்வதற்கான தனி அமைப்பு இருந்தால் அக்காரியங்கள் குறித்து ;

(4) ஏனைய நேர்வுகளில், சட்டப் பேரவையின் பொறுக்குக் குழுவிற்குப் பொருந்தும் நடைமுறை விதிகள் பொருந்தும்.

சட்ட மன்றத் தலைவர்] [1973 மார்ச் 29

விவர அட்டவணை.

பொதுத் தொழில் நிறுவனங்களின் பட்டியல்.

சட்டப்படி அமைந்த கழகங்கள்.

தொடர் எண்.	நிறுவனங்களின் பெயர்.
1.	தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.
2.	தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியம், சென்னை.
3.	தமிழ்நாடு பண்டகசாலைக் கழகம்.
4.	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.
5.	தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.
6.	தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியம்.

அரசுக் கம்பெனிகள்

1.	தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.
2.	தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்றக் கழகம் லிமிடெட்.
3.	தமிழ்நாடு சிறுதொழில் கழகம் லிமிடெட்.
4.	தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.
5.	தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட்.
6.	தமிழ்நாடு சரிகை உற்பத்தி லிமிடெட்.
7.	தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் லிமிடெட்.
8.	தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் லிமிடெட்.
9.	தமிழ்நாடு திரைப்பட அரங்குக் கழகம் லிமிடெட், சென்னை.
10.	தமிழ்நாடு பால் பெருக்குக் கழகம்.
11.	பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2.
12.	பாண்டியன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், மதுரை மதுரை-16.
13.	சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கும்பகோணம்.
14.	சேரன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், பொள்ளாச்சி.
15.	அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம்.
16.	தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை.

973 மார்ச் 29] [சட்ட மன்றத் தலைவர்]

அரசு நிறுவனம்.

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்து.

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

ன்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/73) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை நம் முன் வைத்ததற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துச் சில வார்த்தை கள் கூற விரும்புகிறேன். இன்று நான் பேச ஆரம்பிக்கும் பொழுது சிறப்பாக அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கூடிய நிலைமையில் இருப்பேன் என்று கருதவில்லை. வழக்கம்போல், செய்த நன்மைகளைப் பாராட்டி விட்டு இன்னும் இன்னின்ன செய்ய வேண்டுமென்று கேட்கின்ற நிலையிலே தான் இருப்பதாக இன்று நினைத்துக்கொண்டு

@ 600-603 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வந்தேன். இவ்வவையில் நுழைந்தவுடனே மிகக் குறைந்த ஓய்வூதியம் ரூ. 40-லிருந்து ரூ. 50-க்கு உயர்த்தப்பட்டு விட்டது என்று சொன்னவுடனே, அரசைப் பாராட்டும் எண்ணம் ஒன்றும், சொல்வதற்கு ஒரு விஷயமும் இல்லையே என்ற கவலை ஒன்றும் என் மனதில் ஏற்பட்டது. இவ்வளவு சொல்வதற்கு அவசியம் இல்லாதபடி, அந்த மாநிலத்தைப் பாருங்கள், இந்த மாநிலத்தைப் பாருங்கள் என்று சொல்ல அவசியமே இல்லாதபடி, ஓய்வூதியம் ரூ. 40-ஐ ரூ. 50-ஆக அரசு உயர்த்திவிட்டது என்பதைக் கேள்விப்பட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஓய்வூதியத்தின் சரித்திரத்திலே வாழ்ந்தவர்களுக்குத் தான் இதனுடைய முக்கியத்துவம் நன்றாகத் தெரியும். 1955-லே ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வந்தபொழுது செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் அவர்களுக்குக் கீழே உள்ள ஆசிரியர்களுக்கும் தான் உண்டு என்று அன்றிருந்த கல்வி அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள். அவருடன் மூன்று ஆண்டுக் காலம் வாதாடி அதை பி.டி. ஆசிரியருக்கும் தலைமை ஆசிரியருக்கும் ரூ. 30 ஆகவாவது உயர்த்துங்கள் என்று வாதாடிப் பெற்ற சலுகையாகும். இன்று ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல. ஆசிரியர்களல்லாத சிப்பந்திகளுக்கும் கல்வி நிலையங்களில் ஓய்வூதியம் உண்டு என்ற நிலை இருக்கிறது. குறைந்த ஓய்வூதியத்தை ரூ. 40-லிருந்து ரூ. 50-ஆக உயர்த்திவிட்டதை நினைத்து நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், இன்றைக்குக் காலையில் தான் ஒரு முதியவர் என் அறைக்கு வந்தார். அவர் இந்த ரூ. 40-ஐ ரூ. 50-ஆக ஆக்க வேண்டுமென்று நேரடியாக என்னிடம் கேட்கவில்லை. என்னைடு சண்டைக்கு வந்தார். "ஐயா, நீங்கள் இங்கு வரும்பொழுது தினசரி ரூ. 7½ தான் டெய்லி அலவன்ஸ் பெற்றீர்கள், தெரியுமா உங்களுக்கு? அது ரூ. 12 ஆயிற்று, ரூ. 15 ஆயிற்று, ரூ. 20 ஆயிற்று, இன்றைக்கு ரூ. 25 ஆக ஆக்கிக்கொண்டிருக்கிறீர்கள். ரூ. 40-ஐ ரூ. 5 ஆவது கூட்டிக் கொடுக்கக் கூடாதா?" என்று வாதாடிக் கொண்டிருந்தார். நான் அந்தப் பெரியவருக்குப் பதில் சொன்னேன், "நீங்கள் கேட்பது ஓய்வூதியத்தில் உயர்வு அல்லவா? எங்களுக்கு உழைக்கும் காலத்திற்கு ஊதியம் அல்லவா ரூ. 5 உயர்ந்திருக்கிறது? எங்களுக்கு ஒன்றும் ஓய்வூதியம் கிடையாது ஐயா, ஓய்வூதியம் என்பது உங்களுக்குத் தான் உண்டு, எங்களுக்குக் கிடையாது. அதுவும் காலக் கிரமத்தில் உயர்த்தப்படும்" என்று கூறினேன். அரசு பெரு மனதுடன் இதை உயர்த்தி விட்டதற்குப் பெரிதும் பாராட்டுகிறேன். பல வயதான ஆசிரியர்கள் இன்று இரவு

இதை வானொலியில் கேட்டு மனமார அரசை வாழ்த்துவார்கள் என்ற உறுதிமொழியையும் அவர்கள் சார்பாகக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்த அரசு இவ்வளவு நியாயமாக, பரந்த நோக்குடன் எவ்வளவோ நற்காரியங்களைச் செய்தபோதிலும் கூட, அந்த ஆணைகளை நடைமுறையில் செயலாற்றும் நிர்வாக யந்திரத்தில் எத்தனையோ கோளாறுகள் இருக்கின்றன. இப்பொழுது கேள்வி நேரத்தில் நான் குறிப்பிட நேரிட்டது. திட்டவட்டமாக 6—பி என்று ஒரு விதியைக் குறிப்பிட்டு, இரண்டாவது சம்பளக் கமிஷன் ஆணைக் சூழ கொடுத்திருக்கின்றது. ஒரு சீனியருக்கு அவருடைய ஜூனியரை விடக் குறைவாகச் சம்பளம் கிடைக்குமானால், ஜூனியருக்குரிய சம்பளம் அவருக்கும் கொடுத்துவிட வேண்டுமென்று இருக்கிறது. ராஜபுதபுரம் மாவட்டத்தில் பல மாதங்கள் கொடுக்கப்படாமல், எங்கள் நடவடிக்கைகள் பயனற்றுப் போய், சட்ட மன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட பின்னால் தான் நியாயம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதால், சட்ட மன்றத்தின் உயரிய நல்ல காலத்தை இவ்வளவு வீணான, தேவையற்ற கேள்விகளை எழுப்பி நாங்கள் வீணாக்க வேண்டியிருந்தது. அப்படி எழுப்பினாலொழிய நியாயம் கிடைக்கவில்லையே என்பதை நினைத்து நான் வருந்துகிறேன். மற்றொன்றும் கூற விரும்புகிறேன். 2—10—1970-க்கு முன்னால் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கெல்லாம் ஒரு மாத போனஸ் அரசு அளித்திருக்கின்றது. அது பல மாவட்டங்களிலும் பல அரசு கஜானாக்களிலும் கொடுக்கப்பட்டு விட்டது. தஞ்சை மாவட்டத்திலேயே கூட, மன்னார்குடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் திருவாரூரிலே உள்ளவர்களுக்கு இதுவரையில் கொடுக்கப்படவில்லை. சென்று கேட்டால், உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். உத்தரவின் ஒரு பிரதியைக் கொண்டுபோய்க் கொடுத்தால், இது செல்லாது என்று சொல்கிறார்கள். பலருக்குக் கொடுத்தாகிவிட்டது. சிலருக்குக் கொடுக்கவில்லை. ஏனிந்த நிலை இருக்க வேண்டும்? அரசு கொடுக்க வேண்டுமென்று திட்டவட்டமாக அறிவித்த பின்னும் ஏன் இப்படிப் பட்ட நிலை இருக்க வேண்டும்? பொதுவாக மூன்றுவது ஒரு நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். சென்னையில் மோசஸ் என்ற ஒரு ஆசிரியர் 2—10—1970-க்கு முன்னாலேயே ஓய்வு பெற்றவர்—ஒரு மாத போனஸ் சட்டப்படி பெற்றிருக்கின்றார். இந்த மாதம் கஜானாவுக்குப் போனபோது, கொடுத்த ஒரு மாத போனசை திருப்பிக் கட்ட வேண்டும் என்று கேட்டு, திருப்பி வாங்கி விட்டார்கள். இது அநியாயம் என்று கருதுகிறேன். ஆணை இருக்கின்றது கொடுக்கப்பட

[திரு. எம். ராஜா அய்யர்] [1973 மார்ச் 29

வேண்டுமென்று. ஏன் கொடுக்காமல் இருக்க வேண்டும்? கொடுத்ததை ஏன் திருப்பி வாங்க வேண்டுமென்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஒய்வூதியத்தை உயர்த்தியதற்காக மறுபடியும் பாராட்டி விட்டு, ஒரே ஒரு வேண்டுகோளை மாத்திரம் இது சம்பந்தமாக வைக்க விரும்புகிறேன். அக்டோபர் 2-ஆம் தேதி 1970 முதல் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் எல்லாம் அமுலாக்கப் பட்டன. அக்டோபர் 2-ஆம் தேதி சரித்திரத்தில் முக்கியமான நாள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு தான் அரசு அறிந்து, ஆராய்ந்து, 2—10—1971 முதலான உயர்வுகளை நிர்வாக சௌகரியத் திற்காக 1—10—1971 முதலே கொடுத்து விடுங்கள் என்று ஆணை யிட்டது. இந்த ஆணையை 1—10—1970 முதலே அமுலாக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால், 1—10—1970-ல் ஓய்வு பெற்ற சிலருக்கு இந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளினால் நன்மை கிடைக்கவில்லை. இப்பொழுது, பின்னால் இன்கிரிமெண்டும் 1—10—1971-லிருந்தே கிடைக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக் கிறார்கள். அதையொட்டி, 1—10—1970-லிருந்தே அமுலுக்குக் கொண்டு வந்தால், பலர் இதனால் பலனடைவார்கள் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ரூ. 465 கோடி செலவு செய்யும் அரசு ஓய்வூதியத்திற்காக ரூ. 67 கோடி செலவு செய்கிறது. இன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த நன்மையால் இன்னும் சில லட்சம் ரூபாய் கூட செலவாகும். எத்தனை லட்சம் செலவு கூடினாலும், பல லட்சக் கணக்கான ஊழியர்களுடைய விலை மதிக்க முடியாத நல்லெண்ணத்தையும் நன்றியையும் அரசு பெறுகின்றது என்பதற்காக நான் அவர்களை மறுபடியும் பாராட்டு கின்றேன்.

"தமிரசு" பிரதிகள் சென்ற மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்தத் தமிழரசு மிகச் சிறந்த பத்திரிகையாக இருந்தபோதிலும்கூட "தமிழ்க் கல்வி"-யின் இடத்தை அது எடுத்துக்கொள்ள முடியாது. கல்விக்காக நாம் ரூ. 96 கோடி செலவு செய்யும்போது, கல்விக்காக பிரத்தியேகமான ஒரு பிரசுரம் கட்டாயமாகத் தேவை. "தமிழரசி"-ல் கல்வி சம்பந்த மாக ஓரிரு பக்கங்கள் போட்டிருந்தாலும், "தமிழ்க் கல்வி" போன்ற பிரதிகள் கட்டாயமாகத் தேவை. இது பரிசிலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. எடுத்த முடிவு இன்னும் அமுலாக்கப் படாதது மிகவும் வருந்தத் தக்கது. கல்வி இலாக்காவில் இன்னும்

1973 மார்ச் 29] [திரு. எம். ராஜா அய்யர்]

பல பிரச்சினைகள் ஆய்வில் இருக்கின்றன. அவற்றில் இதுவும் ஒன்று. விரைவில் நடவடிக்கைகள் எடுத்து, "தமிழ்க் கல்வி" பிரத்தியேகமாக, விரைவில் வெளி வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

சினியர் மெக்கானிக்பற்றிப் பல முறை இங்கே எடுத்துக் கூறியாகி விட்டது. சினியர் மெக்கானிக் எஞ்சினீயரிங் செக்ஷன் வரும்போது, "ஃபர்ஸ்ட் பார்ம்—ஐந்து வருடம் எக்ஸ்பீரியன்ஸ்" என்று இருக் கிறது. ஐ.டி.ஐ. பாஸ் பண்ணியவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணி ஐ.டி.ஐ. சர்டிபிகேட் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். 12 ஆண்டுகள் சர்டிபிகேட் பெற்றவர்கள் சினியர் மெக்கானிக்குகளாக இருக்கிறார் கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படாததால், அவர்கள் ஊதிய உயர்வு பெற முடியவில்லை. அது ஒரு சுலபமான பிரச்சினையாகும். 5-00 இதை ஆராய்வதற்கு இவ்வளவு காலம் எடுத்துக்கொள்ள வேண்டிய பி.ப. அவசியமே இல்லை. பலர் பொறுமை இழந்து விடுவதற்கு இது தான் காரணம் என்று நான் கருதுகிறேன். சிறிய பிரச்சினை கூட பல ஆண்டுக் காலமாக ஆய்வில் இருக்கிறது. இதை அரசு பரிசிலித்து முடிவு எடுக்கவேண்டுமென்று இனிமேலாவது கருதப்பட்டு, இந்த முடிவுகள் சீக்கிரமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

தமிழக அரசு நல்லாசிரியர் விருது ஆண்டு தோறும் 90 பேருக்குக் கொடுக்கிறது. அது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆனால் யாருக்குக் கொடுக்கின்றது, எந்த நாள் கொடுக்கின்றது என்று அறிவிக்கப்படுவதில்லை. எங்கே அளிக்கப்படும் எந்த நாளன்று அளிக்கப்படும் என்பதெல்லாம் காதும் காதுமாக, பிறருக்குத் தெரியாத ஒரு ரகசியமான செய்தியாக இருக்கிறது. அதில் புதிய அரசின் கொள்கை பின்பற்றப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன் அவர்கள் செப்டம்பர் 5-ஆம் தேதி ஆசிரியர் நாளன்று காலையில் இந்திய நாட்டின் நல்லாசிரியர்கள் யார், யார் என்று வானொலியில் கூறுகின்றார்கள். அதை நவம்பர் மாதம் 19-ஆம் தேதி டில்லியில் கொடுக்கிறார்கள். இம்மாதிரியாக இங்கே ஏன் இரண்டு நாட்களை வகுக்கக் கூடாது? திருவள்ளுவர் நாளன்று தமிழகத்தில் நல்லாசிரியர் 90 பேர் யார் என்று அறிவிக்க வேண்டும். பொங்கல் நாளையோ வேறு எந்த நாளையோ அதற்கென்று குறிப்பிட்டு அந்த நாளன்று அவர்களுக்குப் பகிரங்கமாகக் கொடுக்க வேண்டும். 2 "பிக்சட் பாயிண்ட்"—இந்த நாள் அறிவிக்கப்படும், இந்த நாள் அளிக்கப்படும் என்று இருக்க வேண்டும். இல்லாது போனால் சில ஆண்டுகளுக்குச்

[திரு. எம். ராஜா அய்யர்] [1973 மார்ச் 29

சேர்த்து அளிக்கக்கூடிய கோரத்தை நாம் பார்க்கிறோம். ஆண்டுகள் முடிந்து பல மாதங்கள் கழித்தும் யார், யாருக்கு விருது கொடுக்க முடிவு எடுக்கப் பெற்றுள்ளது என்ற அறிவிப்பு இல்லாமல் இருக்கிறது இவர்களுடைய புகைப்படங்கள், இவர்கள் நல்லாசிரியர்கள் என்பதற்கு இவர்களுடைய தகுதிகள், பண்புகள், இவர்கள் பாராட்டுக் குரியவர்கள் என்பதற்குத் தகுதிகள், இவைகளையெல்லாம் "தமிழ்க் கல்வி"யில் பிரசுரித்து அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்களுடைய அவல நிலையை அரசு உடனடியாக அறிந்து, அதை ஆராய்ந்து அவர்களுடைய நியாயமான குறைகளைப் போக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இவர்களெல்லாம் இங்கே வந்து நாங்கள் முதலமைச்சரவர்களைப் பார்க்க வேண்டும். பேட்டி காண வேண்டும், நாங்கள் கல்வியமைச்சரவர்களைப் பேட்டி காண வேண்டும், நீங்கள் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறார்கள். நான் அவர்களிடம் முதலிலே நீங்கள் நிர்வாகிகளிடம் செல்லுங்கள், இயக்குநரிடம் வாதிடுங்கள் என்று சொல்கிறேன். இந்த இடைநிலை ஆசிரியர்களுடைய ஊதியம் குறைவாக இருப்பது நியாயமான ஒரு மனக்குறை. அது போக்கப்பட வேண்டும். ஏனென்றால் இரண்டாவது ஊதிய ஆணைக்குழு இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாண்டு பயிற்சி பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்தோடு வெறும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு 200 ரூபாய் என்றால், இவர்களுக்கு 210, இரண்டு இன்கிரிமெண்ட் என்று நியாயமான ஒரு சலுகையைக் கொடுத்தது. ஆனால் தனி நபர் ஊதியக் குழு இதை எடுத்து விட்டது என்ற குறை ஏற்பட்டுள்ளது. இந்தச் சலுகை கொடுக்கப்படாமல் இருந்திருந்தாலும், ஒரு குறை இருந்திருக்காது. கொடுத்த நியாயமான சலுகையை நீக்கினது பெரும் குறையாகத் தோன்றுகிறது. இப்படித் தீராத நிலையிலே அவர்களுடைய குறைகள் இருக்கின்றன. சம்பள வேறுபாடுகள் பல இருக்கின்றன. இதை உடனடியாக அந்த சங்கக் காரியதரிசி அவர்களுடன், இலாகா தலைவர்களுடன் கூடிப் பேசித் தீர்க்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

[மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை]

கடைசியாக, ஒன்றைக் கூறி அமைகிறேன். தமிழக வர்த்தகம் பெருகுவதற்கு இன்றியமையாதது சேது சமுத்திரத் திட்டமாகும். அதைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் இங்கே அச்சிட்டு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ராமேஸ்வரத்தில் 43 ஆயிரம் அடிதான்

1973 மார்ச் 29] [திரு. எம். ராஜா அய்யர்]

வெட்ட வேண்டியிருக்கும். மண்டபத்தில் வெட்டினால் 48,000 அடி வெட்ட வேண்டியதாக இருக்கும்; இராமேஸ்வரத்தில் வெட்டினால் 37 கோடி ரூபாய் செலவாகும். மண்டபத்திலானால் 55½ கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். 18½ கோடி ரூபாய் மிச்சமாகும். சீக்கிரமாக கப்பல்களெல்லாம் கிழக்கிலிருந்து மேற்கேயும், மேற்கேயிருந்து கிழக்கேயும் செல்லலாம். இந்தப் பகுதியில் வெட்டினால் பெருமளவிற்கு நன்மை பயக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது: இது தொழில் நுட்ப முறையில் வரவேற்கத் தகுந்த திட்டம் என்று வல்லுநர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்திய அரசிற்கு ஆண்டு தோறும் இரண்டாவது ஆண்டிலிருந்து 1.62 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியில் கிடைக்கும். விலை மதிப்பற்ற அந்நியச் செலாவணி. சாதாரண நம் நாட்டு நாணயமல்ல, சிறந்த வருவாயைக் கொண்டு வரக்கூடிய ஒரு திட்டம், இந்த நாட்டு மக்களுக்கு இன்றியமையாத திட்டம் என்கிறதை நமது அரசு மத்திய அரசிற்கு விளக்கக் குறிப்பீடுகளுடன், அச்சிட்டுக் கொடுப்பதுடன், இந்தத் திட்டத்தை நமது முழு ஆற்றலுடன், நமது முழுச் சக்தியுடன், நமது முழு அறிவினைச் செலுத்தி, அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 மணித்துளிகள் பேசி முடித்து ஒத்துழைக்க வேண்டிக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : மாண்புமிகு உப தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிற நிதி ஒதுக்கீடு மசோதாவில் சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன்.

அண்மையில் வெள்ளப் பாழினால் பாதிக்கப்பட்ட பெரும் பகுதி தென் ஆற்காடு ஜில்லா. அந்த ஜில்லாவிலே அதற்கான நிவாரண உதவிகளெல்லாம் செய்யப்பட்டுவருகின்றன. இந்த வெள்ளப் பாழிலே பல ஆயிரக்கணக்கான ஏக்கரா மண்மேடிட்டுப் பாழாகியது. இன்றைக்கு இந்த மண்ணையெல்லாம் வாரிக் கொட்டி சீர் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இந்த மாதிரி ஒரு நிலை வந்ததற்குரிய காரணத்தை நாம் கூர்ந்து கவனித்து, ஆராய்ந்து அதைத் தவிர்ப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏதோ எப்போதோ வெள்ளம் வருவது, மழை பெய்வது, மண் படிவது என்று இருந்தாலும், இந்த மழையால் அதிகமான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1973 மார்ச் 29

மணலைக் கொண்டு வருவதற்கு என்ன காரணம் என்றால், சாத்தனூர் அணைக்கட்டில் தண்ணீர் அதிகமாகத் தேங்கிப் போய்விட்டது. அதனால் அந்த அணைக்கு ஆபத்து வந்துவிட்டது, அதனால் அதைத் திறந்துவிட வேண்டுமென்ற ஒரு நிலை, நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அதைக் கட்டுப்படுத்தி விடவில்லை, அல்லது முடியவில்லை, தவிர்க்க முடியவில்லை. அதே சமயத்தில் திறந்து விட்டதனால் இது மாதிரி ஒரு பெரிய விபரீதத்திற்குத் தென் ஆர்க்காட்டில் உள்ள விவசாயிகள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் ஒரளவிற்கு அரசாங்கம் முன்வந்து இதைச் செய்திருக்கிறது. அந்த சாத்தனூர் அணைக் கட்டு மேற்கொண்டு நீரைத் தேக்கும்படி, அதை விரிவுபடுத்த வேண்டும். அதற்கு அப்பால் அணையைக் கட்டி, சாத்தனூர் அணைக்குக் கீழே அல்லது மேலே இன்னும் ஒரு அணையைக் கட்டி நீரைத் தேக்கினால், தென் ஆர்க்காடு மாவட்டத்தை வெள்ளத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அணைத் தேக்கங்களிலிருந்து விவசாயிகளுக்கு தண்ணீர் வசதி, பாசன வசதி செய்து கொடுக்க முடியும். இந்த பெண்ணையாறு, கடலூர் நதி இணைகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டால், அது நல்லது என்பதுடன் கடலூர் பகுதியிலுள்ள நிலங்களுக்கு, கடலூர் நதியில் இருக்கிற மூன்று அணைக்கட்டுகளின் நீரைக்கொண்டு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அதற்கான திட்டம், பெரிய திட்டம் ஒன்றும் தேவையில்லை. கடலூரையும், பெண்ணையாறையும் இணைப்பதற்கு ஒரு சின்ன தடுப்பு இருக்கிறது. அதை இன்னும் சீர்படுத்தி பெண்ணையாற்றிலிருந்து கடலூரைப் பிரிப்பதற்கு ஒரு மதில் சுவர் கட்டினால் போதும். இப்படிக் கட்டித் திருப்பினால், அதிகமான நீரை ஒதுக்கித் தள்ளி விட முடியும். இப்போது புதுவை மாநிலத்திற்கு, இன்னும் விழுப்புரம் போன்ற பகுதிகளுக்கு பெண்ணையாற்றுத் தண்ணீரை உபயோகப்படுத்த முடியும். அதே சமயத்தில் இந்தச் சாத்தனூர் வெள்ளப் பாழையும் தவிர்க்க முடியும். அதை மட்டுப்படுத்த முடியும், கட்டுப்படுத்த முடியும். அதே சமயத்தில் விவசாய மக்களுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெருக்கிக் கொடுக்க முடியும் என்பதை அரசாங்கத்தினுடைய நினைவிற்குக் கொண்டு வருகிறேன். முதலில் வறட்சி, அப்புறம் அதிக மழை, இன்றைக்குத் கடைசியாக மின்சார வெட்டு, இவைகளினாலெல்லாம் விவசாயிகள் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை இப்போது அதிக நிர்ப்பந்தமும், கெடுபிடியும் செய்து அவர்களிட மிருந்து கடன் வசூல்கள், வரி வசூல்கள் எல்லாம் செய்கிறார்கள் என்று பல தகவல்கள் வந்திருக்கின்றன. நேற்றுக்கூட ஜெயங்

1973 மார்ச் 29] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

கொண்டம் பகுதியில் கூட்டுறவுக் கடன்களும் மற்ற பாங்கிக் கடன்களும் கெடுப்பிடியோடு வசூல் செய்யப்படுகின்றன, அவர்களுடைய மாடுகள், மற்றவைகள், வீட்டுச் சாமான்கள் எல்லாம் ஜப்தி செய்து எடுத்துக்கொண்டு போகப்படுகின்றன, நாங்களெல்லாம் ரொம்பத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறோம் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மிச்சார வசதி இல்லாத காரணத்தினால், எங்களுக்கு ஒரு வருட மாவது இந்தக் கடன் வசூல் நிறுத்தி வைக்கும்படி சொல்ல வேண்டுமென்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதே போன்று செஞ்சி, திண்டிவனம் தாலூக்காக்களில்கூட வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இடங்களில், கடன் வசூல், வரி வசூல்களுக்காக நிர்வாகத்தினர் நிர்ப்பந்தப்படுத்தி வருகிறார்கள். அதையெல்லாம் சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். எவ்வளவோ முறைகள் அப்படி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தவில்லையென்று அறிக்கைகளும், விளக்கங்களும் இங்கே தரப்படுகின்றன. ஆனால் அங்கே அவையெல்லாம் செயல்படுகின்றனவாவென்றால், இல்லை. அவர்களிடமிருந்தெல்லாம் பல கடிதங்கள் வருகின்றன. அதையெல்லாம் கவனித்து அரசாங்கம் தற்காலிகமாக அந்த வசூல்களையெல்லாம் நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 5-10 பி.ப.

பின்தங்கிய மக்களுடைய வசதிகளுக்காக, நம்முடைய முதல்வரவர்கள் அதிகக் கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. பின் தங்கியோர் பட்டியலில், ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அதில் இருக்கிற நிதி வசதிகளைப் பெருக்கிக்கொண்டு, மேற்கொண்டு பல சமூகத்தைச் சேர்ப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே நிதி நிலை இருக்கின்றபோது கேட்பவர்களையெல்லாம், ஒவ்வொரு சமூகமாக "நஷ்டம் இல்லை" என்று சொல்லிச் சொல்லிச் சேர்க்கிறார்கள். இந்த பட்ஜெட் செஷனிலேகூட ஒரு சமூகத்தைப் பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அந்த சமூகத்தினர், தங்களுடைய முன்னேற்றத்திற்காக, அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறுவதில் நான் இடைஞ்சலாக இல்லை. ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி அதே நிதிதான். எனவே அந்தப் பட்டியலிலே மேற்கொண்டு

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1973 மார்ச் 29

சேர்ப்பதினால், ஏற்கெனவே கஷ்டத்தில் உள்ளவர்கள் மேலும் பாதிப்புக்குத்தான் உள்ளாவார்கள். இதனால் அவர்களது பொருளாதாரத் துறையில் உயர்வு ஏற்படுமென்று எண்ணவில்லை. இப்போது இருக்கின்ற நிலையில், வேலை வாய்ப்புகள், கல்வி நிலையங்களில் படிப்பதற்கான வசதிகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சமயத்தில், தமிழ் நாட்டிலே பெரிய சமூகமாக இருக்கக்கூடிய வன்னிய சமூகத்திற்கு குறிப்பிட்ட வேலை வாய்ப்புகள், உத்தியோகங்கள் இல்லாத நிலையைப் பார்க்கிறோம். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எந்தப் பொறுப்பான பதவிகளிலும் இல்லை. உயர்நீதி மன்றங்களிலோ அல்லது ஜில்லா நீதி மன்றங்களிலோ, அல்லது படிப்படியாக இருக்கின்ற முக்கியமான இடங்களிலோ அவர்கள் இல்லை. ஆனால், அதே நேரத்தில் மற்ற சமூகத்தவர்களெல்லாம் எப்படி எப்படியோ அந்தப் பதவிகளுக்கு வந்துவிடுகிறார்கள். பிற்பட்ட சமூகம் என்ற போர்வையில் எப்படியோ புகுந்து வந்துவிடுகிறார்கள். திரு. சட்டநாதன் அவர்கள் பரிந்துரையில்கூட, சில சமூகங்களை, அந்தப் பின் தங்கியோர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது குறித்து ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அதே சமயத்தில் அந்தப் பட்டியலில் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போகிறது. எனவே முதலமைச்சரவர்களும், அரசாங்கமும் தகுந்தபடி கவனித்து, ஏற்கெனவே கீழ் தளத்தில் இருக்கும் மக்களுக்கு என்னென்ன சலுகைகளை அளிக்க வேண்டுமோ, அவைகளை அளிக்க வேண்டும். இப்போது பின் தங்கிய மக்களுக்காக 49 சதவிகிதம் வேலை வாய்ப்புகளுக்காகவும், கல்வித் துறையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, அந்தப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 15 சதவிகிதம் ஒதுக்கி, விசேஷ கவனம் செலுத்திஞலொழிய, இந்த நிலை மாறிட எந்தவித வாய்ப்பும் இல்லை. அரசாங்கம் அதைக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, பெரிய எண்ணிக்கையில், தனிச் சமூகமாக இருக்கின்ற ஹரிஜனங்களைவிட அதிக எண்ணிக்கையுடைய வன்னிய சமூகத்திற்கு எந்தவிதமான ஆதரவும், பாதுகாப்பும் தமிழ் நாட்டில் இல்லை. குறிப்பாக தேர்வு ஆணைக் குழு—சர்வீஸ் கமிஷன் போன்ற இடங்களில் எல்லா சந்தர்ப்பத்திலும் மற்ற சமூகத்தினர் இருந்து, அவர்களைப் பாதுகாப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையும் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1973 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, நீதிபதிகள் அல்லது வேறு பெரிய அதிகாரிகள் பதவிகளுக்கெல்லாம் 'Direct recruitment' மூலம் செய்ய முடியாது. அதற்கு யாராவது இருந்தால், அப்படிப்பட்டவர்களை எடுத்துக்கொள்வதில் இந்த அரசு எந்தவிதமான தயக்கமும் காட்டுவதில்லை. அப்படி யாராவது கிடைப்பார்களா என்று தேடி, அலைந்துகொண்டுதான் இருக்கிறோம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: எந்தவிதமான தகுதியும், திறமையும் வேண்டுமோ, அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு) ஆளைத்தான் கொடுக்கிறோம். (சிரிப்பு). தகுதி, திறமையை நிர்ணயிக்கிறவர்கள் யார்? சொல்லுங்கள். 'Who is the competent person to decide?' அதற்கு யாராவது மேலே இருக்கிறவர்கள், முற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அது சரி இல்லை, இது சரியில்லை என்று தள்ளிவிடுகிறார்கள். அதனாலே அவர்கள் கீழேயே இருந்து retire ஆகிவிடுகிறார்கள். மேலே போக முடியவில்லை. இந்தப் பிரச்சினையை முதலமைச்சரவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர் இதுபற்றி நன்றாகச் செய்வார் என்று நம்பிக்கை உண்டு. எனவே கால தாமதமில்லாமல், அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வேண்டி, கேட்டுக் கொள்கிறேன்.

மது விலக்கிற்குப் பிறகு, புதுவையிலே இரண்டு சோதனைச் சாவடிகளைப் போட்டிருக்கிறார்கள். மது விலக்கு இருந்தபோதுகூட அந்த சோதனைச் சாவடிகள் கிடையாது. இப்போது கடலூருக்குப் போனால், 2 இடத்தில் காரை நிறுத்தி சோதனை செய்கிறார்கள். முன்பெல்லாம்கூட அந்த மாதிரி நிலைமைகள் இல்லை. மூன்று மைலிலே இரண்டு சோதனைச் சாவடிகள். ஒன்று ரெட்டிச் சாவடியில் இருக்கிறது. இரண்டு மைல் தள்ளி அடுத்த சாவடி இருக்கிறது. இங்கே பத்து கான்ஸ்டபிள்கள், அங்கே பத்து கான்ஸ்டபிள்கள் நின்று கொண்டு, காரை நிறுத்தி, அதைத் திற, இதைத் திற, டிக்கியைத் திற என்கிறார்கள். திறந்து பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை. அது மிகுந்த தொல்லையாக இருக்கிறது. முன்பெல்லாம்கூட, மத்தியில் திடீரென்று காரை நிறுத்திப் பார்ப்பார்கள். அப்படித்தான் நடக்கும். ஆனால் இப்போது அவ்வளவு பெரிய ஆபத்து என்ன இருக்கிறதென்று தெரியவில்லை. என்ன ஏய்ப்பு இருக்கிறதென்று தெரியவில்லை. மூன்று மைலுக்கு ஒரு தடவை சாவடி வைத்து, காரை நிறுத்தி, டிக்கியைத்

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1973 மார்ச் 29

திறந்து காட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தம் இருக்கிறதைக் காணும் போது, நான் வியப்பு அடைகிறேன். மது விலக்கு இருந்த காலத்தில் கூட அப்படிப்பட்ட ஒரு கெடுபிடி இல்லை. மத்தியில் காரை நிறுத்திப் பார்ப்பார்கள். திடீர் திடீரென்று போலீஸ்காரர்கள் அப்போது நிறுத்திப் பார்ப்பார்கள். ஆனால் இன்றைக்கு 3 இடங்களில், புதுவையில், காரை நிறுத்திக் காட்டும் நிலை இருக்கிறதென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு, அதை மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, திரு. ராமசாமி படையாச்சி அவர்கள், பிற்படுத்தப்பட்டோருடைய வகுப்பில் வேறு சில பிரிவினரைச் சேர்ப்பதில் ஆட்சேபணையில்லை, ஆனால் அவர்களைச் சேர்க்கச் சேர்க்க, நிதியையும் அதிலே சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன், மறந்திருக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். 1966–67 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 90 லட்சம் அல்லது 1 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 6½ கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதை நான் அவர்களுக்கு கவன மூட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: அந்தத் தொகை போதாதென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

* திரு. ஜி. பராங்குசம்: துணைத் தலைவரவர்களே, இந்த 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் நான் அதிகமாக இங்கே பேசுவதாக இல்லை. பொதுவாக நம் முடைய அமைச்சரவைக்கும், முதல்வரவர்களுக்கும், இந்தச் சபைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளத்தான் நான் இப்போது அவையின் முன் நிற்கிறேன். நான் சென்ற நிதிநிலை அறிக்கையில், இங்கே பேசுகின்றபோது, மிக முக்கியமான பிரச்சினையை முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதாவது சாலை பராமரிப்புத் தொழிலாளர்களுக்கு பல ஆண்டுக் காலமாக இருக்கின்ற வேலை நிலைமையை நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று சென்ற 2 ஆண்டுகளாக வலியுறுத்தி நிதிநிலை அறிக்கைப் பேச்சுக்களிலே தெரிவித்து வந்தேன். அதை முதலமைச்சரவர்கள் கவனிப்பதாக வாக்கு அளித்திருந்தார். அதை இப்போது நிறை வேற்றும் வகையிலும், நிவர்த்திக்கின்ற வகையிலும், பல ஆண்டு

1973 மார்ச் 29] [திரு. ஜி. பராங்குசம்]

களாக மிக மோசமான நிலையில் இருந்த அந்தப் பணியாளர்களை மீட்கின்ற அளவுக்கு, முதலமைச்சரவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தப் பணியாளர்களுக்கு விமோசனம் தேடித் தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 6,762 தொழிலாளர்களை நிரந்தரமாக்கியிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு, எண்ணற்ற ஏழைத் தொழிலாளர்கள் மகிழ்ச்சிக் கடலிலே மிதந்துகொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. ஏறத்தாழ 11,000 தொழிலாளர்கள் சாலைப் பராமரிப்புத் தொழிலாளர்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே 10,000 தொழிலாளர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் உள்ளவர்கள் அத்தனை பேர்களையும் முதலிலே நிரந்தரமாக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கென்று இதுவரையில் அடிப்படைச் சம்பள வரையறை இல்லாமல் இருந்தது. அவர்கள், அடிப்படைச் சம்பளம் 36 ரூபாயும், டி.ஏ. போன்றவைகள் சேர்த்து 127 ரூபாயும் தான் கையிலே வாங்கிக்கொண்டிருந்தார்கள். அதிலே அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதால், அவர்கள் ஒரு நாளைக்கு வேலைக்கு வரவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு எந்தவிதமான லீவும் இல்லை, சம்பளமும் பிடிக்கப்பட்டுவிடும். கையிலே மாதச் சம்பளத்தில் பிடித்தம்போக ரூ. 70, 80 தான் ஒவ்வொரு தொழிலாளியும் பெற்றுக்கொண்டிருந்தார். அப்போர்ப்பட்ட தொழிலாளர்களுக்கு சம்பள விகிதத்தை வரையறை செய்து, ரூ. 127 வாங்கிக் கொண்டிருந்த அத்தனை பேர்களுக்கும் இன்னும் அதிகமாக ரூ. 3 கொடுத்து ரூ. 130 ஆக்கி, அதற்கு என்று ஒரு ஸ்கேலை ஏற்படுத்தி, ரூ. 130—4—150—5—165 என்ற நிலைக்குக் கொண்டு வந்ததற்கு நான் உள்ளபடியே என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு டியர்ன்ஸ் அலவன்ஸ் ரூ. 30-ம் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸும் —எந்தெந்த ஏரியாவிற்கு எந்தெந்த அளவிற்கு நிர்ணயித்திருக்கின்றார்களோ, அப்படி என்னென்ன அலவன்ஸ் உண்டோ, அந்த அலவன்ஸ் எல்லாம்—தரப்படும் என்று அவர்கள் அறிவித்திருக்கின்ற செய்தி ஒரு பெருமகிழ்ச்சிக்குரிய செய்தி. நான் அந்தத் தொழிலாளர்கள் சங்கத்திற்குத் தலைவனாக இருக்கின்றேன். அந்த நெடுஞ்சாலை, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றுகின்றவர்கள் 17, 18 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், நமது பெருமதிப் பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பி.டி 5-2

[திரு. ஜி. பராங்குசம்] [1973 மார்ச் 29

அது மாத்திரமல்ல, இன்றையதினம் இந்த ஒரு நல்ல செய்தியை அறிவித்திருக்கின்றார்கள். நான் அடுத்த ஆண்டு இந்த அவையிலே அதை ஒரு கோரிக்கையாக வைக்கலாம் என்று இருந்தேன். முதலிலே நிரந்தரமாக்கப்படவேண்டும், பிறகு படிப்படியாக அவர்களுக்கு வேண்டிய உரிமைகளையும் கோரிக்கைகளையும் வைக்கவேண்டு மென்றிருந்தேன். ஆனால் எதை நான் நினைத்திருந்தேனே அந்தக் கோரிக்கைகளில் ஒன்றை இன்றையதினம் எங்களையெல்லாம் கேட்காம லேயே நிறைவேற்றிவிட்டார்கள். நாங்கள் அந்தக் கோரிக்கையை விடுவதற்கு முன்னாலேயே எப்படியோ கேள்விப்பட்டிருக்கின்றார்கள், அந்தக் கோரிக்கையை நாங்கள் வைக்கப்போகிறோம் என்று. எப்படியோ கேள்விப்பட்டு இன்றையதினம் சட்ட மன்றத்திலே அதைப்பற்றித் தெரிவித்ததைக் கண்டு நான் புளகாங்கிதம் கொண் டேன். "அந்தத் தொழிலாளர்கள் வெய்யிலிலும் மழையிலும் ரோடுகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றவர்கள். காய்ச்சுகின்ற தார் காலிலே ஒட்டிக்கொள்கின்ற அளவுக்கு பணியாற்றிக் கொண் டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மிக முக்கியமானது எது என்று கருதி, செருப்பு முதல் முதலாகக் கொடுக்க வேண்டும். அதாவது மிதியடி கொடுக்க வேண்டும்" என்ற கோரிக்கையை இன்றையதினம் நிறைவேற்றிவிட்டார்கள். ஏறத்தாழ 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் மிதியடி கொடுப்பது என்று அவர்கள் இன்றையதினம் முடிவு செய்து கீழ்சபையிலே அவர்களுடைய அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அங்கேதான் சொல்லியிருக்கின்றார். இங்கே இன்னும் சொல்லவில்லை.

திரு. ஜி. பராங்குசம்: ஆமாம். 10 ஆயிரம் தொழிலாளர் களுக்கும் தருவதாகச் சொல்லியிருப்பது அவருடைய பெரிய மனதை யும், இந்த அரசு தொழிலாளர்கள்பால் எவ்வளவு அன்பு கொண் டிருக்கின்றது, அதுவும் கீழ் மட்டத்திலே இருக்கின்ற தொழிலாளர் கள்பால் எவ்வளவு அன்பு கொண்டிருக்கின்றது என்பதையும் காட்டு கிறது. இதையெல்லாம் நாம் பார்க்கின்றபோது, நான் இந்த அமைச் சரவைக்கும், மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெரிய மனத்துக்கும் என்னுடைய 17 ஆயிரம், 18 ஆயிரம் தொழிலாளர்கள் சார்பாக, துணைத் தலைவர் அவர்கள் மூலமாக, நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் பல நல்ல காரியங்களை இந்த அறிக்கையிலே சொல்லியிருக் கின்றார்கள். சென்ற ஆண்டு பென்ஷன்தாரர்கள் எல்லாம் ஒரு

1973 மார்ச் 29] [திரு. ஜி. பராங்குசம்]

மகாநாட்டை, திருச்சியிலே கூட்டினார்கள். அங்கே என்னிடத்திலே ஒரு வேண்டுகோளை விட்டார்கள். அப்போது நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்கின்றேன் என்று சொன்னேன். ஆகவே அவர்களிடமிருந்து பெற்று வந்த மனுவை அமைச்சர் அவர்க ளிடத்திலே கொடுத்தேன். அவர்களுக்கும் ஓய்வூதியத்தை இன்று ரூ. 40-லிருந்து 50 ஆக உயர்த்தியிருக்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தி எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது. அமைச்சரவைக்கும், குறிப்பாக கலைஞர் அவர்களுக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மான்யத்தின்கீழ் பேச வாய்ப்பு அளித்தமைக் காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித் துக்கொள்கின்றேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நிலை ஒரு பயங்கரமான சூழ்நிலை. அது தி.மு.க. அரசாங்கத் திற்கே ஒரு சவாலாக இருக்கக்கூடிய நிலையாக இருக்கின்றது, மின் சாரத் தட்டுப்பாடு என்பதை யாரும் மறுக்க முடியாது. மின்சாரத் தட்டுப்பாடு மட்டுமல்ல, நெசவாளர்கள் பிரச்சினையும் இரண்டறக் கலந்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் விலைவாசியும் ஏறிக் கொண்டே இருக்கின்றது. இந்த மூன்று பிரச்சினைகளும் மூன்று கோணங்களாக இருந்து வருகின்றன. பொதுவாக எந்த அரசியல் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும், இந்த நாட்டு மக்களுடைய அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். ஜனநாயக ரீதியில் இயங்கி வரும், ஆளும் கட்சியினருக்கு இது ஒரு சவாலாக இருந்துகொண் டிருக்கின்றது. மின்சாரத் தட்டுப்பாட்டினால் இன்றைக்கு எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அரசாங்கம் கணக் கிடமுடியாத ஒரு நிலை இருக்கின்றது. அதனால் எதிர்காலம் பொரு ளாதார ரீதியில் எவ்வளவு பாதிப்பிற்குள்ளாகும் என்பது ஒரு பக்கம் இருக்க, விவசாயிகள் பெருவாரியாக தனிப்பட்ட முறையில் பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள். இதனால் விவசாயிகள் இந்த நாட்டிலே மிக மிகப் பின்தங்கிவிடுவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இப்போது தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக் கின்றன. அதற்கு என்ன பரிகாரம் என்று தெரியாத நிலைமையிருக் கின்றது. மின் வெட்டு 95 சதமாக ஆகிவிடுமோ என்ற பயம் மக்களிடையே பரவலாக இருந்துகொண்டிருக்கின்றது. அதற்கு

[திரு. எல். பலராமன்] [1973 மார்ச் 29

முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அதை நாட்டுப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அதற்கான பரிகாரத்தைக் காணவேண்டுமென்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன். இதில் கட்சி நோக்கம் இல்லாதிருந்தாலும், அதை தேசியப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு பதிலையும், மாநில அமைச்சர்கள் ஒரு பதிலையும் தந்து கொண்டிருப்பது மக்களை எங்கேயோ திசை திருப்பி "நாங்கள்தான் செய்கின்றோம், இவர்கள் செய்யவில்லை" என்று காட்டுகின்ற மாதிரியான நிலையிருக்கின்றது. இந்த நிலையினால் மிகவும் பயங்கரமான ஒரு சூழ்நிலையிருக்கின்றது. இங்கே மாநில அமைச்சர்களைக் கேட்டால், அதற்கெல்லாம் மத்திய அமைச்சர்கள் தான் காரணம் என்று சொல்லுகின்றார்கள். மத்திய அமைச்சர்களைக் கேட்டால், "நாங்கள் அல்ல, மாநில அமைச்சர்கள்தான் காரணம்" என்று சொல்லுகின்றார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி இரண்டு பேர்களும் சொல்கின்றபோது, அதில் எது உண்மை என்பதைத் தீர்மானித்து மக்களுக்குச் சொல்லக்கூடிய இடத்திலேதான் நீங்கள் இருக்கின்றீர்கள். ஆகவே இங்கு சொல்லப்படுகின்ற விளக்கங்களையெல்லாம் கேட்டு அதில் எது உண்மை என்று மக்களுக்குச் சொன்னால்தான் அவர்களுக்குத் தெளிவு கிடைக்கும்.

திரு. எல். பலராமன்: அந்த பதிலை மக்களும் உணர்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதை நான் இந்த அவையின் மூலமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். கடந்த 26-ஆம் தேதியன்று என்று கருதுகின்றேன். தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கின்ற முன்னாள் அமைச்சராகிய மதிப்பிற்குரிய திரு. ராமய்யா அவர்கள், ஏதோ ஒரு மேடையில் அல்லது மகாநாட்டில் பேசும்போது என்று கருதுகின்றேன், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால்தான் இந்த மின்சார இலாக்காவை நிர்வகிக்க முடியும்" என்று பதில் கூறியிருக்கின்றார்கள். இதைப் பார்க்கும்போது, ஏதோ உங்களுக்குள், மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் இடையே போட்டியிருப்பதாக நான் கருதுகின்றேன். அந்தப் போட்டியைத் தவிர்த்து இந்தப் பிரச்சினையை மக்களுடைய பிரச்சினையாகக் கருதி.....

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது போட்டியல்ல. ஒரு வேளை மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள் தங்கள் அரசாங்கத்தின் மீது பழி வரக்கூடாது என்ற எண்ணத்தில் பேசக்கூடும்.

1973 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

மாநிலத்திலுள்ள அமைச்சர்களே கூட தங்கள் மீது பழி வரக் கூடாது என்று பேசக்கூடும். ஆக அப்படி இருக்கின்றது என்று சொல்லி, இடையிலேயுள்ளவர்கள் எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் தப்பித்துக்கொள்ளக்கூடாது. அதிலே குற்றச்சாட்டு எங்கே இருக்கின்றது, குறை எங்கே இருக்கின்றது, யார் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை என்று சொன்னால், மக்களுக்குத் தெளிவு ஏற்படும். அரசாங்கமும் திருந்தும்.

திரு. எல். பலராமன்: துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி. இந்த இரண்டு தரப்பினரும் ஏதோ மக்கள் மத்தியிலே இருந்து தப்பிக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் இப்படிக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இரண்டு அரசாங்கங்களும் தங்கள் கடமைகளைச் செய்யவில்லை என்றுதான் மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள் என்று இந்த அவையின் மூலமாகக் குற்றம் சாட்டுகின்றேன். இந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் பெருவாரியாக இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த மாவட்டத்திலே ஐந்தில் நான்கு பாகத்தில் மின்சார பம்புசெட்டுகளைக் கொண்டே விவசாயம் நடைபெறுகின்றது. வட ஆற்காடு மாவட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் உணவு உற்பத்தியைச் செய்யக்கூடிய மாவட்டமாக இருக்கின்றது. அப்படியிருந்தும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு இன்றைக்கு ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் மின்சாரம் தருவதால், விளைச்சல்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு சாவியாகக்கூடிய ஒரு நிலைமையிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அதற்கு என்ன பரிகாரம், என்ன நடவடிக்கை என்று பார்த்தால், ஒன்றும் எடுத்ததாகத் தெரியவில்லை. இன்றைக்கு மின்சாரமின்மையால் அந்த விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். நாட்டினுடைய உணவு விளைச்சலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அரசு உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அதற்கென ஒரு பரிகாரம் தேடி ஒரு நல்ல நிலைமை ஏற்படுவதற்கு, போர்க் கால நிலை என்று கூறி, அந்த மாதிரி போர்க் கால நிலை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏதோ பேச்சளவுக்கு மட்டும் கூறினால் போதாது என்று

தான் நான் கூற ஆசைப்படுகின்றேன். இந்தக் கஷ்ட நிலையை நிவர்த்திக்க வட ஆற்காடு மாவட்டத்திற்கு அதிகமான மின் சாரத்தை வழங்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். இந்த நேரத்தில் அரை மணி நேரம் கொடுக்கும் மின்சாரம் கூட தொடர்ந்தாற்போல நாலைந்து நாட்களுக்கு இல்லை என்ற நிலை இருக்கின்றது. போளூர் தாலூகாவிலே சந்தவாசல், ஆரணி போன்ற பகுதிகளிலும், வேலூர் தாலூக்காவிலே சில பகுதிகளிலும் மின்சாரம் இல்லாத நிலை பரவலாக இருக்கின்றது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். அதற்கென்று முதலமைச்சர் அவர்களுக்குத் தந்தி கொடுத்திருக்கின்றார்கள். எனக்கு வந்த தந்தியை முதலமைச்சரிடம் தந்திருக்கின்றேன் என்பதை இந்த அவையில் கூறிக்கொள்ள ஆசைப் படுகின்றேன். அதிலும் விவசாயம் பெருகி விட்டது, பசுமைப் புரட்சி ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் கூறுகின்றார்கள். இந்த நாட்டிலுள்ள விவசாயப் பெருமக்கள் தங்களுடைய ஊக்கத்தின் காரணமாகவும் உழைப்பின் காரணமாகவும் ஓரளவுக்கு விவசாயத் தில் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பதற்காக இந்த அவையின் மூலம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக் கின்றேன். இன்றைக்கு அந்த விவசாயப் பிரிவிலே எங்கள்
பி. ப. 5-30 மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட, பல அதிகாரிகள் இருக் கின்றார்கள். முன்பெல்லாம் ஒரு தாலூக்காவுக்கு ஒரு விவசாய அதிகாரியும் மாவட்ட அளவில் ஒரு மாவட்ட விவசாய அதிகாரியும் தான் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த விவசாயப் பகுதி பெருவாரியாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. விஸ்தரிக்கப்பட்டதை நான் குறைகூறவில்லை. வரவேற்கிறேன். ஆனால் விஸ்தரிக்கப்பட்ட அளவுக்கு வேலைகள் நடக்கின்றனவா, பொதுமக்களுக்கும் விவசாயி களுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றனவா என்று பார்த்தால், அங்கே தான் குறைபாடு இருக்கிறதென்று இந்த அவையின் மூலம் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், (டி.டி.ஏ.) பெபுடி டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் 5 பேர்கள் இருக்கிறார்கள். மாவட்ட விவசாய அதிகாரி என்று கூறக் கூடிய டி.ஏ.ஓ. 24 பேர்கள் இருக்கிறார்கள். இந்த 24 பேர்கள் அல்லாது இ.ஓ. (அக்ரி.) 162 பேர்கள் இருக்கிறார்கள். மொத்தம் இவர்களுக்கு மாதத்திற்கு ஆகிற சம்பளம் 1½ லட்சம் ரூபாய். இது இவர்களுக்கு மாதத்திற்கு ஆகிற சம்பளம் 1½ லட்சம் ரூபாய். இது வருடத்திற்குக் கணக்குப் போட்டால் ரூ. 2½ கோடிக்கு வரக்கூடிய நிலை. 2½ கோடி ரூபாய் செலவு செய்திருக்கக்கூடிய அதிகாரிகள் விவசாயிகளுடன் நேர்முகமான தொடர்பு வைத்துக்கொண்டு,

அவர்களுக்கு ஆக்க பூர்வமான பணிகளைச் செய்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. ஆனால் இன்றைக்கு நாம் எல்லாம் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மேடைகள் தோறும் பசுமைப் புரட்சியைப் பார்த்துவிட்டோம் என்று கூறுகிறோம். ஒரு பழமொழி கூறுவார்கள். மந்திரத்தால் மாங்காய் விழாது. என்று. அந்த முறையில் இது போன்று ஒரு மாவட்டத்திற்கு பெரிய அதிகாரிகளைப் போட்டு, மாதம் 1½ லட்சம் ரூபாய் செலவழித்தும், உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு வருகிறார்களா என்று பார்த்தால், இல்லையென்றுதான் கூற முடியும். அன்றைக்கு ஒரு அதிகாரிதான் இருந்தார். அவர் மக்களுடன் தொடர்பு கொண்டு நல்ல முறையில் செயல்பட்டார். இன்றைக்கு அதையெல் லாம் செய்யவில்லையென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு அனுபவபூர்வமாக கூற வேண்டுமென்றால், நான் ஒரு விவசாயி என்ற முறையில் கூறுகிறேன். மாவட்ட அளவில் டி.டி.ஏ. என்று சொல்லு பவர் வாழைக்காக இருக்கிறார். அவருக்குக் கீழே பணிபுரிபவர் களும் இருக்கிறார்கள். அவர்கள் வாழை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இருக்கக் கூடியவர்கள். நான் வாழைக்கன்று நடும் போது என்னுடன் தொடர்பு கொண்டார்கள். அதற்குப் பின்னால் அதற்கான பணிகளை என்னுடன் தொடர்பு கொண்டு செய்தார்களா என்று பார்த்தால், இல்லையென்றுதான் கூற முடியும். பொது வாழ்வில் இருக்கக்கூடிய ஒருவனுக்கு இந்த நிலை என்றால், மற்றவர் களுடைய நிலை என்ன? மறுபடியும் அவர்கள் வந்து தொடர்பு கொண்டு, அதற்கான பூச்சி மருந்துகள் பற்றிய வழி முறைகளைக் கூற வில்லை. பலமுறை தொடர்பு கொண்டும் அவர்கள் வராத நிலையைத் தான் காண்கிறோம். அந்த மாதிரி இன்றைக்கு வாழைக்கன்று, மணிலா, கரும்பு, உரம், தென்னை என்று ஒவ்வொரு பிரிவு இருந் தாலும், அந்தப் பிரிவுகள் எப்படிச் செயல்படுகின்றன என்று பார்த் தால், நல்ல முறையில் செயல்படவில்லை என்றுதான் கூற முடியும். அந்தப் பகுதியில் படிக்கக்கூடியவர்கள் எல்லோருமே பி.எஸ்.சி (அக்ரி.)-க்குத் தான் படிக்கிறார்கள். அதிலும் பஞ்சாயத்து யூனியனில் இரண்டு இ. ஓ., விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒன்று டி.ஏ.ஓ. கண்டிரோல், மற்றவர் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் கண்ட்ரோல். இந்த இரண்டு தரப்பினரும் பஞ்சாயத்து யூனியன் தலைவரின் ஒத்துழைப்பின் பெயரில் வேலை செய்கிறார்கள். ஆனால் இரண்டு பகுதியாகப் பிரித்து ஒருவர் மாவட்ட விவசாய அதிகாரியின் கீழ் இருப்பதால், ஏதாவது அபிவிருத்தி நடக்கிறதா என்று பார்த் தால், இல்லை. இந்த இரண்டு அதிகாரிகளும் பஞ்சாயத்து யூனியன்

ஆணையரின் கீழ் ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மேலதிகாரிகள் அதிகமாக விஸ்தரிக்கப்பட்ட நிலையில் செயல்படும் பொழுது, அவர்களுக்குக் கீழே சி.டி.ஐ., பீல்டுமேன், மேஸ்திரி போன்றவர்களை அதிகமாக நியமித்திருக்கிறார்களா என்று பார்த் தால், இல்லை. வகைக்கு ஒரு நபர்தான் நியமித்திருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் 162 இ.ஓ. (அக்ரி.), டி.டி.ஏ. 5, 24 டி.எ.ஓ. என்று புள்ளி விவரம் இருந்தால், சி.டி.ஐ. 36, பீல்டுமேன் 139, மேஸ்திரி 164 என்று கீழ்மட்டத்தில் பணிபுரிகிறவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஏதோ கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளை நியமிப்பதில் நீங்கள் அக்கறை காட்டி யிருக்கிறீர்களே தவிர, அடிப்படையில் வேலை செய்யக்கூடிய அதிகாரி களை நியமிப்பதில் அக்கறை காட்டவில்லையென்று கூறிக்கொள்ளு கிறேன். அடிப்படையில் வேலை செய்யக்கூடிய அதிகாரிகளை நீங்கள் நியமித்து, அவர்கள் ஏழை விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளு வதை ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். இதே முறையில் தான் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டும் இன்றைக்குப் பரவலாக ஆக்கப்பட்டிருக்கிறது. "ஹைவேஸ்"-ஐ எடுத்துக்கொண்டால், நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ், ரூரல் ஹைவேஸ் என்று, பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, எந்தப் பிரிவு எப்படி இயங்குகிறது என்று தெரியாமல் இன்றைக்கு செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஒருங்கிணைத்து பொது மக்கள் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில், பொதுமக்களுக்கு நல்ல முறையில் பயன்படக்கூடிய அளவில், செயல்படவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிர்வாகச் செலவு கள் இன்றைக்கு 35 சதவிகிதத்திலிருந்து 55 சதவிகிதத்திற்கு உயர்ந் திருக்கும்பொழுது, அந்த அளவுக்கு பொதுமக்களுக்கு வசதி வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லையென்று தான் கூற முடியும். பொதுமக்களுக்கு இவை எல்லாம் பயன்பட நல்ல முறையில் இயங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பண்டங்கள் சம்பந்தமாக உணவு அமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு வாக்குறுதி அளித்தார்கள். உற்பத்தியாகும் பொருள் விலையை ஏற்றுவதற்கு மத்திய சார்க்காருடன் கலந்து ஆலோசித்துச் செயல்படுவேன் என்று கூறினார்கள். அதே மாதிரி கரும்பு விலை சம்பந்தமாக, வட ஆற்காடு

மாவட்டத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு சர்க்கரை ஆலை மிக நல்ல முறையில் செயல்பட்டாலும், அங்கே நிர்வாகக் கோளாறின் காரண மாக அந்த ஆலை பயன்படாமல் போகக்கூடிய நிலைமையில் இருக் கிறது என்று அவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். கூட்டுறவு சர்க்கரை ஆலையில் "ரெக்கவரி" கட்டுமானம் அதிகமாக வரக்கூடிய ஆலை என்ற முறையில் வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையை இயங்கச் செய்ய வேண்டும். 10, 5 சதவிகிதம் ரெக்கவரி வந்தாலும், அங்கு விலை உயர்ந்தபாடில்லை. மற்ற மாநிலங் களைப் பார்த்தால், நமது மாநிலம் மிகப் பின்தங்கியிருக்கிறது என்று அவைக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் பங்குப் பணம் போட்டு, கூட்டுறவு சர்க்கரை ஆலை நடக்கிறது. விவசாயி களின் உறைப்பின் காரணமாக உற்பத்தியாகக்கூடிய கரும்பு, மில்லுக்குச் சென்று அந்த மில்லில் சர்க்கரை ஆக்கப்பட்டு, சர்க்கரை எல்லாம் நல்ல முறையில் கட்டுமானம் ஆகக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டாலும், கரும்பை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு நல்ல முறையில் விலை நிர்ணயிக்கப்படவில்லை யென்று இங்கே கூறிக்கொள்கிறேன். அங்கே அந்தக் கூட்டுறவு ஆலை நிர்வாகம் ஊழல் மிக்கதாக இயங்குகிறது என்று அவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கட்சிக் கண்ணோட் டத்தோடு நியமிக்கப்பட்ட நிர்வாகிகளும் சேர்மன் அவர்களும் இன்றுவரையில் வருஷ வாரியாகப் போடவேண்டிய ஜெனரல் பாடி கூட்டத்தைக் கடந்த ஆண்டும் போடவில்லை, இன்றைக்கும் போடாத நிலை இருக்கிறது. தங்கள் சொந்த மில்லைப் போல் அதை அவர்கள் பாவிப்பதால், அங்கு ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்று பரவலாக கரும்பு உற்பத்தியாளர்களும் மற்றவர்களும் பேசக் கூடிய நிலையைப் போக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

அதே போன்று விவசாயிகளுக்கு ரசாயன உரங்கள் நல்ல முறை யில் கிடைக்கிறதா என்று பார்த்தால், வட ஆற்காடு மாவட்டத்தில் வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுக்கக்கூடிய நிலைதான் பரவலாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்கள் மாவட்டம் வறட்சி யாக இருப்பதால், குடியாத்தம் போன்ற பகுதிகளில் மிகக் கடுமை யாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு வறட்சி இந்த ஆண்டு மின்சாரம் இல்லாத நிலை. கூட்டுறவுக் கடன்களுக் காக, அரசாங்கக் கடன்களுக்காக ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு, விவசாயிகள் எல்லாம், பெருவாரியாக பாதிக்கப்பட்டு பணத்தைக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், மாவட்ட

[திரு. எல். பலராமன்] [1973 மார்ச் 29

ஆட்சியாளர் இதையெல்லாம் தள்ளி வைக்கலாம் என்று கூட்டுறவு மத்திய வங்கிக்குச் சிபாரிசு செய்தும் கட்டாயமாக வசூலிப்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைகளை மத்திய காலக் கடன்களாக ஆக்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு நல்கியதற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

பி.ப. 5-40

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள், சரிதானே? நான் கேட்பது: எந்த ஊரில் எந்த விவசாயி வாங்கிய கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டது? ஏனென்றால் நான் இந்த மேலவையிலும் சொல்லியிருக்கிறேன். பேரவையிலும் சொல்லியிருக்கிறேன். வருகிற 30—6—1973 வரை கட்டாய நடவடிக்கைகள், கடுமையான நடவடிக்கைகள், எதுவுமே எடுக்கக்கூடாது, ஜப்தி செய்யக்கூடாது என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. இந்த அதிகாரி, இந்த விவசாயிக்காக ஜப்தி செய்தார் என்று இப்பொழுது சொன்னாலும் சரி, பிறகு எழுதியனுப்பினாலும் சரி, எனக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அரசின் ஆணையை நிறைவேற்றுவதற்கு நீங்களும் உதவியாக இருக்க வேண்டும்.

திரு. எல். பலராமன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அதிகாரியைப்பற்றிக் கூற வேண்டுமென்றால், மணிக்கணக்காகக் கூறலாம். அவர் அந்தக் கூட்டுறவு சங்கத்திலே பல தவறுகளைச் செய்து பல விவசாயிகளுக்கு நோட்டிஸ் அனுப்பியிருக்கிறார். குடியாத்தம் தாலூகாவிலே தண்டலம், கிருஷ்ணாவரம் போன்ற ஊர்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு நோட்டீஸ் வந்திருக்கின்றது. என்னிடத்திலே இதற்கான விவரங்கள் இருக்கின்றன. அதை அமைச்சர் அவர்களிடத்திலே தரத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் சொல்வது என்னவென்றால், அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. "கொயோர்சிவ் ஆக்ஷன்", கெடுபிடி நடவடிக்கை, எடுக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறோம். 30—6—1973 வரையில் எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் அதற்கு மாறுக யாராவது செய்திருந்தால் சொல்லுங்கள். பொதுவாக இந்த அரசின்மீது குறை கொள்ள

1973 மார்ச் 29] [திரு. சி. பா. ஆதித்தனார்]

வேண்டுமென்றால், சொல்லுங்கள். அது உங்கள் மனதிற்கு ஆனந்தம் கொடுக்குமென்றால், செய்யுங்கள். ஆனால் உங்களுக்கு விவசாயியின் மேல் உண்மையான பாசம் இருக்குமானால், எந்த விவசாயியுடைய சொத்து எந்த ஊரில் ஜப்தி செய்யப்பட இருக்கிறது என்று சொன்னால், இப்பொழுதே அந்த ஜப்தியை டெலிபோனில் பேசியே நிறுத்த முடியும். உங்களுக்கு விவசாயிக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், சொல்லுங்கள்.

திரு. எல். பலராமன் : இதை அரசியலாக ஆக்காவிட்டாலும், உண்மையைச் சொல்கின்றேன். அதற்கான பட்டியலே என்னிடத்திலே இருக்கிறது. இது விவசாயி கொடுத்தது. நீண்ட பட்டியலே இருக்கிறது என்பதை இந்த அவைக்குக் கூறிக்கொண்டு, அதை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீண்ட பட்டியலாக இருக்க முடியாது. ஏதாவது ஒரு விவசாயியினுடைய நிலமோ, பம்ப் செட்டோ ஜப்தி செய்யப்பட்டது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமானால், விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், இப்பொழுது சொல்லுங்கள். அதை உடனே நிவர்த்தி செய்ய முடியும்.

*திரு. ஜார்ஜ் கோமகன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரும் தமிழ்வேளுமான டாக்டர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மசோதாவை இங்கே தந்திருக்கிறார்கள். அதிலே பேசுகின்ற அருமையான வாய்ப்பினை நான் பெற்றமைக்காக மெத்த மகிழ்ச்சியடைகின்றேன். நம்முடைய கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு நாட்டு மக்களுடைய இதய நாடியைத் தடவி, நாட்டிலே பின்தங்கி இருக்கிற, நாட்டிலே ஒதுக்கப்பட்டுக் கிடக்கிற, நாட்டிலே நசுக்கப்பட்டிருக்கிற சமுதாயத்திற்கெல்லாம் நாளும் நாளும் அறிவிப்பு அறிவிப்பு என்று அறிவிக்கின்ற அறிவிப்பு கனியெல்லாம், இந்த நாட்டிலே வாழ்கிற ஒதுக்கப்பட்ட மக்கள். இந்த நாட்டிலே வாழ்கிற பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் இதயமாற ஏற்று தமிழக முதல்வரை இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்ற 25-ஆம் தேதியன்று நிலக்கோட்டையிலே நடைபெற்ற அரிஜன நலக் கருத்தரங்கிற்குச் சென்றிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அரிஜன நலத் துறை

[திரு. ஜார்ஜ் கோமகன்] [1973 மார்ச் 29

அமைச்சர் அம்மையார் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மதுரை மாநகரத் தந்தை திரு. முத்து அவர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். அந்தக் கருத்தரங்கிலே நான் கண்ட காட்சி என் நெஞ்சத்தை இன்றைக்கும் உருக்கிக்கொண்டிருக்கிறது. தமிழக முதல்வர் நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த நாட்டிலே வாழ்விழந்த சமுதாய மக்களுக்கு வாழ்வளிப்பதற்காக, அவர்கள் வாழ்விலே ஒளி ஏற்றுவதற்காக, தந்து வருகிற திட்டங்களையெல்லாம் வரவேற்று, தங்களுடைய கரங்களாலே கோடானுகோடி மலர்களை கலைஞரின் பாதங்களில் குவிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அளவுக்கு கலைஞர் அவர்கள் இந்த நாட்டிலே வாழ்கிற தாழ்ந்த சமுதாய மக்களுக்கு மட்டுமல்ல, எல்லாப் பகுதி மக்களுக்கும், எல்லாப் பிரிவினருக்கும் அளிக்கின்ற சலுகைகள், வாய்ப்புகள், அறிவிப்புகள் தினம் தினம் புதிய உணர்வை, புத்துணர்ச்சியை மட்டுமல்ல, இந்த சமுதாயத்தைச் சமநிலைப் படுத்துகிற அளவுக்கு சமதர்மத் திட்டத்தை நோக்கிச் செல்கிற அளவுக்கு ஆக்கிவைத்திருக்கின்றன என்பதை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நமது கலைஞர் அவர்கள் பல சலுகைகளை அளித்திருக்கிறார்கள். நான் என்னுடைய கன்னிப் பேச்சில் குறிப்பிடுகிறபோது, கலைஞர் அவர்களை நான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் இரட்சகர் என்று குறிப்பிட்டேன். அப்படிச் சொல்கிறபோது, பல சலுகைகள் அளித்ததையெல்லாம் குறிப்பிட்டேன். இன்னும் அவர்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிற போது, என்னுடைய நெஞ்சம் மகிழ்ந்தது. இந்த நாட்டிலே வாழ்கிற 1½ கோடி தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கெல்லாம், பல ஆண்டுகளாக, நீண்ட காலமாக ஒரு வரலாற்றுக் குறையாக இருந்த நிலையை மாற்றி உயர்நீதி மன்றத்திலே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாய மகனை நீதிபதியாக்கிய அரசு, தமிழக அரசு என்றால், அதற்குக் காரணம் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. அந்தப் பெருமை தமிழக அரசுக்குத்தான் உண்டு என்பதை இந்த நாட்டிலே எண்ணற்ற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, இன்னும் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். சிறு சேமிப்புக் குழுவுக்கு நம்முடைய மதிப்பு மிக்க முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் திரு. சிவசங்கரன் அவர்களைத் தலைவராக

1973 மார்ச் 29] [திரு. ஜார்ஜ் கோமகன்]

நியமித்திருக்கிறார்கள். எந்த இடத்திலே நியமித்திருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். எந்த இடத்திலே நியமித்திருக்கிறார்கள் என்பதை மேலவை உறுப்பினர்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஆனால் அந்த இடத்திலே ஒரு ஒதுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மகனை, தாழ்த்தப்பட்ட சமுதாய மகனை நியமித்திருக்கிறார் என்பதை, இந்த நாட்டிலே சமதர்ம சமுதாயத் திட்டம் எந்த அளவுக்கு வேகப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. அவர்கள் ஒரு பெரிய காரியத்தை இந்த நாட்டிலே செய்தார்கள். நாட்டிலே "கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்ற லன்றி நாட்டத்தில் கொள்ளாரடி, கிளியே, நாளில் மறப்பாரடி" என்றார் பாரதியார். அதாவது, சொல்வது எல்லோருக்கும் எளிது, செய்து காட்டுவது கடினம். பல ஆண்டுகளாக இந்தச் சமுதாயத்தைச் சமநிலைப்படுத்துவதற்காக, சமுதாயம் சமதர்மத் திட்டத்தை நோக்கிச் செயல்படுவதற்காக, சமுதாயத்தை மேடு பள்ளங்களற்ற சமுதாயமாக மாற்றுவதற்காக பலர் பல கருத்துக்களை ஈராயிரம் ஆண்டுகளாகச் சொல்லி வந்திருக்கிறார்கள். "இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்", "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று இப்படியெல்லாம் சொல்லி வந்தார்களே ஒழிய, இந்த நாட்டிலே செய்துகாட்டுகிற அத்தகைய அரிய வாய்ப்பினை நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மிக மிக, மெத்த பெருமையோடு சொல்லிக்கொள்வேன். அவர்கள் தன்னுடைய திருமகனுக்கு ஒரு அரிஜன வகுப்பைச் சார்ந்த பெண்ணைத் திருமணம் செய்துவைத்து, இந்த நாட்டிலே செயல் முறையிலே காட்டிய அந்த மாபெரும் புரட்சியை, அந்தப் புரட்சியாளரை, அந்தப் புனிதத் தலைவரை இந்த நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு பிரச்சினையை நான் உங்கள் முன்னாலே இந்த மாமன்றத்தில் வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மேம்பாடு அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறபோது, அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களிலே மதம் மாறிய கிருத்துவர்கள் இன்றைக்கு வேதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மதம் மாறிய கிருத்துவர் என்று சொல்கிறபோது, அரிஜன கிருத்துவர் ஆனவர்கள் இன்றைக்கு வேதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிடுகிற காலத்தில், ஆறுமுகமாக இருப்பவர் அந்தோணியாக மாறிவிட்டார். ஏன் அந்தோணியாக மாறினார்

என்பது ஒரு வரலாறு. அவருக்கு ஏதோ ஒரு ஆன்மீக எண்ணம், அவருக்கு ஒரு ஆசை, சிலுவை அணியவேண்டும் என்ற ஆசை தோன்றிய காரணத்திற்காக அந்தோணியாக மாறினர். அவர் அந்தோணியாக மாறினரே தவிர, ஆறுமுகமாக இருந்தவர் அந்தோணியாக மாறினரே தவிர, அவர் சேரியிலே இருந்து வேறு பகுதிக்கு மாற்றப்பட்டாரா, வாழ்விலே மாற்றம் காணப்பட்டதா என்றால், நிச்சயமாக இல்லை. இந்த நிலையில் மத்திய அரசு அந்த அரிஜன தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களிடத்திலே மாற்றாந்தாய்
பி.ப. 5-50 மனப்பான்மையைக் காட்டிக்கொண்டிருக்கிறது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் நம்முடைய அரசாங்கம் அரிசன கிருத்துவர்களுக்கு பல சலுகைகளை அளித்து வந்திருக்கிறது. 1970 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையிலே அரிசன நலத் துறை சார்பிலே அம்மையார் அவர்கள் நிர்வகிக்கின்ற துறை சார்பாக அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டன. ஒரு துறைக்கு மட்டும் என்று அளிக்கப்பட்டிருக்கிறது. கல்விச் சலுகைகள் அரிசன நலத் துறை சார்பாக அளிக்கப்படுகின்றன. உபகாரச் சம்பளம், வீட்டு மனைகள், விவசாயிகளுக்கு நிலம் தருதல் ஆகியவையும் அளிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பு, கல்லூரியில் இடம் ஒதுக்கல், பிற்பட்டோர் நலத் துறையில் சேர்க்கப்பட்டு தரப்படுகிறது. ஆனால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிற தொகையில் அதை மாநில அரசு செலவு செய்கிறபோது அந்தச் சலுகைகளையும் அரிஜன கிருத்துவர்கள் பெற்றுக்கொள்கிற வாய்ப்பை மத்திய அரசு அறிவிக்கவில்லை. இதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரிஜன மக்களுக்கு வட்டியில்லாக் கடன் தரப்படுகிறது. அரிஜன கிருத்துவர்களுக்கு நிச்சயமாக ஒதுக்கப்படவில்லை. காரணம், மத்திய சர்க்காரிலிருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். நான் இங்கே மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களை, முதல்வரை மிகமிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர், சிலுவை அணியாத கிருத்துவர் என்று ஒருமுறை சொல்லியிருக்கிறார். அதை ஞாபகப் படுத்திக்கொள்கிறேன். இந்தக் கிருத்துவ மக்கள் உள்ளபடியே தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறார்கள். மதம் மாறினாலே தவிர, வேறொரு பெயர் வைத்துக்கொண்டிருக்கிறானே தவிர, அவன் இன்றைக்கும் கீழ் தளத்திலே தள்ளப்பட்டிருக்கிறான். பள்ளன், பறையனாகவே மதிக்கப் படுகிறான். இந்த நிலையை மாற்ற வேண்டும். நிச்சயமாக ஒரு நிலையை உருவாக்குவதற்கு நம்முடைய கலைஞர் அரசு முயலும். கருணாநிதி—அவரிடம் கருணையும் இருக்கிறது, நிதியும் இருக்கிறது; ஆகவே நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் காரணத்தால்

இந்த வேண்டுகோளை அவருக்கு விடுகிறேன். 2—6—1972 அன்று, தஞ்சையில் ஒரு மாநாடு நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட கிருத்தவர்கள் மாநாடு, அந்த மாநாட்டிலே நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் கலந்துகொண்டார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள். மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள். அங்கே பேசப்பட்ட கருத்துக்களையெல்லாம் கேட்டார்கள். ஒரு அரிசன கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த என்னை மேலவை உறுப்பினராக ஆக்கியதற்காகப் பெருமைப்படுகிறேன் என்று கலைஞர் அவர்கள் பாராட்டியதெல்லாம் நன்றாகத் தெரியும். அந்தத் தாழ்த்தப்பட்ட கிருத்துவ மக்களின் கோரிக்கையெல்லாம், மத்திய அரசிலிருந்து மாநில அரசு வாயிலாகத் தரப்படுகிற சலுகைகளெல்லாம் தங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பது. நாங்களும் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். நாங்கள் பிறப்பாலே அங்கு பிறந்து விட்ட காரணத்தால், மதத்தால் மாறி விட்ட காரணத்தால், எங்களுக்கு எந்த வசதியும் அளிக்கப்படவில்லை என்பதை நிச்சயம் ஒப்புக்கொண்டாக வேண்டும். ஆலயத்தை நம்பிச் சென்றார்கள். ஆண்டவனை நம்பிச் சென்றார்கள். ஆண்டவனும் கை விட்டிருக்கிறார், ஆலயமும் கை விட்டிருக்கிறது என்கிற நிலையிலே யாரிடம் போய் முறையிடுவார்கள்? அரசினிடத்திலே—நம்முடைய கலைஞரிடத்திலே முறையிடுவதைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதைப் பணிவன்போடு சொல்லிக்கொள்வேன். ஆகவே, மதிப்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசை இந்த நிலையில் தட்டிக் கேட்கின்ற நிலையிலே பரிந்துரை செய்கிற அளவுக்கு எங்களுக்குச் சரியான முறையைத் தர வழிவகை செய்யவேண்டுமென்று அரிசன கிருத்துவர்கள் சார்பாக நான் மிகமிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நாட்டிலே எத்தனையோ சலுகைகள் சமுதாயத்திற்குத் தேடித்தருகின்ற நிலையில் தாழ்த்தப்பட்ட கிருத்துவர்கள் வேதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றும் அவர்கள் சேரியிலே, சதுப்பு நிலத்திலே, வறுமைச் சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலை மாற வேண்டும், அதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, வழிவகை செய்யவேண்டும், வழிவகை செய்யவேண்டுமென்று பொதுவாகச் சொல்கிறார். என்னென்ன வழிவகை செய்யவேண்டுமென்று குறிப்பாகச் சொன்னால், அதைப்பற்றி நான் பதில் சொல்ல இயலும்.

[1973 மார்ச் 29

திரு. ஜார்ஜ் கோமகன்: மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வருகின்ற அத்தனை சலுகைகள் தாழ்த்தப்பட்ட கிருத்துவ மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் வழிவகைகள் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, திரு. ராஜா அய்யர் அவர்கள் அரசாங்கத்திற்கு, குறைந்த அளவு ஒய்வூதியத்தை ரூ. 50 ஆக உயர்த்தியதற்கு, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்களுடன் சேர்ந்துகொண்டு இந்த அரசுக்கு அடிப்படை ஒய்வூதியத்தை ரூ. 50 ஆக உயர்த்திய தற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில், இரண்டாவது ஊதியக் குழுவின் சிபாரிசுகளில் டியர்னஸ் அலவன்ஸ் அவ்வப்போது அறிவிக்கும்போது அதிலே 50 சதவிகிதம் ஒய்வூதிய மாகக் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அவர்களுக்கும் இந்த ஆண்டில் உயர்த்தி ரூ. 5 அதிக மாக ஒய்வூதியம் கொடுக்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் ஆசிரியர்களைப்பற்றி ஒரிரு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்களின் அலுவல் நேரம்பற்றி ஒரு தவறான எண்ணம் இருந்து கொண்டு வருகிறது. அதாவது அவர்களுடைய வேலை நாட்கள் மிகக் குறைவு என்றும், ஓய்வு காலம் அதிகம் என்றும் எண்ணம் இருந்து வருகிறது. அந்தக் கணக்கின்படி பார்ப்போமேயானால், ஆசிரியர்களும் மற்றவர்களும் செய்யும் வேலைக் காலம் ஒன்றே தான். 200 நாட்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அதே நேரத்தில், அலுவல கத்திலே பணியாற்றும் என்.ஜி.ஓ-க்களுக்கு என்னென்ன விடுமுறைகள் உண்டு என்று எண்ணிப் பார்ப்போமேயானால், 52 ஞாயிற்றுக் கிழமைகள், 10 இரண்டாவது சனிக்கிழமைகள், 18 அரசாங்க விடுமுறை நாட்கள், அதோடு, 11 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஏர்ன்ட் லீவ்—ஒரு வருடத்திற்கு 33 நாட்கள். அந்த அடிப் படையில் கணக்கிட்டுப் பார்த்தால், 240 நாட்கள் வேலை செய்கிறார் கள். அதே நேரத்தில் ஒரு ஆசிரியர் 200 நாட்கள் வேலை செய்கிறார். அதைத் தவிர, காம்போசிஷன் நோட்டு, ரிவிஷன் டெஸ்ட் பேப்பர் —இவையெல்லாம் பள்ளிக்கூடத்தில் செய்கிற வேலையில்லை. வீட்டில் செய்கிற வேலைகள். இதையும் கணக்கில் சேர்த்தால், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்கள் 240 நாட்களுக்குக் குறையாமல்

1973 மார்ச் 29] [திரு. கே. எஸ். கணபதி]

வேலை செய்ய வேண்டும். ஆகவே, அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களை, வெகேஷன் டிபார்ட்மெண்டிலிருந்து எடுத்துவிட வேண்டும். நாங்களும் அவர்களைப் போலவே 365 நாட்கள் வேலை செய்யத் தயாராக—எல்லா வேலைகளையும் பள்ளியிலேயே செய்யத் தயாராக இருக்கிறோம். அவர்களுக்கு என்னென்ன விடுமுறைச் சலுகைகள் உண்டோ அந்தச் சலுகைகளை ஆசிரியர்களுக்கும் கொடுத்து விடுங்கள் என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அப்படிச் செய்தோமேயானால், பொது மக்களுடைய ஒரு தவறான எண்ணம் மாறும். ஆசிரியர்களும், தேவை ஏற்படும்போது அந்த ஓய்வைப் பயன்படுத்திக்கொள்ளலாம். நான் இதை ஏன் குறிப்பிடு கிறேன் என்றால், நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் 10 நாட்களுக்கு முன்னால் பேசும்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்கு சம்பளம் உயர்த்தப்படாம லிருக்கிறபோது, மருந்தாளர்களுக்கு ரூ. 275 என்று உயர்த்தியிருக் கிறார்களே என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஆசிரியர்களை விட அவர்களுக்கு வேலைப் பளு அதிகம் என்று குறிப்பிட்டார்கள். அது தவறான எண்ணம். ஆசிரியர்கள் பள்ளியில் வேலை செய்கிற 200 நாட்களோடு, வீட்டில் வேலை செய்கிற நாட்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் கள் அனைவரையும் வெகேஷன் டிபார்ட்மெண்டிலிருந்து அகற்றி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ. பட்டம் பெற்று, பி.டி. வகுப்பில் சேர்க்கப்படாமலிருக்கிறார்கள். 800 பேர்கள் தான் அந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே, அரசுக்கு இது ஒரு பெரிய காரிய மல்ல. யூனிவர்சிடியிடம் சொன்னால், ஒரே வருடத்தில் 800 பேர்க ளுக்கும் பி.டி. டிரெயினிங் கொடுத்துவிடலாம். இதுபற்றிப் பரிசிலனை செய்வதாக கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பி.ஏ. பட்டம் பெற்றவர்களை பி.டி. நிலைக்கு உயர்த்திக்கொள்வதற்காக அந்த 800 பேர்களையும் பி.டி-யில் சேர்த்து ஒரே ஆண்டில் அனைவரையும் பி.டி. பட்டம் பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். பக்கர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு முன்வடிவின் மீது எனக்குப் பேசுவதற்கு ஒரு வாய்ப்புத் தந்தமைக்காக நான் மகிழ்கிறேன். இந்த முன்வடிவை

[திரு. எம். எம். பக்கர்] [1973 மார்ச் 29

ஆதரிப்பதற்கு முன்னாலே, இந்த அரசின் சார்பிலே இந்த அரசின் தலைவரான டாக்டர் கலைஞர் அவர்கள் முஸ்லீம் சமுதாயம் கோரி வந்த ஒரு பெரிய கோரிக்கையை ஒப்புக்கொண்டு அந்த முஸ்லீம் சமுதாயத்திலே ஒரு பகுதியான உருது பேசுகின்ற மக்களுக்கு, பிற்பட்டோர்களுக்குள்ள உரிமையை அளித்து நேற்றையதினம் விடுத்துள்ள அறிக்கைக்காக என்னுடைய கட்சியின் சார்பிலே, முஸ்லீம் சமுதாயத்தின் சார்பிலே, நெஞ்சு நிறைந்த நன்றியை இங்கே முதலிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தக் கோரிக்கை கடந்த கால் நூற்றாண்டாக இருந்துவந்த ஒரு கோரிக்கை. முஸ்லீம் சமுதாயம் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை அரசிடம் கேட்டு வந்திருக்கின்றது. எங்களுடைய காலஞ் சென்ற தலைவர் காயிதே மில்லத் அவர்கள் பல முறையும் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். கலைஞர் அவர்கள் நேற்றையதினம் அறிவித்த படி, இந்தத் தமிழ் நாட்டில் வாழ்கிற முஸ்லீம் சமுதாயம் என்றுமே நன்றி மறக்காத சமுதாயம். இப்போது அவர்களுக்கு நேற்றைய தினம் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளது ஒரு வரப்பிரசாதமாகும். அதற்கு என்றுமே அந்தச் சமுதாயம் நன்றி உள்ளதாக இருக்கும். அந்த நன்றியை என்றுமே மறக்காது என்பதை இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. இந்திய நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தச் சமுதாயத்திற்கு சில விளைவுகள் உருவாயின. இன்றைக்கு கலைஞருடைய ஆட்சியிலே ஒரு நியாயம் ஏற்பட்டதற்காக கலைஞர் அவர்களை காயிதே மில்லத் அவர்களுடைய ஆத்மா வாழ்த்தும். ஊழிக் காலம் அவர்களை வாழ்த்தும் என்பதில் சந்தேகம் கிடையாது. அந்த நல்ல உள்ளம் உலகத்திலே வாழ்ந்த அந்தக் காலத்திலும் வாழ்த்தியது. வாழ்ந்து மறைந்த பிறகும் மறைமுகமாக அந்த மகானுடைய ஆத்மா வாழ்த்தும். இந்த அரசுக்கும், இன்னும் கலைஞர் அவர்களுக்கும் என்றுமே இந்தச் சமுதாயம் நன்றியோடு இருந்து வரும் என்பதில் சந்தேகம் கிடையாது. இந்த அரசிடத்தில் நாம் பாராட்டுகின்ற ஒன்று, எப்போதும் இந்த அரசை நடத்துகிற தலைவரிடத்தில், இந்த அரசினிடத்திலே ஒரு துணிவு உண்டு. உலகத்திலே எந்த அரசும் தவறு செய்வது உண்டு. தவறு ஏற்படாமலிருக்க முடியாது. சாதாரணத் தவறுகள், பெரிய பிரம்மாண்டமான நிர்வாகத்தில், சின்னச் சின்னத் தவறுகள் ஆங்காங்கே ஏற்படத்தான் செய்யும். தவறு செய்வது மனித குணம், தவறு செய்யாத மனிதனே இருக்க முடியாது. உலகத்திலே சொல்லியிருக்கிறார்கள். நாம் எல்லாம் மக்கள், தவறு செய்வோம். தேவர்கள் என்று சொல்லு

1973 மார்ச் 29] [திரு. எம். எம். பக்கர்]

கிறார்களே அவர்களல்ல நாம். நாம் சாதாரண மனிதர்கள். தவறு செய்வதைப் பெரியவர்கள் மன்னிக்க வேண்டும். தவறுவது மனித குணம். ஆனால் தவறை உணர்ந்து திருத்திக்கொள்ளவேண்டும். தவறு என்று தெரிந்தும், அதை மாற்றிக்கொளாமல் பிடிவாதமாக இருப்பது அசுர குணம். தவறைத் தவறு என்று உணர்ந்தவுடனே, தவறைத் திருத்திக்கொள்வது, தெய்வ குணம். அந்தக் குணம் இந்த அரசிடத்திலே என்றுமே உண்டு. யாரோ செய்த ஒன்றுக்காக இந்திய சமுதாயத்தின் ஒரு பகுதி சென்ற 50 ஆண்டுகள், இந்தத் தமிழகத்திலே கஷ்டப்பட்டு வந்தது. அப்படி இருந்ததை நேற்றைய தினம் நீக்கித் தந்ததற்காக இந்த அரசுக்கும், இந்த அரசை வழி நடத்துகிற திறமை மிக்க நம்முடைய ஈடு இணையற்ற முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சமுதாயத்தின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியறிதலையும், வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கான ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். இன்றைக்கு முதன் முதலில் பேசிய திருவாளர் ராஜா அய்யர் அவர்கள் ஊழியர்களுக்கு பென்ஷனை உயர்த்தியதற்காக நன்றி சொன்னார்கள். மிக மிக உயர்வான ஒரு அறிவிப்பு. பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய ஆசிரியர்களெல்லாம் இந்த 30 நாட்களிலே, ஒரு 15 நாட்களாவது ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருடைய அறைக்கும் வந்து, "நீங்கள் இதைப் பற்றி கவனிக்காமல் இருக்கிறீர்கள். எங்களுடைய பென்ஷனை ஏற்றிக் கொடுக்க வேண்டும். குறைந்தது ரூ. 50-ஆவது இருக்க வேண்டாமா" என்று பலரும் கேட்டு வந்தார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் "பேமலி பென்ஷன்" என்று மினிமம் 50 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் உயிரோடு இருக்கிறவர்களுக்கு ரூ. 45 கொடுக்கப்பட்டது. அதனாலே உயிரோடு இல்லாதவர்களுக்கு பேமலி பென்ஷன் அதிகம், உயிரோடு இருக்கிறவர்களுக்கு பென்ஷன் குறைவு என்ற நிலை இருந்தது. இதன் மூலம் "பேமலி பென்ஷன்" 50 ரூபாய். இவர்களுக்குக் குறைந்த பென்ஷன் 50 ரூபாய் என்று அறிவிக்கப்படுகிறது. இப்படி அறிவிக்கும்போது முதலமைச்சரையும் கல்வியமைச்சரையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இவ்விதமாக சில உத்தரவுகள் போடப்பட்டாலும், எப்போதுமே ஒரு 6 மாதம் கழித்து,

[திரு. செ. முத்துசாமி] [1973 மார்ச் 29

9 மாதம் கழித்து, ஒராண்டு கழித்து, இப்படித்தான் வந்துகொண்டே யிருக்கிறது. ஆகையால் எந்த அறிவிப்பை வழங்கும்போதும், கல்வி இலாகாவிற்கும் இது பொருந்தும், மற்றவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவு இவர்களுக்கும் பொருந்தும் என்று உத்தரவிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நல்வாழ்வுத் துறையில் சம்பள உயர்வு அறிவித்திருக் கிறார்கள். நான் மிக, மிகப் பாராட்டுகின்றேன். கால்நடை ஊழியர்களுக்கு 25 ரூபாய் அடிப்படைச் சம்பளம் உயர்த்தித் தந் திருக்கிறார்கள். நல்வாழ்வுத் துறையில் இருக்கூக்கூடிய ஊழியர் களுக்கு இன்றைக்கு நல்ல ஊதியம். இரண்டு பகுதியில் இருக்கக் கூடிய ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. நல்வாழ்வுத் துறையில் பணியாற்றுகிற காரணத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று கூட எண்ணக்கூடிய அளவிற்கு அறிவிப்பு அந்தத் துறையில் வந்திருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்களுடைய துறையில் அதே ஊழியக்காலம், அதே பயிற்சிக் காலம் பெற்றிருக்கக் கூடிய பணியாற்றக்கூடிய (Secondary Grade) ஆசிரியர்களுக்கும் Higher Grade ஆசிரியர்களுக்கும் எதுவும் இல்லாமல் இருக்கிறது என்பதை நாம், அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் அவர்களுடைய சங்கடங்களை, அந்த ஆசிரியர்கள் மிகவும் எதிர் பார்த்தது இல்லாமல் போய்விட்டது என்பதை.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சர்களிடையே பேதம் உண்டாக்கப் பார்க்கிறார்.

திரு. செ. முத்துசாமி : நம்முடைய அமைச்சரவர்கள் இப்படிச் செய்ய வேண்டுமென்று கருதினால், அது என்னுடைய கருத்து அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில் இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு நல்ல ஊதிய உயர்வு கிடைத்திருக்கிறது. கல்வித் துறையில் அதே போன்ற பயிற்சிக் காலம் இருக்கக் கூடியவர்களுக்குக் கிடைக்க வில்லை. இதைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல் கிறேனே தவிர, அமைச்சர்களுக்குள் பேதம் உண்டாக்க வேண்டு மென்ற அபிப்பிராயம் எனக்கு என்றைக்குமே இருந்ததில்லை. அப்படி என்னாலே உருவாக்கவும் முடியாது. அந்த அளவிற்கு அமைச்சர்

1973 மார்ச் 29] [திரு. செ. முத்துசாமி]

அவையிலே இருக்கக்கூடிய அமைச்சர்களும் இல்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது ஆசிரியர் சமுதாயத்தைப் பொறுத்த அளவில், அந்தப் பிரதிநிதிகளைப் பொறுத்த அளவில், இப்படி ஏதாவது ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் பிறரிடத்திலே இருந்து வந்தாலும்கூட, அதை நாங்கள் அடக்கமாக இருக்கின்ற இந்த நேரத்தில் எங்களுக்கு இந்த எண்ணம் இருந்ததில்லை என்று நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காலையில் கல்வியமைச்சர் அறிக்கையில் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு "ஒன்மேன் கமிஷன்" என்ன சொல்லிற்றோ அதை அரசு ஆலோசித்துச் செய்தது என்று தான் படித்தார். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு இதிலே என்ன இருக்கிறது என்பதை அவர்கள் படிக்கவே இல்லை. நான் எதிர்க் கட்சி சார்பிலே அந்த ஒன்மேன் கமிஷன் ரிப்போர்ட் பப்ளிஷ் செய்யப்படவேண்டு மென்று கேட்டேன். இது வரையில் அது "பப்ளிஷ்" செய்யப்படாம லிருக்கிறது. அதனுடைய கருத்து எங்கள் கைக்கு வந்தால், நாங்கள் படிப்பதற்கு ஏதுவாக இருக்காதா? இதை அரசு வெளியிடுவதற்குத் தயாராக இல்லை. இதை வெளியிடுவதில் என்ன சங்கடம் இருக்கிறது அதில் என்ன ரகசியம் இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து தெரிவிக்க விரும்புகிறேன். எனவே அந்த முழுமையான ரிப்போர்ட்டை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, 1—1—1971-இலே செலக்ஷன் கிரேட் அறிவிக்கப் பட்டது. அந்த செலக்ஷன் கிரேட் இதுவரையிலே அமுல்படுத்தப் படவில்லை. கல்வி அமைச்சர் எதைச் சொன்னாலும், நிர்வாக இயந்திரம் அரசு தந்ததைக்கூட நமக்குக் கொடுக்காமல் இருக்கிறது. ஒரு பழமொழி சொல்வார்கள் "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை" என்று. அதே போல அரசு உத்தரவிடுகிறது. நிர்வாக இயந்திரம் அது ஆசிரியர்களுக்குக் கிடைக்காமல் செய்து கொண்டிருக்கின்றது. அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று பல தடவை எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். இதற்கான சீர்திருத்தங் களிலே, எந்த உத்தரவு எந்தத் தேதியில் வருகிறதோ, அது மூன்று மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற உத்தரவாதம் கல்வித் துறையில் இருக்க வேண்டும். அதற்கான உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கல்வியமைச்சர் அவர்களை

[திரு. செ. முத்துசாமி] [1973 மார்ச் 29

கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10 ஆண்டு பணிக்காலத்தில் செலக்ஷன் கிரேட் கொடுக்கப்பட வேண்டு மென்ற உறுதி அளித்து அறிவிப்பு வெளியாகியது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்ட நேரத்தில், அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதிநிலைமைகள் என்ன என்பதைப்பற்றிக் கேட்டு வருகிறோம் என்று சொன்னார்கள். நான் கல்வியமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு பட்டதாரி ஆசிரியர்கள் இங்கு வந்தபோது, "நாங்கள் நிதித் துறையைக் கேட்டு, சில சங்கடங்கள் இருந்தும்கூட, இதையெல்லாம் நாங்கள் "ஓவர்லுக்" செய்துவிட்டு உங்களுக்குக் கொடுத்தோம்" என்று சொன்னார்கள். அதே நிலைமையில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேடைக் கொடுக்க வேண்டும் அதைப் பரிசீலித்து இவர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்க வேண்டும். நீங்கள் இதை ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை கல்வி அமைச்சரிடத்திலேயிருந்து எதிர்ப்பார்க்கிறேன். இந்தச் சமுதாயத் திற்கு கல்வி அமைச்சர் அவர்கள் அந்த உறுதியை வழங்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் மாறுதல் குழுவிலே, அந்த ஊராட்சி ஒன்றியத்திலே "எலெக்ட்" ஆனவர்கள் இருக்க வேண்டாமென்று ஆசிரியர் கூட்டணி கேட்டு இந்த அரசும் மனமுவந்து அதை நீக்கியது இங்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சித் தலைவரவர்களுடைய பேச்சு எனக்கு ஒரு அதிர்ச்சியை உண்டாக் கியது. இந்த அரசு முன்வந்து தந்ததற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புதல் தந்திருக்கிறார்கள், அரசு, "மாறுதல் குழுவிலே சேர்மன் இருக்க வேண்டியதில்லை, எம்.எல்.ஏ-க்கள் இருக்க வேண்டிய தில்லை. இப்படியான ஒரு நிலைமையை நீக்கியிருக்கிறார்கள். இதற்கு எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் கலந்து ஆலோசித்து முடிவு செய்கிறோம்" என்று கலந்து ஆலோசித்து முடிவு செய்த நேரத்தில்

.....

திரு. கே. ராஜாராம் : பாயிண்ட் ஆப் எக்ஸ்ப்ளனேஷன், நண்பர் மாண்புமிகு அங்கத்தினருடைய தொகுதி ஆசிரியர் தொகுதி, என்னுடைய தொகுதி ஸ்தல ஸ்தாபனத் தொகுதி பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் ஓட்டுப் போட்டு வந்தவன். அவருடைய தொகுதிக்கு அவர் எவ்வளவு தூரம் அக்கறை யுடன் பாடுபடுகிறாரோ, அதே அளவிற்கு நானும் என் தொகுதியான,

1973 மார்ச் 29] [திரு. கே. ராஜாராம்]

பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய நன்மையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே பஞ்சாயத்துத் தலைவர்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை எடுத்துவிட வேண்டாமென்று நான் சொன்னேன். அவர்களுக்கு இருக்கிறதை, சட்டப்படி கொடுத்திருக்கிற அதிகாரங்களை ஒன் றொன்றாக எடுத்துவிடக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். அதைத் தவறாக அவர் கருதிவிட்டார். அவருடைய தொகுதியைப்பற்றி அவர் எப்படி அக்கறை எடுத்துக்கொண்டு நன்மை செய்ய முற்படுகிறாரோ, அதே மாதிரி நானும் என்னுடைய தொகுதிபற்றி அக்கறை எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தவறினால் என் கடமையி லிருந்து தவறியவனாவேன் என்பதை நண்பர் திரு. முத்துசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 6-10 ஒரு எதிர்க் கட்சியினுடைய தலைவரவர்கள், தான் வந்திருக்கக்கூடிய பி.ப. ஒரு சமுதாயத்தைக் காப்பேனென்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. நாட்டிலே எதிர்க் கட்சித் தலைவர்களாக இருக்கக் கூடியவர்களுக்கும், ஆளுங் கட்சியில் இருக்கிறவர்களுக்கும் எல்லா சமுதாயத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிற தென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. கே. ராஜாராம் : யாரையும் கைவிட்டு விடவில்லை. ஆசிரியர் களுக்காகப் பரிந்து பேசக்கூடியவர்களுள், முதல் வரிசையில் இருப்பவன் நான். எது, எங்கே ஒழுங்காக இல்லையோ அதைப் போக்க நான் கடமைப்பட்டவனாவேன். அதற்காக வேண்டி பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய அதிகாரத்தைப் பறித்துவிட வேண்டும், வேறு யாருக்காவது—எம். எல். ஏ-க்காவது கொடுத்து விட வேண்டுமென்று சொல்வதற்கு நான் உடன்பட முடியா தென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, யாருக்கும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதாகச் சொல்ல வில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடியதை, நீக்கியதை, மீண்டும் அமுலுக்கு கொண்டு வர வேண்டுமென்று கேட்டதிலிருந்து, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய உரிமைக்காக அவர் பாடு படுகிறார் என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் உரிமையின்

[திரு. செ. முத்துசாமி] [1973 மார்ச் 29

பெயரால் ஒரு சமுகாயத்தின் உரிமையைப் பறிக்கக்கூடாதென்பது தான் அந்த உத்தரவினுடைய அம்சமாகும். அப்படிப் பறிக்கப்பட்ட நிலைமை மாறி, இந்த அரசு.....

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, என்ன உரிமை பறிக்கப் படுகிறதென்பதை மட்டும் அன்பர் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஆசிரியர்கள் கண்டபடி மாறுதல் செய்யப்பட்டார்கள். ஆங்காங்கே இருக்கக்கூடிய உள்ளூர் பிரச்சினைகளுக்குத் தக்காற்போல, அங்கு ஆசிரியர்கள் பந்தாடப் பட்டார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் அரசுக்குச் சொல்ல, அரசு முன்வந்து, "அவர்கள் தேவையில்லை, அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளே போதும், கல்வித் துறையிலே இருக்கக்கூடிய மாவட்டக் கல்வி அதிகாரிகளே அவர்களுக்கு மாறுதல் உத்தரவைப் போடலாம்" என்ற உத்தரவை வழங்கியிருக்கிறது. இந்த உத்தரவை வழங்கியதற்கு, எதிர்க் கட்சித் தலைவரவர்களும் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பதுதான் நான் சொல்லக்கூடிய உண்மை யாகும். அதுமட்டுமல்லாமல்.....

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். இங்கே ஆசிரியர்கள் பிரதிநிதியாக வந்திருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் இங்கே தன்னுடைய சமூகம் தாழ்த்தப்படுகிறதோவென்று வாதாடு கிறார். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு உரிமை போகின்ற அளவுக்கு, இந்த அரசாங்கம், அவர்கள் மாற்றுதல் அதிகாரத்தைக்கூட இழந்து விடக்கூடிய அளவுக்கு அந்த உத்தரவை இட்டிருக்கிறது. அது மிக மிக வருத்தத்திற்குரியது. அதை திரு. முத்துசாமி அவர்கள் உணரு வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதிலுள்ள சிக்கலான பிரச்சினை என்னவென்றால், ஆசிரியர்களை பஞ்சாயத்து யூனியன் நியமிக்கின்றது. நியமிக்கின்ற அதிகாரம் இருக்கிறவர்க ளுக்கு, மாறுதல் செய்யும் அதிகாரம் இல்லையே என்று வருத்தப் படுகிறார்கள். இதுதான் அவர்கள் கோரிக்கை. முன்பு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவில் இருந்தார்கள். இப்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவில் இல்லை. மீண்டும் புதிய

1973 மார்ச் 29] [திரு. ப. உ. சண்முகம்]

உத்தரவு அமுலுக்கு வந்திருக்கிறது. இந்த மன்றத்தில் முன்பு ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் இதைப்பற்றிப் பேசும்போது, நானும், முதல்வரவர்களும் விளக்கங் கள் கேட்டு, அவற்றைப் பெற்றிருக்கிறோம். அதை மறுபடியும் பேச வேண்டியதில்லை. ஆசிரியர்களின் கோரிக்கை என்னவென்று உணர்ந்து தான் இருக்கிறோம். அதைத் தொடர்ந்து பேசி, ஆசிரியர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தி விட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவாவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்களும், எதிர்க் கட்சி உறுப்பினாவர்களும் தனியாக இது பற்றிப் பேசிக் கொண்டிருந்தால், எதிர்க் கட்சியைப் பொறுத்த வரையில், நன்றாக இருக்குமென்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் "எதிர்க் கட்சி மெம்பர்" என்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் எந்தக் கட்சிக்கும் கட்டுப்படாத சுயேச்சை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சமுதாயத்தைப் பொறுத்த அளவில் ஊராட்சி.....

திரு. கே. ராஜாராம் : துணைத் தலைவாவர்களே, என்னுடைய பேச்சை அவர்கள் படித்துப் பார்த்தால் புரியும். ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களை நியமிக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் வேறுபா டில்லாமல், ஒற்றுமையாக, ஒருமனதாக அவர்கள் செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்று மில்லை. அவர்களை நியமிக்கும் அதிகாரமுடைய பஞ்சாயத்து யூனி யன்களுக்கு, மாறுதல் செய்யக்கூட அதிகாரம் இல்லாமல், பிரித்து விடுவது சரியல்ல. ஆகவே, மீண்டும் அந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ஒன்றாகச் செயல்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு தான் சொன்னேன். நண்பர் திரு. சுவாமி நாதன் அவர்கள் சொன்னதுபோல, இதைப்பற்றி என்னுடன் பேசித் தீர்த்துக்கொண்டிருக்கலாம். இதில் தப்பான அபிப்பிராயத்திற்கு இடமேயில்லை. மீண்டும் சொல்கிறேன், ஆசிரியர்களின் நன்மைக்காக வேண்டி, இந்தச் சபையில் பேச வேண்டுமென்று சொன்னால்,

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 29

அதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், நான் முன் வரிசையில் நிற்பேன். நண்பர் திரு. முத்துசாமியைக் காட்டிலும் அதிகமாகப் பாடுபடுவேனென்று சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நான் அதைப்பற்றிப் பேசுவதை விட்டுவிடுகிறேன். இது ஊராட்சித் தலைவர்களுடைய உரிமைப் பிரச்சினை, ஆசிரியர்களுடைய அவதிப் பிரச்சினை. அவதிப் பிரச்சினையை நீக்கியிருக்கிறது அரசு. ஆனால் அதிகாரத்தின் பெயரால் மீண்டும் அந்த அவதியை உருவாக்க வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளத்தான் இந்தப் பிரச்சினையைச் சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசியதைப் படித்து, புரிந்துதான் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, 2000 கைத்தொழில் ஆசிரியர்கள் "பார்ட்-டைம் இன்ஸ்டிரக்டர்"-களாகப் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், 1500 பேர்கள்தான் இருப்பார்களென்று நம்புகிறேன். இந்த ஆசிரியர்கள், தங்களுக்கு முழு நேர ஊதியம் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். பொதுப் பணித் துறையிலே, இப்போது முன் மாதிரியாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல, கல்வி அமைச்சரவர்கள் இந்தக் கைத் தொழில் ஆசிரியர்களுக்கும் முழு நேர ஊதியத்தைத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. செ. முத்துசாமி : 'Education Joint Service Council' என்பதைப்பற்றி ஒரு கூட்டத்தில் நான் எடுத்துச் சொன்னேன். அதைப்பற்றி இப்போது விளக்கமாக எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஆசிரியர்களுடைய சங்கப் பிரதிநிதிகள், கல்வித் துறையின் செயலாளர் தலைமையில் 2 மாதத்திற்கு அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை சந்திக்கக் கூடிய ஏற்பாட்டினைச் செய்து, ஆசிரியர்களுடைய பிரச்சினையை அங்கே பேசி, தீர்வு காண ஏற்பாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளிலே அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்றும், அதற்காக 'Education Joint Service Council' ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

பி.ப. 6-20

1973 மார்ச் 29]

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, கடந்த ஒரு மாதத்திற்கும் அதிகமாக, 4½ கோடி மக்களுடைய சுகதுக்கங்களை நினைந்து அவர்களுக்கு, நல்ல சுபிட்சம் ஏற்பட வேண்டுமென்பதற்கான பணியிலே நாம் ஈடுபட்டிருந்தோமென்ற உணர்வு நமக்கெல்லாம் வர வேண்டும். 450 கோடி, 460 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தைப்பற்றியும் நாம் ஆலோசித்திருக்கிறோம். முடிவாக இன்று நிதி ஒதுக்க மசோதாவில், ஏதோ சில மணி நேரங்களாக இங்கு பேசிவரக்கூடிய வார்த்தைகளிடையே ஏதோ அபசுரம் கலக்கிறதோவென்று முதலமைச்சரவர்கள் கருத மாட்டார்களென்று கருதுகிறேன். இந்த நாட்டில் 4½ கோடி மக்களுடைய நல் வாழ்வு சம்பந்தமாக, முற்றிலும் நூற்றுக்குநூறு நாம் கவனம் செலுத்துகிறோமென்ற மனநிறைவு கொண்டவனாக என்னால் இருக்க முடியவில்லையென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய நாட்டினுடைய எதிர்காலத் தலைமுறையினரின் வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதற்கு இந்தத் தலைமுறையினரின் செயல்கள் காரணமாக இருக்க வேண்டும். இந்தத் தலைமுறையினர், எதிர்கால சுபிட்சத்திற்கான எல்லாத் துறைகளையும் கவனத்தில் கொண்டு, சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாம் பணி புரிந்திருக்கிறோமாவென்று கவனிக்கும்போது, என்னுடைய மனது சங்கடப்படுகிறது. மது விலக்குப் பிரச்சினை ஒன்றிற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். "செல்வச் செழிப்பு அறியாத மக்களை இன்னமும் வறுமையில் ஆழ்த்தவும், தார்மீக மதிப்புகளையும், பாரம்பரியமாக வந்துள்ள மதிப்பீடுகளையும் தாழ்வுறுத்தவும், அவ்வப்போது வழி கோலி விடுகின்றன, சட்ட மன்றங்களின் செயல்கள்" என்று நீதிபதி தேக்சந்த் என்பவர் கூறியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அவர் ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார். அவரைப்பற்றி விரிவாகக் கூற வேண்டியதில்லை. 460 கோடி ரூபாய் செலவினங்களை வைத்துக்கொண்டு, பல்வேறு காரியங்களிலே அதிகமான பணத்தை, நம்முடைய முதல்வரவர்களும், அரசாங்கமும் தாராளமாகச் செலவழித்தாலும்கூட, மாநிலத்திலுள்ள மக்களுடைய நல் வாழ்வு இந்த மதுபானம் "ஒன்றை"க் காரணமாகக் கொண்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நாம் எப்படி சமதர்ம சமுதாயத்தை இந்த நாட்டில் அமைக்க முடியுமென்பதை யோசிக்க வேண்டும். எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தாலும்கூட, அதனால் அவர்கள் வாழ்க்கையில், அவர்கள் எந்தெந்தத் துறைகளில் எப்படி முன்னேறிக்கொண்டு வர வேண்டுமோ, அதற்கு மாறாக இந்த மதுபானமானது, அவர்களுடைய முன்னேற்

றத்தைத் தடுக்கிறது, கெடுக்கிறதென்ற நினைவு மனதிலே வருகிற போது, மனநிறைவோடு நாம் இதைப்பற்றிப் பேசுவதற்கில்லை. இதை எதிர்க் கட்சிகள் எடுத்துக் கூறிக்கொண்டே இருக்க வேண்டு மென்று ஞாபகப்படுத்துவதற்காகத்தான், இந்தச் சந்தர்ப்பத்திலே கூறுகிறேன். அண்ணு அவர்கள் முன்னுலே சொல்லியிருக்கிறார்கள். "ஆளுங்கட்சி அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும் கட்சியாக மாறுமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை. ஜனநாயக காலத்தில் ஆளுங்கட்சி, ஆட்சி பீடத்தில் அமர்ந் திருக்கும் தனது கட்சித் தோழர்களைப் பாராட்டவும், அத்தோழர் கள் ஆட்சியில் குறை ஏற்பட்டால் அக் குறையை மறைக்கவும் பயன் படுமே தவிர, மக்களின் குறையை சர்க்காருக்கு எடுத்துக்கூறி அதைப் போக்கப் பயன்படாது. மாற்றுக்கட்சி இருந்தால்தான் அது, ஆட்சியும், ஆட்சி செய்யும் கட்சியும் அநீதி இழைக்கும்போது, அதைக் கண்டிக்கவும், அப்படிக் கண்டிக்க மக்கள் அச்சத்தாலோ, அறிவின்மையாலோ மறந்திருந்தாலும், அவர்களைக் கண்டிக்கும் படித் தூண்டவும் அது பயன்படும்" என்று அண்ணு அவர்களே முன்னுல் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல மது சம்பந்தப்பட்ட மட்டிலே சட்டம் வருகின்றபோது, "சர்க்கார் செய்வதையெல்லாம் கண்டிப்பதுதான் அண்ணுதுரையின் வேலையா என்று கேட்பார்கள். அதுவல்ல. நல்லது செய்தால் ஆதரிக்க வேண்டும். நான் ஆதரித் தும் இருக்கிறேன். மது குடிக்கக்கூடாது என்று சர்க்கார் மது விலக்குச் சட்டம் கொண்டு வந்தபோது நாம் "இனி எல்லாரும் குடித்துத்தான் ஆக வேண்டும், மது விலக்கு கூடாது" என்னும் மடத்தனமான பிரசாரத்தில் ஈடுபடவில்லை" என்று அதைத் தொடர்ந்து கூறியுள்ளார்கள். இதையெல்லாம் நாம் காணும் போது, நாம் எத்தனைதான் நல்ல காரியங்களைச் செய்துகொண்டு போனுலும்கூட, மது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சரவர்கள் நுண்மாண் நுழை புலன் உள்ளவர் என்று நான் கருதுகிறேன். அவர்களை நான் அவ்வப்போது கவனித்திருக் கிறேன். கணித்துத்தான் சொல்கிறேன். அவர் எதிர்க்கட்சித் தலைவர் பக்கத்தில் அன்று எதிர்க் கட்சியில் வீற்றிருந்தபோது இருந்த நிலைமையை ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. முன்னுல் எதிர் வரிசையிலே நம்முடைய தற்போதைய கல்வியமைச்சர் அவர் களுக்குப் பக்கத்திலே அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, அவர்கள் எப்போதும் நிமிர்ந்து ஆசனத்திலே அமர்ந் திருந்ததை நான் பார்த்ததே இல்லை. அப்படியே சுருண்டு, நெளிந்து கொண்டு, படுத்துக்கொண்டிருக்கின்ற மாதிரி அன்று எதிர்க் கட்சி

வரிசையிலே காட்சியளித்தார். அன்று கண்ட காட்சியையும் இன்றைய காட்சியையும், இன்று அவர்களுடைய செயல்கள் எப்படி நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதையும் என்னுல் காண முடிகிறது. இதையெல்லாம் நான் ஒப்பிட்டுப்பார்த்தே சொல்லு கின்றேன். பொதுமக்களுடைய, சாதாரண மக்களுடைய உள்ளங் களிலே ஒளிந்து கொண்டிருக்கின்றது என்னென்ன, எந்தெந்த தரத் தினரின் எண்ணங்கள் எப்படி எப்படி இருக்கின்றன என்பதை அவர் மதிப்பிடுவதிலே வல்லவர். அவர்களுடைய பலவீனங்களை மிகமிக நன்முகத் தெரிந்தவர். மனிதனுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்வது ரொம்பக் கஷ்டம். மனிதனுடைய பலவீனங் களுக்குத் தக்கவாறு என்ன செய்தால் அந்த பலவீனங்களைச் சாதக மாக்கிக்கொண்டு அதற்கேற்ற வகையிலே நாம் காரியம் செய்து கொண்டுபோனுல், நம்முடைய இந்த ரதத்தை, வண்டியைத் தான் ரதம் என்று சொல்கின்றேன், இந்த அரசாங்க ரதத்தை நடத்திக் கொண்டு, நாம் காலம் தள்ளுவதற்கு சரியாக இருக்கும் என்பதை அறிந்து நால் வகை, சதுர்வித உபாயங்களையும் அவர் நன்முகக் கையாண்டு காரியங்களைச் செய்துகொண்டு வருகின்முர். அவருடைய திறமையை நான் கொஞ்சம்கூடக் குறைத்து மதிப்பிடவில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், தமிழ் நாட்டில் உள்ளவர்கள் சாதுரியமாகக் காரியங்களைச் செய்வதிலே வல்லவர்களாக இருக்கின்முர்கள் என்முல், நான் பெருமை கொள்ளக்கூடியவனுக இருக்கின்றேன். அந்தத் திறமையை, அந்த வல்லமையை இந்த நல்ல காரியத்திலே அவர் செலுத்தவில்லையே என்றுதான் நான் நினைக்கின்றேன். இந்த மது பானம் நம் நாட்டிற்கு எவ்வளவு கேடு பயக்கக்கூடியதாக இருந்து கொண்டிருக்கின்றது! பெரும்பான்மையான மெம்பர்களுடைய ஆதரவை வைத்துக்கொண்டு எதையும் செய்து கொண்டு போகிறார் என்று நான் சொன்னுல், அதை மறுப்பதற்கில்லை. அரிஸ்டாடில் கூட "தனி மனிதனின் சிறந்த ஆட்சி, அவனுடைய சர்வாதிகார ஆட்சி யாக மாறுவதும், அதுவே சில அறிஞர்களின் சிறந்த ஆட்சியாகப் பிறந்து பின்பு சில பணக்காரர்களின் சுரண்டல் ஆட்சியாக மாறு வதும், அதுவே மத்திய வகுப்பு, சாதாரண மக்களின் சமநிலை நல்லாட்சியாக மலர்ந்து பின்பு கொள்ளையடிக்கும் மக்களாட்சியாக மாறுவதும் அரசின் இயல்பு" எனக் கூறியிருக்கின்முர். இங்கே இதையெல்லாம் இந்த அரசியல் ஆட்சிகளுடன் ஒப்பிட்டு எவ்வா றெல்லாம் மாறுதல் அடைகிறது என்பதைப் பார்த்தால், இது நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. "இந்த மக்களாட்சி அமைப்பு நாளடைவில் சீரழிந்து மக்களாட்சி முறையில் தேர்ந்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [1973 மார்ச் 29

தெடுக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியில் சென்று நிற்கிறது. இந்த சீரழிவு நிலை, அதிக எழுத்தறிவில்லாத மக்களைக்கொண்ட நாடுகளில் மேலும் மேலும் சீரழிய வாய்ப்பு உண்டு" என்று அரிஸ்டாடில் கூறியதாக நம்முடைய பெரியவர்கள், நம் நாட்டில் உள்ளவர்கள் விவரித்துக் கூறியிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அசெம்பிளியில் மிகப்பெரும்பான்மையான பலம் இருப்பதால், இந்தச் சபையிலேயும் பலம் இருந்து கொண்டிருக்கின்றது. அதைப்பற்றி மட்டும் நாம் பெருமையாகக் கருதிவிடக்கூடாது. இந்தப் பெரும் பான்மை ஆட்சி இந்த ஜனநாயக ஆட்சியை எங்கு கொண்டுபோய் விடும் என்பதையும் நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். பிற மாநிலங்களில் இந்த மதுவிலக்கை அமுல் செய்கின்றார்களா இல்லையா என்று பார்க்க வேண்டாம். நாம் மதுவிலக்கை அமுல் செய்வதிலே, நடைமுறைக்குக் கொண்டுவருவதிலே நம் கையைப் பிடிப்பவர்களோ, மறுப்பவர்களோ, தட்டிக்கேட்பவர்களோ, யாரும் இல்லை. நம்மால் அதைச் செய்யமுடியும். சமதர்ம சமுதாயத்திலே, நாட்டிலே பொருளாதார வசதியோடு, சம நீதியோடு, சமூக நீதியோடு தாழ்த்தப்பட்டவர்களோ, மற்ற இனமோ, ஏழை சமூகமோ வாழ வேண்டுமானால், அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பக்கம் சுபிட்சம் ஏற்படுவதற்காக கோடானு கோடி பணத்தைச் செலவழித்துக் கொண்டு போகிறபோது, அதே நேரத்தில் இன்னொரு பக்கத்திலே அவர்கள் வாழ்க்கையிலே உயர முடியாதபடி அவர்களுக்கு மதுப் பழக்கமும் பிற கஷ்டங்களும் ஏற்பட்டுக்கொண்டே இருந்தால், எப்படி இந்த நாட்டிலே சமதர்ம சமுதாயம் ஏற்பட முடியும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். சில வாரங்களுக்கு முன்னால், கடந்த சில வருஷங்களுக்கு முன்னால் நான் எந்தெந்த அரிசன கிராமங்களுக்குச் சென்றிருந்தேனோ, அந்தப் பகுதிகளுக்கு சென்றிருந்தபோது பார்த்தேன். அங்கு இருக்கக்கூடிய பால் மாடு களை இன்று காணோம். அங்கு இருந்த பெண்டு பிள்ளைகளை, அன்று சில வருஷங்களுக்கு முன்பு எப்படிப் பார்த்தேனோ அந்த நிலையில் இன்றையதினம் நான் பார்க்க முடியவில்லை. வேறுவிதமான நிலைமை அங்கே காணப்படுகிறது. கடந்த ஒரு வருடம், ஒன்றரை வருட காலத்திற்கு முன்னாலேயிருந்து அந்த கிராமங்களில் இந்த நிலைமையினை நாம் பார்க்கின்றோம். ஆக இந்த சபையிலே நான் கூறிக்கொள்வது நம்முடைய சட்ட மன்றத்திலே இருப்பவர்கள் பெரும்பான்மை அல்லது ஜனநாயகத்தின் பெயரால், நடக்கும் இவ்வளவு பெரிய ஒரு தீமைக்கும், அதற்கான ஒரு சட்டத்திற்கும், ஆட்சிக்கும், அதன் நடைமுறைகளுக்கும் ஒத்து இருப்பவர்களாக

1973 மார்ச் 29] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

இருந்து இந்தப் பெரும் பாவத்தைக் கட்டிக்கொள்ள வேண்டி யிருக்கிறதே என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தலைமுறையிலேயுள்ள சட்ட மன்ற அங்கத்தினர்கள் மட்டு மல்லாமல், இந்தத் தலைமுறையில் வாழுகின்ற, படித்தவர்கள் எல்லோருக்கும் இந்தப் பாவத்திலே பங்கு உண்டு, இந்தப் பழி நம்மையும் சாருமே என்ற உணர்வோடு இதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

6. மன்றத்தின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

81. Notification issued with G.O. Ms. No. 3165, Revenue, dated the 2nd December 1972 in regard to an amendment to the Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Rules, 1957. [Laid on the Table of the House under section 23 (3) of the Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956 (Tamil Nadu Act XLII of 1956).]

82. Notification issued with G.O. Ms. No. 307, Public (Elections), dated the 7th February 1973 in regard to certain amendments to Rules 4 and 5 of the Tamil Nadu Legislators' Hostel (Accommodation) Rules, 1969. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

B. Reports, Notifications and other papers.

Nil.

இலேப்பு

[557-ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L. A. BILL No. 9 of 1973.

(As passed by the Assembly.)

A Bill provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commencing on the 1st April 1973.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1973.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the 1st April* 1973.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commencing on the 1st April 1973, a sum not exceeding seven hundred and eighty-nine crores, thirty-three lakhs, fifty-two thousand and nine hundred rupees, being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding*		
		Voted by the Legislative Assembly.	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs	Rs	Rs
1	Land Revenue Department	2,92,42,500	..	2,92,42,500
2	State Excise Department.	89,05,300	..	89,05,300
3	Motor Vehicles Acts—Administration.	57,56,400	..	57,56,400
4	General Sales Tax and other other Taxes and Duties—Administration.	3,11,32,300	..	3,11,32,300
5	Stamps—Administration.	34,76,900	..	34,76,900

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding*		
		Voted by the Legislative Assembly.	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs.	Rs.	Rs.
6	Registration Department.	1,36,50,000	*100*	1,36,50,100
	Debt Charges	..	*69,14,90,800*	69,14,90,800
7	State Legislature	36,15,600	*63,200*	36,78,200
8	Elections	13,30,300	..	13,30,300
9	Head of State, Ministers and Headquarters Staff.	8,97,27,500	*36,17,000*	9,33,44,500
10	Milk Supply Schemes ..	2,02,28,900	..	2,02,28,900
11	District Administration and Miscellaneous.	13,07,53,700	*39,600*	13,07,93,300
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.	86,99,800	*1,100*	87,00,900
13	Administration of Justice.	8,30,12,700	*50,08,000*	8,80,20,700
14	Jails	3,16,64,300	..	3,16,64,300
15	Police	22,22,87,500	*300*	22,22,87,800
16	Education	98,65,64,100	..	98,65,64,100
17	Medical	24,29,47,300	..	24,29,47,300
18	Public Health	17,53,30,000	*100*	17,53,30,100
19	Agriculture	24,06,72,900	*1,100*	24,06,74,000
20	Fisheries	2,58,39,300	..	2,58,39,300
21	Animal Husbandry ..	5,26,59,700	*100*	5,26,59,800
22	Co-operation	4,91,39,600	..	4,91,39,600
23	Industries	4,48,17,700	..	4,48,17,700
24	Cinchona	75,74,600	..	75,74,600
25	Handlooms and Textiles.	2,15,47,300	..	2,15,47,300
26	Khadi	31,23,700	..	31,23,700

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs.	Rs	Rs
27	Community Development Projects, etc.	25,36,55,800	—	25,36,55,800
28	Labour including Factories	1,42,42,400	*100*	1,42,42,500
29	Welfare of the Scheduled Tribes, Castes, etc.	8,16,35,200	*100*	8,16,35,300
30	Welfare of the Backward Classes etc.	5,56,27,100	100	5,56,27,200
31	Irrigation	15,55,43,600	..	15,55,43,600
32	Public Works—Works ..	15,48,71,500	*2,10,000*	15,50,81,500
33	Public Works—Establishment and Tools and Plant.	7,67,85,700	—	7,67,85,700
34	Public Works—Grants-in-aid.	5,29,31,400	..	5,29,31,400
35	Road Transport Schemes.	13,96,39,400	*2,50,000*	13,98,89,400
36	Famine Relief	12,24,47,900	*50,00,000*	12,74,47,900
37	Pensions	6,02,46,200	*19,72,800*	6,22,19,000
38	Miscellaneous	22,52,57,800	*14,10,200*	22,66,68,000
39	Stationery and Printing ..	4,87,04,200	*1,52,600*	4,88,56,800
40	Forest Department ..	2,78,25,800	*100*	2,78,25,900
41	Other Miscellaneous Compensation and Assignment.	11,09,74,400	*22,53,300*	11,32,27,700
42	Compensation to Zamindars.	1,85,34,000	..	1,85,34,000
44	Capital Outlay on Agriculture.	30,13,000	*100*	30,13,100
45	Capital Outlay on Industrial Development.	13,51,86,200	5, 200	13,51,91400
46	Capital Outlay on Irrigation.	12,4393,600	..	12,43,93,600

(1)	(2)	(3)	(4)	(5)
		Rs	Rs	Rs
47	Capital Outlay on Public Works.	13,16,85,100	100	13,16,85,200
48	Capital Outlay on Road Transport schemes.	3,37.24,100	100	3,37,24,200
49	Capital Outlay on Forests.	2,46,64,000	..	2,46,64,000
50	Commuted Value of Pensions.	19,39,500	..	19,39,500
51	Capital Outlay on Schemes of Government Trading.	38,44,67,000	*1,100*	38,44,68,100
52	Loans and advances by the State Government.	33,66,57,,000	..	33,66,57,000
	Public Debt—Repayment ..	..	*1,92,35,24,400*	1,92,35,24,400
	Grand Total ..	5,25,83,50,200	*2,63,50,02,700*	7,89,33,52,900

I certify that this is a Money Bill.

P. SEENIVASAN

Deputy Speaker, Tamil Nadu Legislative Assembly.

தமிழ் நாடு சட்ட மன்றம்

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

Dacoity in the P.W.D. Offices at Chepauk, Madras

*301 பு.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there was any dacoity in the Public Works Department Offices at Chepauk, Madras, about April 1972;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தில் திருட்டு.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் அளவில் சென்னை சேப்பாக்கத்திலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தில் திருட்டு ஏதும் நடந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 20—4—1972-ஆம் நாள் இரவு, சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலக வளவுகளில் சேமித்து வைக்கப் பட்டிருந்த சுமார் 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புக் கம்பிகள் திருடப்பட்டன.

[1973 மார்ச் 30

(உ) குற்றம் புரிந்தவர்கள் காவலரால் கைது செய்யப்பட்டு 5-வது மாநகர மாஜிஸ்டிரேட் முன்னால் குற்றம் சாட்டப்பட்டனர். களவுபோன பொருள்கள் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது. உடைமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் பொருள்களைக் காப்பதற்குக் காவல்காரர்கள் இரண்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பகல் நேரங்களிலும் பொருள்களைக் காவல்காரர் ஒருவர் பார்த்துக்கொள்கிறார்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, திருடப்பட்டு எடுத்துச் சென்ற பொருள்களின் விலை மதிப்பு எவ்வளவு? ரூ. 4,000 மதிப்புள்ள பொருள்களும் திருடப்பட்டுச் சென்றனவா என்று அறிய விரும்புகிறேன். இத்தகைய முக்கியமான இடங்களில் திருட்டு நடந்திருக்கிறது. எப்படி நடக்க முடிந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ரூ. 4,000 மதிப்புள்ள இரும்புக் கம்பிகள் திருடப்பட்டன என்று முதல் கேள்விக்கு அளித்த பதிலில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பகுதியில் லிலர் லாரியில் ஏறிக்கொண்டு இரவு சுமார் 1 மணி அளவில் வந்திருக்கிறார்கள். அங்கு சார்ஜண்டுகள் 2 பேர் பணி புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னால் சேமித்து வைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளை அகற்றும்பொழுது, அதைத் தடுத்துக் கேட்ட நேரத்தில் கத்தியைக் காட்டி பயமுறுத்தி, தூண் ஒன்றில் அங்கிருந்த காவலரைக் கட்டி வைத்துவிட்டு, லாரியில் கம்பிகளை ஏற்றினார்கள். அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகலும்பொழுது தான் அவர்களை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு போலீசாருக்கு விவரம் சொல்லி, அதன் அடிப்படையில் குற்றவாளிகள் 13 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருட்டு பலவகைப்படும். அதிகாலையில் 6 மணியிலிருந்து 7½, 8 மணிக்குள், மத்தியானம் பட்டப்பகலில் 1 முதல் 3 மணிக்குள், கவர்மெண்டு எஸ்டேட்டிலும், சேப்பாக்கத்தில் பழைய ரெவின்யூ போர்டு ஆபீஸ்களின் பக்கத்திலும் இருக்கும் மரங்களில் உள்ள தழைகளை ஏராளமாக வெட்டி வண்டி வண்டியாகக் கொண்டு போகிறார்கள். திருட்டில் இது முதல்தரமான திருட்டு. இதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? நான் நேரடியாகப் பார்க்கிறேன். தடுத்தால் சண்டை வந்துவிடும்போல் இருக்கிறது. தினசரி காலை

1973 மார்ச் 30]

லும் மத்தியானம் பட்டப்பகலிலும் கவர்மெண்டு எஸ்டேட்டிலும், பழைய ரெவின்யூ போர்டு ஆபீசுகளிலும் உள்ள மரங்களிலிருந்து தழை இலை கிளைகளை வெட்டிக் கொண்டு போகிறார்கள். இதுவும் இரும்புக் கம்பிகள் திருட்டு போல தான். இதை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திருட்டை பல நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தும், கேள்வி வருகிற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொல்லுவதற்குப் பதிலாக ஏற்கெனவே என்னிடத்தில் தெரிவித்திருந்தால், அப்படிப்பட்ட விஷயத்தைக் கவனித்திருப்பேன். முன்பே கவனித்திருக்கலாம். பல கிளைகளைக் காப்பாற்றியிருக்கலாம்.

Transfer of Sub-Collector, Kumbakonam

*302 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a resolution was passed at the Tamil Nadu Village Officers Association, Kumbakonam Revenue Division, on 30th August 1972 requesting the Government to transfer the Sub-Collector, Kumbakonam;

(b) if so, the reason for such a resolution; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுதல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுமாறு அரசைக் கோரி, 30—8—1972 ஆம் நாள், கும்பகோணம் வருவாய்க் கோட்டம், தமிழ் நாடு கிராம அதிகாரிகள் சங்கம், தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியதற்கான காரணம் யாது?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

[1973 மார்ச் 30

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ): கும்பகோணம் சப் கலெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் ஒன்றை 17—8—1972 அன்று (30—8—1972 அன்று அல்ல) கும்பகோணம் கோட்டம், தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கம் நிறைவேற்றியது. எனினும், இத்தீர்மானம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அரசுக்கோ சங்கத்தால் அனுப்பப்படவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானம் எதற்காக நிறைவேற்றப்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த அதிகாரி அங்குள்ள கிராம அதிகாரிகள் 30 பேர்களை சஸ்பெண்டு செய்தார். அதற்குக் காரணங்கள் கேட்கப்பட்டபொழுது, வரூல் பண்ணுவதில் மந்தமாக இருந்ததற்கு 14 பேர்கள், பணக் கையாடலுக்கு 6 பேர்கள், ஜமாபந்தி கணக்கு முடிக்காததற்கு 8 பேர்கள், பணியாற்றும் கிராமத்தில் குடியிருக்காத காரணத்திற்காக ஒருவர், கணக்குகளைத் தவருன நோக்கத்தோடு திருத்தியதற்காக ஒருவர், ஆக மொத்தம் 30 பேர்களை சஸ்பெண்டு செய்தார் என்றும், 17 பேர் சஸ்பெண்டிலிருந்து விடப்பட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. அதையொட்டி கிராம அதிகாரிகள் அந்த அதிகாரியின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று விரும்பவில்லை என்று நமக்குத் தகவல்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஜமாபந்தியின் போது இந்த கிராம அதிகாரிகளிடத்தில் அவர் மிகுந்த அகங்காரத்தோடு (ஆங்கிலத்தில் "அரகண்ட்") நடந்துகொண்டார். அதனுடைய காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, இவர்கள் அங்கே புகார் செய்ததாகத் தெரிகிறது. புகார் செய்த பிறகு புகார் ஏன் செய்தீர்கள் என்று நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிய வருகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது தீர்மானத்தினுடைய வாசகமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். நான் எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன்.

1973 மார்ச் 30]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அவர் மாற்றப்பட்டுவிட்டாரா, அங்கேயே இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நமக்கு இந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டு மாற்றவேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் சப் கலெக்டர் பாலகிருஷ்ணன் என்பவர் குடும்ப வேலையைக் கவனிக்க 13—1—1973 முதல் 27 நாட்கள் "எர்ன்ட் லீவ்" எடுத்திருக்கிறார். திரும்பி வந்தவுடன் இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, இப்படி கீழே பணியாற்றும் சிப்பந்திகள் தங்களுடைய மேல் அதிகாரிகள் கடமையைச் செய்கிறபொழுது மாற்றவேண்டுமென்று மனுக் கொடுத்தாலோ, தீர்மானம் நிறைவேற்றினாலோ, அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுத்தால் இது தொடர்கதையாக வரும். இப்படிப்பட்ட தீர்மானத்தை அரசு ஆதரிக்குமா அல்லது ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே இந்த மாறுதல் நடைபெறவில்லை. ஏனென்றால் தீர்மானம் நிறைவேற்றியது 17—8—1972-ல். இந்த அதிகாரி லீவில் போனது 13—1—1973-ல். திரும்பி வந்த பிறகு அவர் அங்கிருந்து உதகமண்டலத்துக்கு "ஆதரைஸ்டு ஆபீசர் ஆஃப் லேண்டு ரிபார்ம்ஸ்" ஆக அனுப்பப்பட்டிருக்கிறார். நிர்வாக வசதிக்காகச் செய்யப்பட்ட மாறுதலே தவிர நெருக்கடிக்காக அல்ல.

National Cadet Corps.

* 303 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a complaint has been received by the Director of School Education during April 1972 about the irregularity in the selection of National Cadet Corps Officers at Government High School (Boys), Nannilam; and

(b) if so, the nature of the complaint and the action taken thereon?

[1973 மார்ச் 30

தேசிய மாணவர் படை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நன்னிலம், அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் தேசிய மாணவர் படை அதிகாரிகளைத் தெரிந்தெடுப்பதில் முறைகேடு நடந்துள்ளதாக, 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு புகார் ஒன்று வந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அந்தப் புகாரின் தன்மை என்ன? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தேசிய மாணவர் படையில் பகுதி நேர அதிகாரியாக நியமனம் கோரி அனுப்பப்பட்ட மனு ஒன்றை அப்பள்ளித் தலைமை யாசிரியர் தேசிய மாணவர் படைத் தலைமையலுவலகத்துக்கு அனுப்பிட மறுத்துவிட்டதாக பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒரு முறையீடு வந்தது. அத்தகைய பகுதி நேர அதிகாரி பதவி ஒன்றுக்கு நிலையான ஊழியத்தில் உள்ள தகுதி பெற்ற இருவர் மனுக்களை மட்டுமே அனுப்பவேண்டுமென்பது தேசிய மாணவர் படைத் துறையின் விதி முறை. அத்தகுதி பெற்ற இருவர் மனுக்களை மட்டுமே அனுப்ப வேண்டியிருந்ததால் பிறவற்றை தலைமை ஆசிரியர் அனுப்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தவறான முறையிலே அந்த இரண்டு மனுக்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. முதலில் நான்கு பேர்களுடைய மனுக்கள் அனுப்பப்பட்டு இரண்டு பேர் "செலக்ட்" செய்யப்பட்டார்கள். நேவிலுள்ள ஆர்மி யூனிட்டாக இருந்த காரணத்தால் மறுபடியும் அந்த மனுக்களை அனுப்ப வேண்டுமென்று கேட்டபொழுது, அந்த நான்கு பேர்களில் எந்த இரண்டு பேர் செலக்ட் செய்யப்பட்டார்களோ, அவர்களுடைய மனுக்கள் அனுப்பப்படாமல் வயது அதிகமாக இருந்தது என்ற காரணத்தால், எந்த இரண்டு பேர்களின் மனுக்களைத் தள்ளுபடி செய்தார்களோ அவர்களுடைய மனுக்களை வேண்டுமென்றே அனுப்பியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? இது போன்று நடக்காமலிருப்பதற்கு தக்க நடவடிக்கைகள் அரசு இனிமேலாவது எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது குறிப்பிட்டிருப்பது முதலிலே தேசிய மாணவர் படை யூனிட் ஆர்மி யூனிட்டாக இருந்தது என்றும் பிறகு நேவி யூனிட்டாக மாற்றப்பட்டதென்றும் முதலிலே இவர்கள் அனுப்பப்பட்டபோது "சீனியாரிட்டி" என்ற அளவிலே 15 ஆண்டுகள் பணி புரிந்தவர், பிறகு 5½ ஆண்டுகள் பணிபுரிந்தவர் என்ற அளவுக்கு இரண்டு பேர் அனுப்பப்பட்டதாகவும், பிறகு மறுபடியும் இரண்டு பேர் அனுப்பப் பட்டதாகவும், அதிலே ஒருவர் வயது அதிகமானவர் என்ற காரணத் தினால் தள்ளப்பட்டுவிட்டார் என்றும் கடைசியிலே மூன்று அப்ளி கேன்ட்ஸ், திருவாளர்கள் இலக்குமணன், கிருஷ்ணமூர்த்தி, தாயுமானவர் என்பவர்கள் மட்டும் அனுப்பப்பட்டார்கள் என்றும் " none of the candidates where selected for the post " என்றும் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

State Planning Commission's Task Force on Education

*304 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the State Planning Commission's Task Force on Education has suggested any change in the duration of school and college education in the State; and

(b) if so, the details thereof and the decision of the Government thereon?

கல்வி குறித்த மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் பணிக்குழு

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள பள்ளி, கல்லூரிகளின் கல்விக் கால அளவை மாற்றுவது குறித்து, கல்வி குறித்த மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் பணிக்குழு கருத்துரை ஏதும் வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை? அதன் மீது அரசு எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிப் படிப்பு பத்து ஆண்டுகள், இண்டர்மீடியட் படிப்பு இரண்டு ஆண்டுகள், கல்லூரிப் படிப்பு இரண்டு அல்லது

[1973 மார்ச் 30

மூன்று ஆண்டுகள் என்று படிப்பின் பல்வேறு நிலைகளின் ஆண்டு வரம்பைத் திருத்தியமைக்கலாம் என்பது அக்குழுவின் பரிந்துரை. இப்பொருள் அரசின் ஆய்விலுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இப்பணிக் குழுவின் அறிக்கை முழுவதையும் நமது சபை முன் அரசு வைக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முடிவு எடுக்குமுன்னர் அங்கத்தினர் களுடைய கருத்தையும் அறிவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க இயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதை அந்தக் குழுவிலே கல்வி வல்லுநர்கள் மற்றவர்களெல்லாம் இருந்து முடிவெடுத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகத் துணை வேந்தர் களுடைய கருத்துக்களெல்லாம் அறியப்பட்டிருக்கின்றன. அவர் களுடைய கருத்துக்களை அறிந்ததற்குப் பிறகு பல்கலைக் கழகமே இவைகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிற காரணத்தினால், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களையும் அழைத்து வைத்து, இதுபற்றி ஒரு திட்டவட்டமான முடிவெடுக்கலாமென்று அரசு கருதிக்கொண் டிருக்கிறது. அந்த வாய்ப்பு இருக்குமேயானால், சட்டமன்ற உறுப் பினர்களுடைய கருத்தை அறிவதற்கும் முயற்சி எடுக்கப்படும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்தக் குழுவின் அறிக்கையை நான் பார்த்தேன். இந்த அறிக்கையிலே இத்தனை ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிக்கு, கல்லூரிக்கு இத்தனை ஆண்டுகள் என்று சொல்லப்பட்டிருக் கின்றது. ஆனால் இந்தக் கல்லூரிகளிலே மாணவர் தொகை பெருகு வதற்கேற்ப புதிய பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படுமா என்ற விவரங்கள் இல்லை. நேற்று நடந்த சென்ட் கூட்டத்திலே வைஸ்-சான்சலர் சொல்லியிருக்கின்றார் "இரண்டு லட்சம் மாணவர்கள் சென்னைப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் பரிட்சை செய்ய வேண்டியிருக்கிறது. புதிய பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட வேண்டும்" என்று யோசனை சொல்லியிருக்கின்றார். அந்த யோசனையை இந்தக் குழு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, புதிய பல்கலைக்கழகம் கொண்டுவருவது தனி யோசனையாக இருக்கும். இந்தப் பல்கலைக் கழகப் படிப்பை எப்படி மாற்றியமைப்பது என்பதை நாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பொதுவாக 10

[1973 மார்ச் 30]

ஆண்டு பள்ளிப் படிப்பு, இரண்டு ஆண்டு இண்டர்மீடியட் வகுப்பு, 3 ஆண்டுகள் பட்டப் படிப்பு என்ற வகைக்கு மாற்றிவிடவேண்டும் என்பது எண்ணம். அந்த எண்ணம்தான் அகில இந்திய கல்வியமைச் சர்கள் மாநாட்டிலும் வற்புறுத்தப்பட்டு எல்லா வகையிலும் ஒரே சீராக மேற்கொள்ளப்படவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால் இப்போது பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பிரிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. 10 ஆண்டுகள் + 2 ஆண்டுகள் + 3 ஆண்டுகள் 15 ஆண்டுகள் முடிய பட்டப்படிப்பு இருக்க வேண்டுமென்ற கருத்தை ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், ஏற்கெனவே நடைமுறைப்படுத்தியிருக்கின்றன. தமிழ் நாடு, பாண்டிச்சேரி, குஜராத் ஆகிய மூன்று மாநிலங்களிலும் 11 வகுப்பு, 1 வகுப்பு, 3 ஆண்டுகள் என்று வைத்துக்கொண்டிருக் கின்றன. 11 2 2 என்ற வகையில் பீகார் வைத்துக்கொண்டிருக் கின்றது. 12 3 என்ற வகையில் ஒரிஸ்ஸா, நாகாலாண்ட் வைத் திருக்கிறது. 13 2 என்று அருணாசல பிரதேசம் வைத்திருக்கிறது. 11 3 என்று 14 ஆண்டுகளோடு இந்தப் படிப்பை முடிக்கிற அளவுக்கு மற்ற மாநிலங்களெல்லாம் வைத்திருக்கின்றன. ஆனால் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து 10 ஆண்டு பள்ளிப் படிப்பு, இரண்டு ஆண்டு இண்டர்மீடியட், 3 ஆண்டு பட்டப்படிப்பு என்று 15 ஆண்டுகளுக்குக் குறையக் கூடாது பட்டப்படிப்புக்கு என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, பல்கலைக்கழகம் தனியாக வைப்பது என்பது தனியாக மேற்கொள்ளவேண்டிய ஒன்று. ஆகையால் பல்கலைக்கழகம் தனியாக வைக்க வேண்டுமென்றால், அதற்குப் பெரும் செலவு ஏற்படும். ஏனென்றால் இப்போது மதுரை பல்கலைக்கழகமே வைத்து, அங்கே முழுவதாக வசதிகளையும் வாய்ப்பு களையும், இன்னமும் நிறைவேற்ற முடியாமல் நாம் இருக்கிறபோது அந்தப் பல்கலைக்கழகத்தைச் செம்மையுற ஆக்கியதற்குப் பிறகு மற்றொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்துவதைப் பற்றி நாம் சிந்திப்பது நன்றாக இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தத் திட்ட ஆணைக்குழுவினுடைய, பணிக்குழுவினுடைய கருத்துரைகள் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. இந்தப் பரிந்துரைகள் மீது அல்லது கருத்துரைகள் மீது எப்படி அரசு நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அந்தக் கருத்துரையையெல்லாம் புத்தகமாகக் கூட எல்லோருக்கும் விநியோகித்திருக்கிறார்கள். அதற்கு மேல் அதனுடைய கருத்துரையைப்பற்றி எப்படி அரசு நடவடிக்கை எடுக்கும்? அதை ஆராய்வதற்கு மறுபடியும் ஏதாவது

ஒரு கமிட்டி போட இருக்கிறார்களா? என்ன நிலைமையிலே அதனுடைய கருத்துரைக்கான முடிவுகளும் நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மறுபடியும் குழு போட்டுக்கொண்டே போவதென்றால், அதற்கு ஒரு முடிவு இருக்காது. கருத்துரைகளைச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். நடைமுறைக்கு எந்த அளவுக்கு அது சாத்தியமாக இருக்குமென்று நாம் கண்டறிய வேண்டும். ஆகவேதான் நடைமுறைப்படுத்தும் அளவுக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பள்ளித் துறை இயக்குநர்கள். கல்வித் துறையினர் ஆகியோர் ஆராய்ந்து 10 ஆண்டுகளாக ஆக்கவேண்டுமென்ற கருத்து இருக்கிறது. இப்போது 11 ஆண்டில் சொல்லிக்கொடுக்கப்படும் பாடத்திட்டங்கள் அத்தனையும் 10 ஆண்டுக்குள்ளே உள்ளடக்கிச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது ஒரு கருத்து. இப்போது இருக்கிறதை 10-வது வகுப்போடு நிறுத்திவிட்டு 11 ஆண்டு சொல்லிக்கொடுக்கிறோமே, அது முழுவதையும் 10 ஆண்டிலே சொல்லிக்கொடுத்து இப்போது எஸ்.எஸ்.எல்.சி.-யில் எந்தத் தகுதியோடு வெளியே வருகிறார்களோ அதே தகுதியோடு 10 ஆண்டுக் காலத்தில் வரவைக்கவேண்டுமென்பதும் அதன்பின் இரண்டு ஆண்டுகளில் சிறந்த திறன் உடையவர்களாக ஆகவேண்டும் என்பதும் ஒரு கருத்து. ஆகவே அந்த இரண்டு ஆண்டை உயர்நிலைப் பள்ளியோடு சேர்ப்பதா? கல்லூரியோடு சேர்ப்பதா? கல்லூரியோடு சேர்ப்போமேயானால், கல்லூரிகளில், இப்போதே இடவசதி, மற்றப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகளோடு சேர்ப்பது என்றாலும் கூட, பல கல்லூரிகளிலிருந்து அதை எடுத்துவிடுவோமேயானால் பல கல்லூரிகள் நடைமுறைக்கு அவைகளுக்குக் கிடைக்கிற Maintenance grant' போன்றவைகளை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது. ஆகையால் புகுமுக வகுப்பை எடுத்துவிடுவோமேயானால், பட்டப் படிப்பு, மேல் பட்டப்படிப்பு இவைகளிலிருந்து வருகின்ற வருமானத்தை மட்டும் வைத்துக்கொண்டு, கல்லூரிகளுடைய நிர்வாகத்தை நடத்த இயலாது. ஆகையால் சில மாநிலங்களிலே, ஆந்திரத்திலே இரண்டு வகையிலேயும் விட்டிருக்கிறார்கள். ஜூனியர் காலேஜுகளை இண்டர்மீடியட்டோடு வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களிலே சில இடங்களிலே, வளர்ந்த உயர்நிலைப் பள்ளிகளிலே இரண்டு ஆண்டுகளை வைத்துக்கொள்ளலாமென்றும், வளராமல் இருக்கிற, புதிதாக இருக்கிற சில கல்லூரிகளிலே இந்த இரண்டு ஆண்டுகளைச் சேர்த்துக்கொள்ளலாமென்றும், இரண்டு வகையிலும்

வைத்திருக்கிறார்கள். இதில் நாம் நிதி வசதியையும் பார்க்கவேண்டியிருக்கிறது. இப்போது இருக்கிற முறை மாறி வேறு ஒரு முறை வருவதற்கு நாம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவை எடுக்கவேண்டியிருப்பதால்தான், திரும்பத் திரும்ப பல்கலைக் கழகத் துணைவேந்தர்களிடத்திலே கருத்து கேட்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, அநேகமாக பள்ளிக் கல்வியின் காலம் 10 ஆண்டுக்காலம் என்று முடிவு செய்துவிட்ட மாதிரித் தோன்றுகிறது. அப்படியிருக்குமானால் "பிரைமரி, மிடில் அண்டு ஹைஸ்கூல் ஸ்டேஜஸ்" என்று 3 டெர்மினல் "பாயிண்ட்ஸ்" இருக்கும். அது 4, 3, 3 என்று அரசு நிர்மானிக்க வேண்டும். இந்தச் சிக்கல் இருக்கின்றபடியினாலே 10 ஆண்டா. 11 ஆண்டா. டெர்மினல் ஸ்டேஜ் எப்போது வருகிறது என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்த பிறகு இந்தப் புதிய சிலபசை அரசு அமலுக்குக் கொண்டு வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் முடிவெடுத்தாலும்கூட புது சிலபஸை அமலுக்குக் கொண்டு வருவதற்கு ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் ஆகும். அதற்கான பாடத் திட்டங்களை முன்கூட்டியே தயாரிக்க வேண்டும். ஆகவே 4 ஆண்டுகள் துவக்கப் பள்ளியை நிறுத்திவிட்டு, பிறகு 5, 6, 7, பிறகு 8, 9, 10 என்று ஆக்குவது என்று வைத்துக்கொள்வோமேயானால், இந்தத் துவக்கப் பள்ளிகள் அத்தனையும் மாற்றவேண்டிய அவசியம் இருக்கும். ஒரு வகுப்பை வெட்டியெடுத்து வேறு ஒன்றோடு கொண்டு போய்ச் சேர்ப்பது என்பது எல்லா கிராமங்களுக்கும் வராது. ஆகையால் துவக்கப்பள்ளி என்பது 1-லிருந்து 5 வரை என்று நிர்ணயிக்க வேண்டும். இடைநிலைப் பள்ளியை 6, 7 என்று நிறுத்திக்கொள்வதா அல்லது 6, 7, 8 இவற்றை நிலையாக வைத்து, 9-ஐயும், 10-யும் வைத்து ஹைஸ்கூலாக ஆக்குவதா என்பதிலேதான் ஒரு முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றிய கருத்து அறியப்பட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்த அறிக்கையைப் பார்த்தால், இதை உடனடியாக செயல்படுத்த முடியாத உருவத்திலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப் போல, ஆந்திராவிலே இருக்கிறதுபோல, நல்ல வளர்ந்த பள்ளிகளிலே இந்த பி.யு.சி.-யைச் சேர்த்துவிடலாம். இப்போதிருக்கும் வளராத உயர் நிலைப் பள்ளிகளிலே 10 ஆண்டுகள் என்று வைத்துக்கொண்டு வளர்ந்த கல்லூரிகளிலே இரண்டு ஆண்டு என்று வைத்துக்கொள்ளலாம்.

அதுதான் நடைமுறையிலே சாத்தியமென்று நினைக்கின்றேன். அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புவதோடு இவர்கள் சொல்லியிருக்கிற யோசனைப்படி பள்ளிகள், கல்லூரிகள் எல்லாம் அதிக நாட்கள் வேலை செய்தால்தான் இந்த 11 ஆண்டு படிப்பை 10 ஆண்டுக் கல்வியிலே கொண்டுவர முடியும். அப்போது ஆசிரியர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் எதிர்ப்புகள் எல்லாம் வரும். அதையும் பரிசீலித்து எதை நடைமுறைப்படுத்த முடியுமோ அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொன்னதைத் தவிர, இன்னும் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துத்தான் நாம் முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

All India Seminar on "Mariculture" and "Mechanised Fishing"

* 305 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any all India Seminar on "Mariculture" and "Mechanised Fishing" was conducted in the State about November 1972, at Mandapam; and

(b) if so, the details thereof?

கடல் மீனளம் மற்றும் விசைப்படகு மீன் பிடிப்பு பற்றிய அனைத்திந்திய கருத்தரங்கு.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972, நவம்பர் திங்கள் வாக்கில், மண்டபத்தில் "கடல் மீனள வளர்ச்சியும், விசைப் படகின் மூலம் மீன் பிடித்தலும்" என்ற பொருள் குறித்து அனைத்திந்தியக் கருத்தரங்கம் ஒன்று நடத்தப் பட்டதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தமிழ்நாடு அரசு மீனளத் துறையினரால் சென்னை அடையாறு பல்துறை தொழிற் பயிற்சிக் கல்லூரியில் 1972 நவம்பர் 28, 29-ல் கடல் மீனளம் மற்றும் விசைப்படகு மீன் பிடிப்பு பற்றிய அனைத்து இந்திய கருத்தரங்கு

ஒன்று நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கு, தமிழ்நாட்டு ஆளுநரின் தலைமையின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சரால் 28—11—1972 அன்று தொடங்கிவைக்கப்பட்டது, தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் முக்கிய உரையாற்றினர். இந்தியா முழுவதிலிருந்தும் 200-க்கும் மேற்பட்ட மீனள விஞ்ஞானிகளும் தொழிலதிபர்கள் பலரும் இக்கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, ஆராய்ச்சியின் மூலமாக எவ்வளவு இடங்களில் மீன் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். பி.ப 4-20

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கருத்தரங்கே 11-வது மாதம் தான் நடைபெற்றது. இவ்வளவு சீக்கிரம் மீன் உற்பத்தி பற்றிக் கேள்வி கேட்பதே முறையானதல்ல. கருத்தரங்கை அடிப்படையாக வைத்து உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றிய பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. ஜார்ஜ் கோமகன் : தலைவரவர்களே, மண்டபத்தில் கட்டு மரப் படகு மூலமாக மீன் பிடிக்கப்படுகிறது என்று அறிகிறேன். இதைத் தவிர்த்து, விசைப் படகுகள் மூலமாக மீன் பிடிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபற்றி கருத்தரங்கு கட்டுமரத்திலேயே அவுட்-போர்டு, இன்-போர்டு மோட்டார்கள் வைத்து மீன் பிடிக்க வேண்டுமென்று ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. விசைப் படகுகளின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் மீனவர்களால் வாங்க முடியவில்லை. ஓரளவுக்கு, மீனவர்கள் கட்டு மரத்திலேயே பழகிக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், கட்டு மரத்திலேயே மோட்டார்கள் வைத்து மீன்பிடிக்க வேண்டுமென்று கருத்தரங்கு சிபாரிசு செய்திருக்கிறது. எனவே, அப்படிப் பட்ட கட்டுமரங்கள் வாங்க வேண்டுமென்பது தான் அரசின் நோக்கமாகும்.

Fishing Rights

* @ 294 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

@ Postponed from the list of questions for 28th March 1973.

[1973 மார்ச் 30

(a) whether fishing rights of tanks are being auctioned formally at very low rates and thereafter reauctioned informally for very high rates and the difference shared by a few private individuals and villagers; and

(b) if so, the action taken or proposed to be taken thereon?

மீன்பிடிக்கும் உரிமைகள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏரிகளில் மீன் பிடிக்கும் உரிமைகள் முறையாக மிகவும் குறைந்த வீதத்தில் ஏலம் விடப்பட்டு, பின்னர் முறையின் மரபில் மிகவும் அதிக வீதத்தில் மறு ஏலம் விட்டு, இந்த இரு தொகைகளின் வித்தியாசத் தொகை சில நபர்களாலும், கிராமத்தார்களாலும் பங்கிட்டுக்கொள்ளப்படுகிறதா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, பொறுப்புள்ள ஒரு அங்கத்தினர் அவர்கள் இம்மாதிரியாக முறைகேடான சில சம்பவங்கள் நடப்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி அரசு விசாரித்ததா? எங்கேயும் சம்பவம் நடக்கவில்லை என்று சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கு அரசு ஏதாவது வழிவகைகளைக் கையாண்டதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, முறைகேடுகள் நடப்பதாகப் புகார்கள் வந்ததாகத் தெரியவில்லை. குத்தகைத் தொகை 5 சதவிகிதம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று மீனள இயக்குநர் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது வருவாய்த் துறையின் செயற்குறிப்புக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் அதைத் திருப்பி அனுப்பிய பிறகு, முடிவு செய்யலாம்.

1973 மார்ச் 30]

இதுவரையில் யாரும் அப்படிப்பட்ட வகையில் அதிக விலைக்குக் குத்தகை எடுத்து, இடையில் இருக்கின்றவர்கள் லாபம் எடுத்துக் கொண்டதாகப் புகார்கள் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, மீன் பிடிக்கும் உரிமை சம்பந்தமாக சண்டை சச்சரவுகள், வழக்குகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அரசு அறிந்திருக்கின்றது. ஆகவே, இந்த உரிமைகளை அரசு எடுத்துக்கொண்டு அந்தந்தப் பகுதிகளிலுள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களிடம் அந்த பாத்தியதைகளை ஒப்படைத்து விடுவது அனுகூலமாக இருக்குமல்லவா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, பஞ்சாயத்துகளிடம் இருப்பதால் தகராறுகள் வருகின்றன என்பதால் தான் மீனவச் சங்கங்களுக்கு அந்த உரிமைகள் கொடுக்கப்பட்டன. அதன் விளைவாகத்தான் எந்தெந்த இடத்திலே பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான குளங்களோ, அல்லது மீனளத் துறைக்குச் சொந்தமான அல்லது வருவாய்த் துறைக்குச் சொந்தமான ஏரிகளோ, குளங்களோ இருக்கின்றனவோ, அவற்றை 1970-ஆம் ஆண்டு முதல் உத்தரவு பிறப்பித்து குத்தகையை, குறிப்பாக மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அரசு உத்தரவு பிறப்பித்தது. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் வருவாய்த் துறை அதிகாரி ஒருவரும், மீனளத் துறை அதிகாரி ஒருவரும் அங்கே இருந்து குத்தகைக்கு விடுகிறார்கள். அந்த இடத்தில் மீனவச் சங்கங்களில் இல்லாதவர்களை குத்தகைக்கு எடுக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியத்திற்குச் சொந்தமான ஏரி—குளங்களில் வருவாய்த் துறை மூலமாகவே தான் அந்த ஏலம் விடப்படுகிறது.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மீனவர்கள் அல்லாதவர்கள் அதிகமாக இருக்கின்றார்களா? வியாபாரச் சங்கத்தைப் போல வைத்துக் கொண்டு அதிக விலைக்கு ஏலம் எடுத்து அதிக லாபம் அடைகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனவச் சங்கங்களில் மீனவர்கள் இல்லை என்ற குறிப்போ, விவரமோ தற்போது என்னிடம் இல்லை. இந்த ஏலம் எடுப்பதில் சில தகராறுகள் அவ்வப்போது ஏற்படுகின்றன. சில இடங்களில் மீனவச் சங்கங்கள் இருக்கும்போது கூட, அந்தச் சங்கங்களை அழைக்காமல் ஏலத்தில் அவர்களைச்

[1973 மார்ச் 30

சேர்த்துக்கொள்ளாமல் தனிப்பட்டவர்கள் ஏலத்தை எடுத்துக் கொள்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களே, இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள் என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அந்தந்த நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இங்கேயிருந்து தாக்கீதுகள் கொடுத்து, மீனவச் சங்கங்கள் இருக்கும்போது அந்தச் சங்கங்களை அழைத்து அதற்குப் பிறகு தனிப்பட்டவர்களுக்கு விட வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, சில பெரிய ஏரிகளில், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மகசூல் வரும் மீன்களை தனியாருக்கு வருவாய்த்துறையின் மூலமாக பட்டா செய்திருக்கிறார்கள். அந்தப் பட்டாக்களை ரத்து செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறதா? அந்தத் தனிப்பட்ட நபர்களுக்கு அந்தப் பட்டா கொடுக்கப் பட்டிருப்பதன் காரணமாக சில பூசல்கள் எழுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குளங்கள், ஏரிகள் பட்டா செய்வது மீனளத் துறையின் பொறுப்பு அல்ல.

திரு அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, எங்கள் பகுதியில் இந்த உரிமையை மீனவச் சங்கத்திற்குக் கொடுத்ததால் ரூ. 2,000 என்ற அளவுக்குத்தான் ஏலம் விடப்பட்டது. பிறகு, இதில் தவறுகள் நடந்திருப்பதாகக் கண்டறிந்து, பிறகு ஏலம் விட்டதில், ரூ. 29, 32 ஆயிரம் என்ற அளவுக்கு அதிக விலைக்குப் போயிருக்கிறது. எனவே, இந்தமாதிரி நிலைகள் இருப்பதால், அரசாங்கமே நேரடியாக ஏலம் விட வேண்டும். அதைத் தனிப்பட்ட சங்கத்திற்குக் கொடுக்கக் கூடாது என்பதை அரசு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏலம் விடுவது அரசுத் துறையைச் சார்ந்த வேலை. மீனளத் துறை அதிகாரியும், வருவாய்த் துறை அதிகாரியும் ஏலம் விடுகிறார்கள். அதை ஒட்டி உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீனவச் சங்கங்கள் உள்ள இடங்களில் அந்தச் சங்கங்களுக்கும், மீனவச் சங்கங்கள் இல்லாத இடங்களில் மீனவச் சங்கங்களல்லாதாருக்கும் ஏலம் விடப்படுகிறது. எனவே, ஏலம் விடுவது அரசின் சார்பில்தான்.

1973 மார்ச் 30]

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, அரசுக்கு நஷ்டம் வந்தாலும், மீனவர் சமுதாயத்திற்கே தான் அந்த ஏலம் விடப்பட வேண்டுமென்ற ஒரு கொள்கையை அரசு ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நஷ்டம் ஏற்பட்டாலும் மீனவச் சமூகத்தினருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் 1970-லிருந்து மீனவர் சங்கங்களுக்குத்தான் ஏலம் விடப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது. அதை நீடிக்கலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : இராமநாதபுரம் ஜில்லா ராஜ பாளையம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் மீனவர் சங்கங்கள் இல்லை. 80 மைலுக்கு அப்பாலிருக்கின்ற சிவகங்கையிலே ஜில்லா அளவில் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதில் சிலர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்த பஞ்சாயத்து யூனியனுக்கு சம்பந்தப்பட்ட சில கணுவாய்களை தங்களுக்கே கொடுக்க வேண்டும் என்றும்—கடந்த வருட வருமான அளவை வைத்துக்கொண்டு, ரூ. 4,800-க்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த வருடம் தனியாக ஏலம் விட்டபோது ரூ. 27 ஆயிரத்திற்கு விடப்பட்டிருக்கின்றது. பஞ்சாயத்து யூனியன்களுடைய வருவாய் குறைவாக இருப்பது தெரியும். ஆகவே, அந்த ஜில்லாவிலே உண்மையான மீனவர் சங்கங்கள் இல்லை. எனவே, பஞ்சாயத்து யூனியன்களுக்கே மொத்தத் தொகையும் சேரும் வகையில் உத்தரவிட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்படிப்பட்ட மொத்தத் தொகை சேரும் ஏற்பாடு ஏதும் செய்வதற்கில்லை என்று கருதுகின்றேன். ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரிகள், குளங்கள் ஆகியவை அங்கேயிருக்கின்ற மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே தரப்பட வேண்டுமென்று சொல்கிறோம். திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் கூறியது போல, ஓரளவுக்கு இப்படிப்பட்ட சச்சரவுகள் எல்லா இடங்களிலேயும் அவ்வப்போது எழுந்துகொண்டு வரு கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அவ்வப்போது எது நியாயம் என்பதை முடிவு செய்து கொண்டு வருகிறோம்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத் தில் பழனி பழைய எம்.எல்.ஏ. லட்சுமிராஜு மீனவர் கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கிறார். அவர் எந்த மாதிரிச் சங்கத்தைச்

சேர்ந்தவர்? இந்த மாதிரி போலியாக சங்கம் வைத்திருப்பதால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு நேரடியாக ஒரு விலையை அரசு நிர்ணயித்து, அந்த அடிப்படையில் செயல்பட அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவரும் வருகிறார். ஆனால் அவர் சங்கத்தில் என்ன பொறுப்பில் இருக்கிறார் என்பது எனக்கே கூட தெரியாது.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, அவர் மதுரையிலே உள்ள மீன் வியாபாரிகளுடைய சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறார். இதுபற்றி அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபற்றிப் பரிசீலனை செய்யவேண்டும்.

Raising of Crops over Rocky Places.

* 306 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Tamil Nadu State Co-operative Land Development Bank has any proposals to raise crops over rocky places in the State; and

(b) if so, the details thereof?

பாறைப் பகுதிகளில் பயிரிடுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பாறைப் பகுதிகளில் பயிரிடுவதற்கான செயற்குறிப்புகள், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியிடம் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இல்லை. வடாற்காடு மாவட்டம், கோடைகால் கிராமத்தில் கடின பாறையால் மூடப்பட்ட ஒரு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் சோதனை செய்யப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : நம்முடைய மாநிலத்தில் பல நல்ல நிலங்கள் இருக்கிற பகுதிகள் இருக்கின்றபோது, பாறைப் பகுதியில் போய் அங்கு பயிரிட முடியுமா என்று ஏன் ஆராய வேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போது இருப்பது ஆராய்ச்சி நிலையிலேதானே தவிர வேறொன்றுமில்லை. நிலவள வங்கி, நிலச் சீர்திருத்தத்திற்காக என்று கடனுதவி செய்கிறது. அப்படி, பாறை நிலத்தில் மண்ணை நிரப்பி அங்கே பயிரிடுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு சோதனை செய்யப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த முடிவுக்குப் பிறகு —பயிரிட்ட பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? எவ்வளவு பணம் செலவு செய்ய கூட்டுறவுத் துறைக்கு உத்தேசம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது சோதனையின் முடிவைப் பொறுத்திருக்கிறது.

திரு. எல். பலராமன் : கோடைகால் வாலாஜா தாலூகாவில் இருப்பதாக அறிகிறேன். அது அங்கே தான் இருக்கிறதா, அல்லது வேறு எங்கேயாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா? பொறியாளர்களை வைத்து எந்தெந்தப் பகுதியில், எந்த முறையில் செய்கிறார்கள் என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சோதனை இன்னும் தொடங்கப்படவில்லை என்று சொன்னேன். கோடைகால் என்ற ஊர் எந்தத் தாலூகாவில் என்று சரியாகத் தெரியவில்லை. அது வந்த வாசிக்குப் போகிற வழியில் இருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது என்று கூறுவார்கள். பாறைப் பகுதியிலே பயிரிடுகிற திட்டத்தை அரசு பரிசீலிக்காமல் அதை ஆரம்பத்திலேயே விட்டுவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எதையும் சோதனை பார்ப்பதில் தவறில்லை. "தூங்காமை, கல்வி, துணிவுடமை" என்பது போல புதிய கருத்துக்களை, புதிய படைப்புகளை ஏற்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். எத்தனையோ புதிய கருத்துக்களை கூட்டுறவுத் துறையின் மூலமாகப் புகுத்த முடிந்தது. மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறபோது, "எங்கே யாவது தவிட்டிலிருந்து எண்ணெய் வடியுமா?" என்று என்னைக் கேட்டு கேலி செய்தார்கள். தவிட்டிலிருந்து எண்ணெய் இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். வருடத்திற்கு ரூ. 3½ லட்சம் ரூபாய் லாபம் கொடுத்துக்கொண்டிருக்கிறது அந்தத் தொழில், அதுபோல, புதிதாகச் சோதனை செய்து பார்ப்பதிலே தவறேது மில்லை என்று கருதுகிறேன்.

4-30 பி.ப.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, சிமெண்ட் தளம் அமைத்து அதில் மண்ணை நிரப்பிப் பயிர் செய்தால் தண்ணீர் சேமிப்பு இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதேபோல் பாறையில் மண்ணை நிரப்பி விவசாயம் செய்தால் அது லாபகரமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை முழுக்க முழுக்க நான் ஏற்றுக்கொள்கிறேன் ஏனென்றால் சோதனை செய்து பார்த்து, அது எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்தப் பணம் மாநில நில வள வங்கியின் மூலமாகச் செலவிடப் படுகிறது. அரசின் பணமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதைச் சோதனை செய்ய எவ்வளவு செலவாகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதுவரையில் எவ்வளவு செலவு என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஏக்கர் ஒன்றுக்கு ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, பாறையும் மண்ணும் கலந்த பகுதிகளில் "ராக்பாஸ்பேட்" இருந்தால் ரப்பர் அதிகமாக வளரும் என்பதைப் பரிசிலித்து கேரள அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே நமது மாநிலத்தில் உள்ள பாறையோடு மண்ணும் கலந்த பகுதிகளிலே பரிசிலனை செய்வதற்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இப்போது ஆராய்ச்சியில் இருப்பவை பாறை யாக இருக்கப்பட்ட இடத்திலே மேலே மண்ணைப் பரப்பி அதிலே நீர் ஊற்றி நெற் பயிர் விளைவிக்க வேண்டுமானால், அதற்கான செலவு

என்ன ஆகிறது, அதற்கு இப்படி நிலச் சீர்திருத்தம் என்ற அளவிலே மாநில நில வள வங்கியிலிருந்து ஏதாவது பண உதவி செய்ய முடியுமா என்பவைதான்.

Loan Applications from Ex-Servicemen

* 307 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of applications for loans received from Ex-Servicemen sponsored by the Soldiers', Sailors' and Airmen's Board and now pending in the Office of the Tahsildar, South-East Madras; and

(*b*) the action taken or proposed to be taken for the disposal of the pending applications?

முன்னாள் படை வீரர்களிடமிருந்து கடன் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முப்படை வாரியம் தெரிந்தெடுத்துள்ள முன்னாள் படை வீரரிடமிருந்து வரப் பெற்று, தென் கிழக்குச் சென்னை தாசில்தார் அலுவலகத்தில் தற்போது முடிவு பெறாமல் உள்ள கடன் விண்ணப் பங்கள் எத்தனை?

(இ) முடிவு பெறாமலுள்ள விண்ணப்பங்கள் குறித்து முடிவு எடுப்பதற்காக மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) சென்னை தென் கிழக்குப் பகுதியில் முன்னாள் படை வீரர்களிடமிருந்து 1—4—1970 முதல் 25—9—1972 வரை கடன் கோரி 72 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த 72 விண்ணப்பங்களில், 15 விண்ணப்பங்கள் முடிவுறு நிலையி லுள்ளன.

(இ) முடிவுறு நிலையிலுள்ள விண்ணப்பங்களை முடிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சென்னை, மாவட்ட முப்படை வாரியத்தின் நிர்வாக உட்குழுக் கூட்டங்கள் அனைத்திலும் ஆய்வு செய்யப்படுகிறது.

நீண்டகாலமாக முடிவுறு நிலையிலுள்ள விண்ணப்பங்களின் பட்டியல் விரைவில் முடிவு செய்யப்படுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகிறது. இந்தப் பொருள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மாதாந்திரக் கூட்டத்தின்போது தாசில்தார் களுடன் விவாதிக்கிறார். முன்னாள் படை வீரர்களின் கடன் விண்ணப் பங்களின் மீதான அறிக்கைகளை விரைவில் அனுப்புமாறு தாசில்தார் களுக்கு அவ்வப்போது ஆணையிடுகிறார். ஏறக்குறைய அனைத்து நேர்வுகளிலும் இம்முறை பின்பற்றப்படுகிறது.

இக்கடன் விண்ணப்பங்களின்மீது தருதிச் சான்றிதழ்கள் வழங்கி அவற்றை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்ப மாவட்ட முப்படை வாரியத்துக்கு 10 நாட்களும், தேவையான விசாரணைகளை நடத்து வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 2 மாதங்களும், கடன் விண்ணப் பங்களைப் பரிசீலனை செய்து ஒப்பளிப்பு வழங்க ஒருங்கிணைக்கப்பட்ட நிதியின் செயலாளருக்கு 20 நாட்கள் எனவும் கடன் விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கான கால அளவை தமிழ்நாடு அரசு வரையறுத் துள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த விண்ணப்பங்கள் எவ்வளவு காலமாக முடிவுறுமல் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த விண்ணப்பங்கள் கடந்த 1970-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டு வரையில் பல்வேறு தேதிகளில் வந்த விண்ணப்பங்கள் ஆகும். அவைகளைப் பரிசீலனை செய்கிற நேரத்தில், தாசில்தார் அளவிலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அளவிலும் பல விவரங்கள் வருவதற்குக் காலதாமதமாகின்றது என்பதாலேயும், விவரங்கள் மேலும் தேவைப் படுகின்றன என்பதற்காகத் திருப்பி அனுப்பப்பட வேண்டிய சிக்கல் இருந்த காரணத்தினாலும் அவை தாமதமாகின்றன.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : சால்வன்சி சர்ட்டிபிகேட் கேட்டு பல விண்ணப்பங்கள் தாமதப்படுகின்றன என்று அறிகிறேன். அது உண்மையென்றும் அந்தப் படை வீரர்களுக்கு இந்த சால்வன்சி சர்டிபிகேட் கொடுப்பதில் பல சங்கடங்கள் இருப்பதாகவும் நான் அறிகிறேன். அதைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சால்வன்சி சர்டிபிகேட் வாங்காமல் நம்மாலே கடன் கொடுக்க இயலாது.

Properties of Srisalai Mariamman Temple

* 308 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that the properties of Srisalai Mariamman Temple, Thuraiyur Taluk, Tiruchirappalli District have been encroached upon by others; and

(b) if so, the action taken thereon by the Government?

ஸ்ரீசாலை மாரியம்மன் கோவிலின் சொத்துக்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஸ்ரீசாலை மாரியம்மன் கோவிலின் சொத்துக்கள் மற்றவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவிடப் பட்டுள்ளது.

Renovation Committee for the Temple at Avudaiyar Koil, Thanjavur District

* 309 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any Renovation Committee has been constituted for the Temple at Avudaiyar Koil, Thanjavur District;

(b) if so, when the renovation work was commenced ;

(c) when the renovation work will be completed ;

(d) whether the Government of Tamil Nadu have sanctioned any financial assistance for the renovation work; and

(e) if so, the amount?

[1973 மார்ச் 30

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில் ஆலய திருப்பணிக் குழு.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம், ஆவுடையார் கோயில், திருக் கோயிலுக்காக திருப்பணிக்குழு ஏதேனும் அமைக்கப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், திருப்பணி எப்பொழுது தொடங்கப் பெற்றது?

(உ) திருப்பணி எப்பொழுது முடியும்?

(எ) திருப்பணிக்குத் தமிழக அரசு ஏதேனும் நிதி வழங்கியுள்ளதா?

(ஐ) ஆமெனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது.

(உ) உத்தேசமாக இரண்டாண்டுகளாகும்.

(எ) இல்லை.

(ஐ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய் செலவிலே இந்தத் திருப்பணி நடப்பதாக இருக்கிறது? எந்த ஆண்டுக்குள்ளாக முடிவுறவேண்டுமென்று அரசு ஏதாவது நினைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த வேலைகளுடைய மொத்த மதிப்பீடு 5 லட்சத்து 6 ஆயிரத்து 710 ரூபாயாகும். 1973-ஆம் ஆண்டு முடிவிற்குள் இந்த வேலைகளை முடிக்க வேண்டுமென்ற உத்தேசத்தில் இந்தத் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வேலைகளை முடித்திருக்கிறார்கள். மேற்கொண்டு

1973 மார்ச் 30]

இந்த வேலையைத் தொடர்ந்து விரைவாக நடத்த வேறு பல கோவில்களிலிருந்து உபரி நிதியை மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஆவுடையார் கோவில் தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்த கோவிலாகும். இப்படிப் போய்க்கொண்டிருக்கிற போக்கைப் பார்த்தால், அது விரைவாக முடிவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அதை 1973-ஆம் ஆண்டுக்குள் நடத்தி முடிப்பதற்குரிய காரியங்களை அரசு விரைந்து செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது முடிந்துள்ள வேலையைப் பார்ப்போமானால், 1973-ஆம் ஆண்டுக்குள் நம்மாலே முடிக்க முடியாது. ஆனால் இன்னும் கொஞ்ச நாட்களில் முடிப்பதற்குத் தேவையான பண வசதியில்லாத காரணத்தினால், வேலைகள் மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே தேவையான பணத்தை பழனிக் கோவிலிலிருந்தும், வேறு சில கோவில்களிலிருந்தும் ஆணையருடைய பொது நல நிதியிலிருந்தும் மாற்றித் தந்து விரைவில் இந்த வேலைகளைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

Hindu Religious and Charitable Endowments (Administration) Department of Tamil Nadu

* 310 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received any representation that the administration of the Hindu Religious and Charitable Endowments Department should be vested in an autonomous body; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறை

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தைத் தன்னதிக்குமுள்ள ஒரு குழுவின் ஆட்சியில் விட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : யாரிடமிருந்து அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது? அதிலே என்ன காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்துக் கோவில்களுடைய பாதுகாப்புக் குழு சேலத்தில் தங்களுடைய மாநில மாநாட்டைக் கூட்டி வைத்து அந்த மாநாட்டிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அதிலே இப்படி ஒரு வாரியத்தினிடத்திலே தான் இந்தக் கோவில்களுடைய நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அதற்கான காரணங்களை அவர்களுடைய தீர்மானத்திலே விளக்கவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

(1) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN : I have to announce to the House that I have received messages from the Deputy Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council—

(1) The Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973).

(2) The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 7 of 1973).

(3) The Public Works (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1973 (L.A. Bill No. 8 of 1973).

I have also to announce to the House that I have received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion as passed by the Assembly on 30th March 1973 desiring to obtain the concurrence of the Council in setting up a Joint Select Committee of the two Houses to consider the Tamil Nadu Societies Regisration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1972) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru A. Rajamanickam.
2. Thiru V. K. Rajah Pillay.
3. Thiru K. Tirupathi.
4. Thiru T Soniah.
5. Thiru A. K. Duraiswamy.
6. Thiru M. V. Narayanaswamy.
7. Thiru N. Nachiappan.
8. Dr. Nainamalai.
9. Thiru R. Manickavachagam.
10. Thiru R. Ponnappa Nadar.
11. Thiru G. R. Edmund.
12. Thiru Manali C. Kandaswamy.
13. Thiru K. Kandaswamy.
14. Thiru K. A. Wahab.
15. Thiru B. Venkataswamy.
16. Thirumathi T. N. Ananthanayaki.

Under rule 139 (1) of the Assembly Rules, the Deputy Speaker has nominated the Hon. Thiru S. Madhavan, Minister for Industries, as a Member of the Joint Select Committee.

3. கவன ஈர்ப்பு.

மருந்து தயாரிப்புத் தொழிற்சாலைகளில் மின்வெட்டு காரணமாக மருந்து தயாரிப்பு நிறுத்தப்பட்டிருப்பது குறித்து.

THIRU G. SWAMINATHAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, the discontinuance of production of medicines in the pharmaceutical factories of the State consequent on 75 per cent power cut and the privation caused to the sick public due to non-availability of drugs.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, in the latter half of February 1973, some of the Pharmaceutical Industrialists like Messrs. Mount Mettur Pharmaceuticals Limited, Madras and Messrs. Asiatic Oxygen Limited, Madras and Messrs Indian Oxygen, Madras represented that they had been seriosuly affected by the imposition of the present power cut, and that the industry had been facing much difficulty for want of electricity. The Drugs Controller recommended that the Pharmaceutical Manufacturing Units might be considered as Priority Sector and the imposition of power cut might be relaxed by allowing them at least 50 per cent of their normal consumption prior to the imposition of the power cut. He also recommended that the Tamil Nadu State Electricity Board might be moved to relax the imposition of power cut in respect of the Oxygen manufacturing units. The Drugs Controller endorsed the request of the Tamil Nadu Chemists and Druggists Association to relax the power cut in favour of those who had got separate connections for refrigerators for running them all the twenty-four hours for keeping the life saving drugs in continuous cold storage in order to retain their potency.

The Government (in Public Works Department) have considered the several representations and have taken appropriate action on them. They have since arranged for the supply of adequate power to the Indian Oxygen Limited and the Asiatic Oxygen Limited, to enable them to meet the Oxygen requirements of the various hospitals in the State. Similarly they have reduced the power cut in respect of Messrs Tablets Limited, Manufacturers of Drugs, Thondiarpet, Madras from 75 per cent to 40 per cent. The requests of the Government Medical Stores Department, Madras and "The Pharmaceutical Chemical and Allied Manufacturers Association of South India" for reducing the cut on pharmaceutical industries are under the consideration of the Government and orders will be issued shortly on their merits.

THIRU G. SWAMINATHAN : Sir, I understand that the electricity cut in respect of one of the pharmaceutical factories has been reduced from 75 per cent to 40 per cent. In the same way, the cut should also be reduced in respect of the other pharmaceutical factories in the State, because they are also manufacturing medicines for being supplied to the hospitals and the public, and a similar advantage may be given to them also. 3.4 4-40

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, as far as my knowledge goes, even this decision may have to be reversed, because of the present difficult position in obtaining electricity. The application has been received a little earlier and a lenient view has been taken. But, it is yet under consideration whether it is possible to continue that.

THIRU G. SWAMINATHAN : Sir, it is not the interests of the pharmaceutical factory that I am talking about, but it is about the interests of the sick public. Most of the hospitals have to be supplied with medicines on contract basis and if the medicines do not go there, they will not be able to give to the people both in-patients and out-patients and the public will suffer. Only because of that, I am saying this. If the cut is not reduced before the end of this month or before the 15th of next month, the condition will become worse, because the factories always have a stock of medicines that will last for two months and the stock is fast coming to 'nil'. The public will be put to great difficulty, if the cut is not reduced before the 15th of next month.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the department will take all precautionary measures to see that the production of drugs is maintained; but, anyhow, electricity is a difficult problem at present and we are stressing the need upon the department.

[1973 மார்ச் 30

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73)— தொடர்ச்சி

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, நிதி ஒதுக்க மசோதா வந்தாலே, நமது சட்ட மன்றத்தில் கடந்த ஒரு மாதமாக நடந்து வரும் கூட்டத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டோமென்று அர்த்தமாகும். ஒவ்வொரு வருஷமும், இந்த ஒரு மாதத்தில்தான் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுவதோடு, அமைச்சர்களிடம், தங்கள் தொகுதிகளிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நேரிடையாக எடுத்துச் சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அமைந்திருக்கிறது. ஒவ்வொரு வருஷமும், மார்ச் மாதத்தில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் நிதி ஒதுக்க மசோதா வந்து விட்டால், இந்தக் கூட்டத்தின் முடிவை நெருங்கி விட்டோமென்று அர்த்தம். ஒவ்வொரு இனத்தையும், ஒவ்வொரு இனவாரி நிதி ஒதுக்கலையும் நன்முக விவாதித்து, அந்தந்தத் துறையில் இருக்கும் கஷ்டங்களை, அந்தந்தத் துறையிலே பொது ஜனங்களுக்கு இருக்கும் குறைகளை, மிகத் தெளிவாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு பிரதிநிதிகள் கூறுகிறார்கள்.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

ஜனநாயகத்திலே இதுதான் இன்றியமையாத ஒரு கட்டமாக அமைந்திருக்கிறது. அந்த வகையில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்தல ஸ்தாபனத் தொகுதியிலிருந்து சட்டசபையில் அங்கம் வகிக்கும் என் போன்ற அங்கத்தினர்களுக்கு இருக்கும் ஒரு குறையைச் சொல்ல விரும்புகிறேன். பின்னல் சொல்வதற்கு மறந்துவிடலாம். ஜில்லா பூராவும் 30 அல்லது 35 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கும் பகுதியில் ஓட்டு வாங்கி நாங்களெல்லாம் அங்கத்தினர்களாக வந்து, இந்தச் சபையில் வீற்றிருக்கிறோம். ஆனல் சட்டப்படி ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டாகப் பிரித்து, ஏதாவது ஒரு பகுதியில்தான், "டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்" என்று, 2 மாதங்களுக்கு ஒரு முறை கலெக்டரின் தலைமையில், தொகுதி விஷயங்களையும், மக்களுக்கு உள்ள கஷ்டங்களையும் எடுத்துச் சொல்வதற்காக ஒரு கூட்டம் நடைபெறுகிறது. ஒரு பகுதியில்தான் உறுப்பினராக இருக்க முடியுமென்று சொல்லும்போது,

1973 மார்ச் 30] [திரு. கே. ராஜாராம்]

மற்றொரு பகுதியில் தொடர்பு விட்டுப்போகிறது. இரண்டு ஸ்தல அபிவிருத்தி மாவட்டங்களுக்கும் பிரதிநிதிகளாக இருப்பதால் இரண்டிலும் அங்கம் வகிக்க சட்டம் திருத்தப்பட வேண்டும். 1958-ம் வருடத்தில் போட்ட சட்டத்திலே, ஏதாவது ஒரு பகுதியில் தான் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் திருத்தி, 2 பகுதிகளிலும் அங்கம் வகிக்கலாம் என்று போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய தேர்தல் பற்றி வெகு நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. முதலில் பஞ்சாயத்து போர்டு தலைவர்களுடைய தேர்தலை நேரிடைத் தேர்தலாக நடத்திப் பார்ப்போம்; அது வெற்றிகரமாக நடந்தால், பின்னர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய தேர்தலை அப்படி வைத்துக்கொள்வோம் என்று அரசாங்கம் சொல்லிற்று. ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு முன்னல் பஞ்சாயத்து போர்டு தலைவர்களின் தேர்தல் நடந்தது. அதிலிருந்து இதுவரை எந்தவிதமான குறையும் இல்லை. நல்லபடிதான் நடந்து வருகிறது. நாள் தவறுமல் பத்திரிகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்முவது வந்துகொண்டிருக்கும். அது அறவே ஒழிந்துவிட்டது. நல்ல முறையில் அந்தப் பஞ்சாயத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வராமல், நல்ல முறையில் பஞ்சாயத்து யூனியன்கள் செயல்பட வேண்டுமென்முல், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று போன வருஷமே கேட்டுக்கொண்டேன். உள்ளாட்சித் துறையை நிர்வாகம் செய்யும் கல்வி அமைச்சரவர்கள், இன்னும் கொஞ்ச காலம் பொறுப்போம், அதைப்பற்றி அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறதென்று சொன்னர்கள். இதில் ஒரு முடிவு எடுத்து, வருகிற தேர்தலுக்கு முன் சட்டத்தைத் திருத்தி, நேரடித் தேர்தலை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது மக்கள் மத்தியிலே நிலவி வரும் கஷ்டம், விவசாயிகளான எங்களுக்குள்ள கஷ்டம், மின்சாரம் போதுமான அளவுக்கு சப்ளை இல்லை என்பதுதான். ஒருவிதமாக, இப்போது ஒரு நாளைக்கு 4 மணி நேரம் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போதவில்லை. எனவே டீசல் ஆயில் என்ஜின்களை வாங்கிவைத்து, தண்ணீர் இறைக்கலாமென்முல், உசல் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அரசாங்க பஸ்களுக்கே டீசல்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 30

கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்று போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சொன்னதைப் பார்த்தோம். விவசாயிகளுக்கு எவ்வளவு கஷ்டமிருக்கும் என்பதை முதலமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். நமது மாநிலத்தில் டீசல் எண்ணெய் கிடைக்க, பிரத்தி யேகமான முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு இலாகாவைப்பற்றி நான் கொஞ்சம் கடுமையான வார்த்தையைப் போட்டுச் சொல்வதற்கு வருத்தப்படக்கூடாது. அந்த இலாகாவைக் கலை எடுத்துத் தீர வேண்டும். நன்றாகக் கலை எடுக்கப்பட வேண்டிய இலாகா அது. முந்தா நாள் கூட இதைப் பற்றிப் பேசினேன். இடி விழுந்தமாதிரி ஒரு தகவலைக் காலைப் பத்திரிகையிலே பார்த்தேன். 8,799 நெல் மூட்டைகள் வளவனூர் அரசாங்கக் கிடங்கிலிருந்து 26-ம் தேதியன்று திறந்து பார்த்த போது, நெல்லைக் காணோம். சோஷலிச பாணியில், இம்மாதிரி அத்தியாவசியப் பண்டங்களை, அரசாங்கம் எடுத்து, நடத்த வேண்டு மென்ற முயற்சியில் நாங்கள் ஒத்துழைக்கிறோம். அதே எண்ணத் தோடு எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இருக்கிறோம். இப்படிப் பட்ட ஆட்களை வைத்துக்கொண்டு, இலாகாவை நடத்திக்கொண்டி ருந்தால், எப்படி அந்த இலாகா முன்னுக்கு வரும்? பொது மக்களுடைய பணம் விரயமாவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. நமது முதலமைச்சரவர்களின் சாமர்த்தியத்தைப்பற்றியும், கெட்டிக் காரத்தனத்தைப்பற்றியும், திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கவி பாடியதைப் போல் பேசினார். தனிப்பட்ட முறையில் அவரிடம் நம்பிக்கை உண்டு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரசு சார்பில் ஏறத்தாழ 80 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் டன் வரையில் இருக்கும் என்று கருதுகிறேன். சரியான புள்ளிவிவரங்கள் என்னிட மில்லை. அவ்வளவு அரிசி ஸ்டாக்கில் இருக்கிறது. ஒரு லட்சம் டன் அரிசி என்று சொன்னால், 10 லட்சம் மூட்டை அரிசி. 10 லட்சம் மூட்டை அரிசி என்று சொன்னால், நெல் கணக்கிலே பார்க்கும் போது ஏறக்குறைய 18-லிருந்து 20 லட்சம் நெல் மூட்டை என்ற கணக்கு வரும். அதிலே இங்கே 2,000 மூட்டை அல்லது 500 மூட்டை கையாடல் என்று நடக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. அது சரி என்று நான் வாதாடவும் மாட்டேன்.

திரு. கே. ராஜாராம்: ஒரு மூட்டை என்றாலும் அதைத் தாக்கித் தான் பேச வேண்டும்.

1973 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை, இல்லை. தாக்கிப் பேசுவதைச் சொல்லவில்லை. முதலில் நான் முழுவதும் பேசுவதற்கு அனுமதியுங்கள். இப்படித் தவறு நடக்கின்றது. இது எப்படி நடக்கிறது என்று கேட்டால், தனியார் கோடவுனிலே "ஸ்டாக்" பண்ணுகிறோம். அரசாங்க கோடவுன் எல்லா இடங்களிலும் இல்லை. தனியார் கோடவுனிலே கொடுக்கிறோம். டபுள் லாக் போட்டு, கோடவுன் கீப்பர்ஸ்-கோடவுன் சொந்தக்காரர் அவர் களிடத்தில் ஒன்றும், ஒரு டெபுட்டி தாசில்தார் அவர்களிடம் ஒன்றும் கொடுத்து வைக்கின்றோம். சில சமயங்களில் அதிகாரிகளும் அவர்களும் சேர்ந்தே தவறு செய்துவிடுகிறார்கள். அப்படிச் செய்யும்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு வழக்குப் போடவேண்டியிருக்கிறது. இது தவறு, கண்டிக்கத்தக்கது. யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யமின்றி, நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென்பதிலே இந்த அரசு கண்டிப்பாக இருக்கின்றது. அதுவும் முதலமைச்சர் அவர்களும் உணவைப்பற்றி சில நாட்களுக்கு முன்பு என்னிடத்திலே எடுத்துப் பேசும்போது, மிகக் கடுமையாக எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள் "தயவு தாட்சண்யமே காட்டக் கூடாது" என்று. எனவே அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கின்றார்கள். எனவே அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தர வாதத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். வளவனூரில் நடந்தது கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் செய்கை நமது கொள்கைக்கே குழி தோண்டும்படியான ஒரு காரியம். அரசாங்கம் இந்தத் தொழிலை ஏற்று நடத்தவேண்டும் என்ற கொள்கையை நாங்களும் ஆதரிக்கிறோம். அது அரசாங்கத்தி னுடைய கொள்கையுங்கூட. ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் இந்தக் கொள்கையை குழி தோண்டிப் புதைக்கின்றனவாக இருக்கின்றன. இப்படி ஒரு சிலர் செய்து கொண்டிருக்கும்போது, நாம் எப்படிப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சிறு விளக்கம் சொல்ல வேண்டும். குறுக்கிடுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அரசாங்கமே ஓல்சேல், மொத்த வியாபாரத்தை எடுத்துக்கொள்வதில் யாருக்கும் எந்தவித மான அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் அரசாங்கமே எடுத்துக்

[திரு. ப. உ. சண்முகம்] [1973 மார்ச் 30

கொண்டாலும்கூட, எங்கேயாவது ஒரு கோடவுனில் வைத்துத்தான் தீர வேண்டும். அது மட்டுமல்லாமல், அமைச்சர்களிடத்திலா சாவி இருக்கப்போகின்றது? சாவியை அதிகாரிகளிடத்திலேதான் நம்பிக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. வேறு வழியில்லை. அங்கிருக்கின்ற அதிகாரிகள், கோடவுன் கீப்பர்கள்–இவர்களிடம் தான் கொடுக்கவேண்டியிருக்கும். இதுபோன்ற தவறுகள் நடப் பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால் தவறு நடக்கின்ற போது எடுக்கின்ற நடவடிக்கை கடுமையாக இருப்பதன் மூலம் அடுத்து வருகின்றவர்கள் பயப்படும்படி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: 8,799 மூட்டைகள் என்பதை 80 லாரி களில் ஏற்ற வேண்டும். 80 லாரிகள் லோடு போயிருக்கின்றது, வளவனூரிலிருந்து. இதைப் பார்த்துக்கொண்டிருந்திருக்கின்றார்கள். கண்டுபிடிக்கப்படாமல் போய்விட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களின் வாதத்தை அப்படியே ஒப்புக்கொள்ளு கின்றேன். அது "களை" மாத்திரம் அல்ல, "கள்ளி": அது நிச்சய மாக எடுக்கப்பட வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: அடுத்தபடியாக, அண்மையில் இரண்டு மாதங்களாக நூல் பற்றுக்குறை அதிகமாக ஏற்பட்டிருக்கின்றது. அதனால் நெசவாளர்கள் பட்டினி கிடந்து கஷ்டப்படுகின்றார்கள். இதையெல்லாம் சமாளிக்க ஒரு இயக்கத்தை நடத்தி சிறைக்குச் சென்றுவது சாப்பிடுவோம், சிறையிலாவது சாப்பிடுவோம் என்ற அளவுக்கு இவர்கள் அறிக்கை வெளியிட்டுக்கொண்டு கிளர்ச்சி நடத் திக்கொண்டிருந்தார்கள். இப்போது நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். மத்திய அரசும் நமது மாநில அரசும் சொன்ன வார்த்தைகளை நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். சீக்கிரம் தங்களுடைய குறைகள் தீரும் என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் நம்பிக்கையைக் கெடுத்துவிடாமல் அவர்களுக்கு துரிதமாக நூல் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக பட்டு நெசவு செய்பவர் களுக்கு அறவே நூல் கிடைப்பதில்லை என்று எனக்குக் கடிதம் எழுதி யிருக்கின்றார்கள். ஆரணியிலிருந்து கடிதம் வந்திருக்கின்றது. நிறைய பட்டு நூல் நெசவு செய்கின்றவர்களுக்கு நூலைக் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

1973 மார்ச் 30] [திரு. கே. ராஜாராம்]

அடுத்தபடியாக, சேது வாய்க்காலைப்பற்றி திரு. ராஜா அய்யர் அவர்கள் நேற்றுச் சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட ரிக்கார்டு களையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். அதைத் தாமதம் செய்வது மாநிலத்திற்குப் பெரிய கெடுதல். டெல்லியை சீக்கிரமாக சேது வாய்க்கால் வெட்டும் வேலையை எடுத்துக்கொள்ளச் சொல்லி, நாம் வற்புறுத்த வேண்டும். இதில் கட்சிப் பேச்சு ஒன்றும் கிடையாது. இந்த மாநிலத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்கும்படியான நிலைமை ஏற்படும். ஏனென்றால் கோடி கோடியாகக் கொட்டி தூத்துக்குடித் துறைமுகத்தைக் கட்டு கின்றோம். சேது வாய்க்கால் திட்டம் நிறைவேறவில்லை என்றால், அநேகமாக தூத்துக்குடித் துறைமுகம் லாபகரமாக வேலை செய்யும் என்றே சொல்ல முடியாது. சேது வாய்க்கால் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்றினால்தான், கப்பல்கள், கிழக்கேயிருந்து மேற்கே யும், மேற்கேயிருந்து கிழக்கேயும் செல்லக்கூடிய கப்பல்கள், சேது வாய்க்காலை உபயோகித்துக்கொள்ள முடியும்; தூத்துக்குடித் துறை முகத்திற்கும் அதிக வருமானம் வரும். அதை உத்தேசித்தாவது சேது கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சேது கால்வாய்த் திட்டத்தை இரண்டு விதமாகப் போட்டிருக்கின்றார்கள். ஒன்று மண்டபத்திற்கு நேராக வாய்க்கால் வெட்டுவது, மற்றொன்று ராமேஸ்வரத்திற்கு நேராக வாய்க்கால் வெட்டுவது. இரண்டையும் அலசிப் பார்த்ததில் ராமேஸ்வரத்திற்கு நேராக ராமேஸ்வரம் தீவில் நடுவில் வாய்க்கால் வெட்டுவதுதான் நீளமும் குறைச்சல், நமக்குப் பணச் செலவும் குறைச்சல் என்று அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரி கிறது. ஆகவே ராமேஸ்வரம் பக்கத்தில் வெட்டும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, காவேரிப் பிரச்சினையைப்பற்றி, அண்மையில் ஒரு வாரமாக நடந்துவரும் விவாதத்தில், நாம் மிக ஜாக்கிரதையாக, முதலமைச்சரும் சரி, சட்டப் பேரவையிலும், சட்ட மன்றத்திலும் உறுப்பினர்களும் முழுப்பொறுப்பையும் முதலமைச்சர் அவர்களிடம் விட்டுவிடுவதுபோன்று மிக அடக்கமாக வார்த்தைகளைச் சிந்தாமல் சிக்கனமாக நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் மைசூரில் நடத்தும் பேச்சு வார்த்தைகளைப்பற்றி பத்திரிகை யிலே வருவதைப் பார்த்தால், நமக்கு வேதனையைத்தான் கொடுக் கின்றது. யார் யாரோ அவரவர்கள் இஷ்டம்போல் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 30

விரும்புகின்றேன். 1924-வது வருட ஒப்பந்தம் ஏற்கத்தக்கதல்ல என்று பேசுகிறார்கள். இதை எப்படி அவர்கள் சொல்லுகின்றார்கள் என்று புரியவில்லை. எப்போதோ சுதந்திரத்திற்கு முன்னால் இந்தியாவில் நடப்பாகத்தில், தக்காணத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த நைஜாம் ஒரு விதியைப் போட்டிருக்கின்றார், முல்கி ரூல்ஸ் என்று. நைஜாம் ராஜ்யம் போய்விட்டது. நடவடிக்கை எடுக்கப்பட்டு அது நமது சுதந்திர நாட்டினுடைய பகுதியாக வந்தபிறகு, பின்னால் மாநிலப் பிரிவினைகள் ஏற்பட்டு, ஆந்திரப் பிரதேசம் ஆகி, இவ்வளவும் நடந்த பிறகு, நமது கான்ஸ்டிடியூஷன் அழுலுக்கு வந்த பிற்பாடு, நைஜாம் போட்ட "முல்கி ரூல்ஸ்" செல்லும் என்று போன வருடம் சுப்ரீம் கோர்ட்டு நிர்ப்பு வழங்கியிருக்கும்போது, பிரிட்டிஷ்காரன் காலத்திலே அப்போது இருந்த சென்னை ராஜ்யத்திற்கும், மைசூர் சுதேசி சமஸ்தானத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் செல்லாது, வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்பட்ட அந்த ஒப்பந்தம் செல்லாது என்று சொல்வது விந்தையிலும் விந்தை என்றுதான் சொல்ல வேண்டும். வேறு ஒன்றும் நான் அதிகமாகச் சொல்வதற்கில்லை. சொன்னால் அது விவரம் தெரிந்தவர்கள்கூட இப்படியெல்லாம் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்களே என்று நினைக்க இடங்கொடுக்கும். அதனால் பூரா பொறுப்பையும் அனைத்துக் கட்சிகளும் அரசாங்கத்திடம் விட்டுவிட்டோம். அதிலும் குறிப்பாக முதலமைச்சர் அவர்களிடம் இதில் என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இன்றைய காலைப் பத்திரிகையிலே கூட இதைப்பற்றி மத்தியஸ்தம் பேச மத்திய அரசுக்கு உரிமை கிடையாது என்று மைசூர் மாநிலத்திலே மேல் சபையிலே பேசியிருக்கின்றார்கள் என்று வந்திருக்கின்றது. நாம் இனியும் தாமதம் செய்யலாமா? இதைப்பற்றி ஒரு கடுமையான நடவடிக்கை எடுத்தாலொழிய, இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஒரு முடிவும் அடையாது. இந்த நிலைமையிலே அவர்கள் போய்க்கொண்டிருப்பது மிகவும் துர்பாக்கியமாக இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே. ராஜாராம்: இப்படியெல்லாம் வரும் என்று நினைத்தேன். சுப்ரீம் கோர்ட்டுக்கு இந்த விஷயத்தைக் கொண்டுபோக வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரே குரலில் முடிவெடுத்துச் சொன்னோம். முதலமைச்சர் அவர்கள் சட்ட சபை

1973 மார்ச் 30] [திரு. கே. ராஜாராம்]

அங்கத்தினர்கள் சொல்வது மட்டும் போதாது என்று ஜனங்களிடத்திலே காவேரி ஓடும் பகுதிகளிலே உள்ள கிராமங்களுக்கெல்லாம் சென்று நிதி வசூலித்து, மக்களுடைய ஆதரவு வேண்டும் என்றும், பிரதிநிதிகள் சொல்வது மட்டும் போதாது என்றும் கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தினார்கள். எல்லா பொது ஜனங்களும் கூட இதற்கு ஆதரவு கொடுத்தார்கள். கோர்ட்டில் கேஸ் போட ஆதரவு கொடுத்தார்கள். கேசும் போட்டோம். இதில் மத்திய சர்க்கார் தலையிட்டு, "தீர்த்து வைக்கிறோம்" என்று கொடுத்த வாக்குறுதியின் பேரில், இந்த பிரச்சினை எப்படியாவது தீர்ந்து போகும் என்ற நம்பிக்கையை நமக்குக் கொடுத்ததன் பேரில் நாம் பொறுத்திருக்கிறோம். இதை முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கூறினார்கள். அதன்பேரில்தான் நாங்கள் கேசை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஒரு மனதாக முடிவு செய்தோம். கேசும் வாபஸ் வாங்கப்பட்டது. இப்போது அவர்கள் பேசிக்கொண்டு போகிற பேச்சைப் பார்த்தால், நமக்கு வருத்தமாக இருக்கின்றது. மைசூரில் ஹேமாவதி, ஹேரங்கி அணைகள் அப்போது பூமி மட்டத்திற்குத்தான் கட்டப்பட்டிருந்தன. இப்போது அநேகமாக முடியும் தருவாயில் அணைகள் வந்துவிட்டன. இதை நடத்தி முடித்துக்கொள்வதற்காக வேண்டித்தான், அவர்கள் பொய்யான இந்த வாக்குறுதிகளை ஏமாற்றுவதற்காவே கொடுத்து, நம்முடைய கேசை வாபஸ் பெறும்படியாகச் செய்தார்கள் என்று கூட நாம் எண்ணும்படியாக உள்ளது. விஷயங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் நமக்கு மிக வருத்தமாக இருக்கின்றது. முதலமைச்சர் அவர்கள் இதற்கு மைசூர்க்காரர்களைக் கண்டிப்பதில் பிரயோசனம் இல்லை. இதற்குப் பொறுப்பு திரு. கே. எல். ராவும் மத்திய அரசாங்கமும் தான். பத்திரிகையில் செய்தி வந்தவுடனேயே மத்திய அரசு மைசூருக்குத் தாக்கல் கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் வாய்க்கு வந்தபடி பேசுவதை ஒடுக்கியிருக்க வேண்டும். வாய் நீளுவதை ஒடுக்கியிருக்க வேண்டும். நாம் போய் அவர்களுக்கு பதில் சொல்லுகிற அளவுக்கு திரு. கே. எல். ராவ் அவர்கள் விட்டிருக்கக்கூடாது. அவரே தடுத்து நிறுத்தி நீங்கள் இம்மாதிரிப் பேசுவது தவறு, காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது என்று மத்திய அரசாங்கம் மைசூர் அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டியதிருக்க இந்த நிமிஷம் வரையில் அவர்கள் வாளா இருப்பது மிகமிக வருந்தத்தக்கது. இதற்கு முதலமைச்சர் அவர்கள் தான் எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கூட நமக்குச் சொல்லி மாட்டார்கள். இது மத்திய அரசாங்கத்திற்கும் நமது அரசுக்கும்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 30

கடிதப் போக்குவரத்தில் இருப்பதாகும், அதை வெளியில் சொல்லக் கூடாது என்று நிறுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க இருக்கத்தான் அவர்கள் இம்மாதிரி ஒரு பிரச்சாரத்தைப் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். இம்மாதிரிப் பிரச்சாரம் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ செய்துகொண்டிருப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவருக்கு ஆபத்து வரும்பொழுதெல்லாம் தங்கள் ஆட்சிக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் திடீரென்று இந்தியா பயமுறுத்துகிறது, இந்தியா படையெடுக்கப் போகிறது என்று சொல்லி, தனது நாட்டில் ஒரு பீதியை, "ஸ்கோர்"ஐ உண்டு பண்ணி, அங்கே வரக்கூடிய எதிர்ப்புக்களைச் சமாளிப்பது பூட்டோ வின் வழக்கமாக இருந்தது. இன்று திரு. தேவராஜ் அர்ஸ் அதே மாதிரி ஆரம்பித்துள்ளார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இதற்கே அவர்கள் வந்து கவலை தெரி விக்கிறேன் என்று சொல்வது—நாம் சொன்னதற்கே, கண்டனம் தெரிவிப்பதாக இருக்கக்கூடிய நிலைமையில், இதை மிகுந்த அடக்கத் தோடு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கே மிகுந்த வருத்தத்திற் குரிய விஷயமாகும்.

திரு. கே. ராஜாராம் : திரு. தேவராஜ் அர்ஸ் பேசியிருப்பதைப் பார்த்தால், உண்மையில் அவர் பதவிக்கு இடைஞ்சல் வந்திருக்க லாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. அவருடைய கட்சியில் பலர் அவருக்கு விரோதமாகக் கிளர்ச்சி ஆரம்பித்துள்ளனர்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : அவருக்குக் கவலை இருக்குமா இல்லையா?

திரு. கே. ராஜாராம் : தமிழ் நாட்டிலிருந்து ஆபத்து வரப் போகிறது என்று திசை திருப்பப் பார்க்கிறார் என்று எண்ண வேண்டி யிருக்கிறது. வேறு ஒன்றுமில்லை. ரொம்பப் பெரிய விஷயம். ஆழம் தெரியாமல் காலைவிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டில் இருப்பவர்கள் அவ்வளவு எளிதாக விட்டுவிடமாட்டோம். ஆகையினால் இதில் தக்கவாறு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. எனக்கு மட்டு மல்ல. இந்த மாநிலத்திலுள்ள எல்லா எதிர்க் கட்சிக்காரர்களும் ஒற்றுமையாக இருந்து செயல்படும் எண்ணத்தில் இருக்கிறோம்.

1973 மார்ச் 30] [திரு. கே. ராஜாராம்]

இதில் கட்சி பேதமில்லை. இந்த நாட்டின் வளத்தைக் குறைக்கும்படி யான நிலைமைக்கு எந்த எதிர்க் கட்சியும் விட்டுவிடாது. அரசாங்கம் சற்றுத் தயங்கினாலும் தயங்கவிடமாட்டோம். அரசாங்கத்தைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி, காரியத்தை நிறைவேற்றுவோமேயொழிய எந்த எதிர்க் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த விஷயம், அரசைச் சார்ந்த விஷயம் என்று பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டோம். மாநிலத்தைப் பாதிக்கக்கூடிய விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், தாமதம் இல்லாமல் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சிகளுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய விழுமிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய திரு. ராஜா அய்யர் அவர்கள் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்து அரசு அண்மையிலே அறிவித்துள்ள சில நல்ல அறிவிப்புகளுக்கு மகிழ்ச்சி யையும் நன்றியையும் தெரிவித்த பிறகு, வழக்கம்போல் அவர் எந்த ஆசிரிய சமுதாயத்திற்காக பல கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமோ அவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அடுத்து நேற்றையதினம் உழைப்பாளர் பொது நலக் கட்சியின் சார்பாகப் பேசிய திரு. ரா்மசாமி படையாச்சி அவர்கள் பிற்பட்டோருக்கு, அதிலும் குறிப்பாக வன்னிய சமுதாயத்திற்கு, இன்னும் நிறைய நிதி ஒதுக்கீடு அரசின் சார்பில் செய்யப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். நான் அப்பொழுதே குறுக்கிட்டுக் கூறியிருக்கிறேன். 1966-67-ம் ஆண்டிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கப் பட்ட நிதியினுடைய அளவையும் இன்றைக்கு அந்த சமுதாயத்தி னுடைய வளர்ச்சிக்காக, மேன்மைக்காக ஒதுக்கப்படுகிற நிதியின் அளவையும் எடுத்துக்காட்டி, ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயாக இருந்த நிதியளவு இன்றைக்கு 6½ கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந் திருக்கிறது என்பதை நான் விளக்கியிருக்கிறேன். மேலும் பிற்படுத்த பட்ட சமுதாய மக்களுடைய, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுடைய வாழ்வு எல்லா வகையிலும் உயர ஒளிபெற இந்த அரசு தன்னாலான எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதற்கு அடையாள மாகத் தான் பல அறிவிப்புக்களை நாம் தொடர்ந்து செய்துகொண் டிருக்கிறோம். நண்பர் பலராமன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு உறுப்பினர் களும் இன்றைக்கு ஏற்பட்டுள்ள மின்சார வெட்டின் காரணமாக விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் அதைப் போக்கு வதற்கு இன்னும் அரசு தீவிரமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், விவசாயிகள் வேதனைக்கு ஆளாகக்கூடாது என்பதற்காக, இந்த மின்வெட்டு நெருக்கடியில் வேறுபல நிறுவனங்களுக்கு வேறு பல காரியங்களுக்கு அளிக்கப்படுகிற மின்சாரத்தையெல்லாம் பெரும ளவுக்குக் குறைத்துக்கொண்டு, கூடுமானவரையில் மின்சாரம் விவசாயி களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறது. ஆனால் மிக அதிகமான அளவுக்கு மின்சாரப் பற்றுக் குறை வந்துவிட்ட காரணத்தினால், நாம் எதிர்பார்த்தபடி, விவசாயி களுக்கு நம்மால் நன்மை செய்ய முடியவில்லை, போதுமான மின்சாரத்தைத் தர இயலவில்லையென்றாலும், நாம் நான்கு மணி நேரம் ஐந்து மணி நேரம் என்று கணக்கிட்டு, இன்றைக்கு விவசாயி களுக்கு மின்சாரம் அளித்து வருகிறோம். அங்கொன்றும் இங் கொன்றுமாக சில இடங்களில் திடீரென்று இந்த மின்சாரத்தை வழங்குவதிலே ஏற்படுகிற இடர்ப்பாடுகளின் காரணத்தால், சில சங்கடங்கள் ஏற்படாமல் இல்லை. நண்பர் திரு. பலராமன் பேசும் பொழுது, "மின்சாரப் பற்றுக்குறை என்றால், நீங்கள் மத்திய சர்க்காரைக் காரணம் காட்டுகிறீர்கள். மத்திய சர்க்கார் உங்களைக் காரணம் காட்டுகிறது. பொதுமக்கள் குழப்பத்துக்கு ஆளாகியிருக் கிறார்கள்" என்று சொன்னார். அப்பொழுதே கூட நம் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். இதிலே உண்மையான காரணம் என்ன என்பதை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். இதில் நாம் யாரும் மத்திய சர்க்காரைக் குறை சொல்லவில்லை. அதைப் போல மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் குறை சொல்லுகிறதா என்றால், சில அரசியல் காரணத் திற்காக, இம்கே அவர்களுடைய கட்சி வளர வேண்டும் என்பதற்காக, மத்தியில் இருக்கின்ற சில அமைச்சர்கள் சில நேரங்களில் இப்படிப் பட்ட கலக விதைகளைத் தூவி இங்கே விதைத்து விடுகிறார்கள். அவர்கள் திரு. ராமையா பேசுகிற நேரத்தில்கூட, "நாங்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் உடனே மின்சாரப் பற்றுக் குறை நீங்கிவிடும்" என்று சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். ஒருவேளை அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கிற அந்தக் காலம் மின்சாரப் பற்றுக்குறை அறவே நீங்கிய காலமாக இருக்கும், அந்தக் கால கெடுவைக் குறிப்பிட்டிருக்கக்கூடுமே அல்லாமல், இப்போது உடனடி

1973 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

யாக ஆட்சியை மாற்றி, அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிற ஒரே காரணத்தால் இந்த நெருக்கடி நிலை நீங்கிவிடும் என்பதை யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆகவே மின்சாரத் துறையில் ஏன் இந்தப் பற்றுக்குறை ஏற்பட்டது என்பதற்கான காரண காரியங்களை, விளக்கங்களை பல முறை எடுத்தும் சொல்லியிருக் கிறோம். நமக்குக் கடிதம் எழுதிய மத்திய அரசின் அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும்கூட நீர்-மின் நிலையங்களில் ஏற்பட்ட பற்றுக்குறையின் காரணமாகத் தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை வெகு விளக்கமாகக் கோடிட்டுக் காட்டி யிருக்கிறார்கள். அதுதான் உண்மையும்கூட. அனல் மின்சாரம், அணு மின்சாரம், இவைகளையெல்லாம் நாம் விரிவாக்கவில்லை என்றால், அது நம்முடைய குற்றமல்ல. நான் அதற்காக மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டுகிறேன் என்று பொருளும் அல்ல. அவர்கள் தங்களுக்குள்ள இடர்ப்பாடுகளைச் சொன்னார்கள். நாம் நமக்குள்ள தேவைகளை நாட்டு மக்களிடம் சொல்லிக்கொண்டிருக் கிறோம். அதற்காக நாம் வாளா இருந்துவிடாமல் எந்தெந்த நேரத்திலே மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமோ, எந்தெந்த நேரத்தில் நினைவூட்ட வேண்டுமோ, எந்தெந்த நேரத்தில் வற்புறுத்த வேண்டுமோ, அந்த நேரத்தை நாம் எப்போதும் தவறவிடாமல், நம்முடைய கடமையைச் செய்து வந்திருக்கிறோம். இப்போது அனல் மின்சாரம் அல்லது அணு மின்சாரம்—இவைகளெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாக்கப்படாத காரணத்தால், இந்தப் பற்றுக்குறை வந்துவிட்டதோ என்ற வாதத்திலும் முழுமையான பொருள் இருப்ப தாக நாம் கொண்டிட முடியாது. இவைகளெல்லாம் வளர்ந்தால், நம்முடைய மின்சாரத் தேவைக்கு ஒரு அனுசரணையாக இருக்கலாமே தவிர, முழுமையான மின்சாரத் தேவையை இந்த அனல் மின்சார நிலையங்கள் அல்லது அணு மின்சார நிலையங்கள் நிச்சயமாகத் தந்துவிட முடியாது. முழுக்க முழுக்க நாம் நீர்-மின் நிலையங்களை நம்பியிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

நம்முடைய நண்பர் திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் தாழ்த்தப் பட்ட கிருஸ்தவர்களுடைய நிலையைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகின்ற சலுகைகள் நிரந்தரமாக இருந்திட வேண்டும். நிலையானதாக இருந்திட வேண்டும். என்னென்ன சலுகைகளை அவர்கள் பெறுகிறார்கள் என்பது கூடக் குழப்பமான நிலையிலே இருக்கிறது என்று நண்பர் திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு மாநில

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

அரசினுடைய நிதியிலிருந்து தரப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்களுக்கும் நாம் தந்து வருகிறோம். அந்தச் சலுகைகளையெல்லாம் தொகுத்து 1970-லே இந்த அரசு ஒரு ஆணையையும் பிறப்பித்திருக்கின்றது. இப்போது மத்திய அரசினுடைய நிதியிலிருந்து இந்து ஹரிஜனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் தரப்பட வேண்டும் என்பது தாழ்த்தப் பட்ட கிருஸ்தவர்களுடைய கோரிக்கையாக இருந்து வருகிறது. அதைத்தான் நண்பர் திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் நேற்றைய தினம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு தருகின்ற சலுகைகளையெல்லாம் மாநில அரசு தருவது என்பது இயலாது. மத்திய அரசின் சலுகைகளைத் தருவதற்கு மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யவேண்டும். அந்த உறுதிமொழியை நண்பர் திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் மூலமாகத் தாழ்த்தப்பட்ட கிருஸ்தவ மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு நிதியிலிருந்து இந்து ஹரிஜனங்களுக்குத் தரப்படும் சலுகைகள் தாழ்த்தப்பட்ட கிருஸ்தவ மக்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய ஓய்வு ஊதியம் குறித்துப் பேசினார் நண்பர் திரு. கணபதி அவர்கள். இன்னொரு நண்பர் திரு. முத்துசாமி அவர்களும் ஆசிரியர்களுக்காக நீண்ட நேரம் பேசினார். நான் அடிக்கடி எடுத்துக்கூறியதைப்போல, இந்த அவையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்துளியும் ஆசிரியர்களுக்காகச் செலவிடப் படுகிறது என்பது நாம் அறியாததல்ல. எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், இருக்கிற நிதியையெல்லாம் ஒதுக்கி, கல்வி அமைச்சரோடு கலந்து பேசி, ஆசிரியர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறை வேற்றிவிட்டாலும், மறுநாளே நண்பர் திரு. கணபதியோ, நண்பர் திரு. ராஜா அய்யரோ, மற்றவர்களோ புதிய கோரிக்கைகளை எழுப்பா மலிருக்கப்போவதில்லை. அந்த அளவுக்கு ஆசிரியர்கள் பிரச்சினை தினம் தினம் ஒரு பிரச்சினையாக வெளிப்படுகிறது என்பதை நாம் அறிவோம். நண்பர் திரு. பக்கர் தனது பேச்சை ரத்தினச் சுருக்க மாக முடித்துக்கொண்டார்கள். உருது பேசும் முஸ்லீம்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கப்பட்டதற்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். முஸ்லீம் லீக் கட்சியில் தமிழ் நாட்டின் தலைவராக விளங்கும் நண்பர் திரு. வகாப் அவர்கள் தனது நன்றியைத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒருவேளை அவர்கள் கேட்டபோது நான் இங்கே தெரிவிக்காமல் அங்கே தெரிவித்ததால்.....

1973 மார்ச் 30]

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன் என் சமுதாயத்தின் சார்பில்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நேற்றையதினம் இந்த நிதி ஒதுக்கீடுபற்றி அவர்களுடைய பொழிப்புரையைக் கூறுகிற நேரத்தில் 4½ கோடி மக்கள் வாழ்வு நிறைவான வாழ்க்கையாக அமையவில்லையென்று சொன்னார்கள். அந்த மனநிறைவு எங்கள் எல்லோருக்கும் இருக் கிறது என்று கருதிவிடக் கூடாது. ஏனென்றால் 4½ கோடி மக்களிலே திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் ஒருவராக இருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் நிம்மதியாக இருக்கும்படி எங்களால் நிச்சய மாகச் செய்ய முடியாது. அப்படி எல்லோரும் நிம்மதியாக இருந் தாலும் பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடுவைப் போன்றவர் களைத் திருப்திப்படுத்த முடியாது. அவர்கள் பேசும்போது "நான் இன்றைக்கு சில சுருதிபேதமான விஷயங்களையெல்லாம் கூடச் சொல்லப்போகிறேன். மூதலமைச்சர் அதற்கு வருத்தப்படக் கூடாது" என்று சொல்லிவிட்டு, அசெம்பிளியில் அப்படிச் சொன்னார். அண்ணா அப்படிச் சொன்னார் என்றெல்லாம் சொல்லி, அவர் என்னென்ன சொல்லி எங்களைத் தாக்க வேண்டுமென்று எண்ணினாரோ அவைகளையெல்லாம் அவர்கள் பெயரால் இங்கே எடுத்துச்சொன்னார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அசெம்பிளியில் சொன்னதும், மாண்புமிகு அண்ணா அவர்கள் சொன்னதும் என்ன என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன, புத்தகங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லாததைச் சொன்னதாக சொல்லவில்லை. இருப்பதை அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சி களுடைய பலகீனத்தைப் பயன்படுத்திக்கொள்வதில் முதலமைச்சர் ரொம்ப கெட்டிக்காரர் என்று குறிப்பிட்டார்கள். எங்கள் பல கீனத்தை நீங்களே நேரடியாகச் சொல்லியிருக்கலாம். "இது கொலைகார ஆட்சி, சர்வாதிகார ஆட்சி"—என்ற வார்த்தைகளை யெல்லாம் அசெம்பிளியில் சொன்னார் என்று சொல்லுகிற நேரத்திலே உங்களுடைய பலகீனம் வெளிப்படுகிறது. நீங்களே நேரடியாகச் சொல்லியிருக்கலாம். ஆளுகிற ஆட்சி கயவரின் ஆட்சி என்று அசெம் பிளியில் எடுத்துச்சொன்னதாகச் சொன்னார்கள். நான் அவர்கள் பேசவோ எழுதவோ இல்லையென்று குறிப்பிடவில்லை. அவர்கள் பேசியிருக்கலாம், எழுதியிருக்கலாம். அவைகளைத்தான் எடுத்துட்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

படித்தார்கள். இல்லாததைச் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. ஆனால் இவ்வளவு நாள் பேசியதைவிட நேற்றையதினம் அவர்களுடைய பேச்சிலே கொஞ்சம் கடுமை தொனித்தது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டினார்கள். மாற்றுக் கட்சிகளெல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நான் அவரைவிட நிறையப் படித்தவன் என்பதை அவர்கள் அறியாதவர்கள் அல்ல. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்ட நாளிலே ஒவ்வொரு சந்தர்ப்பம் கிடைக்கின்றபோதும், சட்டமன்றத்திலும் சட்டமன்றம் கூடாத நாட்களில் வெளியிலேயும், அவர்கள் அடுக்கடுக்காகச் சொல்லி வருகின்ற குற்றச்சாட்டுகளைத் தான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஒரு பழமொழி அரைத்த மாவையே அரைப்பது என்று தமிழிலே. அரைத்த மாவையே அரைப்பது என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். அவர்கள் அரைக்கும் திறன் சரியாக இல்லாததால் மசியவில்லை என்பதால் திரும்பத் திரும்ப அரைக்கலாம். அல்லது அரைப்பதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை என்பதால், அரைத்ததைத் திருப்பித் திருப்பி அரைக்கலாம் என்று அண்ணா அவர்கள் இதையும் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே 4 கோடி மக்கள் அல்லது 4½ கோடி மக்கள் அனைவரும் இந்த ஆட்சியிலே நிம்மதியாக வாழ்கிறார்கள் என்று நாம் அனைவரும் ஏற்றுக்கொள்வோமேயானால், பிறகு வேறுபல காரியங்களைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டிய, விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே பல காரியங்களைப் படிப்படியாகச் செய்துகொண்டு வருகிறோம். முழுமையான பயனையடைய முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். நாம் மனநிறைவோடு அப்பாடா, நம்முடைய காரியம் முடிந்துவிட்டது என்று பெருமூச்சு விடுவதற்கேற்ற வகையிலே இன்னும் காரியங்கள் நடைபெறவில்லை. அந்த லட்சியத்தை நோக்கி நாம் இன்றைக்கு நடைபோட்டுக்கொண்டிருக்கின்றோம். அவர்கள் அடிக்கடி இந்த மாமன்றத்தில் மதுவிலக்கைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். நேற்றையதினமும் பேசினார்கள். மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டதில் உள்ள படியே இந்த அரசிலே எனக்கோ அல்லது அமைச்சர் பெருமக்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அல்லது ஆளும் கட்சிக்கோ மனநிறைவு இருப்பதாக யாரும் தயவு செய்து கருதிவிடக் கூடாது. இதை ஒரு மகிழ்ச்சிகரமான காரியமாக எண்ணி, நாங்கள் இதை

1973 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

நடத்திடுவோம் என்றும் யாரும் தவறுகப் புரிந்துகொள்ளக் கூடாது. இருக்கிற நிலைமைக்கேற்ப சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள். அனைத்திந்தியக் கட்சி காங்கிரசு கட்சி. அந்தக் கட்சியினுடைய ஒரு பெரும் தலைவராக நம்முடைய தமிழ் நாட்டினுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்கள் வீற்றிருந்தார்கள். ஒரே குடையின் கீழ் அகில இந்திய காங்கிரசை நிர்வகித்த பெருமை மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்களுக்கு உண்டு. அந்த நேரத்திலேயே அவர்கள் மைசூரிலேயும் அன்று கூட்டுக்கோப்பாக வேறு பல மாநிலங்களிலேயும் உள்ள முதலமைச்சர்களையெல்லாம் ஒன்று கூட்டி, ஆங்காங்கு மது விலக்கைத் தீவிரப்படுத்த வேண்டுமென்ற ஒரு கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கையை நிலை நாட்டியிருப்பார்களேயானால், இன்றைக்கு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வருத்தப்படுவதைப் போலவோ அல்லது தோழமைக கட்சியிலே இருக்கிற முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் ஜானி பாய் வருத்தப்படுவதைப் போலவோ அல்லது சிலம்புச் செல்வர் அவர்கள் வருத்தப்படுவதைப் போலவோ அல்லது நாங்களெல்லாம் வருத்தப் படுவதைப் போலவோ நிச்சயமாக வருத்தப்பட வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஏனென்றால் மதுவிலக்குக் கொள்கை அனைத்திந்திந்தியக் கொள்கையாக இருந்திருக்குமேயானால், நன்றாக இருந்திருக்கும். இன்றைக்கு பல்வேறு மாநிலங்களிலே மதுவிலக்குக் கொள்கை தளர்த்தப்பட்டு பாதி நேரம் சாப்பிடலாம், வெள்ளிக் கிழமை மாத்திரம் வேண்டாம், பாக்கி நாட்களிலே சாப்பிடலாம், இத்தனை மணி நேரம் வரையிலே கடைகளைத் திறந்திருக்கலாம் என்று கொஞ்சம் கொஞ்சமாக படிப்படியாகத் தளர்த்தி விட்டார்கள். இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நம்முடைய பக்கத்திலே இருக்கிற சின்னஞ்சிறு மாநிலமான புதுவை மாநிலத்திலே தேர்தல் நடந்த நேரத்தில், அந்நாள் காங்கிரஸ் கட்சியில் முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் அந்த மாநிலத்திலே பிரசாரம் செய்தபோது, எதிர்க்கட்சியின் சார்பாக, "இங்கே காங்கிரஸ் வெற்றிபெற்றால், கள்ளுக் கடைகள் எல்லாம் மூடப்படும்" என்று பிரசாரம் செய்ததற்கு திரு. காமராஜ் அவர்கள், "இப்படியெல்லாம் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். இங்கே காங்கிரஸ் வெற்றி பெற்றாலும், கள்ளுக் கடைகளை நிச்சயமாக மூடமாட்டோம். இங்கு மது விலக்கைப்பற்றி நாங்கள் கொண்டிருக்கிற கொள்கை வேறு" என்றுதான் அவர்கள் சொல்ல வேண்டியிருந்தது. அப்போதே கொஞ்சம் கண்டிப்பாக நடவடிக்கைகளை எடுத்திருப்பார்களேயானால், கொள்கையளவில் தமிழ் நாட்டுக்கு இப்படிப்பட்ட தர்ம

சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. நம் சமுதாயம் முழுவதுமே கெட்டுவிட்டது. இன்றைக்கு என்னதான் நன்மைகளைச் செய்தாலும், என்னதான் கூலி உயர்வை அளித்தாலும், என்னதான் வாழ்க்கை வசதிகள் செய்தாலும் என்னதான் பசுமைப் புரட்சியைச் செய்தாலும், இந்தச் சமுதாயம் கெட்டழிந்துவிட்டது என்பதை திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். நாம் கணக்கெடுத்துப் பார்த்தால், 1969-இல் மதுவிலக்கை நாம் இங்கே ஒத்திவைக்க வேண்டுமென்று முடிவு எடுப்பதற்கு முன்பு நம்முடைய சிறைச்சாலைகளிலே 3,06,231—கிட்டத்தட்ட 3 லட்சம் பேர்—இந்த மதுவிலக்கு வழக்கில் சம்பந்தப்பட்டு கைதிகளாக இருந்தார்கள். 3 லட்சம் பேர்கள் கைதிகளாக சிறைச்சாலைகளிலே இருந்தார்கள் என்றால், கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள், விற்றவர்கள் என்கின்ற காரணத்திற்காக கைதிகளாக இருந்தார்கள். இந்த 3 லட்சம் பேர்களுக்கும் தலா ஐந்தைந்து பேர்களை இணைத்துப் பார்த்தால்—பிடிபடாதவர்கள். பிடிபட்டவர்களோடு சேர்ந்து வியாபாரம் நடத்தியவர்கள்—இவர்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், 15 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்தார்கள். அவர்களால் வரக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட ரூ. 25, 30 கோடி அரசாங்கத்தின் கருவூலத்திற்கு வராமல், யார் யார் கைகளுக்கோ போய்க்கொண்டிருந்தது. மாமூல் என்ற பேராலே, வேறு பல பேர்களால் அந்த வருமானம் அரசாங்கத்திற்கு வராமல், வேறு எங்கேயோ போய்க்கொண்டிருந்தது. அப்படி வருமானம் பெற்று நாட்டு மக்களுக்கு நல்ல காரியம் செய்ய வேண்டுமா என்ற கேள்வியை உள்ளபடியே நாம் மறுத்து ஒதுக்குகின்ற கேள்வி அல்ல என்றாலும்—பொருளாதார ரீதியிலே பார்க்கிற நேரத்திலே, மதுவிலக்கு வெகுவாக வெற்றி பெறுமல், நமது எண்ணமும் ஈடேறுமல், பக்கத்து மாநிலங்களிலிருக்கிற கள்ளுக் கடைகளுக்கு இங்கே இருக்கிறவர்கள் சிலர் சென்று அங்கே இருக்கிற மது வகையறுக்களை இங்கே திருட்டுத்தனமாகக் கொண்டுவரவும், அதுவும் போதாமல், கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டு கைதிகளாகவும், அதிலேயும், இன்னும் சொல்லப்போனால், காவல் துறையினுடைய ஒழுங்கே கெடுகின்ற அளவுக்கும் நிலைமைகள் ஏற்பட்டு அது ஒரு தோல்வியைத் தழுவிக்கொண்ட காரணத்தாலே தான், இப்போதைக்கு தற்காலிகமாக நாம் மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிறோம். அகில இந்திய ரீதியிலே மதுவிலக்குக் கொள்கைக்காக ஒரு நல்ல முடிவெடுக்கப்பட்டு இந்தியா முழுவதும் மதுவிலக்கு என்று என்றைக்கு அறிவிக்கப்படுகிறதோ, அன்றைக்கு முதலில் கொடி

தூக்கிக்கொண்டு, கை கொடுக்கின்ற மாநிலம் நமது தமிழ்நாடாக இருக்கும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியினுடைய தலைவர்களும், நேற்றையதினம் பேசிய நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும் பல விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மேலவை உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களிலே—அவை இரு பிரிவுகளாக நடக்கிற நேரத்தில், இப்போது கிழக்குத் தஞ்சை என்றாலும், மேற்குத் தஞ்சை என்றாலும் ஒரு பிரிவுக் கூட்டத்திற்குத் தான் மேலவை உறுப்பினர்கள் செல்ல முடிகிறது—இரு கூட்டங்களுக்கும் செல்வதற்கேற்ற அளவுக்கு சட்டம் திருத்தப்படவேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் எடுத்துக் கூறினார். ஏற்கெனவே இங்கு அவையில் நடந்த இந்த விவாதங்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அதற்கு அளித்த பதில்களையும் ஒட்டி ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருவேளை அப்படி அனுமதிக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனாலும், அவர்கள் கலந்துகொள்வதற்கு இடைஞ்சலாக இருக்குமானால், எப்படித் திருத்தலாம், திருத்துவது சரியாக இருக்குமா என்பவைகளையெல்லாம் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்று. ஊராட்சித் தலைவர் தேர்தல் நேரடித் தேர்தலாக நடைபெறுவது போல, ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலும் நேரடித் தேர்தலாக நடைபெற வேண்டுமென்று எடுத்துச்சொன்னார்கள். அதையும் பரிசீலித்து, பரிசீலனை முடிந்த பிறகு, ஏற்றதொரு முடிவை அரசு எடுக்கும் என்று நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறியாளர் கஷ்டங்களை நீக்கிவிடவேண்டுமென்று சொன்னார்கள். நமது மாநில அரசின் அதிகாரத்தின் வரம்பிற்குட்பட்டு, எந்தெந்த அளவுக்கு கைத்தறியாளர்களுடைய துயரைத் தணிக்க முடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசு அந்தப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

சேதுசமுத்திரத் திட்டம்பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இந்த மேலவையில் இடம் பெற்ற அந்தக் காலத்திலிருந்து, இன்னும் சொல்லப் போனால்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

நாங்கள் ஆட்சி மன்றங்களுக்கு வர இயலாத, வர விரும்பாத அந்தக் காலத்திலே இருந்தே, எங்கள் மாநாடானாலும் சரி, எங்களுடைய கழகப் பொதுக் குழுவானாலும் சரி, இங்கே வந்த பிறகும் சரி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும் சரி, நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கின்ற மிக முக்கியமான திட்டங்களிலே சேது சமுத்திரத் திட்டம் ஒன்றாகும். அண்மையிலே "சிதம்பரம்" என்கின்ற ஒரு கப்பலை மிதக்க விடுகின்ற விழாவிற்கு திரு. ராஜ்பகதூர் அவர்கள் வந்திருந்தபோது கூட, நான் உரையாற்றியபோது, சேதுசமுத்திரத் திட்டம் பற்றி மிகவும் வலியுறுத்தி எடுத்துச்சொன்னேன். திரு ராஜ் பகதூர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்தில், திட்டக் குழுவில் கலந்து முதலமைச்சர் அவர்கள் பேசி ஒரு முடிவெடுப்பாரேயானால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்ற அளவுக்குப் பதிலளித்தார்கள். ஒவ்வொரு தேசிய வளர்ச்சிக் குழு டெல்லியில் நடைபெறுகின்ற நேரத்திலும் சேதுசமுத்திரத் திட்டம் பற்றி நான் வலியுறுத்தி வந்திருக்கின்றேன்—தொடர்ந்தும் வலியுறுத்துவேன். இது ஒரு கட்சியினுடைய பிரச்சினையாக இல்லாமல், தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேர்களுடைய எண்ண எதிரொலியாக இருப்பதை மத்திய அரசு புரிந்துகொண்டு விரைவிலே ஏற்ற நடவடிக்கை எடுக்கு மென்று நான் கருதுகின்றேன்.

இறுதியாக, காவிரிப் பிரச்சினை குறித்து எதிர்க் கட்சித் தலைவரவர் களும், நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இடையிடையே குறுக்கிட்டும், தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவுக்கு இன்றைக்கு மைசூர் மாநிலத்துடைய அறிக்கைகளால் புண்படுத்தப்பட்டிருக் கிறார்கள். மக்களின் உள்ள உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கூறினார்கள். பொருத்தமான உதாரணத்தையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் காலத்திலே உருவாக்கப்பட்ட "முல்கி" சட்டத்திற்கு இன்றைக்கு உச்ச நீதி மன்றம், அது தொடர்ந்து இருக்கலாம் என்கின்ற தீர்ப்பைக் கொடுத் திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்றைக்கும் நிலைநிறுத்தப்பட முடியாத ஒன்று என்ற கேள்வி எழுப்பினர். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் எந்த வகையிலும் மீறப்படக் கூடாது என்பதில் நம்முடைய அரசு மிகுந்த பிடிவாதமாக இருக்கிறது—உறுதியாக இருக்கிறது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை குறித்து சட்டப் பேரவையிலேயும் மாண்புமிகு உறுப்பினர் பலர் வினாக்களை எழுப்பினர். இங்கேயும் அதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது. அவர்க

1973 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

ளெல்லாம் எடுத்துக்காட்டியது போல, நம்முடைய தமிழ் நாட்டுக் குள்ள அடக்க உணர்வோடு, மெத்த பண்பாட்டோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுகி வருகின்றோம். இந்த நேரத்திலே நாம் உணர்வுக்கு இடம் தராமல்—உணர்ச்சி பொங்கி எழுந்துவிடுமே யானால், அதன் காரணமாக ஏற்படுகின்ற ஊறுகளை அதனுடைய பின்விளைவுகளை எண்ணிப்பார்த்து—மைசூர் மாநில மக்களுக்கும், அல்லது கேரள மாநில மக்களுக்கும், அல்லது தமிழ் நாட்டிலே இருக்கின்ற மக்களுக்குமிடையே ஏற்படுகின்ற மனக்கசப்பை முற்ற விடக்கூடாது என்பதில் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருந்து வருகின்றோம். ஏனென்றால், மைசூர் மக்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். மைசூர் மக்கள் நம்முடைய சகோதரர்கள். அதைப் போலவே தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும் அவர்களுக்கு சகோதரர்கள். இந்தியாவின் ஒருமைப்பாட்டினைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் மைசூர் மாநில மக்களுக்கு காவிரியினால் கிடைக்கின்ற பயன்களை நாம் அழித்துவிட வேண்டும், தடுத்துவிட வேண்டுமென்று எண்ணுகின்ற குறுகிய நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகவில்லை. ஆனால் ஏற்கெனவே நம்முடைய வயல்கள் வளப்படுத்தப்பட்டு அதன் காரணமாக தஞ்சை மாவட்டமும் தொடர்புடைய பகுதிகளும் செழிப்புற்று தமிழ்நாடே தஞ்சை மாவட்டத்தை நம்பியிருக்கின்ற சூழ்நிலையில் இன்றைக்கு திடீரென்று நாம் ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்திற்கு விரோதமாக நடப்போம் என்று குறுரைத்து, மைசூர் அரசு போர் தொடுக்குமேயானால், தமிழகமே இருண்ட நிலமாக ஆகிவிடுமென்பதை பல முறை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நேரத்திலே பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையிலே நான் பல முறை அந்நாள் மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பாடீல் அவர்களோடும் மத்திய அமைச்சர்களோடும் டெல்லிப் பட்டிணத்தில் சந்தித்து இதுபற்றி விவரங்களை எடுத்துரைத்திருக்கின்றேன். இப்படி பல முறை எடுத்துச்சொல்லியும் கூட, மாநாடுகளை நடத்தியும்கூட, முதலமைச்சர்களின் மாநாட்டை நடத்தியும் கூட, இறுதி முடிவினை மத்திய அரசு எடுக்கவேயில்லை. நான் இதிலே மைசூர் அரசைக் குறை கூறுவதைவிட, குறை கூற வேண்டியது மத்திய அரசைத்தான் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொல்வது மிகப்பொருத்தம் என்று நான் கருதுகின்றேன். அவர்கள் அனுமதித்திருந்தால், இதை சுருக்கமாக.....

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

எதிர்காலத்திலே நாம் கொள்ள வேண்டிய நட்புக்கு, உறவிற்கு, பொறுப்புணர்ச்சிகளுக்கு உகந்ததல்ல என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நான் இன்னென்றையும் சொல்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று யோசித்து, காலையிலே பேரவையிலே இருந்த தலைவரிடத்திலே கலந்து பேசியிருக்கிறேன். இங்கே அறிவித்தால், பேரவையிலேயுள்ள சில பேருக்குக் கோபம் வந்துவிடுகிறது. காலையிலே கூட அப்படிப் பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. என்றாலும் கூட அங்கே நான் விளக்கத்தைச் சொன்னேன். கூடாதம் வந்து விட்டது என்று நினைக்கிறேன். வந்துவிட்ட காரணத்தினால் சொல்கிறேன். 4-ஆம் தேதியன்று நான்கு மணிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நம்முடைய தலைமைச் செயலகத்தில் நடைபெற இருக்கிறது. அன்றைக்கு இதைப்பற்றியெல்லாம் நாம் விவரமாகப் பேசி ஏற்ற தொரு முடிவை நிச்சயமாக எடுக்க முடியும். ஆனால், எந்த முடிவா னாலும் நம்முடைய தமிழகத்திற்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மாறான முடிவாக இல்லாமல் பார்த்துக் கொள்வதிலும், அது மாத்திரமல்லாமல் நமக்கு மைசூர் அரசாலும், அல்லது மத்திய அரசின் அமைச்சராலும் எந்தக் கேடும் விளையாது பார்த்துக்கொள்வதிலும் இந்த அரசு தன்னுடைய பதவியைக் கூடப் பணயம் வைத்துப் போராடத் தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் கட்சி சார்பற்ற முறையிலே இதிலே நாங்களும் போர்க் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொன்னதை நான் மனமார, நெஞ்சார, இதயமார வரவேற்று, இந்த உணர்ச்சி யொன்றே நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய எதிர் காலம் செழிப்படைவதற்குப் போதும் என்று எடுத்துக் கூறி, இந்த நிதி நிலை ஒதுக்கீட்டிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொன்ன நல்ல பல கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காவேரிப் பிரச்சினையில் நம்முடைய தமிழ கத்தில் இருக்கிற அரசியல் கட்சிக்காரர்கள் ஒத்துழைத்தால் மட்டும் போதாது, பத்திரிகைக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். ஏனென்றால், மைசூர்காரர்கள் நம்மைப் பார்த்துச் சிறி எழுந்தால், விளக்கங்கள் தந்தால், அதைப் பெரிய அளவில் வெளியிடுவதற்கு இங்கேயுள்ள பத்திரிகைக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். ஏதோ இங்கிருக்கிற அமைச்சர்களையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, மற்ற மாநிலங்களில் இருக்கிற அமைச்சர்கள் எள்ளி நகையாடுகிறார்கள் அல்லது குறை கூறுகிறார்கள்

1973 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

என்று இந்த விஷயத்தை பத்திரிகைக்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று நான் மிகுந்த தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இது முன்னேற்றக் கழகத்தினுடைய பிரச்சினையல்ல. தமிழகத்தில் இருக்கிற மக்களுடைய பிரச்சினை. இன்றுகூடக் காலையிலே பார்த்தால் பத்திரிகையிலே "காவேரிப் பிரச்சினை, மைசூர் நிலை விளக்கம்" என்று தினமணிப் பத்திரிகையில் பெரிய அளவில் வருகிறது. நான் அதற்காக வருத்தப்படவில்லை.

திரு. கே. ராஜாராம்: ஒருக்கால் நமக்கு ரோஷம் ஊட்ட வேண்டுமென்றிருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுமாதிரி செய்திகளைப் பார்க்கும்போது, ரோஷம் வருகிறது. ஆனால், வெளியிலே சொல்ல முடியாத சங்கடம் இருக்கிறது. ஆனால் "இதே போல நான் விளக்கம் தருவது, "காவேரி நீர்—மைசூர் முதலமைச்சருக்கு கருணாநிதியின் ஆட்சேபம்" என்ற அளவிற்கு வருகிறது. எதிரிகள் ரோஷம் ஊட்டினால்தான் ரோஷம் வர வேண்டும். இங்கே இருக்கிற தலைவர்கள் ரோஷம் ஊட்டினால் ரோஷம் வரக்கூடாது என்றால், அந்த ரோஷம் ரொம்ப நாளைக்கு நிற்காது. எதிரி ஊட்டுகிற ரோஷம் தான் நிற்கும். நாம் ஊட்டுகிறது ரோஷம் நிற்காதென்றால் அந்த ரோஷம் உண்மையான ரோஷமாக இருக்காது. இதைச் சொல்வதற்குக் காரணம் ஒரு பத்திரிகையைக் குறை கூறுவதற்காக அல்ல. எல்லாப் பத்திரிகைகளுக்கும் சொல்கிறேன். நான் இந்தப் பத்திரிகையை எடுத்துச் சொல்வதற்குக் காரணம் தரமான பத்திரிகை என்ற வரிசையில் இருக்கிற காரணத்தால், சொன்னால் புரிந்துகொள் வார்கள். வேறு சில பத்திரிகைகள் எதற்காகவோ இருக்கின்றன. நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். இதிலே பரி பூர்ணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி ஒதுக்கீடு மானியத்தின்மீது பல்வேறு கருத்துக்களைச் சொன்ன அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப்

[1973 மார்ச் 30

[மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் தலைமை]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, கேஸ் போட்டிருந்தோம். அந்த கேஸை வாபஸ் வாங்கிக்கொண்டோம். வாபஸ் வாங்கிக்கொள்ளும்போது, மைசூர் அரசு ஏதாவது வாக்குறுதி கொடுத்திருந்ததா? அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்கிறேன். மத்திய அரசு முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் ஹேமாவதி போன்ற திட்டங்களுக்கு நேரடியாக அனுமதியைத் தராவிட்டாலும், மைசூரிலே முதலமைச்சர் வீரேந்திர பாடீல் ராஜினாமா செய்தபிறகு, அவர்களுடைய நிதிநிலை அறிக்கை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட நேரத்தில், ஹேமாவதி திட்டங்களுக்கான பண ஒதுக்கீட்டை பாராளுமன்றத்தில் செய்தார்கள். அது மறைமுகமாக தமிழக அரசுக்கு விரோதமாக—நான்கு கோடி மக்களுடைய எண்ணங்களுக்கு விரோதமாக—செய்யப்பட்ட காரியம் என்பதை அன்றைக்கே நாம் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்திருக்கிறோம். ஆனாலும் மாநிலத் தகராறுகளை முற்றவிடக் கூடாது என்பதிலே நாம் காட்டிய பொறுமையின் காரணமாக, மத்திய அரசு சமரச உடன்பாடுகளுக்கு வந்த நேரத்திலேயெல்லாம், நாம் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடந்திருக்கிறோம். அவர்கள் நாம் எப்படிப்பட்ட உடன்பாட்டிற்கு வந்தோமென்று கேட்டார்கள். நாம் இந்த வழக்கை வாபஸ் வாங்கினோமென்றால் ஒரு "கண்டிஷன்"—ஒடுதான் வாபஸ் வாங்கியிருக்கிறோம். "with liberty to file" என்கின்ற நிபந்தனையோடு தான் நாம் வாபஸ் வாங்கியிருக்கிறோம். மறுபடியும் அந்த வழக்கை நாம் எப்போது வேண்டுமானாலும் போடலாம், அதற்கு இடம் வைத்துத்தான் நாம் வாபஸ் வாங்கியிருக்கிறோம். ஆனால் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும், திரு. அச்சுத மேனனும், நானும், திரு. கே. எல். ராவும், நம்முடைய தமிழகத்து அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு பேசிய அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில்

"Union Government—will assist in arriving at such a settlement in six months and in the meanwhile no State will take any steps to make the solution of the problem difficult either by impounding or by utilising water of Cauvery beyond what it is at present என்று வெகு தெளிவாக அன்றைக்கு எழுதி அனைவரும் கையெழுத்துப் போட்டிருக்கிறோம். அதை நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே படித்துக் காட்டினேன். அதற்குப் பிறகு

1973 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

தான் வழக்கைத் திரும்பப் பெறலாம் என்ற முடிவினை அன்றைக்கு நாம் எடுத்தோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதை நன்றாக அறிவார்கள். அப்பொழுதே, முதலமைச்சர்கள் பேசும்பொழுதே, கே. எல். ராவ் அவர்களுடைய முன்னிலையில் ஒன்றை உறுதி எடுத்துக் கொண்டோம். இந்தச் சிக்கலான பிரச்சினையில் முதலமைச்சர்கள் தொடர்ந்து எந்தவிதமான அறிவிப்புகளும், அறிக்கைகளும் வெளியிடுதல் கூடாது. இது முடிவு அடைகிற வரையிலே யாரும் அறிக்கைகள் விடத் தேவையில்லை என்கின்ற ஒரு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டோம். அதை ஒப்பந்தமாக எழுதவில்லையென்றாலும், அந்த உறுதியை எடுத்துக்கொண்டோம் என்பதற்கு அடையாளமாக இதுவரை எந்த அமைச்சரும் இதைப்பற்றிப் பேசாமல் இருந்தோம். அதுவே அப்படி ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொண்டோம் என்பதற்கு ஆதாரமாகும். ஆனால் திடீரென்று 2, 3 நாட்களுக்கு முன்பு மைசூர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஒரு அறிக்கையை விட, நம்முடைய நிருபர்களெல்லாம் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்திலும், ஜாக்கிரதையாகச் சொன்னேன். மத்திய அமைச்சருடைய முன்னிலையில் இப்படி ஒரு உறுதிமொழி எடுத்துக்கொண்டிருக்கிறோம், அதற்கு மாறாக எந்த அமைச்சரேனும் அறிக்கை விட்டால், அதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிற்கு இருக்கிறது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்ன பிறகாவது மத்திய அரசு கொஞ்சம் சுண் திறந்து, செவி திறந்து இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக, முதலமைச்சர்கள் இதில் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு முன்பு அவர்கள் இப்படி யெல்லாம் அறிக்கைவிடுவது முறையல்ல என்று கூறியிருப்பார்களானால், நான் மகிழ்ச்சியடைந்திருக்க முடியும். மத்திய அரசு அதிலே வாளாவிருந்து விட்டது. அதைப்பற்றி எந்தவிதமான கவலையும் செலுத்தியதாக நமக்குத் தெரியவில்லை. அவர்களுக்கிருக்கிற பல்வேறு பிரச்சினைகளிலே காவேரிப் பிரச்சினை ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை: ஆனால் இது தமிழர்களுக்கு வாழ்வுப் பிரச்சினை, எதிர் காலப் பிரச்சினை. இந்த நிலம் எதிர் காலத்தில் இருண்டு பாழடைந்து விடக்கூடிய பிரச்சினை. நான்கு கோடி மக்களில் பெரும் பகுதி மக்கள் சாகவேண்டிய பெரும் பிரச்சினை என்பதை மத்திய அரசு உணர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகக் கண்டிப்பாக நான்கு கோடி தமிழ் மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நாம் அடக்கத்தோடு சொல்வதை, பொறுமையோடு சொல்வதை கோழைத்தனம் என்று கருதுவார்களானால், அது நல்லதல்ல. அது

[சட்ட மன்றத் தலைவர்] [1973 மார்ச் 30

பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1973) பரிந்துரைகள் செய்யப் படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பரிந்துரைகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்":

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1973) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : யாரும் பேசுகிறவர்கள் இல்லையா?

[ஒருவருமில்லை]

@ 668-670 -ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 30] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73) பரிந்துரைகள் செய்யப் படுவதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பரிந்துரைகள் ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73) திருப்பி அனுப்பப் பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப் எழுந்தார்.]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எதைப்பற்றிப் பேசப் போகிறீர்கள்?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு முதலமைச்சரவர் களுக்கு நன்றி தெரிவித்துப் பேச வேண்டும்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : நேற்றுத்தான் கவர்னர் மாளிகையிலே சொல்லிவிட்டீர்களே.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : என்னுடைய அன்பிற்குரிய பெருந் தலை[redacted] டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சலாம். தமிழகத்தில் உருது பேசும் முஸ்லீம் மக்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அறிவித்த் தங்களுக்கு உளமார நன்றியினைத் தெரிவித்துக்

கொள்கிறேன். எல்லாம் வல்ல அல்லாவின் அருளால் திட காத்திரமும், நீண்ட ஆயுளும் இன்னும் மேலான பதவியும், செழிப்பும் பெற்று முன்னேறப் பிரார்த்திக்கிறேன்.

(3) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, குடிநீர் வழங்கு, வடிகால் வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1973).

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I beg to move—

" That the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 @ (L.A. Bill No. 5 of 1973) as passed by the Assembly, be taken into consideration."

Under section 30 of the Tamil Nadu Water Supply and Drainage Board Act, 1970 (Tamil Nadu Act 4 of 1971), every person, who, immediately before the notified date, was serving in connection with the affairs of the Department of Public Health Engineering and Municipal Works including the office of the Chief Engineer (Public Health Engineering and Municipal Works) under the Government, shall, as from that date, be deemed to have been allotted to serve in connection with the affairs of the Board and shall cease to be an employee of the Government. The second proviso to the said section stipulates that a Government servant shall have an option to give notice of his intention not to become an officer or employee of the Board. This option to continue as a Government servant should be exercised within sixty days from the notified date. The Government specified the 22nd July 1971 as the notified date.

Most of the employees of the Public Health Engineering and Municipal Works Department gave their option in favour of becoming Board's servants. But the officers of the Public Works Department, except four Junior Engineers, opted to remain as Government servants. The result was that Junior Engineers of the Public Works and Highways and Rural Works Department, who opted to remain in the service of Government could not be

@ 671-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

considered for promotion, whereas Junior Engineers, who opted for the Board's service, with less than five years ' service, had to be promoted temporarily, by relaxing service qualifications. Unless the Junior Engineers of the Public Works Department and Highways and Rural Works Departments who are now serving the Board are absorbed in the Board's service, they will not be eligible to compete with the servants of the Board and claim promotion. Such of those persons who opted to remain as Government servants but continued to serve in connection with the affairs of the Board have now agreed to become the servants of the Board, so that they can be considered for promotion as Assistant Engineers of the Board.

It has been decided to amend section 30 of the Act so as to enable an officer or employee, who had given the option under the above section to remain as Government servant but who continued to serve in connection with the affairs of the Board, to withdraw the option within sixty days from the date of the commencement of the proposed amending legislation so that he can become a servant of the Board.

The Bill seeks to give effect to the above decision. Sir, I commend the Bill, as passed by the Legislative Assembly, for the consideration of the House.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இதில் அதிகமாகப் பேசுவதற்கு விஷயம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. சர்வீஸைப் பற்றி எனக்கு ஒரு சந்தேகம். அந்த இலாகா, தனி இலாகாவாகவே சிருஷ்டிக்கப்படுகிறது. இதில் இருக்கக்கூடிய இன்ஜினியர்கள் மட்டுமல்லாமல், "Ministerial staff -ஆக ஏற்கெனவே இருக்கிறவர்களை, இந்த இலாகாவே கிரஹித்துக் கொள்கிறது. அவர்களை இந்த இலாகா தன்னுடைய சிப்பந்திகளாக ஏற்றுக்கொள்கிறது. இது

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 30

வரை அவர்கள் ஆற்றிய சர்வீசையெல்லாம் கணக்கில் எடுத்து, எதிர் காலத்தில் குழப்பம் இல்லாமல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா அல்லது புதிதாக 'Recruit' செய்பவர்களையும், இவர்களையும் ஒன்றாக வைத்து, ஏதாவது நடந்து விடுமாவென்று அறிய விரும்பு கிறேன். அவர்களுக்கு, பழைய இலாகாவில் இருந்த சர்வீசையும் சேர்த்துக் கணக்கிட்டு, சீனியாரிட்டி கொடுக்கப்படுமாவென்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பெரும்பாலும் அதிலே எழாதென்று நினைக்கிறேன். பெரும்பாலானவர்கள் "ஆப்ஷன்" கொடுத்துவிட்டார்கள். அப்படிக் கொடுத்தவர்கள் போக, மீதமுள்ள சில போர்களுக்கும் இப்போது வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். அவர்களும், அவர் களோடு வந்துவிட்ட காரணத்தாலே, அரசாங்கத்திலிருந்து சென்ற வர்களெல்லாம் அந்த சீனியாரிட்டிபடி எடுத்துக்கொள்ளப் படுவார்கள்.

THIRU A. R. DAMODARAN: One more clarification, Sir. It is stated that those who did not exercise the option would now be given the option to join the Tamil Nadu Water Supply and Drainage Board. May I know whether the reverse will also be permitted and whether those engineers who went to the Board in the hope of getting promotion and who may now be disappointed will be given the option to revert to Government service?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த மாதிரி வாய்ப்பே இதிலே வராது. அவர்கள் முதலிலே அரசாங்கத்தில் இருந்துவிட்டால், சில நன்மைகள் இருக்குமென்று எதிர்பார்த்தார்கள். இப்போது போர்டிலே அதிகமான வாய்ப்புகள் வரும்போது, அவர்களுக்குக் கிடைக்காமல், அவர்களுடைய ஜூனியர்களுக்குக் கிடைக்கின்றது. "ஆப்ஷன்" கொடுத்த காரணத்தாலே, இவர்கள் இப்போது, "நாம் அங்கே போயிருக்கலாமே, பின்னல் பிரமோஷன் வந்திருக்குமே" என்று கருதுகிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தாலே, அவர்களுக்கு அந்தக் கஷ்டம் இருக்க வேண்டாமென்று—சட்டப்படி கொடுக்க முடியாது. அந்த "டைம்" முடிந்துபோய்விட்டது. ஆகவே——சட்டத்தை மாற்றி, "ஆப்ஷன்" கொடுத்து, Board-க்குப் போவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறோம்.

1973 மார்ச் 30]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடி விற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 5 of 1973), as passed by the Assembly, be passed".

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு, 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/73)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 30

ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இச்சட்ட வரைவை முன்னுரைக்கையில், நகராட்சிகளில் உள்ள இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கிவிடவும், அரிசனங்கள், பழங்குடியினர், மற்றும் பெண்டிருக்காகத் தொகுதிகள் ஒதுக்கவும் வகை செய்யும் முறையில் தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1920) சட்டத்தைத் திருத்த இச்சட்ட வரைவு விழைகிறது என்பதைக் கூறிக்கொள் கிறேன். தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1920) 43-வது பிரிவின் கீழ் நகராட்சிகளில் இரட்டை உறுப்பினர்கள் வார்டுகள் உள்ளதை மதிப் பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநிலச் சட்டமன்றங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்றப் பேரவை இரட்டை உறுப்பினர் தொகுதிகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக ஓர் உறுப்பினர் தொகுதிகளை ஏற்படுத்துவதற்கு 1961 ஆம் ஆண்டு இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கிவிடுதல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் எண் 1/1961) 3-வது பிரிவு வகை செய்கிறது என்பதை இது தொடர் பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதைப் போலவே, தற்போதுள்ள இரட்டை உறுப்பினர் வார்டு களை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றவும், எந்த வார்டு ரிசர்வ் வார்டாக இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கவும் வகை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் தற்பொழுதுள்ள இரட்டை உறுப்பினர்கள் வார்டுகளை நீக்கி விட்டு ரிசர்வ் இடங்களுக்காகவும், பெண்டிருக்காக வும் தனித் தேர்தல் வார்டுகளை ஏற்படுத்துமாறு சில நகராட்சி மன்றங்களும், இப்பொழுது அரசைக் கேட்டுக்கொண்டுள்ளன.

நகராட்சி மன்றங்களுக்கான அடுத்த சாதாரணத் தேர்தல்கள் 1974 ஏப்ரல் இறுதியில் நடக்கவிருக்கின்றன. வார்டுகள் பிரிப்பது தொடர்பாக பல்வேறு நகராட்சி மன்றங்களின் செயற்குறிப்புகள் வரப்பெற்று, அவை இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, ஓர் உறுப்பினர் வார்டுகள் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு

@ 672–674-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 மார்ச் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நகராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறுக்க அரசு இப்பொழுதே நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே நகராட்சிகளின் இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கிவிட வும், நகராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறுப்பது பற்றிய அரசின் செயற்குறிப்புகள் தொடர்பாக முறையீடுகள் செய்து கொள்ள பொது மக்களுக்கு வாய்ப்பு அளிக்க வகை செய்யவும், தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு 5-வது சட்டத்தின் 43-வது பிரிவைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

ஒரு நகராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்டு களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் தான் எந்த வார்டின் உறுப் பினராய் இருக்க விரும்புகிறார் என்பதைத் தெரியப்படுத்தவும், அதனல் பிற வார்டுகளில் ஏற்படும் காலியிடங்களுக்குப் புதிய தேர் தல்கள் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்யப் பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்களில், ஆங்கிலோ இந்தியர்கள், அரிசனங் கள், பெண்டிர் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்குவதற்கு விதித் துறை உள்ளதென்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நகராட்சி நிர்வாகத்தை மாற்றியமைப்பதற்காக 1949-ல் அமைக்கப் பட்ட ஆலோசனைக்குழு செய்த ஏனைய பரிவுரைகளோடு, வகுப்பு வேறுபாடுகள் ஒழிக்கப்பட்டுவிட்டதால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு அரிசனங்கள், பழங்குடி யினர் ஆகியோரைத் தவிர வேறு எந்த வகுப்பினருக்காகவும் தேர் தல்களில் இடம் ஒதுக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதியது.

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் எண் 4/1919) 5-வது பிரிவில் கூறியுள்ளவாறு மதத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவது, இந்திய அரசியலமைப்பின் 14-வது பிரிவின் விதித் துறைகளுக்கு முரணனது என்று சென்னை உயர்நீதி மன்றமும் தீர்ப்பளித்துள்ளது. எனவே 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 4/1919) மதத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவது தொடர்பான விதித் துறை விட்டுவிடப்பட்டது. மேற்சொன்னவற்றுல் ஆங்கிலோ இந்தியர்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பான தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) விதித்துறைகளை விட்டுவிடுவதென்று 1961 ஆம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 30

ஆண்டிலும், மீண்டும் 1966-லும் கருதப்பட்டது. ஆனால் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. மேற்சொன்ன விதித் துறையை நீக்க இப்போது வாய்ப்பு கிட்டியுள்ளது. அரிசனங்களுக்கும், பெண்டிருக்கும் இடங்கள் ஒதுக்குவதற்கு ஏற்கெனவே வகை செய்யப் பட்டிருப்பதைத் தவிர, பழங்குடியினர்களுக்கும் இடங்கள் ஒதுக்கு வதற்கான விதித் துறையைச் சேர்த்துக்கொள்ளக் கருதப்படுகிறது.

இவைகூறி, இப் பிரேரணையை இம்மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

5–50 பி.ப. "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இரட்டை மெம்பர் தொகுதிகளை எல்லாம் ஒற்றை மெம்பர் தொகுதிகளாகப் பிரிக்கவேண்டும் என்பது கொள்கைபற்றிய விஷயம். ஏற்கெனவே இருந்த குறைகளைப் போக்குவதற்கு வந்த ஒரு மசோதா என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். ஆகவே இதில் குறிப்பிட்டுப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. பேசினால் ஆதரித் துத்தான் பேச வேண்டும். ஆகவே ஆதரித்துப் பேசியதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1973 மார்ச் 30] [சட்ட மன்றத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 5 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

5- மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and other Papers

£123. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973), as passed by the Assembly.

£124. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973 (L.A. Bill No. 10 of 1973), as passed by the Assembly.

£ Laid on the Table of the House on 29th March 1973

இணைப்பு I

[658-ம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 10 OF 1973.

(As passed by the Assembly.)

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1972.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 3) Act, 1973.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1972.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1972, a further sum not exceeding sixty-four crores thirty-eight lakhs twenty-three thousand and five hundred being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding*		
		Voted by the Legislative Assembly.	*Charged on the Consolidated Funds of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs.	Rs.	Rs.
1	Land Revenue Department.	21,62,700	..	21,62,700
2	Motor Vehicles Act—Administration.	1,34,000	..	1,34,000
3	General Sales Tax and other Taxes and Duties—Administration.	70,80,000	..	70,80,000

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding*		
		Voted by the Legislative Assembly.	*Charged on the Consolidated Funds of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs.	Rs.	Rs.
4	Stamps—Administration	8,20,600	..	8,20,600
6	State Legislature	9,98,100	..	9,98,100
7	Elections	3,06,600	..	3,06,600
8	Head of State, Ministers and Headquarters Staff.	96,33,800	*6,29,000*	1,02,62,800
9	District Administration and Miscellaneous.	1,50,27,500	*16,700*	1,50,44,200
9A	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.	12,19,400	*1,200*	12,20,600
10	Administration of Justice	8,92,400	*2,47,600*	11,40,000
11	Jails	63,34,900	..	63,34,900
12	Police	1,37,92,800	..	1,37,92,800
13	Education	3,59,50,600	*1,700*	3,59,52,300
14	Medical	48,21,000	..	48,21,000
15	Public Health	5,26,73,600	..	5,26,73,600
16	Agriculture	2,32,42,000	*33,800*	2,32,75,800
17	Fisheries	9,52,500	..	9,52,500
18	Animal Husbandry ..	7,60,500	..	7,60,500
19	Co-operation	17,38,500	..	17,38,500
20	Industries	28,02,600	*95,100*	28,97,700
21	Cinchona	5,37,000	..	5,37,000
23	Community Development Projects, etc.	87,78,900	..	87,78,800
24	Labour including Factories	21,00,700	..	21,00,700
25	Welfare of the Scheduled Tribes and Castes, etc.	300	..	300
25A	Welfare of the Backward Classes, etc.	22,92,600	..	22,92,600
26	Irrigation	2,64,26,100	..	2,64,26,100
27	Public Works—Works ..	1,49,33,800	*2,93,600*	1,52,27,400
28	Public Works—Establishment and Tools and Plant.	91,60,800	..	91,60,800
29	Public Works—Grants-in-aid.	2,40,24,200	..	2,40,24,200

Demand number.	Services and purposes.	Sums not exceeding: Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		Rs.	Rs.	Rs.
30	Road Transport Schemes	2,31,44,100	*5,00,000*	2,36,44,100
31	Famine Relief	6,08,95,200	..	6,08,95,200
